
கடந்த காலம்

மலையாள மூலம் :

கே. பி. கேசவ மேனன்

தமிழாக்கம் :

ராஜம் கிருஷ்ணன்



நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

புது டில்லி

1980 (1902)

மூலம் © கே. பி. கேசவ மேனன்
தமிழாக்கம் © நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1978

விலை ரூ. 16-25

Original Title : KAZHINJA KAALAM (Malayalam)
Tamil Title : KADANTHA KAALAM (Tamil)

விநியோகிப்பாளர் :
பாரி நிலையம்
1/59, பிராட்வே, சென்னை-600 001

PUBLISHED BY THE DIRECTOR, NATIONAL BOOK TRUST, INDIA
A-5, GREEN PARK, NEW DELHI-110 016 AND PRINTED AT
BHAGAT PRINTERS, 55, RLY. STATION ROAD, ALANDUR, MADRAS-600 016

முன்னுரை

சுயசரிதைகளுக்கு இலக்கிய அந்தஸ்து அளிக்கவும், அவை பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளவும், விமரிசகர்கள் என்றுமே தயக்கம் காட்டி வந்திருக்கிறார்கள். இத்தகைய உதாசீனத்துக்கு அது (சுயசரிதை) தகுதியுடையதே அல்ல. ஃபிரெஞ்சு அறிஞர் ஆந்த்ரே மாரோ கூறியுள்ளது போல, "சுயசரிதைதான் எல்லா இலக்கிய வடிவங்களிலும் சுவை மிக்கது". இந்த அபிப்பிராயத்துடன் சராசரி இலக்கிய விமரிசகர்கள் ஒத்துப் போகாமலிருக்கலாம்; அவர்கள்—ஆசாரமான விமரிசகர்கள்—பெரும்பாலும் சுயசரிதையை வரலாற்று நூல்களுக்குச் சமமாக மதித்துக் குழப்புவதுதான் வழக்கமாயிருந்து வருகிறது. உதாரணமாக, ரெனி வெலெக். ஆஸ்டின் வாரன் சுயசரிதைகளின் வசீகரத்தன்மை — வாசகர்கள் அவற்றினால் பெரும் கொள்ளை இன்பம்—வெறும் வரலாற்றுப் புத்தகங்களில் அடங்கியுள்ள பழமையின் 'மயானப் பொலிவுடனே' அல்லது ஒருவரைப் பற்றி இன்னொருவர் எழுதும் வாழ்க்கை வரலாறுகளின் 'சீர் சிறப்புகளுடனே' ஒப்பிடக் கூடியதல்ல. சுயசரிதை அதனுடைய முக்கியப் பாத்திரமாகிய ஆசிரியரின் நெஞ்சைத் தன் உணர்ச்சி மையமாகக் கொண்டிருப்பது; அவரிடமிருந்தே உயிரும் ஊட்டமும் பெறுவது. அதனால்தான் எந்த ஒரு எழுத்தாளனாலும் ஒரு தடவைக்குமேல் கையாள முடியாத ஓர் இலக்கிய வடிவமாக இது விளங்குகிறது. அப்படியே ஒருவன் ஒன்றுக்கு மேற்பட்ட சுயசரிதை நூல்கள் எழுதினால்கூட, அவை ஒன்றுக் கொன்று முரணாகவோ அல்லது ஒன்று மற்றொன்றின் பிரதிபலிப்பாகவோ அமைந்து, கூட்டு மொத்தமாக அவற்றின் விளைவு பூஜ்யமாகப் போய்விடக்கூடும். எனவே, சுயசரிதைமூலம் வெளிப்படும் உண்மைகளே அதிக நேர்மையும் முக்கியத்துவமும் வாய்ந்தவை. நேரடியான மனித அனுபவத்துக்கு நெருக்கமானவை என்ற முடிவுக்கு நாம் வருவதில் தவறில்லை. 'ஒரு மனிதனின் சரிதையை எழுதுவதற்கு ஏற்ற ஆசாமி அந்த மனிதனேதான்' என்று டாக்டர் ஜான்ஸன் கூறியது எதனாலென்று இதிலிருந்து விளங்கும். 'சிறந்த சரிதை சுய சரிதைதான்' என்பது அவர் கருத்து. இலக்கியத்தின் எல்லாப் பிரிவுகளிலுமே எழுத்தாளனின் சொந்த வாழ்க்கையை ஒட்டி அமைகிற

ஒரு தன்மையே காணப்படுகிறது. உலகத்தின் மிகச் சிறந்த இலக்கியப் படைப்புகள் நம்முள் ஏற்படுத்தும் எழுச்சிகளும் எதிரொலிகளும் (resonances) அவற்றின் சுயசரிதைத் தன்மையிலுல் விளைபவையே. உன்னதமான கலைப் படைப்பு என்பது ஒரு கலைஞன் தான் கையாளும் சாதனத்தின்மூலம், தன்னில் ஒரு பகுதியைப் பிறருடன் கொள்வதே தவிர வேறில்லை.

'நேர்மையுடன் கூறப்படும் எந்த வாழ்க்கைச் சரிதமும் சிறப்பானது தான்' என்றார் காலரிட்ஜ். தன் சரிதத்தை ஒருவன் நேர்மையுடன் கூறுவதற்கு, எல்லாவற்றுக்கும் மேலாக, அவன் ஒரு எளிய மேன்மையை இயல்பாகப் பெற்றிருக்கவேண்டும். வாழ்க்கையின் நேர்மையைப் போல, வாழ்க்கைச் சரிதத்தின் நேர்மையும் சம்பந்தப்பட்ட மனிதரின் மேன்மையைப் பொறுத்ததுதான். உலக இலக்கியத்தின் மிகச் சிறந்த சுயசரிதைகளாகக் கருதப்படுபவை யாவும், எல்லாக் காலத்துக்கும் சிறந்தவர்களாக மதிக்கப்படும் சில மகா புருஷர்களின் பெயர்களுடன் சம்பந்தப்பட்டிருப்பவையே—புனித அகஸ்டின், கதே, ரோஸோ, டால்ஸ்டாய், காந்தி. இந்தச் சிலரிடையேயும் மிக உயர் வானவராகக் கருதப்படும் கதே, ''கவிதையும் உண்மையும்'' என்ற மிக உயர்வான சுயசரிதையை எழுதினார். சுயசரிதைகளில் எழுதுகிறவனுடைய மேன்மைக்கும் படைப்பின் மேன்மைக்கு மிடையே உள்ள இந்த உறவு, பிற இலக்கியப் பிரிவுகளில் அபூர்வமாகத்தான் காணப்படுகிறது.

மலையாளத்தில் மிகச் சிறந்த சுயசரிதை எதுவென்று கேட்கப் பட்டால், அதற்கு ஒரே பதில்தான் இருக்க முடியும்—கே. பி. கேசவ மேனனின் 'கழிஞ்ஞ காலம்' (கடந்த காலம்). ஏன் அது அவ்விதம் சிறப்பானது என்ற அடுத்த கேள்வி கேட்கப்பட்டால் அதற்குப் பெ தரப்பட்ட மேதாவித்தனமான விடைகள் கிடைக்கலாம். ஆனல் உண்மையான விடை மிகச் சுலபமானது. அப் புத்தகத்தின் ஆசிரியர் 'கேரள நாட்டின் புதல்வர்கள் எல்லாரினும் முதிர்ச்சியும் மேன்மையும் மிக்கவர்' என்பதே அது. கதேயின் சுயசரிதைத் தலைப்பைப் பின்பற்றி ''அரசியலும் உண்மையும்'' என்று கேசவ மேனனின் சுயசரிதையை அழைக்கலாம். 'கவிதை' என்ற பதத்தின்மூலம் உயர்வான கற்பனை மட்டத்து வாழ்க்கையை கதே குறிக்க எண்ணினரென்றால், 'அரசியல்' என்ற பதம், இங்கு சாரமற்ற அன்றாட சமூக - அரசியல் நடப்புகளைச் சார்ந்த—இன்றைய சூழ்நிலையில் ஊழல் மலிந்ததாகவும் சலிப்பூட்டு வதாகவும் ஆகிவிட்ட—வாழ்க்கையைக் குறிப்பதாக நாம் கொள்ள லாம். ஒருவர் தன் வாழ்க்கையில் கவிதையையும் உண்மையையும் இணைத்து வாழ முற்படும் முயற்சியைவிட, அரசியலையும் உண்மையை

யும் இணைத்து வாழ முயல்வது சிரமமானது. ஆனால் கேசவ மேனனுக்கு இது சாத்தியமாகியிருக்கிறது.

இந்தத் தன்மைதான் கேசவ மேனனின் சுயசரிதையை மேன்மை யுறச் செய்திருப்பதாக நான் கருதுகிறேன்—அவருடைய சொந்த மேன்மையை நேர்மையாகவும் இலக்கிய பூர்வமாகவும் இந்நூல் பிரதி பலித்துக் காட்டுகிறது. எனவே, உலகத்தின் சிறப்பு மிக்க சுய சரிதைகளின் வரிசையில் வைத்து மதிக்கத் தக்கதாகிறது. மன்னிப்புக் கோருகிற தொனியோ கழிவிரக்கமோ அதில் இல்லை. அதே சமயத்தில் தன்னடக்கமும் நேர்மையும் எளிமையும் கொண்ட ஒரு ஒப்புதல் வாக்கு மூலமாக அது அமைந்திருக்கிறது. இன்றைய எழுத்துக்களில் எழுத் தாளன் தன்னைத்தானே சிலுவையில் அறைந்துகொள்ளும் தன்மை பெருகியிருக்கிறது. வாழ்க்கையின் உண்மைகளைப் பிரதிபலித்துக் காட்டுபவை மனிதர்களின் செயல்கள் அல்ல; அவர்களுடைய அந்தரங்கமான எண்ண ஓட்டங்கள்தான் என்று இன்றைய எழுத்தா ளர்கள் நம்புகிறார்கள். இதற்கு நேரெதிரிடையானதும்தான் மனோ தத்துவ ரீதியாகச் சாத்தியமானதென்பதை அவர்கள் உணர்வதில்லை. கேசவ மேனனின் சுயசரிதை அவருடைய செயல்கள், எண்ண ஓட்டங்கள் இரண்டின்மூலமாகவும் அவரைப்பற்றிய உண்மைகளைப் பிரதிபலித்துக் காட்டுகிறது. அவருடைய நடை, செயல் வர்ணனை, எண்ணக் கோவை இரண்டும் சேர்ந்த ஒரு அரிய கலவையாக உருவாகி யுள்ளது. திரித்துக் கூறல், சுற்றி வளைத்தல் எதுவுமற்ற மேனனின் எழுத்து நடையைத் தற்கால மலையாள உரைநடையின் சிறப்பு மிக்க தோர் உதாரணமாக, தேர்ந்த ரசிகர்கள் சுட்டிக்காட்டுவது வழக்கமா யிருந்து வருகிறது.

சுயசரிதை எழுத முற்படும் ஒருவன் சமாளிக்க வேண்டிய இடர்கள் எவை? சுருக்கமாக, ஞாபக மறதி. தன் வாழ்க்கையின் அதிருப்திகர மானதும் நாணம் கொள்ளச் செய்வதுமான நிகழ்ச்சிகளை வெட்டி யெறியத் தூண்டும் ஒரு தற்பெருமை, விளம்பரத் தன்மை, போலியான தொரு அழகுணர்வு நோக்கு. மிகப் பெரும் எழுத்தாளர்களான ரோஸ், ஜார்ஜ் ஸான்ட், ஆந்த்ரேஜைட் ஆகியோர்கூட இந்தக் குறை களைத் தவிர்க்க முடியவில்லை. தாங்கள் எழுத்தாளர்களென்பதை மறந்து, வாழ்க்கை உண்டாக்கும் சின்னஞ்சிறு வெற்றி தோல்விகளில் பங்கு கொண்ட சின்னஞ்சிறு மனிதர்கள்தான் தாங்களும், என்ற ஒரு பக்குவமான மனநிலையை உருவாக்கிக்கொள்ள அவர்களால் முடிய வில்லை போலும். அவர்கள் எழுதவில்லை; சொற்களால், ஓவியம் வரைந்தனரென்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், மேனனின் சுயசரிதை வெறும் எளிய எழுத்து மாத்திரம்தான்; வண்ண ஓவிய

மல்ல. அவர் எது செய்தாலும் சரி, எப்படிச் சிரமப்பட்டாலும் சரி, தக்க யோக்கியதையுடன்தான் செய்தார். எனவே, ஸார்த்ர் (Sartre) எழுதியது போல, ''மீண்டும், என்னுடைய ஏழாவது வயதிலிருந்ததைப் போல, நான் ஒரு டிக்கெட்டில்லாத பயணியானேன்'' என்று எழுதி, அவர் தன் சரிதைக்கு முத்தாய்ப்பு வைக்க நேரவில்லை.

மாறுக, 'கழிஞ்ஞ காலம்' சுவாபாவிகமாகவும் மிக எளிய முறையிலும் நிறைவு பெறுகிறது: ''வாழ்க்கை என்னை எங்கே அழைத்துச் செல்கிறதென்று தெரியாவிட்டாலும், வாழ வேண்டுமென்ற தாகம் இன்னும் தணியவில்லை.'' இப்போது அவருக்கு எண்பத்தெட்டு வயதாகிறது. மலையாளிகளிடையே அவர் ஒரு மேரு பர்வதம். ஸார்த்ர்-ஐப் போல, தன் ஏழாவது வயது குறித்துப் பிரமாணம் எடுத்துக்கொள்ள அவர் தயாராகமாட்டார், அந்த வயதில் நடந்தது பற்றிய நிச்சயம் அவருக்கு இராதென்பதால். ஆனல், பதினேழாவது அல்லது எழுபதாவது வயதுகள் பற்றி அவருக்கு நிச்சயம் இருக்குமாதலால் இப் பருவங்களில், ''எங்கு—கண்காணுத இடங்களுக்குக்கூட — சென்றாலும் சரி, நான் டிக்கெட் வாங்கத் தவறியதில்லை'' என்றும், அவர் சொல்லக்கூடும். வாழ்க்கையென்பது அறியாத ஊருக்குச் செல்லும் பயணமாயிருக்கலாம்; ஆனல், வாழ்க்கைப் படகு அவர் அறியாத தல்ல—சுருக்கமாக, இதுவே அவருடைய வாழ்க்கைச் சித்தாந்தம். 'ஸார்த்ர்'-இன் வார்த்தைகளில், ''டிக்கெட் இல்லாத பயணியின் சித்தாந்தமாக'' இதைக் கொள்ளலாம்.

கேசவ மேனனின் வாழ்க்கை, நம் நாடு சுதந்திரமடைவதற்கு முன்பாகக் கேரளத்தில் ஏற்பட்ட தேசிய உணர்வின் எழுச்சியுடன் பின்னிப் பிணைந்துள்ள ஒன்று. சுதந்திரமடைந்த பின்னர், ஊழல்கள் மலிந்திருந்த கேரளத்தின் பொது வாழ்வைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட வேண்டுமென்ற ஊக்கம் தலைவர்களுக்கு ஏற்படவும் அவர் பெரிதும் காரணமாயிருந்தார். என்றும் மறக்க இயலாத இந்தப் பணிகள்மூலம், தொண்ணூறை எட்டிக்கொண்டிருக்கும் இந்த மனிதர் இன்று உடலின் எந்தக் குறையையும் வெற்றிகொள்ளக்கூடிய மனதின் சிரஞ்சீவித் தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார். இத்தகையதொரு வல்லமை பொருந்திய மனத்தவர், பாரபட்சமில்லாமலும், ஏன், விளையாட்டாகக்கூட, தன் வாழ்வின் பழைய சம்பவங்களைத் திரும்பிப் பார்த்து, அவற்றைப் பெரிதுபடுத்தாமலும் குறைவுபடுத்தாமலும் எடுத்துச் சொல்ல முன் வருவது ஆச்சரியமில்லை. 'கடந்த காலம்' என்று தன் சுயசரிதைக்கு அவர் தலைப்புக் கொடுத்துள்ளதன் பொருள், வாழ்க்கையெல்லாம் முடிந்துவிட்டது என்பதல்ல. அவருக்கு இருப்பதற்கு இன்று ஒரு நிகழ்காலமும், எதிர்நோக்க ஒரு

எதிர்காலமும் இருக்கின்றன, என்பதுதான். ஒரு மேதையின் தேர்ச்சியுடனும், குழந்தையின் பரிசுத்தத்துடனும், அவர் தன் மேன்மையைப் பல விதங்களில் நம்மை உணரச் செய்கிறார்—பள்ளியில் தான் குறைந்த மார்க்குகள் வாங்கி வந்ததுபற்றி மறைக்காமல் ஒத்துக் கொள்ளும்போது; வெளிநாட்டுத் தூதராகத் தான் சிறப்பெய்தவில்லையென்று பணிவுடன் கூறும்போது; அவர் நாட்டை விட்டு வெளியேறக் காரணமாயிருந்த சந்தர்ப்பங்களை உடைத்துக் கூறும்போது; ஜப்பானியர்கள் விளைவித்த கொடூரங்களைப்பற்றி விவரிக்கும்போது; பலத்த அரசாங்க எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் தன் சுயகௌரவத்தையும் சுயேச்சைத் தன்மையையும் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர் போராடியதுபற்றிக் கூறும்போது.

இன்று வாழ்ந்து வரும் மலையாளிகளிடையே, சுயசரிதை ஒன்று எழுதுவதற்குப் பல விதங்களில் மிகவும் தகுதி வாய்ந்தவர் கேசவ மேனன். இளம் பிராயத்திலிருந்தே மகா புருஷர்களின் வாழ்க்கை அவரைக் கவர்ந்துவந்திருக்கிறது. அவர் எழுதியவற்றுள் பெரும் பகுதி வாழ்க்கைச் சரிதங்கள்தாம்: லஜ்பத் ராய், கோகலே, திலகர், காந்தி போன்ற இந்திய விடுதலைப் போராட்டத் தலைவர்களின் சரிதைகளைத் தன் எழுத்து வாழ்வின் ஆரம்ப கட்டத்திலேயே எழுதிய அவர் பிற்பாடு தேசியத் தலைவர்கள் எல்லாரைப் பற்றியுமே ஒரு பிரும்மாண்டமான நூல்—'தற்கால இந்தியாவின் சிற்பிகள்' எனும் தலைப்பில்—எழுதினார்.

இந்த வாழ்க்கைச் சரிதைகளுடன்கூடவே, ஒரு சுயசரிதை எழுத்தாளராகவும் அவர் மலரத் தொடங்கியிருந்தார். 'பிலாத்தி விசேஷம்' என்ற தன் ஐரோப்பியப் பயணத்தை விவரிக்கும் நூலுடன்தான் அவர் தன் எழுத்து வாழ்வைத் தொடங்கினார். (அவர் இந்த யாத்திரையை மேற்கொண்டது 1912-ல்; நூல் வெளிவந்தது 1916-ல்.) அவருடைய பிற்கால எழுத்துச் சிறப்புக்குக் சுட்டியம் கூறுவதாக அமைந்தது இந்நூல். அக்காலத்திலேயே அவர் எழுத்தில் காணப்பட்ட சுயசரிதைத் தன்மை பின்பு நீடித்தது; அவருடைய சில சிறந்த 'நினைவுகூரும்' நூல்கள் தோன்றக் காரணமாயிற்று. 'பந்தனத்தில் நின்னு' (தளைகளை விட்டு), கேரளத்து இந்துக் கோயில்களில் நிலவி வந்த தீண்டாமையை எதிர்த்து 1924-ல் மேற்கொள்ளப்பட்ட—அவரும் பங்குகொண்ட—வைக்கம் சத்தியாகிரஹத்தைப் பற்றிய விவரணை. 'பூதவும் பாவியும்' (நேற்றும் நாளையும்) இரண்டாம் உலகப் போரின்போது மலேயாவில் ஜப்பானியரிடம் அவர் பெற்ற பயங்கர அனுபவங்களை நுணுக்கமாக விவரிப்பது. 'ஜீவித சிந்தகள்' (வாழ்க்கை அனுபவங்கள்) அவருடைய பலதரப்பட்ட, பல வண்ண வாழ்க்கையின்

பல எண்ணங்கள், நினைவுகள் ஆகியவற்றின் சாரம்—இவையெல்லாம், 'கழிஞ்ஞ காலம்' என்னும் அவருடைய சிறந்த சுயசரிதைச் சிருஷ்டிக்குச் சிறந்த ஒத்திகைகளாக அமைந்தன. எனவே, தொடர்ச்சியான பல சுயசரிதைக் கூறுகள், பிறர் வாழ்க்கைச் சரிதங்கள் ஆகியவற்றின் ஒரு இறுதி முத்தாய்ப்புத்தான் 'கழிஞ்ஞ காலம்'. இத்தகையதொரு சலியாத உழைப்பாளி, தவிர்க்க முடியாமல் அடைகின்ற ஒரு முதிர்ச்சியும் தேர்ச்சியும் இந் நூலில் காணப்படுகின்றன. தேசிய மட்டத்தில், சாகித்திய அகாதெமி விருதுமூலம் இந் நூல் கௌரவிக்கப்பட்டதில் ஆச்சரியமில்லை. விமரிசகர்கள் ஏகோபித்த மனத்துடன் இச் சிருஷ்டிக்கு ஏற்கெனவே சுயசரிதைத் துறையில் ஓர் உயர்ந்த ஸ்தானத்தை வழங்கியாயிற்று—எழுதியவரின் மேன்மை, விஷய முக்கியத்துவம், நடையழகு முதலிய பல்வேறு கோணங்களிலிருந்து.

கேசவ மேனனின் சுயசரிதை, மலையாளத்திலுள்ள மற்ற எல்லாச் சுயசரிதைகளையும் அற்பமாகத் தோன்றச் செய்யும் ஆகிருதி படைத்ததாயிருக்கிறது. வாழ்க்கை சரிதை நூல்கள் நிறைய இருப்பினும், சுயசரிதைகள் மலையாளத்தில் அதிகமில்லை. சுயசரிதையை உருவாக்கத் தேவையான ஆகிருதி படைத்தவர்களின் எண்ணிக்கை இங்கு மிகக் குறைவாயிருப்பது இதன் காரணமாயிருக்கலாம். இருக்கும் ஒருசில சுயசரிதைகள், இலக்கியம், அரசியல், சமூக சேவை ஆகிய பல துறைகளில் தம் பணிகளின்மூலம் என்றும் அழியாத சுவடுகளைப் பதித்துள்ள சில பெரும்புள்ளிகளால் இயற்றப்பட்டவை. அதே சமயத்தில் தம்முடைய சுயசரிதையை எழுத முற்படாத மேன்மையான மனிதர்களின் பட்டியலும் நீண்டதாகவே உள்ளது—குமரன் ஆசான், வள்ளத்தோல், உள்ளூர் எஸ். பரமேசுவர ஐயர், பட்டம் தாணுப்பிள்ளை, கே. கேளப்பன், ஆர். சங்கர், இத்தியாதி. எழுத்தாளர்களால் எழுதப்பட்ட சுயசரிதைகளுள், ஈ. வி. கிருஷ்ண பிள்ளை, பி. கே. நாராயண பிள்ளை ஆகிய இருவரின் சுயசரிதைகளும், முறையே தம்முடைய இலேசான பரிகாசத் தொனி, கூர்மையான இளிவரல் ஆகியவற்றினால் சிறப்புப் பெறுகின்றன. ஜோசப் முண்டசேரி, பி. கேசவ தேவ் போன்ற நவீன இலக்கிய கர்த்தாக்களும் இவ்வடிவத்தைத் திறமையுடன் கையாண்டிருக்கின்றனர். இதேபோல, அரசியல் வல்லுநர்களிடையே ஸி. கேசவன், ஸர்தார் கே. எம். பணிக்கர் இந்த இருவருடைய சுயசரிதைகளும் தனித்தன்மை வாய்ந்த சிருஷ்டிகள். இப்படி இன்னும் ஓரிரு சுயசரிதைகள் இருக்கலாம். ஆனால் இவை எல்லாவற்றிலும் சிறந்தது கேசவ மேனனின் சுயசரிதைதான் என்பதில் அபிப்பிராய பேதத்துக்கு இடமில்லை.

மகத்தானதொரு வாழ்க்கைச் சரிதையை எழுதுவது, மகத்தான வாழ்க்கை வாழுவதைவிடச் சிரமமான காரியமென்று சொல்வதுண்டு. ஆனல் உண்மையிலேயே மேன்மை பொருந்திய வாழ்க்கையை ஒருவர் வாழ்ந்தாரென்றுல் அவர் நிச்சயம் மேன்மை மிக்க சுயசரிதை எழுதவும் முடியும். எழுத்தின் மேன்மையென்பது எழுதுபவனின் வாழ்வின் மேன்மையை ஒட்டி ஏற்படுவதுதான் என்னும் அடிப்படை உண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் 'கழிஞ்ஞ காலம்' விளங்குகிறது.

ப்ரோபசர் சுகுமார்
அழிக்கோட்

1

இளமைப் பருவ நினைவுகள்

மணி ஐந்தடிக்கும் நேரம். சிலேட்டையும் புத்தகத்தையும் கையில் எடுத்துக்கொண்டு சிறுவர்கள் மணியோசையை எதிர்பார்த்துப் பரபரப்புடன் காத்துக்கொண்டிருந்தனர் மறக்க முடியாத ஒரு நாள் அது. தரையிலமர்ந்து மணலில் எழுதிப் படித்த நாளைக் கடந்து, பெஞ்சியில் அமர்ந்து கல்விபயிலும் முன்னேற்றப் கிடடிய நாளல்லவா அது! அந்த முதல் முன்னேற்றத்தை எத்தனை மகிழ்சியுடன் நான் வரவேற்றேன்! தரையிலிருந்து பெஞ்சிக்கு உயர்ந்துவிட்டோம்! மணலில் விரல் தேய எழுதிய நாங்கள் கற்பலகையில் சிலேட்டுக் குச்சியால் எழுதுவோம்!

புதிய சிலேட்டும் பென்சிலும் கிடைத்த பிறகு கேட்பானேன்? மணியோசையின் ஒலி ஓயுமுன பள்ளிகூடத்தின் பல வாயில்களிலும் இடித்துத்தள்ளி ஒருவரை ஒருவர் நெருகிக்கொண்டும் உரத்த குரல்களில் மகிழ்சியுடன் கூவிக்கொண்டும பேசிக்கொண்டும் சிறுவர்கள் வெளியே ஓடினர்கள். தலைமையாசிரியர் கோவிந்தமேனன் கூச்சலிடக் கூடாதென்று பலமுறை கத்திஎலும் என்ன? அவர்கள் அதைப் பொருட்படுத்திஎல்தானே?

பெஞ்சியில் அமர்ந்துவிட்ட உயர்வைப்பற்றி வழிநெடுக என்னுடைய சிறு தோழர்களுடன் பெருமையடித்துக்கொண்டும், என் புதிய சிலேட்டையும பென்சிலையும் காட்டிக்கொண்டும் நான் வீட்டுக்கு வந்தேன்.

தரையிலிருந்து பெஞ்சில் ஏறி அமர்ந்துவிட்ட அச் செய்தியை அன்று நான் என் தாயிடம்தான் எத்தனை முறைகள் கூறியிருப்பேன்! என்னுடைய தாயை மீனாட்சி நேத்யாரென்று அழைப்பார்கள். நான்

மகிழ்ச்சியுடன் கூறிய செய்திகளை எல்லாம் என் தாய் எத்துணை ஆனந்தத்துடன் கேட்டாள்! செல்லம் கொஞ்சிக்கொண்டு நான் மகிழ்ந்து குலவியதைக் கேட்டு என்னுடைய தாய்வழிப் பாட்டனார் கைத்தடியை ஆட்டிக்கொண்டு சிரித்த காட்சி இன்னும் என் நினைவி லிருந்து அகலவில்லை.

வட்ட முகமும் வழுக்கை முடியும் உயரமும் பருமனுமாக அன்று கண்ட அதே நிலையில் என் பாட்டனாரின் வடிவம் இப்போதும் என் கண்முன் தோன்றுகிறது. நான் வயதில் முதிர்ச்சி அடைந்த பின்னரே, அந்தப் பெரியவருடைய பரந்த மனப்பான்மையையும் அன்பு கனியப் பழகும் அருமையையும் புரிந்துகொண்டேன். இன்னலுற்றோருக்கு உதவ அவர் எப்போதும் சித்தமாக இருந்தார். இல்லையென்ற மொழியை அவர் அறிந்தாரில்லை. தன் சக்திமீறிப் பிறருக்கு உதவி செய்தே அவர் கடனாளியானார். அவர் காலம் அப்படியே சென்றது.

இன்றைய தலைமுறையினர் அன்றைய சமுதாய நிலையையும் கட்டுப் பாடான பழக்க வழக்கங்களையும் புரிந்துகொள்வது கஷ்டம்; ஊகித் தறிந்துகொள்வதுகூடக் கடினம்.

பாலக்காட்டு அரச பரம்பரையில் தோன்றிய என் பாட்டனார் ஒரு இளவரசர். அவருடைய பேச்சிலும் நடப்பிலும், அந்தப் பரம்பரைக் குரிய தோரணை புலப்படும். ''நாம் இப்படிக் கருதுகிறோம். நம்முடைய விருப்பம் இது!'' என்ற வகையில், அரசருக்குரிய மொழியில் தான் பேசுவார். தம்முடன் பிறர் உரையாடும்போதும் அவர்களும் தவறுமல் அவ்வண்ணமே மரியாதைக்குரிய சொற்களை மொழிய வேண்டும் என்று அறிவுறுத்துவார்.

முற்பகலில் நீராடி, நெற்றிக்குறி தீட்டி, ஆலயத்திலிருந்து குருக்கள் கொண்டுவரும் பிரசாதம் பெற்றுக்கொண்டு, அன்றுட தானதருமங்கள் செய்யாது அவர் காலை உணவு அருந்த மாட்டார். முடி மழித்துத் திருத்திக்கொள்ளும் நாட்களில் அவர் குளத்துக்குச் சென்றுதான் நீராடுவார். தம்பிரான் (எஜமானர்) குளத்திற்கு நீராட வருகிறார் என்றறிந்தால் குளத்தினருகே யாரும் நிற்கமாட்டார்கள். வாளும் கேடயமுமேந்தி இரு மெய்க்காவலர் முன்னே செல்வார்கள். வெகு தொலைவுக்கு எட்டும் வகையில் 'ஆ-ஹா!' என்று ஒலி எழும்ப அவ்வப் போது கூவிக்கொண்டு அவர்கள் நடப்பார்கள். நீண்ட தண்டுள்ள தோர் ஓலைக்குடையைத் தம்பிரானின் பின்னிருந்து ஒரு பணியாளன் பிடித்துக்கொண்டு தொடர்ந்து நடப்பான். குளத்துக்கு அவர் நீராடச் செல்வதையும், நீராடித் திரும்புவதையும் காண மக்கள் வரிசையாக நிற்பார்கள்.

நாவிதனின் முன் அமருமுன், அவர் அவனுக்கு வெற்றிலை பாக்கு அளிப்பது வழக்கம். அவன் தம்முன் கத்தியும் கையுமாகச் சிறிது

நேரம் உட்காரவேண்டியிருப்பதால், அவனை மனமகிழச் செய்வது உசிதமென்று கருதுவார்போலும்!

ஏதேனும் காரணம்கொண்டு தம்பிரான் ஆண்டில் ஒரிருமுறை ஆலத்தூருக்கோ, பாலக்காட்டுக்கோ பயணம் செல்வார். எங்கள் இல்லம பாலக்காட்டிலிருந்து தென்மேற்கில் இருபது மைல் தொலைவில் தரூர் கிராமத்தில் இருந்தது. நான் அங்குதான் பிறந்தேன்.

பாட்டனரின் ஊர்ப்பயணம் தீர்மானமாகிவிட்டால் பல நாட்களுக்கு முன்பிருந்தே அதற்கான முன்னேற்பாடுகள் தொடங்கிவிடும். பல வகையான படைக்கலக் கருவிகள் அங்கே இருந்தன. அக் கருவிகளைத் துடைத்துச் சுத்தமாக்க ஆட்கள் வருவார்கள். வாள், கேடயம், துப்பாக்கி, ஈட்டி, சூலம், கோடரி போன்ற கருவிகளை, அறையில் அவ்வவற்றிற்குரிய இடங்களில் மாட்டி வைத்திருப்பார்கள். குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் மட்டுமே அவற்றை வெளியில் எடுப்பார்கள். பல்லக்குத்தூக்கிகள் வந்து பல்லக்கைத் துடைத்துச் சீராக்குவார்கள். பணிக்கர் வருகைதந்து யாத்திரைக்குரிய நேரம் பார்த்துச் செப்புவார். தம்பிரான் பவனி புறப்படுவதைக் காண அக்கம் பக்கங்களிலுள்ள மக்களெல்லாம் வந்து கூடுவார்கள். அந்த யாத்திரைக் கோலமே காணுதற்குரியதோர் காட்சி!

காவலரனைவரும் அவரவர்க்குரிய உடுப்பணிந்து ஆயுதமும் தாங்கி, அணிவகுத்து நிற்பார்கள். பல்லக்கின் முன்னும் பின்னுமாக அவர்கள் அணி நிற்க, பல்லக்கின் இருமருங்கிலும் இருவர் வெள்ளித்தடியுடன் காட்சி தருவார்கள். வெற்றிலைப் பெட்டியும் தூக்குச்செம்பும் ஏந்திய ஏவலரும் உடன்வருவார்கள்.

எல்லோரும் அவரவர் நிலையில் தயாராக நின்றதும் சகுனம் பார்ப்பார்கள். பின்னர், கணுக்கால் வரையிலான நேர்த்தியான இழை வேட்டியும், இடுப்புக்குமேல் உத்தரீயமும், காலில் மிதியடிகளும் அணிந்து, மார்பில் பொன்னரங்கள் திகழ, தம்பிரான் வெளித் தோன்றுவார். பல்லக்கில் ஏறுமுன், இரு கைகளையும் பின்புறம் இணைத்துக் கொண்டவராய், பணியாளர் அணியைப் பார்வையிடுவார்.

இனி, பவனி கிளம்பவேண்டியதுதான்!

முன்செல்லும் கட்டியக் காவலரின் ஆர்ப்பு விளியும், பல்லக்குத்தூக்கிகளின் அடங்கிய மெல்லொலிகளும், மற்ற ஏவலரின் பேச்சுக் குரல்களும், வெகுதொலைவு வரை கேட்கும்.

தம்பிரான் அரசர்க்குரிய வகையிலேயே விருந்தினரை உபசரிப்பார். யார் சென்றாலும் குறைவின்றித் தாம்பூலம் வழங்குவார். என்றாலும், வெற்றிலை பாக்கை அளிக்கும் மரியாதையில் சில வேற்றுமைகள் உண்டு. சிலருக்குக் கையிலேயே வெற்றிலை பாக்கை எடுத்துக்

கொடுப்பார். சிலர்முன், வெற்றிலைப் பெட்டியை வைத்துக்கொண்டு, தாமே வெற்றிலை பாக்கை எடுத்து வழங்குவார். மற்றும் சிலரை உள்ளே வரவேற்று பாயில் அமரும்படி உபசரித்து, வெற்றிலைப் பெட்டியை அவர்முன் வைத்துத் தாம்பூலம் போட்டுக்கொள்ள வேண்டுவார்.

அந்தணரைத் தவிர்த்து வேறு எவரும் தம்பிரானின் முன் வெற்றிலை போட்டுக்கொள்வது வழக்கமில்லை. அந்தண மரபில் வந்தவரை அழைத்து உபசரிப்பதிலும், அவர்களுக்குத் தானங்கள் வழங்குவதிலும் தம்பிரான் பற்று மிகுந்தவர். அவருடைய ஏடத்தின் ஆளுகைக்குட் பட்டு ஒரு அன்னசாலை (ஊட்டுப்புரை)யும் இருந்தது. அன்றைய பாலக்காட்டு அரசுவழிக் குடும்பங்களை 'ஏடம்' என்று சொல்வது வழக்கம். பிராமண வழிப்பயணிகள், அந்த விடுதியில் இரு வேளைகளிலும் தங்கி உணவு கொள்ளலாம். இரவு உணவுக்குப் பிறகு தாம்பூலமும், பாயும் தலையணையும்கூட அவர்களுக்கு அளிப்பது வழக்கம். இத்தகைய கட்டளைகளை அந்நாளைய செல்வர், அங்குப் பல இடங்களிலும் நிறுவியிருந்தார்கள். என்றாலும், உயர்குலத்திலுதித்தோருக்கே இவ் வசதிகள் அளிக்கப்பெற்றன. அவர்களில் புலமை வாய்ந்தவர்களும், சாத்திரங்களில் தேர்ந்த அறிஞர்களும் இருப்பார்கள். என் பாட்டனார் அவர்களுடன் உரையாடி மகிழ்வார். கதை புராணங்கள் விளக்கிக் கூறக் கேட்டு இன்புறுவார்.

என்னுடைய பாட்டனருக்கே கதை சொல்லும் ஆற்றல் நிறைய உண்டு. மிகவும் சுவாரசியமாகச் சொல்லுவார். நாள்தோறும் நானும் என் மூத்த சகோதரியும் இரவு சாப்பாட்டுக்குப் பிறகு அவரிடம் கதை கேட்கச் செல்வோம்.

கதை முடியுமுன் தாத்தாவின்மேல் காலைப் போட்டுக்கொண்டு படுக்கும் நான் உறங்கிவிடுவேன். வாஞ்சை மேலிட அந்த அன்புக் கரங்கள் என் உச்சியில் வருடும் இதத்தை அநுபவிக்காமல் நான் உறங்கிய நாட்கள் மிகச் சொற்பம்.

பள்ளியில் ஆசிரியரிடம் பிரம்படி பட்டாலும், வேறு பிள்ளைகள் என் பென்சிலைப் பிடுங்கிக்கொண்டாலும், என் பாட்டனரிடம்தான் ஓடி வருவேன். எனக்கு எத்தகைய துன்பம் நேர்ந்தாலும், தாத்தாவிடம் வந்துவிட்டால் அது நீங்க வழியுண்டு என்ற நம்பிக்கை என் இளம் உள்ளத்தில் ஆதாரமாக இருந்தது. நான் எத்தகைய குறும்பு செய்தாலும் அவர் என்னை ஒன்றும் செய்யமாட்டார் என்றும் நம்பியிருந்தேன். பொறுக்க இயலாத வகையில் நான் குறும்பு செய்து தொலைத்தால்கூட, அவர், ''உன்னை அடிக்கப் போறேன் ஒரு நாள்!'' என்றுதான் கடிந்துகொள்வார். ஆனால் என்னை அடிக்காமலேயே அவருடைய காலம் சென்றுவிட்டது!

மரணத்தின் கொடுமையை முதன்முதலாக நான் அப்போதுதான் உணர்ந்தேன். என்னுடைய கண்ணன செல்லப் பாட்டனரைப் பட்டால் மூடிச் சிதையில் வைத்துத் தீயிட்டபோது, அதைக் காணப் பொறுதவனாக நான் கதறினேன். சிதை பற்றி எரிந்தபோது, என்னை எத்தனையோ முறை வாரி அணைந்த அந்தக் கைகள் கருகி வீழ்ந்ததையும், எப்போதும் எனக்கு ஆதரவும் ஆறுதலும் அளித்த மார்பு வெந்து நீறுனதையும் தாங்காமல் என் இள நெஞ்சம் விண்டது. என்னுடைய அருமைத் தாத்தாவை இனிக் காணேனே என்று துயரில் மூழ்கினேன். மற்றவரெல்லாம் என்னைத் தேற்ற முன்வந்தாலும், தாத்தா இருந்து பழகிய இடங்கள் வெறிச்சோடிப் போனதைக் காணுந்தோறும் என்னையுமறியாமல் விம்மல் வெடிக்க அழுதேன்.

"தாத்தா சுவர்க்கத்திலிருக்கிறார். அவருடைய பாவ-புண்ணியங்களைக் கடவுள் சோதனை செய்துகொண்டிருப்பார்!" என்று சிலர் என்னிடம் கூறியபோது, நான் அவர்களிடம் ஒரேபிடியாக, "என் தாத்தா ஒரு பாவமும் செய்யாதவர்!" என்று கூவினேன். நன்மணிகளிழைத்த பொன்முடியும், பொன்னரைஞாணும், பட்டாடைகளும் அணிந்து உயர்ந்ததோர் பீடத்தில் அமர்ந்திருந்ததோர் தெய்வீக வடிவையும், நீராடி, நெற்றியில் குறியிட்டு, கைகட்டி, அந்தத் திருமுன்பில் அமைதியும் பணிவுமே உருவானாற் போன்று தொழுதுநின்ற பாட்டனரையும் என்னுடைய இளம் உள்ளம் கற்பனை செய்து பார்த்தது.

என்னுடைய பாட்டி (அன்னையின் அன்னை), நரைத்த கூந்தலும் திரு நீற்றின்மீதணிந்த குங்குமப் பொட்டுமாக, அதிகாலையில் ஆற்றிலிருந்து நீராடித் திரும்பி வருவதைச் சற்றுத் தொலைவிலிருந்தே இனம் கண்டு கொள்ளலாம் பாட்டி நீராடச் செல்கையில் என்னையும் உடன் அழைத்துச் செல்வாள். நீராடி வீடு திரும்புமுன் ஆற்றின் கரையில் இருந்த பெரிய ஆலமரத்தைச் சுற்றி வலம் வருவாள்.

"காசி விசுவநாதா! வில்வாத்ரி நாதா! அநாத ரட்சகா!" என்று தொழுது, ஆலமரத்தடியிலிருந்து இறங்கி வீடு திரும்புவாள். பாட்டியின் திருநீற்றுச் சம்புடத்தை எடுத்துக்கொண்டு நானும் அவளைப் பின்தொடர்வேன். வழியில் யாரேனும் செருமரை (தீண்டாதோரை)க் கண்டால் விலகிச் செல்லும்படி, உரத்த குரலில் கட்டளையிடுவாள். ஆனால் அதே மக்களுக்கு அவள் தலைக்குத் தேய்த்துக் கொள்ள எண்ணெயும், உடுக்கத் துணியும், வெற்றிலைபாக்கும் உவந்து அளிப்பாள். பாட்டியின் மருந்துப்பெட்டியில் கைவசமாகச் சாதாரண மான உடல் நலிவுகளுக்கான மருந்துகள் இருக்கும். அந்நாட்களில் வைத்தியரைத் தேடிச் செல்பவர்கள் மிகக் குறைவு. எங்கள் வீட்டில்

மட்டுமல்ல; அண்டை அயலார் அனைவருக்குமே தேவைப்படும்போது அம் மருந்துகளையும், அவற்றுடன் அறிவுரைகளையும் நல்கி உதவுவாள் பாட்டி. ஆனால், பாட்டிக்குக் கோபம் வந்துவிட்டால், அவளுடைய கடுஞ்சொற்களையும் கேட்டே தீரவேண்டும். அவளுக்குக் கோபம் மேலிட்ட நேரத்தில், அவளுடைய நாவினின்று எழும்பும் சுடுசொற்கள் கேட்போருக்குப் பொறுக்க இயலாதவையாகவே இருக்கும்.

பாட்டிக்கு இரண்டே மக்கள்தாம். என்னுடைய தாயைவிடப் பல ஆண்டுகள் மூத்தவர் அப்புக்குட்டி மேனன். அப்புக்குட்டி மேனனுக்குப் பிறகு, என் பாட்டி பதினேழு குழந்தைகளைப் பெற்றாளாம். ஆனால் அந்தக் குழந்தைகள் எல்லாம், பிறந்த சில நாட்களிலேயே இறந்துவிட்டன. நாற்பது வயசான பின்னரும், ஒரு குழந்தை இல்லையே என்ற குறை என் பாட்டிக்கு இருந்தது. எனவே, அக் குறை தீர, பல பிராயச்சித்தங்கள், புனிதத் தலங்களுக்குச் சென்று தெய்வ வழிபாடுகள் எல்லாம் செய்து கொண்டபின், நாற்பத்திரண்டாம் வயசில் என் அன்னையைப் பெற்றாராம். மகளுக்கு அன்றையநிலைக்குகந்த கல்வி பயிற்றினர்கள். என் அன்னைக்கு நன்றாக எழுதப் படிக்கத் தெரியும் அவள் இராமாயணம் படிக்கையில் கேட்க இனிமையாக இருக்கும். இனியகுரலில் பாடி, வீணையும் வாசிப்பாள். நாலைந்து மக்களைப் பெற்ற பின்னரும், என் தாய் பாடுவதற்கும் வீணை வாசிப்பதற்கும் தடை ஏதும் நேர்ந்துவிடவில்லை.

என் அன்னைக்கு இசை பயிற்றுவித்த பழையனூர் சாமு பாகவதரை எனக்கு இப்போதும் நினைவிருக்கிறது. எனக்கு நினைவு தெரிந்த காலத்தில் அவர் வழக்கமாக வந்து பாடம் சொல்லிக் கொடுப்பது இல்லை. எனினும் அவ்வப்போது வந்து தம் மாணவியை அழைத்துப் பாடச் சொல்வார்; தாமும் உடன் பாடுவார். எழுபது வயது சென்ற சாமு பாகவதருக்கு வாயில் நான்கைந்து பற்களே எஞ்சியிருந்தன. உச்சரிப்பும் குரலொலியும் சுமாராகத்தானிருக்கும். ஆனால், அவர் அஷ்டபதி பாடுகையில், பக்தி உணர்வு மேலோங்கியிருக்கும். இந் நாட்களில் சிலர் அஷ்டபதியைப் புதிய முறையில் பாடுகின்றனர். அது கேட்பதற்கு அவ்வளவு இனிமையாக இல்லை. எனக்கு அஷ்டபதியைப் பழைய முறையில் பாடக்கேட்கவே விருப்பம்.

என் தாய் அதிகாலையிலேயே எழுந்து விளக்கேற்றி, வீணையும் கையுமாக அமர்ந்து அஷ்டபதி பாடுகையில் அதைக் கேட்க மற்றவர் அனைவரும் அங்கு வந்து அமருவார்கள்.

வீட்டு வேலைகளைச் செவ்வையாகச் செய்வதிலும், பணிப்பெண்டிருடன் ஒன்றிப் பணியாற்றும் எளிமைப் பண்பிலும், கனிவோடு பழகும் தன்மையிலும் என் தாயின் இயல்பு அருமையாகப் புலப்படும். வேனிற் காலத்தில் காய்கறிப் பயிருக்கு நீர் வார்க்க, பணியாளருடன் அவளும்

செல்வாள். காலையில் பணிப்பெண்டிர் வீடு பெருக்கி மெழுகிச் சுத்தம் செய்யும்போது, என் தாயும் அவர்களுடன் சேர்ந்து உதவுவாள். எங்கள் வீட்டில் வெகுகாலமாக ஒரு அம்மாள் சமையற்பணி செய்து கொண்டிருந்தாள். அவளை நாங்கள் எங்களுடைய குடும்பத்தில் ஒருத்தியாகவே கருதியிருந்தோம். என் அன்னை, அவ்வப்போது சமையல் அறைக்கும் சென்று அந்த அம்மாளுக்கு உதவி செய்வதுண்டு. சிவராத்திரி, ஆவணி அவிட்டம் போன்ற விசேட நாட்களில், அந்தணருக்குத் தட்சிணையும், அரிசி, காய்கறி, பருப்புப் போன்ற பொருளும் அளிப்பது வழக்கம். அந்தந்த நாட்களுக்கென்று தனியான வழக்கங்களும் விதிமுறைகளும் இருந்தன. அவையொன்றும் முடங்காமல், தட்டாமல் என் அன்னை நிறைவேற்றுவாள்.

என்னுடைய தமக்கைக்கும் எனக்கும் இடையே சண்டையோ தகராறோ நேரிட்டால் என் தாய் எப்போதும் என் சோதரியைத்தான் கோபிப்பாள்.

"அவன் வெறுமே சண்டைக்கு வரமாட்டான்? நீதான் சண்டைக்காரி!" என்று கடிந்து என்னைத் தனியே அழைத்துச் செல்வாள். நான் எப்போதும் குற்றமற்றவனாகவே இருந்ததில்லை. என்றாலும் என் தாய்க்கு நானே குற்றமற்றவன்?

என் தாய்மாமன் அப்புக்குட்டி மேனன் ஏறக்குறைய தம் ஐம்பதாவது வயதில் காசிக்குச் சென்றார். அங்கிருந்து அவர் திரும்பவில்லை. அங்கேயே முக்தி பெறவேண்டும் என்பதுதான் அவருடைய இறுதி விருப்பமாம். அது நிறைவேறிவிட்டது.

தரவாட்டிலிருந்து (குடும்ப வீட்டிலிருந்து) சிறிது தொலைவில் தந்தை மரப்பலகைகள் கொண்டு அமைத்திருந்த சிறு வீட்டில் நாங்கள் வசித்தோம். எங்களுடைய தரவாட்டுக்கு, 'கிழக்கே பொற்றவீடு' என்ற பெயர் வழங்கி வந்தது. இந்தக் குடும்பத்தின் உறுப்பினர் சிரமத்துடன்தான் காலம் தள்ளினார்கள். வேலி கட்டவும், கூரை வேயவும், பயிர்க்குழி கொத்தவும், குடும்பத் தலைவருக்கு (காரணவர்) மருமக்களாகிய இளைய தலைமுறையினர் பெரிதும் உதவுவார்கள். அவர்கள் பலருக்கும் குறிப்பிடத்தகுந்த தொழிலோ, வேலையோ கிடையாது. அதனால் தலைவருடைய கருத்துக்கேற்ப நடக்கச் சித்தமாக இருந்தார்கள். தலைவருக்கும், இளைய தலைமுறையினருடன் இணைந்து பணியாற்றுவதற்கு அலுப்புத் தோன்றியதில்லை.

நண்பகல் வரையிலும் வேலை செய்தபின் நீராடி, இடுப்பு வேட்டியை வேலியில் உலரவைத்துவிட்டு, துண்டை உடுத்துக்கொண்டு தலைவர் உணவு கொள்ள அமருவார். கனமான பெரிய கிண்ணத்தின் முன் அவர் அமர்ந்துகொண்டதும், அவருடைய இளைய சோதரி உணவு

பரிமாறுவாள். நாவசைத்து ஒரு சொல் தெறிக்காமல், அவர் பெரிய உருண்டைகளாக உருட்டி, கவளம் கவளமாக விரைந்து உண்பார். வெற்றிலை பாக்கும் போட்டுக் கொண்டபின் குடையும் கையுமாக வெளியிலிறங்குவார். குடும்பத்தலைவரின் அன்றாட வழக்கம் இது.

குடும்ப நலன்களையும் புகழையும், இளைய தலைமுறையினர்தாம் பற்று தலுடன் காத்துவந்தனர். கோயில் உற்சவங்கள், பூரம் போன்ற விழா நாட்கள் ஆகியவைதாம், அவர்களுடைய ஒரே மாதிரியான அன்றாட வாழ்க்கையில் சிறப்பான நாட்கள். குடும்ப வீட்டில் எல்லோரும் ஒன்று சேர்ந்து வாழ வசதிகள் குறைவாக இருந்ததால்தான் தந்தை எங்களுக் கென்று அந்தச் சிறு மரவீட்டை அமைத்திருந்தார். என்னை ஒத்த சிறுவர்களுடன் விளையாடி மகிழ நான் மரவீட்டிலிருந்து 'தரவாட்டு' வீட்டுக்குச் செல்வேன். நாங்கள் எத்தனையோ வகை விளையாட்டுக்களை விளையாடுவோம். நாங்கள் மிக விரும்பி விளையாடும் ஆட்டம், மாஸ்டரும்-பிள்ளைகளுமான பள்ளிக்கூட விளையாட்டுத்தான. 'காரண வரும் அனந்திரவரும்' என்ற குடும்ப விளையாட்டையும் நாங்கள் அடிக்கடி விளையாடுவோம். பெரியவர்கள் யாரேனும் அருகில் வருவது தெரிந்தால் நாங்கள் ஓடி ஒளிவோம். குடும்பத் தலைவராகிய காரணவரிடமும் மற்ற மாமன்முறைக்காரர்களிடமும் எங்களுக்கு அச்சம். ஆனால் ஒரே ஒரு மாமாவிடம் மட்டும் எங்களுக்குப் பயம் கிடையாது. அவர்தாம் புளுகுமூட்டை மாமா. அவரைக் கண் டால் எல்லோரும் அவரைச் சூழ்ந்து கொள்வோம். அவருக்கும் எங்களிடம் மிகுந்த பிரியம்.

அவரைப் புளுகுமூட்டை என்று அழைத்த காரணம் என்னவென்று தெரியவில்லை. சிறியவர் மட்டுமில்லை; பெரியவர்களும் அவரை அப்படித்தான் குறிப்பிட்டார்கள்.

எனக்கு நினைவு தெரிந்த காலத்தில் அவருக்குச் சுமாராக ஐம்பது வயசு இருக்கும். மெலிந்து உயரமாக, வழுக்கைத்தலையும், வலப் பக்கம் சாய்ந்த பார்வையும், வெற்றிலைக்காவி ஏறிய பற்களும், முழங் காலோடு ஏறிய கரை வேட்டியுமாகக் காட்சியளிப்பார். ஒரு விசிறியும் கையுமாக அவர் வருவது தெரிந்தால் போதும். சிறுவர்கள் ஓடிச் சென்று அவரைச் சூழ்ந்து கொள்வார்கள். வாயிற்படி ஏறுமுன், "எங்கே போயிருந்தீர்கள் மாமா? கொஞ்ச நாளாக உங்களைக் காணவே இல்லையே?" என்ற விசாரணைகள் பிறக்கும்.

அவர் அப்படியே 'கதை சொல்ல' அமர்ந்துவிடுவார். அவருடைய "கதை"யை நான் இன்னும் மறக்கவில்லை.

ஒருநாள் அவர், "நான் திரு(வ)ல்லா மலை போயிருந்தேன்..." என்று தொடங்கினர். நான் அதே சொற்களை நினைவில் கொண்டுவருகிறேன். "திருல்லா மலையிலிருந்து லக்கிடிக்குப் போனேன். அப்ப, ரயில் வண்டி

யில் புடலங்காய் ஏத்தியிருந்தார்கள். ஒண்ணுண்ணும் பதினுறுடி நீளம். ஆமாம், ஒரு வாழை மரத்தைப்போல அத்தனை பருமன்! அந்த மாதிரிப் புடலங்காயை நான் இது வரையிலும் கண்டதில்லேன்னு, பாருங்களேன்!''

''அதெல்லாம் எங்கே மாமா போச்சு?'' என்று கேட்டான் ஒரு பொடியன்.

''சொல்றேன் கேளு. கொச்சி ராஜா பிறந்த நாளுக்குக் கொண்டு போறுங்களாம். என்னிடம் ஒரு சமையற்காரர் இதைச் சொன்னர். அவர் அங்கே போறதைக் கேட்டு, நானும் போனேன் ஆகா! அந்த அமக்களத்தை ஏன் கேட்கிறீங்க! அடா...டா.....!''

வெற்றிலையை எடுத்துத் துடைத்துச் சுண்ணும்பு தடவிக்கொண்டு, புளுகுமூட்டை மாமா சுவாரசியமாகப் பிறந்தநாள் விருந்தை விவரிக்கலானர்.

''பந்தியில் போட்டிருந்த இலை ஒண்ணுண்ணும் ஆசாரி கைக் கஜக் கோலைப்போல் மூணுபங்கு நீளமாயிருந்தது. சாதமனு அது சாதம். தும்பைப்பூ கெட்டுது போங்க! கறி கூட்டு பச்சடி வகைகள்.. அப்பப்பா! அறுபத்துநாலு விதம். பால்பாயசம் பரிமாறினுங்களே, அதைப் பார்க்கணும்டா நீங்க!''

மாமா முகத்தையும் கைகளையும் ஆட்டிக்கொண்டு அதை விவரிக்கையில் கூடிய உற்சாகமும் ஆவலும் மெத சுவாரசியமாக இருந்தன.

''ஒரு கிணறு நிறையப் பால்பாயசம். கிணறு நிறை...ய! கிணத்தைச் சுற்றி உள்ளே வெள்ளித்தகட்டால் உறை இறக்கியிருந்தார்கள். கிணத்துக்குள் வெள்ளி உறை! அப்புறம், அந்தக கிணத்துக்குள்ளே, வெள்ளியிலேயே இறைக்கும் ஏற்றமும் இருந்தது. அந்த இறைவை ஏற்றம்தான் பாயசத்தை மொண்டு வெளியே இறைச்சிது. இதெல்லாம் 'நம்பூரிகள்'தான் செய்தார்கள். இரண்டு பக்கங்களிலும் நைஸ் சர்க்கரையால் வழிவச்சு விட்ட கால்வாயில் பாயசத்தை இறைச்சு, ஒவ்வொரு இலைக்கும் திருப்பிவிட்டான்னு பார்த்துக்குங்களேன்? இதெல்லாம் யாரால் செய்ய முடியும்! மகாராஜாக்களால்தான் முடியும்! என்னை அங்கே இரண்டுநாள் தங்கச் சொன்னர்கள். அதனல் தான் நான் இங்கு இல்லை!''

மாமா வெற்றிலையைச் சுருட்டி வாயில் அடைத்துக்கொண்டார். நாங்கள் அந்தக் கதையை மற்றவர்களுக்கெல்லாம் விவரிக்க ஒவ்வொரு பக்கமாக ஓடினோம். 'புளுகுமூட்டை' என்ற அடை மொழிக்கான காரணம் குறித்து இனி வாசகருக்கு ஐயம் இருக்காது.

தலைமை ஆசிரியர் கோவிந்த மேனன், எங்கள் இல்லத்துக்கு நாள் தோறும் வருவார். என் பாட்டனருடைய கணக்குகளையும் கடிதங்களை

யும் அவர்தாம் எழுதிக் கொடுப்பார். இடுப்பு வேட்டியைப் பணிவுடன் சுருக்கிக்கொண்டு துண்டை இடுப்பில் வரிந்து, பேனுக்கத்தி தொங்கும் சாவிக் கொத்துடன் இரு கைகளையும் கட்டிக்கொண்டு, தலைமை ஆசிரியர், பாட்டனரின் அருகே நின்று சிறிது நேரம் பேசுவார். ஆசிரியரைக் கண்டதும் நானும் என் சோதரியும் உள்ளே ஓடிச் செல்வோம். அவர் அங்கிருந்து சென்றுவிட்டாரா என்று அடிக்கடி வாயிலருகில் சென்று எட்டிப் பார்ப்போம். ஆசிரியர் தம்முடைய மனைவியின் வீட்டுக்குச் செல்வதை நாங்கள் பார்த்துக்கொண்டு நிற்போம். அவர் சிறிது தொலைவு சென்றதும்,

''கோவிந்த மாஸ்டர், புல்லாட்டு வீடே,
அஸ்த மிச்சால் தினே தினே''

என்று பாடிக்கொண்டு ஓடி விளையாடுவோம். இந்தப் பாட்டைக் கவனம் செய்தவர் யாரென்று தெரியாது. இந்தக் கேலிப் பாட்டைப் பற்றி மாஸ்டர் அறிந்திருந்தாரா என்பதும் தெரியாது. ஆனால், நாங்கள் அந்தப் பாட்டைப் பாடாத நாள் அரிது. ஆண்டுதோறும் விஜயதசமியன்று ஆசிரியருக்கு குருதட்சிணை அளித்து, அவர் அடி தொட்டு வணங்குவோம். ஊர்ப்பயணம் செல்லும்போதும் அவருடைய ஆசி பெற்று வருவது வழக்கம்.

ஓணம், சித்திரை விஷு, திருவாதிரை, கோயில் உற்சவங்கள் போன்ற விழா நாட்களை நாங்கள் பெரு மகிழ்ச்சியுடன் கொண்டாடு வோம். திருவோணத்துக்குச் சில நாட்கள் முன்பிருந்தே கொண்டாட் டங்கள் தொடங்கிவிடும். பூக்கொய்து வருதலும், 'திருக்காக்கரை அப்பனை' (மகாபலி) உருவாக்குவதும், வில்லுப்பாட்டிசைப்பதும், ஆட்ட அரங்குகளைச் சீராக்குவதுமாக, ஒவ்வொன்றுகச் செய்துகொண்டிருப் போம். உத்திராட நாளில் கோடி வேட்டியும், திருவோணத்துக்கு வெள்ளைச் சலவை செய்த வேட்டியும் வேண்டுமென்ற கட்டாயம் உண்டு.

என் தந்தையின் ஏடத்தில், (காரணவர்) தலைவர் ஓண விழாவில் நடத்தி வந்த அடியாட்ட வைபவம் பலரையும் கவர்ந்திருக்கிறது.

பிற்பகல் இரண்டு மணியளவில் ஒரு பெரிய மைதானத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறத் தொடங்கும். அந்த மைதானத்துக்கே அடியாட்ட மைதானம் (தல்லுபரம்பு) என்றுதான் பெயர்.

மைதானத்தின் தெற்கு – வடக்குப் பகுதிகளில் ஆட்ட நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளும் இரு தரப்பினரும், கிழக்கு – மேற்குப் பகுதிகளில் பார்வையாளருமாகக் கூடி இருப்பார்கள். மைதானத்தின் நடுவே, ஒரு நாற்காலியில் 'காரணவர்' அமர்ந்திருப்பார்.

ஓண அடியாட்டத்தில் பங்கு கொள்பவர் எவரேனும் ஏதேனும் தரக் குறைவாகப் பேசினாலோ, நடந்துகொண்டாலோ, அவர்களை அங்

கிருந்து விலக்கிக் கொண்டுசெல்லக் கையில் பிரம்புடன் இரு காவலர், தலைவரின் அருகில் இருப்பார்கள். கூட்டம் கூடியதும் இருதரப்பினரும் தத்தம் வரிசைகளைக் காட்டத் தொடங்குவார்கள். ஒவ்வொரு தரப்பிலும் உள்ள வீரர்கள், இடையில் வேட்டியை முறுக்கிக் கச்சை கட்டிக்கொண்டு நாலைந்து பேராகக் கைகளைக் குலுக்கிக்கொண்டும் கூவிக்கொண்டும் பாய்ந்தோடி, எதிர்த்தரப்பினரின் பக்கம் சென்று அவர்களுக்குச் சவால் விடுத்துத் திரும்புவார்கள். இவ்வகையில் தத்தம் வலிமையைக் காட்டி ஆர்ப்பரித்தும், புகழ்பாடிக்கொண்டும், சவால் விட்டும், அடியாட்டத்துக்கான சூழலைத் தோற்றுவிப்பார்கள். பிறகு இரண்டிரண்டு வீரர்களாக 'அடி'ப்போர் நிகழ்த்துவார்கள்.

ஆட்டம் நிகழும்போது, மரியாதை தவறும்வண்ணம் ஏதேனும் நடக்கிறதா என்பதை அதற்காகவே நியமிக்கப்பெற்றவர்கள் கண்காணிப்பார்கள். அவ்வகையில் உறுத்தலாக நடந்து கொள்பவர்களை உடனே அந்தக் கண்காணிப்பாளர் ஆட்டத்தினின்று விலக்கிவிடுவார். அந்நாட்களில், கொற்றி, குட்டாயி போன்ற புகழ் பெற்ற ஆட்டக்காரர்கள் அடிச்சண்டையில் கலந்து கொள்வார்க ளென்று கேள்விப்பட்டாலே பெரிய கூட்டம் கூடிவிடும்.

சில சமயங்களில் கலவரங்களும் கூச்சல்களும் வலுத்துக் குழப்பம் தோன்றுவதுமுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் காரணவராகிய தலைவர், கையில் பிரம்புடன் கூட்டத்தினிடையே புகுந்து பிரம்பை இடமும் வலமுமாக வீசிக்கொண்டு நடப்பார். கலவரமும் கூச்சலும் சட்டென்று அடங்கி ஒய, அவரவர் தத்தம் இடங்களில் அமர்ந்து விடுவார்கள்.

விழாவின் இறுதி நாளன்று, களியாட்டத்தில் பங்குகொண்ட இரு தரப்பினருக்கும் தலைவர் புதிய வேட்டி துண்டு வழங்குவார். எத்தகைய கிளர்ச்சியூட்டும் காட்சிகள் அவை!

2

கல்விப் பயிற்சி

பாலக்காட்டிலும் கோழிக்கோட்டிலும்

என் தந்தை பீமனச்சன், பாலக்காட்டு அரச பரம்பரையில் 'நடுவிலெடம்' என்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். ஏறக்குறைய நூற்றைம்பதுபேருள்ள என் தந்தையின் தரவாடு அன்று மிக நல்ல

நிலையில் இருந்தது. தந்தை அக் குடும்பத்தில் மூன்றுவதாகப் பிறந்தவர். என்றாலும், குடும்பத்தைச் சார்ந்த நிர்வாகங்களை அவர் தான் ஏற்று நடத்தினர். சொல்நயமும், செயல்திறனும், செல்வாக்கும் நிறைந்த அவர்மீது, குடும்பத்திலுள்ளவர் மட்டுமன்றி, மற்றவரும் மரியாதையும் நம்பிக்கையும் வைத்திருந்தனர். 'நடுவிலெடம்' என்ற எங்கள் குடும்ப மனையில் முப்பது அறைகள் இருந்தன. காலை-மாலை இரு நேரங்களிலும் பொதுவாகவே எல்லோருக்கும் சேர்த்து உலையில் அரிசி போட்டு வடிப்பார்கள். தாய்வழி மக்கள் தங்களுக்குத் தனியாகக் காய்-கறி குழம்பு சமைத்துக்கொள்வார்கள். ஓணம், விஷு, திருவாதிரை முதலிய பண்டிகை நாட்களில் அதிகப்படி செலவின் தேவைக்காகப் பணமும் பொருள்களும் தாய்வழி மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பார்கள்.

வயசு வந்த ஆண் மக்களுக்கு ஆண்டுதோறும் தேவைக்கேற்ப ஒரு தொகை செலவுக்குக் கொடுப்பதென்ற வழக்கமுண்டு. திருமணமாகியிருந்தால் இன்னும் அதிகமாகவும் செலவுக்குக் கொடுப்பார்கள். தேவைகள் குறைவாக இருந்த அக்காலத்தில் இந்த நடைமுறைகள் மிக நன்முகவே நடந்தன.

குடும்பத்தின் கணக்குப்பிள்ளையான கருப்பனெழுத்தச்சன் நாள் தோறும் காலையில் சமையலுக்கு வேண்டிய பொருள்களை எடுத்துக் கொடுப்பார். முழங்காலுக்குக் கீழ்வரும் ஒரு கரைவேட்டி யுடுத்து, மேலே துண்டும் விரித்து, கையில் ஓலையும் எழுத்தாணியும் கொண்டு, கட்டுக்குடுமியுடன் எழுத்தச்சன் சமையற்காரனுக்கு வேண்டிய பொருள்களுக்கான விலையும் விவரமும் அறிவதற்காகத் தந்தையினருகில் வந்து நிற்பார். என் தந்தை, குடும்பத்தில் யாரேனும் வருகின்றனரா, ஏதேனும் விசேஷமுண்டா என்று கேட்டுவிட்டு, அதற்குத் தகுந்தாற்போன்று எழுத்தச்சனுக்கு அனுமதி நல்குவார்.

சமையலுக்கான பொருளெடுத்துக் கொடுத்த பின், எழுத்தச்சன் தெற்குப் பகுதியிலுள்ள களஞ்சியத் தாழ்வரையில் ஏடத்திலுள்ள சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார். பகல் நேரத்தில் சிறுவர்களுக்கு ராமாயணம் படிக்கக் கற்பிப்பார். இதற்கெல்லாம் ஊதியமாக எழுத்தச்சன் பெற்றது ஆண்டுக்கு ஒரு பரை நெல்.

துணி வெளுக்கும் சலவைத் தொழிலாளி, நாவிதர் முதலியோருக்கும் ஆண்டுதோறும் தரவாட்டிலிருந்து இரண்டு அல்லது மூன்று தடவைகள் நெல் அளப்பது வழக்கம். அமைதியும் நிறைவும் குலவிய பொற்காலம் அது!

அந்நாளில் தரூரில் ஒரு துவக்கப்பள்ளி மட்டுமே இருந்தது. அங்கு நான்கு வகுப்புகள் படித்துத் தேர்ந்ததும் நான் ஆலத்தூர் போர்டு மிடில் ஸ்கூலுக்குக் கல்விகற்கச் சென்றேன். பள்ளியைத் தொலைவி

லிருந்து பார்க்கவே என் நெஞ்சு பயத்தினுல் அடித்துக்கொள்ளும். வீட்டைவிட்டுத் தொலேவில் செல்லுவதனுல் ஏற்பட்ட உணர்வோ, அன்றி ஆசிரியர்களிடம் ஏற்பட்ட அச்சமோ? அன்றைய தலேமை ஆசிரியர், அனந்தசுப்பா சாஸ்திரிகள். சுப்பிரமணிய ஐயர் எனக்கு வகுப்பு ஆசிரியர். எல்லாச் சிறுவர்களுக்கும் அவரிடம் பயம்தான். 'பிரும்மானந்தஸ்வாமி' என்று பின்னுளில் விளங்கிய கோவிந்த மேனன் எங்களுக்கு சமஸ்கிருதம் கற்பித்தார். ஆலத்தூரில் நான் ஆறு மாச காலமே கல்வி பயின்றேன். பின்னர் நான் பாலக்காடு சென்றேன். அங்கே, கல்பாத்தி விசுவநாத சுவாமி கோயிலருகில் உள்ளதொரு மடைப்பள்ளிப் பணியாளர் இல்லத்தில் தங்கிப் படித் தேன். பள்ளி வீட்டுக்கு அருகில்தான் இருந்தது. பள்ளித் தலேமை ஆசிரியரும், பள்ளி உரிமையாளருமான கோபால ஐயர், சிறுருக்குக் கல்வி கற்பிப்பதிலும் தண்டனேயளிப்பதிலும் பெயர் பெற்றவர். கையில் பிரம்பினறி அவர் வகுப்புக்கு வரமாட்டார் அந்தப் பிரம் பைப் பயன்படுத்தாமல் அவர் வகுப்பை விட்டுச் சென்றதும் கிடையாது.

எனக்கு அப்போது பத்து வயசுதான். 1886 ஆம் ஆண்டு, செப்டம்பர் ஒன்றுந் தேதி எனக்குப் பிறந்த நாள்.

அந் நாளில் என்னுடைய ஒத்த வயசுடைய சிறுவர்களுடன் ஆடி மகிழ எனக்கு அதிகமான சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லே. அதிகாலே நான்கு மணிக்கு ஆலயத்தின் முன் நின்று ஒருவர் 'ஹரஹர மஹாதேவா!'' என்று உரக்கக் குரல் கொடுப்பது கேட்கும். அவ்வொலி செவியில் விழுந்ததும் முதலில் வீட்டுக்காரரான மடைப்பள்ளிப் பரிசாரகர் என்னே எழுப்பி ஒரு மண்ணெண்ணெய் விளக்கை ஏற்றிவைப்பார். பொழுது புலரும் வரையிலும் அங்கேயே அமர்ந்து என்னேப் படிக்கச் சொல்லி விட்டு அவர் நீராடி, மடைப்பள்ளிப் பணிக்குச் சென்றுவிடுவார்.

அவர் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் நான் மீண்டும் படுத்துக் கொள்வேன்!

''அவர் வரட்டும், நான் சொல்றேன்! திருட்டுப் பயலே! உனக்குப் படிக்கணும்னு அறிவேயில்லேயே! தின்னுவதும் தூங்குவதும் ஆடுவதும் தானு? நீ எங்கே உருப்படப்போறே? அந்த விசுவநாதசுவாமி கண் பார்த்தால்தான் உண்டு!'' என்று வீட்டுக்காரரின் மனேவியாரான அம்மையார் பொரிந்து கொட்டுவாள் நான் எதுவும் செவியில் விழாதது போன்ற பாவனேயுடன் சுருண்டு கிடப்பேன். பொழுது விடிந் ததும் ஆற்றில் முழுகிவிட்டு, ஆறரை மணிக்குள் பள்ளி செல்ல வேண்டும். பள்ளிக்கூடத்தில் காப்பி எழுதலும், கணக்குப் போடு தலும், பாடம் படிப்பதும் தொடரும். அந் நாட்களில் வகுப்பில் நானும் இன்னும் இரண்டு மூன்று சிறுவர்களுமே இருந்தோம். நாங்கள்

தலைமை ஆசிரியரின் தனியான கவனத்துக்குரியவர்கள்வேறு! காலை எட்டு மணிக்கு வீடுதிரும்பிப் பழைய சோறும் வெண்டைக்காய் குழம்பும் உண்டு மீண்டும் பள்ளிக்குச் செல்வேன்.

பள்ளிக்கூடத்தில் இடம் மிகக் குறைவு. ஆசிரியர்களுடைய உரத்த குரல்களும், அடியோசையும், சிறுவர்கள் கத்தும் ஒலியுமாக எப்போதும் கலகலத்துக்கொண்டிருக்கும்.

மாலை ஐந்து மணிக்குப் பள்ளியிலிருந்து வீடு திரும்பினால் ஆற்றுக்குச் சென்று முழுகாமல் உள்ளே நுழைய முடியாது. குளிக்கச் செல்லும் போது மட்டுமே நான் சுதந்திரப் பறவை. விளக்கு வைத்ததும் கோயிலுக்குச் சென்று தொழுது வருகையில் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க 'ட்யூஷன் மாஸ்டர்' வந்திருப்பார். மடைப்பள்ளிக்காரரும் அவருடைய மனைவியும் நான் செய்ததும் செய்யாததுமாகிய குற்றங்களை அவரிடம் தாக்கல் செய்வார்கள். ''ஏண்டா சோம்பேறிக் கழுதை?'' என்று விளித்து, அவர் என்னுடைய தொடையில் கிள்ளத்தொடங்குவார். வாய்விட்டு அழுதால் அடிப்பார்.

''வாத்தியாரே, அடியாத மாடு படியாது! அப்படிக் கொடுங்க? கொடுத்தால்தான் வழிக்கு வருவான்! எப்ப பார்த்தாலும் என்ன விளையாட்டும் கத்தலும்?'' என்று அவருக்குப் பின்னும் உரமூட்டிவிட்டு அவர்கள் உள்ளே செல்வார்கள்.

கிள்ளல் பொறுத்து, கண்ணீர் அடைக்க, தட்டுத்தடுமாறிப் படிப்பேன். இவ்வகையில் சிறிது நேரத்தில் என் 'டியூஷன்' அன்றைய பொழுதுக்கு இறுதியைத்தொடும் நான் உணவு கொண்டு படுக்கையில் படுப்பேன்.

பள்ளிச் சம்பளம், ட்யூஷன் ஆசிரியருக்கான தொகை எல்லாம் வீட்டிலிருந்து யாரேனும் வந்து கொடுத்துப் போவார்கள். புத்தகங்கள், சிலேட்டு, பென்சில் போன்றவைகளும், மற்றும் ஏதேனும் வாங்குவதற்குமான செலவுப்பணம் தருவதற்குத் 'தாண்டவன்' என்ற ஒரு சிறு வியாபாரியிடம் தந்தை ஏற்பாடு செய்திருந்தார். தாண்டவனிடமிருந்து இலகுவில் பணம் பெயராது. ஒரு முறைக்கு நான்கு முறை கேட்டாலே தேவையானதில் பாதி கிடைக்கும். ஒரு முறை ஒரு ரூபாய் அவன் கொடுத்தான். நோட்டும் பென்சிலும் வாங்கிய பிறகு இரண்டணா மீதியிருந்தது. பள்ளியினருகில் ஒரு கிழவி தின்பண்டங்கள் செய்து விற்பாள். நாள்தோறும் அவளைப் பார்த்துக்கொண்டே செல்வேன். ஏதேனும் வாங்கித் தின்ன வேண்டுமென்றால் என்னிடம் காசு கிடையாது. என் கையில் இரண்டணா கிடைத்ததும், அதில் ஒரு பகுதியைக் கொடுத்து, என்னுடைய நீண்ட நாளைய ஏக்கத்தைத் தீர்த்துக்கொள்ளத் துணிந்தேன். ஓரணாவுக்குத் தின்பண்டங்கள் வாங்கினேன். அறையினுள்ளிருந்து எல்லாவற்றையும் தின்று தீர்த்தேன்.

செட்டிச்சியின் கைப்பண்டங்களை நான் வாங்கித் தின்றதை, வீட்டுக் காரர் மனைவி அறிந்திருப்பாளோ என்று உள்ளூற நடுக்கம்தான். எனினும் அடுத்த நாள் மீதியிருந்த அணைவையும் செலவு செய்தேன். மூன்றும் நாள் தின்பண்டம் வாங்கக் கையில் காசில்லாததால் கடனுக்கு வாங்கித் தின்றேன். ஏழெட்டு நாட்கள் கடனுகவே, வழக்கமாக அவளிடம் வாங்கித் தின்றேன். கடன் சுமை பத்தணவுக்கு ஏறிவிடவே, செட்டிச்சி அதற்குமேல் எனக்குக் கடனுகத் தர மறுத்துவிட்டாள்.

இதனல் அவள் கண்களில் பட அஞ்சி நான் வேறு வழியாக நடக்க லானேன். என்னைக் காண இயலாததால் அவள் எப்படியோ நான் தங்கியிருந்த இடத்தைக் கேட்டறிந்துகொண்டு, கோயில் பரிசாரகர் வீடு தேடி வந்துவிட்டாள். இதற்குமேல் ஏதும் விவரிக்கத் தேவை யில்லை. செட்டிச்சியும், பரிசாரகனும், அவன் மனைவியுமாக என்மீது பொழிந்த வன்மொழிகள் என்னை ஊமையாக்கிவிட்டன. நான் என்ன மறுமொழி பகருவேன்?

கடைசியில் தாண்டவன் செய்தியறிந்து வந்து அந்தக் கடனைக் கொடுத்துத் தீர்த்தான். கொடுத்துவிட்டுத் தந்தைக்கு விவரம் எழுதி விடுவதாக அச்சுறுத்தினன். அந்த அநுபவம் மிகக் கடுமையான தொன்று. கடன் கொடுத்தவனிடமிருந்து ஒருபோதும் தப்பிவிட முடியாதென்ற உண்மையின் முதல் அநுபவத்தை நான் அப்போது உணர்ந்தேன்.

பள்ளி மூடி விடுமுறைக்கு ஊர் சென்றதும் என் அன்னையிடம் நடந்த விவரங்கள் அனைத்தையும் தெரிவித்தேன். என்னை மேலே படிக்கக் கோழிக்கோட்டுக்கு அனுப்ப நிச்சயித்தார்கள். நான் புறப்படுவதற்கு முதல் நாளே தந்தை கோழிக்கோட்டில் நான் எப்படிக் கவனமாகப் படிக்க வேண்டும் என்பதற்கான அறிவுரைகள் கூறலானர். உழைத்துப் படிக்க வேண்டும்; தேவையற்ற வகையில் பணம் செலவு செய்ய லாகாது; மற்றப் பிள்ளைகளுடன் சண்டையிடக்கூடாது; தங்குமிடத்தில் மற்றவருக்குத் தொந்தரவளிக்கும் வகையில் பேசுவதும் நடப்பதும் தவிர்க்க வேண்டும் என்றெல்லாம் அவர் வெகுநேரம் எனக்கு அறிவுறுத் தினர். அவர் நெஞ்சத்து அன்புணர்ச்சியை அதிகமாக வெளிக்காட்டக் கூடியவரல்ல. என்றலும் தம் மகனுடைய கல்விப் பயிற்சிக்காக எத்தகைய தியாகத்தையும் அவர் மேற்கொள்ளத் தயங்காதவராக இருந்தார்.

மறுநாள் காலையில் என் பெட்டியையும் படுக்கையையும் ஒரு கூலியாள் சுமந்து வர, தந்தையின் செயலாளனுக இருந்த வாஸுப்பட்டருடன் கோழிக்கோட்டுக்குக் கிளம்பினேன். அது 1898ஆம் ஆண்டின் தொடக்கம்.

எங்கள் வீட்டிலிருந்து ஏழு நாழிகை தொலைவிலிருந்தது லக்கடி ரயில் நிலையம். வெட்ட வெளியும் விளைநிலங்களும் குன்றும் ஆறுமான அந்த வழி நெடுக வாஸுப்பட்டர் ஏதேதோ பழங்கதைகளெல்லாம் கூறிக்கொண்டு வந்ததால் நடையில் அலுப்புத் தட்டவில்லை பேசிக் கொண்டே வரும் வாஸுப்பட்டர் சில சமயங்களில் ஓய்ந்துவிடுவார். பழகிய வழியாக இருந்ததால் அவருக்கு நடை சிரமமில்லாமல் இருந்தது. வாஸுப்பட்டருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. என்றாலும் கெட்டிக்காரனை செயலாளன் என்ற பெயர் வாங்கியிருந்தார். அவருடைய பேச்சில், அவர் ஒவ்வொரு கஷ்டத்தையும் எதிர்நோக்கி வென்ற விவரங்களும், உழவர்களை முன்னிட்ட பிரச்னைகளைச் சமாளித்த தந்திரங்களும் தெரியவந்தன. மனக்கணக்காகவே எத்தனை பெரிய தொகைகளையும் கழித்து நினைவிலிருத்திச் சொல்லும் அசாதாரணமான திறமையும் அவருக்கு இருந்தது. பலதரப்பட்டவர்களிடம் அவரவர் தன்மைகளுக்கேற்பப் பழகுவதிலும் பேசுவதிலும் வல்லவராகவும் இருந்தார்.

அதற்குமுன் நான் ரயில் வண்டியிலேறிப் பிரயாணம் செய்திருந்தாலும் லக்கடியிலிருந்து கோழிக்கோடு வரையிலும் சென்ற அந்த ரயில் பயணம் ஒரு புதிய அநுபவமாகவே இருந்தது. வண்டியிலிருந் திறங்கி நிலையத்திலிருந்து வெளிவருகையில் அங்கு நிறையக் குதிரை வண்டிகள் நிற்பதைக் கண்டேன். அதற்குமுன் நான் குதிரை வண்டியிலேறிச் சென்றதில்லை. எனவே வாஸுப்பட்டரிடம் நாம் ஒரு வண்டியிலேறிச் செல்லலாம் என்று கூறினேன். ஆனால் வாஸுப்பட்டர் அதற்கிணங்கவில்லை. குதிரை வண்டிக்கு ஆறணா கொடுக்க வேண்டும். கூலிக்காரனுக்கோ, இரண்டணா கொடுத்தால் போதுமே? சாமான்களைக் கூலிக்காரனின் தலையில் ஏற்றி வைத்துவிட்டு நாங்கள் புறப்பட்டோம். வழிநெடுகக் காட்சிகள் எனக்குப் புதுமையாக இருந்தன. வாஸுப்பட்டர் நகரத்தைப்பற்றிக் கூறிய விவரங்கள் எனக்கு உற்சாகமளித்தன.

அன்று மாலையில் கோழிக்கோட்டில் நாங்கள் தங்கவேண்டிய இடத்துக்கு வந்து சேர்ந்தோம்.

எட்டு ஆண்டுகள் நான் கோழிக்கோடு கேரள வித்யாசாலையில் கல்வி பயின்றேன். இந்த வித்யாசாலையே பின்னர் ஸாமுதிரி கல்லூரியாக வளர்ச்சி பெற்றது. இந் நாட்களில் அதற்குக் குருவாயூரப்பன் கல்லூரி என்ற பெயர் வழங்கிவருகிறது. பல சமயங்களிலும் பழைய பெயரே உகந்ததென்று நான் நினைத்ததுண்டு.

பின்தங்கிய மக்களென்று தீண்டாதவர்களாக ஒதுக்கப்பட்டவருக்கு அந்நாள் அக் கல்லூரியில் கல்வி கற்க இடமில்லை ஆனால் அதே சமயத்தில் முகமதியர்களும் கிருஸ்தவர்களும் அந்தக் கல்லூரியில் சேர்ந்து படித்தார்கள். அந்நாட்களில் தீண்டப்படாத மக்கள் அங்கே

சேர்ந்து படிக்க அநுமதிபெற இயலுமோ கூடாதோ என்ற பொருளைக் கல்லூரி விவாத அரங்கில் விவாதத்துக்குரியதாக்கியது நினைவுக்கு வருகிறது. அந்நாளில் நான்தான் கல்லூரி விவாத அரங்கின் செயலாளன். அன்றைய ஆசிரியர்களில் எனக்கு மிகவும் பிடித்தமான சுப்பராவ்தாம் அந்த விஷயத்தை விவாத அரங்கில் வைக்கத் தூண்டினர். ஆசிரியர் சுப்பராவுக்கு, மாணவர்களுக்கு வேண்டிய வற்றை மனதில் புரிந்துகொண்டு அவர்களைக் கவரும் திறமை இருந்தது. அவர்களுக்குக் கற்பிக்க வேண்டியவற்றை எளிதில் மனசில் பதியும் வண்ணம் கற்பிக்கும் தனியான ஆற்றலும் இருந்தது. தவறு செய்த மாணவரை அடித்துத் திருத்துவதென்பது அவருக்குப் பிடிக்காத தொன்று. இளைஞர்களின் மனங்களில் உறைக்கும்வண்ணம் அவர்க ளுடைய தவறுகளை மிக நேர்த்தியான முறையில் சுட்டிக் காட்டுவார். மாணவர்களைக் கூட்டிக்கொண்டு அவ்வப்போது கல்விப் பயணம் புறப் படுவார். அது பாட்டும், களிப்பும், தின்பண்டங்களுமாக உல்லாசப் பயணமாகவும் இருக்கும். நாள்தோறும் பாடம் தொடங்குமுன் பள்ளியில் எல்லோருமாகக் கூட்டுப் பிரார்த்தனை செய்வது வழக்கம். அது எல்லாச் சமயத்தினருக்கும் பொதுவான பிரார்த்தனை. விருப்ப முடைய மாணவர் பிரார்த்தனையில் பங்கெடுக்கலாம். யாரேனும் ஒரு ஆசிரியர், ஏதேனும் நற்கருத்துக்களைப்பற்றி சில நிமிடங்கள் பேசுவார். பிள்ளைகளுடைய இளம் உள்ளங்களை நல்வழிக்குத் திருப்பும் வகையில் உதவக்கூடிய இந்த ஏற்பாடு கொஞ்ச காலம் வழக்கத்திலிருந்தது.

நான் இன்றும் நினைத்துப் பார்க்கும் இன்னொரு ஆசிரியர் ஸி. பி. கோவிந்த நாயர். பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய அந்த நாளிலேயே அவர் 'கேரள ஸஞ்சாரி' என்ற இதழின் ஆசிரியராகவுமிருந்தார். எங்க ளுக்குக் கணக்குக் கொடுத்துப் போடச் சொல்லிவிட்டு அவர் பத்திரி கைக்கான செய்திகளையோ தலையங்கமோ எழுதிக்கொண்டிருப்பார். மாணவர்கள் சத்தம் செய்யத் தொடங்கினால் மூக்குக் கண்ணாடியைக் கையில் எடுத்துக்கொண்டு சற்று நிமிர்ந்து நோக்குவார். பின் மீண்டும் எழுதத் தொடங்குவார். அந்நாளைய ஆசிரியர்கள் தூய்மை நிறைந்த மரியாதைக்குகந்த வகையான உடைகளை அணிந்தார்கள். அலட்சிய மாக உடை யணிவதை எளிய வாழ்வின் இலக்கணமென்று அந்நாளில் யாரும் கருதவில்லை.

மூன்றும் படிவத்தில் தட்சிணாமூர்த்தி ஐயர் ஆசிரியராக இருந்தார். அவர் வகுப்புக்கு வருவதைத் தொலைவிலிருந்தே கண்டு கொள்ளலாம். அவருடைய இல்லம் கல்லூரிக்கருகிலேயே இருந்தது. முதல் மணி யடிக்கையில், நீண்ட கோட்டும் வெண்மையான தலைப்பாகையும் அணிந்து பூமி உருண்டை போன்றதொரு சிவப்பு வண்ணம் பூசிய மரப்

பெட்டியைக் கையிலெடுத்துக்கொண்டு அங்குமிங்குமாக நோட்டமிடும் விழிகளுடன் அவர் வருவதே ஒரு காட்சிதான்! கல்வி கற்பிப்பதுடன் புத்தக வியாபாரமும் அவர் மேற்கொண்டிருந்தார். எனவே, பணம் வைத்துக்கொள்ளும் சிவப்புப் பெட்டியை எப்போதும் ஏந்திவந்தார்.

ஐயர் முடி மழித்துக்கொண்ட நாளில் அதிகமான கோபத்துட னிருப்பார் என்றதோர் கருத்து மாணவரிடையே நிலவியது. அதற்கு ஏதும் ஆதாரமிருந்ததா என்று கூறுவது கடினம். என்றாலும் எங்களுக் கெல்லாம் குறிப்பிட்ட அந்த நாளில் உள்ளூற அச்சம் இருந்தது. பிரம்பை அவர் பயன்படுத்தாத நாள் ஒன்றுகூடக் கிடையாது எனலாம். தலைப்பாகையை எடுத்து அவர் மேசைமீது வைத்துவிட்டுத் தன்னுடைய முழு பலத்தையும் திரட்டிக்கொண்டாற்போல் மாணவர் களைக் கைப் பிரம்பால் அடிக்கையில், அவருடைய தலையில், முந்நாளைய குடுமியை நினைவூட்டும் வகையில் நரை இழைகள் ஆடிக் களிப்பதைக் காணலாம்.

கல்லூரியை அடுத்தாற்போல் விடுதியில் ஒரு பிராம்மணன் பலகாரம் செய்து விற்றுவந்தான். நாள்தோறும் எனக்கு அரையணா பெறுமான தின்பண்டம் கொடுக்கும்படி என்னுடைய பெற்றோர் ஏற்பாடு செய் திருந்தனர். மாலையில் வகுப்பு முடிந்ததும் வழக்கமாக நான் அந்தச் செல்வேன். எனக்கு அனுமதித்திருந்த அரையணா மதிப்புக்கு லட்டு, ஜிலேபி போன்ற இனிப்புப் பண்டங்கள் பெறமுடியாது. முறுக்கும் வடையும் மட்டும் வாங்கி உண்பதுடன் திருப்தி கொள்ளவேண்டி யிருந்தது. லட்டும் ஜிலேபியும் வாங்கி ருசிக்க நான் ஒரு வழி கண்டு பிடித்தேன்.

நான்கு நாட்கள் நான் எதுவும் வாங்காமல் வாயைக் கட்டினேன். ஐந்தாம் நாள் என்னென்ன வாங்கிச் சுவைக்க வேண்டும் என்று எண்ணிப் பார்த்தேன். நான்கு நாட்கள் செல்லாததால் இரண்டணா பெறுமான பண்டங்கள் வாங்கலாம் என்று தீர்மானம் செய்துகொண்டு உள்ளே நுழைந்த நான், "ஒரு லட்டு, ஒரு ஜிலேபி, ஒரு தயிர்வடை ஸ்வாமி" என்று கூறிக்கொண்டு அமர்ந்தேன்.

"ஏண்டா? உனக்கென்ன மூளை கிறுக்கிப்போச்சா? அரையணாவுக்கு இரண்டணாப் பண்டங்களா?" என்று கேலிக் குரலில் கேட்டார் அவர்.

"நான்தான் நாலு நாள் வரலியே? அது இரண்டணாவாகலியா? அதற்குள்ளதுதானே கேட்டேன்" என்றேன்.

"ஒரு நாளைக்கு அரையணாப் பண்டம் கொடுக்கலாம் என்பதுதான் ஏற்பாடு. இன்னிக்கும் அதுதான் தருவேன்" என்றார். அப்போது என்னுள் மூண்ட கோபத்தையும் வெறுப்பையும் விவரிக்க இயலாது. ஒன்றுமே வாங்கி உண்ணாமல் நான் படியிறங்கினேன். இச் சிறு நிகழ்ச்சி யினால் ஏற்பட்ட வேதனை சில நாட்கள் சென்ற பின்னரே நீங்கியது.

ஃபுட்-பால் போன்ற விளையாட்டுக்களில் சேருவதற்கு எனக்கு விருப்ப மிருந்ததில்லை ஆனால் கல்லூரி நாடகச் சங்கத்தில் எனக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. நாடகங்களில் சேர்ந்து நடிப்பதில் - அதிலும் பெண் வேடம் புனைந்து நடிப்பதில் ஆர்வமிருந்தது. ஒருமுறை நாடகம் நடை பெற்றபோது நிகழ்ந்ததொரு பயங்கர விபத்து என் நினைவுக்கு வருகிறது. எங்கள் கல்லூரி விவாத சங்கத்தின் ஆண்டு விழா. கல்லூரி யின் வடக்குப் பகுதியில் புதிதாக எழுப்பியிருந்த மாடிக் கட்டடத்தின் அரங்கில் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஏறக்குறைய ஐநூறு பேர் அமரக்கூடிய இடம் அது. ஒருபுறம் உயர்ந்த மேடையும், இரண்டு பகங்களிலும் படிகளும் அமைந்திருந்தன.

மாலை ஆறு மணிக்கு நாடகம் தொடங்கியது. மாணவர்களும் அழைப்பினருமாக அங்கு ஐநூறுக்கு மேற்பட்ட மக்கள் குழுமி இருந்தனர்.

அணியறையில் வேடம் புனைந்து கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவன். அன்று நான் பெண் வேடம்தான் புனைந்துகொண்டிருந்தேன். சேலையும் நகைகளுமாய், அரங்கில் தோன்றச் சித்தமாக இருந்தேன். படாரென்று ஓர் ஓசை கேட்டது. ஹாலில் இருந்தவர்கள் கூக்குர லிட்டார்கள்

அந்தப் புதிய கட்டடத்தின் மேல் தட்டு இடிந்து விழுந்திருந்தது! வெளியே ஓடிச்சென்று தங்களைக் காப்பாற்றிக்கொள்ள இயலாத பலரும் அதில் நசுக்குண்டார்கள். அவர்களுடைய கத்தலும், தெய்வத்தை அழைக்கும் கூக்குரல்களும் நெஞ்சைக் கரைக்கக்கூடியதாக இருந்தது.

நாடக மேடையின் பின்னிருந்த படிகளின் வழியாக நான் கீழே இறங்கி வந்தேன். என்ன செய்வதென்றறியாமல் திகைத்த நிலையில் அங்குமிங்கும் ஓடினேன். செவிகளில் கமழலும் இடுப்பில் சேலையுமாக இருந்த என்னைப் பலரும் ஒரு பெண் என்றே எண்ணியிருப்பார்கள்! அந்த நிலையிலேயே நான் வழியில் விரைந்து சாலப்புரத்திலிருந்த என் வீட்டுக்குச் சென்றேன். சேலை. அணிகளைக் களைந்து உடை மாற்றி, கல்லூரிக்குத் திரும்பினேன்.

இருள் பரவிவிட்டதால் விபத்துக்குள்ளான மக்களைக் காப்பாற்றுவது மிகக் கடினமாக இருந்தது. பலருக்கு எலும்பு முறிந்திருந்தது, என்றாலும் ஒரே ஒரு மாணவன்தான் உயிரிழந்தான்.

கட்டடம் நிறைவேறியபின், முறையாகப் பரிசோதனை செய்யுமுன் முன் யோசனையின்றி அதிக எண்ணிக்கையுள்ள மக்களை மேலே சென்று தங்க அனுமதித்த கல்லூரி நிர்வாகிகளைப் பலரும் குறை கூறினர். இந்த வருந்தத்தக்க நிகழ்ச்சியின் பயனாக, கல்லூரி நாடகச் சங்கம் சிறிது காலம் எத்தகைய நடவடிக்கையுமின்றித் தூங்கலாயிற்று!

அந்நாட்களில் நடந்த இன்னொரு நிகழ்ச்சியும்கூட எனக்கு நினைவுக்கு வருகிறது. விக்டோரியா ராணி மறைந்த பிறகு ஏழாம் எட்வர்டு மன்னரின் முடிசூட்டு விழாவை நாங்கள் கொண்டாடியபோது நிகழ்ந்த சம்பவம் அது. அப்போது நான் பள்ளி விடுமுறைக்காக கிராமத்துக்கு வந்திருந்தேன். கிராமத்தில் மிக விமரிசையாக அவ் விழாவைக் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தார்கள். புதிய மன்னரின் நிழற் படத்தை அலங்கரித்து யானைமேல் வைத்து ஊர்வலம் நடத்துவதாகத் தீர்மானித்தார்கள். ஊர்வலத்தில் படத்தைப் பிடித்துக்கொண்டு யானையின் முதுகின்மீது நான்தான் அமர்ந்திருந்தேன். பலவகையான இசைக்கருவிகள் மேள தாளங்கள் முழங்க, இரு நாழிகைத் தொலைவு பவனி சென்றோம். திரும்பி வந்து, விதானம் அமைத்த பந்தலில் அலங்கரித்த பீடத்தில் அந்தப் படத்தைச் சாத்தி வைத்தோம். கிராமத்தார் அனைவரும் மன்னர் படத்துக்கு வந்தனை செலுத்த அங்கே குழுமியிருந்தார்கள். கொண்டாட்டத்துக்கு நாயகமாக விளங்கிய படம், பிரிட்டிஷ் சக்கரவர்த்தியினுடையதல்ல வென்றும், அவரைக்காட்டிலும் கனியும் கம்பீரமுமாக விளங்கிய ருஷ்யச் சக்கரவர்த்தியின் படம் அது என்றும், மறுநாள்தான் எனக்குப் புரிந்தது. விழா நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தவர்களுக்கு இந்த உண்மை உள்ளூற அச்சத்தைத் தோற்றுவித்தது. அவர்கள் அறிந்து மனசோடு ராஜத்துரோகம் செய்யவில்லையென்று அதிகாரிகள் உணர்வார்களோ என்று அஞ்சினர்கள். எனவே தவறின் முழுப் பொறுப்பையும் என்மீது சுமத்தினர்கள். பல படங்களிலிருந்து, ஊர்வலத்துக்கான படத்தை நான்தான் தேர்ந்தெடுத்திருந்தேன். தந்தை என்னைக் கோபித்தார் என்றாலும், அஞ்சியதற்கேற்ப ஒன்றும் நடக்கவில்லை.

கோழிக்கோட்டில் கல்வி கற்ற நாட்களில் நான் மந்தத்துக் கிருஷ்ணன் நாயருடைய வீட்டில் தங்கியிருந்தேன். அவர் என்னுடைய தந்தையின் உற்ற நண்பர். வழக்குரைஞராக அவர் பெயரும் புகழும் பெற்றுக்கொண்டிருந்த நாட்கள் அவை. கிருஷ்ணன் நாயருடைய தூய மனமும், கடினமான உழைப்பும், அன்புகனியப் பழகும் தன்மையும் என்னுடைய வாலிப நெஞ்சைக் கவர்ந்தவை.

நீதிமன்றத்திலிருந்து மாலை வீடு திரும்பினால் இரவு பன்னிரண்டு மணி வரை அடுத்த நாள் விசாரணைக்கு வரும் வழக்கு விவரங்களைப் படித்துக் கொண்டிருப்பார். அதன் பின்னர், குளித்து, உணவு கொள்வார். பொழுதை வீணாகப் போக்கும் வழக்கம் அவரிடம் இருந்ததில்லை.

அன்றைய நிலைக்கேற்ப, பொதுவாழ்விலும் அவர் ஈடுபட்டிருந்தார். சிறிது காலம் மதராஸ் சட்ட நிர்மாணச் சபையில் அவர் உறுப்பினராக இருந்தார். பின்னர், திருவிதாங்கூரில் பிரதம நீதிபதியாகவும், திவான்

ஆகவும் அவர் பணியாற்றினர். பென்ஷன் பெற்றபின் ஓய்வு காலத்திலும் மதராஸ் சர்க்காரின் எக்ஸிக்யூடிவ் கௌன்ஸிலில் உறுப்பினராக இருந்தார். அவருடைய சிறந்த குணம், மிகுந்த தன்னடக்கமாகும். அளவிறந்த பொறுமையும் கடும் உழைப் பாற்றலுமே அவருடைய வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கான சிறந்த காரணங்களென்று கொள்ளலாம்.

நம்மைச் சூழ்ந்த மனிதர்களும் நடப்புக்களுமே நம்மையும் அறியாமல் நம் இயல்பை உருவாக்குகின்றன. குறிப்பாக, இளம் பருவத்தில் இதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். கட்சிக்காரர் களுடனும், பணியாளருடனும், விருந்தினருடனும், மற்றவர்களுடனும் கிருஷ்ணன் நாயர் பழகும் விதமே தனிச் சிறப்பு மிகுந்ததாக இருக்கும். கண்டு உணரக்கூடிய சந்தர்ப்பங்கள் எனக்கிருந்தன. அந்தத் தனிப் பண்புகளை என்னால் ஒருபோதும் மறக்க இயலாது. இறுதிக்காலம் வரை யிலும் ஒரு மகனுக்குரிய வாஞ்சையுடன் என்னுடைய வெற்றி தோல்வி களில் அவர் அக்கறை காட்டியிருக்கிறார்.

''இந்து லேகா''வின் ஆசிரியரான புகழ்பெற்ற சந்து மேனனைப் பல முறை கண்டதாக நினைவு. அவர் அந்நாளில் கோழிக்கோட்டில் சப்-ஜட்ஜாக இருந்தார். புரளும் வேட்டியும், வெண்மையான சட்டை யும். மிக மெல்லிய இழை அங்க வஸ்திரமும், பழனித் தொப்பியும், காலில் செருப்புமாக அவர் அதிகாலையில் உலாவச் செல்வது ஒரு காட்சியாக இருக்கும். அக்காலத்தில் சப்-ஜட்ஜ் பதவி மிக உயர்ந்த பதவி. சந்து மேனனும் ஒரு பெரிய மனிதர்.

மெல்ல மெல்ல நடந்து வருகையில் ஆங்காங்கு நின்று பார்த்துக் கொண்டு வரும் 'சப்-ஜட்ஜை'க் கண்டால் மக்கள் உடனே விலகி நிற்பார்கள். காவலன் நாராயணன் நாயர், சற்றுத் தள்ளி அவருக்குப் பின்னே நடந்து வருவான். சந்து மேனனின் கம்பீரமான பார்வையும், மத யானையை ஒத்த நடையழகும், மறியாதையைத் தோற்றுவிக்கும் வடிவும் அவரைப்பற்றிக் கேள்விப்பட்ட புகழெல்லாம் உண்மையே என்று கருதச் செய்யும். நாடகக் கலைஞரோ, கதகளி ஆட்டக்காரரோ, கோழிக்கோடு வந்தால் அவருடைய இல்லத்தில் ஒரு நிகழ்ச்சியேனும் ஏற்பாடு செய்வது வழக்கம். கோழிக்கோட்டில் பதவியிலிருந்த நாட்களிலேயே அவர் இயற்கையை எய்தினர்.

நான் படிப்பில் வல்லவனேவேன் என்ற நம்பிக்கை எனக்குக் கூடவில்லை. கல்வி பயின்ற நாட்களிலெல்லாம் நான் படிப்பில் பின்தங்கியவனென்ற நிலையிலேயே இருந்தேன். படிப்பில் அலட்சியமாக இருக்கும் பிள்ளை களைக் குறித்துப் பெற்றோருக்கு அறிக்கை செல்லும் பட்டியலில் என்னுடைய பெயரும் இடம் பெற்றிருப்பது வழக்கம். என்றாலும்

கல்லூரி விவாத அரங்குகளில் நான் ஆர்வத்துடன் கலந்துகொண்டிருக் கிறேன். அவையின்கண் பேசும் திறனுக்காகவும், கட்டுரை எழுதும் நோக்கத்திக்காகவும் பல முறை பரிசு பெற்றிருக்கிறேன்.

மெட்ரிகுலேஷன் தேறி, எப்.ஏ. வகுப்பில் சேர்ந்து படிக்க நான் சென்னை சென்றேன். அது 1906ஆம் ஆண்டு. அவ்வாண்டில்தான் என்னுடைய திருமணமும் நடைபெற்றது. கல்விப் பயிற்சி முடியு முன்னரே திருமணம் செய்துகொண்டு பொறுப்பேற்க எனக்கு ஆர்வ மேதுமில்லை. ஆனால் குடும்பத்தைச் சார்ந்த சில தனிப்பட்ட காரணங்கள், என்னைப் பெற்றோருடைய கோரிக்கையை மறுக்க இயலாதவனாக, உடன்படச் செய்தன. அதற்காக வாட்டம் கொள்வதற்கும் ஒன்றுமில்லை. மாறாக, எனக்கு அது ஒரு நல்ல வாய்ப்பாகவே அமைந்தது.

ஒரு மனிதனுடைய இன்ப துன்பங்களை வரையறுக்கும் மனைவியினு டைய பொறுப்பை மதிப்பிட இயலாது. இன்பம் பெருக்கவும் துன்பம் கரைக்கவும், ஒரு மனைவிக்குரிய ஆற்றலுக்குகந்த வகையில்தான் அம் மனிதனுடைய வாழ்வில் அமைதியும் ஆனந்தமும் நிலவுகிறது. மற் றெல்லாப் பேறுகளைக் காட்டிலும், இன்பமும் அமைதியும் நிறைந்த குடும்ப வாழ்க்கையையே நாம் விரும்புகிறோம். ஆனால் அப் பேறு ஒரு சிலருக்கு மட்டுமே வாய்க்கிறது.

நான்காம் வகுப்புவரையே படித்திருந்த ஒரு சிறுமியை நான் மணந்தேன். பாலக்காடு அரசபரம்பரையிலான ஒரு 'ஏடத்தில்'தான் லக்ஷ்மியும் பிறந்திருந்தாள். பெரிய படிப்பில்லை என்றாலும், ஒரு இல்லத்தை நல்ல வகையில் நடத்திச் செல்லும்வண்ணம் வீட்டு வேலை செய்யும் பாங்கும் அறிவும் லக்ஷ்மிக்கிருந்தன. சமையற்கலையில் என் மனைவி பெற்றிருந்த திறமையும், உண்பதில் எனக்கிருந்த திறமும் இணைந்து ஒரு நற்பேறாக அமைந்தது!

3

சென்னையில் மாணவ வாழ்க்கை

இந்திய தேசீயச் சூழலில் ஓர் எழுச்சி தோன்றிய காலத்தில்தான் நான் சென்னையில் கல்வி பயிலத் தொடங்கினேன். அந்நாளைய வைசிராய் கர்ஸன் பிரபுவின் செருக்கு மிகுந்த பேச்சுக்களும், பொதுமக்களின்

கருத்தை ஒறுக்கும் செயல்களும் நாடு முழுதும் அதிருப்தியைத் தோற்று வித்தன. 1905ஆம் ஆண்டில் ஏற்பட்ட வங்கப் பிரிவினை உள்ளார்ந்த தோர் கிளர்ச்சிக்குக் காரணமாயிற்று. மக்களுடைய வேண்டுகோளையும் மறுப்பையும் பொருட்படுத்தாமலே கர்ஸன் பிரபு வங்கத்தை இரு கூறுக்கினர்.

இச் செயல் வங்காளிகளை மட்டுமன்றி, நாட்டிலுள்ள ஏனைய மாநில மக்களையும் கிளர்ச்சி கொள்ளச் செய்தது. எரியும் தீயில் எண்ணெயும் வார்த்தாற் போன்று அவர் கல்கத்தாவில் நிகழ்த்திய தோர் உரை, இந்திய மக்களின் சத்திய வேட்கையை வீறுகொண் டெழச் செய்தது.

''காங்கிரசைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டியதுதான். நான் இந்தியாவிலிருந்து செல்லுமுன் அதன் இறுதிச்சடங்கைச் செய்துவிட வேண்டுமென்று ஆவல் கொண்டுள்ளேன்'' என்று கர்ஸன் பிரபு, அந்நாளைய இந்தியா செகரிடரிக்கு எழுதியது குறிப்பிடத் தகுந்தது.

இதெல்லாம் பெரும்பான்மையான மக்களைப் பொங்கி எழச் செய்தன. இந்தியரிடையே தோன்றி வளர்ந்த சுதந்திர உணர்வைத் தட்டி அடக்க அரசினர் செய்த முயற்சிகள், நாட்டு மக்களின் சுயாபி மானத்தையும் தேசிய உணர்வையும் தட்டி எழுப்பின. அன்றைய தேசிய இயக்கம் வங்கத்தை மையமாகக் கொண்டிருந்தது. சுரேந்திர நாத பானர்ஜியின் செவிநயக்கும் சொற்றிறனும். விபின் சந்திர பாலருடைய கனல் பரக்கும் சொல்மாரிகளும், அரவிந்தகோஷின் எழுச்சியூட்டும் கட்டுரைகளும், காச்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையிலும் ஓர் அற்புத ஒருமைப்பாட்டுணர்வைத் தோற்றுவித்து விட்டது. 1906ஆம் ஆண்டில் கல்கத்தா காங்கிரஸ் கூட்டத்தில் இந்தியாவின் இலட்சியம் 'சுயராஜ்யம்' என்று தாதாபாய் நௌரோஜி முழக்கினர். உள்நாட்டுப் பொருள்களைப் பயன்படுத்தவும் அந்நிய நாட்டுப் பொருள்களை விலக்கவும், வங்கத்தில் தோன்றிய இயக்கம் மற்ற இடங்களிலும் பரவி வளர்ந்தது. சுயராஜ்யம், சுதேசி, சுதந்திரம் என்ற சொற்கள் நாடு முழுதும் எதிரொலிக்கலாயின.

அக்காலத்தில், சென்னைக்கு வருகை தந்த விபின் சந்திரபாலரை வரவேற்க ஏற்பாடு செய்திருந்த சுமார் ஒன்றரை மைல் தொலைவு நீண்ட ஊர்வலம் என் நினைவுக்கு வருகிறது. அவருடைய வருகை சென்னை மக்களிடையே எத்தகையதோர் விழிப்பூட்டியது? ஒரு வாரம், சென்னைக் கடற்கரையில் நாள்தோறும் மாலையில் அவருடைய உரை களைக் கேட்கக் கணக்கற்ற மக்கள் கூடியிருந்தார்கள்.

ஒலி பெருக்கி போன்ற சாதனங்களிலலாத அந்நாளில், ஆயிரக் கணக்கில் கூடியிருந்த மக்களை இரண்டு மூன்று மணி நேரம் தம் ஒப்பற்ற

சொல்லாற்றல் கொண்டு விபின் சந்திரபாலர் கவர்ந்தது கண்டு மக்கள் பெருவியப்படைந்தார்கள். மக்களுடைய உள்ள உணர்வுகளை ஆக்கரீதியில் தட்டி எழுப்பி மேன்மையுற ஊக்குவதற்கு, அவருடைய ஆற்றல் அளப்பரியதாக இருந்தது.

ஜி. சுப்பிரமணிய ஐயர்தாம் முதல் பொதுக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினர். தென்னிந்திய தேசத்தலைவர்களில் முன்னணியில் இருந்தவர் அவர். விபின் சந்திரபாலருடைய சொல்-திறம் அவருக்குக் கிடையாது. எனினும் சாதாரண மக்களின் மனங்களில் பதியும் வகையில், அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய எளிய, நகைச்சுவை ததும்பும் மொழியில் பேசும் அருந்திறனுடையவர். இன்று மிக உயர்ந்த நிலையில் வெளியாகும் 'சுதேசமித்திரன்' என்ற தமிழ் நாளேட்டைத் தோற்றுவித்தவர் அவர். ஹிந்து பத்திரிகையின் உரிமையாளரும் முதல் ஆசிரியரும் அவரேதாம்.

நான் சென்னைப் பிரஸிடென்ஸி கல்லூரியில்தான் எஃப்.ஏ. வகுப்பு முதலாம் ஆண்டு படித்தேன். அடுத்த ஆண்டு, எஃப்.ஏ. தேர்வை முடிக்க நான் கோயம்புத்தூருக்குச் சென்றேன். பி.ஏ. படிக்க சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரிக்கு வந்தேன். சென்னையிலுள்ள இந்த இரண்டு கல்லூரிச் சூழல்களிலுமுள்ள வேற்றுமையை, இவற்றில் கல்வி பயின்றவர் அறிந்துகொள்வது கடினமல்ல. இரண்டு கல்லூரிகளிலும் பெரிய பேராசிரியர்களெல்லோரும் ஐரோப்பியரே. என்றாலும், கிறிஸ்துவக் கல்லூரியில் பேராசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே இருந்த நெருக்கம் போன்று, பிரஸிடென்ஸி கல்லூரியில் கண்டதில்லை. டாக்டர் 'ஸ்கின்னர்', புரொஃபசர் 'ஹோக்','பீட்டர் பர்க்', 'மெஸ்டன்' போன்ற கிறிஸ்துவக்கல்லூரி ஆசிரியப் பெருந்தகையாளர்களை,மாணவர்களால் மறக்க இயலாது. ஒவ்வொரு மாணவனிடத்திலும், தன்னிடம் பேராசிரியர் நெருங்கிய தோழமை கொண்டுள்ளார் என்ற நம்பிக்கை உணர்வை அவர்கள் தோற்றுவித்திருந்தனர். டாக்டர் ஸ்கின்னர் வகுப்பறைக்கு வந்ததுமே சூழல் மாறிவிடும். மாணவர்களுடைய மரியாதையையும் பக்தியையும் அநாயாசமாகக் கவர்ந்துவிடும் அரிய ஆற்றல் பெற்றிருந்தார் அவர்.

பிரஸிடென்ஸி கல்லூரியில் அந்நாள் மலையாள ஆசிரியராக இருந்த முளியில் கிருஷ்ணனும் நினைவிற்குரியவர். பழகும் விதத்திலும் கற்பிக்கும் முறையிலும் அவரிடம் சில தனித்தன்மைகள் இருந்தன. முளியில் கிருஷ்ணனைப்பற்றிச் சுவையான பல கதைகள் கேள்விப் பட்டிருக்கிறேன். பிறரிடம் கடுமை காட்ட இயலாதவர் அவர். தமக்குப் பிடிக்காத விஷயங்களை எடுத்துரைக்கவேண்டி வந்தாலும் கூட, அவர் அவற்றை மிக நேர்த்தியாகக் கூறமுற்படுவார். ஒருமுறை,

ஒரு மாணவனுடைய கட்டுரையைப் படித்துவிட்டு, பல இடங்களில் பென்சிலால் கோடிட்ட பின்னர், அவனிடம் இவ்வண்ணம் கூறினார் :— "எழுத்துப் பிழைகள் ஏராளம். சொற்பொருள் தெளிவில்லை. வாக்கியங்களில் தவறுகள் அதிகம். கையெழுத்து மோசமாக இருக்கிறது. என்றாலும் கட்டுரை முற்றிலும் மோசமாக இல்லை." இவ்வகையில் கருத்துரைப்பது, அவருக்கே உரிய இயல்பு.

நாட்டு நடப்புக்களிலும், தேசத் தலைவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளைப் படித்து அறிந்துகொள்வதிலும், முதலிலிருந்தே நான் மிகுந்த ஈடுபாடுகொண்டிருந்தேன். கையில் பணம் இருக்கும்போது, தேசிய விஷயங்களோடு தொடர்பு கொண்ட புத்தகங்களை வாங்கிப் படிக்கலானேன். இக்காலத்தில் நான் லஜபதிராயின் வாழ்க்கை வரலாற்றைச் சிறிதாக எழுதிவெளியிட்டேன். கல்வி கற்க வந்த மாணவன் இம்மாதிரியான ஈடுபாடுகளில் பொழுதை வீணாக்குவது குறித்துச் சிலர் எனக்கு அறிவுரைகள் கூறுமலில்லை. தந்தையும் மிகுந்த சினங்கொண்டு கடிந்தாரென்றாலும், ஒரு நூலாசிரியன் என்ற நிலையில் என்னுடைய முதல் முயற்சியான அச் சிறு நூலை நான் மிகுந்த நம்பிக்கையுடன் வெளியிட்டேன்.

ஆட்சியாளரை எதிர்க்கும் வகையில் ஏதேனும் பேசவோ, செயல் புரியவோ முற்படுபவர்களைத் தந்தை எதிர்த்தார். பழைய நடை முறைகளை மாற்றுவதற்கு அவர் விரும்பவில்லை. சென்னையில் கல்வி பயின்ற நாட்களில்தான் நான் என் குடுமியை நீக்கிக் கிராப் செய்து கொண்டேன். கல்லூரி மூடி, நான் ஊர் திரும்பியபோது, குடுமியை வெட்டிக் கொண்டதற்காகத் தந்தை என்னைக் கடுமையாகச் சினந்து கொண்டார். அத்தகைய செயல்களை அவர் மன்னிக்க முடியாத குற்றங்களென்றே கருதினர் !

மலையாளக் குடும்பங்களில் பாகப்பிரிவினை அவசியமா என்ற பொருள் குறித்து ஒரு நல்ல கட்டுரை எழுதும் உறுப்பினருக்கு ஒரு பரிசு கொடுப்பதாக, புகழ்பெற்ற கேலரி குஞ்ஞராமன் நாயர், சென்னை மலையாளி கிளப் அதிகாரிகளுக்கு ஓர் அறிக்கை விடுத்திருந்தார். அப்போட்டியில் நானும் பங்குகொண்டேன். பரிசு எனக்கே கிடைத்தது. செய்தியறிந்து தந்தை மிகுந்த மகிழ்ச்சிகொண்டார். நான் ஊர் திரும்பியதும் அக் கட்டுரையை என்னைப் படித்துக்காட்டச் சொன்னார். அக் கட்டுரை, பிரிவினைக்குச் சாதகமாக அமைந்திருந்தது. முழுதும் படிக்குமுன் அவருடைய முகபாவம் மாறியது. "உன் முடிவெட்டும், குடும்பப் பிரிவினைக்குப் பரிந்து பேசுவதையும் பார்க்கும்போது நீ எங்கே போறேன்னு எனக்குத் தெரியவில்லை!" என்று மிகுந்த கோபத்துடன் மொழிந்தார். இந்தக் காரணம் கொண்டு தோன்றிய வெறுப்பும்

வாட்டமும் தந்தையின் முகத்தினின்று அகல இரண்டு முன்று நாட்களாயின.

ஒருமுறை கோபாலகிருஷ்ண கோகலே சென்னைக்கு விஜயம் செய்தார் அந்நாள், நான் கிறிஸ்துவக் கல்லூரி மாணவனாக இருந்தேன். விக்டோரியா பப்ளிக் ஹாலுக்கு வடக்கே திறந்த வெளியில் கூடிய பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றினர். இந்தியர் மட்டு மன்றி வெள்ளையரும் கோகலேயின் உரையைச் செவிமடுக்கத் திரண்டு வந்திருந்தனர்.

தாம் என்ன பொருளைச் சொல்கிறோம், அதைக் குறிப்பாக மக்களுக்கு உணர்த்தினர். தேவையற்ற சொற்களைக் கொட்டாமல், தாம் நம்பும் விஷயங்களை உள்ளார்ந்து பிறருக்கு அறிவுறுத்தும் ஆற்றல் அவருடைய தனிச் சிறப்பாக விளங்கியது. புனேயில் ஆசிரியப் பணி புரிந்த அவர், அதைத் துறந்து, தேச சேவைக்கே தம் வாழ்க்கையை உரித்தாக்க உறுதிபூண்டார். அரசியல் விஷயங்களை நன்கு கற்றுணர்ந்து பொதுமக்களுக்குத் தொண்டாற்ற விழையும் இந்தியருக்கென அவர் ஓர் சங்கம் நிறுவினர். 1905ஆம் ஆண்டில் புனேயில் நிறுவப்பெற்ற இந்திய ஊழியர் சங்கம்தான் (Servants of India Society) அது. பிரசித்தி பெற்ற ஸ்ரீனிவாச சாஸ்திரி, தேவதார், பண்டித குன்ஸ்ரு, கோதண்ட ராவ் ஆகியோரனைவரும் அச் சங்கத்தில் சேர்ந்தவர்களே.

தன்னலமற்ற தேசத் தொண்டாற்றிய நிலையில் கோகலே, அன்றைய இளைஞருக்கு வழிகாட்டியாக, இலட்சிய நாயகராக இருந்தார். எப்படியேனும் கோகலேயை ஒருமுறை தொட்டுவிடவேண்டும் என்ற ஆவல் என்னுள் மூண்டது! பொதுக்கூட்டம் முடிவடைந்த பின் அவர் அரங்கை விட்டு இறங்கி வருகையில் மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். அவரை நெருங்கவும் இயலாமலிருந்தது. கோகலே வண்டியில் ஏறச் சென்றதும் நானும் அவரை நெருங்கித் தொடர்ந்தேன். என் முன் சென்றவர்களை இடித்துத் தள்ளிக்கொண்டு நான் கோகலேயின் அருகில் வந்தேன். அவருடைய கையைத் தொட்டேன்! அந்த நெருக்கித் தள்ளலில் என் தொப்பி கீழே விழுந்தது. கூட்டத்தினர் அதை மிதித்துத் துவைத்தனர். என்றாலும் தேசாபிமானி கோபாலகிருஷ்ண கோகலேயை நான் என் கையால் தொட்டுவிட்டேன்! கோகலேயின் குறிக்கோளுக்கப்பால் இந்தியா இன்று பெரிதும் முன்னேற்றம் கண்டிருக்கிறது. என்றாலும் கோகலேயின் செயல்திறமையும், தொண்டுள்ளமும், தியாக நெறியும் இன்றும் நம்முடைய நாட்டுப் பற்றுக்கு ஊக்கம் அளிக்க வல்லவை.

சென்னையில் நாங்கள் நாலைந்து பேராகச் சேர்ந்து ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு வாழ்ந்தோம். அந்த நாட்களில் பெரும்

பாலும் நானே வீட்டுக்குரிய பணிகளைச் செய்து வந்தேன். வெவ்வேறு சுவை விரும்பும் இயல்பினர் நாலைந்து பேர் சிறிது காலம் கூடி வாழ்கையில், அவரவர் தம் வசதிகளையும் தேவைகளையும் ஒன்றுக இணைப்பது அவ்வளவு எளிதல்ல. பிறர் தேவைகளை அறிந்து ஏற்றது செய்யவும், அவர்களுடைய வசதிகளுக்கேற்பத் தன் தேவைகளைக் குறைத்துக் கொண்டு, அவ்வகையில் மன-இணக்கமும். சகஜ பாவமும் வளர்ச்சியுறப் பயிலும் மேலாம் நெறியும் இத்தகைய சந்தர்ப்பங்களில் வாய்க்கின்றன. அந்நாள் சென்னையில் கூடி வாழ்ந்த நண்பர்களிடையே குறுப்பத்து குட்டிகிருஷ்ண மேனனைக் குறிப்பிடவேண்டும். இளம் பருவந் தொட்டே அவர் என்னுடன் மிகவும் நெருங்கிய தோழமைகொண்டிருந்தார். குட்டிகிருஷ்ண மேனனுடன் சிறிது காலம் சென்னையில் இணைந்து வாழும் சந்தர்ப்பம் நேர்ந்தபோது. எங்களிடையே இருந்த நெருக்கம், மிகவும் ஆழ்ந்த அன்பாகப் பரிணமித்தது. நான் இங்கிலாந்திலிருந்து திரும்பு முன்னரே அவர் சென்னையில் 'பிராக்டீஸ்' தொடங்கிவிட்டார். குட்டிகிருஷ்ண மேனனின் அறிவாற்றலும், நேர்மையில் உறுதியும், செயல் திறனும் படிப்படியாக அவரைச் சென்னை வழக்குரைஞர் சங்கத்தில் ஒரு சிறப்புறுப்பினராகத் திகழச் செய்தன. அட்வகேட் ஜெனரலாகவுட அவர் பதவி ஏற்றுப் பணியாற்றினர். அறுபதாண்டுக் காலத்துக்குப் மேலாக என்னுடைய இன்ப துன்பங்களில் உள்ளார்ந்த அக்கறை காட்டிய அவருக்கும் எனக்கும் இடையே நிலவிய அன்பு விவரிக்க இயலாவண்ணம் ஆழ்ந்ததாகும். காலம் அதன் வலிமையைக் குறைக்கவில்லை; மேலும் உறுதி காட்டியது.

ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் நான் சென்னை மலையாளி கிளப் செயலாளனுகப் பணியாற்றியிருக்கிறேன். அந்நாள் கிளப்பில் சுப்பராயலு என்ற ஒரு பணியாளன் (பயூன்) இருந்தான். உறுப்பினர்களிடம் சந்தா வசூல் செய்வதில் அவன் பாராட்டுதற்குரிய திறமை பெற்றவன். அவனின்றி கிளப் நடக்காது என்று சிலர் மொழிந்தது மிகையன்று; உண்மையே. அதிகாலையில் சந்தாப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு அவன் கிளம்புவான். எத்தனை தவணைகள் குறித்தாலும் அந்நாட்களிலெல்லாம் சுப்பராயலு அங்கே தவருமல் பிரசன்னமாவான். அவனுடைய புன்னகை முகத்தையும் பணிவான தன்மையையும் கண்டால் பணம் கொடுக்காமலிருக்கவே தோன்றுது.

ஸர் ஸி. சங்கரன் நாயர், டாக்டர் டி. எம். நாயர், வக்கீல் ரயிரு நம்பியார், செங்குளத்து கோபால மேனன், கோழிச்சேரி கருணாகர மேனன் ஆகியோரனைவரும் அந்நாளைய சென்னை நகரப் பிரமுகர்கள். மேலான பதவியும் தனிச் சிறப்பும் பெற்ற சங்கரன் நாயரை உயர்ந்தவராகக் கருதச் செய்தன. டாக்டர் டி. எம். நாயர், தீரரான ஒரு தலைவர்.

ஜஸ்டிஸ் பார்ட்டியை அமைத்து நடத்தியதன் வாயிலாக விளங்கிய அவருடைய திறமையும் உற்சாகமும், அக் கட்சியை மேலும் புகழ் பெற்றதொரு இயக்கமாக உயர்த்தியது.

கருணாகர மேனன் புகழ்பெற்றதொரு பத்திரிகையாசிரியர். சிறிது காலம் 'ஹிந்து' ஆசிரியராகப் பணியாற்றிய பிறகு, அவர் 'இந்தியன் பேட்ரியட்' என்ற பெயரில் சொந்தமாக ஒரு நாளேட்டைத் தொடங்கி நடத்தினர். அது நெடுநாட்களுக்கு நிலைக்கவில்லை. சென்னை நகரின் பொது வாழ்விலும் கருணாகர மேனன் சிறப்பாகப் பங்குகொண் டிருந்தார். அவர் திறமைவாய்ந்த சொற்பொழிவாளரில்லை என்றாலும் பெயர்பெற்றதொரு பத்திரிகாசிரியர்.

நான் பி.ஏ. பரீட்சையில் தேர்வு பெற்றுவிட்டதாகத் தந்தி கிடைத்த போது, என்னுடைய மகிழ்ச்சி கரை காணாததாக இருந்தது. நான் பிறகு என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து வீட்டில் நீண்ட ஆலோசனைகள் தொடர்ந்தன. சர்க்கார் உத்தியோகத்திற்கு முயல வேண்டும் என்று பல நண்பர்கள் தந்தைக்கு யோசனை கூறினர்கள். எனக்கு அதில் விருப்பமில்லை. பாரிஸ்டருக்குப் படிக்க இங்கிலாந்து செல்ல வேண்டுமென்பது என் ஆசை. தந்தையின் செல்வநிலை அதற்கு இடங் கொடுக்குமோ என்று நான் அஞ்சினேன். குடும்பத்தைச் சார்ந்து பல துயர நிகழ்ச்சிகள் நேர்ந்திருந்த காலம் அது. எனினும், தந்தை எவ்வகையிலேனும் என் விருப்பத்தை நிறைவேற்றுவதாக உறுதி யளித்தார். அதற்காக, என் தந்தை செய்யவேண்டியிருந்த தியாகத்தை எண்ணும்போது, அந்தத் தந்தையுள்ளத்தின் முன், என் நெஞ்சம் நெகிழ்ந்து கரைகிறது. சில தந்தையர் தம் மக்களுக்காக மேற்கொள்ளும் துன்பங்களையும் தியாகங்களையும் உன்னிப் பார்க்கையில், நம் மனதில் அளப்பரிய பக்தியும் மரியாதையும் தோன்றுகின்றன. அதுபோன்றே, எல்லா நலங்களையும் மக்களுக்கே உரித்தாக்கிய சில பெற்றோர். தம் முதுமைக் காலத்தில் அநுபவிக்க நேரும் துன்பங்களை எண்ணிப் பார்க் கையில், மாந்தர், இத்துணை நன்றி கொன்றவர்களாக இருப்பார்களோ என்றும் தோன்றுகிறது. இரு வகையினரையும் நாம் காண்கிறோம்.

என்னுடைய அக்கரைச் சீமைப் பயணம், எங்கள் கிராமத்துக்குப் பெரிய நிகழ்ச்சியாயிற்று. நான் வீட்டிலிருந்து இறங்கியதும் என்னைச் சிறிது தூரம் ஒரு பெரிய கூட்டமே தொடர்ந்து வந்தது. ஓலவக்கோடு ரயில் நிலையத்திலிருந்து வண்டி நகரத் தொடங்கியபோது, என்னையே நோக்கிக்கொண்டு கண்கலங்க நின்ற தந்தையை மீண்டும் காண மாட்டேன் என்று நான் அறிந்திருக்கவில்லையே !

1912ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், இவ்வாறு நான் இங்கிலாந்துக்குப் பயணமானேன்.

அந்நாள் கோழிக்கோட்டில் 'மனோரமா' ஆசிரியராக இருந்த புளியம் பற்ற குஞ்ஞுகிருஷ்ணமேனன், அக்கரைச்சீமை வாழ்வைப்பற்றி நான் அவ்வப்போது தம்முடைய பத்திரிகைக்குக் கட்டுரை எழுதி அனுப்ப வேண்டுமென்று என்னிடம் கோரினர். அவ்வண்ணமே நான் அக்கரைச் சீமைச் சிறப்புகளைப் பற்றி 'மனோரமா'வுக்கு எழுதத் தொடங்கினேன். அக் கட்டுரைத் தொடரே பின்னர் ''பிலாத்தி விசேஷம்'' என்ற பெயரில் நூலாக வெளியாயிற்று. இதன் வாயிலாகக் கேரளத்தில் பல தரப் பட்ட மக்களை எனக்கு அறிமுகம் செய்துகொள்ளும் வாய்ப்பை நல்கிய 'மனோரமா'வுக்கும், அதன் முந்நாள் ஆசிரியருக்கும் என்னுடைய உளம் கனிந்த நன்றியை இங்குப் புலப்படுத்திக்கொள்கிறேன்.

4

ஐரோப்பாவில்

கோடும்புத்துறையில் நான் லண்டன் நகருக்குக் கப்பலேறினேன். ஆஸ்திரேலியாவிலிருந்து லண்டன் நகருக்குச் செல்லும் கப்பல் அது. அக் கப்பலின் பெரும்பாலான பணியாளரும் வெள்ளையரே. அதிகாரப் பதவிகளில் மட்டுமே வெள்ளையரைக் கண்டறிந்திருந்த எனக்கு, பணி யாளராகவும் அவர்களைக் கண்டபோது மலைப்பேற்பட்டதில் வியப் பில்லை! கப்பலின் புதிய சூழல் பழகுவதற்கு எனக்குச் சில நாட்களாயின. ஒரு வாரம், கடல் பித்தநோய் என்னை வாட்டியது. வாந்தியும் தலைச் சுற்றும் கடல் நோயின் சின்னங்கள். சில சமயங்களில் அக்கரைச் சீமைப் பயணமே மேற்கொண்டிருக்கவேண்டாம் என்றுகூட எனக்குத் தோன்றியது. கப்பல் சூயஸ் கால்வாய் வரும்வரையிலும் எனக்கு உடல் நலமில்லை. மார்செயில்ஸை அடைந்ததும், கப்பலை விட்டிறங்கி ரயில் வழியாக ஃபிரான்ஸுக்குச் சென்று, அங்கிருந்து லண்டனுக்குப் பயணமாகலாம். லண்டன் விக்டோரியா நிலையத்தில் ஒரு நண்பன் என்னை எதிர்நோக்கிக் காத்திருந்தான். அவனுடன் நான் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்த இடத்துக்குச் சென்றேன்.

அடுத்த சில நாட்கள் லண்டன் நகரைச் சுற்றிப் பார்ப்பதிலேயே சென்றன. அந்தப் பெருநகரின் தூய்மையும் எழிலும் இடைவிடா வண்டிப் போக்குவரத்தும், அவற்றை ஒழுங்கு செய்யும் முறைகளும், மக்களின் மரியாதை நிரம்பிய பேச்சுப்பழக்கமும், பிறருக்கு எப்போதும்

உதவத் தயாராக இருக்கும் அரிய பண்பும், காவல்துறைப் பணியாளரின் சுறுசுறுப்பும் பொறுமையும், என்னை அந்நாட்டு மக்கள் பால பெருமதிப்பும் அன்பும் கொள்ளச் செய்தன. இந்தியாவில் நான் கண்டிருந்த ஆங்கிலேயருடைய பழகு முறைக்கும். இவர்களுடைய பேச்சு முறைக்குமிடையே மிகுந்த வேறுபாடு கண்டேன். அங்கு நான் கண்டிருந்த ஆங்கிலேயர், கர்வமும் இறுமாப்புமாக விளங்கிய ஆட்சியதிகாரிகள்; இவர்கள் பண்பும் மரியாதையும் மிகுந்த ஆங்கில நாட்டு மக்களாகத் திகழ்ந்தனர். இவர்களுடைய வாழ்க்கை முறை என்னை வெகுவாகக் கவர்ந்தது. ஆங்கிலேயருடைய செயல் மேன்மையும், நல்வாழ்க்கை மீதான ஆர்வமும் என்னை வியப்பிலாழ்த்தின. பொது மக்களுக்குத் தொண்டாற்றுவதில் அவர்கள் உணர்த்திய நயப் எனக் கொரு பாடமாயிற்று 'என் நாட்டு மக்களும் இவர்களிடம் நான் கண்ட அரிய இயல்புகளைப் பெற்று இருந்தால் ..' என்று பல பொழுதும் நான் எண்ணிப்பார்க்காமலில்லை.

எல்லா நற்குணங்களும் பொருந்தியதொரு தனி மனிதரையோ, நாட்டினரையோ உலகில் காண இயலாது. பிறருடைய நற்குணங்களைக் கண்டு அவற்றைக் கற்றுணரும்போதும், அவர்தம் தீய இயல்புகள் நம்மைத் தொற்றிக்கொள்ளாமலிருக்க நாம் ஒதுங்கும்போதும்தான் நமமுடைய சுயமான பண்புகள் மலர்ச்சி எய்துகின்றன. ஆங்கிலேயரிடம் நான் கண்ட பல முன் மாதிரியான பழக்கங்களை என்னுடைய நாட்டிலும் பரப்ப வேண்டுமென்ற கருத்து எனக்கு உண்டாயிற்று. அக் கருத்துக்கு இன்றும் நான் மாறுதல் காணவில்லை.

லண்டனில் நான் ஒரு சிறு ஆங்கிலேயக் குடும்பத்தினருடன் தங்கி வாழ்ந்தேன். ஒரு பெண்மணியும் மூன்று குழந்தைகளுமாக வாழ்ந்த குடும்பம் அது. நானும் என் நண்பனும் அங்கு ஒவ்வொரு அறைகளில் தங்கியிருந்தோம். அங்கேயே உணவும் கொண்டோம். அப் பெண்மணி வீட்டுப்பணி புரியும் நேர்த்தியைக் கண்டறியவேண்டும். அதிகாலையில் துயிலெழுந்து வீடு தூய்மையாக்கி எங்களுக்குக் காலை உணவு தயாரித்தளித்த பிறகு, வீட்டுக்கான சாமான்கள் வாங்க வெளியே செல்வாள். அதற்குமுன்பே குழந்தைகளையும் பள்ளிக்குச் சித்தமாக்கி அனுப்புவாள். நாங்கள் வெளியே சென்ற பிறகு எங்களுடைய அறைகளைத் தூசு தட்டிப் பெருக்கி வைப்பாள். ஜன்னல், வாயிற்கதவுகள், கொக்கிகள் எல்லாம் துடைத்துச் சுத்தமாக்குவாள். ஒருநாள்கூட, இப் பணிகளைச் செய்யாதிருந்ததில்லை. நாங்கள் மாலையில் வீடு திரும்பும்காலை, அவள் தேநீருடன் எங்களை எதிர்நோக்கி யிருப்பாள். இரவு நேர உணவுக்கு எங்களுக்கு ஏதேனும் தனியாக வேண்டுமா என்று கேட்டுப் பின்னர் அதைச் சமைக்கச் செல்வாள். நேரம் கிடைக்கும்போது புத்தகமோ,

செய்தித்தாளோ படிப்பாள். ஒரு வேலையும் அரைகுறையாக நிற்காது. பரபரக்கும் அவசரத்தையும் அவளிடம் காண்பதற்கில்லை. எல்லா வற்றுக்கும் உரிய நேரமுண்டு. அவ்வப்போது அந்தந்தப் பணியை நிறைவேற்றுவாள்.

இரண்டாண்டுகளுக்கு மேலாக அந்தக் குடும்பத்தினருடன் தங்கி வாழ்ந்தபின் நான் தாய்நாடு திரும்புகையில் என் சொந்தக் குடும்பத்தை விட்டுப் பிரிந்து வருவது போன்று வருந்தினேன். பிறருடன் நம்மை இணைப்பது இரத்தத் தொடர்பு அல்ல—நற்குண இயல்பும் மலர்ந்த இதயமுமே—ஒருவர் பிறருடைய நலங்களிலும் இன்பங்களிலும் புலர்த்துப் அன்பே அவருடைய வாழ்வில் இனிமையும் ஆர்வமுமாய் இசைகிறது. சிலர் தம் உரையாடல் காரணமாகவே பிறரைக் கவர்கின்றனர். வேறு சிலர், அதே காரணமாகப் பிறர் வெறுப்புக்காளாகின்றனர். இதெல்லாம் நாம் சாதாரணமாகக் காணும் உண்மைகளல்லவா !

எங்கு நோக்கினலும், பிரிட்டன் ஒரு சுதந்திர நாடென்ற உண்மை விளங்கியது. ஞாயிற்றுக்கிழமைகளில் நானும் என்னுடைய நண்பனும் லண்டன் ஹைட்பார்க்கில் நெடுநேரம் சுற்றிக்கொண்டிருப்பது வழக்கம். பல்வேறு தரத்தினரான சொற்பொழிவாளரை அங்குக் காணலாம் பல்வேறு பொருள் குறித்து அவர்கள் உரையாற்று வார்கள். அங்கு நிலவும் கருத்துச் சுதந்திரத்தை விளக்கும் வகையில் அவர்கள் பேசுவதையும், அதைக் கேட்க மக்கள் பெருமளவில் கூடி யிருப்பதையும் காணும் பிற நாட்டினர் எவரும் வியப்படையாமல் இருக்கமாட்டார். அறிவை வளர்த்துக்கொள்ள மக்கள் காட்டிய உற்சாகமும், பொறுமையும், அந்த இடத்தின் அச்சமற்ற சூழலும், அந்நியராதிக்கத்துக்குட்பட்டு, சுதந்திரமென்றால் என்னவென்றே அறியாதுழன்ற இந்தியராகிய எங்களுக்கு மனவெழுச்சியூட்டக் கூடியதாக அமைந்தன.

இங்கிலாந்தின் நிலைமையைப்பற்றியும், நிறுவனங்களைப்பற்றியும் மேன்மேலும் அறிந்துகொண்ட பின்னர், என் சொந்த நாட்டின் நிலையை எண்ணி நான் நாணமும் வேதனையும் கொண்டேன். இந்தியா, 'அந்நிய ஆதிக்கத்துக்குட்பட்டதொரு நாடு' என்ற உண்மை மறக்க இயலாததாக வருத்தியது 'நான் ஒரு சுதந்திர நாட்டின் குடிமகனல்ல; பிரிட்டிஷ் அரசருக்குட்பட்ட பிரஜை' என்று எனக்கு அறிவுறுத்திய சம்பவங்கள் ஒன்றிரண்டல்ல.

நான் தங்கியிருந்த வீட்டுச் சிறுமி என்னிடம் ஒருநாள் கூறினாள் :

"நேற்று எங்கள் டீச்சர் எங்களுக்கு இந்தியாவைப்பற்றிக் கூறினார். இந்தியரால் அவர்களுடைய நாட்டை ஆளமுடியவில்லை. அவர்கள்

தம்மிடையே சண்டை போட்டுக்கொண்டு நாட்டில் கலகமும் குழப் பமும் விளைவிக்கின்றனர். அதனால்தான் நாம் அவர்களுடைய நாட்டை ஆள்கிறோம். என்றென்றும் நாமே இந்தியாவை ஆளவேண்டியிருக்கும் என்றார்.''

அந்த ஆசிரியையின் கூற்றுச் சரிதானே? நம்முடைய ஒற்றுமைக் குறைவன்றோ நம்மைப் பிறர் அடிமை கொளச் செய்தது? இந்நிலையி னின்று இந்திய நாட்டை மீட்கும் வழிதான் யாது?

மாணவர்களாகிய நாங்கள் அதைக் குறித்துப் பல போதும் பேசலானோம்.

பல்வேறு நாட்டு மக்களின் சுதந்திரப் போராட்ட வரலாறுகளைப் படித்தறிந்துகொள்வதில் எனக்குப் பற்று மிகுந்தது. மாஜினி, கரிபால்டி, வாஷிங்டன், ராணி லட்சுமிபாய் போன்ற நாட்டுப்பற்று மிகுந்தவருடைய வீர வரலாறுகளைப் படிக்கும் ஆர்வம் என்னுள் பெருகியது. என்னுடைய நாட்டு விடுதலைக்கான முயற்சிகளில் உரிய பங்கு கொள்ளவேண்டுமென்ற ஆசையும் தோன்றியது.

என்னுடைய அந்த ஆர்வம், என்னைப் பொது வாழ்வில் ஈடுபடத் தூண்டிற்று. அதற்குத் தேவையான பயிற்சியை, நான் இங்கிலாந்தில் வதியும் காலத்திலேயே பெறவேண்டும் என்று உறுதிகொண்டேன். அங்குள்ள பல நிறுவனங்கள், சங்கங்களைப்பற்றியும், அவற்றின் இயக்க முறைகளைப்பற்றியும் அறிந்துணர்வதில் தனிப்பட்ட ஊக்கம் கொண்டு முனைந்தேன். 'லண்டன் ஸ்கூல் அஃப் இகனமிக்ஸ்' என்ற அமைப்பில் சேர்ந்து நான் சிறிது காலம் பயின்றேன். பார்லி மென்டுக்குச் சென்று, அங்கு நடைபெற்ற விவாதங்களையும் உரை களையும் கருத்தூன்றிக் கேட்டேன்.

என்னுடைய தந்தைக்கு நான் சர்க்கார் உத்தியோகத்தில் நுழைந்து விடவேண்டும் என்ற ஆசை இருந்தது. எனக்கு அவர் வரைந்த பல கடிதங்களிலும் அதைக் குறிப்பாகப் புலப்படுத்தியிருந்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின்பால் மிகுந்த பக்தியும், அவர்களுடைய ஆட்சியில் மிகுந்த திருப்தியும் கொண்டவர் என் தந்தை.

ரவீந்திரநாத தாகூர், கோபாலகிருஷ்ண கோகலே, லாலா லஜபதி ராய், முகம்மதலி ஜின்னா, சரோஜினி நாயுடு, ஸர் ஸி. சங்கரன் நாயர், அன்னிபெசன்ட் போன்ற புகழ்பெற்ற தலைவர்கள், நான் லண்டனி லிருந்த காலத்தில் அங்கு விஜயம் செய்தனர். அவர்களை வரவேற்று உபசரிக்கக்கூடிய வரவேற்புக் கூட்டங்களிலெல்லாம் நானும் கலந்து கொண்டேன். நாட்டு முன்னேற்றத்துக்கான நற்பணிகளில் ஈடுபட்ட புகழ்பெற்ற தலைவர்களைக் காணவும், அவர்களுடைய நெருக்கத்தைப் பெறவும் நான் அடங்கா ஆவல்கொண்டிருந்தேன். மேற்கண்ட தலைவர்

களில் சிலரை, நான் லண்டனில் இருந்தபோது சென்று கண்டேன். எவ்வகையிலேனும், அவர்களை நெருங்கிப் பணிபுரிய வேண்டுமென்று மிகுந்த ஆசை உண்டாயிற்று. பக்குவம் பெறுத, முதிர்ச்சியடைந் திராத என்னுடைய அறிவிற் கிளர்ந்த பல கருத்துக்கள், அவர்களுக்கு நகைப்புக்குரியதாக இருந்திருக்கக்கூடும். பின்னர், 'எவ்வளவு முட்டாள் தனமாக நான் பேசினேன்' என்று எனக்குத் தோன்றிற்று. என்ருலும், பெருந்தலைவர்களுடன் உரையாட முடிந்த சாதனையே என்னுடைய இதய வேட்கையின் பயனென்று கருதினேன்.

இங்கிலாந்திலுள்ள ஒரு கிராம விவசாயியின் இருக்கையில் நான் வசித்த நாட்களில் என் தந்தையின் மரணச் செய்தி கிடைத்தது. நோய்ப் படுக்கையில் அவர் இருந்த செய்தியை நான் முன்னரே அறிந்திருந் தாலும் அத்துணை விரைவில் அவர் என்னை விட்டுப் பிரிந்துவிடுவார் என்று கருதியிருக்கவில்லை. என்னைப் பாரிஸ்டராகக் காணத் துடித் திருந்த என் அன்புத் தந்தை இல்லாத வீட்டுக்கே நான் திரும்புகிறேன் என்பதை என்னுல் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

அந்த கிராம நண்பரும் அவருடைய மனைவியும், என் அருகில் வந்து என்னைப் பலவாருகத் தேற்ற முயன்றனர். யாருமில்லாத இடத்தில் தனித்திருந்து தந்தையைப்பற்றிய நினைவுகளில் நான் பொழுதைக் கழித்தேன். பெருந்துயரம் வந்துறுங்காலை, உற்றவர் யாரும் அருகில் இல்லாதிருந்தால், அத் துயரம் மேலும் சுமையாக இதயத்தை அழுத்தும் என்பதைக் கூறவேண்டுமா? என் அறிவுக்கப்பாற்பட்ட செயல்களைப்பற்றிய கருத்தில் பிடி ஏதுமின்றியே நான் வருந்தினேன்.

இளமைப் பருவத்திலிருந்து பழகிய பல நெறிமுறைகளும் நம்பிக்கை களும் பொருளற்றவையாகத் தோன்றின. ஆலை அவற்றுக்குரிய இடத்தில் வேறு கருத்துக்களுக்கும் மனம் இடம் கொடுக்கவில்லை. பல நூல்களையும் நான் படித்தேன்; பலருடைய உரைகளையும் செவி மடுத்தேன். எனினும் உறுதியானதோர் நம்பிக்கை மனதில் வேரூன்ற வில்லை. தாமஸ் அகம்பின் 'கிறிஸ்துவைப் பின்பற்றல்', எப்பிக்ட் ரஸின் 'பேருரைகள்', மார்க்கஸ் அரேலியஸ்ஸின் 'ஆத்ம சிந்தனைகள்', எட்வின் ஆர்னல்டின் 'ஆசிய ஜோதி' ஆகிய நூல்கள் எனக்கு மிகவும் விருப்பமானவை. இயேசு, புத்தர் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களை எத்தனை முறை படித்தாலும் அடங்கா ஆர்வம் தோன்றும். பஞ்ச தந்திரமும் இராமாயணமும் அத்தகைய நூல்களே. பைபிளில் சில பகுதிகள் எனக்கு மனப்பாடமாயிருந்தன. எனினும், மரணத்துக் கப்பாலுள்ள நிலை குறித்து என்னிடம் எவரேனும் வினு எழுப்பினுல், விடையளிப்பது கடினம்.

என்னுடைய கொள்கைகளுக்கேற்ப வாழ்க்கையை வகுத்துக் கொள்ளும் ஆசை கொண்டேன் நான். ஆனல் அதற்கேற்ற மன உறுதி எனக்கு இல்லை. இவ்வண்ணம் செயல்படவேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டு அவ்வண்ணமே நடக்கத் தொடங்கினலும், தொடர்ந்து அவ் வழிமுறையைப் பின்பற்றும் இயல்பான திண்மை என்னிடமில்லை. நான் செலவு செய்யும் பணத்துக்குக் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று என் தந்தை எனக்கு வலியுறுத்தியிருந்தார். சின்னட்கள் அந்த ஒழுங்கைக் கடைப்பிடித்தேன். பிறகு அவ் வழக்கத்தை நிறுத்திவிட்டேன். இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு மீண்டும் தொடங்கினேன். அப்படியே சென்றது. இதுபோன்று, அன்ருட நடவடிக்கைகளை ஓர் ஒழுங்குக்குக் கொண்டுவரப் பல தீர்மானங்களை நான் சிந்தனை செய்திருக்கிறேன். ஆனல் செயல்முறையில் ஒன்றும் வந்ததில்லை. செய்யக்கூடாததைச் செய்வதும், செய்ய வேண்டியதைச் செய்யாமல் தள்ளிப் போடுவதும் தவறென்ற உணர்வு எனக்கிருந்தது. என்ருலும், மனதைப் பிடித்து நிறுத்தி நேர்வழியில் செலுத்தும் உறுதி யின்றித் தடுமாறினேன்.

1914ஆம் ஆண்டில், ஜூலை மாதத்தில், ஒரு நண்பனுடன் ஐரோப் பாவில் சில நாடுகளைச் சுற்றிப் பார்க்க நான் பயணம் கிளம்பினேன். நாங்கள் ஜெர்மனியின் தலைநகரான பெர்லினில் இருந்தபோது, முதல் உலகப் பெரும்போர் மூண்டது. போர் மூண்டபின் இரண்டு மாதங்கள் நாங்கள் சுவிட்ஸர்லாந்தில் தங்கினேம். லண்டனுக்குத் திரும்ப வழி வகை இல்லாமலிருந்தது. அங்கு 'இன்டர்லாக்கன்' என்றொரு விடுதியில் நாங்கள் தங்கியிருந்தோம். திரும்பி லண்டன் செல்ல வசதி கிடைத் ததும் நாங்கள் திரும்பினேம். அக்காலத்தில் நேர்ந்த அனுபவங்களை, நான் 'பிலாத்தி விசேஷம்' என்ற கட்டுரைத் தொடரில் விவரித்திருப்ப தனல் அவற்றை மீண்டும் இங்குக் கூறவில்லை. ஆனல் ஒரு சிறு நிகழ்ச்சியை மட்டும் விவரிக்கிறன் :—

நாங்கள் இன்டர்லாக்கனை அடைந்தபோது, எங்கள் கையில் பண மில்லை. போர் மூண்டுவிட்டதால், கையிலிருந்த நோட்டுக்களை மாற்றிக் கொள்ள வசதியில்லை. மற்றப் பயணிகளுடைய நிலையும் அவ்வாறுகத்தா னிருந்தது. அப்போதைக்கு எங்களால் பணம் கொடுக்க இயலாதென் றறிந்துதான் அந்த விடுதியின் உரிமையாளர் நாங்கள் அங்கே தங்க இடமளித்தார். சில நாட்கள் சென்ற பின்னர், அங்கிருந்த ஒரு பிரிட்டிஷ்காரர், இன்டர்லாக்கனில் தங்கியுள்ள பிரிட்டிஷ் குடி மக்க ளுடைய தேவைக்காக பிரிட்டிஷ் அரசு, லண்டனிலிருந்து ஒரு தொகை அனுப்பி வைத்திருப்பதாகவும், எங்களுக்குப் பணம் தேவையாக இருந்தால் அதற்கென்று தனியாக அமைந்திருந்த செயற்குழுவினரை

அணுகித் தெரிவித்துக்கொள்வது நலமென்றும் அறிவித்தார். பிரிட்டிஷ் குடிமக்களுக்கு அநுமதிக்கப்பெற்ற வசதிச் சலுகைகளைக் கேட்டுப் பெற எங்களுக்கும் உரிமை இருந்தது. நானும் என் நண்பனும் செயற் குழுவினரை அணுகி, நாங்கள் லண்டனை அடையும் வரையிலும் எங்களுக்குத் தேவையாக இருந்த தொகையைத் தெரிவித்தோம். எங்களுக்குப் பணமுடையேதும் இல்லை என்றும், பிரிட்டிஷ் மக்களுக்குப் பணம் கொடுப்பதை அறிந்தே நாங்களும் கேட்பதாகவும், அதனால் எங்களுக்குப் பணம் கொடுப்பதற்கில்லை என்றும் கமிட்டி உறுப்பினர் ஒருவர் அறிவித்தார்.

அவர், அந்நாளில் இந்தியாவில் ஓர் உயர் அதிகாரி. அக்காலத்தில் எங்களைப் போன்றே சுவிட்ஸர்லாந்திலிருந்து திரும்பிச் செல்ல வழி யின்றி அங்கே தங்கி இருந்தார். அந்நாள், இன்டர்லாக்கனில் சுமார் முந்நூறு பிரிட்டிஷ் குடிமக்கள் தங்கியிருந்தனர். அக் கூட்டத்தில் நாங்கள் இருவரே இந்தியர்.

அவர் இவ்வண்ணம் மறுத்தபோது, நாங்கள் அங்கே இரந்து பொருளபெற வரவில்லை என்றும், கமிட்டியின் அழைப்பின் பேரிலேயே அவர் முன் வந்ததாகவும், எங்களையும் எங்கள் நாட்டைப்பற்றியும் அவதூறான சொற்களைக் குழுவின் ஓர் உறுப்பினர் மொழியும்போது, பிறர் அதை மறுத்தும் ஏதும் கூறாதிருந்த நிலையில் கமிட்டியின் உதவியை நாங்கள் ஏற்கவிரும்பவில்லை என்று நாங்கள் அங்கிருந்து திரும்பிவிட்டோம். இவ் விவரங்களைத் தெரிவித்து அன்றே கமிட்டிச் செயலாளருக்கு ஒரு கடிதமும் அனுப்பினேம். கடிதத்தின் இறுதியில் இப்படி எழுதியிருந்தோம்:—

'மேற்குறித்த நிலையில், உங்களுடைய கமிட்டிவாயிலாக எந்த உதவியையும் ஏற்பதை, எங்களுக்கும் எங்களுடைய நாட்டுக்கும் அவமானமுடையதாகவே நாங்கள் கருதுகிறோம். இவ் விவரத்தைத் தங்களுடைய குழுவினருக்கு அறிவிப்பீர்களல்லவா!'

இக் கடிதத்துக்கு மறுநாளே கமிட்டிச் செயலாளரிடமிருந்து பதில் வந்தது. அதன் சாரம்: 'முதல் நாள் நேர்ந்த நிகழ்ச்சி குறித்துக் கமிட்டி மிகவும் வருந்துகிறதென்றும், பொறுப்புணர்வில்லாத ஓர் உறுப்பினர் மொழிந்த சொற்களைக் கமிட்டியின் கருத்தாக எடுத்துக் கொள்ள வேண்டாமென்றும், தேவைப்பட்ட தொகையை அறிவித்தால் அதை உடனே அனுப்பிவைப்பதாகவும் எழுதியிருந்தனர்.'

பணம் தேவையில்லை என்று கூறி, லண்டன் திரும்ப பஸ் கட்டணம் மட்டுமே நாங்கள் பெற்றுக்கொண்டோம். இதை அறிந்தபோது, விடுதி உரிமையாளர் எங்களை வாழ்த்தினர். தமக்கு அப்போது பணம் தேவையில்லை என்றும், நாங்கள் லண்டன் திரும்பிச் சென்ற பிறகு

அனுப்பிஞலே போதுமென்றும் அவர் கூறினர். சில நாட்களுக்குப் பின் லண்டன் திரும்பிவந்த பிறகே எங்களுடைய விடுதிக்கான கட்டணத்தை அவருக்கு அனுப்பிவைத்தோம்.

பரீட்சை தேறி, பாரிஸ்டராக லண்டனிலிருந்து தாய்நாடு திரும்பப் புறப்பட்டபோது, மூன்ருண்டுகள் ஒன்ருக வாழ்ந்த என் அன்பு நண்பர் புதிய வீட்டில் நாராயண மேனனைப் பிரிவதனுல் பெருந்துய ருற்றேன். அவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வி பயின்றுகொண்டிருந்தார். அவர் படிப்பு நிறைவேறுவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் இருந்தன. கல்லூரி நேரம் தவிர்த்த எஞ்சிய நேர மெல்லாம் நாங்கள் இணைபிரியாது இருந்தோம். இரண்டாண்டுகள் சென்று அவர் நாடு திரும்பும் வரையிலும் நாங்கள் எவ்வாறு பிரிந் திருப்போம் என்ற ஆற்ருமையுடன் நாங்கள் ஒருவரை ஒருவர் பிரிந்தோம். அந்தப் பிரிவு என்றென்றைக்குமானதென்று அப்போது எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லையே!

இரண்டாண்டுகள் செல்லுமுன்பே, லண்டனிலேயே அவர் கால மானுர். சாந்தமும், தயையும், உண்மையுமே நெறியாகக்கொண்ட அந்த இளைஞர், மக்களிடையே ஓர் உயர்ந்த மருத்துவராகத் திகழ்ந் திருப்பார். ஆனல், விதி வேறு வகையில் தீர்மானித்திருந்தது!

1915ஆம் ஆண்டு ஜூலையில் நான் தாயகம் திரும்பினேன். போர் அப்போதும் நடந்துகொண்டிருந்தது. எதிரிகளின் அச்சுறுத்தலால் கப்பற்பயணம் அபாயம் நிறைந்ததாகவே இருந்தது. கப்பல் பம்பாய் துறைமுகத்தை அடைந்தபோது, பயணிகள் மரணத்தின் வாயிலி லிருந்து மீண்டாற்போன்று மகிழ்ச்சி எய்தினர்.

நான் ஊர் திரும்பியபோது, மங்கள வாத்தியமும், அதிர் வெடியும், யானையுமாக என்னை வரவேற்கக் காத்திருந்த மக்கள் கூட்டம் கண்டு மலைத்தேன். எங்களூரிலிருந்து அந்நாளில் அக்கரைச் சீமைக்குச் சென்றவர் யாருமில்லை. அதுவே அந்த ஆரவார வரவேற்புக்குக் காரணம்.

நான் ஊரைவிட்டுச் சென்று மூன்ருண்டுகளாயிருந்தன. அந்தக் கால வரையறையில், என்னுடைய அன்புத் தந்தையும் ஒரு சகோதரியும் இவ்வுலகைவிட்டு மறைந்துவிட்டனர். அந்தப் பெரிய குடும்பத்தின் முழுச் சுமையையும், வயதுமுதிர்ந்த என் தாயின் நலிந்த தோள்களி லிருந்து நான் ஏற்றுக்கொண்டேன்.

5

வழக்குரைஞர் தொழிலும் பொது வாழ்க்கையும்

1915 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நான் கோழிக்கோட்டில் தொழிலைத் தொடங்கினேன். மேசை-நாற்காலியும் அலமாரி நிறைந்த புத்தகங்களுமாய் கட்சிக்காரர்களை எதிர்நோக்கி நான் காத்திருந்தேன். தொழில் சம்பந்தமான அறிவும் அனுபவமும் வாய்ந்த சில நண்பர்கள் முதலில் நான் ஒரு நல்ல 'குமாஸ்தா'வைத் தேடிக் கொள்ள வேண்டுமென்று அறிவுரை வழங்கினார்கள். ஒரு நல்ல குமாஸ்தா கிடைக்கும் வரையில், நீதிமன்ற விஷயங்களில் அநுபவமற்ற எனக்கு உதவுவதற்கு எங்கள் குடும்பத்துக்கு வேண்டியவனை ஒரு கிராமக் காரியக்காரன், கோழிக்கோட்டுக்கு வந்து சில நாட்கள் என்னுடன் தங்கினான். பல பெரிய வக்கீல்களைப்பற்றி அவன் தெரிந்து கொண்டிருந்தான். அவர்கள் ஒவ்வொருவரும் வழக்கு நடத்தும் முறைகளைப்பற்றி எனக்கு விவரமாக எடுத்துரைத்தான். அவர்களில் ஒருவர் வழக்கை நடத்துவதற்கு மிகத்தேவையான சாட்சிகளைத் தயார் செய்வதில் மிகவும் கெட்டிக்காரர். ஆசான் சிறுவர்களுக்குப் பாடம் கற்பிப்பது போன்றே சாட்சிகளுக்கு அவர் பாடம் கற்பிப்பார். எதிர்த் தரப்பு வக்கீல் வழக்கை வாதிக்கும்போது நீதிபதி ஏதோ எழுதத் தொடங்க, அது தகாதென்று மறுத்த மற்றொரு வக்கீலைப்பற்றியும் அவன் தெரிவித்தான். அவருடைய குறுக்கீட்டைப் பொருட்படுத் தாமல் நீதிபதி எழுதிக்கொண்டிருக்கையில் வக்கீல் நீதிபதியின் இருக்கைக்கருகில் சென்று அவருடைய கையைப் பிடித்தாராம்! அந்தத் துணிச்சல், சாதாரண வக்கீல்களுக்கு இருக்குமா என்று வியப்பு மேலிடும் புன்னகையுடன் அவன் என்னிடம் வினவினான். இந்தக் கதைகளை எல்லாம் நான் நம்பியதாகவே அவன் கருதியிருப்பான்.

'பொய்ச்சாட்சியம் தயாரிப்பது சரியா?' என்று நான் அவனிடம் கேட்டேன்.

அவன் அளித்த மறுமொழி இது: 'கோர்ட்டு சத்திய மன்றமல்ல; நீதிமன்றம். வழக்கை வென்று தரவே கட்சிக்காரர்கள் வக்கீல்களை அணுகுகின்றனர். சத்தியமோ அசத்தியமோ, அவர்களுக்கு அவர் களுடைய நோக்கம்தான் குறி. சத்தியத்தையே குறியாகக் கொண்டு நடப்பதென்றால் இந்தத் தொழிலுக்குப் போவானேன்?'

எவ்வாறுயினும் எனக்கு ஒரு கேஸ் பிடித்துக் கொடுக்க வேண்டு மென்று அவனுக்குக் கவலை இருந்தது. நான் அதை எப்படி நடத்து கிறேன் என்று பார்க்கவும் அவன் ஆசைப்பட்டான். காலையில் நீராடி, காபியருந்தி, நான் (ஆபீஸ்) அலுவலறையில் அமருவேன். பத்து மணிக்கு உணவு கொண்டு, உடை உடுத்து, நான் நீதிமன்றம் செல்வேன். இரண்டு மாசகாலம் ஓடிற்று.

ஒரு நாள் காலையில் நான் குளித்துக்கொண்டிருந்தேன். அவன் குளிக்கும் அறைக் கதவடியில் வந்து நின்று, விரைந்து குளித்துவிட்டு வரப் பணித்தான். சில கட்சிக்காரர்கள் வந்திருக்கின்றனர் என்ற நற்செய்தியை அறிவித்தான். நான் அநேகமாக நீராடி முடித்து விட்டேன். விரைந்து உள்ளே சென்று உடுத்துக்கொண்டு ஐந்தே நிமிடங்களில் நான் அலுவல் அறைக்குள் நுழைந்தேன். அங்கே அந்தக் காரியக்காரனைத் தவிர வேறு யாருமில்லை.

'கட்சிக்காரர்கள் எங்கே?' என்று வினவினேன்.

'அவர்கள் வேறொரு வக்கீலின் வீட்டைத் தேடிவந்தார்கள்; திரும்பிச் சென்றுவிட்டனர்' என்று மறுமொழி தந்தான். பிறகு, கேஸ்கள் வரும் கொஞ்சகாலம் போக வேண்டும்; எனக்குத் தெரிந்தவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள்' என்றான் ஆறுதலாக.

நான் லண்டனில் ஒரு பாரிஸ்டரிடம் தொழிற்பயிற்சி பெற்ற காலத்தில் அவர் கூறியிருந்த சில கதைகள் அப்போது என் நினைவுக்கு வந்தன. 'பிராக்டிஸ்' தொடங்கிச் சில நாட்கள் சென்ற பின்னரும் வழக்கு ஏதும் வராமல் சோர்ந்திருந்த ஒரு பாரிஸ்டரின் கதை அது. அவர் நாள்தோறும் அலுவலகம் செல்வார். சிறிது நேரம் சென்ற பின்னர், நேரம் தவறாமல் நீதிமன்றத்துக்கும் செல்வார். எவரேனும் கட்சிக்காரர் வந்தால் உடனே எழுத்தன் நீதிமன்றத்துக்குச் சென்று அவருக்கு அறிவிக்க வேண்டுமென்பது கட்டளை. ஒரு நாள் அந்தப் பாரிஸ்டர் நீதிமன்றத்திலிருக்கையில் எழுத்தன் மூச்சுமுட்ட ஓடிவந்து ஒரு கட்சிக்காரன் வந்திருப்பதாக அறிவித்தான். 'அப்படியா? சீக்கிரமாகப் போய் அவனை ஆபீஸில் இருக்கச்சொல்; நான் இதோ வருகிறேன்' என்றார் பாரிஸ்டர். 'அவன் போய்விடமாட்டான் ஸார், வாசலைப் பூட்டிவிட்டு வந்திருக்கிறேன்; அவன் உள்ளே இருக்கிறான்' என்று அந்த எழுத்தன் மறுமொழி புகன்றானும். தன்னுடைய எழுத்த னின் சாமர்த்தியத்தை எண்ணி மகிழ்ந்துகொண்டு வந்த பாரிஸ்டர் அலுவலகக் கதவைத் திறந்து பார்க்கையில், அங்கு யாரையும் காணவில்லை! பின்புறமிருந்த கதவைத் தாழிட எழுத்தன் மறந்து போயிருந்தான்!

நெடுநாட்கள் செல்லுமுன்னரே, கிராமக் காரியக்காரன் ஒரு வழக்கைக் கொண்டுவந்தான். அப்போதுதான் எனக்கு ஒரு 'குமாஸ்தா' வும் கிடைத்தான்.

அப்பீலுக்கான தனிப்பட்ட சான்றிதழ் கோரும்[1] மனு அது. துரைமாரின் நீதிமன்றமாதலால், தனியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென எடுத்துரைத்தான். அது என்னுடைய முதல் 'கேஸ்'. ஐந்து ரூபாய் ஃபீஸ் கிடைத்தது. மனுவை ஊன்றிப் படித்தேன். சட்டத்தையும் ஆராய்ந்தேன். முதல் வழக்கில் வெற்றியடைய வேண்டுமே என்று வேண்டிக்கொண்டு நான் நீதிமன்றத்துக்குச் சென்றேன். மிஸ்டர் ஜாக்ஸன் என்பவர் அன்றைய மாவட்ட நீதிபதி. என்னுடைய வழக்கை உரைக்கும் நேரம் வந்தது. நான் கேஸ் கட்டை எடுத்துச் சட்டப் புத்தகத்தைப் பிரித்தேன். அதற்கு முன்பாகவே மனுவை அநுமதித்து விட்டதாக நீதிபதி ஆணை பிறப்பித்துவிட்டார்! நான் எழுந்து நின்றதையும் புத்தகத்தைப் பிரித்ததையும், என்னுடைய எழுத்தனும் கிராமக் காரியக்காரனும் ஆவலுடன் நோக்கிக் கொண்டிருந்தனர். ஆனால் நான் எதுவுமே பேசவேண்டியிருக்கவில்லை. என்னுடைய முதல் வழக்கை நான் இவ்வாறு நடத்தி வெற்றி பெற்றேன்.

கோழிக்கோடு வழக்குரைஞர் சங்க நூலகம் அந்நாளில் ஓர் 'கிளப்' போன்றிருந்தது. வளமான தொழிலில்லாத வக்கில்கள் அங்கு நிறைந்திருக்கக் காணலாம். அவர்களுடைய பேச்சில் பல செய்திகள் அடிபடும். வழக்குகள் இல்லாதவர்களும் விசாரணைக்குக் காத்திருப்பவர்களும் அந்தப் பேச்சில் கலந்துகொள்வார்கள். ஆனால் தனித்தமர்ந்து படிக்க விரும்புபவர்களுக்குரிய வசதி அங்கு இல்லை. உரிய நேரத்தை ஒழுங்கு செய்துகொண்டு, தம் தொழிலுக்குகந்த பயிற்சியைப் பெறுவதற்கும் அங்கே வசதியில்லை. இன்றும் அந்த நிலையில் ஏதேனும் மாறுதல் வந்திருக்குமா என்பது நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.

இரண்டு மூன்று வழக்குரைஞர்கள் இணைந்து கூட்டாகத் தொழில் புரிந்தால் அவரவருடைய இயல்பான தன்மைக்கும் ஆற்றலுக்கும் உகந்தவண்ணம் எல்லோரும் பணியில் ஈடுபடக்கூடிய பயன் பெறலாம். இத்தகைய நடைமுறை மிகச் சில இடங்களிலேயே வழக்கிலிருக்கிறது. நம் நாட்டில் சாதாரணமாக இம்முறை வழக்கிலில்லை. இந்த முறை வழக்கத்துக்கு வந்தால், வக்கீல்களுக்கும் கட்சிக்காரர்களுக்கும் நலமாக இருக்கும். இன்றைய சூழ்நிலையில், இது தனிப்பட்ட முறையில் சோதனை செய்வதற்குரியதென்று தோன்றுகிறது.

---

[1] Special leave petition for appeal

கோழிக்கோட்டிலிருந்து நான் ஓர் வழக்கை முன்னிட்டுத் திரூர் சென்றேன். அது மறக்க இயலாத அநுபவம்.

ஒருநாள் மாலையில், நாலைந்துபேர் கேஸ் கட்டுகளுடன் என் வீட்டுப் படி ஏறி வந்தனர். மறுநாள் திரூர் முன்சீஃப் கோர்ட்டில் விசாரணைக்கு வருவதற்கிருந்த ஒரு வழக்கில், நான் ஆஜராக வேண்டுமென்று கோரி அவர்கள் வந்திருந்தனர். அந்தக் கட்டுக் காகிதங்களை அவிழ்த்து வழக்குபற்றிய விவரங்களை அறியவே மூன்று மணி நேரத்துக்கு மேலாயிற்று. ஃபீசையும் உறுதி செய்துகொண்டேன். மறுநாட் காலை வண்டியில் திரூர் செல்வதாகத் தீர்மானம் செய்தேன். ஃபீசுடன் வழிச்செலவுக்கான பணமும் வைத்துக்கொண்டு ரயில் நிலையத்தில் காத்து நிற்பதாக அவர்கள் கூறிச் சென்றனர். நான் குறித்த நேரத்தில் ரயில் நிலையம் சென்றேன். வண்டி கிளம்ப ஐந்தே நிமிடங்கள் இருந்தன. முன்னூள் என்னைக் காண வந்தவர்களில் ஒருவன் மட்டுமே அங்குக் காத்திருந்தான். 'என்னுடன் வந்தவர்கள் கடைக்குச் சென்றிருக்கின்றனர். அவர்கள் ஒருகால் வேறு வண்டியில் வருபவர்களாக இருக்கும். நாம் இவ்வண்டியில் போகலாம். பணம் அவர்கள் வரும் போது கொண்டு வருவார்கள்' என்று கூறி எனக்கும் அவனுக்குமாகப் பயணச்சீட்டை நானே வாங்கச் செய்தான். நாங்கள் திரூர் வந்து சேர்ந்தோம். ஏதோ காரணம் கொண்டு கேசை ஒத்திவைக்க வேண்டியதாயிற்று. பாரக்காட்டுச் சங்குண்ணி மேனன் அந்நாளில் முன்சீபாக இருந்தார். நான் சிறுவனாக இருந்த காலத்திலிருந்தே எனக்கு அறிமுகமாயிருந்தவர் அவர். வழக்கை ஒத்திவைத்த பிறகு மதிய இடைவேளையில் அவர் என்னைத் தம்முடைய அறைக்கு அழைத்தார். நான் ஒரு இளைஞனை பாரிஸ்டர் என்ற முறையில் கட்சிக்காரர்களுடன் பேச வேண்டிய பழகு முறைகளைப்பற்றி எனக்கு அறிவுறை கூறினார். 'கேசுக்காக வெளியூர் செல்வதாலல் முழு ஃபீசையும் வாங்காமல் நகராதே. பல சமயங்களிலும் கட்சிக்காரர்கள் இளம் வக்கீல்களுக்குச் சேர வேண்டிய ஃபீசைக் கொடுக்காமல் ஏமாற்றிவிடுவார்கள்' என்று கூறினர். என் மனதில் அது பதிந்தது. பின்னர் நான் கோழிக்கோடு திரும்புகையில் என் கட்சிக்காரர்களைத் தேடினேன். யாரையும் அங்குக் காணவில்லை. எனக்கு ஃபீசும் கிடைக்கவில்லை. பின்னர், சங்குண்ணி மேனன் அறிவுறுத்தியவாறு நடப்பதாக உறுதிகொண்டு கைப்பணத்தில் பயணச்சீட்டு வாங்கிக்கொண்டு கோழிக்கோடு திரும்பினேன். அந்தக் கட்சிக்காரர்களைப் பிறகு காணவேயில்லை!

குறுகிய காலத் தொழில் அநுபவத்திலேயே எனக்குத் தோன்றிய சில கருத்துக்கள், இங்கே கூறுவதற்குரியதென்று நினைக்கிறேன். வழக்கை நடத்துகையில் சில வக்கீல்கள் நீதிபதிகளுடன் பேசும்

முறை என்னை வருந்தச் செய்திருக்கிறது. நீதிமன்றத்துக்குரிய மரியாதையை வக்கீல் அளிக்கவேண்டும் என்றாலும், தன்மானத்தை விட்டுக் கொடுத்துக்கொண்டு பேசுவது சரியல்ல. நீதிபதி பெஞ்சில் அமர்ந்திருக்கிறார். வழக்குரைஞர் தமக்குரிய இடத்தில் நிற்கிறார். இருதரப்பினரும் அவரவர்க்குரிய பணியை ஆற்றுகின்றனர். நீதிபதி யாருக்கும் அஞ்சவேண்டாம். வக்கீலும் நீதிபதிக்கு அஞ்ச வேண்டாம். அச்சமற்றதொரு வக்கீல்தாம் கட்சிக்காரனுக்காக வழக்கை நடத்த முடியும். வழக்குத் தோல்வியுற்றாலும் பரவாயில்லை. சத்தியத்தை மீறுவது நல்லதல்ல; தன்மானமும் சாக்க வேண்டும்.

மக்கள் சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கு வழக்குரைஞர் பெருமளவில் தொண்டாற்றலாம். அவர்கள் தங்களுடைய பொறுப்புக்களை உயர்ந்த நிலையில் இருந்தவாறு கணித்துக்கொள்ள வேண்டும். வழக்குரைஞரின் தொழில் பொருள் சேர்ப்பதற்கு மட்டுமே உரிய தொழில் என்று கருதலாகாது. பிறருடைய பொறுப்புக்களை எளிதாக்கும் வகையில் அவர்களால் உதவ முடியும்; நலம் பெருக்க இயலும். வழக்குரைஞருக்குரிய இயல்பான திறமை, பல நாடுகளிலும், சட்ட சபைகளிலும், அரசு நிர்வாகப் பணிகளிலும், பொதுச் சங்கங்களிலும் பணியாற்றுவதன் வாயிலாக மிக மேன்மையாகத் துலங்கியிருக்கிறது. மறுமலர்ச்சி காணும் நம் நாட்டிலும் அவர்களுக்கு மிகுந்த பொறுப்பிருக்கிறது. அப் பொறுப்பை உணர்ந்து ஏற்கும் திறமையையும் உறுதியையும் அவர்கள் முயன்று பெற வேண்டும். சிலர் கருதுவதுபோன்று வக்கீல்கள் சமுதாயத்தின் 'ஒட்டுண்ணிகள்' அல்ல. சமுதாயத்தின் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டும் நெடுந்தூண்கள் என்று கொள்ளலாம்.

1916-ஆம் ஆண்டு ஆகஸ்டில் நான் 'பிலாத்து விசாரம்' (அக்கரைச் சீமைச் சிறப்புக்கள்) என்ற நூலை வெளியிட்டேன். அந்நூலுக்குப் பொது மக்கள் அளித்த வரவேற்பு எனக்கு மிகுந்த நிறைவளித்தது. உலகப் போரும், அதன் விளைவாக இந்திய தேசிய அரங்கில் தோன்றிய புரட்சிகரமான மாறுதல்களும், பொதுவாழ்வில் பங்கு கொள்ளும் என் ஆசைகளுக்குத் தூண்டுதல்களாயமைந்தன. சிறிய நாடுகளின் சுதந்திர உரிமைகளைப் பாதுகாக்கும்பொருட்டே தாங்கள் ஜர்மானியருடன் போர் தொடுத்திருப்பதாக பிரிட்டிஷார் பிரகடனம் செய்தபோது, பெரிய நாடாகிய இந்தியாவுக்குச் சுதந்திர உரிமைகளை மறுப்பதன் பொருள் யாதென்று இந்தியர் கேட்கலாயினர். இந்தியாவில் சுயாட்சி முறையை நிலையுறுத்த, அன்னிபெசன்ட் தொடங்கிய ஹோம் ரூல் இயக்கம் நாடு முழுதும் உற்சாகமாக ஆதரவு பெற்றது.

பிரிட்டிஷார் ஓர் உலகப் பெரும்போரில் ஈடுபட்டிருக்கையில் அந்நிலையில் அவர்களுக்கு உதவி செய்வதை விடுத்து, ஆட்சிமுறைச் சீர்திருத்

தங்களென்று தொல்லை கொடுப்பது சரியன்று என்று காங்கிரசின் முக்கியத் தலைவர்கள் பலரும் கருதினர்கள். அன்னிபெசன்டின் கருத்து நேர் மாறுக இருந்தது. பிரிட்டிஷார் தொல்லைகளில் சிக்கிய நேரத்தில் தான் இந்தியா தன் உரிமைக்குரலை உரத்து எழுப்பவேண்டும் என்று அவர் உறுதியாக மொழிந்தார். 67 வயது நிரம்பிய அந்த மூதாட்டி ஓர் இளம் பெண்ணுக்குரிய உற்சாகத்துடனும் ஒரு போர் வீரனுக்குரிய துணிவுடனும் நாட்டு விடுதலைக்கான போர்க்களத்திலிறங்கினர். சுதந்திரம் பெற இந்தியருக்கு உரிமையுண்டு என்று அவர் உரத்த குரலில் முழக்கினர். சோம்பலையும் உறக்கத்தையும் உதறித் தள்ளி 'ஹோம் ரூல்' இயக்கத்தை வலிமை பெறச் செய்ய மக்களைக் கூவி அழைத்தார். விழித்தெழுந்த இந்திய மக்கள், அன்னிபெசன்டின் தலைமையில் அணி திரண்டார்கள். இவ்வாறுக, அப் பெருமாட்டி இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முதற்பாடத்தைத் துவக்கிவைத்தார். அன்னிபெசன்டை ஆசிரியையாகக் கொண்டு சென்னையில் வெளியாகத் தொடங்கிய 'நியூ இந்தியா' பத்திரிகை இப் புதிய இயக்கத்துக்கான கருவியாகத் திகழ்ந்தது. 'ஹோம் ரூல்', 'சுயாட்சி' என்ற சொற்கள் நாடு முழுவதும் எதிரொலித்தன.

'ஹோம் ரூல் லீகி'ன் கிளைகள் பல இடங்களில் நிறுவப்பெற்றன. மலபாரிலும் ஒரு கிளை தோன்றியது. அந்தக் கிளைக்குச் செயலாளனாக என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். அதற்கு முன்னரே, நான் காங்கிரசின் செயலாளனாகவும் பொறுப்பேற்றிருந்தேன். அக்காலத்தில்தான் மலபாரில் காங்கிரசின் நிலையான இயக்கம் செயல்படத் தொடங்கியிருந்தது.

நான் கோழிக்கோட்டில் 'பிராக்டிஸ்' தொடங்குவதற்குச் சில நாட்கள் முன்பே, கே. மாதவன் நாயரும் மஞ்சேரியிலிருந்து கோழிக்கோட்டுக்குத் தொழில்புரியப் பெயர்ந்து வந்திருந்தார். திறமைசாலியான வக்கீல் என்று அவர் பெயர் பெற்றிருந்தார். மலையாளத்தில் நன்கு உரையாற்ற வல்லவரான அவருக்குக் கவிதைப் பயிற்சியும் உண்டு. பொதுத்தொண்டில் பங்கேற்றுச் செயல்புரியும் இயல்பும் ஆற்றலும் மாதவன் நாயரிடம் அமைந்திருந்தன. மாலையில் உலாவச் செல்கையில் பெரும்பாலான நாட்களிலும் அவர் என்னையும் கூட்டிச் செல்வார். எங்களிடையே அவ்வாறு வளர்ந்த நட்பு, பொதுவாழ்வில் எங்களை இணை சேர்க்க வகை செய்தது.

அச்சுதன் வக்கீல் எங்களுடைய குழுவினரில் இன்னொரு நண்பர். சுயாட்சி இயக்கம் உயர்ந்த சாதியினருடைய இயக்கம்; தாழ்ந்த சாதியினராகக் கருதப்படுவர் அதில் பங்கு கொள்வது அவர்களுடைய விருப்பத்துக்குகந்ததல்ல என்பது அன்றைய 'மிதவாதி' பத்திரிகை

ஆசிரியராக இருந்த கிருஷ்ணன் வக்கீலின் கருத்து. அச்சுதன் வக்கில் அந்தக் கருத்தைப் பொருட்படுத்தாமலே ஹோம் ரூல் இயக்கத்துக்கு ஆதரவாக எங்களுடன் இணைந்தார். அன்று தொடங்கிய பொதுத் தொண்டை இறுதிவரையிலும் அவர் தொடர்ந்தாற்றினர்.

புகழ்பெற்ற மஞ்சேரி ராமய்யர், மலபார் ஹோம் ரூல் இயக்கத்தின் உயிர்நாடியாகத் திகழ்ந்தார். நகைச்சுவை ததும்பும் அவருடைய உரைகளும், துணிச்சலான செயல்களும், நட்புறவோடு பழகும் இயல்பும், மலபார் ஹோம் ரூல் இயக்கத்துக்கு வலுவூட்டின. அன்னி பெசன்ட் அம்மையைப் போற்றி அவர் வழி நடந்த ராமய்யர், அப் பெருமாட்டிக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யச் சித்தமாக இருந்தார்.

அரசியல் விஷயங்களைத் தவிர்த்து, வேறு வகைகளில் புகழ்பெற்ற சில மனிதர்களைப் பற்றியும் இங்குக் குறிப்பிடுகிறேன். மலபார் முழுதும் பொதுமக்களுக்கு அறிமுகமாகியிருந்த உதவி கலெக்டர் 'வர்கீஸ்' பொதுமக்கள் விரும்பிய அரசாங்க அதிகாரியாக இருந்தார். அவர் ஆங்கிலத்திலும் மலையாளத்திலும் அழகாகப் பேச வல்லவர். உண்மையாளரும் தெய்வபக்தி மிகுந்தவருமான வர்கீஸ், பொது மக்கள் மட்டுமன்றி, அரசாங்க மேலதிகாரிகளுடைய அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவராக இருந்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விரோதமாக, ஐயம்தோற்றுவிக்கக்கூடிய நிலையிலிருந்த இயக்கத்துடன் அவரால் இணக்கம் காட்ட முடியவில்லை. அன்று நிலவியிருந்த நாட்டுச் சூழலை உன்னிப் பார்த்தால், அவருடைய மனநிலையை நன்கு புரிந்து கொள்ள முடியும். பதவியிலிருந்து அவர் ஓய்வுபெற்று, பென்ஷன் பெறும் நிலையில், மக்கள் பலர் அவருடைய அறிவுரைகளையும் ஆதரவை யும் நாடிச்சென்றனர்.

வர்கீஸ் என்னுடைய தந்தையின் உற்ற நண்பர். அவ்வகையில் நான் கோழிக்கோட்டில் தொழில் புரியத் தொடங்கிய பிறகு பல சமயங்களில் அவரைக் காண்பதுண்டு. நாட்டுரிமை பற்றிய என்னுடைய கருத்துக்கள் அவரை வருந்தச் செய்திருக்கின்றன. எனினும், என்னுடைய நல்வளர்ச்சியில், அவர் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். நீண்ட வெண்மையான கோட்டும் சராயும் அணிந்து, பெரிய தலைப்பாகையுடன், எவரையும் கவரக்கூடிய தொரு புன்னகை விளங்கும் முகத்தினராக வர்கீஸ், கலெக்டர் அலுவலகத் துக்கு வருவதை ஒருமுறை கண்டாலே போதும்; மறக்க முடியாது.

நெடுங்காடி பாங்கின் ஸ்தாபகர் டி. ஆர். அப்பு நெடுங்காடி, அக் காலத்தில் கோழிக்கோடு வக்கீல்களிடையே பிரபலமாக விளங்கியவர். நான் கோழிக்கோட்டில் தொழில் செய்யத் தொடங்கிய நாட்களில்

அவர் அரசாங்க வக்கீலாக இருந்தார். வேலையிலிருந்து ஓய்வு பெற்றதும் நெடுங்காடி பாங்கைத் தோற்றுவித்து, அதை நிலைநிறுத்தும் பணிகளிலேயே ஒன்றிப்போனார். வெள்ளையரிடமும் அவர்களுடைய பழக்க வழக்கங்களிலும் நெருங்காடி மிகுந்த மோகம் கொண்டவர். காங்கிரஸ் என்றோ, தேசிய இயக்கமென்றோ அவருக்கு எந்தவிதமான ஈடுபாடும் கிடையாது. இந்தியர் சுயாட்சி உரிமை கொள்ள உகந்தவர்கள் என்ற நம்பிக்கையும் அவருக்கு இல்லை. செயல் திறமையும் தொழிற்பாங்கும் மரியாதை கூடிய பழகுமுறையும் நெடுங்காடியை ஒரு புகழ்பெற்ற வங்கியின் உரிமையாளர் என்ற நிலைக்கு ஏற்றி, மேன்மையளித்தன. மலையாள மொழியில் முதல் புனைகதை ஆசிரியர் என்ற நிலையிலும் அப்பு நெடுங்காடி புகழ்பெற்றார்.

மக்களுக்குச் சுமாராகத் தெரிந்திருந்த இன்னொரு தனிமனிதர், 'மிதவாதி' பத்திரிகையாசிரியர் ஸி. கிருஷ்ணன். அவர் வக்கீலாக இருந்தும் தொழிலில் அவ்வளவாக ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. தன் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுடைய நிலையை உயர்த்த அவர் முனைந்து பாடுபட்டார். தாழ்த்தபபட்டவர்களுடைய நிலைமை மாறுமுன் இந்தியா சுதந்திரம் பெறுமானால், அது உயர்ந்த சாதி மக்களுடைய ஆட்சியாகத்தான் இருக்குமென்பதும், இருதரப்பினருக்கும் அது நலம் பயக்காது என்பதும் கிருஷ்ணனுடைய கருத்து. அரசியல் விஷயங்களில் நாங்கள் இருவரும் ஒத்துப் பணியாற்றுவது கடினமாக இருந்தபோதிலும், தீண்டாமை ஒழிப்பைப்பற்றி எங்களிடையே கருத்துவேற்றுமை இல்லை. அந்நாள், கோழிக்கோட்டில், கோயில் முன்னிருந்த சாலையில்கூட தாழ்ந்த சாதிக்காரர் நடக்க முடியாது. அப்படி நடப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கானதோர் அறிவிப்புப் பலகையும் அங்கு இருந்தது.

இந்த அநீதியைத் தகர்த்தெரியவேண்டும் என்று நாங்கள் உறுதி பூண்டோம். ஒருநாள் மஞ்சேரி ராமய்யரும், கே. மாதவன் நாயரும், ஸி. கிருஷ்ணனும், நானும், தடை விதிக்கப்பெற்ற சாலையில் சென்றோம். ராமய்யருக்கும், மாதவன் நாயருக்கும், எனக்கும் அந்த வழியில் நடப்பதற்குத் தடை ஏதுமில்லை. ஸி. கிருஷ்ணனை எவரேனும் தடுப்பார்களானால், அவருக்கு ஆதரவளிக்கவேண்டும் என்றே நாங்கள் எல்லோரும் சேர்ந்து நடந்தோம். அன்று விரும்பத்தகாத நிகழ்ச்சி ஒன்றும் நடக்கவில்லை. என்றாலும் அத்தகைய சட்டத்தை மீறும் நடவடிக்கையை மேற்கொள்ள, கிருஷ்ணன் விரும்பவில்லை.

வெண்மையான முழுச்சராயும், கருப்புக்கோட்டும், சரிகைத் தலைப்பாகையும், சந்தனப் பொட்டுமாக ஸி. கிருஷ்ணன், வழக்குரைஞர் சங்க அறையில் வந்தமர்ந்தால் சமுதாயப் பிரச்னைகளைக் குறித்துப் பேசாம

லிருக்க மாட்டார். காங்கிரசையும், ஹோம் ரூல் இயக்கத்தையும் அவர் வெறுத்தார் என்றே கூறவேண்டும். சாதி வேற்றுமைகளை ஒழிக்காமல், அரசுரிமை பெறுவது இயலாதது என்று அவர் வாதம் செய்தார். விவாதம் எத்துணைக் கடுமையாகத் தொடர்ந்தாலும் கிருஷ்ணனுக்குக் கோபம் வராது. அவர் முகத்தில் அப்போதும் புன்னகை விளங்கும். இன்று உயிரோடிருந்தால், கிருஷ்ணனுடைய கருத்து யாதாயிருக்கும் என்ற சிந்தனை சுவாரசியமாக இருக்கும். கருத்து எப்படி இருந்தாலும், கிருஷ்ணன் எனக்கு மிகவும் உற்றதொரு நண்பர்.

1916ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், பாலக்காட்டில், முதல் மலபார் ஜில்லா மாநாடு கூடிற்று. அதற்கு அன்னிபெசன்ட் அம்மையார் தலைமை தாங்கினர். சுயாட்சி உரிமைபற்றிய தீர்மானத்தைக் கூட்டத்தின் முன் கொண்டுவந்து நான்தான் பேசினேன். அத்தகைய பேச்சுக்கள் அரசாங்கத்துக்கு விரோதமானவை என்றும், அது என் தொழில் முறையில் இடையூறு விளைவிக்கக்கூடும் என்றும் சில உறவினர்களும் நண்பர்களும் எனக்கு எடுத்துரைக்காமலில்லை.

1917ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அடுத்த மாநாடு கோழிக்கோட்டில் கூடியபோது, நான் மாநாட்டின் செயலாளர்களில் ஒருவனாகவே இருந்தேன். கே. பி ராமன் மேனன், வரவேற்புக் குழுத் தலைவர். கோழிக்கோடு முன்னணி வக்கீல்களிடையே புகழ்பெற்ற சட்ட நிபுணராக விளங்கியவர் அவர். முழு மூச்சுடன் பொது வாழ்க்கையில் ஈடுபட இயலாதவரெனினும், கனிவுடன் எங்களுக்கு அறிவுரை கூறுவதற்கும் ஆதரவு நல்குவதற்கும் ராமன் மேனன் தயங்கியதில்லை.

மாநாடு கூடுவதற்கு 'மாளுஞ்சிர' மைதானத்தில் பந்தல் போடுவதற்கு அந்நாளைய கலெக்டர் 'இன்னீஸ்' ஒப்புதல் தரவில்லை. அதனால் ராமன் மேனனின் இல்லத்தின் முன் அதற்காக அமைத்த பந்தலில் மாநாடு கூடியது. ஸி. பி. ராமசுவாமி ஐயர் அக் கூட்டத்துக்குத் தலைமைப் பொறுப்பேற்றிருந்தார். சிறப்பு அழைப்பினராக, அன்னிபெசன்டும் மாநாட்டுக்கு வருகை தந்திருந்தார். அன்று அவர்களுக்கு, கோழிக்கோடு மாபெரும் வரவேற்பளித்தது. இவ்வாறு, ஹோம் ரூல் லீக் பணிகளிலும், மாநாடு, பொதுக்கூட்டங்களென்றும் என்னுடைய பெரும் பொழுதும் போய்க்கொண்டிருந்தது! இதாழிற்களத்தில் முழுக் கவனமும் செலுத்த வேண்டிய காலத்தில், அரசாங்கத்துக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடும் என்னுடைய விவேகமற்ற சிறு பிள்ளைத்தனம் குறித்து எனக்கு வேண்டியவர் பலரும் அறிவுரை கூறினர்கள். எனினும் தடுக்க இயலாததொரு வேகத்துடன் அரசியல் விஷயங்கள் என்னைக் கவர்ந்திழுத்தன.

'டாலிடிக்ஸில்' நான் பெரிய சூரன் என்று மந்தத்துக் கிருஷ்ணன் நாயர் அறிந்தார். அந்நாள் கிருஷ்ணன் நாயர் திருவிதாங்கூர் திவான். அவர் எனக்கு அப்போது எழுதிய கடிதம் :

"தொழில் புரியத் தொடங்கும் காலத்திலேயே அது மேன்மேலும் செம்மையுற அடிநிலையை உறுதியாக்க வேண்டும். கேஸ்களை ஊன்றிப் படித்து, அது சம்பந்தமான சட்ட நுணுக்கங்களை ஓர்ந்து தெளிந்து கொள்ள வேண்டும். கட்சிக்காரர்களுடன் மரியாதையுடன் பழகி, நீதிபதிக்கு அலுப்புத்தட்டாமல் விஷயங்களை உணர்த்தவேண்டும். இதெல்லாம் தொடக்கத்திலேயே பழகினால்தான் தொழிலில் மேன்மை பெற முடியும். பொது மக்களுக்குத் தொண்டாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் நாளடைவில் உண்டாகும். அப்போதுதான் அந்தக் களத்தில் நுழைய வேண்டும். இல்லையேல், 'பிராக்டிஸே இல்லை' என்றாகிவிடும்" என்றெல்லாம் அவர் எனக்கு உணர்த்தியிருந்தார். இக் கடிதம் என்னைச் சிறிது சோர்வு கொள்ளச் செய்தது.

தொழிலில் மேன்மை பெறும் ஆசையும், பொதுவாழ்வில் முழுதுமாக ஈடுபடுவதில் உள்ள உற்சாகம் நிறைந்த ஆர்வமும் ஒருங்கிணையச் செயல்படுவது சாத்தியம்தானா என்ற வினா அக்காலத்தில் என்னுள் மூண்டு மிகுதியாக அலைத்துக்கொண்டிருந்தது.

6

ஹோம் ரூல் இயக்கம்

நான் தொழில் புரியத் தொடங்கிய காலத்திலேயே குடும்பப் பொறுப்புக்கள் எனக்கு மிகுதியாக இருந்தன. என்னுடைய கல்விப் பயிற்சி நிறைவேறு முன்பே தந்தை இறந்துவிட்டார். அதனால் என் வெளிநாட்டுக் கல்விக்கான செலவுக்குக் கொஞ்சம் கடன் வாங்க வேண்டி இருந்தது. அதை அடைக்க வேண்டிய பொறுப்பு என்னை வந்தடைந்தது. வாழ்க்கைச் செலவுக்குத் தேவையாக இருந்த பொருளீட்டுவதற்கே திணறிக்கொண்டிருந்த அக்காலத்தில் இந்தப் பொறுப்பு வேறு எனக்குத் தொல்லையாக இருந்தது. பல நண்பர்கள், பொது வாழ்வில் செலுத்திய கவனத்தைத் தொழில் முழுதுமாக ஈடுபடுத்தும்படி எனக்கு எடுத்துரைத்தனர். தந்தை உயிருடனிருந்தால் அரசாங்கத்துக்கு விரோதமான நடவடிக்கைகளில் நான் ஈடுபடுவதற்கு அநுமதித்திருக்க மாட்டாரென்றும், அவருக்குப் பின் குடும்பத்தைக்

கொண்டு செல்லும் பொறுப்பு எனக்கு இருக்கிறதென்றும், அப் பொறுப்பை நிறைவேற்றுவதே எனது முதற் கடமை என்றும் அவர்கள் எனக்குப் பலவாறுக நினைவுறுத்தினர்கள். அந்தக் கடமைகளை நான் மறந்துவிடவில்லை. அவற்றை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளைச் செய்யாமலுமில்லை. ஆனல், பொது வாழ்விலிருந்து முற்றிலும் விடுபடுவது என்னல் இயலாததாக இருந்தது. தொழிலுக்குக் குந்தக மின்றி, பொதுவாழ்விலும் ஈடுபட முடியும் என்று எனக்கு நம்பிக்கை இருந்தது. அதற்குரிய வகையில் என் நேரத்தை ஒழுங்கு செய்து கொள்வதென்று உறுதிகொண்டேன்.

காலை ஐந்து மணிக்கெழுந்து சட்ட நூல்களைப் படிப்பேன். நீராடிய பின், சிறிது நேரம் மனதுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கக்கூடிய சில நூல்களைப் படிக்கும் வழக்கமுண்டு. பிறகு, விசாரணைக்கு வரும் வழக்கு விவரங்களைப் பார்ப்பதற்கும், கட்சிக்காரர்களைக் கண்டு பேசு வதற்கும் நேரம் ஒதுக்கினேன். வழக்கு இருந்தாலும் இல்லாவிட் டாலும், அன்றுடம் கோர்ட்டுக்குச் செல்வேன். அங்கிருந்து திரும்பிய பின் செய்திப் பத்திரிகைகளைப் படித்தறிந்துகொள்வேன். ஐந்து மணிக்கு வெளியே உலவச் செல்வேன்; இல்லையேல் பொதுக்கூட்டங்கள் இருந்தால் அங்குச் செல்லுவேன். இரவு உணவு கொண்டபின் இரண்டு மணி நேரம் படிப்பேன். இலக்கியம், வரலாறு, அரசியல், வாழ்க்கைச் சரிதங்கள், தத்துவ இயல் என்று பல விஷயங்களைக் குறித்தும் படித்தறியும் ஆர்வமுடையவன் நான். சீட்டாட்டம், கிளப் போன்ற உல்லாச வாழ்க்கையில் எனக்கு அந்நாளிலும் ஈடுபாடிருந்த தில்லை; இந்நாளிலும் இல்லை.

சில நண்பர்கள் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஒரு இடத்தில் கூடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். முன்பே தீர்மானம் செய்து கொண்டதொரு பொருள்பற்றி அப்போது அங்கு விவாதிக்கும் வழக்கத்தை மேற்கொண்டோம். இக்கூட்டத்துக்குப் பெரும்பாலும் இளைஞரான வழக்குரைஞர்கள் வருவார்கள். ஒவ்வொரு ஞாயிறன்றும் ஒவ்வொருவருடைய வீட்டில் கூட்டம் கூடும். தேநீருக்குப்பின் விவாதம் தொடங்கும். இரண்டு மணி நேரம் நீடிக்கும். இந்த ஏற்பாட்டின் விளைவாக, இளைஞரான வக்கீல்களுக்கு, பொதுத் தொண்டு குறித்துச் சிந்தனை செய்வதற்கும் அறிந்து கொள்வதற்கும் உற்சாகம் பிறந்தது. காங்கிரஸ் கமிட்டிக்கும், ஹோம் ரூல் கமிட்டிக்கும் இந்த அமைப்புடன் எவ்விதத் தொடர்பும் இல்லை. என்றாலும், அவற்றில் ஈடுபாடு கொள்வ தற்குரிய வழி அமைத்துத் தந்தது, அந்த ஏற்பாடு. இளைஞரைத் தவிர, சில முதிய வக்கீல்களும் அங்கு வந்து கலந்துகொண்டனர். வக்கீல்க ளல்லாதவர்களும் வருவதுண்டு.

1916ஆம் ஆண்டு, லக்னௌ நகரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டுக்குத் தான் நான் முதன் முறையாகச் சென்றேன். ஒரு காங்கிரஸ் மாநாடு என்று நான் சென்றது அப்போதுதான். அம்பிகாசரண் மஜூம்தார் மாநாட்டுத் தலைவர். அக்கூட்டத்தில்தான் நான் முதன் முதலாக மகாத்மா காந்தியையும், லோகமான்ய திலகரையும், பாபு சுரேந்திர நாத் பானர்ஜியையும் கண்டேன். முதல் உலகப் போர் நடந்துகொண் டிருந்ததால், காங்கிரஸ்காரரை மகிழ்விக்கும் எண்ணத்துடன், அந்நாள் ஐக்கிய மாகாண கவர்னராக இருந்த ஸர் ஜேம்ஸ் மெஸ்டன், காங்கிரஸ் கூட்டத்துக்கு வந்து உரையும ஆற்றினர். காங்கிரஸ் தோன்றிய ஆண்டிலேயே தாம் 'சர்வீஸி'ல் சேர்ந்ததாகவும், அந்தப் பெரிய ஸ்தாபனத்தின்மீது தமக்கு மிகுந்த மரியாதை உண்டென்றும் அவர் அப்போது மொழிந்ததை நான் நினைத்துப் பார்ப்பேன். அவை யோரை மகிழ்விப்பதற்காகக் கூறிய வெற்று வார்த்தைகள் அவை.

அன்னிபெசன்டின் தலைமையில் தோன்றிய ஹோம் ரூல் இயக்கம் நாளுக்கு நாள் வலிமை பெற்றுத் திகழ்ந்தது. அந்த இயக்கம், போர்க் கால நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதாகக் கூறி, அன்னி பெசன்டையும், அவருடைய கூட்டாளிகளாயிருந்த அருண்டேல், வாடியா ஆகியோரையும் காவலில் வைக்க அரசாங்கம் முடிவு செய்து அவர்களைக் கைதுசெய்தது. அப்போது, அத்தலைவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நாடு முழுவதும் கிளர்ச்சி தோன்றியது. கோழிக் கோட்டிலும், அதற்கான கோஷங்களை எழுப்பிக்கொண்டு மக்கள் நகர் வலம் வந்தனர். பொதுக்கூட்டமும் கூடிற்று. காங்கிரஸ் கமிட்டிக் கும் ஹோம் ரூல் கமிட்டிக்கும் நான் செயலாளனாக இருந்ததால் கோஷ ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நான் ஏற்பாடு செய்தவையே என்று ஜில்லா அதிகாரிகள் கருதினர்கள். என்னுடன் தோழமை கொண்டவர்களைக்கூட அதிகாரிகள் சந்தேகக் கண்கொண்டு பார்த் தார்கள். என்னுடைய நண்பர்களாயிருந்த சில அதிகாரிகளும் வேறு சிலரும் என் வீட்டுக்கு வருவதற்கும், என்னுடன் பேசுவதற்கும் விரும்பாமல் ஒதுங்கினர். 'வழிதவறிப்போன இளைஞன்' என்று அவர் கள் என்னைப்பற்றி நினைத்தனர். அந்தக் கருத்தை உறுதியாக்கும் வகையில் அக்காலத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

சென்னை கவர்னர், கோழிக்கோட்டுக்கு விஜயம் செய்வதாக இருந் தார். அப்போது, போர் நிதிக்காக. அவரிடம் பொதுமக்களின் சார்பாக ஒரு பணக்கிழி வழங்குவதற்காகச் சிலர் தீர்மானம் செய்தார்கள். அதற்காக, கோழிக்கோடு டவுன் ஹாலில் ஒரு கூட்டம் கூட்டினர்கள். அந்நாளையப் பிரமுகர்கள் சிலரது விருப்பத்துக் கிணங்க கோழிக்கோடு முனிசிபல் சேர்மன் ஸி. வி. நாராயண மேனன்

மக்களை அழைத்துக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். பொது மக்களின் பேரில் நிதியளிப்பதாக ஒரு தீர்மானத்தைப் பொதுக் கூட்டத்தில் கொண்டுவந்தால், நான் அதை எதிர்ப்பேன் என்று முன்னதாகவே நாராயண மேனனிடம் தெரிவித்திருந்தேன். இந்தச் செய்தியே டவுன் ஹால் கூட்டத்துக்கு மக்களைப் பெருந்திரளாகக் கவர்ந்திழுத்தது. கலெக்டர் 'இவான்ஸ்' கூட்டத்துக்குத் தலைமைதாங்கினார். ஜில்லா ஜட்ஜ் ஜாக்ஸன், போலீஸ் சூபரின்டெனடெண்ட் போன்ற பெரிய அதிகாரிகளுடன், திவான் பகதூர் கேளு ஈராடி கவளப்பாற மூப்பில் நாயர் முதலிய ஊர்ப் பிரமுகர் பலரும் அங்கு வந்திருந்தனர். அவர்கள் அனைவருமே மேடையில் அமர்ந்திருந்தனர். நானும் மஞ்சேரி ராமய்யரும், கே. மாதவன் நாயரும் முன்வரிசையில் அமர்ந்திருந்தோம். எவரையேனும் நிகழவிடாமல் தடுக்கும் பொருட்டு முன்னதாகவே சில படைவீரர்களை டவுன் ஹாலுக்கு வெளியே நிறுத்தி வைத்திருந்தனர். கலெக்டர் கூட்டத்துக்கு வந்து தலைவருக்குரிய இருக்கையில் அமர்ந்தார். கூட்டத்தின் நோக்கத்தை விவரிக்கும் வகையில் ஓர் இளைஞன் பேச, கூட்டம் தொடங்கியது. முதல் தீர்மானத்தை முன்மொழிய வேண்டி, தலைவர் கவளப்பாற மூப்பில் நாயரைத் தலைவர் அழைத்தார்.

கவர்னர் கோழிக்கோடு வருகிறபோது, பொதுமக்கள் பேரில் போர் நிதிக்காக ஒரு பணக்கிழி அளிப்பதாக முடிவு செய்திருந்ததை ஒட்டிய தீர்மானம் அது. அந்தத் தீர்மானத்தை திவான் பகதூர் கேளு ஈராடி வழிமொழிந்தார். இது நடந்த உடனே, நான் எழுந்து தலைவரிடம் அந்தத் தீர்மானத்தைப்பற்றிச் சில வார்த்தைகள் பேச விரும்பி அநுமதி கோரினேன். தலைவர் இசைவு தந்தார். நான் மேடையில் ஏறினேன். இரண்டு நிமிடங்களுக்குத் தொடர்ந்து ஒலித்த கையொலி என்னைக் கிளர்ச்சிகொளைச் செய்தது. நான் மலையாளத்தில் பேசத் தொடங்கினேன். 'மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே' என்று நான் விளிக்கையிலேயே தலைவருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் உடனே தாம் நான் மலையாளத்தில் பேசுவதற்குச் சம்மதிக்கவில்லை என்று அறிவித்தார். 'இங்கே குழுமி இருக்கும் மக்கள் மலையாளம் பேசுகிறவர்கள். ஆங்கிலமொழி யறியாத பலர் இங்குக் கூடியிருக்கின்றனர். அவர்கள் பேரில் கொண்டு வந்து உறுதி செய்யும் தீர்மானம் இன்னதென்று அறிந்துகொள்ளும் உரிமை அவர்களுக்கு இருக்கிறது. அதனால் தான் நான் மலையாளத்தில் பேசுகிறேன்' என்று நான் மறுமொழி பகர்ந்தபோது, ஹாலின் உள்ளும் வெளியுமாகக் குழுமியிருந்த மக்களுடைய கையொலி, அந்தச் சூழல் அதிர எதிரொலித்தது. என்ன நடக்கும் என்றறியாத மக்கள் பரபரப்படைந்தார்கள். 'மலையாளத்தில்!

மலையாளத்தில்!' என்று கூவினர்கள் தலைவர். 'என்ன நேர்ந்தாலும், மலையாளத்தில் பேசுவதற்கு அனுமதிக்க மாட்டேன்' என்றார் கடுமையாக. நானும், 'அப்படியானால் தன்மானமுள்ள மலையாளிகள் இக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கில்லை' என்று கூறி, டவுன் ஹாலை விட்டு வெளியேறினேன். ஹாலில் குழுமியிருந்த பெரும்பாலான மக்களும் என்னைத் தொடர்ந்து வெளியேறினர். அரசாங்க அதிகாரிகளும் அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களுமே அங்கு எஞ்சியிருந்தனர். நகரில் பெரியதொரு பரபரப்பைத் தோற்றுவித்த நிகழ்ச்சி இது. இதற்குப்பின் என்னைக் கைது செய்யப் போகிறார்கள் என்ற வதந்தியும்கூடச் சில நாட்கள் வரை நகரில் அடிபட்டது.

வெள்ளையர்களான அதிகாரிகள் என்னிடம் மிகுந்த கோபம் கொண்டிருக்கின்றனர் என்று பலரும் நம்பினர்கள். அதனால் அவர்கள்முன் விசாரணைக்கு வரும் வழக்குகளில் ஆஜராவதற்கு என்னை நாடி வருபவர் குறைந்தனர். அந்நாள் எல்லா முக்கியமான துறைகளிலும் வெள்ளையரே தலைமைப் பதவிகளில் இருந்தனர். என்றாலும் சில தனிப்பட்ட காரணங்கள் கொண்டு வெள்ளையரின் முன் நான் வழக்கு நடத்தும் சந்தர்ப்பங்களும் வாய்த்தன. அத்தகையதோர் வழக்கு கோழிக்கோடு ஸப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் 'ஹாலி'ன் முன் விசாரணைக்கு வந்தது.

முகமதியரிடையே அஹமதியர் என்றொரு பிரிவினருண்டு. அவர்களிடையே மிகுந்த அக்கறை தோற்றுவித்த கேஸ் அது. குற்றவாளித் தரப்பில் சுமாராக இரண்டு நல்ல வக்கீல்கள் ஆஜராயிருந்தனர். எதிர்த்தரப்பு சாட்சிகளைச் சரியாக விசாரணை செய்ய மாஜிஸ்ட்ரேட் அவர்களை அனுமதிக்கவில்லை. அக்காரணம் கொண்டு, இரண்டு நாள் வழக்கு விசாரணைக்குப் பிறகு அவர்கள் என்னிடம் வந்தார்கள். அவர்கள் விரும்பியவண்ணம் நான் அந்த வழக்கை வாதிக்க ஏற்றுக் கொண்டேன். அந்த வக்கீல்களும் எனக்கு உதவியாக இருந்தனர். மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணை நடந்தது. மக்கள் உள்ளும் புறமுமாக நிறைந்திருந்தனர். பதினேரு மணிக்கு விசாரணை தொடங்கியது. முதல் நாள் விசாரணை செய்த சாட்சியிடம் நான் மேலும் சில கேள்விகள் கேட்க அனுமதியளிக்க வேண்டுமென்று கோர்ட்டாரிடம் நான் கோரினேன். மாஜிஸ்ட்ரேட் அதற்கு அனுமதி அளிப்பதற்கில்லை என்று மறுத்தார். நான் மீண்டும் 'சில அரபிச் சொற்களுக்கு சாட்சியை விசாரணை செய்தே பொருள் தெரிந்துகொள்ள வேண்டும்' என்றேன். மாஜிஸ்ட்ரேட், 'சாட்சிக்கு அரபிமொழி தெரியாது' என்றார். 'அப்படியானால் அதை அந்த சாட்சியே உரைக்கட்டும்?' என்றேன் நான் பிடிவாதமாக. மாஜிஸ்ட்ரேட் என்னை உறுத்து நோக்கி

னர். 'முடியாது, நான் ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன்!' என்னூர் கோபக்குரலில். 'அப்படியானால், நான் இக் கேள்வியைக் கேட்டே னென்றும் அதைக் கோர்ட் அநுமதிக்கவில்லை என்றும் பதிய வேண்டும்' என்றேன் நான். அதற்கும் மாஜிஸ்ட்ரேட் இசையவில்லை. அக் கேள்வி யுடன் ஒரு மனு எழுதி, அப்போது நான் அவரிடம் கொடுத்தேன். அவர் அதைப் படித்துவிட்டு, 'கோர்ட்டு அனுமதிக்காத கேள்வி களுக்கெல்லாம் மனு எழுதித்தருவதற்காகவா நீங்கள் விசாரணை செய்ய வந்தீர்கள்?' என்று கேட்டார். 'அந்த நிலை வேண்டி வந்தால் தயாராகவேதான் நான் வந்தேன்' என்று மறுமொழி பகர்ந்தேன். அதை வாங்கி வைத்துக்கொண்டு சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்ய அவர் எனக்கு அநுமதியளித்தார்.

இதற்கெல்லாம் சிறிது நேரமாயிற்று. கூடியிருந்தவர் அனைவரும் மாஜிஸ்ட்ரேட்டும் நானும் வாக்குவாதம் செய்வதை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தனர். அன்று நீதிமன்றத்தைவிட்டு நான் வெளியே வந்தபோது, மிஸ்டர் ஹால் என்னிடம் வந்து, என் முதுகில் ஒரு கையை வைத்துக்கொண்டு, புன்னகையுடன் 'நான் உங்கள் கட்சிக் காரனை தண்டிக்கப்போகிறேன். பிறகு எதற்காக இந்த ஆர்ப் பாட்டங்களெல்லாம்?' என்று வினவினர். 'அது எனக்குத் தெரியும். அதனால்தான் அப்பீலுக்கு வேண்டிய சாட்சியங்களை நான் சேகரித்துக் கொள்கிறேன்' என்றேன்.

அன்று அப்படியாயிற்று.

மறுநாள் வெகு அருமையாக விசாரணை நடந்தது. மாஜிஸ்ட்ரேட் ஒரு தொந்தரவும் கொடுக்கவில்லை. மிகுந்த மரியாதையுடன் பேசினர்.

வாதங்கள் முடிந்து தீர்ப்புக் கூறுவதை அடுத்த நாளென்று தள்ளிப் போட்டார்கள். நானும் என் கட்சிக்காரர்களும் வியக்கும்வண்ணம் மாஜிஸ்ட்ரேட் என் கட்சிக்காரர்கள் குற்றவாளிகளல்ல என்று கருதி அவர்களை விடுதலை செய்தார். இளைஞனை எனக்கு அது மாபெரும் வெற்றி.

அந்த வழக்கில் நான் வெற்றி பெற்ற அதே நாளில்தான், நான் டவுன் ஹாலில் கலெக்டருடன் மோத நேர்ந்தது.

7

சீரான நாட்டுப்பணிகள்

ஒருங்கிணைந்த உறுதியான பொதுப்பணிகளை இந்தியாவில் தொடங் கியவர் அன்னிபெசன்ட் அம்மையார்தாம். 1921ஆம் ஆண்டில் தொடங்

கிய ஒத்துழையாமை இயக்கத்தைப்போன்று ஹோம் ரூல் இயக்கம் ஆற்றலுடன் பரவி வளரவில்லை என்பது உண்மைதான். என்றாலும் வெறும் சொற்பொழிவுகளால் மட்டும் அரசியல் சுதந்திரம் பெற்று விடமுடியாது; அவற்றுடன் ஒருங்கிணைந்த நிலைத்த பணிகளும் தேவை என்று கருதி மிகுந்த உற்சாகம் கொண்டு இந்தியாவில் அன்னிபெசன்ட் அவற்றைத் தொடங்கினார். சமயம் சார்ந்தும், கல்வித்துறையிலும், சமுதாய மலர்ச்சியைக் கருதியும் அதுகாறும் செயலாற்றிக் கொண்டிருந்த அன்னிபெசன்ட் அம்மையார் தேசிய அரங்கில் தோன்றியதும் விடுதலை இயக்கத்துக்கு ஒரு புத்துணர்ச்சியும் வேகமும் கூடின. அன்னிபெசன்ட் அம்மையார், தாம் பொறுப்பேற்கும் எந்தப் பணியையும் உற்சாகத்துடனும் திறமையுடனும் ஆற்ற வல்லவர். அப்பெருமாட்டியின் வியத்தகு ஆளுமைச் சிறப்பும், உழைப்பாற்றலும், சொற்றிறனும், அவருடன் நெருங்கிப் பழகியவர்களால் மறக்க இயலாத அரிய அநுபவங்கள்.

மலபாரில் ஹோம் ரூல் லீக் செயலாளன் என்ற நிலையில் எனக்கு அன்னிபெசன்ட் அம்மையைப் பலமுறைகள் காண்பதற்கும், நெருங்கிப் பழகுவதற்கும் வாய்ப்புக்கள் இசைந்தன. பலதடவைகள் நான் அவருடன் பிரயாணமும் செய்திருக்கிறேன்.

ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு ஒப்புக்கொண்டால், அவர் குறித்த நேரம் தவறாது அங்குச் சென்றுவிடுவார். முன்னுரை ஏதுமின்றிச் சொற்பொழிவைத் தொடங்கிவிடுவார் குறித்த நேரத்துக்குச் சரியாக முடித்துப் விடுவார். சொற்களும் கருத்துக்களும் தங்கு தடையின்றி, கடல் மடை திறந்தாற்போன்று வந்துகொண்டிருக்கும். செவிக்கினிய குரல் படைத்தவர். ஒரு நிமிஷம்கூட அவர் பயனற்ற பொழுதாகக் கழிக்கமாட்டார். காரிலோ, ரயிலிலோ பயணம் செய்யும் போதுகூட அவர் ஏதேனும் பணியில் ஈடுபட்டிருப்பார்.

சென்னையிலிருந்து டில்லிக்கு நான் ஒருமுறை பெசன்ட் அம்மையாருடன் பயணம் சென்றது நினைவுக்கு வருகிறது. 'ரிஸர்வ்' செய்யப் பெற்ற தனியறையில் பயணம் செய்வது அவர் வழக்கம். வீட்டில் வேலை செய்வது போன்றே யாத்திரையின்போதும் அவர் வழக்கமான பணிகளைச் செய்து முடிப்பார். அதிகாலையில் நான்கு மணிக்கே எழுந்து, நீராடி, தியானம் செய்தபின் அன்றைய பணிகளைத் தொடங்குவார். தடையின்றி வேலை தொடர்ந்து நடக்கும். அன்னிபெசன்ட் அம்மையின் நம்பிக்கைகளையும் கருத்துக்களையும் அவ்வளவாக ஏற்றுக்கொள்ளாதவர்களும்கூட அவர் ஓர் அசாதாரணத் திறமை வாய்ந்த பெருமாட்டி என்று கருதினார்கள். அவர் செயலாற்றும் நடைமுறை, அதன் ஒழுங்கு, பாங்கு ஆகிய

வற்றைப் பார்த்துக் கற்றுகொள்ளவேண்டும். ஹோம் ரூல் இயக்கத்தில் ஈடுபட்ட நாட்களில் அவருடன் பழகக் கிடைத்த அரிய வாய்ப்புக்களை நான் என் வாழ்வில் அரும்பேறாகக் கருதுகிறேன்.

1917ஆம் ஆண்டின் இறுதியில் ஆட்சிமுறைச் சீர்திருத்தம் குறித்து இந்தியருடைய நலம்நாட, அன்று இந்தியா செகரிடரியாக இருந்த மாண்டேகு இந்தியாவிற்கு விஜயம் செய்தார். அப்போது ஹோம் ரூல் லீகின் பிரதிநிதிகள் டில்லியில் அவரிடம் ஓர் அறிக்கை சமர்ப்பித்தார்கள். பெசண்ட் அம்மையாரின் தலைமையில்தான் அது நிகழ்ந்தது. அந்தப் பிரதிநிதிகளிடையே நானும் இருந்தேன். லோகமான்ய திலகர், அந்நாள், டில்லியில் மாண்டேகுவைக் காண வந்திருந்தார்.

ராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பெற்று, ஆறு ஆண்டுகள் தண்டனை அநுபவித்த பிறகு, 1914ஆம் ஆண்டில் திலகர் மீண்டும் தேசிய அரங்கில் தோன்றினார். நாடெங்கிலுமாக அவரும் ஒரு ஹோம் ரூல் லீக் துவங்கியிருந்தார். வேட்டியுடுத்து, கோட் அணிந்து, மஹாராஷ்டிர வழக்கப்படி தலைப்பாகையுடன் மேல்வேட்டி கழுத்தில் இலங்க, கையில் தடியுடன் காட்சியளித்த திலகர் அன்று மக்கள் போற்றற் குரியதொரு நாயகராகத் திகழ்ந்தார். அடர்ந்த மீசையும் ஒளிர்ந்த விழிகளும் அவருடைய போராளுமையை விளக்கின. தியாகத் திலகமாகத் திகழ்ந்த அவருடைய வாழ்க்கை வரலாறு எழுச்சியூட்டக் கூடியதாகும். திலகரும், பெசண்ட் அம்மையாரும், அந்நாளைய இந்திய தேசிய அரங்கின் இரு தனிப்பெருந் தலைவர்கள்

அந்நாளில் மகாத்மா காந்தியும் டில்லியில் இருந்தார். அரசியல் அரங்கில் அப்போது காந்தியடிகள் முழு அளவில் செயல்படத் தொடங்கியிருக்கவில்லை. கதர் வேட்டியும் சட்டையும் அணிந்து தலைப் பாகையுடன் ஒரு கதர் சால்வையும் போர்த்து அவர் பார்வையாளரிடையே வைஸ்ராயையும் மாண்டேகுவையும் பார்ப்பதற்குக் காத்து நின்றார். அன்றுதான் நான மகாத்மா காந்தியுடன் முதன் முதலாக உரையாடினேன்.

ஸி. பி. ராமசுவாமி ஐயர், ஆர். ரங்கசுவாமி ஐயங்கார், ராஜகோபாலாசாரி, சேலம் விஜயராகவாசாரி, சத்யமூர்த்தி, நரசிம்மையர் முதலிய தென்னிந்தியத் தலைவர்களை அறிமுகம் செய்து கொள்ளும் வாய்ப்பும் அப்போது எனக்குக் கிட்டியது. ஸி. பி. ராமசுவாமி ஐயர் ஹோம் ரூல் இயக்கத்தில் ஒரு முக்கியமான தலைவர். திறமை வாய்ந்த வழக்குரைஞர் என்று புகழ் பெற்ற அவர், தேசிய அரங்கிலும், இலக்கியத் துறையிலும் பிரபலமாக விளங்கினர். எந்த விஷயத்தையும் ஓர்ந்து தெளியும் அறிவாற்றல் பெற்றிருந்தார்.

எத்தகைய அவையாலும் உரையாற்ற வல்லவராகவுமிருந்தார். பிற்காலத்தில் அவருடைய பாதை வேறேர் பக்கம் திரும்பிவிட்டாலும், சுதந்திர இயக்கத்துக்கு அந்நாள் அவர் அளித்த ஆதரவும் மேன்மையும் மறக்கக்கூடியதல்ல.

ஒரு காலத்தில் ஒரே நோக்கைக் குறியாகக் கொண்டு ஒன்றிப் பணியாற்றும் தோழர்கள் நாளடைவில் கருத்து வேற்றுமை கொண்டு தனித்தனி வழிகளில் பிரிந்து செல்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். அப்போது, தம்முடைய வழியே சிறந்தது; மற்றவர் செல்லும் பாதை தவறானது என்று அவரை இகழும் இயல்பு நம்மில் பலரிடம் குடிகொண்டுள்ளது. பல்வேறு இயல்பினர் வாழும் இவ்வுலகில் மனிதன் சுதந்திர வளர்ச்சி பெற வேண்டுமென்றால், சகிப்புத் தன்மை இன்றியமையாததாகும். நாம் பிறருடைய எண்ணத் தூய்மையில் ஐயம் கொள்ளும்போது, அவருக்கு நம்முடைய உளத்தூய்மை குறித்துக் கேட்க உரிமை இருக்கிறதென்பதை மறக்கலாகாது. மிக உயர்ந்த பதவியில் இருப்பவரும்கூடச் சில சமயங்களில் சிறிதும் தயங்காமல் பிறரைக் குறைகூறுவதைச் செவியுறுகையில் வியப்பு மேலிடுவதுண்டு.

சேலம் நரசிம்மையர் அன்னிபெசன்ட் அம்மையாரின் ஆதரவாளரில் முக்கியமானவர். ஹோம் ரூல் இயக்க நாட்களில் மிகுந்த உற்சாகத்துடன் பணியாற்றியவர். ஒரு சமயம் அவருடைய இரு புதல்வியரும் அகால மரணமடைந்தனர். அந்தப் பெருந்துயர் தாளாத அவர் இவ்வுலக இயலைத் துறந்து தன் சிந்தையை ஆன்மீக நெறியில் செலுத்தலானார். ஸாயி பாபாவின் சீடராகி, நரசிம்மஸ்வாமி என்ற நாமம் பெற்றார். 1957ஆம் ஆண்டில் அவர் பூத உடல் நீத்தார். ஒருகால் பொதுவாழ்க்கையில் அவருக்குக் கிடைத்திராத மன-அமைதி அந்த அமைதியான துறவு நெறியில் கிடைத்திருக்கக்கூடும். சிலர் வாழ்க்கையை ஒரு போர்க்களமாகக் கருதுகின்றனர். வேறு சிலர் அதைப் பயிற்சிக்களமாகவும் நினைக்கின்றனர்.

எஸ். சத்யமூர்த்தி, அருமையாகச் சொற்பொழிவாற்ற வல்லவர். தமிழிலும் ஆங்கிலத்திலும், தங்குதடையின்றி, ஒரேமாதிரியான சரளத்துடன் உரையாற்றும் அருந்திறன் அவருக்கு உண்டு. பொதுக்கூட்டமானாலும், சட்ட நிர்மாணச் சபையானாலும், பல்கலைக்கழக செனட்டானாலும், பொருளை நன்கு ஓர்ந்து தெளியாமல் அவர் பேசமாட்டார். அஞ்சா நெறியும், உற்சாகம் ததும்பும் இயல்பும் கொண்ட சத்யமூர்த்தியின் அகால மறைவு, தேசீய பாரதத்துக்குப் பெரும் இழப்பாகும்.

டில்லியில் நான் ஸர் ஸி. சங்கரன் நாயரையும் கண்டேன். அவர் அந்நாள் வைஸ்ராயின் எக்ஸிக்யூடிவ் கௌன்ஸிலில் ஓர் உறுப்பினராக

இருந்தார். கோழிக்கோடு டவுன் ஹாலில் நான் கலெக்டர் 'இவான் ஸு'டன் மோதிக்கொண்ட செய்தியறிந்து அவர் என்னைப் பாராட்டி வாழ்த்தினார். நடந்த சம்பவங்களை விவரமாகக் கூறும்படி விழைந்தார். 'என்னுடைய இளம் பருவத்தில் கலெக்டர் என்றால் எப்படியெல்லாம் நினைத்திருந்தோம்! நீங்கள் செய்தது மிக நல்ல காரியம். நம்முடைய தன்மானத்தை ஒருபோதும் விட்டுக்கொடுக்கலாகாது!' என்று மிகவும் இயல்பான மரியாதைக் குரலில் அவர் மொழிந்தார்.

'பிலாத்தி விசேஷ'த்துக்குக் கிடைத்த வரவேற்பும் உற்சாகமும், என்னை கோபாலகிருஷ்ண கோகலே, லோகமான்ய பாலகங்காதர திலகர் ஆகியோரது வாழ்க்கை வரலாறுகளையும் எழுதி வெளியிட ஊக்கமளித்தன. தொழில் புரிந்து ஈட்டிய வருமானம் கொண்டு மட்டுமே குடும்பம் நடத்துவதற்குக் கடினமாக இருந்த அக்காலத்தில் நூல்களின் வாயிலாகக் கிடைத்த வருவாய், கொஞ்சமாக இருந்தாலும் பேருதவியாக இருந்தது. ரூபாய் என்ன, ஓரணாக்கூடக் கணக்குப் பார்க்காமல் செலவு செய்ய இயன்றிராத காலம் அது.

அவ்வாண்டு மார்ச் மாதம் திருவிதாங்கூர் கொளக்கடவில் கூடிய நம்பூதிரி யோக க்ஷேம சபை, எனக்குக் 'கேரள திலகம்' என்றதொரு புகழ்ச்சிண்ணபளித்துக் கௌரவித்தது. ஆரம்ப நாட்களிலிருந்தே நம்பூதிரி சமுதாயத்தின் பல பெரியோரும் என் பொதுத்தொண்டைப் பாராட்டி உற்சாகமளித்திருந்தனர். அந்தப் புகழிலச்சினை இன்று என்னிடமில்லை. எனினும், அந்நாள் அதை வழங்கி என்னைக் கௌரவிக்க முன்வந்த பேருள்ளங்களை நான் நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன்.

'ஹோம் ரூல்' இயக்கத்துடன் தேசீயக் கல்வி என்றோர் விழிப்பும் தோன்றியது. அதற்கு நிதிதிரட்ட கோழிக்கோடு பைராகி சத்திரத்தில் மூன்று நாட்கள் ஏற்பாடு செய்த 'களிச்சந்தை' (ஃபன்-ஃபேர்) பல்லாயிரக்கணக்கான மக்களைக் கவர்ந்தது. அத்தகையதோர் ஏற்பாடு அதற்குமுன் கோழிக்கோட்டில் நடந்ததில்லை. ஹோம் ரூல் இயக்கத்தை ஆதரிக்காதவர்களும்கூட, களிச்சந்தை வெற்றிகரமாக நிறைவேற மனம் கனிந்து உதவினர்கள்.

1918ஆம் ஆண்டில் தலைச்சேரியில் கூடிய மலபார் மாநாட்டுக் கூட்டத்துக்கு, சிரக்கல் ராமவர்ம வலியராஜா வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். கோழிக்கோடு மாநாட்டுக்கு வந்திருந்த சாமுதிரி ராஜாவுக்கு அந்நாள் கலெக்டர் மறுப்புத் தெரிவித்திருந்தார். அதை அறிந்திருந்தும், சிரக்கல் ராமவர்ம ராஜா பொறுப்பேற்க முன்வந்த போது அவருடைய துணிவையும் நாட்டுப்பற்றையும் பலரும் புகழ்ந்தனர்.

வெளிநாட்டு அரசியல் துறையில் புகழ்பெற்று இந்நாளில் பலரும் போற்றற்குரிய வகையில் நாட்டுப்பணியாற்றிவரும் வி. கே. கிருஷ்ண மேனன், அந்நாட்களில் ஹோம் ரூல் இயக்கத்தில் ஊக்கம் கொண்டு செயல்புரிந்ததொரு இளைஞர். தலச்சேரி காங்கிரஸில் நான் கலந்து கொள்ளச் சென்றபோது, நான் கிருஷ்ண மேனனின் தந்தை ஸ்ரீகிருஷ்ண குருப்பின் இல்லத்தில்தான் தங்கியிருந்தேன். அந்நாள், அவர் தலச்சேரியில் புகழ்பெற்றதொரு வழக்குரைஞர்.

அவ்வாண்டில் நீதிமன்ற விடுமுறைக் காலத்தில் திவான் மந்தத்துக் கிருஷ்ணன் நாயரைக் காண நான் திருவனந்தபுரம் சென்றேன். திவானுடைய 'பக்தி விலாஸ்' இலத்தில் நான் ஒரு வாரம் தங்கினேன். கிருஷ்ணன் நாயரிடம் கொஞ்சமும் பதவி ஆடம்பரம் கிடையாது. நாள்தோறும் அவரை நாடிப் பல மக்கள் வருவார்கள். அவர்கள் யாரையும் வீணுக்குக் காக்கவைக்க மாட்டார். அவர்களுடன் மரியாதைக் குறைவாகப் பேசமாட்டார். வக்கீலாக இருந்து, திவானுகப் பதவி உயர்வு பெற்றிருந்தாலும், அவருடைய பேச்சிலும் பழகுமுறையிலும் நான் ஒரு மாறுதலையும் காணவில்லை.

நானே வேண்டி அவருடைய அறிவுரை பெற்று, மூலம் திருநாள் மகாராஜாவைக் காணச் சென்றேன். அரண்மனைக்குள் செல்வதற்கான சம்பிரதாயமான உடுப்புக்கள் என்னிடம் இல்லை. கிருஷ்ணன் நாயருடைய அந்தரங்கச் செயலாளர் ராகவ பணிக்கருடைய நீண்ட கோட் எனக்குப் பொருந்திய அளவாக இருந்தது. அதை விரைந்து துவைத்துச் சுத்தம் செய்து கொண்டுவரக் கொடுத்தேன். மெல்லிய இழை வேட்டியும் சரிகைத் தலைப்பாகையும் கிருஷ்ணன் நாயருடையது. எல்லாவற்றையும் அணிந்து கொண்டு கண்ணாடியில் என்னைப் பார்த்துக் கொண்டபோது, எனக்கு மோகினிபாட்டத்து நட்டுவனின் வேடம் நினைவுக்கு வந்தது. திவானுடைய இரட்டைக் குதிரை வண்டியிலேறி நான் அரண்மனைக்குச் சென்றகாலை என்னைக கண்டவர்கள், 'கோமாளி வேடம் பூண்ட இவர் யாரோ' என்று வியந்திருபபார்கள் !

ஒரு காவலன் என்னை அரசர் முன்னிலையில் அழைத்துச் சென்றான். ஒரு வேட்டி மட்டுமே உடுத்து, வாயில் முன் நின்றிருந்த அரசர், ராஜ களை ததும்பிய முகத்தில் புன்னகை மலர, என்னை வரவேற்றார். நான் என்னுள் நினைத்துக்கொண்டிருந்த முகமன் மொழிகளெல்லாம் மறந்து போயின. மகாராஜா, கால்மணி நேரம் என்னுடன் அளவளாவினர். என் நலம் குறித்து விசாரித்தார். திருவனந்த புரத்துக்கு மீண்டும் வரும்போது தம்மைக் காணவேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொண்டார். நானும் அதை ஏற்றேன். ஆனால், அடுத்து, நான்அங்கே வைக்கம் சத்யாக்ரஹ காலத்தில், மகாராஜாவின் சிறைச்சாலையில் ஒரு கைதியாகத்தான் சென்றேன் !

இவ்வாறு, தொழிலும் பொதுவாழ்வுமாகக் கோழிக்கோட்டில் மூன்றாண்டுகள் சென்றன. சில நண்பர்கள் நான் சென்னை சென்று தொழில்புரிவது நன்றென்று என்னிடம் யோசனை கூறினர்கள். எனக்கும் ஒரு மாறுதல் தேவை என்று தோன்றியது. எனவே, கோடை விடுமுறைக்குப் பிறகு கோர்ட்டு திறந்ததும் சென்னை சென்று தொழில் தொடங்குவதென்று முடிவு செய்தேன்.

8

தொழிலாளர் சங்கங்கள்

சென்னையில் என் தொழில் கோழிக்கோட்டைக் காட்டிலும் திருப்தியளிக்கக் கூடியதாக அமைந்தது. அதற்குப் பல காரணங்கள் இருந்தன. என் நண்பர்களை தவிர, மாதவன் நாயரும், வேறு சிலரும் கோழிக்கோட்டிலிருந்து அடிக்கடி எனக்குச் சில வழக்குகளை அனுப்பிக்கொண்டிருந்தனர். அந்நாள் சென்னை வழக்குரைஞர்களில் பிரபலமாக விளங்கிய பாரிஸ்டர் எம். டாதவன் நாயர், அவர் ஏற்காத சில சிறிய வழக்குகளை என்னிடம் அனுப்பி உதவினர். என் ஆரம்பக்கால்களில் பற்றாக்குறையாயிருந்த சில நண்பர்களும் எனக்கு ஆதரவளித்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் தொழில் புரிவதை நான் பெரிதும் விரும்பினேன். சில சமயங்களில் வழக்குகளை முன்னிட்டு, சென்னையில் இருந்து வெளியூர் செல்லும் சந்தர்ப்பங்களும் வாய்த்தன. உயர் நீதிமன்றத்தில் தொழில் தொடங்கியிருக்கும் ஓர் இளம் வக்கீல் என்ற நிலையில் என்னுடைய வருமானம் குறை கூறுவதற்கின்றியே இருந்தது. என்றாலும் என்மீது சுமந்திருந்த மிகுதியான பொறுப்புக்களுக்கு அது ஈடானதாக இல்லை.

பொதுவாழ்வில் ஈடுபட்டிருந்த பலரும் எனக்குத் தெரிந்தவர்களாக இருந்த நிலையில், நான் பொது வாழ்விலிருந்து ஒதுங்கி வருவது கடினமாக இருந்தது. அத்தகைய தேசிய நண்பர்கள், நான் சென்னையில் தொழில் புரிய வந்தது குறித்து மகிழ்ச்சி தெரிவித்திருந்தனர். நாளடைவில் சென்னை நகரப் பொது வாழ்விலும் நான் பங்கு கொள்ளும்வண்ணம் என் கருத்தை ஈர்த்தனர்.

பாரிஸ்டர் இ. எல். ஐயரும், பி. பி. வாடியாவும் ஹோம் ரூல் இயக்க நாளிலேயே எனக்குப் பழக்கமாயிருந்தனர். தொழிலாளர் சம்பந்த

மான விஷயங்களில் பெருந்தன்மை கொண்டு செயலாற்றும் சிறந்த மனிதர் பி.பி. வாடியா. அவரும், மஞ்சேரி ராமய்யரும், நரசிம்மையரும் 'ஹோம் ரூல் லீகி'ன் பிரதிநிதிகளாக இந்தியாவின் நியாயமான உரிமைகளை பிரிட்டிஷாருக்கு எடுத்துக்கூற இங்கிலாந்துக்குப் புறப்பட்டிருந்தனர். ஆனால் அவர்கள் ஜிப்ரால்டரை அடையு முன்னரே, பிரிட்டிஷ் அரசாங்கம் பிறப்பித்திருந்த ஆணை, அவர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பியது.

இ. எல். ஐயர், கிரிமினல் கோர்ட்டில் தொழில் புரிந்துகொண்டிருந்தார். அவருடைய வீட்டில் எப்போதும் தொழிலாளர் தலைவர்களைக் காணலாம். அவர்களுடன் ஐயர் போற்றற்குரிய முறையில் பேசிப் பழகுவார். என்ன தகராறுகள் இருந்தாலும் அவர்கள் ஐயரையே நாடுவார்கள். எத்தகைய வழக்கானாலும் அதில் தொழிலாளர் தரப்பில் ஐயரைத்தான் ஆஜராக வேண்டுவார்கள். ஃபீஸைக் குறித்து ஐயருக்குக் கட்டாயம் கிடையாது. என்றாலும் தொழிலாளரும் அவருக்கு இயன்றதைக் கொடுக்கத் தயங்கமாட்டார்கள். தம் தொழிலைக் காட்டிலும் ஐயர் தொழிலாளர் நலமே பெரிதெனக் கருதுபவர். இ. எல். ஐயருடைய நட்பு என்னைத் தொழிலாளர் யூனியனுக்குக் கவர்ந்திழுத்தது. தொழிலாளர் சங்கங்களை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை, அவற்றுக்குரிய கருத்துடன் செயல்படுத்த நாங்கள் முனைந்தோம். பி. பி. வாடியா, இவ்வகையில் மிகுந்த உற்சாகத்துடன் இயங்கினர். அவர் அன்னிபெசன்டின் 'நியூ இந்தியா' பத்திரிகையின் அலுவலக மேலாளர். டிராம்வே தொழிலாளர், ரிக்ஷா இழுப்பவர், தோட்டிகள், தையற்காரர், எண்ணெய்க் கம்பெனித் தொழிலாளர் என்றெல்லாம் சென்னையிலிருந்த தொழிலாளர் பிரிவுகளை, பல சங்கங்களாக உருவாக்கி இணைத்தோம். அவற்றுக்கென ஒரு மத்திய போர்டும் உருவாக்கினோம். அதன் நடைமுறைக்குத் தேவையான சட்டங்களையும் அமைத்தோம். சர்க்கரை செட்டியார், ஸ்ரீராமுலு, ஹரி ஸர்வோத்தம ராவ் ஆகியோர் இப் பணிகளில் முன் நின்று முனைந்த வேறு சிலர். மிக விரைவில் சென்னையில் தொழிலாளர் சங்கங்கள் வளர்ந்தன.

ரிக்ஷாக்காரர்களுடைய யூனியனுக்கும், தோட்டிகளுடைய யூனியனுக்கும் நான் தலைவனானேன். டிராம்வே கம்பெனி ஊழியர்களும், எண்ணெய்க் கம்பெனித் தொழிலாளரும் வேலை நிறுத்தம் செய்ததைத் தொடர்ந்து, சில தகராறுகள் விளைந்தன. பிற யூனியன் தொழிலாளரும் வேலை நிறுத்தம் செய்ய முற்பட்டனர். பல நாட்களிலும் மாலையில் எழுமூரிலிருந்த என் இல்லத்தின் முன் தோட்டிகள் கூட்டம் கூடுவது வழக்கமாயிற்று. அவர்களும் தொழில் நிறுத்தம் செய்ய விரும்பி மற்ற யூனியன்களுடைய நடவடிக்கைகளைப் பரபரப்புடன் நோக்கிக்கொண்

டிருந்தனர். பொது வேலை நிறுத்தத்துக்குத் தயாராக வேண்டுமென்ற கருத்து முனைப்பாக நிலவியது. இவ்வாறு தொழிலாளரிடையே வளர்ந்த அதிருப்தி, ஒரு பரபரப்பு மிகுந்த சூழலைத் தோற்றுவித்தது. அரசாங்கத்தினரும் விரைந்து ஏதேனும் செய்ய வேண்டுமென்று உணர்ந்தனர். அந்நாள், வெலிங்டன் பிரபு சென்னை கவர்னராக இருந்தார். சிறிது காலத்துக்குப் பிறகு அவரே இந்தியா வைஸ்ராயாகவும் பதவியேற்றார். தொழிலாளர் பிரச்னைகளுக்குத் திருப்தியளிக்கும் வகையில் ஓர் முடிவு காண, யூனியன் தலைவர்களுடன் கலந்தாலோசனை செய்ய அவர்களை ஓர் வட்டமேசை மகாநாட்டுக்கு அழைத்தார்.

வாடியா, சர்க்கரை செட்டியார், இ.எல். ஐயர், டாக்டர் சுப்பராயன், ஹரி ஸர்வோத்தமராவ், ஸ்ரீராமுலு முதலியோர் கவர்ன்மென்ட் ஹவுஸில் கூடிய மாநாட்டில் ஆஜராயினர். நானும் அவர்களுடன் இருந்தேன். உண்மையிலேயே அது வட்டமேசை மாநாடுதான். நாங்கள் அனைவரும் ஒரு பெரிய வட்டமேசையைச் சுற்றி அமர்ந்திருந்தோம். அரசாங்கத்தினரின் பிரதிநிதிகளாக கவர்னரும, எக்ஸிக்யூடிவ் கௌன்சில் உறுப்பினர் சேர் ஹண்டரும் அமர்ந்திருந்தனர். தோட்டிகளின் யூனியன் துணைத் தலைவராக இருந்த ஒரு தோட்டி, கவர்னருடைய இடப்பக்கத்தில் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தான். இனைய இயல்புடைய வெலிங்டன் பிரபு, தொழிலாளருடைய குறைகளையும் கோரிக்கைகளையும் ஆராய்வதற்கு ஒரு கமிட்டியை நியமிப்பதாகவும், அந்தக் கமிட்டியில் இன்னும் உறுப்பினராக இருக்கவேண்டும் என்றும் அறிவித்தார். கமிட்டியின் உறுப்பினராகக் குறிப்பிடப்பெற்ற ஒருவரைத் தொழிலாளர் தலைவர்கள் ஏற்க மறுப்பைப் புலப்படுத்தினர்கள். அக் காரணம்கொண்டு ஏதும் பயனின்றியே மாநாடு கலைந்தது. இதற்குப் பிறகு நிகழ்ந்த வேலை நிறுத்தம் சில நாட்கள் நீடித்தது. அக்காலத்தில், யூனியன் உறுப்பினர்களிடம் துலங்கிய ஒற்றுமையுணர்வும் ஆற்றலும், பொதுமக்களுடன், அதில் ஈடுபட்டிருந்த எங்களையும் வியக்கச் செய்தன.

வேலை நிறுத்தம் நடைபெற்றபோது, மூண்ட கலகத்தில் போலீஸ் சிலரைக் கைது செய்தது. அவர்கள்மீது குற்றம் சாட்டி சீஃப்-பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் முன் விசாரணைக்குக் கொண்டுவந்தனர். சீஃப்-பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் ஓர் ஐரோப்பியர். தொழிலாளர் யூனியன் வேண்டுகோளுக்கிணங்க, குற்றவாளித்தரப்பில் நான் ஆஜரானேன். விசாரணையைப் பார்ப்பதற்கு எண்ணற்ற தொழிலாளர் நீதி மன்றத்தில் நெருங்கி இருந்தனர். வளர்ந்துவரும் யூனியனின் ஆற்றலை அடக்கவேண்டுமென்று மாஜிஸ்ட்ரேட் கருதியிருந்தார். இரண்டு நாட்கள் விசாரணை நீடித்தது. அதன் முழு விவரங்களையும்

அன்றைய 'நியூ இந்தியா' பத்திரிகை வெளியிட்டிருந்தது. குற்றவாளி களுக்கு மாஜிஸ்ட்ரேட் தண்டனையளித்தார். என்றாலும் யூனியனின் ஆற்றல் பெருகுவதற்கு அந்த விசாரணை ஆதரவாகவே இருந்தது.

அந்நாளில் நாங்கள் நிறுவிய இரண்டு அமைப்புக்களைக் குறித்து இங்குக் கூறுகிறேன். ஒன்று, 'நியூ ஃபேபியன் சொஸைட்டி'. அதில் பன்னிரண்டு உறுப்பினர்களே இருந்தோம். பி. பி. வாடியா, குமாரி சட்டோபாத் யாயா (சரோஜினி நாயுடுவின் சகோதரி), செஞ்சய்ய, சர்க்கரை செட்டியார், கே. பி. பத்மநாப பிள்ளை, பாரிஸ்டர் கே. சங்கரநாரா யணன் ஆகியோர் அவர்களில் சிலர். நானும் அவருள் ஒருவன். பொது விஷயங்களைப்பற்றி ஊன்றிப் படித்து, அவை குறித்துக் கட்டுரைகள் தயாரித்தோம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மாலை ஆறு மணிக்கு ஓர் உறுப்பினரின் இல்லத்தில் நாங்கள் கூடுவோம். முன்ன தாகத் தீர்மானித்ததொரு விஷயத்தைப்பற்றி இரண்டு மணி நேரம் விவாதிப்போம். எல்லா உறுப்பினர்களும் விவாதத்துக்கு எடுத்துக் கொண்ட பொருளைப்பற்றி நிச்சயமாக நன்கு படித்து, சுயமாகச் சிந்தித்திருக்க வேண்டும். விவாதம் நிகழும்போது அவ்வப்போது விளக்கமாகக் குறிப்பெடுத்துக்கொள்வது வழக்கம். ஒவ்வொரு சமயங் களில் விவாதம் ஒரு நாளையபொழுதில் முடிவு பெறுமல் தொடர்ந்து செல்வதுமுண்டு. விவாதத்துக்குரிய பொருளைப் பொறுத்தது அது. இரண்டு மூன்று மாதங்கள்கூடத் தொடர்ந்து ஒரே பொருளை விவாதித் திருக்கிறோம். இவ்வாறு, நாங்கள் இரண்டு நூல்கள் வெளியிட்டோம். 'மாண்டேகு - செம்ஸ்ஃபோர்டு ரிபோர்ட்', 'சென்னை ராஜ்யத்தில் வாக்குரிமைப் பிரச்னை' ஆகிய அந்த இரு நூல்களையும் இங்கிலாந்து ஃபேபியன் சொஸைட்டி மிகவும் பாராட்டிப் புகழ்ந்தது. விவாதம் முடிந்த நாளில் அனைவரும் ஒன்று கூடி விருந்துண்போம். நாங்கள் எந்த நிலையிலும் சாதி வேற்றுமை பாராட்டுவதில்லை என்று முடிவு கொண்டிருந்தோம். அதற்கு இணங்காதவரை நாங்கள் உறுப்பின ராகச் சேர்த்துக்கொள்வதில்லை. நான் சென்னையை விட்டுப் பெயரும் வரை நியூ ஃபேபியின் சொஸைட்டி தொடர்ந்து இயங்கிவந்தது.

இன்னொன்று, இந்தியா விடுதலையடைய வேண்டும் என்ற ஒரே நோக்குடன் எந்த வழியையும் கைக்கொள்ளலாம் என்று துணிந்து இரகசியமாக அமைக்கப்பெற்ற சங்கம். அதன் உறுப்பினர் இரண்டு வாரங்களுக்கொருமுறை எங்கேனும் ஓரிடத்தில் கூடுவார்கள். லட்சியம் செயல்படுவதற்கான வழி முறைகளை ஆராய்வார்கள். எட்டோ, பத்தோ பேர்தாம் உறுப்பினர்கள். நாலைந்து மாதங்கள் இவ்வாறு கூடி ஆலோசனை செய்ததைத் தவிர, குறிப்பிடத்தக்க செயல் ஏதும் புரிய வில்லை. சுதந்திரத்துக்காகத்தான் என்றாலும் எங்களில் சிலர்,

பிறருக்குத் துரோகம் நினைக்கத் துணியவில்லை. இச் சங்கம் நெடு நாட்கள் தொடராமல் நின்றதற்கு இதுவே தலையாய காரணம்.

நான் சென்னையில் தொழில் புரிந்து வந்த காலத்தில் ஒரு நாள் பாரிஸ்டர் டாக்டர் சுவாமிநாதன் என்னைக் காண வந்தார். அவர் என்னைத் தேடி வந்தது கண்டு நான் மிதந்த வியப்படைந்தேன். சென்னை வழக்குரைஞர்களிடையே, கிரிமினல் பிரிவில் தொழில் புரிந்த வர்களில் தலையாய இடம் பெற்றிருந்தவர் அவர். வீட்டைவிட்டு நீதி மன்றத்தைத் தவிர வேறு இடங்களுக்கு அவர் பெரும்பாலும் செல்வ தில்லை. வழக்குகள், கட்சிக்காரர்கள் என்ற உலகுக்கப்பால் அவர் ஈடுபாடு கொண்டிருந்ததில்லை. அத்தகைய டாக்டர் சுவாமிநாதன் திடீரென்று என்னைத் தேடி வருவதன் காரணம் யாதாயிருக்கும்? நான் சற்றே மலைத்து நின்றதிலிருந்து அவர் என் மன ஓட்டத்தை ஊகித் திருக்கவேண்டும். உடனே என்னிடம் அவர், 'நான் இங்கே எதற்காக வந்திருக்கிறேன் என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள். சொல்கிறேன். கோர்ட் அஃப் வார்ட்ஸ் குழந்தைகள் கேஸ் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்குமே? அந்த வழக்கை இங்கே விசாரணைக்குக் கொண்டு வந்தால் நிச்சயமாகப் பிரதிவாதிகளைத் தண்டித்து விடுவார்கள். விசாரணையை இந்தக் கோர்ட்டிலிருந்து வேறு நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முயற்சி செய்கிறேன். அதற்கான மனு தயாராகி விட்டது. ஒரு அஃபிடவிட்டும் வேண்டும். அதை இந்தக் கோர்ட்டில் தொழில் செய்பவர் அளித்தால் நலமாக இருக்கும். அதற்காகச் சில பிரபல வக்கீல்களைப் பார்த்தேன். அவர்கள் அஃபிடவிட் தருவதற்குத் தயங்குகின்றனர். நீங்கள் இதற்குத் தேவையான ஒரு அஃபிடவிட் தருவீர்களோ என்று கேட்பதற்கு வந்தேன்' என்றார்.

பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்திருந்த வழக்கு அது. செல்வர் களாகிய ஜமீன்தார் குழந்தைகளுக்குத் தங்க வசதியளித்துக் கல்வி கற்பிப்பதற்காக, சென்னையில் 'கோர்ட் அஃப் வார்ட்ஸைச் சார்ந்து 'நியூயிங்டன்' என்றதோர் இருப்பிடம் இருந்தது. ஓர் ஐரோப்பியன் மேலாளனாக இருந்து அக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து வந்தான். ஒரு நாள் அந்த ஐரோப்பியனை யாரோ சுட்டுக் கொன்றுவிட்டனர். அங்கிருந்த இரண்டு சிறுவர்கள்மீது ஐயம் கொண்டு அவர்களைக் கைது செய்து கொலைக்குற்றம் சுமத்தினர்கள். சென்னை உயர் நீதி மன்றத்தில்தான் அந்த வழக்கு விசாரணை செய்யப்படவேண்டும். ஜூரர்கள் சென்னை நகரில் உள்ளவர்களாகவே இருப்பார்கள். டாக்டர் சுவாமிநாதன் அந்தச் சிறுவர்கள் தரப்பில் வழக்கை வாதிக்க முன் வந்திருந்தார். நகர முழுவதும் மக்கள் இவ்வழக்கைப்பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். இந்நிலையில் சென்னை நகரிலிருந்து தேர்ந்தெடுக்கப்

பெற்று வரும் ஜூரர்களுடைய தீர்ப்பு முற்றிலும் நியாயம் சார்ந்ததாக இருப்பது கடினம் என்று டாக்டர் சுவாமிநாதனுக்குத் தோன்றியது. வழக்கை, பம்பாய் உயர் நீதிமன்றத்துக்கோ, வேறு ஏதேனும் நகர உயர் நீதிமன்றத்துக்கோ, மாற்றவேண்டுமென்று கோரி, கவர்னர் ஜெனரலுக்கு ஒரு மனு கொடுப்பதென்று சுவாமிநாதன் நிச்சயம் செய்தார். அதற்குத் தேவையான 'அஃபிடவிட்' என்னிடம் கோரி வந்திருந்தார். நான் கொடுத்தேன்.

அந்த மனுவை கவர்னர் ஜெனரல் ஏற்று அநுமதித்தார். வழக்கு பம்பாய் உயர் நீதிமன்றத்துக்கு மாறியது. அதற்குப் பிறகு மீண்டும் ஒரு நாள் சுவாமிநாதன் என் இல்லத்துக்கு வந்தார் "அஃபிடவிட் அளித்ததற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். ஆனால் உங்களிடம் ஒன்று கூறவேண்டும். உங்களுடைய நிலையி லிருந்தால் நான் அத்தகைய அஃபிடவிட்டுக்குக் கையெழுத்துப் போட்டிருக்க மாட்டேன். 'நான் ஓர் இளம் பாரிஸ்டர். இந்த அஃபிடவிட் கொடுப்பதனால் எனக்கு ஒரு நன்மையும் உண்டாகப் போவதில்லை. தவறுகத்தான் பயன் விளையும். வெள்ளையரான நீதிபதி களும் பிறரும் இதை விரும்பமாட்டார்கள். எதற்காக வீணாக அவர் களுடைய மனத்தாங்கலைத் தேடிக்கொள்ள வேண்டும்?' என்றுதான் எண்ணுவேன்" என்றார். டாக்டர் எழுந்து விடைபெறுமுன், ஆதர வுடன் என் முதுகில் தட்டிக் கொடுத்து, 'நன்றாக முன்னுக்குவர வேண்டிய இளைஞர் நீங்கள்' என்று வாழ்த்திச் சென்றார்.

அந்த வழக்கில் அச் சிறுவர்கள் குற்றவாளிகளல்ல என்று தீர்ப்பளித்து பம்பாய் உயர் நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்தது. இது நடந்து இரண்டுவாரங்கள் சென்ற பின்னர், அந்த ஜமீன்தார் இளைஞர்களுடன் டாக்டர் சுவாமிநாதன் மறுபடியும் என் வீட்டுக்கு வந்தார்.

'இவர்கள் இருவரும் அவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள். சென்னையில் நடந்திருந்தால் இவர்களிருவரும் நிச்சயமாக மரண தண்டனை அநுபவிக்க வேண்டியிருந்திருக்கும். நீங்கள் அஃபிடவிட் கையொப்பமிட்டதன் வாயிலாக, இவ்விருவருடைய உயிரைக் காப்பாற்ற உதவியிருக்கிறீர்கள். நேர்முகமாக உங்களுக்கு நன்றி மொழியவே இவர்களை இங்குக் கூட்டிவந்தேன்' என்றார் டாக்டர் சுவாமிநாதன். அவருடைய உளங்கனிந்த மொழிகள் எனக்கு எத்தகைய மகிழ்ச்சியைத் தோற்றுவித்தது என்பதைக் கூறவேண்டுமா?

வி. வி. எஸ். ஐயர், சுரேந்திரநாத் ஆர்யா, எஸ். துரைசாமி ஆகியோர் நான் அடிக்கடி காண விழையும் நண்பர்கள். நட்புறவுக்கு ஆதாரம் பொதுவான ஈடுபாடுகள்தாமே? அத்தகைய ஒரே பற்று எங்களை மிக நெருக்கமாகக் கவர்ந்திழுத்தது.

வி வி. எஸ். ஐயர் உயர் இலட்சியங்களுடைய வாழ்க்கையை விரும்பியவர். ஒரு குருகுலத்தை நிறுவி, தம் சீடர்களுடன் அங்கேயே அவர் வாழ்ந்தார். 'திருக்குறள்' என்ற அரிய நீதி நூலை அவர் தமிழி னின்றும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். சென்னைக்கு வரும்போ தெல்லாம் அவர் என்னைக் காண்பார். ஆற்றில் நீராடுகையில் காலிடறி வீழ்ந்து மூழ்கிவிட்ட தம் மகளை மீட்கும் பொருட்டுத் தாமும் ஆற்றில் பாய்ந்து, அவரும் ஆற்றுப்பெருக்கோடு மறைந்துபோனர். அவருடைய மறைவு தமிழிலக்கிய உலகுக்குப் பேரிழப்பாகும். அவர் நிறுவிய குருகுலம் பின்னர் அதிக நாட்கள் நிலைக்கவில்லை.

பிரும்ம சமாஜத்திலும், தொழிலாளர் இயக்கத்திலும் உற்சாகமாகத் தொண்டாற்றியவர் சுரேந்திரநாத் ஆர்யா. நான் சென்னையில் வதிந்த நாட்களில் அவர் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவதுண்டு. அரசியல் விஷயங்களில் அவர் முன்னேற்றக் கட்சியைச் சார்ந்திருந்தார். சென்னையிலிருந்து பெயர்ந்தபின் நான் வெகுநாட்கள் வரை அவரைக் காணவில்லை. 1952ஆம் ஆண்டில் அவர் கோழிக்கோட்டுக்கு விஜயம் செய்தபோதுதான் நான் அவரைக் காணும் வாய்ப்பும் பெற்றேன். பழைய நாட்களைப் பற்றி நாங்கள் பேசிக்கொண்டிருக்கையில்தான் அவர் தம் குடும்ப வாழ்வில் நேர்ந்த துயர நிகழ்ச்சிகளை எல்லாம் கூறினர். அதிர்ஷ்டமற்றவர்? வேறென்ன சொல்வது? இரண்டாண்டு களுக்குப் பின்னர் அவர் காலமானர்.

எஸ். துரைசாமி, சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு பிரபலமான வக்கீல். பிறருக்கு உதவிபுரிய அவர் எப்போதும் தயங்காமலிருந்ததால், அவருக்குப் பல நண்பர்கள் இருந்தார்கள். வளமான தொழிலும் வருவாயும் கூடியவராக இருந்தாலும். அவர் ஆன்மீக விஷயங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஏராளமான நண்பர்களுக்கு அவர் பொருளுதவி யளித்திருக்கிறார். ஆயிரக்கணக்கில் வருவாய் குவியும் காலத்தில் அவர் தொழிலைத் துறந்து மன-அமைதியை நாடி, அரவிந் தாசிரமத்தை அடைந்தார். சில நாட்கள் அவர் குடும்பத்துடன் அங்கு வாழ்ந்தார். ஆசிரமத்திலிருந்து பின்னர் விலகினாலும், ஆன்மீகச் சிந்தனைகளிலேயே அவர் தம் வாழ்நாளைக் கழிக்கிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் சென்னையில் அவரைக் கண்டேன். என்னுடைய அந்தப் பழைய நண்பர் தோற்றத்தில் மிகவும் மாறிப் போயிருந்தார். பணமும், பதவியும், பேரும், புகழும் அவரைக் கவர்ந்த தில்லை. 'இதற்கெல்லாம் என்ன பொருள்? இவ்வாழ்வு நம்மை எங்குக் கொண்டு செல்கிறது?' என்ற கேள்விகளுக்கு விடை காணும் சிந்தனையில் மூழ்கினர்.

ஆன்மீகச் சிந்தனைகளுக்குரிய மனமுதிர்ச்சி கூடினால் மட்டுமே மனிதனால் மன-அமைதியையும் ஆனந்தத்தையும் அநுபவிக்க முடியும். வயதோ, நிலைமையோ, அப்போது தடங்கல்களாகா.

வாழ்க்கைப் பிரயாணத்தில் நம்முடன் பழகும் மனிதர்களுடன் நமக்கு ஏற்படும் அநுபவங்களும் நம்மை அறியாமலேயே நம் இயல்பையும் சிந்தனைப் போக்கையும் மாற்றுவதற்குக் காரணங்களாய் அமைகின்றன. சிலருடைய மொழிகளும் செயல்களும் என்றும் மறக்கவொண்ணா வகையில் நம் உள்ளத்தில் ஆழப்பதிந்துவிடும். எத்தனை விதமான மக்களை நாம் சந்திக்கிறோம்? எத்தகைய கருத்துக்களுடன் அவர்கள் செயற்படுகின்றனர்? ஒரு சாதாரண மனிதனைச் செயல்படத் தூண்டுவது, மனதின் அடித்தலத்தில் குடிகொண்ட சுயநலம்தான் என்று சிலர் கூறுவதுண்டு. மிக்கவரைக் குறித்தும் இது உண்மையாக இருக்கலாம். ஆனால் இவர்களுக்குட்படாத சில பெரியோரையும் நாம் காண்கிறோம். அத்தகைய சான்றோர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதால் நாம் அவர்களை ஏற்றிப்போற்றுகிறோம். நுட்பமாகச் சிந்தனைசெய்து பார்த்தால் ஒரு மனிதர் தம்முடைய நோக்கங்களையும் தாம் வாழும் சமுதாயத்தின் நோக்கங்களையும் ஒருங்கிணைக்க முடியும். அவ்வாறு இணையவில்லையெனின், ஒன்று, தம் குறிக்கோளைப் பொறுத்த அளவில் அவருடைய கருத்துத் தவறாக இருக்கவேண்டும்; இல்லையேல் அவர் வாழும் சமுதாயத்தின் கருத்தில் கோளாறு இருக்க வேண்டும். சமுதாயத்தின் நோக்கம் தனிமனித வாழ்வுக்கான நலங்களை மலரச் செய்து வளமூட்டுவதாக இருக்கவேண்டும். சமுதாய நலனை இலட்சியமாகக் கருதித் தனிமனிதர் தம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். தன்னலம் சமுதாயத்தைச் சார்ந்த நலமென்றும், சமுதாய நலத்தையே தன்னலமென்றும் கருதும் மனப்பண்பை மனிதன் இன்னும் எய்தவில்லை. தத்துவஞானியின் கற்பனையில் மட்டுமே தோன்றும் இலட்சிய உலகு சாதாரண மனிதனின் இலக்குக்கு அப்பால் விலகிச் செல்கிறது. இலட்சியத்தை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்போதுதானன்றோ, வாழ்வில் இன்பமும் ஒளியும் நிறைகின்றன!

9

ஒரு புதிய திருப்புமுனை

ரோம் ரூல் லீகின் கிளர்ச்சியின் பயனாக இந்தியாவில் சில ஆட்சிச் சீர்திருத்தங்களைச் செய்வதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் முன்வந்தது.

அந்நாளைய இந்தியா செகரிடரியாக இருந்த மாண்டேகுவும் வைஸ்ராயாக இருந்த செம்ஸ்ஃபோர்டு பிரபுவும் கலந்தாலோசனை செய்து உருவாக்கிய அறிக்கையை 1918ஆம் ஆண்டு நவம்பரில் வெளியிட்டார்கள். அந்த அறிக்கையில் கண்ட தீர்மானங்கள், இந்தியரை இரு சாராராகப் பிரிக்க வகை செய்தன. அதில் கண்ட ஆட்சிச் சீர்திருத்தங்கள் தமக்குச் சிறிதும் திருப்தியளிக்கவில்லை என்றும், அதை ஒப்புக் கொள்வதற்கில்லை என்றும் தீவிரவாதிகள் பிடிவாதமாக இருந்தனர். அதில் சம்மதித்து ஒப்புக்கொள்ளக் கூடிய பல திருத்தங்கள் இருப்பதாகவும், சிறிது காலமேனும் அவற்றைச் சோதனை முறையில் ஒப்புக்கொள்ளலாம் என்றும் மிதவாதிகள் கருதினர்கள். ஆனால் காங்கிரஸில் பெரும்பான்மையோரும் தீவிரவாதிகளே. அறிக்கை வெளியான பிறகு சிறிது காலத்துக்குப் பத்திரிகைகளிலும் பொது மேடைகளிலும் அதைக்குறித்துக் கடுமையான விவாதங்கள் தொடர்ந்தன. அதுகாறும் ஒன்றுக இணைந்து செயல் புரிந்த பல நண்பர்கள் எதிர்க்கட்சியினராகப் பிரிந்து ஒருவரை ஒருவர் மோதலானர்கள்.

மாண்டேகு-செம்ஸ்ஃபோர்ட் அறிக்கையை ஊன்றிப் படித்து அதன் விவரங்களை நுட்பமாக ஆராயும்பொருட்டு அவ்வப்போது எங்களில் சிலர் நியூ இந்தியா அலுவலகத்தில் கூடினோம். அவர்களில், அன்னிபெசன்டும், ஸி. பி. இராமசுவாமி ஐயரும், இ. எல். ஐயரும், சர்க்கரைச் செட்டியாரும் மற்றும் சிலரும் கலந்துகொண்டனர். நானும் அதில் பங்கேற்றிருந்தேன். அன்னிபெசன்டும், ஸி. பி. இராமசுவாமி ஐயரும் அநேகமாக ஒத்த கருத்துடையவர்களாகவே இருந்தனர். ஆட்சிச் சீர்திருத்தங்களைச் சோதனை முறையாகக் கொள்ளலாம் என்று கருதியவர்கள் அவர்கள். எங்களில் சிலர் அதற்கு இணங்கவில்லை. மெள்ள மெள்ள நாங்கள் அவர்களிடமிருந்து விலகிச் செல்வதாக எனக்குத் தோன்றியது.

இந்தியாவில் பல பகுதிகளிலும் தோன்றி நிலவிய இந்தக் கருத்து வேற்றுமை மலபார் காங்கிரஸிலும் தோன்றியது. இரண்டாண்டுகளாக நான் சென்னையில் வசித்தாலும் மலபார் அரங்கில் தேசிய நிகழ்ச்சிகளை நான் தவறுமல் கவனித்துக்கொண்டிருந்தேன். 1920ஆம் ஆண்டில் ஏப்ரலில் மஞ்சேரியில் கூடுவதாக இருந்த மலபார் ஜில்லா மாநாட்டுக்கு வரவேண்டுமென்று கே. மாதவன் நாயர் என்னை அழைத்த காரணத்தை உடனே புரிந்துகொண்டேன்.

'ஹிந்து' ஆசிரியர் கஸ்தூரி ரங்கய்யங்கார் அந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கினர். அன்னிபெசன்ட் அம்மையாரும் மாநாட்டுக்கு வந்திருந்தார். மலபாரின் பல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகளும்

பார்வையாளர்களும் வந்து கூடினர். எத்திசையில் நோக்கினாலும் கிளர்ச்சி எழக்கூடிய சூழலில் மாநாடு கூடியிருந்ததென்பது புலனாயிற்று. முதல் நாள், பந்தலைச் சுற்றி ஆங்காங்குக் கூடி, காங்கிரஸின் ஆலோசனைக்கு வரும் விஷயங்களைக் குறித்து விவாதித்து இருதரப் பினருடைய கருத்துக்களுக்கும் ஆதரவாளரைத் தேடும் முயற்சி மிகக் கவனமாக நடந்தேறியது.

கிலாஃபத் விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் கையாண்ட தந்திரம் முகமதியரை மிகுந்த மனவெழுச்சி கொளச் செய்தது. பிரிட்டிஷார் இந்தியாவில் நடைமுறைக்குக் கொண்டுவரவிருந்த ஆட்சிச் சீர்திருத் தங்கள் எதிர்பார்த்திருந்ததைக் காட்டிலும் மிகவும் குறைந்த அளவில் குறுகிவிட்டன என்றறிந்ததும் தேசீயச் சூழலே கொந்தளிக்கலாயிற்று. மலபாரில் ஒத்துழைப்போர், ஒத்துழையாதார் ஆகியோருக்கிடையே மஞ்சேரியில் ஒரு போராட்டமே நடந்தது. பிரதிநிதிகளின் கூட்டத்தில் முகமதியர் பலர் இருந்தனர். எல்லோருமாக, முன்னர் ஒருபோதும் கண்டிராத வகையில் பிரதிநிதிகள் எண்ணிக்கையில் பெருகியிருந்தனர். ஜன்மிகளும் குடியானவர்களும், குடும்பத்தாரும் கூலிக்காரரும், இந்துக்களும் முகமதியர்களுமாகப் பெருகியிருந்த அந்த மாநாட்டுப் பந்தலே எழுச்சிகொளத் தூண்டும் வகையில் காட்சியளித்தது. ஏப்ரல் 28ஆம் தேதி, பகல் பன்னிரண்டு மணிக்கு மாநாடு ஆரம்பமாயிற்று. அன்று காலை எட்டு மணிக்கு மாநாட்டுப் பந்தலின் சூழலில் நடந்த அன்றைய தேசீய நிலை குறித்ததொரு பொதுக்கூட்டத்தில், நானும் ஏ. ரங்கசாமி ஐயங்காரும் உரையாற்றினோம். கடுமையான விவாதத் துக்குரிய விஷயமான ஆட்சிச் சீர்திருத்தத்தின் ஒவ்வொரு பகுதியையும் மக்களுக்குத் தெளிவாகப் புரியும்வண்ணம் எடுத்துரைத்து எங்களுடைய கருத்துக்கு அவர்களை இணங்கச் செய்ய முயன்றோம். தலைமையுரைக்குப் பின்னர் அன்றைய கூட்டம் முடிந்தது. பொழுது சாய்ந்த பின் தொடங்கிய காரியக் கமிட்டி இரவு எட்டு மணிவரையிலும் நீடித்தது. மறுநாள் நிகழ்வதற்கிருந்த விவாதங்களுக்கான அறிகுறிகள் அப்போதே தோன்றலாயின.

29ஆம் தேதி காலையில் பதினொரு மணிக்குக் கூட்டம் மீண்டும் தொடங்கிற்று. 1300 பிரதிநிதிகள் கூட்டத்துக்கு வந்திருந்தனர். அப்போதே நிலைமை சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. எதிர்ப்புக்கு இடமில்லாத தீர்மானங்களை நிறைவேற்றிய பின்னர், ஆட்சிச் சீர்திருத்தம் குறித்த தீர்மானத்தை, கே. பி. ராமன் மேனன் கொண்டுவந்தார்.

'பூரணமான பொறுப்பாட்சிக்கு இந்தியா முற்றிலும் உரியதென்றும், மாண்டேகுவின் ஆட்சிச் சீர்திருத்தத்தில் இந்தியாவின் நியாயமான

உரிமை மறுக்கப்பட்டிருக்கிறதென்றும், அதனால், இந்தப் புதிய சீர் திருத்தம் திருப்தியளிக்காததென்றும், மக்கள் விருப்பத்துக்கு ஊறுன தென்றும்' கூறியது தீர்மானம். எல். ஏ. சுப்பராமய்யர் அதை வழி மொழிந்தார். ஆட்சிச் சீர்திருத்தம், 'திருப்தியளிக்காதது', 'விருப்பத் துக்கு ஊறுனது' என்ற சொற்றொடர்களை நீக்கிவிட வேண்டுமென்று ஒரு திருத்தத்தை அன்னிபெசன்ட் தமக்கே உரிய வாக்குவன்மையுடன் முன்கொணர்ந்தார். அந்தத் திருத்தத்தை, நீலாம்பூர் இளைய ராஜா ஆதரித்து வழி மொழிந்தார். நான் அதற்கெதிராகப் பேசினேன். ஏ. ரங்கசாமி ஐயங்கார், கே. மாதவன் நாயர், மஞ்சேரி ராமய்யர் முதலியோர் அதைப்பற்றிய விவாதத்தில் பங்கு கொண்டனர். பெரும் பான்மையான பிரதிநிதிகளின் எண்ணப்போக்குத் தங்களுக்குச் சாதக மாக இல்லை என்றறிந்ததும் அன்னிபெசன்டும் அவருடைய ஆதர வாளரும் பந்தலைவிட்டகன்றனர். தீர்மானத்துக்கு வாக்கெடுத்தபோது, மிகப்பெரும்பான்மை பெற்று, தீர்மானம் நிறைவேறியது. வரலாற்றுப் புகழ் வாய்ந்த மஞ்சேரி மாநாடு இவ்வாறு முடிவு பெற்றது.

அன்னிபெசன்டின் நிலை வருந்தத்தக்கதாக எனக்குத் தோன்றியது. என்றாலும் எனக்கு அவர்மீதிருந்த மரியாதை ஒரு மாற்றுக்கூடக் குறைந்துவிடவில்லை. பல்வேறு விதமாகத் தொண்டாற்றி இந்தியரின் நன்றிக்கு உரியவராக விளங்கிய அப் பெருமாட்டிக்கு இந்திய வரலாற்றில் நிச்சயமாக என்றும் அழியாததோர் இடம் உண்டு. கருத்துக்கள் மாறுபடலாம்; நோக்கும் போக்கும் மாறுபடலாம். எனினும் தன்னலமற்ற தொண்டுக்குத் தன் வாழ்வையே ஈடாக்கிவிட்ட அந்தப் பேருள்ளத்தின் முன் மரியாதையும் பணிவுமாகச் சிரம் தாழ்த்தி வணங்காமலிருக்க முடியுமோ?

நாட்டு மக்களிடையே மேலும் கிளர்ச்சியைத் தோற்றுவிக்கக்கூடிய நிகழ்ச்சிகள் உடனுக்குடன் அடுத்தடுத்து நிகழலாயின. நெடுங்கால மாகக் கட்டுண்டிருந்த பாரத பூமியின் அடிமைத்தளைகளை அகற்றி விடுதலையளிக்கும் முயற்சிகளுக்கு விதி விரைந்து ஊக்கிவிடமுனைந்தாற் போலாயிற்று. ஜாலியன் வாலா பாக் படுகொலையும், தொடர்ந்த ராணுவ அடக்குமுறையும், அந்நிய ஆதிக்கத்தின் சுயமான உருவை மக்களுக்கு வெட்ட வெளிச்சமாகத் துலக்கின. செயலற்று ஒடுங்கி யிராமல், தங்களைப் பிணித்திருக்கும் அடிமைச் சங்கிலியைத் தகர்த் தெறிவதற்கு ஒருங்கிணைந்து செயல்படவேண்டுமென்ற உணர்வு நாட்டு மக்களுக்கு உண்டாயிற்று. பஞ்சாப் அடக்கு முறை ஆட்சி குறித்த கருத்துவேற்றுமையின் காரணம்கொண்டு அந்நாள் வைஸ்ராய் எக்ஸிக்யூடிவ் கௌன்சில் உறுப்பினராக இருந்த ஸர் ஸி. சங்கரன் நாயர், தம் பொறுப்பை ராஜினாமாச் செய்தார் என்ற செய்தி நாடு

முழுதும் பரவியது. மக்கள் மிகுந்த மகிழ்ச்சியும் ஆர்வமும் கொண்ட வராக அச் செய்தியை வரவேற்றனர். பதவியைத் துறந்து சென்னை திரும்பிய சங்கரன் நாயருக்கு அந்நாள் வழிநெடுகிலும் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த மரியாதை உபசாரங்கள், நாட்டு மக்களிடையே ஆட்சிமுறைக்கெதிராகப் பரவியிருந்த அதிருப்தியையும் வெறுப்பையும் தெளிவாகப் புலப்படுத்தின. அவர் சென்னை சென்டிரல் ரயில் நிலையத்தில் வந்து இறங்கியபோது, கூட்டமாகத் திரண்டிருந்த மக்கள் மகிழ்ச்சியுடன் கோலாகலமான ஆரவாரங்களுடனும் கோஷங்களுமாக வரவேற்ற காட்சியை மறக்க இயலாது.

நாட்டில் நிகழ்ந்துகொண்டிருந்த சம்பவங்கள் என்னை நிலை கொள்ளாதவனாக்கியது. என் தொழிலில் கருத்தூன்றுவது மிகக் கடினமாக இருந்தது. குடும்பப் பொறுப்பும், பொதுப்பணிகளின் மீதான ஆர்வமும் என்னுள் இடைவிடாது மோதிக்கொண்டிருந்தன. மனைவி-மக்களை மட்டும் காப்பாற்றும் பொறுப்பு அல்ல — என் தாயையும், என் நிழலில் அண்டிய சகோதரிகளையும்கூட ஆதரிக்க வேண்டிய கடமையும் எனக்கு இருந்தது. எனக்கு இரண்டு சகோதரர்கள்; நான்கு சகோதரிகள். இப் பொறுப்புக்களைத் தவிர, கடன் தொல்லை வேறு இருந்தது. கடன்பட்ட ஒருவன், அதைத் தீர்க்கும் வரையிலும் வேறு எந்தப் பொறுப்பையும் பெரிதாக நினைக்கவேண்டாம் என்று பல முறைகளிலும் என்னுள் எண்ணிக்கொண்டாலும், என் ஆர்வத்தை அடக்கவோ, பிற பொறுப்புக்களை ஏற்கவிடாமல் என்னைத் தடுக்கவோ இயலாததொரு ஆற்றல் என்னை மீண்டும் மீண்டும் பொதுப் பணிகளில் கவர்ந்து இழுப்பதாகக் தோன்றியது. 'கையில் கொஞ்சம் பணமிருந் தால் ....' என்ற ஆசை பல சமயங்களிலும் என்னுள் தோன்றுவ துண்டு. அப்படி இருந்தால் என் விருப்பத்துக்குகந்த வாழ்க்கையை மேற் கொள்ள முடியுமன்றே? அதற்கு இயலாமல், கடன் பளுவின் கனமான சங்கிலியன்றே என்னைப் பிணித்திருந்தது? சுதந்திர இயக்கம் நானில்லா மலே நன்கு நடக்கும் என்பது உண்மைதான். இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்துக்கு என் பங்கு இன்றியமையாததென்று நான் கருதி யிருக்கவில்லை. எனினும், நாட்டுப் பணியில் என்னுள் வெளியிட இயலாததொரு நிறைவு கண்டேன் நான். நான் விரும்பிய பணிகளில் ஈடுபட முடியாமல் என்னைப் பிணிக்கும் அதிர்ஷ்டமற்ற நிலையை நான் வெறுத்தேன்; சபித்தேன்.

சி. இராஜகோபாலாசாரி, அந்நாள் சென்னையில் தொழில்புரிந்து கொண்டிருந்தார். ஹோம் ரூல் இயக்கம் தொடங்கிய நாள்முதலே அவர் எனக்குப் பழக்கமாயிருந்தார். அந்நாட்களில் அவர் சேலத்தில் 'பிராக்டிஸ்' செய்துகொண்டிருந்தார். பின்னரே சென்னைக்கு வந்தார்.

அவ்வப்போது நீதிமன்றத்திலும், வேறு வெளியிடங்களிலும் நாங்கள் சந்திப்போம். என்னுடைய குழப்பங்களையும், அவைபற்றிய எண்ணங்களையும் அவர் பெருந்தன்மையுடன் உணர்ந்து கொண்டார். அவருடைய நுண்ணிய அறிவும், குற்றம் குறைகளை நுட்பமாக ஆராயும் பாங்கும், பொதுமக்களுக்குத் தொண்டாற்றும் திறமும் என்னை அவர்பால் கவர்ந்திழுத்தன. பொதுப்பணிகளில் ஈடுபடுவதற்கு அவர் என்னை ஊக்கி உற்சாகமளித்தார். நாங்கள் இணைந்து பணிபுரிந்த நாட்களின் இனிய நினைவுகள் சிறிதும் மங்காவண்ணம் என்னுள் இன்னமும் பதிந்திருக்கின்றன.

சுதந்திர இயக்கத்தில் உற்சாகத்துடன் பங்கு கொள்ள எனக்கு ஊக்கமளித்த இன்னொரு நண்பர் ஸ்ரீராமுலு. தொழிலாளர் இயக்கத்தைத் தோற்றுவித்த நாட்களில் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபட்டுப் பணிபுரிந்தவர் அவர். அவர் அதிகமாகப் படித்தவரல்ல. எனினும் தொழிலாளரிடையே ஸ்ரீராமுலுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. பண்டித மதன்மோஹன் மாளவியாவைப்போல் நீண்ட சட்டையும் தலைப்பாகையும் அணிந்து, பின்கழுத்தைச் சுற்றிஞற் போன்று இருபுறங்களிலும் மாலைபோன்ற மேல்வேட்டியுடனும் புன்னகை மலர்ந்த முகத்துடனும் ஓடியாடிப் பணியாற்றும் ஸ்ரீராமுலுவை, சென்னையில் அந்நாள் பொதுச்சேவையில் ஈடுபட்டிருந்த பலரும் அறிவார்கள். அவர் நாள்தோறும் என் இல்லத்துக்கு வருவார். குடும்பத்தில் ஒருவரைப்போன்று பேசிப்பழகுவார். நான் சென்னையிலிருந்து அகலும் வரையிலும் அவர் என்னைப் பிரிந்திருக்கவில்லை.

அது போன்று, சர்க்கரைச் செட்டியாரும் எனக்கு ஒரு நெருங்கிய நண்பர். நாட்டுப் பணிகள் குறித்தும், தொழிலாளர் இயக்கம் குறித்தும் அந்நாளில் எங்கள் கருத்து ஒரே மாதிரியாக இருந்தது. பின்னர் நாங்கள் வேற்றுமை கொண்டோம்.

ஒரு புகழார்ந்த இலக்கியவாதி வாழ்க்கையை ஒரு தேன் கூட்டுக்குச் சமமென்று ஒப்பிட்டுக் கூறியதை நான் நினைவுகூர்கிறேன். 'தேனீக்கள் பல திசைகளிலிருந்தும் மலர்களைக் கோதித் தேனீட்டி வருகின்றன. மலர்களுடைய மணத்தைப் பொறுத்தே தேனும் அமையும். சிலவகை மலர்களிலிருந்து கிடைக்கும் தேன் மிக இனிமையாக இருக்கும். சிலவகை மலர்களிலிருந்து பெறக்கூடிய தேன் அவ்வாறின்றிக் கைப்புத்தட்டும். சில மலர்களிலிருந்து சேகரிக்கும் தேன் மணமுடையதாயிருக்கும். எனினும், இறுதியில் எல்லாம் கலந்த இனிய தேனல்லவா நமக்குக் கிடைக்கிறது? வாழ்க்கையும் அத்தகையதே. பலதரப்பட்ட மக்கள் ஒவ்வொரு வகையாக நம்மை

பாதிக்கின்றனர். நண்பர்கள், பழகியவர்கள், அறிமுகமானவர்கள், எல்லோரிடமிருந்தும் குற்றம் குறைகளையும், நற்குணங்களையும் நாம் ஓரளவுக்கு நம்முடையதாக்கிக் கொள்கிறோம். அது நம்முடைய சுயமான இயல்பைக் கூட்டிக் குறைக்கும் வகையில் மாறுதல்களை நிகழ்த்துகிறது. நாம் அதை உணருவதில்லை என்றாலும் அது உண்மையே.'

10

தொழில் நிறுத்திவிட்டுப் பொதுப்பணிகளில் ஈடுபடுதல்

1920 ஆம் ஆண்டில் டிசம்பரில் நாகபுரியில் கூடிய காங்கிரஸ் கூட்டம் இந்திய வரலாற்றில் ஓர் புதிய அத்தியாயமாகத் தொடங்கியது. மகாத்மா காந்தி அரசியல் அரங்கில் தோன்றியதும் மிக விரைவில் நாடுமுழுவதும் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டன. மொழியை அடிப்படையாகக் கொண்டு காங்கிரஸ் பிரதேச அமைப்புக்களைச் சீரமைத்தது. காங்கிரஸின் இலட்சியம் சுயராஜ்யத்தை அடைவதுதானென்றும், அதற்குகந்த வழி, வன்முறையற்ற ஒத்துழையாமையே என்றும் காங்கிரஸ் முழக்கியது. தொடர்ந்து பலரும் பதவி மரியாதைகளை உதறித் தள்ளினர். பல வக்கீல்கள் தொழில்புரிவதை நிறுத்தி அரசியல் களத்தில் இறங்கினர். மாணவர்கள் கல்லூரியைத் துறந்து நாட்டு விடுதலைக்கான களரியில் குதித்தனர். இந்துக்களும் முகமதியரும் ஒன்று சேர்ந்து நாட்டு முன்னேற்றம் கருதிப் புறப்பட்டனர். காங்கிரஸின் தீண்டாமை ஒழிப்புத் திட்டம் பல்வேறு சாதியினரையும் போராட்டக் களத்துக்குக் கவர்ந்திழுத்தது. கிலாஃபத் இயக்கத்தில் காங்கிரஸ் புலப்படுத்திய பெருந்தன்மையான ஆதரவு இந்து-முஸ்லிம் நட்பு ஊன்றி நிலைக்க வகைசெய்தது. நாடு முழுவதும் முன்பு ஒருபோதும் கண்டிராத வகையில் ஒற்றுமை உணர்வும், உற்சாகமும், தியாகப் பண்பும் மேலோங்கின.

நாகபுரி காங்கிரஸில் நிறைவேறிய தீர்மானமும், அதன் பின்னர், நாட்டின் வடகோடியிலிருந்து தென்கோடிவரை கிளர்ந்த ஆவேசமும், என்னை மிகவும் கிளர்ச்சிக்குள்ளாக்கின. என்ன செய்வதென்றறியாமல்

கவலையுடன் நான் நாட்களைக் கழித்தேன். இந்நாட்களில், பலதடவை இராஜகோபாலாசாரி என்னைக் கண்டார். ஒரு சமயம் என்னிடம், 'நீங்கள் இப்போது மலபாரில் இருக்க வேண்டும்' என்றார்.

போராட்டத்திலிறங்க எனக்குத் தூண்டுதல்கள் தேவையாக இருக்க வில்லை. ஆனால் கைப்பொருளின்றி, ஆதரவற்ற நிலையில் என் குடும்பத்தாரை நான் எப்படி விடுவேன்? என்னுடைய அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றுமல் தேசபக்தன் என்று சொல்லிக் கொண்டு நான் சுதந்திரப் போராட்டத்தில் குதிப்பது சரிதானு? என் தந்தை உயிருடன் இருந்தால் என் ஈடுபாடுகளைப் பற்றி அவர் என்ன சொல்வாரென்று பலமுறை நான் சிந்தித்துப் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்தப் பிரச்னைக்கு இன்னொரு பக்கமும் இருக்கிறதன்றோ! இந்தியா ஓர் சுதந்திர நாடென்றும், அது வேறொரு நாட்டுடன் போர்புரிய வேண்டியநிலை வந்திருக்கிறதென்றும் வைத்துக்கொள் வோம். வயது வந்த ஆடவரனைவரும் போருக்குப் புறப்படவேண்டும் என்று இந்தியா முடிவு செய்தால் அவ்வாணைக்குப் பின்வாங்க முடியுமோ. என்னால்? காங்கிரஸ் என்னைக் கட்டுப்படுத்தி ஆணையிட வில்லை. என்றாலும் அதன் நோக்கத்தை ஓர் ஆணையாகக் கருதிச் செயலாற்றும் கடமை எனக்கு இல்லையா? இவ்வாறெல்லாம் சிந்தனைகள் என் மனதில் தோன்றி இப்படியும் அப்படியுமாக அலைத்தன.

இதற்கிடையில் மலபாரிலும் நிலைமை கிளர்ச்சிக்குரியதாக மாறிக் கொண்டிருந்தது. நாகபுரி காங்கிரஸ் முடிவுகள், மலபார் காங்கிரஸ் பணிகளில் ஓர் புத்துணர்வைக் கூட்டின. கிலாஃபத் இயக்கம் அதற்கு மேலும் வலுவூட்டியது.

காங்கிரஸ், சுதேச ராஜ்யங்களையும் புதிய மொழிவாரியான பிரதேச அமைப்புக்குட்பட்டு இணைத்துக்கொண்டதால், கொச்சியும் திருவிதாங் கூரும் மலபாரும் இணைந்து கேரள ராஜ்யமாயிற்று. இந்தக் கேரள ராஜ்ய காங்கிரஸ் கமிட்டிக்கு, கே. மாதவன் நாயர் புதிய செயலாளராஞர்.

முகமதியரிடையே தோன்றி வளர்ந்த அதிருப்தி கேடுவிளைவிக்கும் வகையில் பெருகிவிடுமோ என்று அதிகார வர்க்கம் அஞ்சியது. அதை அடக்குவதற்கான வழிமுறைகளை அவர்கள் சிந்தித்து உறுதி செய்தார்கள். பொதுக்கூட்டங்களுக்கான தடையுத்தரவு பிறப்பித்து ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஆணையிட்டார். சென்னை முஸ்லீம் சமுதாயத் தினரிடையே ஒரு பெருந்தலைவராக இருந்த யாகூப் ஹஸன் சாஹப் கோழிக்கோட்டில் ஓர் பொதுக்கூட்டத்தில் பேசுவதாக இருந்தார். அவர் அந்த இடத்தை அடைந்தபோது, அவர்மீது தடுப்புக்காவல் நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். அது 1921ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் தேதி நிகழ்ந்தது. அக்கூட்டத்தில் பங்கு கொள்வதற்கிருந்த

பூ. கோபால மேனன், கே. மாதவன் நாயர், பொன்மாடத்து மொய்தீன் கோயா ஆகியவருக்கும் அதே ஆணை விதித்தனர். அந்த உத்தரவுகளை மீறிப் பொதுக்கூட்டத்தை நடத்துவதாக அவர்கள் தீர்மானித்தனர். ஜில்லா மாஜிஸ்ட்ரேட் தாமஸ், அவர்களைக் கைது செய்யும்படி, போலீஸ் சூபரின்டென்டண்ட் ஹிட்ச்காக்குக்கு ஆணையிட்டார். இந்தச் செய்தி மக்களிடையே பரவியதும், கலெக்டர் அலுவலகத்தைச் சூழ்ந்து, ஒரு பெருங்கூட்டம் திரண்டுவிட்டது. கலெக்டர் அலுவலகத்தின் மூன்று வாயில்களையும் மூடினர். வெளியிலிருந்து வெள்ளை ராணுவத்தார் காவலுக்குவந்தனர். சுமார் இரண்டுமணி நேரம் சென்ற பின்னர், போலீஸ் டிபுடி சூபரின்டென்டண்ட் ஆமுசாஹப், யாகூப் ஹஸனையும் மற்றவர்களையும் கைது செய்து கொண்டுவந்தார். அவர்கள் நான்கு பேரையும், ஆறுமாத காலம் அமைதி குலையாமலிருக்கும் வகையில் நன்னடத்தைக்கான ஜாமீன் கோரி அங்கே கொண்டு வந்திருந்தனர். ஆனல் அதற்கு அவர்கள் இணங்கவில்லை. அதனல் அவர்கள் ஒவ்வொரு வருக்கும் ஆறுமாதம் வெறுங்காவல் தண்டனையளித்து கண்ணனூர் சிறைக்குக் கொண்டு சென்றனர்.

இச் செய்தி காட்டுத் தீயைப்போல் நாடு முழுவதும் பரவியது. கடைகளை அடைத்தார்கள். கல்விச்சாலைகளிலிருந்து மாணவர் வெளியேறினர். வழக்குரைஞர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்லவில்லை. அரசாங்கத்தினரின் அக்கிரமச் செயலைக் கண்டனம் செய்யும் வகையில் மலபாரிலும், வெளியிலும் பல இடங்களிலும் பொதுக்கூட்டங்கள் கூட்டினர்கள்.

'தலைவர்களைக் கைது செய்துவிட்டனர். நெருக்கடியான நிலைமை; உடனே வரவும்' என்று எனக்குக் கோழிக்கோட்டிலிருந்து ஒரு தந்தி கிடைத்தபோது, என்ன செய்யவேண்டுமென்ற ஐயத்துக்கிடமின்றி, அன்றே கோழிக்கோட்டிற்குப் பயணமாக நிச்சயம் செய்தேன். இராஜகோபாலாசாரியும் என்னுடன் வருவதாகத் தெரிவித்தார். என் மனைவி மக்கள் சென்னையில் இருந்தனர். திடீரென்று நான் கோழிக்கோடு செல்வதாக அறிவித்ததும் அவர்கள் திகைப்பெய்தினர். என்னுடைய பொதுத்தொண்டுக்குத் தடை கூறவேண்டுமென்று அவர்கள் கருதியிருக்கவில்லை. ஆனல், குடும்பநிலை என்னவாகுமோ என்று அவர்கள் கவலைகொண்டதில் வியப்பில்லையே? இராஜகோபாலாசாரியுடன் நான் அன்றைய மெயிலில் கோழிக்கோட்டுக்குப் பயணமானேன்.

கோழிக்கோட்டில் நிகழ்ந்த சம்பவங்கள் மக்களைப் பெரிதும் கிளர்ச்சியுறச் செய்திருக்கின்றன என்ற உண்மை வழிநெடுகிலும் ரயில் நிலையங்களில் நாங்கள் கண்ட கூட்டம் எங்களுக்கு உணர்த்தியது.

கோழிக்கோடு ரயில் நிலையத்தில், போலீஸ் சூபரின்டென்டண்ட் ஹிட்ச்காக்கும், போலீஸ் காவலர்களும், திரண்டதொரு மக்கள் கூட்டமும் எங்களை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். ஹிட்ச்காக்கை எனக்குத் தெரியாது. சேலத்தில் அவர் சிறிது காலம் இருந்ததால் இராஜகோபாலாசாரி அவரை அறிந்திருந்தார். நாங்கள் இரயில் நிலையத்திலிருந்து நேராக, சாலப்புரத்து மாதவன் நாயருடைய வீட்டுக்குச் சென்றோம். நடந்த செய்திகளனைத்தையும் எடுத்துரைத்தனர். ஹிட்ச்காக்கும் அவற்றைப்பற்றிக் கூறினர்.

இரண்டு நாட்களுக்குப்பின், நாங்கள் கண்ணனூர் சிறைச்சாலைக்குச் சென்று, ஹஸன் சாஹபையும், மாதவன் நாயரையும், கோபால மேனனையும், மொய்தீன் கோயாவையும் கண்டோம். சிறைக்குள் இருப்பவர்களுக்கு வெளியிலிருந்து வரும் நண்பர்களைக் காண்பதில் எத்துணை மகிழ்ச்சி! சிறை அதிகாரிகள் அணிமையிலிருந்தாலும், எங்களுடைய மகிழ்ச்சியான உரையாடல்களை அவர்கள் தடுக்கவில்லை. தேசீயக் கைதிகள் சிறையில் அவ்வளவாகக் கூடியிராத காலம் அது.

கோழிக்கோட்டுக்குத் திரும்பிய பின்னர், அடுத்து நாங்கள் மேற் கொள்ள வேண்டிய செயல்களைப்பற்றி யோசனை செய்து முடிவு கொண்டோம். தொழிலை நிறுத்தி, பொதுப்பணிகளில் இறங்க நான் முடிவு செய்தேன். இராஜகோபாலாசாரி சென்னை திரும்பினர். மலபார் காங்கிரஸ் பணிகளின் பொறுப்பை நான் ஏற்றேன். மாதவன் நாயருடைய வீட்டிலேயே காங்கிரஸ் அலுவலகம்; என் இருக்கையும் அங்கேதான். மூன்று வாரங்கள் சென்றன.

நான் தொழில்புரிவதை நிறுத்தி, அரசியல் பணிகளில் ஈடுபட்ட விவரத்தை முதன் முதலாக என் மனைவிமக்கள் பத்திரிகைகளின் வாயிலாகவே அறிந்தனர். எங்களுடைய நெருங்கிய உறவினரெல்லாம் இச்செய்தியை எப்படி வரவேற்பார்களோ என்று அவர்கள் அஞ்சினர். எனக்கும் அதே பயம்தான். கோழிக்கோட்டிலிருந்து நான் ஒரு நாள் பாலக்காட்டுக்குச் சென்றபோது, என்னுடைய நடவடிக்கைகளில் அவர்கள் கொண்டிருந்த மனவேற்றுமையை அவர்களுடைய முகபாவம் உணர்த்தியதைக் கண்டேன். அவர்களெல்லோரும், நான் தொழிலைத் துறந்து நாட்டுப் பணிகளில் ஈடுபட்டதன்வாயிலாகப் பெருங்கேட்டை வரவழைத்துக் கொண்டாற்போல் கருதினர்கள். அதைப்பற்றி அவர்களிடம் நான் என்ன கூறினாலும் பயனற்றதென்பதை நான் அறிவேன். அவர்களுடைய மன இயல்புகளை நன்றாக அறிந்திருந்த நான் அதை மாற்றக்கூடிய வீண்முயற்சிகளில் இறங்கவில்லை. மந்தந்துக் கிருஷ்ணன் நாயரிடமும், வேறு சில பெரியோர்களிடமும், எனக்கு உகந்த வகையில் அறிவுரை நல்கும்படி அவர்கள் வேண்டினர்.

கிருஷ்ணன் நாயரிடம் எனக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் இருந்தன என்பதை அவர்கள் அறிவார்கள். என்னுடைய இயல்பை அவரும் நன்குணர்ந்தவர். சந்தர்ப்பத்துக்குத் தகுந்த வகையில் அவர் எனக்கு நல்லுரைகள் கூறுமலிருந்ததில்லை. என்றாலும் முன்வைத்த காலை நான் பின்னிழுக்கத் தயாராக இல்லை.

சென்னையிலிருந்து மனைவியையும் குழந்தைகளையும் கூடிய விரைவில் கோழிக்கோட்டுக்கு அழைத்துவர நிச்சயித்தேன். பல கடமைகளை அங்கு நிறைவேற்றவேண்டியிருந்தது. எனவே சென்னைக்குப் பயண மானேன்.

இராஜகோபாலாசாரியைப்போல் பிரகாசமும் பொதுப்பணிகளில் எனக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்த நண்பர். நான் சென்னையி லிருந்து கிளம்புமுன் ஓரிரண்டு முறைகள் என் வீட்டுக்கு வந்து என்னுடைய தனிப்பொறுப்புக்களைக் கேட்டறிந்திருந்தார். தொழிலைத் துறந்து பொதுப்பணி மேற்கொள்வதற்கான பொருள் வசதி என்னிடம் இல்லை என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். என்னை வழியனுப்ப வந்தபோது அவர் என்னிடம், 'இது கையில் இருக்கட்டும்' என்று மொழிந்து ஒரு 'செக்'கை அளித்தார். அச்சமயம் அது என்னுடைய தொல்லைகளைக் குறைக்கப் பெரிதும் உதவியாக இருந்தது.

சட்டப் புத்தகங்களையும், கேஸ் கட்டுகளையும் சிலரிடம் ஒப்பு வித்த பின், சட்ட மறுப்புக்கும் நாட்டுப் பணிக்கும் சித்தமாக நான் சென்னையை விட்டுக் கோழிக்கோடு திரும்பினேன்.

11

ஒத்துழையாமை இயக்கம்

கேரளத்தை ஒரு தனிக் காங்கிரஸ் ராஜ்யமாக அமைத்தது பற்றிக் கூறினேனல்லவா? கேரள ராஜ்யக் காங்கிரஸ் கமிட்டிச் செயலாளன் என்ற நிலையில் கிளைகளை நிறுவவும், நிலையான செயல்முறைகளை ஒழுங்கு செய்யவும் நான் முனைந்தேன். ஆரம்ப காலப் பணிகளுக்குத் தேவையான செலவுகளுக்கென்று இராஜகோபாலாசாரி ஆயிரம் ரூபாய் உதவினார். மாதவன் நாயருடைய வீட்டு மாடியில் நான் குடும்பத் தோடு வசிக்கலானேன். கீழே காங்கிரஸ் அலுவலகம். தொழிலைவிட்டு, பொதுப்பணி புரிய இறங்கிய சில வக்கீல் நண்பர்கள், காங்கிரஸ் பணி

களைக் கவனித்துச் செம்மையாய் ஆற்றுவதற்கு எனக்கு உதவினர்கள். பி. அச்சுதன், அம்பலக்காட்டுக் கருணாகர மேனன், கே. பி. கோபால மேனன், வி. யூ. கோவிந்தன் நாயர், பி. ராவுண்ணி மேனன் ஆகியோரனைவரும் தொழிலை விட்டு, ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து தொண்டாற்றியவர்கள்.

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த சில மாணவர்களும் படிப்பை நிறுத்திவிட்டு இயக்கத்தில் பங்குபெற வந்தார்கள். அவர்களில் சிலர் ஒருங்கிணைந்த உறுதியான பணிகளில் மிகுந்த ஆர்வம் காட்டினர்கள். கே. பி. அப்ப நாயர், டி. வி. சாத்துக்குட்டி நாயர், ஆர். வி. சர்மா, தேவேசன், மாணிக்கத்து கோபால மேனன், கே. வி. பாலகிருஷ்ண மேனன், சேகர மேனன் ஆகியவர்களுடைய பெயர்கள் இங்கே குறிப்பிடத் தகுந்தவை. நெருக்கடியான நிலைமைகளில் அவர்களில் சிலர் காட்டிய துணிவும் செயலாற்றலும் போற்றற்குரியவை.

பிற்காலத்தில் புகழுடன் விளங்கிய சிலரையும் இங்குக் குறிப்பிடுகிறேன். ஒருவர், ஐ. கே. பிள்ளை. ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியபோது அவர் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவர். அவர், தாம் படிப்பை நிறுத்திவிட்டுக் கேரள காங்கிரஸில் சேர்ந்து தொண்டாற்ற வந்திருப்பதாகவும், அவ்வாறு தன்னைக் கவர்ந்திழுத்த காரணங்கள் இன்னின்னவை என்றும் இயல்பானதொரு புன்னகை விளங்க என்னிடம் வந்து கூறினர். அவ்வாறுதான் நாங்கள் அறிமுகமானேம். ஸ்ரீ பிள்ளை, என்னிடம் மிகுந்த அன்புடன் பழகும் தோழரானர். நெடுங்காலம் அவர் காங்கிரஸுக்கு உள்ளார்ந்து தொண்டாற்றினர். இயக்கத்துக்காகப் பல வகைகளில் கஷ்ட நஷ்டங்கள் அநுபவித்தார்.

காங்கிரஸின் இலட்சியங்களை மக்களிடையே பரப்ப, அவர் கொல்லத்திலிருந்து 'ஸ்வராட்' என்ற பெயரில் ஒரு மலையாளப் பத்திரிகையை வெளியிட்டார். சிறிது காலம் சென்றபின் பிள்ளை காங்கிரஸிலிருந்து விலகி, எம். என். ராயின் கட்சியில் சேர்ந்தார். இறுதி நாட்களில் எங்களிடையே அரசியல் விஷயங்களில் கருத்து வேற்றுமை நிலவிய போதிலும், அது எங்களுடைய உள்ளார்ந்த நட்புறவுக்குக் குறுக்கீடாக அமையவில்லை.

ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிய நாட்களில், ஒரு நாள் ஓர் இளைஞர் காங்கிரஸ் அலுவலகப் படியேறி வந்தார். பம்பாயில் சட்டக் கல்வி பயின்றுகொண்டிருந்த மாணவர் அவர். படிப்பு வேண்டாம் என்று கருதி, பொதுத் தொண்டில் ஈடுபடும் ஆர்வத்துடன் வந்ததாகக் கூறினர். சட்டையும் கோட்டும் அணிந்து, கையில் குடையுடன் முற்றத்தில் வந்து நின்ற அந்த மாணவர்தாம் பின்னாளில் நாட்டுத் தொண்டாற்றிப் பேரும் புகழும் எய்திய கே. கேளப்பன்.

ஒத்துழையாமை இயக்கம் தோன்றியபோது, முகம்மது அப்துர் ரஹிமான், அலிகார் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார். படிப்பை நிறுத்திவிட்டு அவர் கோழிக்கோடு வந்தார். அப்துர் ரஹிமானின் நெடுநெடுவென்ற உயர்ந்த மேனியும், அடர்ந்த மீசையுமான தோற்றமும், உற்சாகம் ததும்பும் பேச்சும், ஒரு முறை கண்டாலே, அவரைத் தம்பால் கவர்ந்திழுத்துக்கொள்ளக்கூடியவை. காங்கிரஸிலும் கிலாஃபத் இயக்கத்திலும் அவருடைய தொண்டு நினைவுகூரத்தகுந்தது. 'அல் அமீன்' என்றொரு இதழைத் தோற்றுவித்து ஆசிரியராகவுமிருந்து வெளியிட்டுவந்தார். அவருடைய பெயரும் புகழும் உச்சத்தில் ஒளி வீசிய நாட்களில், இரக்கமற்ற காலன் அந்த தேசாபிமானியைக் கவர்ந்து சென்றான். அவருடைய அகால மரணம், கேரள தேசிய செயற்களத்துக்கு மிகப் பெரியதோர் இழப்பாகும்.

நாங்கள் முதலில் பிரசாரப் பணிபுரிய ராஜ்யம் முழுவதும் காங்கிரஸ் கமிட்டியின் கிளைகள் அமைப்பதில் கவனம் செலுத்திவந்தோம். ஒரு வாரத்தில் இரண்டு மூன்று முறைகள் அதற்காக நான் கோழிக்கோட்டிலிருந்து வெளியூர் செல்வேன்.

முகமதியர்களுக்கு காங்கிரஸின் இலட்சியங்களைப் பற்றிக் கூறி உணர்த்துவதற்கும், அவர்களை இயக்கத்தில் சேர்ப்பதற்கும். இ. மொய்த்து மௌல்வி ஆற்றிய தொண்டு குறிப்பிடத்தகுந்தது. சாதாரண மனிதன் புரிந்துகொள்ளும் வகையில் எளிய மொழியில் அவர் காங்கிரஸின் திட்டங்களைப் பற்றியும், செயல்களைக் குறித்தும், கிலாஃபத் இயக்கத்தின் இலட்சியம் குறித்தும் ஆயிரக்கணக்கான முகமதிய மக்களுக்கு எடுத்துரைத்தார். ஏராளமான பொதுக்கூட்டங்களில் நாங்கள் பேசினோம். சில நாட்களில் மூன்று நான்கு கூட்டங்கள்கூட இருக்கும். அந்நாளிலிருந்து இந்நாள் வரை, மொய்த்து மௌல்வி பொதுத் தொண்டாற்றி வந்திருக்கிறார்.

பெரிய சொற்பொழிவாளரில்லை யெனினும் அஸன் கோயா மொல்லவின் புன்னகை முகமும், உற்சாகமும் இயக்கத்துக்கு ஆதரவாக அமைந்தது. காங்கிரஸுக்கான நிதி திரட்டும் வகையில் மனிதர்களைக் கண்டு பேசி, உதவி கோரி அஸன் கோயா மொல்ல நல்கிய ஒத்துழைப்பை அன்றைய காங்கிரஸார் மறப்பதற்கில்லை.

பெருந்தல்மன்னை முகம்மது முஸலியார் மற்றொரு உற்சாகமான காங்கிரஸ் தொண்டர். ஒத்துழையாமை இயக்கம் துவங்கிய காலத்திலேயே அவர் காங்கிரஸ் பிரசாரப்பணியில் ஈடுபட்டவர். அரைக்கை வெள்ளைச் சட்டையணிந்து, ஒரு துண்டைத் தலையில் மடித்துக் கட்டிக் கொண்டு முஸலியார் பேச்சு மேடையில் ஏறிவிட்டால், இரண்டு மணி நேரமேனும் அவையினரின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருப்பார்.

அநாயாசமாகப் பேசக்கூடியவர். ஒலிபெருக்கி இல்லாத காலம் அது என்பதை மறக்கலாகாது.

காங்கிரஸ் பிரசாரத்துக்கு வடக்கு மலபார் சென்றிருந்தபோது நிகழ்ந்ததோர் ரசமான நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. பொதுக் கூட்டத்தை ஒரு பள்ளிவாசலுக் கருகில் ஓர் திடலில் ஏற்பாடு செய்திருந்தனர். உயர்ந்த மேடை; அதன்மேல் மேசை நாற்காலி போட்டு அலங்கார விதானத்துடன் பந்தல் அமைத்திருந்தனர். கூட்டத்துக்கு மக்கள் நிறைந்து கூடினர்கள். மேடையின்மீது என்னுடன் எட்டுப் பத்துப்பேர் அமர்ந்திருந்தனர். கூட்டம் முடிய சுமார் இரண்டு மணி நேரமாயிற்று. எல்லாம் முடிந்து கீழிறங்கி வந்த பிறகுதான் அந்த மேடை ஓர் ஆழமான கிணற்றின்மீது சுற்றுச் சுவரில் பலகைகளைப் போட்டு அமைத்த மேடை என்று கண்டேன்! பலகை உடைந்திருந்தால் நாங்கள் அனைவரும் கிணற்றில் வீழ்ந்திருப்போம்! எத்தகையதோர் துணிச்சலான ஏற்பாடு! வேலை எளிதாக முடிந்துவிட வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கருத்து. விபத்து நேரக்கூடுமே என்ற அச்சத்துக்குரிய ஐயத்தை நான் விண்டபோது, 'நல்ல உறுதி யான பலகைகள்; அஞ்சுவதற்கு ஒன்று மில்லை' என்று அந்தப் பொறுப்பாளிகள் மறுமொழி புகன்றனர்.

கோமுக்குட்டி மௌல்வி, கொல்லத்து பரீது சாஹப், திருவல்லா குருவிள மாத்யூ, சிற்றேடத்து சங்குப்பிள்ளை ஆகியோரனைவரும் ஒத்துழையாமை இயக்கத்தின் துவக்க நாட்களில் ஆர்வத்துடன் போராட்டக் களத்திலிறங்கிய வேறு சில நண்பர்கள்.

தொண்டர்களுக்குத் தேவையான பயிற்சியளிக்க காங்கிரஸ் அலுவல கத்தை ஒட்டி ஒரு பயிற்சிப்பள்ளி அமைத்தோம். கேரள ராஜ்யத்தின் பல பகுதிகளிலிருந்தும் பயிற்சிக்காகத் தொண்டர்கள் அங்கு வந்தார்கள். மூன்று வார காலம் பயிற்சி யளித்தோம். உலக வரலாறு, இந்திய வரலாறு, காங்கிரஸ் வரலாறு, காங்கிரஸின் செயல் திட்டங்கள், சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாறு என்றெல்லாம் அவர்களுக்கு உகந்தவற்றைக் கற்பித்தோம். நூல் நூற்றலும், மது விலக்குப் பிரசாரமும் பயிற்சித் திட்டத்தின் முக்கிய அம்சங்கள். வி.யூ. கோவிந்தன் நாயர் பயிற்சிப் பள்ளியின் மேலாளர். மதுரதாஸ் புருஷோத்தம் என்ற குஜராத்திக்காரர் நூல் நூற்பு வகுப்பை ஏற் றிருந்தார். காலை நேரங்களில் படிப்பும் மதியத்துக்குப்பின் கள்ளுக்கடை மறியல், நூல்நூற்றல் ஆகியவை நிகழ்ச்சி நிரல். வகுப்பு நடத்துவதற்கு நான் நாள்தோறும் காலையில் எட்டு மணிக்குப் பயிற்சிப் பள்ளிக்குச் செல்வேன். இரண்டு மணி நேரம் வகுப்பு நடத்திவிட்டு, காங்கிரஸ் அலுவலகத்துக்குத் திரும்பி வருவேன். கே. பி. கோபால மேனன்,

அச்சுதன் வக்கீல், அம்பலக்காட்டுக் கருணாகர மேனன் மூதலியோ ரனைவரும் அவரவர்க்குரிய பணிபுரிய காலையிலேயே காங்கிரஸ் அலுவ லகத்துக்கு வந்து விடுவார்கள். கருணாகர மேனன் ராஜ்ய காங்கிரஸ் கமிட்டியின் பொருளாளராக இருந்தார். எம். எம். கோவிந்த குருப்பும் நாள்தோறும் காங்கிரஸ் அலுவலகத்துக்கும், பயிற்சிப் பள்ளிக்கும் வந்து பணிபுரிவார். அரசாங்க அலுவலகங்களைப் போன்று ஒழுங் குடனும் பாங்குடனும் செயல்கள் நடைபெற்றன. ஹகீம் அஜ்மல் கானும், இராஜகோபாலாசாரியும் ஒரு முறை காங்கிரஸ் அலுவ லகத்தை வந்து பார்த்து, செயல் முறைகளையும் பாங்கையும் புகழ்ந்து பாராட்டியது எங்களுக்குப் பெரு மகிழ்ச்சியளித்தது.

கொச்சி ராஜ்ய காங்கிரஸ் செயலாளர் மூத்தேடத்து நாராயண மேனன். திருவிதாங்கூரில் ஏ. கே. பிள்ளையும், தலைச்சேரியில் கே. பி. அப்ப நாயரும் காங்கிரஸ் பணிகளை மேற்பார்வை செய்து வந்தனர்.

கொச்சி ராஜ்யத்தில் காங்கிரஸ் பிரசாரத்துக்காகச் சென்றிருந்த நான் இரண்டு நாட்கள் செருதுருத்திப் பயணிகள் விடுதியில் தங்கினேன். அங்குதான் கேரள ராஜ்ய காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாக அறிக்கையை எழுதித் தயார் செய்தேன். முதல் நிர்வாக அறிக்கையில் காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு தலைவர் இல்லை. ராஜ்ய காங்கிரஸ் நிர்வாகப் பொறுப்பு ஏழு பேர் அடங்கியதோர் கௌன்ஸிலுக்குரியதாக இருந்தது. அவர் களுடைய ஆணைக்குட்பட்ட செயலாளர் பொறுப்பேற்றுப் பணி புரிந்தார்.

காங்கிரஸ் அலுவலகத்தில் எனக்குப் பேருதவிபுரிந்தவர் கே. வி. குஞ்ஞுண்ணி மேனன். நல்ல உரைநடை எழுத வல்லவர். அறிக்கை களும் வேண்டுகோள்களும் தயாரிக்க அவரளித்த ஒத்துழைப்பு மதிப்பிட முடியாதது. உள்ளம் ஒன்றிய நட்புக்குரியவருக்கென்றும் எத்துணைப் பணியென்றாலும் தயங்கமாட்டார்.

1921ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்தில், ஒற்றப்பாலத்தில் முதல் கேரள ராஜ்ய மாநாடு கூட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்தோம். அதற்கு முன் மலபார் ஜில்லா மாநாடுதானே நடந்தது? புதிய ராஜ்ய காங்கிரஸ் அமைந்த பிறகு தாமதியாமல் முதல் மாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று முடிவு செய்தோம். ஒற்றப்பாலம் கமிட்டியின் செயலாளர் பி. ராமுண்ணி மேனன் அந்தத் தொழில் புரிந்ததொரு வக்கீல். மாணவராக இருந்த நாட்களிலேயே தேசிய இயக்கத்துடன் தொடர்பு கொண்ட இளைஞர். ஏற்ற பணி எதுவானாலும் முடித்து விடும் உறுதிபடைத்தவர். பெயரையும் புகழையும் ராமுண்ணிமேனன் பொருட்டாக்கவில்லை. இரவும் பகலுமாக விழைந்து செயலாற்றினார். சிறிது காலம் சென்றபின் மாத்ருபூமியின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக்

கொண்டபோது, அவருடைய இந்த நல்லியல்புகள் நன்கு துலங்கின. தன்னுடைய கொள்கையில் உறுதியும். அச்சமற்று விஷயங்களைத் திறனாய்வு செய்வதற்குரிய துணிவும், விருப்பமும் பலனும் கருதாது பொறுப்பை நிர்வகிக்கச் சித்தமாக இருந்த தன்மையும் ராமுன்னி மேனனைக் கேரளத்தில் பொதுத் தொண்டாற்றுபவர்களிடையே உயரிய நிலைக்குரியவராக்கின. தம் உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் உழைத்த அந்தத் தன்னலமற்ற தேசாபிமானியின் அகால மறைவு, கேரள மக்களை ஆழ்துயரில் ஆழ்த்தியது.

ஒற்றப்பாலம் மாநாட்டை வெற்றிகரமாக்கவேண்டும் என்று உறுதி கொண்டு ராமுண்ணி மேனன் உற்சாகமாக உழைத்தார். அவருக்கு உதவுவதற்கு நான் அவ்வப்போது கோழிக்கோட்டிலிருந்து ஒற்றப் பாலம் சென்றேன். ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிய பின் நடந்த முதல் மாநாடாக இருந்ததால் கேரளத்தின் பல பகுதிகளி லிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். டி. பிரகாசம் தலைமை தாங்கினர். பாலக்காட்டில் ஒரு பெரிய வக்கீலாக இருந்த எல். ஏ. சுப்பராமய்யர் வரவேற்புக் கமிட்டித் தலைவர். இந்தக் கேரள ராஜ்ய காங்கிரஸ் மாநாட்டுடன், ஒரு கிலாஃபத் மாநாடும், மாணவர் மாநாடும் நடைபெற்றன. திருச்சிராப்பள்ளியிலிருந்து வந்திருந்த லெய்து மூர்து சாஹப் கிலாஃபத் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினர். மாணவர் மாநாட்டுக்கு ஜார்ஜ் ஜோசஃப் தலைவராக இருந்தார்.

உறங்கிக்கொண்டிருந்த ஒற்றப்பாலம் ஒரு புதிய மலர்ச்சி எய்தியது. வாத்திய கோஷங்களும் சொற்பொழிவுகளும் சுலோக ஒலிகளும் இரண்டு நாட்கள் அங்கே முழங்கிக்கொண்டிருந்தன. அருஞ்சொற் புலவர் பாலியத் குஞ்ஞுண்ணி அச்சனின் எழுச்சியூட்டும் உரை கேட்ட வர்களைச் சிலிர்க்கச் செய்தது. ஒற்றப்பாலம் மாநாடு மக்களிடையே பேரார்வத்தை விளைவித்தது. அப்போது நிகழ்ந்ததொரு துர்ப்பாக்கிய நிகழ்ச்சியும் அதற்கு ஆதரவாக இருந்தது.

ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியபோது, அதை எப்படியேனும் அடக்கிவிடவேண்டும் என்ற எண்ணம் கொண்டனர் அதிகார வர்க்கத் தினர். இந்துக்களும் முகமதியர்களும் ஒன்று சேர்ந்து சுதந்திரப் போருக்குப் புறப்படுவதைப் பார்த்துக்கொண்டு அவர்களால் இருக்க முடியாது. அதை எதிர்ப்பதற்குரிய பல வழிவகைகளையும் போலீசார் ஆலோசித்து முடிவு செய்தனர். போலீஸ் சூபரின்டென்டண்ட் ஹிட்ச் காக்கின் தலைமையில் ஏராளமான காவல்துறை வீரர்கள் மாநாட்டுப் பந்தலிலிருந்து சிறிது தொலைவில் காத்து நின்றனர். மாநாட்டின் உயிர் நாடியாக விளங்கிய ராமுண்ணி மேனனைத் துன்புறுத்துவதற்கு ஒரு வாய்ப்பை எதிர்நோக்கிக்கொண்டிருந்தனர். மாநாடு தொடங்கி,

இரண்டாம் நாள் மதியத்துக்குப்பின் மாநாட்டுப் பந்தலிலும் சுற்று வட்டங்களிலும் பெருங்கூச்சலும் கலவரமும் தோன்றின. ராமுண்ணி மேனனையும், தொண்டர் தலைவர் ஸி. மாதவ மேனனையும், வேறு சிலரையும் போலீசார் அடித்துக் காயம் விளைவித்துவிட்டனரென்ற செய்தி பரவியது. காயமுற்று இரத்தம் ஒழுக, வெளுத்துச் சோர்ந்த ராமுண்ணி மேனனை, ஒரு முகமதியர் முதுகில் ஏற்றிக்கொண்டு மாநாட்டுப் பந்தலுக்குள் கொண்டுவந்தபோது, மக்களின் ஆவேசம் கிளர்ந்தெழுந்தது. எனினும், நம்முடைய போராட்டம் வன்முறை தவிர்த்ததென்ற உணர்வுதான் மக்களைப் போலீசார்மீது பாய்ந்து விடாமல் தடுத்தது.

ஏதேதோ நடந்துவிடக்கூடும் என்றஞ்சிப் பலரும் ஒற்றப்பாலத்தை விட்டு ஓடினர். நடந்த சம்பவங்களைப் பற்றி விசாரணை செய்து ஓர் அறிக்கை தயாரிக்க, மாநாடு ஒரு கமிட்டியை நியமித்தது. காங்கிரஸ் மாநாட்டுத் தலைவர் பிரகாசமும், வரவேற்புக் கமிட்டித் தலைவர் எல். ஏ. சுப்பராமய்யரும், கிலாஃபத் மாநாட்டுத் தலைவர் ஸைய்து மூர்து சாஹபும், மாணவர் மாநாட்டுத் தலைவர் ஜார்ஜ் ஜோசஃபும், காங்கிரஸ் கமிட்டிச் செயலாளன் என்ற நிலையில் நானும் அந்தக் கமிட்டியின் உறுப்பினர்கள். அடியிலால் காயமுற்றவர்களையும் பிறரையும் கண்டு சாட்சியங்கள் சேகரித்துக்கொண்டு நான் கோழிக்கோடு திரும்பினேன். ஒரு மாதத்தில் அறிக்கை வெளியாயிற்று. போலீஸ்காரர், ஹிட்ச்காக்கின் ஆணைப்படி வேண்டுமென்றே காங்கிரஸ் தொண்டர்களின் உடலுக்கு ஊறு விளைவித்தனர் என்றும், அத்தகைய கொடுமையை மக்களுக்கு அவர்கள் இழைக்கும் வகையில் அவர்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை என்பதும் எங்களுடைய ஏகமனதான கருத்து. அந்த அறிக்கை தனக்கு மான நஷ்டம் விளைவித்திருக்கிறதென்று காட்டி ஹிட்ச்காக் எங்கள்மீது மானநஷ்ட வழக்குத் தொடுத்தார். நாங்கள் நீதிமன்றத்தை விலக்கியிருந்த காலமாதலால், எங்களில் நால்வர் வழக்கை வாதிக்கச் செல்லவில்லை.

'இந்தியாவில் இன்று நடந்து வரும் நீதி-நியாயத்தில் இந்தப் பிரதிவாதிக்கு நம்பிக்கை இல்லாததால், இந்த வழக்கை வாதிக்கத் தயாராக இல்லை' என்று நான் கோர்ட்டாரின் முன் அறிவித்தேன். அவ்வழக்கில் கீழ் கோர்ட்டும் ஹைகோர்ட்டும் ஹிட்ச்காக்குக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறின. ஆனால் பொதுமக்களின் கருத்து எங்கள் அறிக்கைக்குச் சாதகமாக இருந்தது.

ஹிட்ச்காக் பிரபலமாக விளங்கியதொரு போலீஸ் அதிகாரி. அவர் நெடுங்காலம் மலபாரில் இருந்தார். ஏரநாடு கலகம் நிகழ்ந்தபோது, கலகக்காரரைப் பிடிக்கும் வகையில் தனித்திறமை காட்டியவர்.

பென்ஷன் பெற்று இங்கிலாந்து திரும்புகையில் இறந்துபோனர். அந்நாளைய போலீசார் முயன்று அவருக்கொரு நினைவுச் சின்னம் அமைத்தனர். கோழிக்கோட்டிலிருந்து செல்லும் சாலை மஞ்சேரிக்கும் மலப்புரத்துக்கும் பிரியும் இடத்தில் அது இருந்தது. அது ஒரு பெரிய கலகம் நிகழ்ந்த இடம் என்பது குறிப்பிடத்தகுந்தது. நாடு விடுதலை யடைந்த பின்னர், அதை அங்கே வைத்திருப்பது அவமானத்துக்குரிய தென்று கருதி அங்கிருந்து அகற்றினர். என்றாலும் அதன் அடையாளங்களை இன்றும் காணலாம்.

சிலர் ஒரு மனிதருக்கு நினைவுச்சின்னம் அமைக்கின்றனர். வேறு சிலர் அதை அழிக்கின்றனர். இது சாதாரணமாகக் காணக்கூடிய உண்மை. நம்முடைய நாட்டில் மட்டுமன்று. அந்நிய நாட்டிலும் இது நடக்கிறது. பிரிட்டிஷாரின் காலத்திலிருந்த சிலைகளையும் படங் களையும் ஊர்ப்பெயர்களையும் மாற்றுவதற்கொரு கிளர்ச்சி நம் நாட்டில் நடக்கவில்லையா? நம் யாராலும் வரலாற்றை மாற்றிவைக்க முடியாது. அது தேவையுமில்லை. அந்நிய ஆதிக்கத்தை நினைவூட்டும் நினைவுச் சின்னங்களை நாம் ஒரு படிப்பினையாகக் கருத வேண்டும். சென்ற உலகப் பெரும்போரில் ஜப்பானியர் சிங்கப்பூரைப் பிடித்தபோது பிரிட்டிஷ் ஆட்சியை நினைவூட்டும் பலவற்றை அழித்தார்கள். தங்களுடைய ஆதிக்கத்தின்கீழ் வந்ததற்கடையாளமாகச் சில கட்டடங் களையும் நிறுவனங்களையும் அவர்கள் தோற்றுவித்தார்கள். பிரிட்டிஷார் மீண்டும் கைப்பற்றிய பிறகு, ஜப்பானியர் நிறுவியவற்றை எல்லாம் அழித்தார்கள். இவ்வாறெல்லாம் வரலாற்றை மாற்ற இயலுமோ? நிகழ்ச்சிகளை நடவாததாகச் செய்ய முடியுமோ?

12

ஆபத்துக்கான அறிகுறிகள்

ஆறுமாத சிறைத்தண்டனைக்குப் பிறகு யாகூப் ஹஸனும், மாதவன் நாயரும், கோபால மேனனும், மொய்தீன் கோயாவும் 1921ஆம் ஆண்டு ஆகஸ்டு 17ஆம் தேதி விடுதலை பெற்று வந்தார் கள். மக்கள், அவர்கள் கோழிக்கோடு வரும் வரையில் எல்லா இடங் களிலும் வரவேற்பு உபசாரம் அளித்தார்கள். காங்கிரஸ் தொண்டர் களும், கிலாபத் தொண்டர்களும், பொதுமக்களும் வண்டியின் வரவை

எதிர்நோக்கிக் கோழிக்கோடு ரயில்நிலையத்தில் திரண்டு கூடியிருந்தனர். யாகூப் ஹஸன் சாஹப் நேராகச் சென்னை திரும்பினார். மற்றவர்களை ஊர்வலமாக நகரத்தில் அழைத்துச்செல்ல ஏற்பாடுகள் செய்திருந்தோம். ஊர்வலத்தின் முன்னணியில் டி. பி. சாத்துக்குட்டி நாயர் உரிய உடுப்பணிந்து, குதிரைமீதேறிச் சென்றார். வாத்திய கோஷங்களும் ஜே கோஷங்களும், ஆரவாரங்களுமாக மெல்ல மெல்ல ஒழுங்குடன் சென்ற அந்த ஊர்வலம் காண்பதற்கு அரிய காட்சியாக இருந்தது.

முகப்புக்களாலும் தோரண வாயில்களாலும் அலங்கரிக்கப் பெற்ற தெருக்களில் ஊர்வலம் செல்லையில் பல இடங்களிலும் மக்கள் தலைவர்களுக்கு மாலையணிவித்தார்கள். ஊர்வலம் சாலப்புரத்துக் காங்கிரஸ் அலுவலகத்துக்கு வருவதற்கு மூன்று மணி நேரமாயிற்று. அன்று மாலை கடற்கரையில் கூடிய பொதுக்கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்தார்கள். இந்து-முஸ்லீம் ஒற்றுமை மிக உயர்ந்த நிலையில் திகழ்ந்த நாட்கள் அவை. அந்த நன்னாளை ஒரு பெரிய விழா நாளாகவே நகர மக்கள் கொண்டாடினர். இதெல்லாம் முடிந்தபின்னர் மாதவன் நாயர் மஞ்சேரி சென்றார். இந்த வரவேற்புக்கான பல ஏற்பாடுகளில் நான் மூழ்கியிருந்ததால் சில நாட்களாகவே அலுவலகப் பணிகளை நிறுத்தி வைத்திருந்தேன். அவற்றை நான் கவனிக்கலானேன். தலைவர்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்று வருவதற்குச் சிலநாட்கள் முன்பிருந்தே ஏரநாட்டில் நிலைமை திருப்தியாக இல்லை என்பதுகுறித்துப் பல அறிக்கைகள் காங்கிரஸ் அலுவலகத்துக்கு வந்திருந்தன. அங்கெல்லாம் போலீசார் கிலாஃபத் கமிட்டிகளையும் காங்கிரஸ் கமிட்டிகளையும் பிரிப்பதற்கு முயற்சி செய்தனர். ஏதேனும் சாக்குச் சொல்லிக்கொண்டு கிலாஃபத் அலுவலகங்களுக்குச் சென்று பணிபுரிபவர்களை அடிப்பதும் கைது செய்வதும் சாதாரண நிகழ்ச்சிகளாயின. அத்தகைய அக்கிரமங்களைச் சில நாட்களாகவே தொண்டர்கள் பொறுத்திருந்தனர். வன்முறை தவிர்த்த கொள்கையை எதுவரையிலுமே கடைப்பிடித்துக் கொண்டு வாளாவிருக்கலாம் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. பல முறைகள் ஏரநாட்டுப் பொதுக்கூட்டங்களுக்கு நான் சென்றிருந்த போதும் பலர் நேரில் என்னிடம் இவ் விவரங்களைக் கூறினார்கள். போலீசார் எத்தகைய அக்கிரமம் செய்தாலும் நாம் வன்முறை தவிர்க்கும் கொள்கையிலிருந்து பிறழலாகாதென்று நான் தொண்டர்களுக்கு அறிவுரை நல்கினேன். என்றாலும் போலீசாரின் தொடர்ந்த இம்சைகளை மக்கள் பொறுக்கவொண்ணாதவராயினர். தொண்டர்களிடமிருந்து வந்த அறிக்கைகளும், ஏரநாட்டிலிருந்து வந்த வேறு சிலருடைய குற்றச்சாட்டுகளும் அதற்குப் போதுமான சாட்சியங்களாக இருந்தன.

காங்கிரஸ் கமிட்டிகள் வளர்ந்துவருவதைப் போலீசார் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ஆனால், கிலாஃபத் கமிட்டிகள் வளர்ந்து வருவதை அவர்கள் காணப் பொறுக்காமல் இவறி கொண்டனர். ஏரநாடு பல கலகங்களும் நிகழ்வதற்குரிய அரங்காக இருந்ததனால், கிலாஃபத் கமிட்டிகள் புதியதோர் கலவரதத்துக்குக் காரணமாகக்கூடும் என்று அவர்கள் அஞ்சினார்கள்.

கிலாஃபத் கமிட்டிகள் என்றால் யாதோ என்று வாசகர்கள் நினைக்கக் கூடும் கலீஃப் என்ற அரபுச் சொல்லுக்குப் பிரதிநிதி என்று பொருள். தெய்வத்தின் பிரதிநிதி என்று பொருளில் அச்சொல் வழங்கிவருகிறது. முகமது நபி வானுலகு சென்ற பிறகு, நாட்டின் ஆட்சிப்பொறுப்பும் சமயத் தலைமையும் ஒருவரிடமே ஒப்படைக்கப்பெற்றன. அத்தகைய முதல் கலீஃபைத் தேர்ந்தெடுத்தனர். பின்னர் சிறிதுகாலம் சென்ற பின் அப் பதவி அரேபிய அரச குடும்பப் பரம்பரையினருக்குரியதாயிற்று. இறுதியில் அது துருக்கி சுல்தானுக்கு வந்தது. சுல்தானுக்குக் கிடைத்த இப் பெரிய பதவியை முகமதியர்கள் பொதுவாக ஒப்புக் கொண்டனர். ஏனெனில், கலீஃப் பதவி ஏற்கும தலைவன், தானே ஆட்சி நிர்வாகம் செய்யக்கூடியவனாகு அரசனாக இருக்கவேண்டும் என்ற கட்டாயம் அவர்களுக்கு இருந்தது. அந்நிலையில்தான், கலீஃப் முகமதியரின் புண்ணியத் தலங்களைப் பாதுகாத்து நிர்வகிக்கக்கூடிய சக்திவாய்ந்தவராக இருக்க முடியும் என்று அவர்கள் கருதினர்கள். துருக்கி சுல்தானிடம இவை அமைந்திருந்ததனால் யாரும் அவருடைய தகுதி குறித்து வினா எழுப்பவில்லை. இந்தியாவிலுள்ள முகமதியரும் துருக்கி சுல்தானைக் கலீஃபாக ஏற்றிருந்தனர். பிரிட்டிஷாரும் துருக்கி சுல்தானை அந்நிலையில் மதித்திருந்தனர்.

கலீஃபின் ஆணைகளை, அல்லாவின (நபி நாயகத்தின்) ஆணைகளைப் போன்றே கருத வேண்டுமென்றும் அவற்றுக்கு மாறுக நடக்கும் முகமதியர்களுக்குப் பரலோக பதவியடைய வழியில்லை என்பதும் அவர்களுடைய நம்பிக்கை. அதனால் கலீஃபின் நிலைக்குரிய அதிகாரங்களுக்கு எந்தவிதமான ஊறுகளும் நேரிடாமல் பார்த்துக்கொள்வது முகமதியருக்குரிய தர்மமென்பதும் அவர்களுடைய கொள்கை. இதனால் இஸ்லாமிய சமயத்தினரின் புண்ணியத தலங்கள் விளங்கும அரேபியா, முகமதியருடைய நேர்முக ஆளுகைக்கும் பாதுகாப்புக்கும் உரியதாக இருக்கவேண்டுமென்ற உறுதியான கட்டுப்பாடும் அவர்கள் கொண்டிருந்தார்கள்.

கிலாஃபத் விஷயத்தை விளக்க முற்படுகையில் அத் தத்துவத்தின் சாரமாகிய இந்த இரண்டு அம்சங்களையும் நினைவில் கொள்ளவேண்டும்: முதலாவதாக கலீஃபின் பதவியையும் அதிகாரத்தையும் நிலைநிறுத்தும்

பொறுப்பு எல்லா முகமதியருக்கும் உண்டு. இரண்டாவதாக, இஸ்லாம் சமயத்தினரின் மையத்தலமான அரபு நாடும் அங்குள்ள புண்ணியத் தலங்களும் பிற மதத்தினரின் அதிகாரத்தின்கீழ் வந்துவிடக்கூடாது. அப்படிப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் எல்லா முகமதியர்களுக்கும் உண்டு. இந்த இரண்டு நம்பிக்கைகளும் நெடுங்காலமாக அவர்களிடையே வேரூன்றி இருந்தன.

1914ஆம் ஆண்டில் தொடங்கிய முதல் உலகப் பெரும்போரில் துருக்கி சுல்தான் பிரிட்டிஷாருக்கு எதிராக ஜர்மனியின் பக்கம் சேர்ந்தார். இந்நிகழ்ச்சி இந்திய முகமதியரிடையே குழப்பத்தைத் தோற்றுவித்தது. அவர்கள் பிரிட்டிஷ் பேரரசரின் குடிகளல்லவா? எனவே பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு உண்மையாக நடக்கவேண்டியவர் களாக இருந்தனர். ஆனால் அதே சமயத்தில் துருக்கி சுல்தான் அவர்களுடைய சமயத்தலைவரான கலீஃபல்லவா? கலீஃபின் பதவிக்கும் அதிகாரத்துக்கும் ஆதரவாக நிற்கவேண்டிய கடமை எல்லா முகமதியர்களுக்கும் உரியதன்றே? இந்திய முகமதியர்களுடைய இந்த தர்மசங்கட மனநிலையை நன்குணர்ந்த பிரிட்டிஷார் போர்க் காலத்துக்கு வேண்டிய அவர்களுடைய ஆதரவைப் பெற ஒரு தந்திரம் செய்தார்கள்.

முகமதியர்களுடைய புண்ணியத் தலங்களுக்கு ஒரு கேடும் விளைவிப்ப தில்லை என்றும், போர் துருக்கி அரசருடன்தானென்றும், கலீஃபென்ற நிலையில் அல்ல என்றும், ஐரோப்பியச் சட்டங்களுக்குட்படாமல் கலீஃபுக்குச் சுயமாக அதிகாரம் செலுத்துவதற்கு ஆதரவளிக்க வேண்டுமென்ற முகமதியருடைய நம்பிக்கைகளைத் தாம் நன்குணர்ந்து ஆதரிப்பதாகவும், பிரிட்டிஷ் சக்கரவர்த்தியின் பிரதிநிதி என்ற நிலையில் அந்நாளைய இந்தியா வைஸ்ராய் ஓர் அறிக்கை விடுத்தார். அது, இந்திய முகமதியர்களை அப்போதைக்கு அமைதிகொள்ளச் செய்தது. அதன் பயனாக, பிரிட்டிஷாருக்குப் போருக்கு உதவியாக அவர்களுடைய பொருளும் ஆதரவும் தாராளமாகக் கிடைத்தன.

போர் முடிந்தது. வெற்றிபெற்ற பிரிட்டிஷார், தம் வாக்கை நிலைநிறுத்துவது குறித்து லட்சியம் கொண்டிருக்கவில்லை. 1920ஆம் ஆண்டு ஜூனில், பாரிஸ் நகரில் கையெழுத்தான உடன்படிக்கை கலீஃப் பதவிக்கு மிகுந்த ஊறு விளைவிப்பதாக இருந்தது. சுல்தானின் பதவியையும் அதிகாரத்தையும் வெற்றித் தரப்பினர் பெரும்பாலும் துண்டித்துக் குறுக்கிவிட்டனர். எந்தவகையான அதிகாரமுமின்றி, சுல்தான், பொம்மை சுல்தானாகவே எஞ்சினார்.

தங்கள் கலீஃபுக்கு நேரிட்ட இந்நிலை, இந்திய முகமதியரைப் பெரிதும் அமைதிகுலையச் செய்தது. கலீஃப் இழந்த பதவி அதிகாரங்களை

மீட்டுக்கொடுக்கவேண்டியது அவசியமென்று கருதினர்கள். அதற்காக அவர்கள் அனுப்பிய விண்ணப்பங்களும் வேண்டுகோள்களும் பயனளிக்காத நிலையில், தங்களுடைய நியாயமான கோரிக்கையை அறிவுறுத்துவதற்கு அவர்கள் கிளர்ச்சி செய்யத் தீர்மானம் செய்தனர். முகமதியரின் இந்த இலட்சியத்துக்கு ஆதரவளிப்பதாகக் காங்கிரஸாரும் உறுதி தெரிவித்தனர். இவ்வாறு ஒத்துழையாமை இயக்கத் திட்டத்தில், ஓர் அம்சமாக, கிலாஃபத் கோரிக்கையும் இடம் பெற்றது. நாடு முழுதும் கிலாஃபத் கமிட்டிகள் தோன்றின.

சாதாரண மக்கள், கிலாஃபத்தைக் குறித்துத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கவில்லை. இஸ்லாமிய சமயத்துக்கு விரோதமாக பிரிட்டிஷ் அரசாங்கம் ஏதோ செய்திருக்கிறதென்றும், அதனால் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக்கூடாதென்றும் மட்டுமே ஒரு சாதாரண முகமதியக் குடிமகன் கருதியிருந்தான். அந்த எண்ணமே அவர்களிடையே எழுச்சியைத் தோற்றுவிக்கக்கூடியதாக இருந்தது. தங்களுடைய சமயப்பற்றுக்கு ஊறு நேர்ந்துவிட்டதென்றுணர்ந்த முகமதியர் அதை மீட்கும் வகையில் எத்தகைய துணிச்சலான முயற்சிகளிலும் ஈடுபடக்கூடியவர்கள் என்பதை பிரிட்டிஷ் அதிகாரிகள் உணர்ந்திருந்தார்கள் அதனால் முகமதியர் பெரும்பான்மையினராக இருந்த ஏரநாட்டில் கிலாஃபத் கமிட்டிகள் பெருகி வருவதை எவ்வகையிலேனும் தடுக்கவேண்டுமென்று அவர்கள் உறுதி கொண்டார்கள்.

கிலாஃபத் இயக்கத்தை எதிர்த்து ஒடுக்க, மலபார் முகமதியரிடையிலேயே அரசாங்க அதிகாரிகள் ஓர் கட்சியைத் தோற்றுவித்தார்கள். கிலாஃபத்திலும் காங்கிரசிலும் சேருவது, சமய நோக்குடைய ஒரு முகமதியக் குடிமகனுக்குகந்ததல்ல என்று இக்கட்சியினர் சுட்டிக் காட்டினர் 1921ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் தேதி, புதிய பொன்னானியில் ஒரு கிலாஃபத் கூட்டம் கூட்டத் தீர்மானம் செய்தனர். அதே நாளில், அதற்கெதிராக மற்றொரு மாநாட்டுக்கு எதிர்க் கட்சியினர் பொன்னானியில் ஏற்பாடு செய்தனர். இம்மாநாடு அதிகாரிகளுடைய ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பெற்றது. கிலாஃபத் கமிட்டியினரை எக்காரணம் கொண்டேனும் முறியடிக்கும் சந்தர்ப்பத்தைப் போலீசார் எதிர்நோக்கி இருந்தனர். சில தொண்டர்கள் பொறுமை இழக்காமல் அமைதியைக் கடைப்பிடித்ததனாலேயே, அன்று பெரிய கலவரம் ஏதும் நிகழாமல் கூட்டம் முடிந்தது.

கேளப்பன் அந்நாளைய பொன்னானி காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர். காந்தியக் கொள்கைகளை உறுதியுடன் கடைப்பிடித்ததொரு வீரத் தொண்டர். பல சந்தர்ப்பங்களில் அவர் தம் உயிரையும் பொருட்

படுத்தாமல் கலகத்துக்கு முன் நின்றவர்களிடம் நயந்து பேசிச் சமாதானம் செய்தும், இன்னலுற்றோரைப் பரிந்துசென்று காப்பாற்றியும் முன்நின்று தொண்டாற்றினர்.

பொன்னனி நிகழ்ச்சிகள் நடைபெற்று மூன்று வாரங்கள் சென்றபின் திருரங்காடியில் நான் ஒரு பொதுக்கூட்டத்தில் தலைமை தாங்கியதை நினைவுக்குக் கொண்டுவருகிறேன். அக்கூட்டத்தைக் கிலாஃபத் கமிட்டியினர் ஏற்பாடு செய்திருந்தனர். கலவர நிகழ்ச்சிகளில் பெயர் பெற்ற ஆலி முஸலியார், லவக்குட்டி, குஞ்ஞலவி ஆகியோரனைவரும் கூட்டத்துக்கு வந்திருந்தனர். ஆலி முஸலியார் என்னுடன் மேடையில் அமர்ந்திருந்தார். குஞ்ஞலவி தொண்டர் படைக்குத் தலைவன். லவக்குட்டி செயலாளரில் ஒருவன். போலீசாரின் அக்கிரமச் செயல்கள் கண்டு கோபம் கொண்டு வன்முறையில் இறங்குவது, அஹிம்சைக் கொள்கையினருக்குரியதன்று என்றும் அமைதியுடன் தத்தம் கடமைகளை ஆற்றவேண்டும் என்றும் நான் மக்களை வேண்டினேன்.

அந்நாளில் ஏரநாடு தாலூக்கா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் எம். பி. நாராயண மேனன். பெருந்தல்மன்னாவில் தொழில்புரிந்து வந்த வக்கீல் அவர். தொழிலைவிட்டு அவர் காங்கிரஸுக்குத் தொண்டாற்ற ஏரநாட்டில் வந்து வாழ்ந்தார். அவருக்கு முகமதியருடைய பழக்கவழக்கங்கள் அனைத்தும் நன்முகத் தெரியும். சுற்றி நடப்பவைகளைக் கூர்ந்து கவனித்த நாராயண மேனன், இரண்டு மூன்று தடவைகள் கோழிக்கோடு வந்து ஏரநாட்டுச் சூழல் அமைதியாக இல்லை என்றும், உள்ளூறக் கனன்றுகொண்டிருப்பதாகவும் முன்னறிவிப்புச் செய்திருந்தார். போலீசாரின் அக்கிரமச் செயல கண்டு பொறுக்க இயலாமல், மக்கள் அவர்களை எதிர்த்துப் பழிவாங்கும் வகையில் ஆயுதங்களைச் சேகரித்து வைப்பதாகவும் அவருக்கு விவரங்கள் தெரியவந்தன. திருரங்காடிக் கூட்டத்தில் இந்த விவரங்களை நான் மனதில் கொண்டுதான் மக்களிடம் எக்காலத்தும் வன்முறை தவிர்க்கவேண்டும் என்று குறிப்பாக வேண்டிக்கொண்டேன். என் வேண்டுகோள் பலனளிக்க வேண்டும் என்று நம்பி, விரும்பினேன். ஆனால், பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், என்னுடைய நம்பிக்கையின் அடிநிலையையே தகர்த்துவிட்டன.

13

மலபார் கலக ஆரம்பம்

1921ஆம் ஆண்டு, ஆகஸ்ட் பத்தொன்பதாம் தேதி இரவு பத்து மணிக்கு அப்துர் ரஹிமான என்னைக் காண காங்கிரஸ் அலுவலகத்துக்கு வந்தார். அந்நாள் அவர் மலபார் கிலாஃபத் கமிட்டியின் செயலாளர். முக்கியமான சில செய்திகளைக் கூறுவதற்குத்தான் அப்துர் ரஹிமான் வந்திருந்தார். ராணுவப் படையினரும் போலீசாரும் நிறைந்ததொரு தனி வண்டி கோழிக்கோடு ரயில்நிலையத்திலிருந்து சென்றதென்றும், அவர்களுடன் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் தாமஸும், போலீஸ் சூப்டரின்டெண்டண்ட் ஹிட்சாக்கும், ஏ. எஸ். பி. ஆமுவும் இருந்தனர் என்றும் அவர் தெரிவித்தார். அவர்கள் எங்குச் சென்றனர் எனற விவரம் அப்துர் ரஹிமானுக்குத் தெரியவில்லை. மலப்புரத்துக்கருகிலுள்ள பூகோட்டுருக்குச் சென்றிருக்கலாம் என்றுதான் அவரால் ஊகிக்க முடிந்தது. சில நாட்கள் முன்பு பூக்கோட்டூரில் சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடந்திருந்தன. அதனால் ராணுவப் படையினர் அங்கே செலலக் காரணம் இருந்ததாக அவர் நம்பினார். அவர்கள் அங்கு யாரையேனும் கைது செய்தால், அமைதியுடன் அதை ஏற்க வேண்டும் என்று மக்களுக்கு அறிவுரை நல்குவது அவசியம் என்று கருதி அங்கு நான் விரைந்து செல்ல வேண்டும் என்று தெரிவிப்பதற்காகவே அப்துர் ரஹிமான் என்னைத் தேடி வந்திருந்தார். நிலைமையைக் குறித்து நான் சிறிதுநேரம் ஆலோசனை செய்தபிறகு, நான அப்போது செல்லவேண்டாம் என்று முடிவு செய்தேன். ராணுவப் படை எங்கே சென்றது என்று தீர்மானமாகத் தெரியாது. அவர்கள் பூக்கோட்டுருக்குத்தான் சென்றிருக்கின்றனர் என்றாலும், அவர்கள் செலலுமுன் அங்கே என்னால் போய்ச் சேரமுடியாது. அதனால் அப்போது கிளம்பிப் பயனில்லை என்று தோன்றியது. சரியான தகவல் தெரிந்ததும் காலையிலேயே எனக்கு அறிவிக்கும்படி கூறி நான் அவரை அனுப்பினேன். இருபதாம் தேதி மதிய நேரத்துக்குப் பிறகு, கோழிக்கோட்டில் பலவகையான செய்திகள் பரவலாயின. 'ஏராநாட்டில் எங்கோ கலகம். ராணுவத்தார் ஏராளமான பேரைச் சுட்டுக் கொன்றுர்கள். கலகக்காரர்களும் படையினர் சிலரைக் கொன்றுவிட்டனர். அவர்கள் கோழிக்கோட்டுக்கும் வருகிறுர்கள்' என்றெல்லாம் செய்திகள் நகர்முழுதும் பரவலாயிற்று. விவரமறிய மக்கள் காங்கிரஸ் அலுவலகத்துக்கு வந்தார்கள்.

மாலையில் கலகம் திரூரங்காடியில்தான் தொடங்கிற்றென்றும், கலகக் காரர் படையினரை அங்கிருந்து விரட்டினரென்றும், கொலை-கொள்ளை முதலிய தீச்செயல்கள் நடக்கிறதென்றும் தகவல்கள் வந்தன. விவரிக்க இயலாத திகில் நகரெங்கும் மக்களைக் கவ்வியது. கடைகள் வியாபாரத்தலங்கள் மூடப்பட்டன. மக்களுடைய நடமாட்டம் குறைந்தது. அந்திக்குமுன் வீடு திரும்பிவிட வேண்டுமென்ற கவலையுடன் சிலர் விரைந்து சென்றனர். உரத்துப் பேசக்கூட மக்கள் அஞ்சினர்.

காங்கிரஸ் அலுவலகத்தில் ஆட்கள் எப்போதும் வந்து போய்க் கொண்டிருந்தனர். இரவு பதினேழு மணி வரையிலும் யாரேனும் வந்துகொண்டிருந்தனர். அதற்குப் பிறகு நான் குளித்து, உணவு கொண்டு படுக்கைக்குச் சென்றேன். உறக்கம் கொள்ளவில்லை. ஏதேனும் அரவம் கேட்டால் சட்டென்று எழுந்து வெளியே பார்ப் பேன். பிறகு படுப்பேன். சிறிதுநேரம் இவ்வாறு சென்றது.

இரவு ஒரு மணியிருக்கும். கீழே ஏதோ சந்தடியைச் செவியுற்றேன். பாதையில் சிலர் வீடு நோக்கி வருவதாகத் தெரிந்தது. நெருங்க நெருங்க அவர்கள் பேச்சுக்குரலும் செவியில் விழுந்தது. நான் எழுந்து வராந்தாவில் நின்று கீழே நோக்கியபோது, ஏழெட்டுப் பேர் வீட்டின் முன் நின்றது தெரிந்தது. 'யாரது?' என்று குரல் கொடுத்தேன். 'நாங்கள் ஏரநாட்டிலிருந்து வருகிறோம். சில உண்மைகளைத் தெரிவிக்க வந்தோம்' என்றனர். நான் கீழே இறங்கச் சென்றபோது, என் மனைவி, 'யாரென்றறியாமல் தனியே கீழே போகவேண்டாம். சாத்துக்குட்டி நாயரைக் கூப்பிடுங்கள்' என்றாள். சாத்துக்குட்டி நாயர் என்னுடன் காங்கிரஸ் அலுவலகத்திலேயே தங்கியிருந்தார். அவரைத் தட்டி எழுப்பினேன். வாயிலைத் திறந்து, வீட்டின் மேற்குப் பக்கமிருந்த முகப்புக்குச் சென்றோம். கையில் ஒரு விளக்கேற்றி வைத்துக்கொண்டிருந்த நாங்கள் அவர்களை அங்கு அழைத்தோம்.

'நாங்கள் செறுவண்ணூரைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இரண்டு பேருக்கும் திரூரங்காடி. அங்கு நடந்த விவரங்களைக் கூற வந்தோம்' என்று அந்தக் கூட்டத்தில் இருவரைச் சுட்டிக்காட்டி ஒருவர் என்னிடம் தெரிவித்தார். கோழிக்கோட்டுக்கருகில் செறுவண்ணூர் என்றோர் இடம் இருக்கிறது. அங்கிருந்துதான் அவர்கள் வந்திருந்தனர்.

படையினர் அன்று காலையில் திரூரங்காடிக்குச் சென்றதும், மக்களைக் கைது செய்தனர்; பள்ளிவாசலை முற்றுகையிட்டனர்; அவர்கள் மக்களைச் சுட்டபோது சிலர் அவர்களை எதிர்த்துத் தாக்கினர். அவர்கள் விரிவாக இந்த விவரங்களை அறிவித்து, கலெக்டர் தாமஸும் ஹிட்ச்காக்கும் மாண்டவரின் பட்டியலில் இடம்பெற்றதாகவும் உரைத் தார்கள். அது உண்மையல்ல.

'நாங்கள் இனி என்ன செய்யவேண்டும்?' என்று அவர்கள் என்னிடம் வினவி நின்றார்கள். 'நீங்கள் இப்போது ஒன்றும் செய்யவேண்டாம். நீங்கள் வீடு திரும்பி அமைதியுடனிருங்கள், போதும். நான் காலையில் திரூரங்காடிக்குப் புறப்பட்டுச் செல்கிறேன். அங்கிருந்து திரும்பிய பிறகு என்ன செய்யவேண்டும் என்று நிச்சயமாகச் சொல்கிறேன்' என்று நான் மறுமொழி கூறினேன்.

'நாளைக்குப் பட்டாளத்தார் அங்கு வருவார்கள். அதை நாம் தடுக்க வேண்டாமா? சாலையில் மரத்தை வெட்டிக் குறுக்கே போட்டால் என்ன?' என்று அடுத்த கேள்வி எழும்பியது.

'அப்படிச் செய்தால் அது புதிய விபரீதங்களைக் கிளப்பிவிடும். அதனால் படையினர் செல்வதைத் தடுக்க முடியாது. என்னவானாலும் நீங்கள் அப்படியெல்லாம் கிளம்பிவிடவேண்டாம்!' என்று கூறி, நான் அவர்களை அனுப்பி வைத்தேன். காலையில் என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை செய்தேன். மீண்டும் படுத்துக்கொண்டாலும் உறக்கம் வரவில்லை.

இருபத்தொன்றாம் தேதி காலை புலர்ந்தது. கலகம் பற்றிய செய்திகளை அறிய மக்கள் காங்கிரஸ் அலுவலகத்தில் வந்து கூடினார்கள். பலவிதமான செய்திகள் திரிக்கப்பெற்றும் ஜோடிக்கப் பெற்றும் நகரெங்கும் பரவலாயின. நாங்கள் சிலர் கலகம் நிகழும் இடத்துக்குக் கிளம்புவதைக் கேள்வியுற்று, சில நண்பர்கள் விரைந்து வந்து அந்தத் துணிச்சல் தகாதென அறிவுறுத்திச் செல்ல வந்தனர்.

காலை எட்டு மணிக்கு நானும், யூ. கோபாலமேனனும், இ. மொய்த்து மௌல்வியும் ஒரு காரில் புறப்பட்டோம். டி. பி. சாத்துக்குட்டி நாயரும் எங்களுடன் இருந்தார். வழியில் குண்டோட்டித் 'தங்களி'ன் வீட்டில் படி ஏறியபோது, அங்கே இன்னும் பலர் வந்து கூடினர். அங்குதான் முதல் நாள் திரூரங்காடியில் நிகழ்ந்த சம்பவங்களைப்பற்றி நாங்கள் விவரமாக அறிந்துகொள்ள முடிந்தது. அன்று காலையில் திரூரங்காடியிலிருந்து பெருங்கூட்டமாகக் கலகக்காரர்கள் மஞ்சேரிக்குக் கிளம்பிச் சென்றதாகத் தெரியவந்தது. அவர்கள் மஞ்சேரியை அடையுமுன் நாங்கள் அங்கு போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்று உறுதி கொண்டோம்.

காரில் சிறிது தொலைவு சென்றதும், வழியில் பெரிய மரங்களை வெட்டிக் குறுக்கே போட்டிருப்பதைக் கண்டு காரை அங்கே நிறுத்த வேண்டியதாயிற்று! அங்கிருந்த சிலர் எங்களுக்கருகில் வந்தனர். அவர்கள் எங்களை இன்னாரென்று புரிந்துகொண்டனர். வழி நெடுகிலும் மரங்களை அவ்வண்ணம் வெட்டிக் குறுக்கே போட்டிருப்பதாகவும், மஞ்சேரி வரையிலும் நாங்கள் காரில் செல்ல முடியாதென்றும்

அவர்கள் தெரிவித்தார்கள். காங்கிரஸின் கட்டளைப்படியே மரங்களை வெட்டிச் சாலையின் குறுக்கே போட்டிருக்கின்றனரென்றும், அதை மேற் பார்வையிடத்தான் நாங்கள் வந்திருந்தோம் என்றும் அவர்கள் கருதுவதையும் நாங்கள் புரிந்துகொண்டோம். இந்நிலையில் மஞ்சேரிக்கு எவ்வாறு செல்ல முடியும்? பயனில்லை என்று கருதி, குண்டோட்டிக்குத் திரும்பினோம். காரை அங்கேயே நிறுத்திவிட்டு, நாங்கள் கால் நடையாகவே திரூரங்காடிக்கு நடந்தோம்.

குண்டோட்டியிலிருந்து திரூரங்காடிக்குச் செல்ல, சுமார் இரண்டு மணி நேரமாயிற்று. வயலும், வெளியும், குத்துச் செடிகளும், மொட்டைக் குன்றுகளும் கடந்து செல்லும வழிநடை கடினமாகத்தானிருந்தது. ஆங்காங்கே வழியில் ஆட்கள் கூடிக்கூடி நின்றனர். இளநீரும் அவலும் அளித்து எங்களை உபசரிக்கவும் தவறவில்லை. கலகத்தைப் பற்றிய பல புதிய தகவல்களை அவர்கள் சொன்னார்கள். திரூரங்காடிக் கருகிலுள்ள ஆற்றின் கரையை நெருங்குகையில் மணி நான்காகி விட்டது. நாங்கள் அங்கு வரும் விவரம் அங்கிருந்தவர்களுக்கு முன்னதாகவே எட்டியிருந்தது. ஆற்றின் மறுகரையில் ஒரு பெரிய கூட்டம் எங்களை எதிர்நோக்கிக் காத்திருந்தது. நாங்கள் ஆற்றைக் கடந்து சென்றோம். அக்கூட்டத்தில் பல்வேறு ஆயுதந் தாங்கியவர்களைக் கண்டேன். படகைவிட்டிறங்கி நாங்கள் கலகம் நிகழ்ந்த இடத்துக்குச் சென்றபோது அவர்களும் எங்களைத் தொடர்ந்து வந்தனர்.

எங்களுக்குப் பழக்கமாயிருந்த பலரை அக்கூட்டத்தில் கண்டோம். முந்தையநாள் நடந்த நிகழ்ச்சிகளை அவர்கள் தெளிவாகத் தெரிவித்தார்கள். கலகம் நிகழ்ந்த இடங்களையும் காட்டினார்கள். ஒரு மாடி வீட்டுக்கு எங்களை அழைத்துச் சென்றனர். நான் அந்த மாடி வராந்தாவில் நின்று கீழே வெளியே குழுமியிருந்த மக்களைப் பார்த்தேன். திரூரங்காடிக்கு நேர்ந்த இரங்கத்தக்க நிலைக்கு வருந்தி, மக்களின் பொதுவான நன்மை கருதி அமைதியைக் கடைப்பிடிப்பதே நன்று என்று எடுத்துரைத்தேன். அறிவுரை கேட்கும் நிலையில் அவர்கள் இல்லை என்பதை நான் நன்குணர்ந்திருந்தேன். எனினும், பொறுமையும் நன்கு சிந்தித்துப் பார்க்கும் விவேகமும் தேவையாக இருந்த சந்தர்ப்பம் அது என்பதை உணர்ந்த சில தொண்டர்களும் அங்கு இருந்தனர். அவர்கள் அங்கிருந்தவர்களில் ஒரு சிலரையேனும் தங்கள் செல்வாக்கையும் நயத்தையும் பயன்படுத்தி அமைதியுறச் செய்ய முடியும் என்ற நம்பிக்கைகொண்டு நான் அவ்வாறு இயம்பினேன். இருபதாம் தேதி நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இங்குச் சுருக்கமாகக் கூறுகிறேன்.

ஆகஸ்ட் பத்தொன்பதாம் தேதி இரவு, படையினரையும் போலீசாரையும் ஏற்றிச்சென்ற தனி வண்டி, கோழிக்கோட்டிலிருந்து புறப்பட்டுப் பரப்பனங்காடியை அடைந்தது. ராணுவத்தார் அங்கு இறங்கிக்கொண்டனர். அங்கிருந்து ஐந்து நாழிகை தொலைவிலுள்ள திரூரங்காடிக்குச் சென்றனர். திரூரங்காடிக்குச் செல்லும் வழிகளிலும் ஆற்றுத் துறைகளிலும் அவர்கள் காவலரை நிறுத்தி வைத்தனர். விடியற்காலை ஐந்து மணிக்குள் இந்த ஏற்பாடுகள யாவும முடிந்து விட்டன. திரூரங்காடியின கிழக்குப்புறத்திலுள்ள பள்ளிவாசலையும், கிளாம்பத் அலுவலகததையும், சில முக்கியத் தொண்டர்களுடைய வீடுகளையும் ராணுவப் படையினர் சூழ்ந்துகொண்டனர். பொழுது புலர்ந்தபோது, ஜில்லா மாஜிஸ்ட்ரேட் தாமஸும், போலீஸ் சூபரின்டென்டண்ட ஹிட்ச்காகும், மற்றும் சிலரும் அங்கெல்லாம் பரிசோதனை செய்தார்கள். கிளாம்பத அலுவலகத்தில் 'ரிகார்டுகளை'க் கைப்பற்றினர். சிலரைக் கைது செய்து போலீஸ் சாவடிக்குக்கொண்டு சென்றனர். அதுவரையிலும எங்கும ஏதும் நிகழவில்லை. அதிகாலை நிகழ்ச்சிகள் வெளியே பரவுகையில மிகைப்படுத்தப் பெற்றன. திரூரங்காடிப் பள்ளிவாசலை ராணுவப்படை முற்றுகையிட்டிருக்கிறதென்றும், பள்ளிவாசலை வெடி வைத்துத் தகர்க்கின்றனரென்றும், முகமதியர்கள் வீடுகளில் இரவு புகுந்து ஆட்களைக் கைது செய்தனரென்றும், சிலரைச் சுட்டுக் கொன்றுவிட்டனரென்றும் செய்திகள் பரப்பனங்காடி, தானூர், திரூர், கோட்டைக்கல் முதலிய இடங்களில் விரைந்து பரவிற்று. முகமதியர் அதிகமாக வசிக்கும் பிரதேசங்கள் அவை. பல பகுதிகளிலிருந்தும் முகமதியர் திரூரங்காடிக்கு வந்து சேர்ந்தனர். கைது செய்தவர்களைப் போலீஸ் சாவடியில் வைத்திருக்கின்றனரென்று அறிந்துகொண்டு, மக்கள் திரள் அங்குச் செல்லலாயிற்று. சுமார் ஒரு பர்லாங் தொலைவு சென்றதும் அவர்களைக் கண்டு, சில படை வீரரும் போலீசாரும் போலீஸ் சாவடிக்குள்ளிருந்து கூட்டத்தை எதிர் நோக்கி வந்தனர். 'உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று வினவினர். 'அரெஸ்ட் செய்தவர்களை விடுதலை செய்யவேண்டும். எங்களுக்கு வேண்டியது அதுதான்!' என்றார் ஆலிமுஸலியார். திரூரங்காடியின் கிழக்குப் பள்ளிவாசலில் சமயக் கல்வி ஆசானாக இருந்தார் ஆலி முஸலியார். அங்கிருந்த முகமதியர்களிடையே அவருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது.

'அரெஸ்ட் செய்தவர்களை விடுகிறோம் நீங்கள் அங்கேயே நில்லுங்கள்?' என்று ஹெட்கான்ஸ்டபில் மொய்தீன் கூட்டத்தினரிடம் மொழிந்தான். அதன்படி எல்லோரும் அங்கேயே அமர்ந்தனர். அரை நிமிஷம் செல்லுமுன், அம் மக்களுக்கு எதிராகச் சுடுவதற்குப் படை

அதிகாரி ஆணையிட்டார். உடனே வெடிகள் செவிகள் அதிர முழங்கின. துப்பாக்கி ஓசையும், காயமுற்றவர் எழுப்பிய ஓலக்குரலும், மக்களின் அதிர்ச்சியுற்ற கூவலும், பீதியுற்று அலையக்குலைய ஓடியவர்களுமாக அந்த இடம் ஓர் சிறிய போர்க்களமாகிவிட்டது. ராணுவத்தாரின் கொடிய சதிச் செயலைக்கண்டு பெருஞ்சினம் கொண்ட மக்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களை எறிந்து அவர்களை எதிர்த்துத் தாக்கினர்கள். துப்பாக்கி குண்டுகளைப் பொருட்டாக்காமல் அவர்கள் முன்னேறினர்கள். பலர் மாண்டு வீழ்ந்தனர். அப்படியும் ராணுவத்தாரை அவர்கள் எதிர்த்துத் தாக்குவதை நிறுத்தவில்லை. ஹெட்கான்ஸ்டபில் மொய்தீனும் இரண்டு வெள்ளையரும் மாண்டவர்களில் சிலர். ராணுவத்தார் அஞ்சி ஓடிப் போலீஸ் சாவடிக்குள் ஒளிந்துகொண்டனர். பிறகு கூட்டம் அங்கிருந்து நகர்ந்தது. இறந்து வீழ்ந்தவரை எடுத்து அடக்கம் செய்யவும் காயமுற்றோரைச் சிகிச்சைக்குத் தூக்கிச் செல்லவும், ஆலி முஸலியாரும் அவருடைய ஆதரவாளரும், பள்ளிவாசலுக்குச் சென்றனர்.

பரப்பனங்காடி, தானூர் முதலிய இடங்களிலிருந்து வந்த மக்கள் இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு திரும்பிச் செல்கையில் அரசாங்க அலுவலகங்களிலும், போலீஸ் சாவடிகளிலும், ரயில் நிலையத்திலும், நீதிமன்றத்திலும் புகுந்து கொள்ளையிட்டனர். ரயில் பாதையைத் தகர்த்தனர்; தந்திக் கம்பிகளை அறுத்தனர்; எதற்கும் துணிந்த கலகக்காரர்களாக அவர்கள் மாறினர்கள். அந்தப் பிரதேசங்களிலிருந்த மக்களை அச்சமும் கிலியும் கப்பிக்கொண்டன.

திரூரங்காடியில் நிகழ்ந்த சம்பவங்களைக்குறித்து அறிந்து அங்கிருந்த ராணுவப் படையினருக்கு உதவியாக மலப்புரத்திலிருந்து கிளம்பிய இரண்டு லாரிகளையும் கார்களையும் கலகக்காரர்கள் வழி மறித்தனர். ஆயுதங்களைக் கவர்ந்துகொண்டு ஆட்களையும் கொன்றார்கள்.

தங்களுக்கு எவ்வகையிலும் மீட்சி இல்லை என்றுணர்ந்த தாமஸும், ஹிட்ச்காக்கும், மற்றவரும், அந்த நெடிய இரவு முழுதும் போலீஸ் சாவடியிலேயே ஒளிந்திருந்தனர். காலை ஐந்து மணிக்கு அங்கிருந்து கோழிக்கோட்டுக்குப் புறப்பட்டனர். ஆங்காங்குத் தண்டவாளம் பெயர்ந்திருந்ததால், ரயிலில் செல்ல இயலவில்லை. எனவே, ரயில் பாதையோடு அவர்கள் ஓடலானார்கள். ஒரு பெரிய கூட்டம் அவர்களைத் தொடர்ந்து ஓடியது. போலீசாரும் படையினரும் அவர்களைச் சுட்டுக் கொன்றுகொண்டு ஏழெட்டு மைல் நடந்தனர். ஃபரோக் வந்த பிறகு ரயில் வண்டியேறி அவர்கள் கோழிக்கோட்டுக்குச் சென்றார்கள்.

நடந்த சம்பவங்களை விரிவாக அறிந்ததும், பள்ளிவாசலுக்குச் சென்று ஆலிமுஸலியாரைக் காண வேண்டுமென்று விரும்பினேம்.

என்றாலும் பொழுது சென்றுவிட்டதால் அன்று நாங்கள் பள்ளி வாசலுக்குச் செல்லவில்லை. நாங்கள் திருரங்காடியிலிருந்து திரும்புகையில் இரவு மணி எட்டுக்கு மேலாகிவிட்டது. தீவர்த்திகளுடன் மெதுவாக நடந்தோம். சுள்ளிக்காடுகளும், மூங்கிற் காடுகளும் கடந்து குண்டோட்டியை அடைந்தபோது இரவு பதிஞ்ஞெரு மணியாயிற்று. 'தங்கள்' வீட்டில் விருந்தினராய் ஆப்பமும் காப்பியும் அருந்தியபின் கோழிக்கோட்டுக்குப் புறப்பட்டோம்.

ஃபரோக்குக்குக் கிழக்கில் எட்டுமைல் தூரத்தில் ஓரிடத்தை அடைந்தபோது, சாலையில் சிலர் நிற்கக் கண்டோம் காரை நிறுத்தும்படி கை காட்டினார்கள். காரை நிறுத்திவிட்டு இறங்கிப் பார்த்தபோது அங்கிருந்ததொரு சிறு பாலம் உடைந்திருந்ததைக் கண்டோம். நாங்கள் காலையில் அந்த வழியில் சென்ற பிறகு திரும்பி வருவோமென்று மாலை வரையிலும் காத்திருந்ததாகவும், திரும்பி வராததால் வேறு வழி சென்றிருப்போம் என்று எண்ணிப் பாலத்தை உடைத்ததாகவும், ஆறு கடந்து கோழிக்கோட்டுக்குச் செல்ல தோணி ஏற்பாடு செய்வதாகவும் மொழிந்தனர். வேறு வழியில்லை. நாங்கள் அப்படித்தான் செல்ல வேண்டியிருந்தது.

எங்களைப்பற்றிய விவரம் எதுவும் தெரியாமல், கவலையுடன் தவித்துக் கொண்டிருந்த குடும்பத்தினரும், நண்பர்களும், இணைந்த தொண்டர்களும், மிகுந்த மகிழ்ச்சியுடன் எங்களை வரவேற்றனர். இதற்கிடையில் கோழிக்கோட்டிலும் வேறு சில இடங்களிலும் ராணுவச் சட்டம் நடைமுறைக்கு வந்திருந்தது.

14

கலகம் நிகழ்ந்த இடங்களில் சுற்றுப் பிரயாணம்

திரூரங்காடியில் நிகழ்ந்த சம்பவங்கள் எங்களைப் பெரிதும் வேதனைக் குள்ளாக்கின. அங்கிருந்து திரும்பிய பின்னர், கலகம் மற்ற இடங்களிலும் பரவாமல் தடுப்பது எங்கள் வேலையாயிற்று. ராணுவச் சட்டம் ஏறநாட்டிலும், வேறு சில இடங்களிலும் நிலவியதால், விரும்பியபடி எங்களால் அங்கே பிரயாணம் செய்ய முடியவில்லை. அதற்கு அதிகாரிகளிடமிருந்து அநுமதி பெறவேண்டியிருந்தது. ஜில்லா

மாஜிஸ்ட்ரேட்டிடம் அனுமதி பெறுவதென முடிவு செய்தேன். திரூரங்காடியிலிருந்து நான் திரும்பி வந்த மறுநாள் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் தாமஸுக்கு இவ்வாறு ஒரு கடிதம் வரைந்தேன்:

'ஏரநாட்டில் நடந்த சம்பவங்களைக் குறித்து உங்களைப்போல் நானும் மிகவும் வருந்துகிறேன். சில பிரதிநிதிகளுடன் நான் கலகம் நிகழ்ந்த இடங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களைக் கண்டு மீண்டும் அமைதியை நிலைநாட்ட ஆவன செய்ய வேண்டுமென்று ஆவல் கொண்டுள்ளேன். அந்த ஆவலை நிறைவேற்றுப் வகையில் தாங்களும் ராணுவ மேலதிகாரிகளும் வேண்டிய வசதிகளை அளித்துதவ வேண்டுமாய்க் கோருகிறேன். தங்கள் பதில் கண்டு நான் ஏரநாட்டுக்குப் புறப்படலாம் என்று கருதுகிறேன்.'

இக் கடிதத்தை ஜில்லா மாஜிஸ்ட்ரேட் வசம் சேர்ப்பதே தொல்லை மிகுந்த அனுபவமாக இருந்தது ராணுவச் சட்டம் நடைமுறையிலிருந்ததால், ஜில்லாத் தலைவரையோ, ராணுவ அதிகாரிகளையோ எளிதில் அணுகிவிட முடியாது அவர்கள் என்ன சொல்வார்களோ என்று மக்கள் அஞ்சியிருந்தனர். மாணிக்கத்து கோபால மேனன் அந்நாள் படிப்பை நிறுத்திவிட்டுக் காங்கிரஸில் தொண்டு புரிய வந்த மாணவர். கெட்டிக்காரர். இனிமையாகப் பேசிப் பழகக்கூடியவர். அவர் அந்தக் கடிதத்தை மாஜிஸ்ட்ரேட் தாமஸிடம் கொடுப்பதாக முன்வந்து ஏற்றுக்கொண்டார். கதர்ச் சட்டையும், காந்திக் குல்லாவும் அதிகாரிகளை வெறிகொள்ளச் செய்துகொண்டிருந்த அக் காலத்தில் அவற்றை அணிந்துகொண்டு அவர்களை அணுகுவதே அரியதொரு சாகசச் செயல். கோபால மேனன் துணிவுடன் கடிதத்தை எடுத்துக் கொண்டு ராணுவத்தாரின் கொட்டடிக்குச் சென்று கொடுத்தார். கொடுத்துவிட்டு வந்த பிறகு தாமஸைச் சந்தித்ததுபற்றி ரசமாக விவரித்தார். கடிதத்துக்கு மறுநாள் பதில் அனுப்புவதாகக் கூறினராம். அச் சமயத்தில் கோபால மேனன் காட்டிய துணிச்சலும் திறமையும் போற்றற்குரியவை. தூது சென்று பணியாற்றுவதில் அவர் புலர்த்திய சிறப்பியல்பு, பின்னாட்களில், கோபால மேனனை இந்தியாவின் சிறந்த ராஜதந்திரப் பணிக்குரிய தூதராகச் செயலாற்றும்வண்ணம் மலர்ச்சி பெற்றது.

தாமஸிடமிருந்து பதில் கிடைக்க இரண்டு நாட்கள் சென்றன. இந்திய அரசாங்கத்துடன் கலந்து ஆலோசனை செய்த பிறகுதான் பதில் கொடுத்திருக்கிறார் என்று தோன்றியது. அந்த பதில் இதுதான்: 'நீங்கள் அனுப்பிய கடிதம் கிடைத்தது. உங்களுடைய பிரசாரத்தின் தீய பலன்களை இப்போதேனும் நீங்கள் தெரிந்துகொண்டு, நீங்கள் மூட்டிய நெருப்பை நீங்களே அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது

குறித்து நான் மகிழ்ச்சி கொள்கிறேன். கலக-இடங்களுக்கு விரும்பிய படி செல்வதற்கான அநுமதியை நானும் ராணுவ மேலதிகாரியும் உங்களுக்கு வழங்கியிருக்கிறோம். உங்கள் முயற்சி வெல்க.' கடிதத்தில் இரண்டாவது வாக்கியம் என்னைச் சிறிது சினம் கொள்ளச் செய்தது. அன்றே அதற்குப் பதில் எழுதி அனுப்பினேன்.

'உங்களுடைய கடிதம் கிடைத்தது. கலக-இடங்களுக்குச் செல்வ தற்கு அநுமதி அளித்த உங்களுக்கும் ராணுவ கமாண்டிங் ஆபீசருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கலகத்துக்கு என் பிரசாரம் காரணம் என்று கூறியிருப்பதை நான் திருப்பிக் கேட்கிறேன். கலகத் துக்குக் காரணம் யாரென்பதைக் குறித்து விவாதம் நடத்தக்கூடிய நேரமல்ல இது.'

'நான் 24 காங்கிரஸ் தொண்டர்களுடன் நாளைக் காலையில் ஏரநாட்டுக்குப் புறப்படுகிறேன். நாங்கள் அங்குச் சென்று மக்களிடம் அமைதிக்கு வேண்டிய முயற்சியை மேற்கொள்ளுமுன், ராணுவத்தார் கலகக்காரர்களைச் சுட்டுக் கொல்வதாக இருந்தால் எங்கள் பிரயாணத் திலில் ஒரு பயனுமிராது போகும். அவ்வாறு செய்யாமலிருக்க வேண்டியதோர் ஆணையை ராணுவத்தாருக்கும் அனுப்புவீர்கள் என்று நம்புகிறேன்.'

இக் கடிதத்தை அனுப்பிய பிறகு மறுநாள் கிளம்ப நான் சித்த மானேன். ஆகஸ்ட் இருபத்தாறாந் தேதி காலையில் நாங்கள் இருபத்து நான்கு பேர் ஆறு ஜட்கா வண்டிகளில், கோழிக்கோட்டிலிருந்து கிளம்பி ஃபரூக் பாலத்தருகில் சென்றோம். பாலத்தருகில் ராணுவவீரர் காவல் புரிந்தனர். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வந்ததனால் பாலத் துக்குச் சிறிது தொலைவிலேயே எங்களைத் தடுத்து வழிமறித்தார்கள். பாலத்தின் பக்கமாக நின்ற ஒரு சார்ஜன்டிடம் நான் மாஜிஸ்ட்ரேட்டின் கடிதத்துடன் அணுகினேன். அவன் என் முன் துப்பாக்கியை நீட்டி 'யாரது?' என்றான் உரத்த குரலில்.

'ஒரு நண்பன்!' என்றேன் நான் பதிலுக்கு.

'இங்கு வா நண்பா!' என்று ஆணையிட்டான் அவன்.

நான் நெருங்கிச் சென்று கடிதத்தைக் காட்டினேன். பாலத்தைக் கடந்து செல்ல அநுமதியளிக்க அவனுக்கு அதிகாரம் கிடையாது. ஃபரூக் ஸ்டேஷனில் முகாமிட்டிருந்த டாடன்ஹாம் என்ற அதிகாரிக்குத்தான் அந்த அதிகாரம் இருந்தது. என் கடிதத்தை அவன் அவருக்கு அனுப்பினான். பத்து நிமிடங்களில் டாடன்ஹாம் நாங்கள் நின்ற இடத்துக்கு வந்தார். எங்களை ஒவ்வொருவராக எண்ணிப் பார்த்து, 'Pass 24 Non Cops — from Calicut Taluk to Eranad Taluk along the Feroke Bridge' என்று அந்தக் கடிதத்தின் பின்பக்கத்தில்

எழுதினேன். நாங்கள் ஏரநாட்டுக்குள் நுழைவதற்கான அநுமதிச் சீட்டு அது. 'Non Cops' என்பது, 'Non Co-operators' என்ற தொடரின் சுருக்கம். டாடன்ஹாமுக்காக நாங்கள் காத்திருந்தபோது, பாலத் தருகில் நின்ற சில போலீசார் எங்களை மிகவும் இழிவான வசைச் சொற்களால் அவமதித்தனர். எங்களிடையே மரியாதைக்குரிய பலர் இருந்தனர். அவர்களுடைய முகத்தில் போலீசார் காறித் துப்பவும் கூசவில்லை.

பாலத்தைக் கடந்து அக்கரை சென்றதும் எனக்கொரு ஐயம் தோன்றியது. திரும்பி வருவதற்கு அந்த அநுமதிச் சீட்டுப் போதுமோ? சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள டாடன்ஹாமைக் காண்பதற்கு நான் ஃபேரோக் ஸ்டேஷனுக்குச் சென்றேன். உடனிருந்தவர் வழியிலேயே நின்றனர். நான் சந்தேகத்தை வெளியிட்டதும் டாடன்ஹாம் திரும்பி வர அதுவே போதும் என்றார். என்னைக் கண்டபோது உள்ளத்தில் கிளர்ந்த வெறுப்பை அவர் அடக்கிக்கொள்ள முயன்றதை முகபாவம் விண்டது. நான் ரயில் நிலையத்திலிருந்து வெளியேறியதும், அவர், 'கலகக்காரர்களைப் போல் உங்களையும் தூக்கிலேற்ற வேண்டும்?' என்றார். 'அவசியமானால் நாங்கள் தெளிந்த மனச்சாட்சியுடன் தூக்கிலேறவும் தயாராகவே இருக்கிறோம்?' என்றேன் நான். 'நான் சும்மா தமாஷுக்குச் சொன்னேன்' என்று அவர் புன்னகை செய்தார். 'ஆனால் நான் உண்மையாகவேதான் மொழிந்தேன்' என்றேன். உடனே நான் வழியிலிறங்கி என் நண்பர்களுடன் சேர்ந்துகொண்டேன். அப்போது என்னுடன் இருந்தவர்கள் எல்லோரையும்பற்றி இப்போது எனக்கு நினைவில்லை.

ஆனால் கே. பி. கோபால மேனன், பொன்மாடத்து மொய்தீன் கோயா, யூ. கோபாலமேனன், மாணிக்கத்து கோபாலமேனன், கோம்ப்ர பெயில், கொடுங்கல்லூர் சேகர மேனன், அப்துர் ரஹிமான், குஞ்ஞு மது, கே. மாதவ வேனன், டி. வி. சாத்துக்குட்டி நாயர், மதுரவனம் கோவிந்த குருப்பு ஆகிய பலரையும் நான் நினைவுகூருகிறேன். கதர்ச் சட்டையும் காந்திக்குல்லாவும் அணிந்த நாங்கள் இரண்டிரண்டு பேராக ஃபேரோக்கிலிருந்து கால்நடையாகப் பயணமானோம். சாலையில் மிகச் சிலரே நடமாடினர். சாலைப்பக்கத்து வீடுகளில் ஆட்களை இல்லை.

ஃபேரோக்கிலிருந்து நாலைந்து மைல் கிழக்கே சென்றபின் சிறிது தொலைவில் இடிந்து சுகர்ந்ததொரு மாடிவீட்டிலிருந்து இருவர் எங்களை நெருங்கி வந்தனர். நாங்கள் திரூரங்காடிக்குச் செல்வதை அவர்கள் அறிந்திருந்தனர். கோழிக்கோட்டிலிருந்து படையினரோ போலீசாரோ சென்றால், அதைப்பற்றிய உளவு தெரிந்து கூறுவதற்காக ஆட்கள் ஆங்காங்கு ஒளிந்துநின்று கண்டார்கள் என்ற விவரத்தை நாங்கள்

பின்னர் அறிந்தோம். அவர்கள் இருவரும் அத்தகைய உளவாளிகளே. ராணுவத்தாரை ஏற்றிக்கொண்டு செல்லும் எட்டு-பத்துக் கார்களையும் லாரிகளையும் நாங்கள் வழியில் கண்டோம். எட்ட இருந்து நோக்குகையில் ராணுவத்தார் எங்களையும் கலகக்காரர் என்று கருதிச் சுட்டு விடக்கூடும் அதைத் தவிர்க்க நாங்கள் வருவதை முன்னதாக அவர்களுக்கு அறிவுறுத்திவிடுவது நலம் என்று அவர்கள் கூறினர்கள். எங்களுக்கும் அது நலம் என்று தோன்றியது. அவர்களில் ஒருவன் அப்போதே விவரம் அறிவிக்க திரூரங்காடிக்கு ஓடினான். நாங்கள் புழைக்கலை அடைய இன்னும் இரண்டு மணி நேரமாயிற்று. மெதுவாகவே நடந்து சென்றோம். மம்ப்ரத்துக்கடவை அணுகியபோது நாங்கள் கண்ட காட்சியை மறக்க முடியாது. காங்கிரஸ் கொடியும் கிலாஃபத் கொடியும் பிடித்துக்கொண்டு இரண்டு பெரிய படகுகளில் ஆயுதங்களேந்திய சில தொண்டர்களுடன் ஆலிமுஸலியாரின் ஆதரவாளர் அங்குக் காத்து நின்றனர். காங்கிரஸின் பிரதிநிதியான எங்களை கௌரவித்து வரவேற்கவே அவர்கள் வந்திருந்தனர்.

திரூரங்காடியிலும் அதை அடுத்த பிரதேசங்களிலும் பிரிட்டிஷாரின் ஆளுகை முடிந்திருந்தது. ஆலிமுஸலியாரும் அவருடைய ஆதரவாளருமே ஆட்சி செய்தனர். லவக்குட்டி அவர்களுடைய ஒரு பிரதிநிதி. முஸலியாருடைய மந்திரியாகப் பணியாற்றியவன். முப்பத்தைந்து வயசுக்கு மேற்படாத அந்த இளைஞன் கிலாஃபத் கமிட்டியின் பொறுப்பாளரில் ஒருவன். அந்த நிலையிலிருந்து முஸலியாரின் நம்பிக்கைக்குரிய மந்திரியாகும் நிலைக்கு அவன் உயர்ந்திருக்கிறான். லவக்குட்டி எங்களை வரவேற்க வந்திருந்தான்.

ஆறு கடந்து மறுகரை சென்றபின், அங்கு ஆலிமுஸலியாரின் ஆட்கள் சுமார் நூறுக்கு மேற்பட்டவர்கள் எங்களை வரவேற்றனர். அவர்களில் முஸலியாருடைய ஆட்கள் மட்டுமன்றி மேலும் பலரும் இருந்தனர். ஆற்றின் கரையிலிருந்து திரூரங்காடித் தெருவுக்குச் சென்ற பிரயாணம் ஒரு அரிய காட்சியாக இருந்தது. மக்கள் ஆங்காங்கு திரண்டு நின்றனர். லவக்குட்டி தன்கீழடங்கியவர்களுக்கு ஏதேதோ ஆணையிட்டவண்ணமிருந்தான். கால் மணி நேரத்தில் திரூரங்காடி கிலாஃபத் அலுவலகத்தின் முன் நாங்கள் வந்தோம். முஸலியாருடைய வீரர்கள் அங்கே நின்றனர். அவர்களைத் தவிர்த்தும் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். நானும் யூ. கோடால மேனனும், மொய்த்து மெளல்வியும் கிலாஃபத் அலுவலகத்தின் மாடி அறைக்குச் சென்றோம். நாலைந்து மேசை நாற்காலிகள் இருந்தன. அங்கு, ஆலிமுஸலியாருக்காகக் காத்திருந்தோம்.

தொண்டர்களுடைய அடியோசையும், தலைவனுடைய ஆணைகளும், அலுவலகத்தின் கெடுபிடியும் எங்களுக்கு ஆலிமுஸலியாரின் வருகையை

அறிவித்தன. அவர் நேராக மாடியேறி வந்தார். அவருடன் இரண்டு மூன்று பேர் இருந்தனர். நாங்கள் எழுந்து நின்று அவருக்கு வணக்கம் தெரிவித்தோம். மகிழ்ச்சி கொண்டு முஸலியார் எங்களை வாழ்த்தினர். ஒரு நிமிட நேரம் என்ன கூறுவதென்றறியாமல் நான் மௌனமாக இருந்தேன். பின்னர் திருரங்காடியில் நடந்த சம்பவங்களைப்பற்றி வினவியபோது, தயங்காமல் அவர் எல்லாவற்றையும் விவரிக்கலானர்.

அந்நாள் ஆலிமுஸலியாருக்கு அறுபத்தைந்து வயதிருக்கலாம் அதிகமாகப் பருமனின்றி ஒத்த உயரமும் சிவந்த மேனியினருமான முஸலியார் காண்பதற்குரிய வடிவம் கொண்டவர் கணுக்கால் வரையிலும் நீண்டதோர் வெண்மையான சட்டையும், தொப்பியின்மீதான தலைக்கட்டுமாகத் தோன்றினர் அவருடைய ஆணைக்குச் சித்தமாக ஏராளமான வீரர் அங்கே துடித்துக்கொண்டிருந்தனர்

ஆலிமுஸலியார் கூறியவற்றை எல்லாம் கேட்ட பிறகு 'இனி என்ன செய்யலாம் என்று நினைக்கிறீர்கள் ?' என்று வினவினேன்

'என்ன செய்ய வேண்டும்?' என்று அவர் என்னைத் திருப்பிக் கேட்டார். அந்த நெருக்கடி மிகுந்த நேரத்தில் மனச்சாட்சிக்குத் துரோகமின்றி ஒரு அறிவுரை அளிப்பது அத்துணை எளிதல்ல. என்னுடைய வருகையின் நோக்கத்தை அவர் ஊகித்துணர்ந்திருக்க வேண்டும்

'நான் கூறுவதைத் தவறுகக் கருதிவிடக் கூடாது' என்ற பீடிகையுடன் நான் தொடங்கி, என் கருத்தை அவர்களுக்கு அறிவித்தேன். கடந்து போனதைப்பற்றிக் கூறுவதில் பயனென்றுமில்லை. எதிர்பாராமல் நினைக்காத பல துன்பங்கள் நமக்கு நேர்ந்துவிட்டன. இனியும் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவது மேலும் துன்பங்களை, தீமையை விளைவிக்கக்கூடும். நாங்கள் இங்கு வருகையில் சில ராணுவ வண்டிகள் வருவதைக் கண்டோம் மேலும் இன்னமும் பலர் வருவதும் நிச்சயம். அவர்கள் வந்து சுட்டுத்தள்ளத் தொடங்கினால் என்ன நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா? அதைத் தவிர்க்கவேண்டுமானால் அரசாங்கத்தினர் கோரும்வண்ணம சிலர் ராணுவச் சட்டத்துக்குட்பட முன்வரவேண்டும் அப்படியானால்தான் திருரங்காடியையும், இங்குள்ள மக்களையும் காப்பாற்ற முடியும். ராணுவச் சட்டத்துக்குட்படுபவர்களுக்கு அவர்கள் நிச்சயமாகத் தண்டனை அளிப்பார்கள். ஆனால் அந்த ஒரு சிலரின் தியாகம் பெரும்பான்மையினரின் மீட்சிக்கு வழி செய்யும்.'

'அதற்கு ஆலிமுஸலியார்தாம் தொண்டருக்கு நயமாக எடுத்துக் கூறவேண்டும் இதுதான் செய்யக்கூடியதாக எனக்குத் தோன்றுகிறது' என்றேன். முஸலியார் எல்லாவற்றையும் செவியுற்று ஒரு

நெடுமூச்செறிந்தார். அங்கிருந்தவர்களைப் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் மௌனமாக இருந்தபின் என்னிடம் பின்வருமாறு மொழிந்தார்:

'நீங்கள் உரைத்தது சரிதான். என்ன செய்வதென்பதை மற்றவர்களிடமும் கலந்தாலோசனை செய்த பின்னரே தீர்மானிக்க முடியும். லவக்குட்டியையும் குஞ்ஞலவியையும் கண்டு அவர்களிடம் இந்த விவரங்களைக் கூறுவது நலம்.'

நான் அதற்கிசைந்தேன். ஆலிமுஸலியாரும், நாங்களும் சுமார் ஒரு மணி நேரம் உரையாடினோம். நாங்கள் வந்த கருத்தை ஒருவாறுக ஊகித்திருந்த சிலர், அவரவர்க்குகந்த வரையில் ஏதேதோ கூறுகின்றனரென்றும், நெடுநேரம் அங்குத் தங்குவது அபாயத்துக்குரியதென்றும் கீழிருந்து சிலர் எங்களுக்குச் செய்தி அனுப்பினர்கள். நாங்களும் திரும்பிச் செல்லத் தயாரானோம். கிலாஃபத் அலுவலகத்தின் முன் குஞ்ஞலவி நின்றிருந்தான். முதுகில் ஓர் வாளும் கையில் ஓர் வாளுமாக நின்ற அவன் என் அருகில் வந்தான். ஆலிமுஸலியாருடைய சேனையின் தலைவன் அவன். இருபதாந்தேதி திரூரங்காடியில் நிகழ்ந்த கலகத்தில் இரண்டு வெள்ளையரைத் தீர்த்துக்கட்டியவன் அவன்தான். அவனிடம் அன்று நடந்த நிகழ்ச்சிகளை நான் கேட்டறிந்தேன். சிறிது நேரம் இதெல்லாம் பேசிய பிறகு, அவனைத் தனியாக அழைத்துச் சென்று இனி என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டேன். 'கீழ்ப்படியும் கதை மட்டும் என்னிடம் சொல்ல வேண்டாம். அவர்கள் கையில் நான் சிக்கினால் என்னைக் கொல்ல மாட்டார்கள். மிதித்துக் கூழாக்குவார்கள். நான் அவர்களுடன் போரிட்டே மடிவேன்' என்று மிகுந்த பணிவுடன் மறுமொழி கூறினான் குஞ்ஞலவி.

'நீ அவ்வாறு செய்வது சரி. ஆனால், திரூரங்காடியின் நிலைபற்றிக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டாமா? பள்ளிவாசலை அவர்கள் வெடிவைத்துத் தகர்த்தால் என்ன செய்யலாம்?' என்று நான் மீண்டும் வினவினேன்.

'நாங்கள் அங்கு இருக்கையில் அவர்கள் பள்ளிவாசலுக்கு வெடி வைக்க முடியாது!' என்று மறுமொழி பகர்ந்தான் குஞ்ஞலவி. அவனுடைய நம்பிக்கை அது. இதற்குப் பிறகு அவனுடன் பேசிப் பயனில்லை என்று எனக்குத் தோன்றியது.

ஆலிமுஸலியாருக்கு நான் கூறியது உகந்ததாகத் தோன்றியது. என்றாலும், தம் தொண்டர்களுடைய விருப்பத்துக்கு மாறுகச் செயல் புரிய அவர் தயாராக இல்லை. இந்நிலையில் வன்முறைச் செயல்கள் தொடர்ந்துதான் நிகழும்.

அங்கு சப்-ரிஜிஸ்தராராக இருந்த எ. பி. கருணாகர மேனனின் கர்ப்பிணியான மனைவியும் குழந்தைகளும் கலகத் தலத்தில் அகப்பட்டுக்

கொண்டனர் என்றறிந்து அவர்களை அங்கிருந்து மீட்பதற்கு உதவ வேண்டும் என்று குஞ்ஞலவியிடம் கேட்டுக்கொண்டேன். அவன் அப்போதே அதற்கான ஏற்பாடுகளைச் செய்தான்

மம்ப்ரக்கடவு கடந்த பிறகு இரவு எட்டுமணியாயிற்று. படகில் மறு கரை செல்லும்பொழுது, பள்ளிவாசலிலிருந்து கேட்ட கூட்டுப் பிரார்த்தனை ஒலிகள அந்தக் காரிருளில் விவரிக்க இயலாத உணர்ச்சிகளை என்னுள் தோற்றுவித்தன. ஆங்காங்குச் சில தீவர்த்திகள் தெரிந்தன. எண்ணற்ற மின்மினிகள் ஆறறின் கரையிலுள்ள மரங் களில் மின்னிக்கொண்டு பறந்தது கண்டேன். பயண அநுபவங்களைப் பற்றி உடனிருந்தோர் ஏதேதோ கூறிக்கொண்டிருந்தனர். எனக்கு உள்ளத்தின் ஆழத்தில் தாங்கொணாச் சுமை நிலைகொண்டாற்போல் தோன்றியது. ஏதேதோ எண்ணங்கள், கவலைகள, மனதில தோன்றி மறைந்தன. படகிலிருந்து இறங்கி, அருகில் ஓரிடத்தில் சென்று இரவு தங்கினேம். மறுநாட கா லையில் மீண்டும பயணத்தைத் தொடர்ந்தோம்.

கருணாகர மேனனின் மனைவியை ஒரு சாய்வு நாற்காலியில் இருத்தி எங்களுடன் வந்தவர்கள் சுமந்து நடந்தனர். பத்து மைல் தொலைவி லுள்ளதொரு நாயா இல்லத்துக்குப் பகலுணவுக்குச் சரியான நேரத் துக்கு வந்தோம். அங்கே சிறிது நேரம் இளைப்பாறிய பிறகு நாங்கள் மீண்டும் யாத்திரையைத் தொடர்ந்து மாலையில் கோழிக்கோடு திரும்பினேம்.

15

கலகம் தீவிரமாகப் பரவுதல்

ஆகஸ்ட் இருபத்தாறும் தேதி சில தொண்டர்களுடன் நான் கோழிக்கோட்டிலிருந்து திரூரங்காடிக்குச் செல்கையில், ராணுவப் படையினரை ஏற்றிக்கொண்டு கார்கள்–வாகனங்கள் சென்றதாகக் கூறினேனல்லவா? அவர்களைப் பின் தொடர்ந்து சைகில்களில் ரிஸர்வ் போலீசாரும் சென்றனர். அவர்கள் திரூரங்காடிக்குத்தான் சென்று கொண்டிருந்தனர். மற்றும் சில இடங்களிலிருந்தும் கலகம் நிகழ்ந்த இடத்துக்கு ராணுவப் படை வந்துகொண்டிருந்ததாகப் பின்னர் தெரியவந்தது. ராணுவப் படையும், காவல்துறையினரும் வரும்

செய்திகளை, முன்னதாகவே ஆலிமுஸலியாரும், அவருடைய தொண்டர்களும் உணர்ந்துகொண்டிருக்கவேண்டும்.

பெண்களையும் குழந்தைகளையும், திருரங்காடியிலிருந்து உள்ளே தள்ளிப் பல இடங்களுக்கு முன்னதாகவே அனுப்பிவிட்டார்கள். தேவையற்ற கொடுஞ்செயல்களில் இறங்கக் கூடாதென்றும், கொள்ளை, கொலை முதலிய தீச்செயல்களில் இறங்கியவர்களுக்குத் தகுந்த தண்டனை அளித்துவிடுவாரென்றும், இந்துக்களுக்கு எந்த வகையிலும் தீங்கிழைக்கக்கூடாதெனறும் ஆலிமுஸலியார் தம் செல்வாக்குக்குட் பட்டவர்கள் அனைவருக்கும் அறிகை விடுத்திருந்தார். ஆலிமுஸலியாருடைய அதிகாரம் நிலைத்திருந்த நாட்களில் அப் பிரதேசத்தில் வன் செயல்கள் குறைவாகவே இருந்தது. என்றாலும் அந்நிலை வெகுநாட்கள் நீடிக்கவில்லை.

ஏற்பாடுகளெல்லாம் முடிந்த பிறகு ஆகஸ்ட் முப்பதாம் தேதி ராணுவ வீரரும், போலீசாரும் திருரங்காடிக்கு வந்து சேர்ந்தனர். பள்ளிவாசலின் அருகே பாசறைகொண்டனர். கிடங்குகள் வெட்டி, துப்பாக்கிகளை நிறைத்து, போருக்கு ஆயத்தம் செய்தனர். ஆலிமுஸலியாரும் வேறு சிலரும் பள்ளிவாசலுக்கு உள்ளே இருந்தனர். முப்பத்தொன்றாந்தேதி காலையில் ராணுவத்தினர் சுடத் தொடங்கினர். பள்ளிவாசலுக்குள் இருந்தவர்கள் அவர்களை நோக்கிச் சுட்டார்கள். போலீஸ் சாவடியிலிருந்தும் வேறு பல இடங்களிலிருந்தும் அவர்களும் ஆயுதங்களைச் சேகரித்து வைத்திருந்தனர். இவ்வாறு இருதரப்பினரிடையே மூண்ட தாக்குதல்கள் சிறிது நேரம் தொடர்ந்தது. இதற்குள் பள்ளிவாசலின் மூன்று புறங்களையும் படையினர் வளைத்துக் கொண்டனர். உச்சிவேளை நெருங்குகையில், என்ன செய்வதென்று பிரமித்துப்போன சிலர், உள்ளிருந்து வெளியே வந்தனர். அவர்களிடையே குஞ்ஞலவியும் இருந்தான். அவன் கையில் வாளும் கத்தியும் ஏந்தி, ராணுவத்தாரை எதிர்த்தான். சிலரை வெட்டியும் குத்தியும் கொன்றான். கலகக்காரர்களைப் படையினரால் எளிதாகப் பிடிக்கமுடியவில்லை. அவர்கள் பள்ளிவாசலுக்கு வடக்கே காடுகளில் ஓடி ஒளிந்தனர்.

பளளிவாசலுள் இருந்தவர்கள் பின்னும் சுட்டார்கள். வெடிமருந்தும் குண்டுகளும் தீர்ந்துபோகலாயின. அந்த நிலையில் படையினரை எதிர்ப்பது அசாத்தியம் என்று கருதி, கலகக்காரர்கள் வெள்ளைக்கொடி காட்டினர்கள். தாங்கள் கீழ்ப்படியச் சித்தமாயிருப்பதாக அறிவித்தார்கள்.

இவ்வாறு திருரங்காடிப் போராட்டம் முடிந்தது. ஆலிமுஸலியாரையும் மற்றவர்களையும் கைது செய்து மறுநாள் திருருக்குக் கொண்டு சென்றார்கள்.

இத்தகைய நிகழ்ச்சிகள் திரூரங்காடியில் மட்டும் நடக்கவில்லை. ஏரநாடு, வள்ளுவநாடு, பொன்னனி, கோழிக்கோடு தாலூக்காக்களில் பல இடங்களில் சிறிது காலத்துக்கேனும் பிரிட்டிஷ் ஆட்சி இல்லாத தாயிற்று. அதிகாரிகளும், போலீசாரும், ஊரார் பலரும், அந்த இடங்களிலிருந்து ஓடி வேறு பல இடங்களில் தஞ்சம் அடைந்தார்கள். அங்கெல்லாம் பச்சையாக அராஜகம் தாண்டவமாடிற்று.

பொன்னனி கஜானுவைக் கொள்ளையடிக்கும்பொருட்டு கிளம்பிய ரகளைக்காரர்களை வழியில் கண்டு, கேளப்பன் நயமாக அந்தத் தீச்செயல் செய்ய வேண்டாமென்று வேண்டிக்கொண்டார். இறுதியில், அவர் தன் உடலை மிதித்துத் தேய்க்காமல் அவர்கள் செல்ல முடியாது என்று கூறியவண்ணம் சாலையின் குறுக்கே, அவர்களுடைய வழியில் படுத்துக்கொண்டு, கலகக்காரரைத் திருப்பி அனுப்பினர். அந்தத் தீரச் செயல் போற்றற்குரிய அருஞ்செயல் அன்றே? அந்தக் கேளப்பன்மீது போலீசார், பிறகு, மாளிகைக்குத் தீ வைத்ததாகக் குற்றம் சுமத்தினர்கள்! மஞ்சேரியிலும், பெருந்தல்மன்னையிலும், பெருங் கூட்டமாகக் கலகக்காரர்கள் அரசாங்க கஜானுக்களை உடைத்துப் பணத்தைக் கொள்ளையிட்டார்கள். போலீஸ் சாவடியிலிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றினர்கள். அரசாங்க அலுவலகங்களில் புகுந்து 'ரிக்கார்டுகளை' அழித்தார்கள். இவ்வாறே ஏடவண்ணத்திலும் அட்டூழியங்கள் செய்தார்கள். சிறைச்சாலைகளிலும், காவல் கொட்டடிகளையும் திறந்துவிட்டார்கள்; கைதிகளை விடுதலை செய்தார்கள்.

மஞ்சேரி கோவிலுள்ளிருந்தவர்கள், வன்செயலாளர் வருவதை அறிந்து அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்கள். நிலம்பூர் கோவிலைச் சேர்ந்த காவலரும் கலகக்காரரும் மோதிக்கொண்டதில், காவலர் பலர் மாண்டனர். கோவிலுக்குள்ளிருந்த ஆயுதங்களைக் கலகக்காரர்கள் கைவசமாக்கினர்கள். கலகக்காரர்களுக்குத் தலைவர்களாக இருந்தவர்களில் பல பிரமுகர்கள் இருந்தனர். அவர்களிடையே புகழ் பெற்றிருந்தவர், வாரியன் குன்னத்து குஞ்ஞஹமத் ஹாஜி. ஐம்பத்தைந்து வயதினரான குஞ்ஞஹமது ஹாஜி ஆலிமுஸலியாரின் உறவினர் மட்டுமல்ல; சீடரும்கூட. திரூரங்காடியில் நிகழ்ந்த சம்பவங்கள் அவரைப் போராட்டத்தில் இறங்கச் செய்தன.

மஞ்சேரியில் நடந்ததொரு பொதுக்கூட்டத்தில் இந்துக்களுக்கு ஒரு தீங்கும் நேராதென்றும், கொள்ளையடிப்பவர்களுக்குக் கடுந் தண்டனை அளிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். அக் கூட்டத்துக்குச் சென்றதற்காகவே எம். பி. நாராயண மேனனின்மீது ராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பெற்றது. ராணுவக் கோர்ட்டு, அக் குற்றத்துக்காக அவருக்குப் பதினைந்தாண்டுக் காலம் கடுங்காவல் தண்டனை விதித்தது!

கலகக்காரர்களை விலக்குவதற்கும், அமைதியை நிலைநாட்டுவதற்கும், அந்தக் கடின நிலையிலும் நாராயண மேனன் சிறிதும் தளராது செய்த அரும் முயற்சிகளை, அந்த இடங்களில் உள்ளவர் அனைவரும் அறிவார்கள். என்றாலும் ஏறநாடடில் புகழ்பெற்றிருந்த காங்கிரஸ் செயலாளரைச் சும்மா விடுவதற்குப் போலீசாருக்கு மனமில்லை. அந்நாள் நிலவிய அநீதியான நடைமுறைகளுக்கு நாராயண மேனனுக்கு விதித்த நீண்டகாலக் கடுங்காவல் தண்டனையே சிறந்ததோர் உதாரணம்.

குஞ்ஞஹமது ஹாஜியின் கூட்டத்திலிருந்த கலகக்காரர், போலீஸ் இன்ஸ்பெகடர் சேக்குட்டியைச் சுட்டுக் கொன்று அவருடைய தலையை உயர்த்திப் பிடித்துக்கொண்டு மஞ்சேரியின் பல இடங்களிலும் ஊர்வலம் வந்தார்கள். தங்களுடைய விரோதிகளுக்கு ஓர் படிப் பினையாகக் கலகக்காரர் என்னென்ன வகையான குரூரச் செயல்களில் இறங்கினர்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம். இந்த வகையில் இந்து என்றோ, முகமதியர் என்றோ அவர்கள் வேற்றுமை பாராட்ட வில்லை.

கலகக்காரர்களுடைய இன்னொரு களம் கோழிக்கோட்டிலிருந்து மலப்புரம் செல்லும் வழியிலுள்ள இடம் பூக்கோட்டூர். அங்கு ஏற்கெனவே விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடந்திருந்தன. இயறகை எழில் மிகுந்த ஏறநாட்டில் மனங்கவரும் காட்சிகள் நிறைந்த இடம் அது. திரூரங்காடியில் நிகழ்ந்த சம்பவங்களைக்கேட்டு, அங்குப் புறப்பட்ட தொரு பெருங் கலகக் கூட்டத்தை, கே மாதவன் நாயரும், அப்துர் ரஹிமானும் தடுத்து நிறுத்தித் திருப்பி அனுப்பிவிட்டனர். அது ஆகஸ்ட் இருபதாந்தேதி நடந்தது. ஒரு வாரத்தில் பூக் கோட்டூரின் நிலை பின்னும் மாறியது. குன்றும, மலையும், காடும் நிறைந்த அந்தப் பிரதேசம் ஒளிந்துகொள்வதற்கு ஏற்ற இடம். அங்கு ஏராளமான கலகக்காரர் ஒளிந்திருந்ததாக ராணுவத்தாருக்கு உளவு கிடைத்திருந்தது. ராணுவத்தார் அங்கு வர இயலாதபடி வழி நெடுகிலும் மரங்களை வெட்டிக் குறுக்கே போட்டிருந்தார்கள். ஆகஸ்ட் இருபத்தாறும் தேதி காலையில் ராணுவம் பூக்கோட்டூர் சென்றது. ராணுவப் படை சாலையில் நின்று பார்த்தபோது, யாரையும் காணவில்லை. குன்றிலும் காடுகளிலும் சிறிது நேரம் வெடி வைத்துத் தாக்கினர்கள். அந்த இடங்களிலிருந்தும் ராணுவத்தாரைக் குறி பார்த்து குண்டுகள் பாய்ந்தன. குண்டுகள ஒரு பகுதியிலிருந்து மட்டும் வந்ததாகக் கொள்வதற்கில்லை. பல பகுதிகளிலிருந்தும் வந்தன. காட்டில் ஒளிந்திருந்த கலகக்காரரைப் பார்ப்பது ராணுவதினருக்குக் கடினமாக இருந்தது. வெடியோசை வெகு தொலைவுக்குக் கேட்கும்.

குண்டும் மருந்தும் தீரும் சமயத்தில் நடையை மாற்றி 'நஹர்' அடித்தார்கள். போருக்குச் சித்தமாகும்படி மக்களுக்கு அறிவிக்க, பள்ளி வாசலில் கொட்டும் பெரும்பறை. அது மக்கள் கூட்டம் ஒன்றுய்த் திரண்டு ராணுவத்தை எதிர்த்தது. மக்கள் அவர்களைத் தடியால் அடித்தனர்; வாளால் வெட்டினர்; கல்லெறிந்து காயப்படுத்தினர்; ஈட்டியால் குத்தினர். புற்றீசல் கிளம்பிஞற் போன்று எண்ணற்ற ஆட்கள் வெளிவந்துகொண்டிருந்தனர். குண்டுபட்டு எத்தனை பேரோ மடிந்தனர். 'பிடிடா, பிடி; அடி, வெட்டு, கொல்லு' என்றெல்லாம் கத்திக்கொண்டு முன்னே பாய்ந்து வந்த கலகக்காரர்களில் சுமார் முந்நூறு பேர் அந்தக் கைக்கலப்பில் மடிந்தனர் ராணுவத்தாருக்கும் பெருவகையில் இழப்பு நேரிட்டது. கலகம் நிகழ்ந்த காலத்தில் பூக்கோட்டூரில் நிகழ்ந்ததே மிகவும் கடுமையான கைகலப்பு என்று கொள்ளலாம்.

மக்களிடையே அச்சத்தைத் தோற்றுவிக்க, கலகம் நடந்த இடங்களில், ராணுவத்தார் கூட்டமாகச் சேர்ந்து திரிந்தனர். கலகக்காரர்கள் காடு மலைகளில் ஓடி ஒளிந்தனர். அவர்கள் ஒளிந்திருந்த இடத்தைக் காட்டிக் கொடுக்கப் படையினருக்கு மக்களுடைய ஆதரவு தேவையாக இருந்தது. அவ்வாறு யாரேனும் ராணுவத்தாருக்கு உளவு கூறியதாக ஐயுற்றாலே, கலகக்காரர்களின் சினம் அவர்கள் பால் திரும்பியது. அவர்கள் இக்காலத்தில்தான் இந்துக்களைத் துன்புறுத்தத் தொடங்கினர்கள்.

காடுகளில் கலகக்காரர்கள் வழக்கமாகப் போர்முறை பயின்றதாகக் கேள்விப்பட்டோம். அவர்கள் அருகிலுள்ள இடங்களுக்குச் சென்று கொள்ளையடித்து, உணவுப் பொருள்களும் ஆயுதங்களும் சேகரித்தனர். பல்வேறு இடங்களில் தங்கியிருந்த கலகத் தலைவர்களுக்கு விவரங்கள் அறிவிக்க ஒற்றர்களையும் ஏற்பாடு செய்திருந்தனர். 'ஸ்பெஷல்' போலீசுக்கும், அவர்களுக்கு உதவியாக வந்த ராணுவத்தாருக்கும் கலகக்காரர்களை விலக்குவது சாத்தியமில்லை என்று தோன்றியது. பிறகுதான், கூர்க்காப் படையை வரவழைத்தனர். அதற்குச் சிறிது காலமாயிற்று. அதற்குள் கலகக்காரர்களின் அக்கிரமங்களும், அவர்களுடைய செயற்களங்களும் பெருகின.

செம்பராச்சேரி தங்களும் தோழர்களும் பாண்டிக்காட்டில் போர்க் கருவிகளைச் சேர்த்துக்கொண்டு தயாராயினர். 1921ஆம் ஆண்டில் நவம்பரில் கூர்க்காப் படையினர் பாண்டிக்காட்டுச் சந்தையில் பாசறை கொண்டனர். செம்பராச்சேரி தங்களுடைய ஆட்கள் சந்தைப்பக்கம் வந்து அவர்களைச் சூழ்ந்துகொண்டனர். சந்தைக்கு வெளியே காவல் நின்ற படையினரைச் சுட்டுக் கொன்றனர். சந்தை மதிற்சுவரை வெடி

மருந்துகொண்டு தகர்த்து உள்ளே புகுந்தனர். கூர்க்காப் படையினர் போர் புரிவதில் புகழ்வாய்ந்த வீரர்கள். வெட்டுவதற்கும் குத்துவதற்கும் அஞ்சார். காடுகளில் போரிடும் தனித்திறம் படைத்தவர்கள். கலகக்காரர்கள் அவ்வளவுக்குப் பயிற்சியுடையவரில்லை. எனினும், கூர்க்காப்படையினரை எதிர்த்துப் போர்டுவதில் சிறிதும் குறையாத வகையில் வீரத்தையும் துணிச்சலையும் விளகினர்கள். வெட்டும், குத்தும், அடியும், மிதியுமாக இரண்டுமணி நேரத்துக்கு மேலாக அவர்களிடையே கடும் போர் நிகழ்ந்தது இருநூறுக்கும் மேற்பட்ட கலகக் காரர்கள் இந்தக் கைகலப்பில் மடிந்தார்கள். மாண்டு வீழ்ந்த ராணுவத்தார் எத்தனை பேரென்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. கலகத்தைத் தொடர்ந்து வேறு சில சம்பவங்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைத்துப் பார்க்கவேண்டும். ஏர நாடு தாலூக்காவில், கொன்னரா ஓர் சிறு கிராமம். கொன்னராவின் தங்கள், அந்தப் பிரதேசத்து முகமதிய மக்கள் தலைவனுகவும இருந்தான். பள்ளிகாசலை ராணுவம் மிதித்தது என்று அறிந்ததும், அவர்களை எதிர்க்கக் கொன்னராத் தங்களின் தலைமையில் ஒரு பெருங் கூட்டம் புறப்பட்டது. படையினர் பள்ளி வாசலில் இருந்து திரும்பிக் காட்டில்கரத்திருந்தனர். அச்செய்தியறிந்து, தங்களும் தோழர்களும் இரவில் அவர்களைச் சூழ்ந்துகொண்டனர். படையினர் சுடத் தொடங்கினர். இருள் சூழ்ந்திருந்ததனல், இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் இனம் புரிந்துகொள்வது கடினமாக இருந்தது. இதனலும் இருதரப்பிலும் பெருத்த சேதம் உண்டாயிற்று. விடியுமுன் தங்களும் எஞ்சிய ஆதரவாளரும் அங்கிருந்தகன்று கோழிக் கோடு தாலூக்காவில் ஒரு மலையில் சில நாட்கள் ஒளிந்திருந்தனர். அவ்வப்போது அங்கும் ராணுவத்தாருடன் கைகலக்க நேர்ந்தது. ஆயுதங்களும் ஆளபலமும் தீர்ந்து போனபிறகு, தங்கள் மாறு வேடம் புனைந்து வெளிவந்தார். சிறிது காலம் அவர் பல இடங்களிலும் அலைந்து திரிந்ததாகச் சொல்வார்கள். பின்னர் கூத்துப்பரம்பில் அவரைக் கைது செய்தனர். ராணுவக் கோர்ட் விசாரணை செய்தபின், அவரைக் கோயம்புத்தூர் சிறைச்சாலையில் தூக்கிலிட்டுக் கொன்றனர்.

திரூரங்காடியில் நிகழ்ந்த போராட்டத்தில், குஞ்ஞலவியும், வேறு சிலரும், ராணுவத்தினரை வெட்டிக் கொன்ற பிறகு காடுகளில் சென்றொளிந்தனர் என்று கூறினேனல்லவா? சில நாட்கள் காட்டில் இருந்த பிறகு கண்ணமங்கலத்துக்கருகிலுள்ளதோர் கோயிலின் பக்கம் ராணுவம் அவர்களைக் கண்டு எதிர்த்தது. அந்தக் கைகலப்பில் குஞ்ஞலவி மடிந்தான். அவ்வாறு கலகக்காரரிடையே முக்கியமாக இருந்ததொரு தலைவன், முன்னளில் என்னிடம் கூறிஞற் போன்று, போர்க்களத்திலேயே வீழ்ந்து மடிந்தான். லவக்குட்டி தூக்கில் தொங்கி மடிந்தான்.

கலகத்தைப்பற்றியதோர் முழுவரலாற்றை நான் இங்கே எழுதவில்லை. என் நோக்கம் அதுவன்று. கலகம் நடைபெற்ற காலத்தில், நிகழ்ந்த சில முக்கியமான சம்பவங்களைப்பற்றியும். அதில் பங்கு கொண்ட சில தலைவர்களைப்பற்றியும் சுருக்கமாகத் தெரிவிக்கும் விவரங்கள் மட்டுமே இவை. ஏறக்குறைய இருநூற்றிருபது கிராமங்கள் வரை பரவிய இக் கலகத்தின் விரிவான அழிவுச் சக்தியையும், அது நீடித்திருந்த காலத்தையும் சிந்தனை செய்து பார்க்குங்கால், இதுவரை மலபாரில் நிகழ்ந்த கலவரங்களில் மிகவும் முக்கியமானது இதுதான் என்பதில் ஐயமில்லை.

கலகக்காரருக்குச் சிறிதும் குறையாத அளவு குரூரமாகவே ராணுவத் தாரும் மக்களிடம் நடந்துகொண்டார்கள். பெண்களையும் குழந்தை களையும் வெட்டிக் கொன்றனர்; வீடுகளுக்குத் தீயிட்டனர். நாடு முழுதும் கொள்ளையிட்டனர். ராணுவத்தார் வருகின்றனர் என்ற சேதி கேட்டு அலையக்குலைய ஓடிய மக்களைக் காட்டு விலங்குகளை வேட்டையாடுவது போன்று சுட்டுக் கொன்றனர். குற்றம் புரிந்தவரும் நிரபராதிகளும், இளைஞரும் முதியோரும், பெண்களும் ஆண்களும் ஒரே மாதிரி உயிர் காத்துக்கொள்ளும்பொருட்டு வீடும் குடும்பமும் விட்டுக் காடு-மலைகளில் தங்கிப் பல நாட்களைத் தள்ளினர்கள்.

அக்காலத்தில், உலகோரை அதிர்ச்சியுறச் செய்த இன்னொரு நிகழ்ச்சி யையும் இங்கே கூறுகிறேன். 1921ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பத்தாந் தேதி கலகக்காரர்கள் தொண்ணூறு பேரைக் கைது செய்து திரூரிலிருந்து ஒரு வண்டியிலேற்றிக் கோயம்புத்தூருக்குக் கொண்டு சென்றார்கள். காற்றே வெளிச்சமே புக முடியாமல் அடைத்துப் பூட்டியதோர் இரும்புப் பெட்டியைப் போன்றிருந்தது வண்டி. ராணுவத்தினர் துப்பாக்கி முனையில் செருகிய ஈட்டிகளுடன் கைதிகளை உள்ளே தள்ளினர். வண்டி திரூரிலிருந்து அகன்றது. வெப்ப மிகுதி யால் தண்ணீர்த் தாகம் பொறுக்க முடியாமல் உள்ளிருப்பவர் நா-வறண்டு தவித்து, எழுப்பிய தீனக் குரல், வழிநெடுகிலும வண்டிக் குள்ளிருந்து கேட்டுக்கொண்டிருந்தது. பிறகு அப்படியே மெல்ல மெல்ல அடங்கிப்போயிற்று. நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு வண்டி போத்தனூரை அடைந்தது. பெட்டியைத் திறந்து பார்த்தபோது, உள்ளே கண்ட காட்சி திடுக்கிடச் செய்யும் பயங்கரமுடையதாக இருந்தது. நெருக்கிக்கொண்டு, ஒருவரை ஒருவர் பற்றிக் கடித்துக் கொண்டும் பிறாண்டிக்கொண்டும் கண்கள் துருத்திக்கொண்டு நாக்குகள் தொங்க, இறந்தவரும் உயிருள்ளவரும் வித்தியாசமில்லாதபடி வியர்வையும் மலமும் நீருமாக அலங்கோலமாகக் கிடந்த தொண்ணூறு மனித உடல்களின் பரிதாபத்துக்குரிய காட்சியை அங்கே கண்டனர்.

அறுபத்து நான்குபேர் மடிந்திருந்தனர். எஞ்சியவர் மரணத்தின் வாயிலில் துடித்துக்கொண்டிருந்தனர்.

ஆதரவற்ற கைதிகளிடம் இரக்கமற்று நடந்துகொண்ட அவர்களுடைய குரூரத்தன்மையை வெளியிலுள்ளவர் அறியவொண்ணுதபடி அதிகாரிகள் மறைக்க முயன்றாலும், நாங்கள் இவ்விவரங்களை மறுநாளே அறிந்துகொண்டோம். இச்செய்தியைச் சென்னைப் பத்திரிகைகளுக்குத் தெரிவிக்க நாங்களே ஒரு தொண்டரை அனுப்பினோம்.

ராணுவ ஆட்சி ஆறு மாதத்துக்குமேல் நீடித்தது. கலகக்காரரை விசாரணை செய்ய ஒரு தனிக் கோர்ட்டும் நிறுவினர்கள். அதற்கென்று சில தனிச் சட்டங்களையும் உருவாக்கினர்கள். கலகக்காரர் பலரைத் தூக்கிலிட்டுக் கொன்றார்கள். எத்தனையோ பேர்களை அந்தமான் தீவுக்கனுப்பினர்கள். பத்து முதல் பதினைந்தாண்டு வரை தண்டனை பெற்றவர்கள் கொஞ்சமில்லை. கலகத் தலைவர்களாகிய ஆலி முஸலியார், செம்பராச்சேரித் தங்கள், குஞ்ஞஹமது ஹாஜி ஆகியோரை மலப்புரத்தில் சுட்டுக் கொன்றார்கள்.

கலகக்காரைத் தண்டித்தாற் போன்று, கலகக்காரருக்கு உதவி செய்த சில மரியாதைக்குரிய மனிதர்களுக்கும் தண்டனை வழங்கினர். எம் பி. நாராயண மேனன், கே. கேளப்பன், இ மொய்த்து மௌல்வி, மண்ணூர்க்காடு இளையன் நாயர், முகம்மது அப்துர் ரஹ்மான், அஸ்ஸன் கோயாமொல்ல ஆகியோர் அத்தகையோர்.

கே. வி. கோபால மேனனின் தம்பி, கே. பி. பாலகிருஷ்ண மேனனைப் பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் தனியாகக் குறிப்பிடவேண்டும். கேளப்பனுடன் பொன்னானியில் இருந்து காங்கிரஸில் தொண்டாற்றிய இளைஞர். படிப்பை நிறுத்திக் காங்கிரஸில் பொதுத் தொண்டாற்றவே வந்தவர். கலகம் தொடங்கிய நாட்களிலேயே அவரைக் கைது செய்து கண்ணனூர்ச் சிறையிலிட்டனர். அந்த வீர இளைஞர் சிறையில் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

காங்கிரஸின் இலட்சியங்களை நிறைவேற்றும் முயற்சியில் வீர மரணமடைந்த முதல் தியாகி அவர். அவருடையதொரு நிழற் படத்தை ஜார்ஜ் ஜோசஃப் காங்கிரஸ் அலுவலகத்துக்கு அளித்தது நினைவுக்கு வருகிறது. கேரள காங்கிரஸார் நினைத்துப் போற்றுதற்குரிய அமரராளர் அவர்.

ராணுவக் கோர்ட், கலகக்காரர்களை விசாரணை செய்த முறையைக் குறித்து மலபாரில் பிரசித்திபெற்றதொரு கிரிமினல் வக்கீலான மஞ்சேரி ராமய்யர் குறிப்பிட்டார். ஒரே குற்றத்துக்கான இரண்டு கோஷ்டிகளான பிரதிவாதிகளை வெவ்வேறு நீதிபதிகளின்முன் குற்றம் சாட்டி நிறுத்தினர்கள். இரண்டு வழக்குகளிலும் சாட்சியங்கள் வேறு மாதிரி இருந்தன.

ஒரு பிரதிவாதி கிலாஃபத் செயலாளனாகவோ, ஒத்துழையாமை இயக்கத்தைச் சேர்ந்தவனாகவோ இருந்தால், அவனுக்கு மீட்சியே கிடையாது. அவனிடம் நீதிபதிகளுக்கு எத்தகையதோர் இரக்கமும் கிடையாது. கொலைக் குற்றம் சாட்டப் பெற்ற ஆறு பிரதிவாதிகளில் ஒருவன் அந்தக் குற்றம் நிகழ்ந்த காலத்தில் சிறையிலிருந்தான்.

கலகக் காலத்தில் உண்மையில் சாட்சியங்களின் பொறுப்பு வாதிகளின் தரப்பிலில்லை; பிரதிவாதிகளின் தரப்பிலிருந்தது. பிரதிவாதிகளைச் சார்ந்து சாட்சியம் கூறுவதற்கு எல்லோருக்கும் அச்சமாக இருந்தது. அவ்வாறு துணிந்து சாட்சி சொல்ல வந்தால் அவர்களும் மறுநாள் குற்றவாளிகளாக வேண்டிவரும்.

பல மாதங்கள் வரை நீடித்த இக் கலவரங்களின் பலனாக எத்தனை பேர் மடிந்தனர் என்பதை அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. பதினாயிரத்துக்குக் குறையாதவரென்று கூறுவது மிகையல்ல. ஆறு மாதங்கள் சென்ற பிறகு கலவரங்கள் அடங்கி அமைதிநிலை வந்ததென்றாலும் அதனால் விளைந்த தீமைகளும் சேதங்களும் தீருவதற்குச் சிறிது காலமாயிற்று.

16

கலகம் நடந்த பின்

ஒரு பயங்கர நிகழ்ச்சி நடக்கையில் சாட்சிகளாக இருந்தவர்கள், பின்னர் உடனே அதை விவரிக்கையில், தங்களையறியாமல் உணர்ச்சி வசப்பட்டு, அவற்றில் தங்கள் சொந்தக் கருத்துக்களையும் கலந்து வண்ணம் சூட்டிவிடுவார்கள். சிறிது காலம் செல்லவேண்டும். அப்போது தான் உணர்ச்சிக் குவியல்களிலிருந்து மீண்டு ஆராய்ந்து பார்க்கும் போதுதான், அதன் நுட்பமான நிலைகளும், காரண-காரியத் தொடர்புகளும் தெளிவாகப் புலப்படும். இல்லையேல் நாம் எத்தனை முயற்சி செய்தாலும் அப்பட்டமான உண்மையை அதன் சுய உருவத்தில் வெளிக்கொணர முடியாது. அது மனமொன்றிச் செய்யும் தவறல்ல. நம்மையறியாமலே நேரும் தவறுதான்.

மலபாரில் பல சமயங்களில் தோன்றிய கலகங்களைப் பற்றி வரலாற்றில், சிறப்பாக, லோகனின் மலபார் மான்யுவலில் விளக்கமாகக் காணப்படுகிறது. அவற்றின் காரணங்களைக் குறித்து, பலரும் பல

கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர். அது சம்பந்தமான விளக்கங்கள் வரலாறு எழுதுங்காலை அவசியமானதென்றாலும், இவ்வகையிலுள்ள ஒரு நூலுக்கு அது வேண்டியதில்லை. ஆனால் 1921ஆம் ஆண்டு ஏற்பட்ட கலகத்துக்குக் காரணம் யாதென்பது குறித்துச் சிறிதும் ஐயம்கொள்ள வேண்டியதில்லை. அதற்குக் காரணம் போலீசாரின் அடக்குமுறைதான். கிலாஃபத் இயக்கத்தைத் தட்டி அடக்க அதிகாரிகள் மேற்கொண்ட எல்லை மீறிய அக்கிரமச் செயல்களை அதற்கு முக்கிய காரணம் அதைவிடுத்து ஜன்மி-குடியானவன் தகராறு காரணமாகவோ, மத சம்பந்தமான பூசல்களில் விளைந்ததென்றோ கொள்வதற்கில்லை. போலீசாரின் துரோகச் செயல் மக்களுக்குப் பொறுக்க இயலாததாகும்போது, வன்முறை தவிர்க்கவேண்டும் என்ற வரம்பை மீறி, தீமையைத் தீமையினால்தான் எதிர்க்க முடியும் என்று நாட்டுமக்கள் துணிந்துவிட்டனர். அரசாங்க அதிகாரிகளுக்கும், ஆட்சியாளருக்கும் ஓர் அறைகூவல் விடுத்தாற்போன்று கலகத்தில் இறங்கினார்கள். பின்னர், பிற மதத்தினரைக் கொலை புரியவும், அவர்களுக்கு வஞ்சகமாகத் தீங்கிழைக்கவும் கலகக்காரர் முனைந்ததற்குக் காரணங்கள் வேறு.

தொடக்கத்தில் கலகக்காரர் இந்துக்களுக்கு ஒரு தீங்கும் இழைக்கவில்லை. சில நாட்கள் சென்றபின், ராணுவத்தார் வேட்டையாடத் தொடங்கிய பின்னரே நிலைமை மாறிற்று. கலகக்காரர்களைத் தேடிப் பிடிப்பதில் அவர்களுக்கு இந்துக்களின் உதவி தேவையாக இருந்தது. ராணுவத்தினருடைய ஆணைப்படி நடக்கவில்லையெனின், அவர்கள் இந்துக்களுக்குத் தண்டனை அளிப்பார்கள். இராணுவத்தாருடன் கலகக்காரர்களைத் தேட உதவி செய்தால் அவர்கள் இந்துக்கள்மீது திரும்பிப் பழி வாங்குவார்கள். இவ்வாறு தொடங்கிய சமுதாயப் பகை, மிக விரைவில் முதிர்ந்தது. இதனால்தான், கலவரம் நிகழ்ந்த இடங்களில், இந்துக்களுக்குப் பாதுகாப்பு இல்லாமலாயிற்று.

தண்டனைக்கு அஞ்சிய பெரும்பாலும் சாதாரண நிலையிலுள்ள மக்கள் தீய வழிகளில் இறங்காமல் அமைதி கடைப்பிடிக்கின்றனர். ஆட்சியாளரின் பாதுகாப்புமின்றி, அராஜகம் சுதந்திரமாகத் தலைவிரித்தாடுகையில் என்னதான் நேரும் என்று சொல்லமுடியாது. கலகம் தொடங்கிய சில நாட்களில் அந்த நிலைதான் ஏர நாடடிலும் மற்றப் பிரதேசங்களிலும் நிலவியது. கலகக்காரர்கள் பெரும்பாலோரும் ஆட்சியாளரிடம் வெறுப்படைந்து, அதிகாரிகளையும் அவர்களுடைய உதவியாளரையும் எதிர்ப்பதற்குத் தங்கள் ஆற்றலையும் முயற்சிகளையும் ஒருமுனைப்படுத்தினர்கள். ஆனால், கலகம் என்று தொடங்கிவிட்ட பிறகு, அக் கூட்டத்தில் அத்தகையோர் மட்டுமன்றி, ஈவிரக்கமின்றி, கொள்ளை கொலை முதலிய தீச்செயலில் ஈடுபடுபவர்களும், கட்டாயமாக

மதம் மாற்றுதல் போன்ற செயலுக்குத் துணிந்தவர்களும் சேர்ந்து கொண்டனர். மேலும் சாதாரணமாக அமைதி நிலவும் நாட்களில் நாம் ஒரு போதும் துணிந்துவிடாத கீழ்மைச் செயல்களை, உணர்ச்சி வசப் பட்ட மக்கள் கூட்டத்தில் செய்ய நேரிடுவதுமுண்டு. ஈவிரக்க உணர்வுகள் மனதினின்று வரண்டுபோகும். மானம் - மரியாதை தோன்றுது; சத்தியமும் நீதியுணர்வும் மறத்துவிடும். அநீதியும் அக்கிரமங்களுமே தலைதூக்கி நிற்கும். நம்மில் அதுகாறும் உறங்கிக் கிடந்த விலங்குணர்வுகள் அவற்றின் சுய உருவுடன் வெளியாகும். பொதுவாக எந்த நாட்டிலும், சிந்திக்கத் தெரியாத மக்கள் கூட்டம் சந்தர்ப்பம் நேரும்போது செய்யக்கூடிய தீச்செயல்களே இவை. கலகக் காலத்தில் ஏர நாட்டிலும் ஏனைய இடங்களிலும் இதுதான் நிகழ்ந்தது.

கலகத்தை அடக்க இயலாதென்று கண்டதும், நாங்கள் அடுத்து, கலவரம் நிகழ்ந்த இடங்களிலிருந்து அங்கு வந்து தஞ்சமடைந்த மக்களுக்கு இடம், உணவு முதலிய வசதிகளைச் செய்து கொடுப்பதில் முனையலானேம். ஆயிரக்கணக்கான மக்கள் கோழிக்கோட்டுக்குப் பிழைக்க வழி தேடி வந்திருந்தனர். நாங்கள் வேண்டிக்கொண்டதன் பயனாக இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் தாராளமாகப் பொருளுதவி கிடைத்தது. நிதி திரட்டுவதற்கு மகாத்மா காந்தி முனைந்தார்.

அகதிகள் தங்குவதற்கு மூன்று நான்கு இடங்களை ஏற்பாடு செய்தோம். நாள்தோறும் அவர்களுடைய உணவுக்கான பொருள்களை உதவினேம். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு சிகிச்சைக்கான வசதிகள் அளித்தோம். சூரியன் உதித்தெழுந்த நேரத்திலிருந்து நண்பகல் வரையிலும் காங்கிரஸ் அலுவலகத்தின் முன் பெரிய கூட்டம் நிறைந்திருக்கும். அவரவர்களைக் கவனித்து ஆவன செய்வதற்குப் பல தொண்டர்கள் தயாராக இருந்தார்கள். கே. மாதவன் நாயரும், அம்பலக்காடு கருணாகர மேனனும், பி. அச்சுதனும், கே. பி. கோபால மேனனும், பிறரும் இத்தொண்டில் உற்சாகமாக ஈடுபட்டனர். ஏறக் குறைய ஆறுமாதத்துக்கு நீடித்த இந்த உதவி நடவடிக்கைகளை மிகுந்த கருத்துடனும் நிறைவுடனும் செயலாற்றியது கண்டு, காங்கிரஸாரின் விரோதிகள்கூட அவர்களைப் புகழலாயினர். இந்த நிவாரண நிதியில் இருந்து கலகக் காலத்தில் மரணமுற்றோர், தண்டனை பெற்றோர் ஆகியோரது குடும்பங்களுக்கு வேண்டிய உதவிகளும் அளித்தோம். அக் குடும்பங்களில் இந்துக்களும் இருந்தனர்; முகமதியர்களும் உண்டு.

அகதிகளுக்கான பாசறையை, பாரத சேவா சங்கத்தின் மேற் பார்வையில் நிறுவியிருந்தோம். போற்றற்குரிய வகையில் அவர்கள் தொண்டாற்றினர்கள். கலகம் அடங்கி வெகுநாட்கள் சென்ற பின்னரும் பாரத சேவா சங்கத்தினருடைய மறுமலர்ச்சிப் பணிகள்

தொடர்ந்தன. அகதிகளின் கூட்டத்தில் ராணுவத்தினராலோ, கலகக் காரர்களாலோ வஞ்சம் தீர்க்கப்பெற்றவர் ஏராளமாக இருந்தனர். அவர்களைக் கண்டு அநுபவங்களைச் சொல்லக் கேட்டுப் பதிவு செய்வது காங்கிரஸ் கமிட்டியின் பிறிதொரு வேலையாயிற்று.

கலகம் நிகழ்ந்த இடங்களில் நடந்ததும் நடக்காததுமான செயல்களை நிறமும் தரமும் மாற்றி மற்றவர்களிடம் பேசுவதுதான் பெரும்பான்மை யோருக்கும் வழக்கமாயிருந்தது. ஒரு குறுகிய சமுதாயத்தினருக்குரிய மனநிலையில் உள்ளவருக்கு நிகழ்ச்சிகளை அப்படியே அதன் உண்மை வடிவில் காண்பதற்கு இடமளிப்பதில்லை. நேரான உண்மையை அப்படியே நோக்குவதற்கு வேண்டிய பக்குவம் பலருக்கும் இருப்ப தில்லை. கலகக்காரர்களில் சிலர் கட்டாயமாக அந்நிய மதத்தினரை மதம் மாற்றியதாக வெளிவந்த செய்தியின்மீது காரமான விவாதங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. சிலர் அதை மிகையாக விவரித்தனர். இந்த விவாதத்தில் காங்கிரஸார் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. விவரங்களை நுட்பமாகச் சேகரித்து அவைகளைப் பதிந்து வைத்திருந்தனர்.

'கட்டாய மதமாற்றம் கலகம் நடந்த இடங்களில் நிகழ்ந்திருந்தால் அது குறித்துக் காங்கிரஸ் செயலாளர் கூறியிருப்பார்; அத்தகைய விவரம் ஏதும் வெளியாகாததால், மதமாற்றம் என்பது வெறும் கட்டுக் கதை' என்று, சென்னை 'ஹிந்து' இதழில் ஒருவர் எழுதினார். அதற்கு, காங்கிரஸ் செயலாளரிடமிருந்து ஒரு மறுமொழியும் வரும் என்று பலரும் எதிர்பார்த்தார்கள். அந்நாள் கேரள காங்கிரஸ் கமிட்டிச் செயலாளராக இருந்த எனக்கு, அந்தச் சந்தர்ப்பத்தில் மௌனமாகவும் இருப்பதற்கில்லாமலாயிற்று. நான் அறிந்த மட்டில் சில உண்மை விவரங்களை வெளியிடவேண்டி இருந்தது.

கட்டயமாக மதமாற்றம் செய்யப்பெற்ற சிலர், காங்கிரஸ் அலுவ லகத்தில் வந்து கூறிய விவரங்களைப் பதிந்து வைத்திருந்ததனால், அந்தக் கட்டுரைக்கு மறுமொழியாக நான் அவ்வுண்மைகளை வெளியிட்டேன். சிலரை அது கோபத்துக்குள்ளாக்கக்கூடும் என்பதை நான் உணர்ந்து தானிருந்தேன். 'ஹிந்து' நாளிதழில் என் கட்டுரை வெளியானதற்கு மறுநாள் நிகழ்ந்த விவரங்களை இங்குக் கூறுகிறேன்.

இரவு ஒன்பது மணிக்கு நான் உணவு கொண்டபின், நானும் என் குடும்பத்தினரும் அலுவலகத்தின் மாடி முகப்பில் அமர்ந்திருந்தோம். குழந்தைகள் உறங்கிவிட்டனர். நிலவு பொழியும் இரவு. வடக்குப் பகுதியிலிருந்து ஒரு கல் ஜன்னலில் வந்து விழுந்தது. ஓசையைச் செவி யுற்ற நான் திடுக்கிட்டு என்னவென்றறிய எழுந்து பார்க்குமுன் இன்னொரு கல் கூரையில் வந்து விழுந்தது. அடுத்தடுத்து நாலைந்து

கற்கள் ஓசை எழுப்பிக்கொண்டு விழுந்தன. சாத்துக்குட்டி நாயர் கீழிருந்து மேலே ஓடி வந்தார். 'யாரது?' என்று வராந்தாவில் நின்று கொண்டு நாங்கள் உரக்கக் கூவினோம். எங்கும் ஆட்களைக் காணவில்லை. கற்கள் மட்டும் பல பகுதிகளிலும் அடுத்தடுத்து விழுந்துகொண் டிருந்தன. சற்றுத் தொலைவிலிருந்து தாக்குகின்றனர் என்று அறிந்தேன். இரண்டு மூன்று பேராக வெவ்வேறு பக்கமிருந்து எறிந்ததாகத் தோன்றியது. சுமார் பத்து நிமிட நேரம் கல்லெறிதல் தொடர்ந்து நீடித்தது. ஓசை கேட்டுக் குழந்தைகள் விழித்துக்கொண்டு வெளியே வந்தார்கள். வராந்தாவில் நிற்பது சரியல்ல என்று நாங்கள் உள்ளே சென்றோம். கற்கள் வீழும் ஓசையையும் சாத்துக்குட்டி நாயரின் குரலையும் கேட்டு அண்டை அயலில் இருந்தவர்களும் வெளியே வந்தார்கள். நான்கு புறங்களிலும் சந்தடி யுண்டாகவே கல்லெறிந்த வர்கள் ஓடிவிட்டனர்.

மறு நாளைய தபாலில் சில மொட்டைக் கடிதங்கள் எனக்கு வந்தன. கட்டாய மதமாற்றம் நிகழ்ந்ததென்று நான் பத்திரிகைக்கு எழுதி வெளியான கட்டுரையை மறுத்து வந்த கடிதங்கள் அவை. சுட்டுக் கொல்வதாகவும் வெட்டிக் கொல்வதாகவும் அச்சுறுத்தியிருந்தனர். உண்மையாக நடந்தவற்றை வெளியிடவேண்டியிருந்த என் நிலை எத்தனை பேரைக் கோபமூட்டியதென்பதை விளக்க இன்னொரு சம்பவமும் நடந்தது.

மேலே கண்ட நிகழ்ச்சி நடந்து சில நாட்கள் சென்ற பிறகு, இராஜ கோபாலாசாரி கோழிக்கோட்டுக்கு வந்திருந்தார். அப்போது ராணுவ ஆட்சி நடைமுறையிலிருந்து நீங்கியிருந்தது. பொதுக்கூட்டங்களுக்கான தடையுத்தரவும் அகற்றப்பட்டிருந்தது. சீர் குலைந்திருந்த இந்து–முஸ்லீம் ஒற்றுமையை மீண்டும் நிலைநாட்டவேண்டும் என்ற எண்ணத் துடன் இராஜகோபாலாசாரி வந்திருந்தார். கலகம் நடந்த பிறகு முதன்முதலாக அவர் வந்த சமயம் அது. என்னுடனேயே தங்கினார். அன்று மாலையிலேயே நாங்கள் கடற்கரையில் ஒரு பொதுக்கூட்டத் துக்கு ஏற்பாடு செய்திருந்தோம். அவருடன் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள நானும் சென்றேன். நாங்கள் அரங்குக்குச் செல்கையி லேயே கூட்டத்திலிருந்து கூக்குரலிட்டனர் சிலர். அது எனக்குத்தா னென்று நான் உணர்ந்துகொண்டேன். நான் பத்திரிகைக்கு எழுதியதை மறுத்துக் கிளப்பிய கூக்குரல் அது. இராஜகோபாலாசாரி உரையாற்றிய பின்னர், நான் பேச எழுந்தேன். ஐந்து நிமிடங்கள் நான் ஒரு சொல்லும் கூறுவதற்கு விடாமல் கத்தினர்கள். அமைதி வேண்டி இராஜகோபாலாசாரியார் விடுத்த கோரிக்கை பயனளிக்க வில்லை. நான் பின்னும் பேச முயன்றேன்.

'மதமாற்றம் குறித்து நான் எழுதிய கட்டுரைதான் நீங்கள் இவ்வாறு நடந்துகொள்வதற்கான காரணமென்பதை நான் உணர்கிறேன். கூக்குரலிட்டோ, வசைமொழிகள் பொழிந்தோ, நடந்த உண்மைகளை நடவாததாகச் செய்துவிட முடியாது. நாட்டுப் பற்றும் சமுதாயப் பற்றும் மிகுந்தவர்கள் இனி இம்மாதிரி நிகழ்ச்சிகளுக்கு இடம் கொடாமல் பார்த்துக்கொள்வதுதான் செய்யக்கூடிய உகந்த செயல். மத மாற்றத்துக்குள்ளான மக்கள் தந்த விவரங்களை முன்னிட்டே அவற்றை வெளியிட வேண்டியது அவசியம் என்று கருதி வெளியிட்டேன். எனக்குக் கழிவிரக்கம் கொள்ளக்கூடியது ஒன்றுமில்லை. இந்த உண்மையை அறிந்தபின்னர் நீங்கள் வெளியிடும் மனோபாவம்தான் என்னை வருந்தச் செய்கிறது. பொறுப்பற்ற சிலருடைய இழி செயல்களை, தவிர்க்க இயலாத நிலையில் கண்டனம் செய்வது சமுதாயத் தலைவர்களின் கடமை என்று கருதுகிறேன்'.

என் உரையின் கருத்து இதுதான். நான் பேசும்போதும் அவ்வப்போது தடுப்பதற்காகக் கூச்சலிட்டார்கள். நான் கூறவேண்டியதை ஒருவாறு கூறி முடித்துவிட்டேன். ஆனால் குழப்பம் விளைவித்தவர்களுக்கு என்னால் திருப்தி அளிக்க முடியவில்லை. எனினும் கூறவேண்டியதை மனம் திறந்து கூறிவிட்ட ஆறுதல் கொண்டேன்.

இதற்கு முன்னும் பின்னும் இத்தகைய அனுபவங்கள் எனக்கு எத்தனையோ முறைகள் நேர்ந்திருக்கின்றன. பொது வாழ்வில் ஈடுபடும் எவரும் இத்தகைய அனுபவங்களுக்குள்ளாகாமல் இருக்க முடியாது. அதற்காக நாம் யார்மீதும் மனத்தாங்கல் கொள்ள வேண்டியதில்லை. யாரையும் குறைகூறவும் வேண்டாம். பிறர் நம்மை எதிர்க்காமலோ, தவறுகக் கருதாமலோ நாம் நம்முடைய கடமைகளை ஆற்றவேண்டும் என்று யாராவது நினைத்தால் அது சாத்தியமில்லை. இதை அனுபவம் தெளிவாக்கும். சிலர் நம்மை வெறுப்பார்கள்; சிலர் நம்மை ஆதரிப்பார்கள்; சிலர் நேசிப்பார்கள். இதெல்லாம் பொதுவாகப் பார்க்கும் உண்மைகள். நம்முடைய மனச்சாட்சியின் ஆணைக்குக் கட்டுப்பட்டு முன்னே தோன்றும் அனுபவ ஒளிகொண்டு முன்னேறிச் செல்கையில் தவறு நேர்வதற்கு இடமில்லை. அப்படி நேர்ந்தாலும் நமக்கு நாமே ஆறுதல் கொள்ள வழியுண்டு.

இவ்வாறே நான் ராணுவத்தாரின் அக்கிரமச் செயல்களை எடுத்துரைத்தபோது அரசாங்கம் மறுத்து எதிர்த்தது. ராணுவத்தாருடைய குரூரச் செயல்களைக் குறித்து எனக்கு நுட்பமான துப்புக் கிடைத்தபோது, கொடுமைக்குள்ளானவர்களிடம் நான் வாய்மொழி கேட்டுக் குறித்து வைத்திருந்தேன். ஃபரோக்குக்கருகில், நிறை சூலியான தொரு முகமதியத் தாயை ஈட்டியால் குத்திக் காயமுறச் செய்த

செய்தியையும், ஒரு முகமதியச் சிறுவனின் கை கால்களைக் கத்தியால் வெட்டியதையும் அறிந்து நான் கருத்துடன் விவரம் கேட்டிருந்தேன். அவர்கள் இருவரையும் அகதிகள் பாசறையில் வைத்துச் சிகிச்சையளித்து வந்தோம். அவர்களுடைய நிழற்படங்களும் எங்களிடம் இருந்தன.

கலகம் அடங்கிச் சில நாட்கள் சென்றபின்னர் ஸ்ரீமதி சரோஜினி நாயுடு சென்னையிலிருந்து கோழிக்கோடு வந்தார். கலகத்தைப் பற்றிய பல விவரங்களை அவரிடம் தெரிவித்தேன். உதாரணமாக, மேலே தெரிவித்த இரண்டு நிகழ்ச்சிகளையும் விவரமாக எடுத்துரைத்தேன். சரோஜினி நாயுடு, பம்பாய் திரும்பிச் செல்லும் வழியில் சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில், அவரும் ராணுவத்தாரின் அட்டூழியங்களைக் கண்டனம் செய்தார்.

இரண்டு நாட்கள் சென்றபின்னர், சென்னை அரசாங்கம் ஓர் அறிக்கை விடுத்தது. சரோஜினி நாயுடுவின் உரையில் உண்மையல்லாத பல செய்திகள் இருந்ததாகவும், ராணுவத்தார் அக்கிரமங்கள் செய்ததாகக் கூறப்படும் செய்திகள் சரியல்ல என்றும், மக்களுடைய மனங்களில் தவறான கருத்துக்களைப் பதியவைக்கக் கற்பனை செய்த பொய்யுரைகள் அவை என்றும், அவற்றுக்காக சரோஜினி நாயுடு மன்னிப்புக் கோரவில்லை என்றால், அவர்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று அரசாங்க அறிக்கை அச்சுறுத்தியது அதைப் படித்ததும் 'ஹிந்து' இதழுக்கு நான் ஒரு கடிதம் எழுதி அனுப்பினேன்.

'மலபாரில் நிகழ்ந்த விஷயங்களைக் குறித்து மிஸஸ் நாயுடு சென்னை கடற்கரையில் ஆற்றிய உரையில் உண்மையல்லாத செய்திகள் இருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. அவர் கூறிய சம்பவங்கள் அனைத்தும் உண்மையில் நிகழ்ந்தவை. அவற்றை சரோஜினி நாயுடுவிடம் நான்தான் கூறினேன். நான் கூறிய விவரங்களைக்கொண்டே அவர் உரையாற்றியிருக்கிறார். அவை உண்மைக்கு மாறானவை என்று அரசாங்கம் கருதினால், அவர்கள் மிஸஸ் நாயுடுவின்மீது நடவடிக்கை எடுப்பது சரியல்ல. என்மீதுதான் எடுக்க வேண்டும். நான் அவரிடம் தெரிவித்த விவரங்கள், ராணுவத்தாரின் கொடுமைக்குளான இருவருடைய வாய்மொழிகொண்டே அறிந்தவை. அவற்றையும் நிழற் படங்களையும் அனுப்புகிறேன்; பிரசுரம் செய்யவேண்டும்' என்று எழுதியிருந்தேன். 'ஹிந்து'வில் அவை வெளியாயின. ஆனால் அரசாங்கம் இதற்கு விடையளிக்கவில்லை.

அவ்வப்போது நாட்டிலேற்படும் சமுதாய விரோதக் கலகங்கள் என்னை மிகவும் துயருறச் செய்தன. என்றாலும், 'இது நம் நாட்டை விட்டு அகலாது. வெகுகாலமாக வேரூன்றிவிட்ட விஷ-மரம் இது. இதை முற்றிலும் அழித்துவிட முடியாது. வெட்டி வீழ்த்தினாலும்

பின்னும் கிளைக்கும்' என்று சிலர் அவநம்பிக்கை தெரிவிப்பதை நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். பல்வேறு சமயத்தினரை வரவேற்று, அவர்களுடைய நியாயமான சமயப் பிரசாரங்களுக்கு வசதிகள் செய்து கொடுத்த புண்ணிய பூமி இது. சகிப்புத் தன்மையே நம் நாகரிகத்தின் அடிநிலை எனலாம். இரண்டு நூற்றாண்டுக் காலமாகச் சமுதாயப் பிளவு இந்தியாவில் வளர்ந்து வருகிறதென்றால் அதற்கு அடிப்படைக்காரணமே அந்நிய ஆட்சிதான். அது இப்போது மாறிவிட்டது. நம்முடைய தொன்றுதொட்ட நாகரிகத்துக்கு நம்மால் மறுமலர்ச்சியளிக்க இயலாதா? கருணையைக் கைவிட்ட மனிதனால் சமயங்கள்பால் எவ்வாறு அன்பும் பற்றும் கொள்ள முடியும்? சகிப்புத்தன்மையின்றி மனிதன் நாகரிக வளர்ச்சி எய்த முடியும் என்று எவ்வாறு கருதுவது? ஒரு சமயத்தினரின் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும், பிற சமயத்தினர் மறுத்து எதிர்ப்பதில் ஏதேனும் பொருளுண்டோ?

பல்வேறு காலங்களில் தோன்றிய பல்வேறு உலகப் பெரியார்களுக்கும், கடவுளுக்கும், மனிதனுக்கும் இடையிலுள்ள தொடர்பு சிந்தனைப் பொருளாயிருக்கிறது. அந்தச் சிந்தனைக் கருத்துக்களெல்லாம் மனிதச் சமுதாயத்துக்குரிய பொதுச் செல்வங்களென்று கொள்ளற்குரியவை. 'பசுக்கள் பலவண்ணமுடைத்தாயிருக்கின்றன. ஆனால் பசுக்கள் எந்த நிறமானாலும் பால் வெண்மையானதுதானன்றோ! சமயத் தலைவர்களைப் பசுக்களாகக் கருதுங்கள்; பால் ஞானமாகிறது' என்ற உபநிடதக் கருத்தை இங்கு நினைவு கொள்ளலாம்.

சில ஆதார உண்மைகளை உறுதியாகச் சார்ந்து ஒழுகுங்கால் அறவழி பிறழாமலிருப்பது நமக்குக் கைகூடும். சமயத்தின் பெயரால் எத்தனை போர்கள் உலகில் தோன்றியிருக்கின்றன? எத்தனை அக்கிரமங்கள் நடக்கின்றன? பதினேராம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலும் கிறிஸ்து சமயத்தினருக்கும் இஸ்லாமிய சமயத்தினருக்கும் இடையே எண்ணற்ற போர்கள் நடந்திருக்கின்றன. பதினாறு, பதினேழு ஆகிய நூற்றாண்டுகளில், கிறிஸ்துவ சமயத்தின் இரண்டு பிரிவினராகிய பிராடஸ்டென்டுகளுக்கும் கத்தோலிக்கருக்கும் இடையில் இடைவிடாத போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. அதுபோன்றே இந்நாட்டிலும் இந்துக்களுக்கும் முகமதியருக்குமிடையே சமயத்தின் பெயரால் எத்தனை சண்டைகள் நடந்திருக்கின்றன.

தர்மச் சக்கரவர்த்தி அசோகர் ஒரு சாஸனத்தில், இவ்வாறு பதிந்து வைத்திருக்கிறார்:

'ஒரு காரணம் கொண்டு இல்லை எனினும் மற்றொரு காரணம் கொண்டேனும் எல்லாச் சமயங்களைச் சார்ந்தவர்களும் போற்றற்

குரியவர்களே. பிற சமயங்களை மதித்துப் போற்றும் ஒருவன் தானுகவே தன் சமயத்தை உயர்த்திக்கொள்கிறுன். பிற சமயப் பிரிவினருக்கும் தொண்டாற்றுகிறுன்.'

இந்த அறிவுரையை மனதில் கொண்டு முயன்றுல், மனித சமுதாயத்தில் எத்தகைய நல்ல மாற்றங்களைச் சாதிக்கமுடியும்? அதை அல்லவா நாம் செய்ய வேண்டும்?

17

பொதுப்பணிகளில் மந்த நிலை

உலகம் அடங்கியபின் சிறிது காலம் மலபாரில் எவ்வகையான பொதுத்தொண்டுக்கும் வழியில்லாமலிருந்தது. எல்லாத் திசைகளிலும் காங்கிரஸாருடன் பகையுணர்வுதான் மேலோங்கியிருந்தது. கிலாஃபத் பிரசாரத்தில் பங்கு கொண்டு நாட்டுக்கு அபாயத்தை விளைவித்தவர் காங்கிரஸார்தாம் என்று அதிகாரிகள் கூறினர்கள். கிலாஃபத்காரர்களுடன் கூடிய காங்கிரஸ்காரர்கள் சமுதாயத் துரோகிகள் என்று இந்து சமயத் தலைவர்கள் கண்டனம் செய்தனர். மலபார் காங்கிரஸ்காரர்களைப் பிடித்துச் சிறையிலடைக்க வேண்டும் என்றுகூட அவர்கள் கருதாமலில்லை! காங்கிரஸில் சேருங்கள் என்று ஊக்கம் காட்டிவிட்டு, போலீசாரின் அடக்குமுறையும் ராணுவத்தினரின் குண்டுவீச்சும் தொடங்கியபோது, தங்களைக் காங்கிரஸார் கைவிட்டுவிட்டதாக முகமதியர் குற்றம் சாட்டினர்கள். அக்காலம், காங்கிரஸுக்காகப் பணியாற்றிய எங்களுக்குப் பொல்லாத காலமென்றே கூறவேண்டும். காங்கிரஸ்காரர்களுடன் பழகுகையில் பிறர் சாதாரணமாகக் காட்டும் மரியாதையைக்கூடக் கைவிட்டனர். நண்பர்கள் கண்டாலும் காணுதது போல் நடிப்பார்கள். எங்களை வந்து பார்க்கவே சிலருக்கு அச்சமாக இருந்தது. ஏதேனும் காரியமாக நான் அவர்களைக் காணச் சென்றலும் கூடிய விரைவில திருப்பி அனுப்புவதில்தான் அவர்கள் உற்சாகம் காட்டினர்கள். பல காங்கிரஸ் கமிட்டிகள் மறைந்தன. சில காங்கிரஸ்காரர் சிறையிலிருந்தனர். மற்றும் சிலர் காங்கிரஸை விட்டு விலகினர். எஞ்சிய சிலர் அன்றுடச் செலவுக்கே வழியின்றித் திண்டாடினர். பொதுப்பணி செய்வதற்கு ஒரு வழியுமில்லாமலே நாட்கள் சென்றன. நாட்டில் வேறு பல பகுதிகளில் ஒத்துழையாமை இயக்கத்தைச் சார்ந்து

முறைகேடான நிகழ்ச்சிகள் வேறு நடந்ததும் மலபார் காங்கிரஸ்காரரின் மீதான விரோதத்தை மேலோங்கச் செய்தது.

இக் காலத்தில்தான் பூஜ்யர் ஆண்ட்ரூஸ் கோழிக்கோடு வந்தார். கலகம் மூண்டதற்குரிய காரணங்களையும், நடந்த சம்பவங்களையும் பற்றி நேரில் அறிந்துகொள்வதற்கு அவர் வந்திருந்தார். ஒரு வாரம் அவர் கோழிக்கோட்டில் தங்கினர். நானும், கே. மாதவன் நாயரும், யூ கோபால மேனனும் பலமுறை அவரைக் கண்டு விஷயங்களை எடுத்துரைத்தோம்.

ஒருமுறை கண்டால் மறக்க இயலாத பெருந்தகையாளர், ஆண்ட்ரூஸ். இந்திய முறைப்படி வேட்டி உடுத்து, வெண்மையான நீண்ட சட்டை அணிந்து, கருமையான நீண்ட தாடியுடன் கைகுவித்து மென்னகை இலங்க நம்மை அணுகும் தெய்வீக அருள் வடிவில், அமைதியும் அன்பின் இனிமையும் கூடித் திகழ்வது கண்டு மெய் சிலிர்க்கிறோம். அவருடைய இதயத்தில் களங்கம் என்ற சொல்லுக்கே இடமில்லை. எங்கெல்லாம் மக்கள் துன்புறுகின்றனரோ, எங்கெல்லாம் அறியாமையும் அடிமைத் தனமும் இருளாய்ப் படர்ந்திருக்கின்றனவோ, எங்கெல்லாம் அடக்கி ஒடுக்கப்பெற்ற மனிதர் பஞ்சைகளாய்த் தவிக்கின்றனரோ, அங்கெல்லாம் ஆண்ட்ரூஸ் என்ற அருளாளர் ஓடிச் செல்வார். பிறப்பில் அவர் ஆங்கிலேயராக இருந்தாலும், இந்தியாவைத் தாயகமாக்கிக் கொண்டார். இந்தியாவின் பல பகுதிகளிலும், தெற்கு ஆப்பிரிக்காவிலும், இலங்கை, மலேயா, மொரிஷியஸ் ஆகிய நாடுகளிலும், இந்திய மக்களின் துயரைக் கண்டறிவதற்கும், அவர்களுக்குப் பரிந்து ஆதரவளிப்பதற்கும, அவர் சுற்றித் திறிந்தார். உடுக்கும் ஆடை குறித்தோ, உண்ணும் உணவு குறித்தோ, வழிச் செலவு குறித்தோ, அவர் சிந்தனை செய்வதில்லை. அதெல்லாம் இறைவன் உவந்தளிப்பார்; தம்முடைய தர்மம் தொண்டாற்றுவதே என்று அவர் நம்பினர்.

ரவீந்திர நாத தாகூரின் சாந்தி நிகேதனத்தில்தான் அவர் தங்கி இருந்தார். அங்கு விசுவபாரதியில், அவர் ஆசிரியப் பணியாற்றி வந்தார். மகாத்மா காந்திக்கு உடல்நலமில்லை என்று தெரிந்தால் உடனே அவருக்குப் பணிவிடை செய்வதற்கு ஓடோடிச் செல்வார். தாகூரின் மாட்டும் அவ்விதமே ஓடி வருவார்.

ஒரு வாரம் தங்கிக் கலகம் நிகழ்ந்த இடங்களைக் கண்டு, பல்வேறு கருத்துடையவர்களையும் சந்தித்து உரையாடிய பின அவர் கல்கத்தாவுக்குத் திரும்பிச் சென்றார். 'வழிச் செலவுக்கு வேண்டிய பணம் இருக்கிறதா?' என்று நான் அவரைக் கேட்டேன். கையில் இரண்டு ரூபாய் இருப்பதாகக் கூறினர்: உடனே நான் நிவாரண நிதியிலிருந்து இருநூறு

ரூபாய் எடுத்து வழிச் செலவுக்குக் கொடுத்தேன். அன்று நான்கு மணிக்கு, அகதிகள் தங்கியிருந்த பாசறைக்கு ஒரு குதிரை வண்டியில் நாங்கள் கிளம்பிச் சென்றோம். செல்லும் வழியில் பணத்தைக் கவன மாக வைத்துக் கொண்டீர்களா? என்று கேட்டபோது ஆண்ட்ரூஸ் திடுக்கிட்டார்.

'அதை அங்கேயே மேஜையின்மீது வைத்துவிட்டேன். பாவம், வேலைக்காரன் பார்த்தால் சங்கடப்படுவானே? நாம் திரும்பிப் போகலாம்' என்றார் அவர்.

நாங்கள் வண்டியைத் திருப்பி ஓட்டச் சொன்னோம். வீட்டுக்குச் சென்றபோது பணம் மேசைமீது அப்படியே இருந்தது. அதைப் பெட்டியில் வைத்துப் பூட்டியபின் மீண்டும் கிளம்பினோம்.

தன்னலம் மறந்து பிறரிடம் அன்பு கொள்ளும் மனிதர் உலகில் இருப்பார்களோ என்று யாருக்கேனும் ஐயம் தோன்றுமானால், அவர்கள் ஆண்ட்ரூஸைக் கண்டால் போதும். அவர் சாந்திநிகேதனுக்குத் திரும்பிச் செல்கையில் என் மகன் உண்ணியையும் கூட்டிச் சென்றார். இரண்டு ஆண்டுகள் அவன் அங்குதான் படித்தான்.

உலகம் அடங்கிவிட்டாலும், அதன் எண்ணற்ற தொல்லைகள் தீர்ந்து விடவில்லை. கோழிக்கோடு முனிசிபல் எல்லைக்கப்பால் நான் செல்லக் கூடாதென்று என்மீது ஆணை பிறப்பித்திருந்தனர். சௌரி சௌராவில் நிகழ்ந்த வன்முறைச் செயல்களைத் தொடர்ந்து காந்தியடிகள் சட்ட மறுப்பை நிறுத்தி வைத்ததும் அவரைக் கைது செய்தார்கள். நாடு முழுவதும் ஓர் அமைதிகுலைந்த நிலை தோன்றியது. ஒத்துழையாமை இயக்கத்தை மீண்டும் கைக்கொள்வது அசாத்தியம் என்றுகூடச் சிலர் கருதத் தலைப்பட்டனர். காந்திஜியை ராஜத்துரோகக் குற்றத் துக்காக விசாரணை செய்யத் தீர்மானித்திருக்கின்றனர் என்ற செய்தி காங்கிரஸாருக்கு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் மிகுந்த கவலையை யும் அச்சத்தையும் தோற்றுவித்தன. விசாரணைக்கு முன் அவரைக் காணவேண்டுமென்ற அவா என்னுள் கிளர்ந்து என்னை அலைத்துக் கொண்டிருந்தது. ஆனால் தடையுத்தரவை மீறி என்னால் கோழிக் கோட்டை விட்டுச் செல்ல முடியாதே? அதனால் நான் உரிய சந்தர்ப் பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தேன்.

என்மீது விதித்திருந்த தடையுத்தரவு நீங்கும் நாள் அருகில் வந்தது. மீண்டும் அவர்கள் அந்த வரையறையை நீட்டிவிடுவார்களோ என்று அஞ்சி, அதை அவர்கள் தள்ளிப் போட்டு ஆணை கற்பிக்கு முன்பே, கோழிக்கோட்டை விட்டுச் செல்ல இயலுமா என்று ஆராய்ந்தேன்.

பம்பாய்க்காரர்களாகிய பல வியாபாரிகள் கோழிக்கோட்டில் இருந்தார்கள். அவர்களுடைய சரக்குக் கப்பல் அடிக்கடி கோழிக்

கோட்டிலிருந்து பம்பாய் செல்வதுண்டு. அவர்களில் ஒருவர் 'ஹாஜி ரங்கீலா' என்ற பெயருடையவர். என்னுடைய உள்ளார்ந்த ஆவலை அவரிடம் அந்தரங்கமாகத் தெரிவித்தேன். அவர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக ஏற்றுக்கொண்டார். அது கொப்பரை ஏற்றிச்செல்லும் கலம். சரக்கை ஏற்றிக்கொண்டு கப்பல் கிளம்புவதற்கு முன் என்னிடம் விவரம் அறிவித்தார். அன்றுதான் என்மீதான ஆணையின் கெடு நீங்கியிருந்தது. என்றாலும் எந்தநேரத்திலும் என்மீது அதே ஆணையை மீண்டும் விதிக்கக்கூடும். அதற்கு முன்பே கப்பலில் ஏறிவிடவேண்டும் என்று நான் தீர்மானித்தேன். பிரயாணத்துக்குத் தேவையான சாமான்களுடன் நான் கடற்கரைக்குச் சென்றேன். ஹாஜி ரங்கீலா, ஒரு படகுடன் அங்குத் தயாராகக் காத்திருந்தார். அவரும் என்னுடன் பம்பாய்க்கு வந்தார். அன்று மாலைக்குள நாங்கள் கப்பலேறிவிட்டோம். இரவு கப்பல் துறைமுகத்தை விட்டகன்றது. மறுநாள் கலம் தலைச்சேரியில் சிறிது நேரம் நின்றது. வசதியான உணவுக்கும் ரங்கீலா ஏற்பாடு செய்திருந்தார். கப்பல் தலைவரும் அடிக்கடி வந்து விசாரித்துகொண்டார். ஐந்து நாட்கள் பிரயாணம் செய்த பிறகு நான் பம்பாய்த துறைமுகததை அடைந்தேன். அங்கே ரங்கீலாவின் விருந்தினனாக ஒருநாள் தங்கியபின் மறுநாள் அஹமதாபாதுக்குச் சென்றேன்.

அங்குச் சென்ற மறுநாள் மகாத்மா காந்தியை நான் சிறையில் சென்று கண்டேன். அகில இந்தியத் தலைவர்கள் பலர் அங்கு வந்திருந்தனர். அங்குச் சென்ற முதல் நாள் சபர்மதி ஆசிரமத்தில்தான் தங்கினேன். மறுநாள் அங்கு வந்த விட்டல்பாய் படேல் என் வசதிகளைக் குறித்து விசாரித்தார். அதன் பின்னர், அவருடைய அழைப்புக்கிணங்கி நான் அவருடைய வீட்டிற்குச் சென்று தங்கினேன். சர்தார் படேலும், அவருடைய மகளும் அந்நாள் அங்கு இருந்தனர்.

மார்ச் பதினெட்டாம் தேதி, காந்திஜியின் வழக்கு விசாரணைக்கு வந்தது. அது நீதிமன்றத்தில் நடக்கவில்லை. பயணிகள் விடுதியில்தான் நடந்தது. விசாரணை நடக்கும் இடத்தில் மட்டுமன்றி, நகரில் பல இடங்களிலும் அமைதிக்கு ஊறு விளையாமலிருக்கும்பொருட்டு, ஆயுத மேந்திய ராணுவப்படையினர் முன்னெச்சரிக்கையாக நிறுத்திவைக்கப் பெற்றிருந்தனர். அப்படியும் ஒரு பெருந்திரளாக மக்கள் விசாரணைத் தலத்தில் வந்து கூடியிருந்தனர்.

பலதரப்பட்டவர்களும் அமர்ந்து பார்ப்பதற்கு வசதியாக விசாரணை ஒரு பெரிய கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பெரிய அதிகாரிகளும், தலைவர்களும், நகரப் பிரமுகர்களும் அங்கே கூட்டமாகக் கூடி இருந்தனர். நீதிபதி வருவதற்குச் சிறிது நேரம் முன்னேரே மகாத்மா

காந்தி அங்கே வந்தார். முழங்கால் வரையிலுமான வேட்டியுடுத்து, சட்டென்று கூடத்தில் நுழைந்த அந்த மெலிந்த வடிவினரைக் கண்ட மாத்திரத்தில் அங்கிருந்தவரனைவரும் எழுந்து நின்றார்கள். ஒரு நாற்காலியில் காந்திஜி அமர்ந்தார். பப்ளிக் பிராஸிக்யூட்டரும், போலீஸ் அதிகாரிகளும், அவருக்கருகில் இருந்த இடங்களில் அமர்ந் திருந்தனர். எல்லோரும் நீதிபதியின் வரவுக்குக் காத்திருந்தனர்.

சரியாகப் பன்னிரண்டு மணிக்கு நீதிபதி வந்தார். அத்துடன் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த அந்த விசாரணை தொடங்கியது. முதலில் குற்றப் பத்திரிக்கையைப் படித்து காந்திஜிக்கு அறிவித்தார்கள். அவர் அக் குற்றங்களைத் தாம் செய்ததாக, ஐயத்துக்கிட மின்றி நீதிபதியின் முன் அறிவித்தார். தன் நிலையைத் தெளிவாக எடுத்துக் கூறும் வண்ணம் அவர் முன்னதாகவே தயாரித்த வாக்குமூலத்தை நீதிபதியின் முன் வைத்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அக்கிரமங்களை, அப்படியே சுய உருவில் துலக்கிய அந்தப் பிரசித்திபெற்ற வாக்கு மூலம், மிகவும் எழுச்சியூட்டக்கூடியதாக இருந்தது. அதைப் படித்த மகாத்மாஜியின் குரலையும், பாவத்தையும் மறக்க இயலாது.

'கோர்ட்டு நடைமுறை செலுத்தத் தீர்மானிக்கும் சட்டம் நியாய மற்றதென்றும் நான் நிரபராதி என்றும் தோன்றுமாலல், ஒன்று, இந்தப் பதவியை ராஜிநாமாச் செய்து இந்த அதர்மச் செயலில் பங்கு கொள்ளாமலிருங்கள்; இல்லையேல், இந்நாட்டில் ஆட்சிமுறையும் அதை நடைமுறையில் செயலாற்றும் வழக்கமும் மக்களுடைய நன்மையைக் கருதியிருக்கிறதென்றும், அதன் காரணமாக என் செயல் நாட்டுக்குத் தீமை பயப்பதென்றும் கோர்ட்டு கருதுமாலல், எனக்குக் கடுந்தண்டனை விதியுங்கள். இவ்விரண்டில் ஒன்றையன்றி, கோர்ட்டு வேறு எதுவும் செய்வது சாத்தியமல்ல' என்ற சொற்களுடன் காந்தியடிகள் தம் வாக்குமூலத்தை நிறுத்தினர்—இரண்டு நிமிடம் கோர்ட்டில் அமைதி நிலவியது. நீதிபதியும், போலீசாரும், பார்வையாளரும், காந்திஜியின் அந்த வாக்குகளைக் கேட்டுச் சிலையானார்கள. நீதிபதியின் சொற்களுக்கும் தீர்ப்பு வழங்கப்போகும் நியாயத்துக்கும் அப்போது முக்கியத்துவம் கூடின.

'உங்களுடைய நாட்டு மக்களாகிய கோடிக்கணக்கான மக்கள் உங்களை ஒரு பெரிய தலைவராகவும் தேசபக்தராகவும் கருதுகின்றனர். அரசியல் கொள்கைகளில் உங்களிடம் வேற்றுமை கொள்பவர்கள்கூட, உங்களை மாபுருடராக, கர்மயோகியாகக் கருதுகின்றனர். சட்ட மறுப்புக் குற்றத்தை ஒத்துக்கொண்டு அரசாங்கத்துக்கு எதிராகக் குற்றம் செய்தவர் என்ற நிலையில்மட்டுமே நான் உங்களைக் கருதுகிறேன். பாலகங்காதரதிலகருக்கு விதித்தாற்போன்று ஆறு வருட வெறுங்காவல்

தண்டனை உங்களுக்கு விதிக்கிறேன். இது அதிகமென்று கருதமாட்டீர் களென்று நம்புகிறேன். இந்நாட்டில் நிலைமாறி உங்களுடைய தண்டனையைக் குறைக்குமாறு அரசாங்கம் தெரிவிக்குமாஞல், அதில் என்னைவிட மகிழ்ச்சி கொள்ளக்கூடியவர் யாரும் இருக்கமாட்டார்கள்.' நீதிபதி தம் இருக்கையைவிட்டு எழுந்தார். கோர்ட்டு கலைந்தது.

மகாத்மாஜியிடம் விடைபெற்றுக் கொள்ள, அவருடைய தொண்டர் பலரும், அவரை அணுகிச் சென்றனர். உணர்ச்சிவசப்பட்ட பல தலைவர்கள் குழந்தைகளைப் போல் விம்மி அழுதார்கள். பாபு ராஜேந்திர பிரசாதை, காந்திஜி தேற்ற முயன்ற காட்சி எனக்கு இப்போதும் நினைவுக்கு வருகிறது. நான் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு அகன்ற பின், மீண்டும் அவர் என்னை அழைத்தார். 'இன்னெரு விஷயம் குறித்து நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்'' என்று என்னிடம் கூறினர். எனக்கு மாதந் தோறும் செலவுக்கென்று காந்திஜி ஒரு தொகை அனுப்பிக் கொண்டிருந்தார். அதைப் பற்றித்தான் அவர் தெரிவித்தார். அந்தச் சமயத்திலும்கூட அவர் அதை நினைவில் வைத்திருந்தார்.

விடைபெறுதல் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தது. காந்தியடிகளைக் கூட்டிச் செல்லும் வண்டி வாயிலில் வந்தது. அவர் அதில் ஏறினர். சரோஜினி நாயுடுவும் உடன் ஏறினர். அந்தக் கார் எங்கள் பார்வையிலிருந்து மறையும் வரையிலும் நாங்கள் அங்கேயே நின்றோம்.

அந்த விசாரணையைக் குறித்து, 'தி க்ரேட் ட்ரயல்' என்ற பெயரில் நான் ஓர் ஆங்கில நூல் வெளியிட்டேன. டி. பிரகாசம்தான் அதை எழுதத் தூண்டியவர். அந்த நூலின் ஒரு பிரதிகூட இப்போது என் கையில் இல்லாதது வருந்தற்குரியது.

எல்லாம் முடிந்துவிட்டது. சுதந்திரப் போராட்டமும் இத்துடன் முடிவடைந்துவிட்டதென்று சிலர் அப்போது கூறுமலில்லை. ஆனல் அது சுதந்திரப் போரின் முடிவு அல்ல; ஆரம்பம் என்று சொல்ல வேண்டும்.

பம்பாயிலிருந்து திரும்பி வந்த பிறகு காங்கிரஸ் அலுவலகத்தை சாலப்புரத்திலிருந்த மாதவன் நாயருடைய வீட்டிலிருந்து கல்லாயி ரோடிலுள்ள ஒரு மாடிக்கட்டடத்துக்கு மாற்றினேம். நான் வாசம் செய்ய வேறெருரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டேன். மாதவன் நாயர் அவர் வீட்டில் வந்து வசிக்கலானர்.

அந்த ஆண்டு (1922) காங்கிரஸ் கயையில் கூடிற்று. நான் அதற்குச் செல்வதாகத் தீர்மானம் செய்தேன். சாத்துக்குட்டி நாயரும் என்னுடன் வந்தார். செல்லும் வழியில் நாங்கள்

கல்கத்தாவில் இறங்கி மூன்று நாட்கள் சாந்திநிகேதனத்தில் தங்கினேம். அங்குள்ள விருந்தினர் விடுதியில்தானிருந்தோம். அந்தப் பெருங் கல்விக்கூடத்தை பூஜ்யர் ஆண்ட்ரூஸ் எங்களுக்குச் சுற்றிக் காட்டினார். குழந்தைகளுடைய காலைக் கீதங்களும், மரத்தடியில் அவர்கள் அமர்ந்து படிப்பதும், அவர்களுடைய களியாட்டங்களும் எங்களுக்குப் புதுமையாக இருந்தன. முடியும் தாடியும் இழைய, கணுக்காலைத் தொடும் நீண்ட அங்கி தரித்து, சில சமயங்களில் ரவீந்திரநாத தாகூர் அங்கே செல்வதைக் கண்டோம். அபபோது சிறுவர்கள் ஓடிச் சென்று அவருடைய அடி தொட்டு அந்தத் துகளை முடியிலணிந்த காட்சி மனங்குளிரச் செய்வதாக இருந்தது. அவருடைய தந்தை மகரிஷி தேவேந்திரநாத தாகூர் தியானம் செய்ய அமரும் இடத்தை எங்களுக்குக் காட்டினார்கள். ஒரு பெரிய மரத்தடியிலிருந்தது அந்த இடம். மாபுருடர்கள் வாழ்ந்து பழகிய இடங்களைக் காண்கையில் விவரிக்க இயலாத உணர்வுகளும் பக்தியும் மனதில் இசைகின்றன. சாந்தி நிகேதனத்தில் தங்கிய நாட்களின் அநுபவங்களில் ரவீந்திர நாதரை ஒரு நாள் மாலையில் அவருடைய இருப்பிடத்தில் கண்டு உரையாடிய நினைவு இன்னமும மனதில் பசுமை மாறுமல் மிளிர்கிறது

வராந்தாவில் ஒரு சாய்வு நாற்காலியில் தாகூர் அமர்ந்திருக்கிறார். அருகில் ஓர் பிரம்பு நாற்காலியில் நான் அமர்ந்திருக்கிறேன். அவர் சாதாரணமாக அமர்ந்து எழுதும் அறையின் ஜன்னலின் வழியாக ஒளி சாய்வாகப் படத் தாழ்த்தி வைத்திருந்த மேசை விளக்கிலிருந்து ஒளிக்கதிர்கள் வராந்தாவில் விழுகின்றன. இருள் படர்ந்த மங்கிய ஒளியில் தாகூரின் முகத்தை நன்றாகப் பார்க்க முடியவில்லை. ஆனால் அமைதி தவழ்ந்த அந்த அந்தி நேரத்தில் அவர் மெல்லிய குரலில் உரையாடியதை மிகத் தெளிவாகக் கேட்கமுடிந்தது. அந்தக் குரலில் ஓர் தனியான இனிமை வடிந்தது. சாந்தி நிகேதனத்தைப்பற்றியும் அன்றைய கல்விப் பயிற்சிமுறை குறித்தும், வங்காள நடனக் கலை குறித்தும்தான் அவர் மிகுதியாகப் பேசினார். அரை மணி நேரத்துக்கும் அதிகமாக உரையாடல் நீடித்தது. பின்னர் நான் விடைபெற்றுக் கொண்டேன். மறுநாள் காலையில் சாந்தி நிகேதனத்திலிருந்து கிளம்பினேம்.

மகாத்மா காந்தியின் சபர்மதி ஆசிரமத்திலும், அன்னிபெசன்டின் பிரும்ம வித்யாலயத்திலும், ரவீந்திரநாத தாகூரின் சாந்தி நிகேதனத்திலும் நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்கியிருக்கிறேன். அவை ஒவ்வொன்றின் தனிச் சிறப்புக்களும் என்னைக் கவர்ந்திருக்கின்றன.

அன்றூட வாழ்க்கையின் கட்டுப்பாடுகளைக் குறிப்பாக, சபர்மதியில் சேர்ந்தவர்கள் உடனே அறிந்துகொள்ளலாம். விடியற்காலை நான்கு

மணிக்கு எழுந்து கூட்டுப் பிரார்த்தனை செய்வதும், ஒரு வேலை முடிந்து இன்னொன்றைத் தொடர்வதுமாகப் பணிகள் அங்கே மிக நேர்த்தியுடனும் ஒழுங்குடனும் நடைபெறும். பல விஷயங்களைப் படித்து, நாகரிகம், பண்பாடுகள் என்று விவாதிக்கும் வகையில் ஆசிரமவாசிகள் அங்கே பொழுதைக் கழித்ததில்லை. அவர்களுடைய கவனம் கைவேலையில்தான் சிறப்பாகப் பதிந்திருக்கும். கிராம சேவைக்குரிய பயிற்சியையே அங்கே அளித்தார்கள். பொருள் குவிக்கும் ஆசையின்றி, சத்தியத்திலும் அஹிம்சையிலும் நம்பிக்கை கொண்டு, பொது மக்களுக்கு உளமுவந்து தொண்டாற்றும் பண்பைத் தோற்றுவித்து வளர்ப்பதுதான் சபர்மதி ஆசிரமத்தின் லட்சியம்.

அடையாறில், இயற்கையின் எழிலார்ந்த சூழலில் பிரும்ம வித்யா மந்திரம் நிறுவப்பெற்றிருக்கிறது. அங்கே காணும் கட்டடங்களும், நூல்நிலையமும், நேர்த்தியான மலர்வனங்களும், அந்த இடத்தின் தனிச் சிறப்புக்கள். புலவர்களும் சிந்தனையாளர்களும், பல்வேறு இடங்களிலிருந்து வந்து கலந்திருக்கும் சூழலின் நாகரிகங்களும் பண்பாடுகளும் அடையாறில் ஆன்மீகத் தெளிவையும் அமைதியையும் துலங்கச் செய்கின்றன. அமைதி நாடி ஓரிடத்தில் அமர்ந்து படிக்கும்போது வெளி உலகின் சந்தடிகளுக்கப்பால் தனியிருந்து சிந்திக்கத் தகுந்த இடம் அடையாறு என்று தெளிவாகப் புலப்படும். அன்னிபெசன்டின் காலத்திலிருந்த பாங்கும் புகழும் இப்போது அங்கே இல்லாமலிருக்கலாம் என்றாலும், இப்போதும் அந்தப் பரம்பரைச் சிறப்பு இல்லாமலில்லை.

சாந்தி நிகேதனத்தின் சிறப்பு வேறு. கலைகளுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கின்றனர், இங்கு. இசை, நாடகம், நடனம், ஓவியம் ஆகிய நுண்கலைகளுக்கு இங்கே ஊக்கமும் உற்சாகமும் அளிக்கின்றனர். கிராமப்புறங்களிலிருந்து வரும் ஆட்டக்காரர்கள், அவ்வப்போது சாந்தி நிகேதனத்தில் வந்து நிகழ்ச்சிகள் நடத்துவது வழக்கம். மாணவர் நாடகங்களும் அங்கு நடைபெறுவதுண்டு. ரவீந்திரநாத தாகூரும் அவர்களுடன் வேடம் புனைந்து நடிப்பார். கல்விப் பயிற்சியின் தலையாய அம்சம் கலைப் பயிற்சியே. கல்விப் பயிற்சியின் ஒரு நோக்கமே ஒருவரைக் கலைகளின்பால் ஈடுபாடு கொள்ளச் செய்வதுதான். கலையறிவு இல்லாத வாழ்க்கை மனிதனுக்குரியதல்ல என்பதுதான் சாந்தி நிகேதனத்து மனிதர்களின் கொள்கை. ஒவ்வொரு நிறுவனமும், அவற்றை நிறுவியவர்களுடைய இயல்பையும் குறிக்கோளையும் சார்ந்த நிழலின் வடிவங்களாக அமைந்திருப்பதை மேற்கூறிய மூன்று அமைப்புக்களிலும் காணலாம்; உணரலாம்.

சாந்தி நிகேதனத்திலிருந்து நாங்கள் கயை காங்கிரஸுக்குச் சென்றோம். கேரளத்துப் பிரதிநிதிகளுக்கென்று தனியாகவே ஓர்

பாசறை இருந்தது. கே. மாதவன் நாயர், டி. ஆர். கிருஷ்ணசுவாமி ஐயர், மதுரதாஸ், ஏ. கே. பிள்ளை, டாக்டர் எம். பெருமாள் நாயுடு ஆகியோரெல்லாம் அங்கு இருந்தார்கள். மகாத்மா காந்தி சிறையிலிருந்ததால் காங்கிரஸின் எதிர்காலப் போக்கு எப்படியிருக்குமோ என்று பலரும் கவலை கொண்டிருந்தனர்.

காங்கிரஸின் நடைமுறைகளில் மாற்றம் காணவேண்டுமென்பது குறித்து, கயையில் காரசாரமான விவாதங்கள் நிகழ்ந்தன. ஒன்றோடொன்று இணைவதற்கு முரண்படும் இரு கருத்துக்கள் காங்கிரஸ் காரர்களிடையே நிலவியது தெளிவாகத் துலங்கியது. ஆழ்ந்த ரீதியிலானதோர் ஒத்துழையாமை இயக்கத்துக்கு மக்கள் இனியும் மனமிசைந்தவர்களாக இல்லை என்பதற்கு, நாட்டில் நடந்த வருந்தத் தக்க நிகழ்ச்சிகளே சான்று என்றும், சட்ட மறுப்பை அப்போதைக்கு நிறுத்திவைத்து, அரசியல் நிர்மாணச் சபைகளில் இடம் கொண்டு, சுதந்திரப் போரை உள் அமைப்பிலிருந்தே தொடருவதுதான் உகந்தது, நலம் விளையக்கூடியது என்பதும் பிரபலமான ஒரு கட்சியின் கருத்து. காந்தியடிகள் தீர்மானம் செய்த நடைமுறையில் எந்த மாற்றமும் செய்யலாகாது என்பது பிரபலமான பிறிதொரு கட்சியின் வாதம். கயை காங்கிரஸில், இரு கட்சியினருடைய கருத்து மோதல், ஒரு பெரிய போராட்டமாகவே இருந்தது.

அந்த ஆண்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தவர் சித்தரஞ்சன் தாஸ். தியாகச் செம்மலாகிய அவருடைய வாழ்க்கை வரலாறே தேசிய இயக்கத்தில் சேர்ந்தவர்களைக் கிளர்ச்சிகொள்ளச் செய்யக் கூடியது. மாதந்தோறும் ஆயிரக்கணக்காக வருவாயைக் குவித்துக் கொண்டிருந்த தொழிலை உதறிவிட்டு, காந்தியடிகளின் தலைமையில் இயங்கிய தேசிய இயக்கத்தில் ஸி. ஆர். தாஸ் சேர்ந்தார். எளிய வாழ்க்கையும் நாட்டுத் தொண்டுமே தம் வாழ்க்கையின் இலட்சியங்களெனக் கொண்டு போராட்டத்தில் இறங்கிய சித்தரஞ்சனின் வாக்கு வன்மை அற்புதமானது. உற்சாகம் பொங்கும் இயல்பினரான அவருடைய ஒப்பற்ற தலைமை எந்த இயக்கத்துக்கும் புத்துணர்வூட்ட வல்லது. காங்கிரஸின் நடவடிக்கைகளில் மாறுதல் காண வேண்டும் என்ற கொள்கைக்குச் சாதகமான பிரிவுக்கும் அவர் தலைவராக இருந்தார். எனவே, மாறுதலை நியாயமாக்கிக் காட்டும் வகையில், தம்முடைய நீண்ட தலைமையுரையில் அவர் அருமையாக வாதித்தார்.

மாறுதல் வேண்டாமென்ற கொள்கையை வலியுறுத்தும் பிரிவுக்கு ஸி. இராஜகோபாலாசாரி தலைவர். கடுமையான வாதங்களும் எதிர் வாதங்களும் அங்குத் தொடர்ந்தன. மகாத்மா காந்தியின் விருப்பங்களையும் அறிவுரைகளையும் பின்பற்றி, காங்கிரஸ் மேற்கொண்ட

நடைமுறைகளை அவர் சிறையிலிருக்கும்போது கைவிடுவது மகாத்மாவின்பால் நாம் இழைக்கும் பெரும் குற்றமாகும் என்று மாற்றம் வேண்டாத பிரிவினர் விவாதித்தனர். காலத்துக்கேற்ப மாறுதல்கள் செய்வதுதான் சுதந்திரப் போராட்டத்தில் முன்னேற்றம் காண்பதற்குரிய வழி என்று பிறிதொரு பிரிவினர் மொழிந்தார்கள். இறுதியில் மாற்றத்துக்கு விரோதமாகவே காங்கிரஸ் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றது.

தம் கருத்துக்கு இசைந்த ஆதரவாளர்களை ஒன்றுகூட்டி ஸி. ஆர். தாஸ் 'ஸ்வராஜ்ய கட்சி'யை உருவாக்கினர். அக் கட்சியின் மற்றொரு தலைவர் பண்டித மோதிலால் நேரு. இரண்டு புகழ்மிக்க தலைவர்கள் முன்நின்று உருவாக்கிய இக் கட்சிக்குப் பல பகுதிகளிலிருந்தும் ஆதரவு கிடைத்தது.

கயைக்கு வந்திருந்த சில தலைவர்களைக் கண்டபோது என்னுள் பல எண்ணங்கள் தோன்றி மறைந்தன. எல்லாவற்றையும் துறந்து சுதந்திரப் போரில் பங்கு கொள்ளக் கச்சை கட்டிக்கொண்டு புறப் பட்ட பலருடைய வரலாறுகளும் என்னை உணர்ச்சி வசப்படச் செய்தன. இவர்களெல்லாரும் இத்தகைய அருந்தியாகம் செய்வதற் குரிய சக்தியைத் தூண்டியதுதான் யாதோ? பெரிய அதிகாரப் பதவிகளை உதறித் தள்ளினர்கள். நெடுங்காலமாகப் பழக்கப்பட்ட சுகங்களை, வசதிகளைத் துறந்தார்கள். தங்களுடைய செயலுக்குப் போலீசாரின் அடிதடிதான் பலன் என்றறிந்தும் அதையும் ஏற்கத் துணிந்து தயாரா கின்றனர். நாட்டுத் தொண்டாற்றக் களத்திலிறங்கிய தியாக மணி களுடைய வரலாறுகள் யாரையும் எழுச்சி கொள்ளத் தூண்டுபவை யன்றே!

காங்கிரஸ் கூட்டத்துக்குப் பிறகு நாங்கள் ஓர் தீர்த்த யாத்திரை கிளம்பினோம். காசி, பிரயாகை, கயை முதலிய தலங்களைக் கண்டோம். அங்கெலாம் கண்ட அசுத்தம், எண்ணிறந்த நோயாளிகள், ஊன முற்றோர், பிச்சைக்காரர் ஆகியோருடைய அலங்கோலக் காட்சிகள் எல்லாம் என்னை மிகவும் வருத்தின. பணமே குறியாகப் பேராசை பிடித்த பண்டாக்கள் செயலில் காட்டிய சோம்பலும் என்னை வேதனைக் குள்ளாக்கியது. நாடு சுதந்திரம் பெற்றாலும் நாட்டு மக்களிடையே எத்தனையோ நாட்களாக வேரூன்றிக் கிடக்கும் பல மூடத் தனமான நடவடிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் அகற்றுவதற்கு எத்தனையோ நாட்களாகும் என்று எனக்கு அப்போது தோன்றியது.

பழக்க வழக்கங்களின் பொருளையும் தேவையையும் உணராமலேயே கல்வியறிவு பெற்றவர்கள்கூடக் குருட்டுத்தனமாக இயங்குவதையும், விவேகமற்றுச் செயல்கள் புரிவதையும் கண்டால் யாரும் வியப்புறுவர்.

வட இந்தியாவிலிருந்து திரும்பு முன், நான் புத்த கயைக்குச் சென்றேன். புத்தருடைய புனித நாமத்துடன் இணைந்த புண்ணியத் தலம் கயை. உலகின் பல பகுதிகளிலிருந்தும் எத்தனையோ பேர் நாள் தோறும் இங்கே வருகின்றனர். இங்கிருக்கும் போதி மரத்தினடியில் தானன்றே சித்தார்த்தன் ஞானப்பேறு பெற்றுப் புத்தராகத் திகழ்ந்தார்! அந்த அவதார புருடனுடைய வரலாற்றை அறிந்தவர், இதயம் துளும்பும் உணர்ச்சியுடன்தான் அம் மரத்தை அணுகுவர். இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் அதன் நிழலில் கண்மூடி ஒன்றுய்க் குவிந்த சிந்தையுடன் வீற்றிருந்த அந்தத் தெய்வீக மங்கள ரூபனை, நான் கற்பனையில் அப்போது கண்டேன். இந்த நெடிய காலத்தில், எத்தனை எத்தனை தலைமுறையினர் அந்தப் புண்ணியன் காட்டிய வழியில் அமைதியும் ஆனந்தமும் பெற்று உய்ந்திருக்கின்றனர்? எத்தனை எத்தனை மக்களுடைய வாழ்க்கையில் அவனருள் பரவி இருக்கிறது? அவனுடைய நல்வழி அறிவை உணர்த்தியிருக்கிறது? ஸ்ரீபுத்தனை ஞான வாழ்க்கையின் வழிகாட்டியாகக் கொண்ட மக்கள் இன்னமும் கோடிக்கணக்கில் இருக்கின்றனர். உலக மக்களின் நிலையாமையையும் துன்பங்களையும் கண்டு அவன் மனம் நைந்து வருந்தினன். துன்பங்களுக்குக் காரணத்தை ஆராய்ந்தறிய எல்லாம் துறந்து தவமியற்றப் புறப்பட்ட கருணைமூர்த்தியை நான் மீண்டுமொருமுறை சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்! இத்தகை தவநெறியோர், மாபுருடர்கள் பிறவி எடுத்திருக்கவில்லை எனின், இவ்வுலகின் நிலை யாதாயிருக்கும்? புத்தனும், கிறிஸ்துவும், நபியும், ஸ்ரீராமகிருஷ்ணரும் இல்லாத உலகைப்பற்றிச் சிந்திக்கத்தான் முடியுமோ?

18

மாத்ரு பூமியின் பிறப்பு

ஏந்த இயக்கமும் முன்னேற்ற மடைவதற்கு உறுதுணையாக ஓர் பத்திரிகை வேண்டியிருக்கிறது. ஒத்துழையாமை இயக்கம் தோன்றிய காலத்தில் கோழிக்கோட்டிலிருந்து நான்கு மலையாளப் பத்திரிகைகளும் இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகளும் வெளியாகிக்கொண்டிருந்தன. 'கேரள பத்ரிகா', 'மனோரமா', 'கேரள சஞ்சாரி', 'மிதவாதி' ஆகிய மலையாள இதழ்கள் எல்லாம் நாளிதழ்கள்.

செங்குளத்து குஞ்ஞராமன் மேனன், 'கேரள பத்ரிகை'யின் ஆசிரியர். புகழ்பெற்றவர். குஞ்ஞராமன் மேனனுக்கு, காந்திஜியின் பெயரையோ ஒத்துழையாமை இயக்கத்தைப்பற்றியோ யாரேனும் உச்சரித்தால் கூடப் பிடிக்காது. அந்த இயக்கத்தையும், அதில் கலந்துகொண்டவர் களையும் கண்டனம் செய்யவுமே தம் பத்திரிகைப் பகுதிகளை அவர் பயன்படுத்தி வந்தார். அத்துணைச் சக்தி வாய்ந்ததில்லை எனினும் 'மனோரமா'வும் அந்த இயக்கத்தை எதிர்த்த பத்திரிகைதான். முதலில் ஓர் நாளிதழாய்த் தொடங்கிய மனோரமா, பின்னர் வாரத்துக்கு மும்முறையாயிற்று. புளியம்பாற்ற குஞ்ஞுகிருஷ்ண மேனன் அதன் முதல் ஆசிரியர். அவருடைய மறைவுக்குப் பின்னர், அவருடைய மருகர், கிருஷ்ணன் நாயர் பத்திரிகையைப் பொறுப்பேற்று நடத்தினர். அவரும் பத்திரிகையில் குறிப்பிடத்தகுந்த மாறுதல் ஏதும் செய்து விடவில்லை.

'கேரள சஞ்சாரியும்' அது போன்றதே. அரசாங்கத்துக்கு எதிராக எதையும் அவர் வெளியிட விரும்பவில்லை. தேசிய இயக்கத்துக்கு அவர் ஆதரவாக இருந்தா ரெனினும் அதை அவர் வெளியிட்டுக் கொண்டதில்லை.

ஸி கிருஷ்ணனின் 'மிதவாதி', காங்கிரஸ்காரர்களைக் குற்றம் குறை கூறுவதில் 'அமிதவாதி'யாக இருந்தது. பிரிட்டிஷார் இந்த நாட்டை விட்டுப் போய்விட்டால், இந்த நாட்டின் நிலை, காவல்காரரில்லாத வீடாகப் போய்விடும் என்பது அவருடைய நம்பிக்கை. 'மிதவாதி' அவருடைய அந்தக் கொள்கையை ஆதரிப்பதாகவே இருந்தது.

'வெஸ்ட் கோஸ்ட் ஸ்பெக்டேட்டர்', 'வெஸ்ட் கோஸ்ட் ரிபோர்ட்டர்' என்ற இரண்டு ஆங்கில நாளிதழ்களும் கோழிக்கோட்டி லிருந்து வெளியாயின. ஆரம்ப காலத்தில் ஜீ. சுப்பாராவின் மேற் பார்வையில் வெளிவந்த 'ஸ்பெக்டேட்டர்' புகழ் விளங்கும் முறையில் நடந்துவந்தது. அச்சமின்றி விஷயங்களை ஆராய்ந்து வெளியிடும் ஒரே இதழ் என்று சொல்லும் நிலையில் அப்போது இருந்தது. சுப்பா ராவின் மறைவுக்குப் பின்னர், அந்தத் தரம் போய்விட்டது. பின்னர் அது ஏனைய பத்திரிகைகளைப் போன்றதாகவே ஆயிற்று. 'ரிபோர்ட்டர்' இதழிலும் ஒரு தனித் தன்மையோ சிறப்போ காணப்படவில்லை.

'மாத்ருபூமி' தொடங்கிய காலத்தில், தேசிய இயக்கத்தைச் சார்ந்து இரண்டு இதழ்கள் மலையாள மொழியில் வெளிவந்துகொண்டிருந்தன. ஒன்று, ஏ. கே. பிள்ளையை அதிபராகவும் ஆசிரியராகவும் கொண்டு கொல்லத்திலிருந்து வெளியான 'ஸ்வராட்'. அதை நடத்திவந்ததில் பல கஷ்ட நஷ்டங்களை அவர் அநுபவித்தார். இன்னொன்று, 'யுவ பாரதம்' என்ற பெயரில் பாலக்காட்டிலிருந்து கிருஷ்ணசுவாமி ஐயர் வெளியிட்ட

பத்திரிகை. காந்திஜி வெளியிட்ட 'யங் இந்தியா'வைப் போன்றே அதே அளவு கொண்ட நாளேடு அது. தேசீய இயக்கத்தைப்பற்றி மக்களுக்கு நிறையத் தெரிவிக்கவேண்டும் என்ற நோக்கத்துடனே அவர் இந்தப் பத்திரிகையை நடத்திக்கொண்டிருந்தார்.

கேரளத்தின் தேசீய இயக்கத்தில் மிகுந்த உற்சாகம் கொண்டு தொண்டாற்றியவர் டி. ஆர். கிருஷ்ணசுவாமி ஐயர். ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்த நாட்களிலேயே பாலக்காட்டில் தொழிலைத் துறந்த வழக்குரைஞர் அவர். பின்னர், பாலக்காடு தாலூகா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் என்ற நிலையில் கதர்ப்பிரசாரம், தீண்டாமை விலக்கு என்ற பிரிவுகளில் அருந்தொண்டாற்றியவர். அவர் ஹரி ஜனங்களின் மறுமலர்ச்சி கருதி நிறுவிய 'சபரி ஆசிரமம்' ஓலவக் கோட்டில் இன்றும் விளங்குகிறது. யுவபாரதத்தின் வாயிலாக இயக்கத் துக்குச் சுமாராகவே விளம்பரம் கிட்டியது. என்றாலும், காந்திஜியின் இலட்சியங்களையும், ஒத்துழையாமை இயக்கத்தின் செயல்முறைகளைப் பற்றியும் மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் அது ஓரளவு உதவி யாகவே இருந்தது.

காங்கிரஸின் திட்டங்களைக் குறித்தோ, காங்கிரஸ்காரருடைய முயற்சிகளைப் பற்றியோ, ஏதேனும் செய்திகளைக் கோழிக்கோட்டுப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்தால் அவர்கள் அதை வெளியிட மாட்டார்கள். கண்டனங்களுக்குப் பதிலாக ஏதேனும் எழுதினால்கூட அதைக்கூட நிராகரித்துவிடுவார்கள். எங்களுடைய அறிக்கைகளையும் வேண்டுகோள்களையும் தனிப்பட்ட முறையில் அச்சிட்டு வழங்குவ தற்கும் எங்களுக்கும் வசதியில்லை. அவற்றை அச்சிட்டுக் கொடுக்க அச்சகத்தாருக்கும் அச்சம். இக் காரணங்கள் கொண்டு எங்கள் பிரசுரங்களை அச்சடித்து வருவதற்குத் திருச்சூருக்கோ வேறு எங்கே னுமோ கொண்டு செல்லவேண்டும். அதுவும் வசதியாக இல்லை. பிறகு, ஒரு சைக்ளோஸ்டைல் இயந்திரம் வாங்கி அதில் நகல்கள் எடுத்து வழங்க ஏற்பாடு செய்தோம். இந்நாட்களில்தான் நாங்கள் ஒரு பத்திரிகை தொடங்கி நடத்துவது குறித்து ஆலோசனை செய்யலானோம்.

'நவீன கேரளம்' என்ற பெயருடன் ஒரு பத்திரிகை வெளியிடலாம் என்று முதலில் நிச்சயித்தோம். ஹோம் ரூல் இயக்க காலத்தில் அன்னிபெசன்டின் மேற்பார்வையில் வெளியான 'நியூ இந்தியா'வைப் போன்று, நவீன கேரளத்தைப் புதிய இயக்கத்துக்கான இதழாகக் கொள்ளலாம் என்று கருதினோம். அப்போது மலபார் கலகம் தொடங்கு வதற்கு அது ஓர் தடையாயிற்று.

கலகம் ஆரம்பமானதும், யூ, கோபால மேனனும், கே. பி. குஞ்ஞுண்ணி மேனனும் சென்னைக்குச் சென்றார்கள். அங்கேயே

அவர்கள் 'நவீன கேரளம்' என்ற பெயரில் ஓர் மலையாள நாளிதழைத் தொடங்கி வெளியிடலானார்கள். குஞ்ஞுண்ணி மேனன் சிறந்ததொரு உரைநடை எழுத்தாளர். அவருடைய துணை, யு. கோபால மேனனுக்கு ஓர் நல் வாய்ப்பாயிற்று. ஒரு சிறு அச்சகம் வாங்கி, அவர்கள் சில மாதங்கள் வரையிலும் சென்னையில் 'நவீன கேரள'த்தை வெளியிட்டார்கள். கலகம் அடங்கி, நாட்டு நிலைமை சுமாராக அமைதிக்கு வருகையில், ஒரு பத்திரிகை ஆரம்பிக்கும் யோசனை என்னுள் மீண்டும் தலைதூக்கியது. எங்கள் சட்டத் தொழிலுக்குத் திரும்பிக் கவனம் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கும் மாதவன் நாயருக்கும் சிறிதும் தோன்றவில்லை. குறிப்பாக, காங்கிரஸ் தொண்டுகளேதும் நிலையான பாங்கில் செய்ய இயலாத காலமாகவும் இருந்தது. அதனால் சில நாட்களாகவே கருத்தில் வைத்திருந்த பத்திரிகையை, எப்படியேனும் வெளிக் கொண்டுவர வேண்டும் என்று நாங்கள் உறுதி பூண்டோம்.

இந்நாள் மஞ்சேரியில் ஒரு பெயர் பெற்ற வக்கீலாக இருக்கும் கே. கேசவன் நாயர் அந்நாளில் கோழிக்கோட்டில் தொழில் புரிந்து கொண்டிருந்தார். மாதவன் நாயருடைய சகோதரரான அவர் எனக்கும் நண்பர். 'நாம் முதலில் யோசனை செய்து வைத்திருந்த பெயரைத் தாங்கி ஏற்கெனவே ஒரு பத்திரிகை வெளிவந்துவிட்டது. இனி நவீன கேரளம் என்ற பெயர் சரிவராது. புதிதாக நல்ல பெயர் ஒன்று கண்டுபிடிக்க வேண்டாமா?' என்று கேசவன் நாயர் என்னைக் கேட்டார். 'ஒரு பெயர் யோசனை செய்து வைத்திருக்கிறேன். ஆனால், அதை இப்போது சொல்லமாட்டேன். மற்ற ஏற்பாடுகள் எல்லாம் முடியட்டும். சொல்கிறேன்' என்றேன் நான். நவீன கேரளம் வெளியாகத் தொடங்கிய பின்னரே நான் பல பெயர்களைப் பற்றியும் சிந்தனை செய்திருக்கிறேன். 'தேசோத்தாரிணி', 'ஸ்வாதந்திரிய காஹளம்', 'அருணோதயம்' என்றெல்லாம் ஏதேதோ பெயர்கள் மனதில் தோன்றின. 'மாத்ருபூமி' என்ற பெயர் மனதில் முதலில் தோன்றியதும் மற்றப் பெயர்களெல்லாம் மறைந்துவிட்டன. மாத்ருபூமி... மாத்ருபூமி... அது தானாக, தன்னிச்சையாக மனதில் உதித்த பெயராகத் தோன்றியது. பல முறைகள் அப் பெயரை என்னுள் கூறிக் கூறி பார்த்துக்கொண்டேன். 'பிறகு சொல்கிறேன்' என்று நான் முதலில் கேசவன் நாயரிடம் உரைத்தாலும், அதை இரகசியமாக வைத்துக்கொள்ளும் பொறுமை எனக்கு இல்லை. அந்தப் பெயரை நான் முதலில் கேசவன் நாயரிடம்தான் கூறினேன். அவருக்கும் அது மிகவும் இசைவாக இருந்தது. 'நல்ல பெயர். ஆனால் வெளியில் சொல்ல வேண்டாம்' என்று அவரும் தடை விதித்தார். சில நாட்களுக்கு

இரகசியமாகவே வைத்திருக்க நாங்கள் நிச்சயம் செய்துகொண்டாலும், நாங்களிருவரும் மேலும் சிலரிடம் அதை வெளியிடாமலில்லை! கேட்டவர்களெல்லாம் பெயர் நன்றாக இருப்பதாகவே கூறினர்கள். பிறகு மாத்ருபூமி கம்பெனி ரிஜிஸ்தர் செய்ய அதிகக் காலம் பிடிக்கவில்லை.

பங்கு ஒன்று ரூபாய் ஐந்து என்று கொண்டு, இருபதினாயிரம் பங்குகளுக்கு ஒரு லட்சம் மூலதனம் என்று கொண்டு. 1922 ஆம் ஆண்டு பிப்ரவரி பதினேந்தாம் தேதி மாத்ருபூமி கம்பெனி ரிஜிஸ்தர் செய்தோம். மே மாதத்தில் கம்பெனி வேலை தொடங்கினோம். கே. மாதவன் நாயர், காரூர் நீலகண்டன் நம்பூதிரிபாடு, அம்பலக்காட்டுக் கருணாகரமேனன், டி. வி. சுந்தரய்யர், டாக்டர் ஏ. ஆர். மேனன், பி. அச்சுதன், கே. பி. கேசவமேனன் ஆகியோர் மாத்ருபூமி கம்பெனி ரிஜிஸ்தர் செய்கையில் அதின் டைரக்டர்களாக இருந்தனர். டாக்டர் ஏ. ஆர். மேனன் டைரக்டர் நிலையிலிருந்து விலகிவிட்டார், எஞ்சிய அறுவரும் முதல் டைரக்டர்கள். மானேஜிங் டைரக்டர், கே. மாதவன் நாயர். கணக்கு வைத்துக்கொள்வதிலும், உண்மை ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிய மாதவன் நாயர், உற்சாகமுடன் செயலாற்றியதால் அந்தப் பணிக்கென்றே பிறந்தவராகத் திகழ்ந்தார். ஆனால், மானேஜிங் டைரக்டரும் மானேஜரும் ஒருவராகவே இருக்க முடியாத காரணம் கொண்டும், அவர் மானேஜர் பொறுப்பை ஏற்பது மிக அவசியமாக இருந்தது கொண்டும், நான் மானேஜிங் டைரக்டர் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். எனக்குப் பிடிக்காத தொழில் அது. ஏனெனில் எனக்கும் கணக்குக்கும் அவ்வளவாகப் பொருத்தம் கிடையாது. கணக்குகளைப் பொறுத்தவரையிலும் மாதவன் நாயர் எனக்கு உதவுவதாக வாக்களித்த பின்னரே நான் அந்தப் பொறுப்பை ஏற்கத் துணிந்தேன்.

கம்பெனியை 'ரிஜிஸ்தர்' செய்துவிட்ட போதிலும், பங்குகளைச் சேர்ப்பது அவ்வளவு எளிதாக இல்லை. அதற்குப் பல இடையூறுகள் இருந்தன. காங்கிரஸின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் மக்களுக்குத் தெளிவாகத் தெரிவித்து, சுதந்திர இயக்கத்துக்கு ஆதரவு தேடத்தான் நாங்கள் பத்திரிகை நடத்த முன் வந்திருந்தோம். அந்த நோக்கம் குறித்து எங்கள் கம்பெனி அறிக்கையில் தெரிவித்திருந்தோம் அத்தகையதோர் நிறுவனத்தில் பங்குகள் வாங்கப் பலரும் தயங்கினர்கள்.

எங்களுடைய கருத்துக்கு ஆதரவாக இருந்தவர்களும், தாங்கள் அந்தக் கம்பெனியில் பங்குகள் வாங்கினால் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராக நேரிடுமே என்று அஞ்சினர்கள். இத்தகையோர் எங்களிடம் ஏதேதோ சாக்குப் போக்குகளைக் கூறி நழுவினர்கள். 'இதொன்றும் நடக்கப்போவதில்லை. எத்தனையோ கம்பெனிகள் ரிஜிஸ்தர் செய்து,

பங்குகள் திரட்டிய பின்னரும்கூட மூடிவிட்டதை நாங்கள் கண்டிருக் கிறோம். அதுபோல் இதுவும் நெடுநாள் நிலைக்காது' என்றனர் வேறு சிலர். 'பிராக்டிஸை விட்டுவிட்டு, வேறு தொழில் இல்லாமல் ஷேர் பிரிக்கக் கிளம்பிவிட்டார்கள்! கம்பெனியெல்லாம் சரிவருமா...' என்று எண்ணிக்கொண்டாலும், நாங்கள் வீடு தேடிச் சென்றதால் முகத்துக்கு முன் வெறுப்பாகக் கூற மனமின்றி 'ஒன்றோ இரண்டோ' பங்குகள் ஏற்றனர் சிலர்.

நாங்கள் பங்குகள் சேர்ப்பதற்காகப் பலரைத் தேடி அலைந்த நாட்களில் நாங்கள் எதிர்நோக்கியிருக்க வேண்டியிருந்த உண்மை நிலைகள் இவை. என்றாலும், மாத்ருபூமிக்கு உள்ளன்போடு உதவிய நண்பர்களும் கொஞ்சமல்ல. நாங்கள் மலையாளப் பத்திரிகை தொடங்கும் முட்டாள்தனத்தைக் கேலி செய்த அறிவாளரும் இல்லாம லில்லை. 'இப்படி ஓர் அசட்டுத்தனம் உண்டா?' என்று கேட்கும் முகத் தோற்றத்துடன், 'இங்கிலீஷ் பத்திரிகை தொடங்கப்போவ தாகச் சொன்னாலும் அதற்குப் பொருளுண்டு. ஒரு மலையாளப் பத்திரிகைக்குக் கம்பெனி பதிவு செய்துகொண்டு பணம் பிரிக்க யாரேனும் முனைவார்களா?' என்று இரங்கினார்கள். மலையாளப் பத்திரிகை தொடங்குவதைக் குறித்து ஒரு கவி நகைச்சுவையுடன் கூறியது என் நினைவுக்கு வருகிறது.

'பணமில்லாதவர்; பணியில்லாதவர்,
பழிவாங்குவதற்குக் காத்திருப்பவர்,
பசையுள்ளோரைச் சார்ந்து துதிப்பவர்,
பரீட்சைகளெழுதித் தோல்வி கண்டவர்,
பஞ்சத்தாண்டிகள் ஒன்று சேர்ந்தல்லவோ,
சின்னப்பத்திரிகை தொடங்க முயலுவார்!'

மிக்கவரும் இக் கருத்துடையவர்களே. இது லாபம் கிடைக்கக்கூடிய தோர் கூட்டு நிறுவனம் என்று கூறி எங்களால் பங்குகள் வாங்க ஆளைத் தேட முடியாது. அளிக்கும் பணத்தை ஏதோ தருமமாகத்தான் கருத வேண்டியிருக்கும் என்பதை நாங்கள் அவர்களுக்கு உணர்த்திஞ்ஞும். இதற்காக, சென்னை, பம்பாய், மலபார்-கொச்சி என்று நாங்கள் சுற்றி அலைந்தோம். மாதவன் நாயரும், காரூர் நீலகண்டன் நம்பூதிரிபாடும், கே. மாதவ மேனனும், டி. ஆர். கிருஷ்ண சுவாமி ஐயரும், பி. ராவுண்ணி மேனனும், அச்சுதன் வக்கீலும், டி. பி. சாத்துக்குட்டி நாயரும் பங்கு சேர்க்கும் முயற்சியில் உற்சாகமாகப் பணியாற்றி னார்கள். நானும் அவர்களுடன் பல இடங்களுக்குச் சென்றேன். நாங்கள் இரண்டு மூன்று பேர் சேர்ந்து ஓரிடத்துக்குச் செல்வது வழக்கம்.

எங்களுக்கு இதில் சுவையான பல அநுபவங்கள் நேர்ந்தன. மாதவன் நாயரும் நானும் ஒரு நண்பரைக் காணச் சென்றோம். என்னுடன் அவர் சேர்ந்து படித்தவர். நெருங்கிய நண்பர். நல்ல பண வசதியுடையவ ராதலால், பத்துப் பங்குகளேனும் ஏற்றுக் கொள்வார் என்று கருதினேன். ஆறும் வயலும், குன்றும் மேடும் ஏறி இறங்கி நாங்கள் அவருடைய இல்லத்துக்குச் சென்றோம். ஒரு நண்பனை வரவேற்கும் மகிழ்ச்சியை அவர் முகத்தில் என்னால் காண முடியவில்லை. எங்களுடைய நோக்கத்தை நாங்கள் வெளியிட்டதும் அவர் எங்களை அதிக நேரம் காத்திருக்கச் செய்யவில்லை. முதலில் நான் அவர் பத்துப் பங்குக ளேனும் வாங்குவார் என்று நினைத்தேன். அது ஐந்தாகக் குறைந்தது. இறுதியில் இரண்டு பங்குகளேனும் வாங்கிக்கொள்ள வேண்டினேன். 'இருக்கட்டுமே, பார்க்கலாம்...' என்று அவர் தட்டிக்கழித்தார். நாங்கள் விடைபெற்றுக்கொண்டு படியிறங்கினோம். அதுவே அவருக்குப் பெருத்த ஆறுதலை அளித்திருக்கும்!

மாதவன் நாயரின் முகத்தில் வெறுப்பும் நிராசையும் நிழலாடின. எனினும் ஒரு புன்னகையை வரவழைத்துக்கொண்டவராக 'இத்தகைய நண்பர்களிடம் இன்னும் போகவேண்டுமா?' என்று வினவினார். நான் உடனே, 'இதுபோன்ற அநுபவங்கள் நமக்கு இன்னும் கிடைக்கும்' என்றேன். முப்பது ஆண்டுகள் சென்ற பின்னர், நான் அந்த நண்பரை மீண்டும் கண்டேன். 1955ஆம் ஆண்டில் நடந்த என்னுடைய நண்பரின் மகளுடைய திருமண விழாவில் அவர் என்னைக் கண்டதும், 'உங்களைப் பார்த்து எத்தனை நாளாயிற்று! எத்தனை நாட்களுக்கு உங்களைப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்திருக்கிறேன்! நாம், கடைசி யாக எப்போது சந்தித்துக்கொண்டோம்?' என்று கேட்டுக்கொண்டு அருகில் வந்தார். நானும் மாதவன் நாயரும் மாத்ருபூமிக்குப் பங்கு சேர்க்க வந்தோம். நினைவிருக்கிறதா? நாம் கடைசியாக அப்போது தான் பார்த்துக்கொண்டோம்' என்று நான் மொழிந்தேன்.

அதைச் செவியுற்றதும் அவருடைய மனதில் அந்த நினைவு கசப்பாகத் தோன்றியிருக்கலாம். சிறிது நேரம் எதுவுமே பேசாமல் மௌனமாக இருந்தார். அவருடைய முகத்தில புன்னகை விளங்கினாலும் அக உணர்வை மறைக்க இயலாததாக அது இருந்தது.

இன்னொரு அநுபவமும் இங்குக் குறிப்பிடத் தகுந்ததாகும். ஏராள மான சொத்துக்குரியதோர் நாயர் குடும்பத் தலைவர் அவர். தேசிய இயக்கத்துக்கு ஆதரவாக இருந்த இளைஞர். அவரை எனக்கு நன்முகத் தெரிந்திருந்ததாலும், என்னுடன் டி. ஆர். கிருஷ்ணசுவாமி ஐயரும் வந்தார். நாங்கள் ஒரு மணி நேரத்துக்கு மேலாகக் கீழே காத்திருந்தோம். அவர் மாடியிலிருந்தார். எத்தனை நேரம் இன்னும்

காத்துக்கொண்டிருப்பது என்று பொறுமை குன்றியவர்களாக உள்ளே சென்று காரியக்காரரைக் கண்டோம். தலைவரைப் பார்க்க வந்திருப்பதாக நாங்கள் விவரம் அறிவித்ததும், அவன் மேலே சென்று சில நொடிகளில் திரும்பினன். 'அவர் நீராடக் கிளம்பிவிட்டார். பிறகு கோயிலுக்குச் சென்றுல் திரும்ப வெகு நேரமாகும். எனவே இன்னொரு நாள் வரச்சொன்னர்' என்று அறிவித்தான். நாங்கள் ஏதும் கூறுமல் திரும்பினேம். இரண்டு நாட்கள் சென்ற பின்னர், குளித்து, உண்டு, உறங்கி எழுந்து ஓய்வாக இருக்கும் நேரத்தில் செல்வது நலமென்று கருதி, மாலை நான்கு மணியளவில் அங்குச் சென்றோம். அரை மணி நேரம் அப்போதும் காத்திருந்தோம். பின்னர் தலைவர் கீழிறங்கி வந்தார். நாங்கள் வந்த நோக்கத்தைத் தெரிவித்தோம்.

'இவ்வாண்டு பட்ஜெட் எல்லாம் முடிந்துவிட்டது. வரும் வருஷம் பார்த்துக்கொள்ளலாம்' என்றார். 'அவ்வளவு பெரிய தொகை நாங்கள் கேட்கவில்லை. பத்துப் பதினைந்து பங்குகள் வாங்கினால் போதும்' என்றேன். 'இல்லை, பட்ஜெட் திட்டத்தை மீறி நான் செலவு செய்வதில்லை' என்று அவர் கூறிவிட்டார். அடுத்த ஆண்டு பட்ஜெட் திட்டத்திலும் மாத்ருபூமி பங்குக்கான தொகைக்கு இடம் இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், இரண்டாண்டுகளுக்குப் பின் மாத்ருபூமி சிறிது புகழுடன் பரவியிருந்த காலத்தில் தற்செயலாக அவரை ஒருநாள் கண்டேன். 'பத்திரிகை நன்றாக நடக்கிறதல்லவா? நான் வழக்கமாகப் படிக்கிறேன்' என்று கூற அவர் தயங்கவில்லை. பங்குகள் வாங்கவில்லை என்றாலும், பத்திரிகை படிக்கிறாரே என்று நான் ஆறுதல் கொண்டேன்.

சிலர் பேசும் விதம் கண்டாலே இவர்களிடம் எதற்காகப் பங்கு கேட்க வந்தோம் என்று தோன்றும். வெறுப்பு, நிராசை, பலவீனம் எல்லாமே மனதை வாட்டி வருத்தும். இதற்குமுன் எனக்குக் கம்பெனிக்குப் பங்குகள் வேண்டிச்சென்ற அநுபவம் இருந்ததில்லை பின்னரும் ஏற்படவில்லை!

பணம் கொஞ்சம் சேர்ந்ததும் நாங்கள் ஓர் அச்சு இயந்திரம் வாங்குவதாகத் தீர்மானித்தோம். குறுப்பத்துக் கேசவமேனன், அந்நாளில் 'எம்பரஸ் விக்டோரியா பிரஸ்' என்ற பெயரில் ஓர் அச்சுக்கூடத்தை நடத்திக்கொண்டிருந்தார். இடம், அச்சுப்பொறி இரண்டுமே அவருக்குச் சொந்தம். அதை நாங்கள் பதினையாயிரம் ரூபாய்க்கு வாங்கினோம். முழுத்தொகையும் கொடுப்பதற்குரிய பணம் அப்போது எங்களிடம் இல்லை. கொஞ்சம் கொடுத்துவிட்டு, எஞ்சியதைக் கடனாக நிறுத்திக் கொண்டோம். அந்நாளைய அந்தச் சிறிய வீட்டில் தொடங்கி

வளர்ந்ததுதான் இன்றைய மாத்ரு பூமி கட்டடம். இன்று அச்சகமும், பல பிரிவுகளும் வளர்ச்சி பெற்றிருந்தாலும், பழைய அச்சகம் இருந்த இடத்திலேயே இன்றைய கட்டடமும் அமைந்திருக்கிறதென்பது குறிப்பிடத்தகுந்தது.

கையிலிருந்த பணத்தைக் கொண்டு அச்சகம் வாங்கிவிட்டோம். பத்திரிகையை வெளியிட வேண்டுமென்றால் இன்னும் கொஞ்சம் பணம் வேண்டும். அதையும் சேர்க்காமல் பத்திரிகையைத் தொடங்குவது துணிச்சலான செயல் என்று எங்களில் சிலர் கருதினோம். பத்திரிகை தொடங்காவிட்டால் பணம் சேர்ப்பது கடினமாகிவிடும். அதனால் எவ்வாறேனும் முயன்று விரைவில் பத்திரிகையைக் கொண்டுவந்துவிட வேண்டும் என்று சிலர் எண்ணினார்கள். கடைசியாக நிச்சயம் செய்த கூட்டத்தை நான் இப்போது நினைத்துப்பார்க்கிறேன். கடுமையான விவாதம் தொடர்ந்தது. 'எந்தக் காரியத்தில் இறங்கினாலும் நிச்சயமில்லாததோர் நிலையைச் சமாளிக்காமலிருக்க முடியாது. அதற்குத் தயாராக இல்லை என்றால் ஒரு காரியமும் செய்யமுடியாது. பங்குகள் சேர்ப்பதற்கு இன்னமும் முயன்றுகொண்டிருப்போம். ஆனால், பத்திரிகை விஷயம் ஆறப் போடுவதற்கில்லை. அதைக் கொண்டுவந்து விடவேண்டும் என்று இறுதியில் முடிவெடுத்தோம். ஆசிரியப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். 1923ஆம் ஆண்டு மார்ச் பதினேழாந் தேதி சனிக்கிழமை பத்திரிகையைத் தொடங்கிவிட உறுதி கொண்டோம். அந்தத் தேதியைக் குறியாக்கக் காரணம் இருந்தது. 1922ஆம் ஆண்டு மார்ச் பதினெட்டாம் தேதியன்று மகாத்மா காந்திக்கு ஆறு ஆண்டுக்காலம் சிறைத்தண்டனை விதித்தார்கள். ஒத்துழையாமை இயக்கத்தின் தலைவராகிய அவர் தண்டனை பெற்று ஓராண்டுக் காலம் முடிந்த நாளில் மாத்ருபூமியைத் தொடங்குவது உசித மென்று கருதினேன். பதினெட்டாம் தேதி ஞாயிற்றுக்கிழமை. எனவே பதினேழாந் தேதி சனிக்கிழமையன்றே முதல் இதழைக் கொண்டுவந்து விடத் தீர்மானம் செய்தோம். முதலில் மாத்ருபூமி வாரம் மும்முறை வெளியாகும் பத்திரிகையாகவே தொடங்கியது. செவ்வாய்—வியாழன்—சனி நாட்களில் பத்திரிகை வெளிவரும்.

சில நாட்கள் இரவும் பகலுமாக நாங்கள் உழைக்கவேண்டி இருந்தது. பத்திரிகையின் இலட்சியத்தையும் தன்மையையும் பற்றிக் கூறிப் பிரதி நிதிகளைத் தேர்வதற்கும், காகிதம் பெறுவதற்கும், எழுத்தாளரை உறுதிப்படுத்துவதற்கும் நாங்கள் ஆவன செய்தோம். பத்திரிகையுடன் நேரடித் தொடர்பு கொள்ளாத பல நண்பர்கள் அலுவலகத்துக்கு வந்து எங்களுக்கு உதவினார்கள்.

முதல் பிரதி என்னுடைய கற்பனையில் உருவாயிற்று. மாதவன் நாயரும், வேறு சிலரும், பல முறைகள் அதைப் பற்றிச் சிந்தனை

செய்தோம். நான் முதன்முதலில் எழுதிய தலைமை உரை, ஆசிரியர் உரையை அவர்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டேன். கூட்டியும் குறைத்தும் வெட்டியும் திருத்தியும் அதைப்பின்னும் ஒழுங்கு செய்தேன். அச்சுக் கோப்பவர்களுக்கு என்னுடைய கையெழுத்து எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாக இல்லை. அந்த வித்தையில் அவர்கள் தேர்ச்சி பெறுவதற்குச் சிறிது காலம் ஆயிற்று.

பி. ராவுண்ணி மேனன், கே. மாதவ மேனன், கே. பி. குஞ்ஞுண்ணி மேனன், டி. பி. ஸி. கிடாவ் ஆகியோர் அன்று ஆசிரியப் பிரிவில் உதவியாளராகப் பணி புரிந்தனர். நவீன கேரளத்தை விட்டு, குஞ்ஞுண்ணி மேனன் மாத்ருபூமிகு வந்தார். டி. பி. ஸி. கிடாவ் அன்று தொடங்கியவர் 1964ஆம் ஆண்டுவரை பணிபுரிந்தார். காகிதம் மடிக்க மாத்ருபூமி அலுவலகத்துக்கு வந்த ஓர் இளைஞன், நாராயணன். வெகு நாட்கள் மாத்ருபூமிக்குத் தொண்டாற்றினான். அவன் இப்பொழுது காலமாகிவிட்டான்.

மார்ச் பதிஞ்ஞும் தேதி காலையிலேயே நாங்களெல்லாரும் அலுவலகத்துக்குச் சென்றோம். மாதவன் நாயருக்கும் எனக்கும் அடுத்தடுத்த அறைகள். அச்சுக்கோப்பவர்களைப் பார்வையிடுவதும், மேலேறுவதும் இறங்குவதுமாக உற்சாகமாக இயங்கிக்கொண்டிருந்தோம். ஒரு பெரிய விருந்தளிக்க ஏற்பாடுகள் செய்வது போன்று அச்சுதன் வக்கீல் பரபரத்தார். 'ஒன்றும் தயாராகவில்லையே? நாளை பத்திரிகை வர வேண்டாமா?' என்று கேட்டுக்கொண்டு கையில் ஒரு கம்பு சகிதம் அச்சகத்தின் குறுக்கும் நெடுக்குமாகப் போய்க்கொண்டிருந்தார். பணியாளரும், உதவியாளரும், பார்வையாளருமாக மாத்ருபூமி அலுவலகத்தில் நிறைந்துவிட்டனர். மாலையில் உணவருந்தி மீண்டும் நாங்கள் அலுவலகத்துக்கு வந்தோம். 'காலி புரூஃப்', 'பேஜ் புரூஃப்' எல்லாம் திருத்தியாகிவிட்டது. 'ஃபாரம்' அச்சியந்திரத்தில் ஏறுவதற்குரிய வகையில் ஃபோர்மன் சந்துக்குட்டி சித்தம் செய்துகொண்டிருந்தான். அப்போதுதான் அச்சு இயந்திரத்தில் ஏதோ ஒரு கோளாறு கண்டான். அதை நீக்கி மீண்டும் இயக்குவதற்கு, சந்துக்குட்டிக்கும், 'மெஷின்மேன்' சாத்துக்குட்டிக்கும், உதவியாளருக்கும் மேலும் சிறிது நேரமாயிற்று.

சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தவண்ணம் நான் அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தேன். அதிகாலை நான்கு மணியாயிற்று. எல்லாம் சரியாயிற்று என்று சாத்துக்குட்டி இயந்திரத்தை சுழற்றத் தொடங்கினான். நாங்கள் சிறிது நேரம் அதைப் பார்த்துக் கொண்டே நின்றோம். பக்கங்களைச் சேர்த்து, பத்திரிகையை மடக்கி முதல் பிரதியைச் சாத்துக்குட்டி என் கையிலளித்தான். நான் அதைப்

பிரித்துப் பார்த்தேன். மாதவன் நாயரும், மற்றும் பலரும் என்னருகில் இருந்தனர். மாத்ருபூமி பிறந்துவிட்டது அந்த மாத்ருபூமியைக் கையிலெடுத்துக்கொண்டு நான் வீட்டுக்கு வந்தேன். கிடாவும் என்னுடன் வந்தான். பொழுது புலரத் தொடங்கி இருந்தது. சில கடைகள் திறந்திருந்தன. அதிகாலை வண்டிக்குக் கிளம்பியவர்கள் வண்டி தவறிவிடுமோ என்று விரைந்து நடக்கின்றனர். சரக்கேற்றிக்கொண்டு உள்நாட்டிலிருந்து வரும் வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாக வழியில் அசைந்து செல்கின்றன. அவற்றை இழுக்கும் காளைகளும் ஓட்டும் மனிதர்களும் ஒரே மாதிரி மெலிந்து நலிந்திருக்கின்றனர். 'மாத்ருபூமி' வெளி வந்ததைப்பற்றி இவர்கள் அறிந்திருப்பார்களோ என்று அப்போது தோன்றியது.

வீடு சென்றதும் எல்லோரையும் எழுப்பி மாத்ருபூமியை அவர்களுக்குக் காட்டினேன், ஒரு புதிதாகப் பிறந்த இளங்குழவியைக் கண்டாற்போல் அவர்களும் மகிழ்ச்சியடைந்தனர். முதல் நாள் இரவும் பகலுமாக உழைத்ததின் காரணமாக எனக்கு மிகவும் களைப்பாக இருந்தது. பொழுது புலர்ந்துகொண்டிருந்தாலும், நான் படுக்கைக்குச் சென்று படுத்தேன். படுத்ததுதான் தாமதம், எல்லாம் மறந்து ஆழ்ந்து உறங்கினேன்.

19

பத்திரிகையாளர் பயிற்சி

மறுநாள் அதிகாலையில் காப்பியருந்தி மாத்ருபூமியைப் பிரித்து அதன் உள்ளடக்கத்தை இன்னொருமுறை ஆராய்ந்தேன். தலையங்கத்தை இன்னொருமுறை படித்தேன். 'நாட்டின் பொதுநலத்தையே குறிக்கோளாகக்கொண்டு, சத்தியத்தைக் கடைப்பிடிப்பவராக, எந்தத் தனிப் பிரிவையும் சமயத்தையும் சாராமல் பணியாற்றவே நாங்கள் முனைந்திருக்கிறோம் என்பதை நினைவில் நிறுத்தி, அடிப்படை உரிமைகளைப் பொறுத்து எல்லா மனிதர்களும் சமமானவர் என்ற நம்பிக்கையுடன், சுதந்திர மலர்ச்சிக்காக அச்சமின்றிப் போராடுவதற்கு ஒருபோதும் பின் வாங்கமாட்டோம்' என்றெழுதிய பகுதியைப் பார்த்தபோது, அது கேரள மக்களுக்குமுன் எடுத்துக்கொண்டதோர் பிரதிக்ஞையாக, உறுதிமொழியாகவே தோன்றியது. எவ்வாறுயினும் அதை நிறை

வேற்றும் முயற்சிகளில் மாத்ருபூமி அதைரியமோ, சோர்வோ கொள்ளவில்லை என்பதை மாத்ருபூமியின் இந்த நீண்டகால வரலாறு தெளிவாக்குகிறது.

நல்ல இலட்சியங்களைக் குறிக்கோளென்று அறிவிப்பது கடின மொன்றுமில்லை. ஆனால், அவற்றைச் செயல்முறையில் விளக்கிக் காட்டுவது அத்துணை எளிதல்ல என்பது தெரியவரும். இது என்னுடைய அநுபவம். எவரிடமும் வெறுப்பும் வேற்றுமையும் கொண்டிராத மாத்ருபூமியில் விமரிசனங்கள் அச்சமற்றதாகவும், ஓரம் சாராத நடுநிலையுடையதாகவும் இருக்கவேண்டுமென்ற கொள்கையை உடையவன் நான். பொதுமக்களுக்கு அறிவுறுத்த வேண்டிய விஷயங்களை வண்ணமும் தரமும் மாறுது, குறையாது, அவர் களுக்கு வழங்கவேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தேன். அந்த முதலிதழை வெளியிடுமுன், மக்கள் மாத்ருபூமியின் வரவை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருந்ததாக ஒரு நண்பர் என்னிடம் கூறியதை நான் பலமுறை எனினும் நினைத்துக்கொண்டிருந்திருக்கிறேன்.

விமரிசன முறை பற்றிக் கூறுகையில், மகாத்மா காந்தியின் 'யங் இந்தியா' எங்களுக்கு ஓர் இலட்சியமான முன்மாதிரியாக இருந்தது. மாத்ருபூமி அதைப் பின்பற்றித்தான் இயங்கத் தொடங்கியது. நிகழ்ச்சிகளை 'ரிபோர்ட்' செய்கையில், எப் பக்கமும் சாராமலும், நோக்கம் குறியாகக் கொண்டும், பொருள்நுட்பம் உணர்ந்தும் செயல் படவேண்டும் என்று நிருபர்களுக்கு வலியுறுத்தியிருந்தேன்.

நாங்கள் அனைவருமே பத்திரிகைத் தொழிலில் அநுபவம் இல்லாத வர்கள்தாம். குஞ்ஞுண்ணி மேனன் மாத்ருபூமியில் சேருமுன், கேரளப் பத்திரிகையிலும், ஸ்வராட்டிலும், நவீன கேரளத்திலும் பணி புரிந்திருந்தாலும், ஒரு புதிய பத்திரிகையைத் தொடங்கும்போது உதவக் கூடிய வகையில் தேவையான அநுபவம் அவருக்குமில்லை. டி. பி. ஸி. கிடாவும் படிப்பை நிறுத்தி, பத்திரிகை அலுவலகத்திற்குப் பணிபுரிய வந்த ஓர் இளைஞன். பத்திரிகைத் தொழிலில் கோழிப்புரத்து மாதவ மேனனுக்கும் எங்களைக் காட்டிலும் அதிக அநுபவமொன்றும் இருந்ததாகச் சொல்வதற்கில்லை. ராவுண்ணி மேனனுக்கு ஆங்கிலம் கை வந்த மொழியே தவிர, அதுவரை மலையாளத்தில் அவர் ஒரு கட்டுரை கூடப் பத்திரிகைக்கு எழுதியதில்லை. என்றாலும், விரைவிலேயே மலையாளத்தில் அழகியதோர் உரைநடைப் பாணியைக் கையாள்வதில் தேர்ச்சிபெற்றுவிட்டார். உதவி ஆசிரியர் ராவுண்ணி மேனன்தான்.

நாங்கள் அனைவருமே பத்திரிகை நடத்துவதில் முதிர்ச்சியும் அநுபவமும் இல்லாத இளைஞர்கள்தாம். ஆனால் மாத்ருபூமியை மேலும் சிறக்கச் செய்யவேண்டுமென்ற உற்சாகம் கொண்டிருந்தோம்.

அதனால், நேரமோ வசதியோ நோக்காது, எவ்வளவு வேண்டுமானாலும் பணியாற்ற நாங்கள் சித்தமாக இருந்தோம். தொடக்க காலத்தில் இத்தகைய உழைப்புத் தேவையாக இருந்தது.

இரவு வெகு நேரம் அமர்ந்து வேலைசெய்வதால், அசௌகரியங்களும் பணச்செலவும் கூடுவதாக மானேஜர் பல முறைகள் குறை கூறலானார். ஆனால் தேநீரை அருகில் வைத்துக்கொண்டு நேரம்போவதுதெரியாமலே குனிந்து எழுதிக்கொண்டிருக்கும் ராவுண்ணி மேனன் அதைப் பொருட் படுத்தவே மாட்டார். பொதுவாக இரவு பத்துமணி வரையிலும் அவர் வேலை செய்வார். சில நாட்களில் இரவு இரண்டு மணிவரை யிலுங்கூட வேலை செய்ததுண்டு.

மாத்ருபூமியின் பிள்ளைப்பருவ நோய்கள், பத்திரிகையை மட்டுமன்றி அதில் பணிபுரிந்த எல்லோரையும் பீடித்தன. நாள்தோறும் கிடைக்கும் வருவாய், காகிதம், தபால்தலை வாங்குவதற்கும், அச்சகத் தேவைகளுக்குமே சரியாக இருந்தது. அச் செலவு போக ஏதேனும் எஞ்சினாலே எங்களுடைய அன்றாடச் செலவுக்கு ஏதேனும் கிடைக்கும். பல நாட்களிலும் வெறுங்கையுடன் வீட்டுப் படியேறிச் செல்கையில் குடும்பப் பொறுப்பேற்றவளுக்கு வழி சொல்லவும் தெரியவில்லை. இரண்டு மூன்று நாட்களென்றால் ஒரு மாதிரியாகப் பொறுத்துக் கொள்ளலாம். பல நாட்களுக்கு அது தொடர்ந்தால், பெருந் துணிச்சலும் தைரியமும் கூட நிராசையாக மாறிவிடக்கூடும். அலுவலகத்தில் பணிபுரிகையில் அடிக்கடி வீட்டுச் சமையலறையைப் பற்றிய நினைவு வந்துகொண்டிருக்கும். பேனாவை வைத்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்திருப்பேன். ஒரு நல்ல முயற்சியில் நான் ஈடுபட் டிருக்கிறேனென்றும், தொடக்கத்தில் கடினமாக இருப்பது சகஜம்தான் என்றும் மனதைத் தேற்றிக் கொள்வேன். என்றாலும் ஒவ்வொரு சமயம் துன்பம் நேரிடும்போது, மனம் தத்துவக் கருத்துக்கள் ஒன்றையும் ஏற்றுக்கொள்ளாது. முகத்தில் புன்னகையும் உள்ளத்தில் எரிச்சலுமாக ஓட்டிய நாட்கள் அவை. ஆனால் எங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை அநுபவங்கள் பத்திரிகை வளர்ச்சிக்குத் தடையாக இல்லை. ஒவ்வொரு இதழும் குறித்த நாளில் ஒழுங்காக வெளியாயிற்று. ஒன்றை யொன்று விஞ்சும் மேன்மையுடன் சீர்டெ்றுவதற்கான வழிகள் குறித்தும் யோசனை செய்தோம்.

செய்திகளை வழங்குவதில் மட்டுமன்றி, வாசகருடைய அறிவு மலர்ச்சி பெறவேண்டுமென்ற நோக்கிலும் மாத்ருபூமி தொண்டாற்ற வேண்டு மென்றும் நாங்கள் உறுதி கொண்டோம். அதற்கான கட்டுரைகளை வெளியிடலானோம். மேலும், 'உலகமும்-மக்களும்', 'பலரும்-பலதும்', 'ஆட்சேபங்களும்-அபிப்பிராயங்களும்' போன்ற பகுதிகளை வெளியிட்டுப்

புதுமை கூட்டிஞேம். வாசகர்கள் அதை மிகவும் விரும்பினர்கள். 'சத்தியம், சமத்துவம், ஸ்வாதந்திரம்' என்ற சொற்ருெடர், தலையங்கப் பகுதியின்மீது விளங்கும். அது மாத்ருபூமியின் இலட்சியங்களைப் பிறருக்கு உணர்த்தியது மட்டுமன்றி, பத்திரிகையின் இலட்சியம் யாதென்ற கருத்தையும் அதில் பணி புரிந்தவர்களுக்கு எப்போதும் நினைவுறுத்திக்கொண்டிருந்தது. இலட்சியங்களை நடைமுறையில் கடைப் பிடிக்கும் முயற்சிகளில், மாத்ருபூமி அதிகாரவர்க்கத்தினருடனும் அவர்களுடைய ஆதரவாளருடனும் மோதவேண்டியிருந்தது. மாத்ரு பூமியின் வரலாற்றில் அத்தகைய பல சந்தர்ப்பங்கள் குறுக்கிட் டிருக்கின்றன. அப்போதெல்லாம், பொருள் விரையத்தையோ இடர்களையோ பொருட்டாக்காமல், இலட்சியங்களிலிருந்து நழுவி விடாத உறுதியுடனிருந்திருக்கிறேம். இந்த உண்மைகளை, நெஞ்சு நெகிழ நினைத்துப் பார்க்கிறேன்

'ஒரு கௌரவமும் மரியாதையும் கூடிய மனிதன் வாய்திறந்து மொழிய இயலாத சொற்கள், ஒரு மரியாதைக்குரிய பத்திரிகையிலும் வெளியிட இயலாததே' என்று புகழ் பெற்றதொரு பத்திரிகாசிரியர் மொழிந்திருப்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன். வெறுப்பும் பகைமையும் கலவாது, எத் தரப்பிலும் சாராமல், அச்சமற்றுக் காணும் விமர்சனங்கள், ஒரு பத்திரிகையின் மதிப்பையும் செல்வாக்கையும் மேலும் வளர்க்கும் என்பதை அநுபவ பாடமாய் அறிவதற்கு எங்களுக்கு அதிக நாட்கள் செல்லவில்லை.

மாத்ரு பூமி தொடங்கி ஓராண்டு நிறைவேறுமுன் நடந்ததோர் சம்பவம் இது :

அந்நாளைய கௌன்ஸில் அஃப் ஸ்டேட்டில் கவளப்பார மூப்பில் நாயர் ஓர் உறுப்பினர். அவர் இரண்டாம் முறையாகக் கௌன்ஸில் தேர்தலுக்கு நின்றபோது, மற்ருரு வேட்பாளரான முல்லசேரி கோபால மேனன், கவளப்பார நாயருக்கு வாக்களிக்க வேண்டாம் என்பதற்குரிய காரணங்களைச் சுட்டிக்காட்டி ஓர் அறிக்கையை எங்களுக்கு வெளியிட அனுப்பியிருந்தார். நாங்கள் அதை வெளி யிட்டோம். 'கௌன்ஸில் அஃப் ஸ்டேட்டில் உப்பு வரி பற்றிய விஷயம் விவாதத்துக்குப் பிறகு வாக்கெடுப்புக்கு விட்டபோது, கவளப்பார நாயர் அங்கு இருக்கவில்லை என்றும், அது அவர் நாட்டுமக்களின் விஷயத்தில் இழைத்த தவறென்றும், மக்களுக்கு நன்மையளிக்கும் விஷயமொன்றில் அவர்களுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டிய பொழுதில் கூட்டத்திலில்லாமல் நழுவியதால், அவர் வாக்காளரின் நம்பிக்கைக்குரியவர் அல்லர் என்றும் அறிக்கை தெரிவித்தது.'

மாத்ருபூமியில் வெளியான அந்தக் கட்டுரைக்குக் கவளப்பார மூப்பில் நாயர் இவ்வாறு பதில் எழுதினர் :

''தாங்கள் வெளியிட்ட கடிதத்தில், நான் உப்பு வரி விஷயத்தில் அரசாங்கத்தினருக்கு இசைவாக வாக்களித்ததாக அறிவிக்கும்வகையில் பொய்யாகவும், மக்களுக்குத் தவறான கருத்தை வலியுறுத்தும் வண்ணமும் சில செய்திகள் அடங்கியிருக்கின்றன. சில வாக்காளர் அதைத் தவறாகக் கருதி எனக்கு எதிராக வாக்களிக்க இடமிருப்பதனால், இதை நான் முக்கியமானதாகக் கருதுகிறேன். அதனால் இக் கடிதம் கண்ட ஒரு வாரத்துக்குள் மேற்கூறிய செய்திகளுக்குத் தகுந்த ஆதார மிருப்பதாகத் தெளிவாக விளக்கவேண்டும். இல்லையேல், தாங்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையை 'வாபஸ்' பெற்றுக்கொண்டு என் நற்பெயருக்கு இழைத்த குற்றத்துக்கு மன்னிப்புக் கோர வேண்டும். இல்லையெனில், அந்தக் கடிதத்தை வெளியிட்டதற்காக நான் தங்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வேன். இதற்குரிய பதிலை, என் வக்கீலுக்கு அனுப்பினால் போதும்.''

இதே கடிதத்தை, அந்தக் கட்டுரையை வெளியிட்ட வேறு இரண்டு பத்திரிகைகளுக்கும் அவர் அனுப்பியிருந்தார். அவை இரண்டும் மன்னிப்புக் கோரி அறிக்கை வெளியிட்டன. மாத்ருபூமி அதற்குத் தயாராக இல்லை.

பத்திரிகை மேற்கொண்ட நிலை சரியா, இல்லையா என்பதைப் பற்றி எனக்கு ஒரு ஐயப்பாடும் இல்லை. வழக்குக்கு அஞ்சி, மாத்ருபூமியின் கௌரவத்துக்கும் மனச்சாட்சிக்கும் விரோதமாக வெளியிட்ட செய்தி களைப் பின்னிழுத்துக் கொள்ளவோ, மன்னிப்புக் கோரவோ மாத்ருபூமி தயாராக இல்லை. இந்த விவரத்தை நாயருடைய வக்கீலுக்கு எழுதினேன். அக் கடிதம், 'கவளப்பார நாயரவர்களும், உப்பு வரியும், மாத்ருபூமியும்' என்ற தலைப்பில் மாத்ருபூமியில் வெளியாயிற்று. அது இதுதான்:

''1923ஆம் ஆண்டு அக்டோபர் ஒன்பதாம் தேதி, மாத்ருபூமி இதழில் வெளிவந்ததோர் கடிதம் குறித்து, தங்களுடைய கட்சிக்காரர் லஃப்டினன்ட் கவளப்பார மூப்பில் நாயர் இம் மாதம் இருபத்து நான்காம் தேதி அனுப்பிய கடிதம் கிடைத்தது. உப்பு வரி சம்பந்தமான விவாதங்களுக்குப் பிறகு, வாக்கெடுப்பு நிகழ்ந்த போதெல்லாம் பொதுமக்களுடைய பிரதிநிதி என்ற நிலையில் வாக் களித்ததாக மூப்பில் நாயருடைய பெயர் காணப்படவில்லை. உப்பு வரி காரணமாக வைஸிராயின் சர்ட்டிபிகேட்டின் அதிகாரம் பற்றிய விவாதத்தில், அரசாங்கத்தின் பக்கம் வாக்களித்தவர்களுடைய பெயர் வரிசையில் அவருடைய பெயர் காண்பதிலிருந்து, சாதாரண மக்கள் எவரும் கண்டுகொள்ளக்கூடிய உண்மையையே அக் கடிதம் சுட்டி இருந்தது. பொதுமக்களின் பிரதிநிதியான ஓர் உறுப்பினர்,

இத்தகைய முக்கியமான சந்தர்ப்பங்களில், பொதுமக்கள்பால் தனக்குரிய கடமையை எவ்வாறு நிறைவேற்றியிருக்கிறார் என்ற விவரத்தை, இரண்டாவது முறையாக அவர் தேர்தலுக்கு நிற்கையில் மக்களுக்கு அறிவுறுத்துவது அவசியம் என்ற பத்திரிகை தர்மத்துக்குட்பட்டு அக் கடிதத்தை வெளியிட்டோம். உண்மையல்லாத செய்திகளேதும் அக் கடிதத்தில் இருப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லை. கோபால மேனன் அவர்களுடைய கடிதத்துக்கு, மூப்பில் நாயர் ஏதேனும் பதிலாக எழுத முன்வந்தால், நிச்சயமாக எங்கள் 'வாசகர் கடித'ப் பகுதியில் அதற்கு இடமுண்டு. அதன்றி, நாங்கள் வெளியிட்ட கடிதத்தைப் பின்னேற்றுக் கொள்வதற்கோ, செய்யாத குற்றத்துக்கு மன்னிப்புக் கோருவதற்கோ மாத்ருபூமி உடன்படாது.''

இதற்குப் பிறகு கவளப்பார நாயாவர்களிடமிருந்தோ அவருடைய வக்கீலிடமிருந்தோ ஒரு கடிதமும் வரவில்லை. வழக்குத் தொடுக்கவும் இல்லை. இவற்றைக் கண்ட பிறகு, மற்ற இரண்டு பத்திரிகைக்காரர்களுக்கும், தாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டாம் என்று தோன்றியது! இந்த நிகழ்ச்சி மாத்ருபூமியின் மதிப்பை மேலும் உயர்த்துவதற்குக் காரணமாயிற்று. அதன் நேர்மை நிலையை வாழ்த்தி மதிப்புக்குரியவர் பலரும் எழுதினர்கள். சிலர் நேர்முகமாகவே வந்து பாராட்டினர்கள். ஒருவரை இகழ்வதும் இன்னொருவரைப் புகழ்வதும், ஒரு சமுதாயத்தினரைத் தூற்றுவதும், இன்னொரு சமுதாயத்தினரைப் போற்றுவதும் மாத்ருபூமியின் நெறிக்கு அப்பாற்பட்டதென்ற நம்பிக்கையும் மதிப்பும் மக்களுக்கு நாளடைவில் அசையா உறுதியுடன் கூடிவிட்டன. அதை மாத்ருபூமி இன்றளவும் நிலை நிறுத்திக்கொண்டிருக்கிறது.

பத்திரிகையாளரைத் தொல்லைக்குள்ளாக்கும் பல விஷயங்களில் இரண்டைப் பற்றி இங்குக் கூற விரும்புகிறேன். பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு அதற்காகப் பத்திரிகைகளில் இடம் பிடிக்க அலையும் எழுத்தாளரின் தொல்லை ஒன்று. இன்னொன்று, உண்மையில் நிகழ்ந்த சம்பவங்கள் சிலவற்றில் இரகசியமான தொடர்பு கொண்டவர்கள், அதை மறைப்பதற்காக வெளியிடக் கூடாதென்று விடும் கோரிக்கைகள். இந்த இருதிறத்தாரிலும் யார் வழக்கமாக அணுகுபவர்கள், யார் அதிகம் தொல்லை கொடுப்பவர்கள் என்று கூறுவது கடினம். பத்திரிகையாளரின் பொறுமையை அநேகமாக இருதிறத்தாரும் சோதிப்பவர்களே. ஒன்றிரண்டு அநுபவங்களை இங்குக் காணலாம்.

ஒரு நாள் மதியம், சில ரசீதுகளும் கணக்குப் புத்தகங்களும் கையில் கொண்டு ஒருவர் என்னைக் காண அலுவலகத்துக்கு வந்திருந்தார். ரசீதுகளை மேசைமீது வைத்தார். கணக்குப் புத்தகத்தையும் திறந்து

வைத்தார். விஷயம் இதுதான். ஒரு மந்திரி அவருடைய இடத்துக்கு விஜயம் செய்தார். அவரே செலவு செய்து வரவேற்கப் பெரிய மாலை வாங்கி, பந்தல் அலங்காரங்கள் செய்து தடபுடலாக ஏற்பாடு செய்தார். அங்கிருந்த சில தலைவர்கள் அதை விரும்பியதாலேயே அவர் எல்லா உபசாரங்களையும் செய்தார். மந்திரியின் விஜயம் பத்திரிகைச் செய்தியாக வெளிவந்தது. ஆனால், வரவேற்பு உபசாரச் செய்தியில் அவருடைய பெயர் இல்லை. இதுதான் குற்றம். செலவு செய்தது அவர்தாம் என்பதை விளக்க, அவர் ரசீது, கணக்குப் புத்தகங்கள் இரண்டையும் கொண்டுவந்திருந்தார். வெறுப்பும் நிராசையும்மேலிட்ட அவருடைய முகத்தைக் கண்டு நான் இரங்கினேன். 'என்னைப் பற்றி ஏதேனும் பத்திரிகையில் எழுதவேண்டும். என்னுடைய பெயர் பத்திரிகையில் வரும் என்று எண்ணியே இவ்வளவு செலவுகள் செய்தேன்' என்று அவர் குறுகிக் குழைந்து கூறியபோது, நான் அதைப்பற்றி அந்தப் பிரிவு எழுதுபவரிடம் கேட்பதாகக் கூறிச் சமாதானமாக அனுப்பினேன். பணம் செலவு செய்தவர் அந்த அப்பாவி மனிதர் என்பதை மாத்ருபூமி நிருபர் அறிந்திருக்கவில்லை. அறிந்திருந்தாலும் அதை எழுத முடியாது. தனக்குப் பணச் செலவும், பெயர் இன்னொருவருக்கும் என்றால் அந்த அதிர்ஷ்டமற்ற மனிதருக்கு நிராசை தோன்றியதில் வியப்பில்லை.

இன்னொன்று, இதுதான். ஒரு சந்தர்ப்பத்தில் வட இந்தியாவில் ஒரு கோயிலில் விநோபாஜி ஹரிஜனங்களுடன் புக முயற்சி செய்தபோது, சிலர் அவருடைய உடலுக்குத் தீங்கிழைத்தனர் என்ற விவரம் பத்திரிகைகளில் வெளிவந்தது வாசகருக்கு நினைவிருக்கலாம். அந்தச் சம்பவம் நிகழ்ந்த சில நாட்களுக்குப் பின் எனக்கு ஒரு கடிதம் வந்தது. விநோபாஜியின் உடலுக்கு ஊறு நேர்ந்ததாகச் செய்தியறிந்த நேரத்திலிருந்து தாம் உணவருந்தவில்லை என்றும், அந்தச் சம்பவம் தனக்குச் சொல்லொணா வேதனையளித்திருப்பதாகவும், இந்த விவரத்தைப் பத்திரிகையில் வெளியிடவேண்டும் என்றும் எழுதியிருந்தார் ஒருவர். அத்துடன் வெளியிடுவதற்காகத் தம்முடைய நிழற்படம் ஒன்றையும் அவர் இணைத்திருந்தார். பலநாட்கள் எதிர்நோக்கியிருந்து, தம்முடைய கடிதமும் படமும் பத்திரிகையில் வெளிவராதது கண்டு அவருடைய ஆசாபங்கம் விளைவித்த உணர்வுகளை என்னால் ஊகிக்க முடியும். பத்திரிகையையும் ஆசிரியரையும் அவர் நன்றுகச் சபித்திருப்பார்!

பெயருக்கும் புகழுக்கும் எல்லா மனிதரும் ஏறக்குறைய ஒரே மாதிரியாகத்தான் ஆசை கொண்டிருக்கின்றன ரென்றாலும், சிலர் அடக்க இயலாத வகையில் அதை வெளியிடுகிறார்கள். எனக்குப் புகழ் பிடிக்காது என்று சொல்பவர்களும் கூட அதைப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும் என்று விரும்புவார்கள். மனிதனைச் செயற்களத்துக்குக்

கவர்ந்து இழுக்கும் ஒரு பெரும் தூண்டுதல் புகழ். பத்திரிகையாளர் அதை அறிந்திருப்பது நன்று. பிறருடைய இந்த ஆவலை நியாயமாகப் பூர்த்தி செய்வதற்குரிய விவேகம் அவர்களுக்கு இருக்கவேண்டும். ஆனால் அதே சமயத்தில் மனிதர்களுடைய செருக்கையும், தான் என்ற அகம்பாவத்தையும் பத்திரிகையாளர் வளர்க்க வேண்டியதில்லை.

தங்களைப் பொறுத்த சில விஷயங்களைப் பத்திரிகையில் பார்க்க ஆசைப்படுபவர்களே, வேறு சில செயல்களை இரகசியமாக வைத்திருப் பதை மிகுதியாக விரும்புகின்றனர். தாம் கைக்கொள்ளும் பத்திரிகை தர்மத்துக்கும் பிறருக்கு உதவும் கருத்துக்கும் இடையே போராடக் கூடிய பல சந்தர்ப்பங்கள் பத்திரிகையாளருக்கு நேருவதுண்டு. அத்தகைய பல சந்தர்ப்பங்களில் ஒன்று நினைவுக்கு வருகிறது.

முக்கியமானதோர் செய்தியை எனக்கு அறிவிக்கும்பொருட்டு என் நண்பர் வேறொருவரை என்னிடம் அனுப்பினர். நண்பர் மரியாதைக் குரிய, பெரிய பதவியிலிருந்த மனிதர். அவருடைய ஒரு புதல்வனை ஒரு வழக்கு சம்பந்தமாகப் போலீசார் கைதுசெய்து மாஜிஸ்ட்ரேட்டின் முன் நிறுத்தி, பின்னர் ஜாமீனில் விடுதலை செய்திருந்தார்கள். இச் செய்தி பத்திரிகையில் வெளிவந்துவிட்டால், அவரும் அவருடைய குடும்பத்தினரும் மிகுந்த வேதனைக்குள்ளாவார்கள். எனவே அதைச் சில நாட்கள் வெளியிடவேண்டாம் என்ற அவருடைய கோரிக்கையைக் கொண்டு அந்தத் தூதுவர் என்னிடம் வந்திருந்தார். ஒரு நல்ல பதவியி லிருப்பவருடைய மூத்த மகன். அவன்மீது ஒரு இழிசெயலுக்குரிய குற்றம் விழுந்து கைதான செய்தியை வெளியிட்டால் மிகுந்த துயரை அநுபவிப்பார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். என்றாலும் அச் செய்தியைத் தள்ளிவிட இயலாத நிலையில் இருந்தேன் நான். அந்த விவரத்தை அவருக்கு அறிவிக்கவும் தயங்கவில்லை.

ஒரு செய்தி, பத்திரிகையில் இடம் பெறுவதற்குரியதா இல்லையா என்பதை முடிவு செய்யுமுன், இரண்டு விஷயங்களை யோசனை செய்து பார்க்கவேண்டும். முதலாவதாக, அது நம்பத்தகுந்ததுதானா என்ற விஷயம். அடுத்து, ஒரு செய்தி என்ற நிலைக்குரிய முக்கியத்துவம் அதற்கு இருக்கிறதா என்றும் பார்க்கவேண்டும். இந்த விவரத்தில் நம்பத் தகுந்ததா என்ற கேள்விக்கே இடம் இருந்திருக்கவில்லை. என்னுடைய நண்பரது பதவி குறித்துச் சிந்தனை செய்கையில் செய்தி முக்கியமானதென்ற நிலையிலும் ஐயப்பாடில்லை. அதனால் அச்செய்தியை நான் வாசகர்களிடமிருந்து மறைத்துவிடமுடியாது. அவர் என் னுடைய தீர்மானத்தை எப்படி எடுத்துக்கொண்டாரோ தெரியாது. ஆனால் பத்திரிகையாளருக்குத் தவிர்க்க முடியாது நேரும் அநுபவங்கள் இவை என்றுதான் நான் ஆறுதல் கொள்ள இயலும்.

எத்துணைக் கண்ணும் கருத்துமாக இருந்தாலும், சில சமயங்களில் சில வெளியிடத் தரமில்லாத செய்திகளும், கருத்துக்களும் பத்திரிகைப் பகுதிகளில் இடம் பெற்றுவிடுகின்றன. அவற்றைப் பிரசுரம் செய்தே யாகவேண்டும் என்ற பொறுப்பிலிருந்து பத்திரிகையாசிரியர் பின் வாங்க இயலாதல்லவா? மிகுந்த வேதனைக்குள்ளாக்கியதோர் அநுபவம் இது :

நான் மாத்ருபூமி ஆசிரியராக இருந்த காலத்தில், கேரளப் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் என்ற பொறுப்பையும் தொடர்ந்து ஏற்றுக்கொண்டிருந்தேன். ஆனல் மலபார் கலகத்தின் பயனக விளைந்த வேண்டாத தீமைகள், காங்கிரஸ் பணிகளை மீண்டும் தொடங்குவ தற்குத் தடையாக இருந்தன. விருப்பம்போல் அலைந்து திரிவதற்கும், கூட்டங்கள் ஏற்பாடு செய்வதற்கும் வசதிகள் இல்லை. அதுமட்டு மன்று. கலகக் காலத்தில் சாதாரண மக்களைப் பற்றியிருந்த அச்சம் இன்னும் முற்றிலும் அகன்று விடவில்லை. இந்நிலையில், இரண்டாவது கேரளக் காங்கிரஸ் மாநாட்டைக் கூட்ட நாங்கள் ஏற்பாடு செய்தோம். 1923ஆம் ஆண்டு மே ஆறுந்தேதி பாலக்காட்டில் மாநாடு கூடியது. அப்போது மாத்ருபூமி வெளியாகத் தொடங்கி சில மாதங்களேயாகி இருந்தன. அக்காலத்தில் கோழிக்கோட்டைவிட்டு வெளியூர் செல்வது எனக்குக் கடினமாக இருந்தது என்றாலும் காங்கிரஸ் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை முன்னிட்டு நான் அடிக்கடி பாலக்காடு செல்ல வேண்டி யிருந்தது.

அந்த மாநாட்டுக்கு ஸ்ரீமதி சரோஜினி நாயுடு தலைமை தாங்கினர். ஆலி சோதரர்களுடைய தாய் பிளம்மாவும், இராஜகோபாலாசாரி, தேவதாஸ் காந்தி ஆகியோரும் மாநாட்டுக்கு வந்திருந்தனர். அவர்க ளனைவரும் ஒலவக்கோட்டுக்கருகிலுள்ள எனது அத்தாழச்சிற இல்லத்தில்தான் தங்கினர்கள். மாநாட்டுப் பந்தலையும் அருகிலுள்ள மைதானத்தில்தான் அமைத்திருந்தோம். கூட்டம் தொடங்குவதற்கு முதல்நாள், தொலைவில் கண்ட மலைத் தொடர்களை நோக்கியவண்ணம் சரோஜினி நாயுடு, 'எத்தனை மனோகரமான காட்சி! இதைக் கண்டவர் மனதில் கவிதை பிறக்காமலிருக்குமோ?' என்று வியந்து கூறியவராகப் பந்தலுக்கு நடந்தார். அவருடைய அன்றைய சொற்பொழிவு ஒரு கவிதையாகவே இருந்தது. கேரளத்தின் இயற்கை எழிலை வருணித்துக் கொண்டுதான் அவர் தம் உரையைத் தொடங்கினர். அன்றைய நிலையில் முக்கியமாக இருந்த சமுதாயப் பிரச்னையைக் குறிப்பாக விளக்கிய பிறகு, இந்தியாவில் பொதுவாக நிலவிய நிலைமையைக் குறித்து தமக்கே உரிய சொல்வன்மையுடன் அவர் அரும் சொற்பொழி வாற்றினர். அந்த ஆங்கிலப் பேச்சை, மலையாளத்தில் மொழி பெயர்த்

தவர் புத்தெழுத்து ராமன் மேனன். அவருடைய மொழிபெயர்ப் பாற்றல் கொண்டு, ஸ்ரீமதி நாயுடுவின் உரையில் பொங்கிய இனிமை முழுவதையும் கேட்பவர்கள் உணர்ந்து ரசிக்க முடிந்தது.

இந்திய சுதந்திர இயக்கத்தை நடத்தியவர்களின் கூட்டத்தில் ஸ்ரீமதி நாயுடுவுக்கு ஓர் உயர்ந்த இடம் உண்டு. எழுச்சியூட்டும் அவருடைய வாக்கு வன்மை மட்டும் அதற்குக் காரணமல்ல. அசைக்க முடியாத நாட்டுப்பற்றும், இனிமையாகப் பழகும் இயல்பும், பிரச்னைகளை நடு நிலையில் நின்று நோக்கும் பாங்கும், சரோஜினி நாயுடுவை இந்திய மக்கள் போற்றிப் புகழக்கூடியதோர் தலைவியாக்கியிருந்தன. எத்தகைய நெருக்கடி நிலையிலும் சரோஜினி சோர்வு கொண்டதில்லை. மகாத்மா காந்தி சபர்மதி சிறைச்சாலையில் இருந்தபோது, நான் சரோஜினி நாயுடுவுடன் அவரைக் காணச் சென்றேன் சிறையின் பெரிய வாயிற் கதவில் அமைந்திருந்த திட்டி வாயிலைத்தான் காவலர் திறந்து விட்டனர். வழக்கமாக அநுமதிபெற்றவர்கள் உள்ளே நுழையும் வாசல் அதுதான். ''இதில பெண்கள் எப்படி உள்ளே நுழைய முடியும்? கதவு முழுவதையும் திறவுங்கள்?'' என்று ஸ்ரீமதி நாயுடு கட்டளை யிட்டபோது, சிறையின் விதிகளை அவன் அப்போதைக்கு மறந்து கதவுகளை உடனே திறந்தான். நாங்கள் உள்ளே சென்றோம்.

வணக்கத்துக்குரிய மூதாட்டி பீளம்மாவின் வருகை, அம்மாநாட்டின் சிறப்புக்கு இன்னோர் காரணமாயிற்று. நடக்கவும் இயலாத தள்ளாமை இருந்தும், நெடுந்தொலைவு பிரயாணம் செய்து கூட்டங்களில் பங்கு கொண்டு சுதந்திர இயக்கத்துக்கு வலுவூட்டிய அவருடைய தொண்டு விலை மதிப்பிடற்கரியதாகும்.

தேசிய மாநாடு முடிவடைந்ததும், அங்கே ஓர் இலக்கிய மாநாடும் நடந்தது. அதற்கு சர்தார் கே. எம். பணிக்கர் தலைமை தாங்கினர்.

இறுதி நிகழ்ச்சியாக மாநாட்டுப் பந்தலில் பல சாதிக்காரரும் கலந்து கொள்ளும் ஓர் சமபந்தி உணவுக்கு ஏற்பாடு செய்தோம். நாயரும், வேடுவனும், அந்தணரும், அன்றுடக் கூலிக்காரனும் அதில் பங்கு கொண்டனர். இந்தக் கலப்பு உணவு பின்னர் சிலருக்கு மனத்தாங்கலைத் தோற்றுவித்தது. உயர்ந்த சாதியினராகிய சில பழமைவாதிகளைத் திருப்திபடுத்த பிராயச்சித்தமும் செய்யவேண்டியிருந்தது. அந்த நிகழ்ச்சி இன்னொரு கலகத்துக்கு வித்தாயமைந்துவிடுமோ என்றும்கூட அஞ்சியிருந்தோம். எவ்வாறுயினும் பாலக்காட்டு மாநாடு, தீண்டாமை ஒழிப்பு முயற்சியில் ஓர் புத்துணர்வைத் தோற்றுவிக்க வழி அமைத்தது.

20

வைக்கம் சத்யாக்கிரஹம்

கேரளத்தில் காங்கிரஸ் இயக்கத்துக்கு இரண்டாவது முறையாக ஒரு புத்துணர்வூட்ட ஆலோசித்துக்கொண்டிருந்தபோது ஒருநாள் 'தேசாபிமானி' ஆசிரியர் ஸ்ரீ டி. கே. மாதவன் என்னைக் காண்பதற்கு கோழிக்கோடு வந்தார். அவரது அரிய சமுதாயத் தொண்டையும், ஒருங்கிணைக்கும் திறமையும் அறிந்திராதவர் மிகச் சிலரே. நெடுங் காலம் தன்னலமற்ற தொண்டாற்றி, சமுதாயத்தில் ஓர் உயரிய இடம் பெற்றிருந்தார் அவர். 'பத்ராதிபர்' என்றே அவரைப் பலரும் குறிப்பிட்டு அழைப்பார்கள். எழுத்திலும் பேச்சிலும் ஓர் தனியான அழகிய நடையைக் கையாளும் வல்லமை பெற்றவர். அவருடைய உள்ளன்பும் நகைச்சுவை ததும்பும் பேச்சும், அவருடைய எதிரிகளையும் கவர்ந்து மகிழ்ச்சியிலாழ்த்தும். இளைப்பும் இருமலும் அடிக்கடி தொல்லை கொடுத்த போதிலும் மாதவனுடைய உழைப்புத் திறனில் ஒரு மாறுதலும் இருக்காது. உற்சாகம் ததும்பும் இயல்பினரான அவர் பிறரையும் உற்சாகம் கொள்ளச் செய்பவர். மாதவனைப்போன்று உளம் ஒன்றி நண்பர்களுடன் பழகி அவர்களுக்கு உதவக்கூடியவர்கள் மிகச் சிலரே. எதிர்த்தரப்பினரின் வாதங்களை மனதில் நன்முகப் பதிய வைத்துக்கொண்டு, அவரால் தார்மிக உணர்வுடன் விமரிசனம் செய்ய முடியும். அவருடைய முழுக் கவனமும் நலிந்த சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கான பணிகளிலேயே ஊன்றி இருந்ததால் தேசிய அரங்கில் அவர் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. தீண்டாமை ஒழிப்பைக் காங்கிரஸின் திட்டங்களில் ஓர் முக்கிய அம்சமாகக் கொண்ட பிறகு, காங்கிரஸ் பணிகளில் அவர் முந்தைய நாட்களைவிட அதிகமான ஆர்வம் காட்டலானார். தாழ்வுற்ற சாதியினர் அநுபவிக்கும் சிறுமைகளை அகற்றிய பிறகே நாட்டு விடுதலைக்கான முயற்சிகளைச் செய்யவேண்டும் என்று அவர் விவாதிக்கவில்லை. ஆனால், இரண்டு அரங்குகளிலும் இணைந்தாற்போன்று போராட்டம் நடத்தவேண்டும் என்பது அவருடைய கருத்து. ஸ்ரீநாராயண குரு சுவாமிகளை அவர்தம் ஆன்மீக குருவாக வரித்துக்கொண்டு, சுவாமிகளுடைய இலட்சியங் களையும் உபதேசங்களையும் செயல்முறைக்குக் கொண்டுவர வேண்டு மென்று இடைவிடாது வற்புறுத்தினார்.

> '' தொடத் தகாதவர், தீண்டத் தகாதவர்,
> பார்வையில் பட்டாலும் குற்றமுள்ளோர்—
> கூடியிருந்துடன் உண்ணத் தகாதவர் ''

என்று மாகவி ஆசான் விவரித்த சிறுமைகளை இன்றைய தலைமுறை மக்களால் புரிந்துகொள்ள முடியாது. அந்நாள் அந்தத் தீய வழக்கங்களை முற்றிலும் அகற்றுவதற்கு முனைந்து புறப்பட்ட பத்ராதிபர் மாதவன் ஒரு சமுதாயப் போர் வீரராகத் திகழ்ந்தார்.

தீண்டாமை ஒழிப்பு விஷயத்தில் காங்கிரஸ் முனைந்து யோசனைகள் செய்யத் தொடங்கிய காலம் அது. அந்நாள் அதற்கான நடைமுறைகளை மேற்கொள்வது குறித்துத்தான் பேசிக்கொண்டிருந்தோம். இலட்சியத்திலும், இயல்பிலும், கொள்கை ஒருமைப்பாட்டிலும் ஒத்து, என்னைக் கவர்ந்ததொரு நண்பர் என்று மாதவனைக் கண்ட உடனே நான் புரிந்துகொண்டேன். அதன் பின்னர், நாங்கள் பல போராட்டங்களிலும் ஒன்றுகக் கலந்துகொண்டோம். பல கூட்டங்களிலும் எங்களை இணைந்து காணலாம். கூடிக்கலந்து ஆலோசனைகள் செய்வோம். அன்று தொடங்கிய பழக்கம், மிக விரைவில் எங்களிடையே ஆழ்ந்த அன்பாக வேரூன்றி வளர்ந்தது.

சுமார் ஒருமணி நேரம் நாங்கள் காங்கிரஸ் அலுவலகத்திலேயே அமர்ந்து பேசினேம். பிறகு மாதவன் என்னிடம் விடை பெற்றுச் சென்றார். பின்னர், நாங்கள் 1923ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் காகினடா காங்கிரஸ் மாநாட்டிற்குச் செல்லுகையில் ஒருவரை ஒருவர் கண்டுகொண்டோம்.

மாதவனும், ஸர்தார் கே. எம். பணிக்கரும், நானும் சேர்ந்துதான் சென்னையில் இருந்து காகினடாவுக்குச் சென்றோம். அந்நாள் பணிக்கர் ஸ்வராஜ்யா ஆசிரியராக இருந்தார். பணிக்கருடைய சுவாரசியமான பேச்சும், மாதவனுடைய நகைச்சுவை வெடிகளும் எங்களுக்குப் பயணக் களைப்பே அறியாதவாறு மகிழ்வூட்டின. காகினடாவில், என்னுடன் இணைந்து கேரளத்திலிருந்து வந்தவருக்கான பாசறையில் மாதவன் தங்கினர். கடுங்குளிராக இருந்த அக்காலத்தில் விடியற்காலையிலேயே எழுந்து 'இந்தியாவில் தீண்டாதவருக்காக, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினரிடம் கோரும் வேண்டுகோள்' என்ற உரையை எழுதி முடித்தார். அவ்வாண்டின் காங்கிரஸ் தலைவர் மௌலானா முகமதலி. அவ்வேண்டுகோளின் பிரதிகளை அச்சிட்டு, தலைவருக்கும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினருக்கும், பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கும் அவர் வழங்கினர். அத்துடன் தலைவருக்கு அதில் அடங்கிய விவரங்களைத் தெளிவாக எடுத்துரைத்தார். அவருடைய முயற்சிகளின் பலனாகவே தீண்டாமை ஒழிப்புப் பணியைத் தீவிரமாக்கி அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆணையைப் பிரதேச காங்கிரஸ் கமிட்டிகளுக்கு நல்குவதற்கு மாநாட்டில் முனைந்தனர். தலைவர் மௌலானா முகமதலி, மாதவன் கூறியவற்றை எல்லாம் கருத்துடன்

கேட்டுக்கொண்டிருந்ததனால், தீண்டாமை ஒழிப்பைப் பற்றிய அவ்வாண்டின் தீர்மானத்தைக் காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றுவது கடினமாக இல்லை. மௌலானா முகமதலியும், மௌலானா ஷௌகத் அலியும் அந்நாளைய காங்கிரஸ் இயக்கத்தின் பெருந் தூண்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் காந்தியடிகளின் உற்ற நண்பர்கள். கிலாஃபத் இயக்கமே அவர்களைக் காங்கிரசுக்குக் கவர்ந்து இழுத்தது.

காகினாடா காங்கிரஸ் நடந்த பின்னர், மாதவனுக்குக் காங்கிரஸில் அதிகமான நம்பிக்கை பிறந்தது. அதில் சேர்ந்தார். காகினாடாவில் இருந்து திரும்பியதும் காங்கிரஸின் தீர்மானங்களைச் செயல்முறைக்குக் கொண்டுவர நாங்கள் உடனே முனைந்தோம்.

1924ஆம் ஆண்டு ஜனவரி இருபத்து நான்காம் நாள் எரணாகுளத்தில் கூடிய பிரதேச காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், தீண்டாமை ஒழிப்பை ஒரு முக்கியப் பிரச்னையாகக் கருதி அதற்கு வேண்டிய பணியாற்று வதற்கென்று ஒரு தனிக் குழு அமைத்தோம். காங்கிரஸின் செயல் திட்டங்களை மக்களுக்கு எடுத்துரைத்து அறிவுறுத்துவதற்குக் கேரளத் தில் பல பகுதிகளிலும் சுற்றுப் பயணம் செய்வதற்கென்று இன்னொரு கமிட்டியையும் நிறுவினோம். இந்த இரண்டாவது கமிட்டியில், ஏ. கே. பிள்ளையும், ஹஸன் கோயமுல்லாவும், காரூர் நீலகண்ட நம்பூதிரிபாடும், நானும் பொறுப்பேற்றுக்கொண்டோம். சுற்றுப் பயணத்துக்கான திட்டத்தை ஏ. கே. பிள்ளை தயாரித்தார். அவரும் நானும் இணைந்தே எல்லா இடங்களுக்கும் சென்றோம். திருவிதாங்கூரின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடி வரையிலுள்ள எல்லா நகரங் களிலும் கிராமங்களிலும் சுற்றுப் பயணம் செய்து, எண்ணற்ற பொதுக் கூட்டங்களில் பேசினோம். அன்றைய நினைவுகளை எழுச்சிகொளச் செய்பவையாகும். அன்றுடம் வெவ்வேறு இடங்களில் மூன்று பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்தார்கள். சில நாட்களில் மேலும் அதிக மாகவும் இருக்கும். எல்லா இடங்களிலும் உற்சாகமான வரவேற்பைக் கண்டு நாங்கள் மகிழ்வெய்தினோம். சாதி – சமய வேற்றுமையின்றி மக்கள் பொதுக்கூட்டங்களுக்குத் திரண்டு வந்தனர். இருபத்து நான்கு நாட்கள் நீடித்த அந்தச் சுற்றுப் பயணத்தில், ரசமான சில அநுபவங் களும் நேர்ந்தன. தேசீய இயக்கத்தில் மக்கள் கொண்டிருந்த ஆர்வத்தை அவற்றின் வாயிலாக, நேர்முகமாக அறிந்தோம்.

ஒருநாள் இரவு பொதுக் கூட்டம் முடிந்து எங்களுக்குத் தங்க ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த இடத்துக்கு வந்தோம். சிறிது நேரம் சென்ற பிறகு, எங்களை வரவேற்றவர்களில் ஒருவர், எனக்கு ஒரு தம்ளர் பாலும் பழமும் கொண்டுவந்தளித்தார். அவற்றை அருந்திய பின்னர் நான் அங்கு வந்திருந்த சில நண்பர்களுடன் உரையாடிக்கொண்

டிருந்தேன். பிறகு நீராடி, இரவுணவு கொள்வதற்காகக் காத்திருந்தேன். பத்து மணியாகிவிட்டது. இரவு உணவுக்கான வழியையே காணோம். எனக்கோ நல்ல பசி! எப்படியேனும் இரவுச் சாப்பாட்டைப் பற்றிக் கேட்டுவிடுவதென்று தீர்மானித்துவிட்டேன். 'சாப்பாட்டிற்கு அதிக நேரம் ஆகுமோ?' என்று நான் அவரிடம் வினவியபோது, அவர் திகைப்புற்று விழித்தார். அவர் திகைத்ததற்கான காரணத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

'ராத்திரி பாலும் பழமும் மட்டுமே உட்கொள்ளுவீர்கள் என்று நாங்கள் நினைத்தோம்' என்று அவருக்காக இன்னொருவர் விடை பகர்ந்தார்.

'பாலும் பழமும் அருந்துவேன். ஆனால் அது இரவுச்சாப்பாட்டுக்குப் பின்பு' என்று நான் விண்டபோது அவர்கள் சிரித்தார்கள். பிறகு விரைந்துசென்று உணவு தயாரித்துக் கொண்டுவந்தனர்.

ஒத்துழையாமை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், மற்ற சாதாரண மக்களைப்போன்று உணவு கொள்ள மாட்டார்கள் என்று அவர்கள் கருதியிருந்தனர்! அந்நாளைய ஒத்துழையாமை இயக்கக்காரர்கள், உணவு, உடை, பழக்கங்கள் போன்றவற்றில் சில தனிக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தனர். சாதாரண முறையில் உடை உடுத்து, உணவுகொண்டு மற்றவர்களுடன் பேசிப் பழகுவது ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்த தியாகிகளுக்குரியன அல்ல என்றும் சிலர் நம்பியிருந்தனர். அந்த எண்ணத்தின் விளைவுதான் எனக்கு நேர்ந்த அநுபவம்.

சுற்றுப்பயணத் திட்டத்தின்படி, 1924ஆம் ஆண்டு பிப்ரவரி இருபத்தெட்டாம் நாள் நாங்கள் வைக்கத்தை அடைந்தோம். அப்போதுதான் வைக்கம் கோவிலுக்கருகிலுள்ள பொதுச்சாலைகளில்கூடத் தீண்டாத சாதியினர் நடந்து செல்லும் உரிமை பெற்றிருக்கவில்லை என்பதை அறிந்தோம். அன்று மாலையில் அங்கு ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் நான் அந்த அநீதியைக் கண்டித்து உரையாற்றினேன். 'அந்நிய நாட்டார் நம்மிடம் நியாயமாக நடந்துகொள்ளவில்லை என்பது குறித்துக் குற்றம் சாட்டும் நாம், நம்முடைய சொந்த நாட்டு மக்களிடம் நியாயமாக நடந்துகொள்ளாதது ஏன்? தீண்டத்தகாதார் என்று நாம் காட்டும் இந்த அநீதியை விலக்குவதற்கான பொறுப்பு நமக்கு இல்லையா?' என்று கேட்டபோது கையொலி எழும்பியது.

'கை தட்டுவது கடினமில்லை, செயல்புரியத் தொடங்கும்போதுதான் தகராறுகள் தோன்றுகின்றன. தீண்டாத சாதியினருடன் சேர்ந்து இந்தக் கோயில் முன்பு சாலையில் ஓர் ஊர்வலம் ஏற்பாடு

செய்தால், இங்குக் கூடி இருப்பவர்களில் எத்தனை பேர் அதில் பங்கு கொள்வீர்கள்?' என்று நான் கேட்டபோது, 'எல்லாரும்! எல்லாரும்!' என்று அவர்கள் உரக்கக் கூவினர்கள்.

'அப்படியானால் நாம் நாளை ஊர்வலம் போகலாம்' என்று நான் மொழிந்ததைத் தொடர்ந்து பின்னும் ஐந்து நிமிடம் கையொலி நீடித்தது. அன்று மக்கள் மிகுந்த உற்சாகம் கொண்டவர்களாய் கூட்டத்திலிருந்து கலைந்தனர்.

கூட்டம் முடிந்தபின் நான் தங்கியிருந்த இடத்துக்குத் திரும்பிவந்ததும் அங்கே மாஜிஸ்ட்ரேட், தாசில்தார், போலீஸ் அதிகாரி, ஊர்ப் பெரியோர் எல்லோரும் வந்தனர். நான் கூட்டத்தில் அறிவித்தபடி மறுநாள் தீண்டாதவர்களுடன் கோயில் முன் வீதியில் ஊர்வலம் சென்றால், பெரிய கலவரமும் ரத்தக் களரியும் தோன்றிவிடக்கூடும் என்றும், அப்போதைக்கு அதை நிறுத்தி வைத்துவிட்டு, அதற்கு இசைவானதொரு சூழலைத் தோற்றுவிக்க முதலில் பிரசாரம் செய்வது நலம் என்றும் பலர் அப்போது கருத்துத் தெரிவித்தார்கள். நானும் என்னுடன் இப் பணியில் தோழமை கொண்டவர்களுடன் கூடிப் பின்னும் ஆலோசனை செய்ததில், அது உகந்ததாகவே தோன்றியது. எனவே, மறுநாள் ஊர்வலம் செல்வதில்லை என்று முடிவு செய்தோம். ஒரு மாதம் சென்றபின் ஊர்வலம் நடத்துவதாகத் தள்ளிப் போட்டு விட்டு, கோழிக்கோடு திரும்பினேம்.

வைக்கம் கோயில் சாலையில் எல்லாச் சாதியினரும் நடப்பதற்கு உரிமை கோரும் பிரசாரத்தை மிகவும் கவனமாகச் செயலாற்றினேம். பல இடங்களுக்கு அதற்காகப் பேச்சாளரை அனுப்பினேம். எளிய சொற்களில் உரைகளை அச்சிட்டு வெளியிட்டோம். தலைவர்களை நேரில் சந்தித்து எடுத்துரைத்தோம். பத்திரிகைகளுடைய ஆதரவோ இன்றியமையாததாக இருந்தது. வெகுநாட்கள் பிரசாரம் செய்த பின்னரும் தேவஸ்தானத்துப் பொறுப்பாளர், எத்தகையதோர் விதிவிலக்களிக்கவும் தயாராக இல்லை. சுதந்திரமாக எல்லா வகுப்பினரும் நடப்பதற்குரிய பிரச்னைக்கு சத்யாக்ரஹமொன்றுதான் வழி என்று தீர்ந்து கண்டோம். அதனால் சத்யாக்ரஹம் நடத்துவதாக நாங்கள் நிச்சயம் செய்தோம்.

அதைத் தொடங்குமுன், மகாத்மா காந்திக்கு வைக்கத்தின் நிலை குறித்தும், எங்களைச் சத்யாக்ரஹம் செய்யத் தூண்டும் சூழலைக் குறித்தும் விவரித்து ஒரு கடிதம் எழுதி, அதற்கு அவருடைய ஆசிகளையும் கோரியிருந்தோம். அதற்கு அவர் வரைந்த கடிதம் :—

அந்தேரி
19—3—'24

அன்புள்ள கேசவ மேனன்,

தங்கள் கடிதம் கிடைத்தது. தாங்கள் குறிப்பிடும் தங்களுடைய பிரதேச மக்களின் நிலை இந்தியாவின் பிற பகுதிகளைக் காட்டிலும் வருந்துதற்குரிய தென்பதை நான் அறிவேன். நீங்கள் கூறுவது போன்று அவர்கள் தீண்டாதவர் மட்டுமல்ல; சில தெருக்களில் நடக்கவும் கூடாது என்ற நிலை எவ்வளவு பரிதாபத்துக்குரியது! நமக்கு இன்னமும் சுயராஜ்யம் கிடைக்கவில்லை என்றுல் அதில் எனக்கு ஆச்சரியம் தோன்றவில்லை. நம் நாட்டின் தாழ்ந்த வர்க்கத்தினர் பொது வழிகளில் நடக்கக்கூடிய உரிமைகளைப் பெற்றே தீரவேண்டும். தடை விதிக்கப்பட்ட சாலையில் கேரளக் காங்கிரஸ் கமிட்டியினர், தாழ்த்தப்பட்ட மக்களுடன் சேர்ந்து ஓர் ஊர்வலம் வரவேண்டுமென்று கருதுகிறேன். இது ஒரு வகை சத்யாக்ரஹம். இதில் தனிப்பட்ட கவனம் செலுத்துவதற்குரியதாகக் கூற வேண்டியதொன்றுமில்லை. நம்முடைய மக்களே உங்களை எதிர்த்தாலும்கூட நீங்கள் எதிர்க்கவேண்டாம். நீங்கள் அமைதியுடன் அடியேற்கவேண்டி வந்தாலும் ஏற்றுப் பொறுத்துக்கொள்ள வேண்டும். இந்த சத்யாக்கிரஹத்தில் பங்கு பெறும் அனைவருக்கும் இக்கருத்தை வலியுறுத்தி அவர்களும் அதில் பூரண நம்பிக்கை கொண்டு நிறைவேற்றச் சித்தமாகும் வண்ணம் முயலவேண்டும். ஒரு தடவைக்குச் சிலரே சென்றுல் போதும். ஆனால் எல்லோரும் அமைதியுடனும் பணிவுடனும் நடப்பவர்களாக இருக்கவேண்டும். இன்னொரு முக்கியமான விஷயம், கருத்தில் கொள்ள வேண்டும். இந்த விதிகளைப் பங்கு கொள்ளும் எவரேனும் ஒப்புக்கொள்ளவில்லையெனின், யாத்திரையை நிறுத்திவிடத் தயங்கலாகாது. இத்தகைய பண்பாட்டுக்கு மாறுக இருப்பவர்களையும் நாம் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகளில் நாம் இன்னும் ஈடுபடவில்லை. அதனால் கவனத்துடன் பணிபுரிய வேண்டியது மிகுந்த அவசியம். இச்செயல் அவ்வளவு எளிதானதல்ல. நான் இங்கே நோய்ப்படுக்கையில் இருந்தவாறே உங்களுக்கு அறிவுரை நல்குவது கடினமல்ல. அதனால், நீங்கள் தனிப்பட்ட கருத்தூன்ற வேண்டிய விஷயத்தை நினைவூட்டி, உங்களுடைய முயற்சிக்கு முழு வெற்றி கிடைக்கட்டுமென ஆசி மொழிந்து இப்போது விடைபெறுவது நலமென்று கருதுகிறேன்.

எம். கே. காந்தி.

1924ஆம் ஆண்டு மார்ச் முப்பதாம் தேதி நாங்கள் சத்யாக்கிரஹம் தொடங்குவதாகத் தீர்மானம் செய்து, அதற்கு நான்கு நாட்கள்

முன்னரே வைக்கம் கிளம்பி வந்தேன். சத்யாக்கிரஹத்துக்கு ஆதர வாளராகப் பல நண்பர்களும், தொண்டர்களும் அங்கு வந்திருந்தனர். அவர்களுடைய கூட்டாலோசனைகளும், சொற்பொழிவுகளும், உற்சாக மான ஏற்பாடுகளும் ஓர் விழாச் சூழலைத் தோற்றுவித்தது. மந்தத்து பத்மநாப பிள்ளை, சங்கனச்சேரி பரமேசுவரன் பிள்ளை, எம். ஆர். நாயர், ஸி. வி. குஞ்ஞுராமன், ஆலம்மூட்டில் சான்னார் முதலிய தலைவர்க ளெல்லாம் வந்து சேர்ந்தனர். நிதி திரட்டுவதற்கும், பண்டங்கள் சேகரிப்பதற்கும், பிரசாரம் செய்வதற்கும், பார்வையாளரை வரவேற்பதற்கும், தொண்டர்களைத் தேர்வு செய்வதற்கும், தனித் தனி பிரிவுகள் அமைத்தோம். தலைவர்களைக் கைது செய்தாலும் சத்யாக்கிரஹ திட்டம் முடங்காமல் நடப்பதற்கு முன் யோசனையுடன் ஏற்பாடுகள் செய்தோம்.

இருபத்தொன்பதாம் தேதி இரவு படுக்கச் சென்றபோது வெகு நேரமாகிவிட்டது. நள்ளிரவில் என்னைச் சிலர் தட்டி எழுப்பினர்கள். அவர்கள், மிக முக்கியமான சில செய்திகளை ஆலோசனை செய்ய வந்த தாகக் கூறினர்கள். சமுதாயத்தைச் சார்ந்த சில பிரமுகர்கள் அவர்கள். உறுதி செய்திருந்தவாறு மறுநாட் காலையில் சத்யாக்கிரஹம் தொடங்கினால் பல குழப்பங்கள் விளையக்கூடுமென்றும், சத்யாக் கிரஹத்தின் பயனாகத் தீண்டாமை இயக்கம் பின்னுக்கித் திரும்பி விடலாம் என்றும், அதனால் மறுநாள் அதைத் தொடங்குவது விவேக மான செயல் அல்ல என்றும், வைக்கம் சாலையைப் பொறுத்தமட்டில் அதிகாரிகள் சாதகமாகவே ஆலோசனை செய்துகொண்டிருப்பதாகவும் தெரிவித்தனர். இந்தப் பேச்சு என்னைத் திகைக்கச் செய்தது.

அது நாள் வரை என்னுடன் இணைந்து, எனக்குச் சிறிதும் குறையா உற்சாகத்துடன் சத்யாக்கிரஹ நோக்கத்தில் ஈடுபட்டிருந்த சில நண்பர்களும் அவர்களிடையே இருந்தனர். திடீரென்று கண்ட இந்த மாறுதலுக்குக் காரணம் யாதாயிருக்கும் என்று புரியவில்லை. அவர்கள் மொழிந்ததனைத்தையும் கேட்டேன். மறுநாள் சத்யாக்கிரஹத்தைத் தொடங்காமலிருந்தால், அதைக் கைவிட்டுவிட்டதாகத் தோன்றக் கூடுமே? அப்படிக் கைவிடுவதற்குரிய காரணங்கள் எதுவும் இல்லையே? எனவே, உற்சாகத்தைக் கைவிடாமல் அவர்கள் சத்யாக்கிரஹத்துக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று நான் அவர்களிடம் விழைந்து கோரினேன்.

'நாம் அனைவரும் கூடி நன்கு யோசனை செய்து தீரத்தெளிந்து தீர்மானித்த செயலில் அல்லவா இறங்கப்போகிறோம்? இப்போது இதை மாற்றுவது சரியா? வெற்றியானாலும் தோல்வியானாலும் முடிவு செய்தபடி நாளை சத்யாக்கிரஹத்தைத் தொடங்குவோம்'

என்று அவர்களிடம் மொழிந்து விட்டு நான் மீண்டும் உறங்கச் சென்றேன்.

முப்பதாந் தேதி பொழுது புலர்ந்தது. சத்யாக்கிரஹப் பாசறையில் உள்ளவர் அனைவரும் நீராடி, நெற்றிக் குறியிட்டு, கோயில் சாலைக்குப் புறப்படத் தயாராயினோம். முதல் நாள் சத்யாக்கிரஹத்துக்கு மூன்று பேர் புறப்பட்டனர். குஞ்ஞப்பி என்ற பெயர்கொண்டதொரு புலையர்; பாஹுலேயன் என்றதொரு ஈழவர்; மூன்றுமவர் கோவிந்தப் பணிக்கர் என்ற நாயர். காலை ஏழு மணிக்கு எங்கள் பாசறையிலிருந்து கிளம்பி இரண்டிரண்டு பேராக முன் சென்றோம். பாசறையிலிருந்து கோயில் முன் சாலைக்கு சுமார் ஒரு மைல் தொலைவு இருந்தது. பரபரப்பின்றி அமைதியாக நடந்து சென்றோம். கோயிலிலிருந்து நூறு கஜம் தொலைவில் சாலையில் ஊன்றியிருந்ததோர் பலகையில் 'தீண்டாத சாதியினர் இதற்கப்பால் பிரவேசிக்கக்கூடாது' என்று எழுதி யிருந்தது. அந்த அறிக்கைப் பலகைக்கு ஐம்பது கஜம் எட்டிய இடத்துக்குச் சென்றதும் எல்லோரும் அங்கேயே நின்றோம். சத்யாக் கிரஹத்துக்குத் தயாராக மூவர் மட்டும் முன்னே நடந்தனர். மக்கள் கவலையும் துடிப்புமாய்க் காத்திருந்தனர். போலீசார் அங்குமிங்கும் நடந்தவாறு கூட்டத்தை ஒதுக்கினர்கள். மூன்று சத்யாக்கிரஹிகளும் அறிக்கைப் பலகையின் அருகில் சென்றனர். அங்கே போலீசார், ஏழெட்டுப்பேர் அணியாக நின்றனர். சத்யாக்கிரஹிகளும் அங்கேயே நின்றனர்.

'நீங்கள் ஒவ்வொருவரும் என்ன சாதிக்காரர்கள்?' என்று ஒரு போலீஸ் அதிகாரி கேட்டான்.

'நான் புலையன்'

'நான் ஈழவன்'

'நான் நாயர்!' என்று அவர்கள் விடை பகர்ந்தனர்.

'நாயர் கடந்து செல்லலாம். மற்ற இருவரும் இதற்கப்பால் நடக்க லாகாது,' என்று அவன் கட்டளையிட்டான்.

'மற்றவர்கள் இருவரையும் உடன் அழைத்துச் செல்லவே நான் வந்திருக்கிறேன். அவர்களுடன் சேர்ந்துதான் நான் செல்வேன்' என்று கோவிந்தப் பணிக்கர் மறுமொழி கொடுத்தார். போலீசார் வழி மறித் தனர். சத்யாக்கிரஹிகள் மூவரும் போலீசாருக்கு நேராக நின்றனர். சிறிது நேரம் சென்றது. 'ஒன்று எங்களை இந்த வழி செல்ல விடுங்கள். இல்லையேல், கைது செய்யுங்கள். இரண்டில் ஒன்று இல்லாமல் நாங்கள் திரும்ப மாட்டோம்' என்று மொழிந்த சத்யாக்கிரஹிகள் அங்கேயே நின்றனர்.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டும், போலீஸ் மேலதிகாரிகளுமாக ஆலோசனை செய்தார்கள். சத்யாக்கிரஹிகளைக் கைது செய்ய ஆணையிட்டனர்.

அவர்களைக் கைது செய்துகொண்டு சென்ற பிறகு நாங்கள் அனைவரும் பாசறைக்குத் திரும்பினேம். முதல் நாள் சத்யாக்கிரஹம் நடந்து விட்டது.

மறுநாள் மாஜிஸ்ட்ரேட் அவர்களை விசாரணை செய்து, தலைக்கு ஆறு மாதம் வெறுங்காவல் தண்டனை விதித்தார். அன்றும் வேறு மூவர் சத்யாக்கிரஹம் செய்தனர். அவர்களையும் சிறைக்குக் கொண்டு சென்றார்கள்.

இந்த இரண்டு நாட்களிலும் வேண்டாத நிகழ்ச்சிகள் ஏதும் நடக்க வில்லை. சத்யாக்கிரஹம் அமைதியாக நடைபெற்றது குறித்து மகிழ்ந்தோம். ஆனால், சில மேல் வகுப்பு இந்துக்களை இம்முறை திகைக்கச் செய்தது. உண்மையல்லாத வதந்திகள் பரவின. 'கோயிலில் தீண்டாதோர் பிரவேசிக்கப் போகின்றனர்; கலகத்துக்கு ஏற்பாடு செய்கின்றனர்' என்றெல்லாம் பலவாறுக வதந்திகள் கிளம்பின. இவற்றுடன் எனக்குச் சில கடிதங்களும் வந்தன. சில நண்பர்கள் சத்யாக்கிரஹத்தை இரண்டு நாட்களுக்கு நிறுத்தி வைத்து, உயர் வகுப்பாரைக் கண்டு, அவர்களுடைய ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளை மீண்டும் செய்யலாம் என்றார்கள். நானும் இசைந்து இரண்டு நாட்கள் சத்யாக்கிரஹத்தை நிறுத்தி வைத்தேன். இந்நிலையில் மகாத்மா காந்தி மற்றொரு கடிதம் எழுதினார். அது இதுதான்.

அந்தேரி—ஏப்ரல்-1

அன்புள்ள கேசவ மேனன்,

உங்களுடைய சத்யாக்கிரஹத்தைக் குறித்த சில செய்திகளை என்னிடம் கூறுவதற்காக மிஸ்டர் சிவராமய்யரும் மிஸ்டர் வாஞ்சீசுவர ஐயரும் இங்கு வந்திருக்கின்றனர். விவாதத்துக்குரிய பாதைகள் கோயிலைச் சேர்ந்தவை என்றும், அவை கோயிலுக்குச் செல்லும் வழிகள் என்றும், கோயிலுக்குப் பொதுவான அறங்காவலர் களுடைய ஆதினத்துக்குட்பட்டதென்றும், அவர்களுக்கு அந்தச் சாலைகளின் மக்கள் போக்குவரத்தை நிர்ணயிக்கக்கூடிய முழு அதிகாரமும் இருக்கிறதென்றும் இவர்கள் இருவரும் என்னிடம் எடுத்துரைத்தனர். அச் சாலைகள், பிராமணர் மட்டுமே புழங்கு வதற்குரிமையுள்ள தனிச் சொத்தா; அன்றி, பிராமணரல்லாதாரும் அதில் நடக்கலாமா என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள் அந்த வழிகளில் பிராமணரல்லாதார் நடக்கலாம் என்று தெரிவித்தனர். ஒரு பிராமணரல்லாதாருக்கு அங்கு நடக்க உரிமையிருக்கையில், அதே போன்று தாழ்ந்த சாதிக்காரரும் அங்குச் செல்வதற்கு உரிமை யளிக்கப்படவேண்டும் என்று நான் அவர்களிடம் கூறினேன். அவர்கள் அதற்கு இசையவில்லை. எனினும், கோயிலையும் அதன் வழிகளையும் பற்றிய பொறுப்பும் உரிமையுமுள்ள அறங்காவலரிடமும்

பிற அந்தணர்களிடமும் எடுத்துக் கூறி உணர்த்துவதற்குச் சில நாட்களாகும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இரண்டு மாதத்தில் அங்கு மாளவியாஜி வருவாரென்று அறிகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக நீங்களும், கோயில் உரிமையாளரும், மாளவியாஜியை நடுவராக வைத்துக்கொண்டு பேசி முடிவு காண வேண்டியும், அவருடைய தீர்ப்பை ஒரு குறித்த காலத்துக்குள் வெளியிடவும், பிராமணர் அதற்கு இசைந்தால், 'இந்த நடவடிக்கைக்கு நடுநிலையாளர் இடைப்பட்டுப் பேசி முடிவு காண்பதற்குத் தீர்மானம் செய்திருக்கிறபடியால், சத்யாக்கிரஹம் இப்போதைக்கு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிற'தென்று அறிவித்து நிறுத்திவைக்கும்படி நான் யோசனை கூறுகிறேன்.

மேற்கூறிய இரு சகோதரர்களும், என்னிடம் அறிவித்த முக்கியமான செய்திகளை உண்மை என்று நம்பியே நான் உங்களுக்கு இத்தகைய அறிவுரை கூறுகிறேன். இந்தச் சீர்திருத்தம் சம்பந்தப்பட்ட முயற்சிகளை நிறைவேற்றுவதில் அவர்களும் நம்மைப் போன்றே ஆர்வத்துடனிருப்பதாகக் கூறுகின்றனர். அது உண்மையானால் நாம் அவர்களையும் நம்முடைய கொளகைகளுக்கு ஆதரவளிப்பவர்கள் என்ற வகையில் நம்மோடு இணைத்துக் கொள்ள நட்புறவும் இணக்கமும் காட்டவேண்டும்.

என்றும் உங்களுடைய உண்மையுள்ள
எம். கே. காந்தி

இக் கடிதத்தை அவர் ஏப்ரல் ஒன்றுந் தேதியே அனுப்பியிருந்தும், நான்காம் தேதி வரையிலும் அது என் கையில் கிடைக்கவில்லை. இக் கடித விவரம், நான் 'ஹிந்து' இதழைப் பார்த்துத்தான் அறிந்து கொண்டேன். விஷயம் முக்கியமானதாக இருந்ததால், கடிதம் என் கையில் கிடைப்பதற்கு முன்பே நான் மகாத்மாஜிக்கு அடியிற்கண்டபடி ஓர் கடிதம் எழுதி அனுப்பினேன்.

வைக்கம்
6—4—'24

அன்புள்ள மகாத்மாஜி,

சத்யாக்கிரஹத்தை இப்போதைக்கு நிறுத்தி வைப்பதைக் குறித்து மகாத்மாஜி எனக்கு அனுப்பிய கடித விவரம் நான்காம் தேதி 'ஹிந்து'வில் நான் படித்தறிந்துகொண்டேன். அக் கடிதம் இது வரையிலும் என் கையில் கிடைக்கவில்லை. அது வைக்கத்துக்கு வந்து கொண்டிருக்கும். இங்கு நிலவும் உண்மை நிலையை மகாத்மாஜிக்கு விவரமாகக் கூறுவதற்கு அக் கடிதம் கிடைக்கும் வரையிலும் காத்திருக்க வேண்டும் என்பதில்லை.

மகாத்மாஜியின் கடிதத்தில் குறிப்பிட்ட மிஸ்டர் சிவராமகிருஷ்ண ஐயரையும், மிஸ்டர் வாஞ்சீசுவர ஐயரையும் நான் நேர்முகமாக அறிந்திருக்கவில்லை. அவர்கள் அங்கே தெரிவித்திருக்கும் செய்திகள் சரியானவையென்று தோன்றவில்லை. வைக்கம் கோயிலோ, பிரச்னைக்குரிய வீதிகளோ, இப்போது, ஒரு தனிப்பட்ட மனித ருடைய சொத்தோ, அன்றி தர்மகர்த்தாக்களுடைய சொத்தோ அல்ல. கோயில் திருவிதாங்கூர் மன்னரின் ஆளுகைக்குட்பட்டது. அதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்துபவர் அரசரின் ஆட்சிக் குட்பட்ட அதிகாரிகள். அரசாங்கம் பொதுமக்கள் செலுத்தும் வரிப் பணத்திலிருந்துதான் கோயிலுக்குச் செல்லும் வீதிகளை, சாலைகளைப் பராமரிக்கிறது. இந்த வழிகளில் அந்தணரும், மற்றும் அதே வர்க்க இந்துக்களும் மட்டுமே நடமாடும் உரிமை பெற்றிருக்கவில்லை. கிறிஸ்தவரும் முகமதியரும் விருப்பப்படி நடமாட முடியும். தீயர், புலையர் போன்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமே அந்த வழிகளில் நடப்பதற்கு உரிமை இல்லை. சட்டப்படி, பிராமணருக்கும் பிராமணரல்லாத இந்துக்களுக்கும் உரிமை இருப்பதுபோன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இந்த வழிகளில் நடந்துசெல்ல உரிமை உண்டு. இவ்வகையில், சத்யாக்கிரஹத்தை நிறுத்தி வைக்காமல் நடத்துவதற்கு மகாத்மாஜி எங்களுக்கு உபதேசம் நல்குவார் என்று நான் உறுதியாக இருக்கிறேன்.

மாளவியாஜியின் நடுநிலைப் பேச்சு வார்த்தை குறித்து நிச்சயம் கூற வேண்டுமென்று மகாத்மாஜி விரும்புவதற்கு நான் இதுதான் கூறுவேன். கோயில் அந்தண - அறங்காவலருடைய தனிச் சொத் தென்றும், அவர்கள் மாளவியாஜியின் நடுநிலைத் தீர்ப்பை ஒருகால் ஒப்புவார்கள் என்றும் மகாத்மாஜி கருதியிருக்கலாம். ஆனால், நான் மேலே தெரிவித்தபடி, கோயிலின் உரிமையாளரான அறங்காவலர் திருவிதாங்கூர் அரசாங்கமே. அந்த அரசு, மகாத்மாஜியின் கருத்தை ஆதரித்து நடக்கச் சித்தமாக இருந்தால், நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற நிலையில் மகாத்மாஜியின் அறிவுரைகளை மிகுந்த பணிவுடனும் மரியாதையுடனும் ஏற்றுக்கொள்ளச் சித்த மாக இருக்கிறோம். ஆனால் அதுவரையிலும் இந்தப் போராட்டத்தை நடத்துவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை.

நாங்கள் சில நாட்களுக்கு சத்யாக்கிரஹத்தை நிறுத்தியிருப்பதன் காரணம் குறித்து மகாத்மாஜிக்குத் தந்தி கொடுத்திருந்தேன் அல்லவா? இப்போது இங்கு நிலைமை சற்று சீர்திருந்தி வருவதால் நாளை ஏப்ரல் ஏழாந்தேதி திங்கட்கிழமை மீண்டும் சத்யாக்ரஹம் தொடங்குகிறோம்.

விரைவிலேயே என்னையும், என்னுடன் செயலாற்றும் வேறு சிலரையும் கைது செய்வார்களென்று பொதுவாக நம்புகிறேன். மிஸ்டர் ஜார்ஜ் ஜோசஃப் இப்போது இங்கு இருக்கிறார். அவருடைய தலைமையில் இப் போராட்டம் இன்னும் அதிகமான சக்தியுடனும், உற்சாகத்துடனும் நடக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். அவர் இங்குள்ள நிலை குறித்து அவ்வப்போது மகாத்மாஜிக்கு அறிவிப்பார். மகாத்மாஜியின் ஆசிகளை வேண்டுகிறோம்.

என்றும் உண்மையுள்ள
கே. பி. கேசவ மேனன்.

வருணசிரம இந்துக்களுடைய கூட்டத்திற்குச் சென்று, தாழ்த்தப் பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அவர்களுக்குக் கோயில் சாலையில் நடக்க உரிமை வழங்க வேண்டு மென்று அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்ளும் பொறுப்பு அவர்களைச் சார்ந்துதான் இருக்கிறதென்றும், இந்தப் பொன்னை வாய்ப்பை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அவர்களிடம் எடுத்துரைத்து வேண்டினேன். அதற்கு நல்ல பலன் விளைந்ததென்று சொல்லும் துணிவில்லை எனக்கு. பாசறைக்குத் திரும்பிய பிறகு மற்ற வர்களுடன் யோசனை செய்து அடுத்த நாள் சத்யாக்கிரஹம் தொடங்கு வதாகத் தீர்மானித்தோம்.

டி. கே. மாதவனும் நானும் அன்று சத்யாக்கிரஹம் செய்யத் தயாரானோம். சத்யாக்கிரஹம் தொடங்கப்போகிறதென்ற விவரம் அறிந்து மக்கள் வைக்கம் கோயில் சாலையின் இருபுறங்களிலும் திரண்டு கூடினர்கள். பாசறையிலிருந்து புறப்பட்டு நாங்கள் கோயில் முன் வீதிக்கு வந்தோம். மற்றவர்களை விட்டு நானும் மாதவனும் கோயில் சந்நிதித் தெருவில் நடந்தோம். சிறிது முன்னேறியதும், அதிகாரிகள் எங்களைக் கைதுசெய்து போலீஸ் சாவடிக்குக் கொண்டு சென்றனர். பகலுணவுக்குப் பிறகு நீதிமன்றத்தில் விசாரணை தொடங்கியது.

மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ ஆண்டிப் பிள்ளையின் முன் விசாரணை நடந்தது. தீண்டாத சாதியினரைக் கோயில் சந்நிதித் தெருவில் நடந்து செல்ல நாங்கள் தூண்டினோம் என்றும், அவர்கள் அவ்வாறு சென்றால் அது உயர் வகுப்பு இந்துக்களிடையே கோபம் மூட்டி அவர்களில் சிலரைக் கலகம் செய்யத் தூண்டும் என்பதுதான் சாட்சியங்களின் சாரம். நானும் மாதவனும் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவில்லை. நீதிமன்றத்தின் முன் நான் இதைத்தான் உணர்த்தினேன்.

'ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் ஆணைப்படி, தடை விதிக்கப்பட்ட கோயில் சாலையில் தாழ்ந்த சாதியார் என்று குறிக்கப்பெற்ற ஈழவர்,

புலையர் முதலியோரை நடப்பதற்கு நான் தூண்டினேன் என்பது உண்மைதான். அந்த ஆணை நிலவும் வரையிலும், அவர்களை மேலும் உற்சாகம் கொண்டு அதை மீறுவதற்குத் தூண்டுவேன். உயர் வகுப்பு இந்துக்களும், முகமதியரும், கிறிஸ்தவர்களும் அந்த வீதிகளில் நடக்க உரிமையிருக்கிறதென்றால், தீண்டாதவர் என்ற பிரிவினருக்கும் அந்த உரிமையைப் பெற நாங்கள் முயற்சி செய்கிறோம் எங்களுடைய நோக்கத்தைக் குறித்துச் சிலர் தவறான கருத்துடையவர்களாக இருக்கின்றனர். தீண்டாதாரைக் கோயிலுக்குள் அழைத்துச் செல்லும் எண்ணம் எங்களுக்கு இல்லை என்றும், பொதுவான சாலைகளில் நடப்பதற்குரிய உரிமைகளையே கோருகிறோம் என்பதை இங்கு விவரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நெடுங்காலமாகக் கேட்டும், மனுச் செய்தும், அனுமதி வழங்காததால், இந்த உரிமையை சத்யாக்கிரஹத்தின் வாயிலாகத்தான் தேட முடியும் என்று நாங்கள் நம்பினோம். இந்த நம்பிக்கையுடன் நாங்கள் அனுபவிக்கப்போகும் தண்டனை, இந்தத் தீய வழக்கத்தைக் கேரளத்திலிருந்து விலக்க வழி செய்யுமானால் எங்களுக்கு அதைக்காட்டிலும் மகிழ்ச்சியளிக்கக்கூடியது வேறொன்றுமில்லை.'

விசாரணை முடிந்த பிறகு கோர்ட்டார் எங்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் ஐநூறு ஜாமீன் செலுத்த அபராதம் விதித்தார். அதற்கு நாங்கள் தயாராக இல்லாததால் ஆறுமாத வெறுங்காவல் தண்டனை பெற்றோம்.

தண்டனைக்கு மேலான அப்பீல் கொடுப்பதற்கும் நாங்கள் விரும்பவில்லை என்பதையும் அப்போதே மாஜிஸ்ட்ரேட்டுக்கு அறிவித்தோம். அப்பீல் கொடுப்பதானால் அது முடியும் வரையிலும் கோட்டயம் சப்ஜெயிலில் வைப்பதுதான் வழக்கம். அது இல்லாததாகையால், அன்றே எங்களைத் திருவனந்தபுரம் சிறைக்குக் கொண்டுசெல்ல நிச்சயித்தனர். மூன்று மணிக்கு நானும் மாதவனும் ஒரு சப்இன்ஸ்பெக்டரும் காரில் திருவனந்தபுரத்துக்குக் கிளம்பினோம். கோட்டயத்தில் சிறிது நேரம் தங்கிய பிறகு இரவு பத்துமணிக்கு நாங்கள் திருவனந்தபுரத்தை அடைந்தோம்.

21

பூஜப்புரயில் சுகவாசம்

திருவனந்தபுரத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் பூஜப்புர என்ற இடத்தில் ஒரு குன்றின்மீது மத்திய சிறைச்சாலை இருக்கிறது. அக்

குன்றில் இருந்து நோக்கினால், நகரின் எழிலார்ந்த காட்சிகளைக் காணலாம். அணியணியாகத் தோற்றும் சிறுகுன்றுகளும், கண்ணுக் கெட்டும் தொலைவுக்கப்பால் நீண்டு செல்லும் தென்னந் தோப்புக்களும், தொலைவில் காணும் அழகிய கட்டடடங்களும், அருகில் இழைந்து ஒசியும் சிற்றுறும், சூழலின் அமைதியும், விவரிக்க இயலாத ஆனந்தத்தை அளிக்கும் காட்சிகள்.

திருவனந்தபுரத்தை அடைந்தபோது நாங்கள் முதலில் சிறை சூபரின்டெண்டண்ட் மிஸ்டர் போத்தனின் பங்களாவுக்குச் சென்றோம். அங்குத் தேநீரருந்திய பிறகு சிறைக்குச் சென்றோம். சூபரின்டெண்டண் டும் எங்களுடன் வந்தார். சிறைக் கதவின் வலப் பகுதிக் கட்டடத்தில் எங்களைக் கொண்டு விட்டார்கள். ஜெயிலர் நீலகண்ட பிள்ளையின் வீட்டிலிருந்துதான் அன்று எங்களுக்கு உணவு வந்தது. அதில் பருப்பிலிருந்து பாயசம் வரையிலான எல்லா வகைகளும் இருந்தன. ஆறு மாதங்களுக்கு நாங்கள் அங்கே அனுபவிக்க இருந்ததை அறிவிக்கும் முதற் சூசகமாக அந்த உணவு அமைந்திருந்தது. சுற்றிலும் தாழ்வரை யுள்ள விசாலமானதொரு அறையில் மாதவனுக்கும் எனக்கும் படுத்துறங்கக் கட்டில்கள் போட்டிருந்தார்கள். குளியலறையும், எழுதுவதற்கும் படிப்பதற்கும் வசதியுள்ள இடமும், நடப்பதற்கு முற்றமும் இருந்தன. அந்தந்த நேரத்துக்கு ஏற்ற விருப்பமான உணவு கிடைத்தது. எங்களுக்கு வேண்டியதை அறிந்து உடனுக்குடன் நிறை வேற்றுவதற்கு சூபரின்டெண்டண்ட் போத்தனும், ஜெயிலர் நீலகண்ட பிள்ளையும், டெபுடி ஜெயிலர் ராமகிருஷ்ணய்யரும் கருத்தாக இருந்தனர்.

செய்திப் பத்திரிகைகளும், புத்தகங்களும் எங்களுக்குக் கொண்டு வந்து தந்தார்கள். உறவினருக்கும் நண்பர்களுக்கும் கடிதங்கள் எழுதவும், அவர்களிடமிருந்து வரும் பதில் கடிதங்களைப் பெறுவதற்கும் அனுமதியளித்திருந்தனர். அன்றுடம் குறித்த நேரத்தில் எங்களைக் காண வருபவர்களுடன் பேசுவதற்கும் தடை ஏதுமில்லை. சிறையில் இருந்து வெளியே செல்ல முடியாது என்ற ஒன்றைத் தவிர, மற்ற வாழ்க்கை வசதிகளைப் பொறுத்து எங்களுக்குத் தேவைப்பட்ட தெல்லாம் எளிதாகவே கிடைத்தன. என்றாலும் நான்கு புறங்களிலும் உயர்ந்திருந்த மதில் சுவர், எங்களுடைய சுதந்திரமற்ற நிலையை நினைவூட்டிக்கொண்டிருந்தது.

மாதவனும் நானும் மத்திய சிறைச்சாலைக்கு வந்து இரண்டு நாட்கள் சென்ற பின்னர், முதன் முதலாகத் தண்டனை பெற்ற குஞ்ஞுப்பியையும், பாஹூலேயனையும், கோவிந்தப் பணிக்கரையும் அங்கே வரக்கண்டோம். வைக்கத்திலிருந்து திருவனந்தபுரத்துக்கு அவர்களை நடத்தியே

கூட்டிக்கொண்டு வந்திருக்கின்றனர். அவர்கள் மூவரையும் சாதாரணக் கைதிகளை வைத்திருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்று இட்டனர். இன்னும் இரண்டு நாட்கள் சென்றதும், ஏ. கே. பிள்ளை, கே. கேளப்பன், வேலாயுத மேனன், டி. ஆர். கிருஷ்ணசுவாமி ஐயர் ஆகியோர் எங்களுடைய இடத்துக்கு நேர் எதிராக உள்ள ஸிவில் வார்டுக்கு வந்தனர். ஒரு வாரத்துக்குப் பிறகு ஜார்ஜ் ஜோசஃபும் அங்கே வந்தார். அவரை எங்களுடன் தங்கச் செய்தனர். இந்துக்களல்லாதார் சத்யாக்கிரஹத்தில் பங்கு பற்றுவது உசிதமா என்பது குறித்து இச்சமயத்தில் பத்திரிகைகளில் விவாதங்கள் அடிபட்டன.

ஜார்ஜ் ஜோசஃப் புகழார்ந்ததோர் நாட்டுத் தலைவர். மேடைப் பேச்சிலும் பத்திரிகைத் துறையிலும் புகழ் பெற்றிருந்த ஜோசஃப், ஒத்துழையாமை இயக்கத்தின் ஆரம்ப நாட்களிலேயே வந்து சேர்ந்தவர். அதற்கு முன்பும் பொது வாழ்க்கையில் மனமொன்றி ஈடுபட்டிருந்தார். அவர் பல முறை சிறைவாசம் அநுபவித்திருக்கிறார். மகாத்மா காந்தி சிறையிலிருக்கையில், அவருடைய 'யங் இந்தியா' வார இதழின் ஆசிரியப் பொறுப்பைச் சிறிது காலம் ஜார்ஜ் ஜோசஃப் ஏற்றிருந்தார்.

சத்யாக்கிரஹக் கைதிகளை மூன்று வகைப் பிரிவினராகத் தங்கச் செய்து இருந்தனர். நாங்கள் அனைவரும் ஒரே இலட்சியத்தை நோக்கித் தான் முயற்சி செய்தோம். ஒரே செயலுக்காகவே சிறைவாசம் அனுபவிக்கிறோம். அவ்வாறிருக்கையில் எங்களில் சிலருக்குத் தனிப் பட்ட வசதிகள் அளிப்பதும், ஒன்றுகச் செயல்புரிந்த மற்ற சிலருக்கு சாதாரணக் கைதிகளுக்கு அளிக்கும் சலுகைகளைக்கூட மறுப்பதையும் கண்டபோது, அது ஓர் நேர்மையற்ற ஏற்பாடாகத் தோன்றியது. இதைக் குறை கூறி, சூபரின்டெண்டண்ட் போத்தனுக்கு நாங்கள் ஓர் கடிதம் அனுப்பினோம்.

அந்தக் கடிதம் போத்தனைத் திகைக்கச் செய்தது. விவரம் மேலிடத்துக்கு அறிவிக்கப் பெற்றது. சில நாட்கள் சென்ற பிறகு, மற்ற சத்யாக்கிரஹிகளுக்கும் அரசாங்கம் எங்களுக்கு அளித்த வசதிகளை அளிக்கத் தீர்மானித்தது. இவ்வாறு எங்களுடைய சிறைவாச நாட்களை நாங்கள் அனைவரும் ஒன்றுக இருந்தே கழித்தோம்.

அதிகாலையில் நீராடிக் காப்பியருந்திய பின், இரண்டுமணி நேரம் எழுதுவேன். எச். ஜி. வெல்ஸின் உலக வரலாற்றை ஒரு மாதிரியாகக் கொண்டு மலையாளத்தில் அவ்வாறு ஒரு வரலாற்று நூல் எழுத நிச்சயித்துத் தொடங்கினேன். ஆனால் கொஞ்சம் எழுதினேனே ஒழிய முழுதுமாக முடிக்கவில்லை. எனக்குத் தேவையான நூல்கள் திருவனந்தபுரம் நூல் நிலையத்திலிருந்து கிடைத்தன. 'தலைகளிலிருந்து' என்ற

நூலைச் சிறையிலிருந்த நாட்களில்தான் எழுதினேன். உண்டு முடித்த பின் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டு, ஏதேனும் நூல்களைப் படிப்பேன். மாலை நேரங்களில் வழக்கமாகப் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தினேம். கிருஷ்ணசுவாமி ஐயர் அஷ்டபதி பாடுவார். மற்றும் சில பக்திப் பாடல்களும் அவர் இசைப்பார். இரவு ஒன்பது மணிக்குப் படுக்கை. ஒரு நாளின் நடவடிக்கைகள் இவை.

சிறையில் ஒரு கஷ்டமும் இல்லை என்றாலும், என்னுடைய குடும்ப நிலையை எண்ணிப் பல சமயங்களிலும் வருந்தினேன். அவர்கள் அன்றாடச் செலவுக்கின்றிக் கஷ்டப்படுவார்கள் என்பது மட்டுமல்ல, கவலை—என்னுடைய இலட்சியத்திலும் கொள்கையிலும் சிறிதுகூட இணக்கம் காட்டாத உறவினருடைய கூரிய சொற்கள் வேறு இந்நிலையில் அவர்களைத் தன்புறுத்துமே என்ற வேதனையும் மிகவும் வாட்டியது. எனக்கு ஆறுதல் நல்கும் வகையில் 'அப்படியொன்றுமில்லை' என்ற மாதிரியில் லக்ஷ்மி எனக்குக் கடிதம் எழுதினாள் என்றாலும் என்னுடைய அன்பு மனைவியின் அபோதைய நிலைமையையும் அநுபவத்தையும் என்னால் நன்கு உணர முடியும். என்னைக் கைது செய்து சில நாட்களானதும் லக்ஷ்மி எனக்கு எழுதினாள். (16-4-24)

"'அரஸ்ட்' செய்ததைப்பற்றி மிகுந்த ஆற்றுமை கொண்டு நான் ஆபத்து வந்துவிட்டதாகக் கருதவில்லை. முதலில் தங்களுக்கு நான் எழுதிய கடிதத்தைத் திருவனந்தபுரம் ஜெயிலுக்கு எழுதவேண்டி வருமென்று கனவிலும் கருதியிருக்கவில்லை என்று நான் முன் குறித்த காரணங்களினால் எழுதவில்லை. பிரிட்டிஷ் சர்க்கார் மூன்று ஆண்டுகளாகப் பல முறைகளிலும் கைது செய்ய முயன்றும் முடியவில்லை. அந்த நிலையில் திருவிதாங்கூர் அரசாங்கம், இவ்வளவு விரைவில் இதைச் சாதித்துவிட்டதை எண்ணி ஆச்சரியம் கொள்கிறேன். அந்த முதல் கடிதத்தில் அதைத்தான் எழுதினேன்."

'மோதிரத்தைச் சின்னன் கொண்டுவந்து கொடுத்தான். (என்னைக் கைது செய்வதற்கு முதல் நாள் என் கையிலிருந்த மோதிரத்தை என் சோதரன் சின்னனிடம் நான் லக்ஷ்மிக்குக் கொடுத்து அனுப்பியிருந்தேன்) கடிதத்தைப் படித்து வெகுநேரம் சென்றபின்னரே அதைக் கொடுத்தான். மோதிரத்தைப் பார்த்தவுடன் எனக்கேற்பட்ட மனத்துன்பத்தை அநுபவித்தால்தான் உணரமுடியும். எழுதுவதற்கு இயலாது. மோதிரத்தைப் பெட்டியில் வைக்க மனமில்லை. என் விரலில் அணிந்திருக்கிறேன். அதைப் பார்த்துக் கொண்டே இருப்பதுதான் என்னுடைய இப்போதைய மன ஆறுதல்.'

'ஆபீசிலிருந்து வரும் நேரத்திலும், உணவு கொள்ள அமரும் போதும், தேநீர் போடும்போதும் எனக்கு விள்ள இயலாத துயரம்

தோன்றுகிறது. குளிப்பதற்கும் வேறு அன்றாடத் தேவைக்கான வசதிகளுக்கும் குறைவில்லை என்று எழுதியிருப்பது மிகுந்த ஆறுதலளிப்பதாக இருக்கிறது. எனக்கு அங்கு வந்து தங்களைக் காண்பதற்கு மிகுந்த ஆசையாக இருக்கிறது. நான் தனியாக வருவதற்குக் குழந்தைகள் விடுவார்களா? நானும் அவர்களும் வரலாமென்றால் பணச் செலவு அதிகமாகுமே? அதற்குப் போதுமான பணம் நம்மிடத்திலிருக்கிறதா?'

'நான் தனியாக வந்து தங்களைப் பார்த்தால் தங்களை விட்டுத் தனியே திரும்பும் தைரியம் எனக்கு இருக்கிறதா?'

இக் கடிதத்தின் மற்றொரு பகுதியையும் இங்கே தருகிறேன். சர்தார் கே. எம். பணிக்கர் வைக்கம் சத்யாக்கிரஹத்தில் மிகுந்த ஈடுபாடு புலர்த்தியிருந்தார். பணிக்கரிடமிருந்து வந்த கடிதத்தைப் பற்றித்தான் கடிதத்தின் பின்பகுதி தெரிவித்தது.

'கே. எம். பணிக்கருடைய கடிதம் இன்று கிடைத்தது. தங்களைக் கைது செய்தது குறித்து வருந்தலாகாதென்றும், நம் துன்பங்களை எல்லாம் நன்றாக அறிந்திருப்பதாகவும், அற்றதசரஸில் அகப்பட்டுக் கொண்டுவிட்டதால் வைக்கம் சத்யாக்கிரஹத்தில் சேரமுடியாது போய்விட்டதென்றும், ஏதேனும் உதவி வேண்டுமானால் விவரம் எழுதி அறிவிக்க வேண்டும், தயங்க வேண்டாம் என்றும் எழுதியிருக்கிறார்.'

என்னுடைய மூத்தமகள் செல்லம்மாளும் எனக்கு அடிக்கடி எழுதுவாள். அவளுடைய கடிதத்தின் வாயிலாக, வைக்கம் சத்யாக்கிரஹம் குறித்து அன்று சிலர் கொண்டிருந்த கருத்தை அறியமுடிந்தது. 1924ஆம் ஆண்டு, மே பதினேந்தாம் தேதி அவள் எழுதிய கடிதத்தில் கூறுகிறாள்:

'இரண்டு நாட்கள் முன்னர்..... இங்கு வந்திருந்தான். அவன், அப்பா இதில் ஒன்றும் இறங்கியிருக்க வேண்டாமென்று சொன்னான். நான் அவனுடன் கொஞ்சநேரம் விவாதப் செய்தேன். மற்றவர் யாவரும் விவரமாகச் சொன்னால் புரிந்துகொள்கின்றனர். ..... மட்டும், என்ன சொன்னாலும் ஒத்துக்கொள்வதில்லை. எல்லாவற்றுக்கும் அவச்சொல்லே கூறிக்கொண்டிருக்கிறான். வைக்கத்தின் நிலையே இப்படியானால் எல்லாம் நேராவதற்கு மிகுந்த காலமாகும் என்பது சிலர் கருத்து. அப்பாவுக்கு என்ன தோன்றுகிறது? நான் அப்பாவின் எல்லா முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கவேண்டுமென்று கடவுளை வேண்டிக்கொள்கிறேன்.'

அந்நாள் செல்லம்மாவுக்குப் பதினேந்து வயசாகியிருந்தது. அங்கு வந்து இரண்டு மாதம் சென்றதும், என்னுடைய மனைவியும், மகளும்,

கடைசி மகள் லீலாவும் என்னைப் பார்ப்பதற்குப் பாலக்காட்டிலிருந்து திருவனந்தபுரத்துக்கு வந்தார்கள். நான் பல நாட்களாக அவர்களுடைய வரவை ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தேன். சூபரின்டென்டண்ட் அலுவலகத்தில்தான் அவர்களை நான் சந்தித்தேன். அங்குச் சென்று படி ஏறியதும் என் சிறிய மகள் லீலாவை வாரியெடுத்தணைத்தேன். அப்போது நான் சிறையிலிருப்பதான உணர்வே என்னிடம் இல்லை. சூபரின்டென்டண்ட் அப்போது ஓர் புன்னகையுடன், 'நீங்கள் இப்போது சிறையிலிருக்கிறீர்கள்' என்று நினைவுறுத்திய போது நான் தகாதது செய்துவிட்டாற்போன்று உறுத்தியது. இரண்டு மணி நேரம் அவர்கள் என்னுடன் இருந்தார்கள். அந்தப் பொழுது கழிந்ததும் அவர்கள் விடைபெற்றுச் செல்கையில், எனக்கு அவர்கள் வந்திருக்கவே வேண்டாமென்று தோன்றியது.

ஒருநாள் பகலுணவு கொள்ள அமர்ந்திருக்கையில் சிறைக்குள் சற்றுத் தொலைவிலிருந்து மர்மமாகத் தோன்றும் ஓர் கூக்குரல் செவிகளில் விழுந்தது. சாட்டை கொண்டு யாரையோ அடிக்கும் ஓசை; தொடர்ந்த பரிதாபத்துக்குரிய ஓலம். இது கேட்கத் தாளாததாக இருந்தது. ஒரு கைதியை ஏதோ காரணத்துக்காக முக்காலியில் கட்டி அடிக்கும் ஓசை அது சில சமுதாயத் துரோகிகளுக்தும், கொடுஞ் செயல்கள் புரிந்தவர்களுக்கும் இவ்வாறு தண்டனை யளிக்கவேண்டுமென்பது சரிதான். ஆனால், கைகளையும் கால்களையும் பிணித்து ஒரு மனிதனைப் பெரிய சாட்டை கொண்டு அடிக்கும் வழக்கம் நிறுத்தப்பட வேண்டியதென்று எனக்கு அப்போது தோன்றியது. வேறு எந்தத் தண்டனைக்கும் வசப்படாதவர்கள் சில கைதிகள். அவர்களுக்கு அடிதான் உகந்ததென்று சமாதானம் சொல்கிறார்கள். நம்முடைய சிறைக்கூடங்கள் இன்னுப் தண்டனைக்குரிய இடங்களாகவே கருதப் படுகின்றன. மேற்கு நாடுகளில் இவ்வகையில் பல சோதனை முறைகளைக் கையாளுகின்றனர். அவை குறிப்பிடத்தகுந்தவை. நேர்மையற்ற செயல் புரியும் குணமே ஒரு நோய். அதற்கும் மற்ற நோய்களுக்குச் சிகிச்சை யளிப்பது போன்று தனியாகச் சிகிச்சை யளிக்கவேண்டும். இந்த உண்மையை ஓர்ந்து செய்யும் சீர்திருத்தம் நம் சிறைச்சாலைகளிலும் செய்யப்படவேண்டும்.

இக்காலத்தில், வைக்கம் சத்யாக்கிரஹம் அகில இந்தியப் புகழ் பெற்றுவிட்டது. தமிழ்நாட்டிலிருந்து ஈ. வி. ராமசுவாமி நாயக்கர் வைக்கம் வந்து சத்யாக்கிரஹம் செய்து திருவனந்தபுரம் சிறைக்கு வந்தார். எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார், சுவாமி சிரத்தானந்தர் முதலிய தலைவர்கள் சிறையில் எங்களைக் காண வந்தனர். பஞ்சாபி லிருந்து ஒரு அகாலிகள் சங்கம் வைக்கத்துக்கு வந்தது. பார்வை

யாளருக்கும் மற்றவர்களுக்குமாக அவர்கள் அங்கே ஒரு சம-உணவுச் சாலை நடத்தினர்கள். இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் நாள் தோறும் எண்ணற்ற பார்வையாளர் வைக்கத்துக்கு வந்துகொண்டிருந்தனர். போலீசார் சத்யாக்கிரஹிகளைக் கைது செய்வதை நிறுத்தி விட்டனர். ஆனால் அவர்கள் சத்யாக்கிரஹிகளைச் சூழ்ந்து நிற்கத் தொடங்கிவிட்டனர். இரண்டு நாட்கள் உண்ணாவிரதம மேற் கொண்டு ஒரே நிலையிலிருந்து மயங்கி வீழ்ந்த சாத்துக்குட்டி நாயரை டாக்டர்களுடைய உதவியுடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். அக்காட்சி மக்களைக் கிளர்ச்சியுறச் செய்தது. அந்த நிகழ்ச்சி வைக்கம் சத்யாக்கிரஹத்துக்குப் புத்துயிரளித்தது. ஒத்துழையாமை இயக்கத் திலிருந்து காங்கிரஸில் சேர்ந்து தொண்டாற்றியவர் சாத்துக்குட்டி நாயர். எத்தகைய நெருக்கடி நிலையிலும உற்சாகம் கைவிடாமல் முகமலர்ச்சியுடன் தொண்டாற்றச் சித்தமாக இருந்தவர் அவர். மற்றவர்கள் பலரைப் போன்றே குடும்ப சம்பந்தமான கவலைகள் பொதுப் பணிகளைவிட்டு அவர் விலக வேண்டிய கட்டாயத்தைத் தோற்றுவித்துவிட்டன. என்றாலும் இன்னும் நெருக்கடியான நிலை களில் காங்கிரஸுக்கு உதவ அவர் சித்தமாகவே வருவார். அதற்கு வேண்டிய ஆற்றலும் சாத்துக்குட்டி நாயருக்கு உண்டு.

சத்யாக்கிரஹிகளுக்கும் அதிகாரிகளுக்குமிடையே எந்த வகையான முன்னேற்றமுமின்றி சத்யாக்கிரஹம் தொடர்ந்து நடைபெற்றது.

அக்காலத்தில், எதிர்பாரா விதமாக ஓர் நிகழ்ச்சி நடந்தது. திருவிதாங்கூர் மகாராஜா ஸ்ரீ மூலம் திருநாள் காலமானர். சித்திரைத் திருநாள் மகாராஜாவுக்கு வயது வந்திராதபடியால், மகாராணி சேது லக்ஷ்மிபாய் ஆட்சிப் பொறுப்பேற்றார். காலம் சென்ற மகாராஜாவின் இரங்கல் நினைவாக, சத்யாக்கிரஹக் கைதிகளை விடுதலை செய்யத் தீர்மானம் செய்தனர்.

எங்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்யப் போகிறார்களென்ற விவரத்தை ஒருநாள காலையில்தான் அறிந்தோம். ஐந்து மாதம் சுகமாகத் தங்கி இருந்த இடத்தை விட்டுச் செலலும்போது தோன்றக் கூடிய வருத்தம் தோன்றுமலில்லை. சூபரின்டென்டண்ட் போத்தனையும் சிறையின் மற்ற அதிகாரிகளையும் கண்டு மரியாதையுடன் அவர்கள் எங்களுடன் பழகி வேண்டிய வசதிகள் செய்து கொடுத்துச் சிறை வாசத்தை இனிய அநுபவமாக்கியதற்கு நன்றி கூறி விடை பெற்றுக் கொண்டோம். காலைச் சிற்றுண்டியருந்தியபின், சிறையிலிருந்து வெளி வந்தோம். சத்யாக்கிரஹ காலத்தில் எங்களுக்கு உதவியாக இருந்த ஸ்ரீ கே. ஜி. குஞ்ஞு கிருஷ்ண பிள்ளையுடன் சேர்ந்து பகலுணவு கொண்டோம். நான் அன்றே வைக்கத்துக்குப் புறப்பட்டேன். எங்களை

வரவேற்கும் வகையில் வைக்கத்தில் ஏற்பாடு செய்த பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னரே, மறுநாள் குடும்பத்தினரைக் காண நான் பாலக்காட்டுக்குச் சென்றேன்.

எங்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்தாலும், வைக்கம் போராட்டம் முடிவு பெறவில்லை. போராட்டத்தின் நடைமுறைதான் அவ்வப்போது மாறிக்கொண்டிருந்தது. இச் சந்தர்ப்பத்தில் மகாத்மா காந்தி வைக்கத்துக்கு விஜயம் செய்தார். அவர் அங்கு வந்து பலருடன் பேச்சு வார்த்தைகள் நிகழ்த்திய பின்னர், அதிகாரிகள் சிறிது விட்டுக் கொடுக்கத் தயாராஞர்கள். கிறிஸ்தவர்களும் முகமதியர்களும் நடக்கும் கோயில் முன் வீதிகளில் சாதி விதியாசமின்றி எல்லா இந்துக்களும் நடக்க உரிமை வழங்கலாம் என்று நிச்சயம் செய்தார்கள். ஆனால், மேல் வகுப்பு இந்துக்கள் மட்டுமே நுழைவதற்குரிய கோயில் எல்லைக்குள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரும் நுழைய அனுமதி நல்க வேண்டும் என்று சத்யாக்கிரஹிகள் வற்புறுத்தலாகாதென்று தெரிவித்தார்கள். அதன் பயனாகவே தாழ்த்தப்பட்டோரின் நடமாட்டத்தைத் தடுத்து நிறுத்திய அறிவிப்புப் பலகையைக் கோயில் முன் வீதியிலிருந்து அகற்றினார்கள். சத்யாக்கிரஹத்தை நிறுத்திக் கொண்டோம். வைகம சத்யாக்கிரஹம் லட்சியமாகக் கொண்ட பிரச்னையில் ஒருபுறம் தீர்வு கண்டோம என்றாலும், தீண்டாமைக் கொடுமையை முற்றிலும் அகற்றிவிட முடியவில்லை. காந்திஜியின் அறிவுரைகளுகிணங்க, அதற்கான முயற்சிகளைப் பின்னரும் தொடர்ந்தோம்.

வைக்கத்திலிருந்து திருவனந்தபுரம் செல்ல, வழியில் தாழ்த்தப் பட்டோர் தவிர்த்ததொரு இந்துக்கள் கோஷ்டி பாத யாத்திரை மேற் கொள்வதென்று நிச்சயம் செய்தோம். மந்தத்து பத்மநாப பிள்ளை, ஏ. கே. பிள்ளை, எம். என். நாயர், சங்கரஞ்சேரி பரமேசுவரன் பிள்ளை ஆகிய தலைவர்கள் உற்சாகமாக முன்நின்று சென்ற யாத்திரையின் வழி நெடுகிலும் மக்கள் மிகுந்த உணர்ச்சிகொண்டவர்களாய் ஆதரவும் வரவேற்பும் நல்கினார்கள். வழியில் ஆங்காங்குப் பொதுக்கூட்டங்கள் கூட்டினார்கள். ஒவ்வோர் இடத்திலும் யாத்திரைக்காரர் வரும்போது, அங்குப் புதியவர்கள் சேர்ந்துகொள்வார்கள். கொடிபிடித்துக் கொண்டும் பாட்டிசைத்துக்கொண்டும், கோஷமிட்டுக்கொண்டும் யாத்திரை செய்த அக்கோஷ்டி, தீண்டாமை அரக்கனுடன் போரிடப் புறப்பட்டதோர் பெருஞ்சேனையாக விளங்கியது. அதுபோன்று இன் னொரு கோஷ்டி டாக்டர் நாயுடுவின் தலைமையில் நாகர்கோவிலிலிருந்து புறப்பட்டது. திருவனந்தபுரம் கடற்கரையில் கூடிய பெரியதொரு பொதுக்கூட்டத்தில் தீண்டாமையை அடியோடு அகற்றுவதற்கான

நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆட்சியாளரிடம் கோரும் ஓர் தீர்மானத்தை நிறைவேற்றினேம்.

சங்கனாச்சேரி பரமேசுவரன் பிள்ளையின் தலைமையில் வருணசிரம இந்துக்களின் ஒரு பிரதிநிதிக் குழு, மகாராணியைக் கண்டு சுமார் இருபத்தையாயிரம் வருண இந்துக்கள் கையெழுத்திட்டதோர் நீண்ட மனுவை அவரிடம் அளித்தது. இந்த நிகழ்ச்சிகளனைத்தும் தீண்டாமை யகற்றும் விஷயத்தில் ஓர் புதிய விழிப்பை, வேகத்தைத் தோற்று வித்தன.

வைக்கம் சத்யாக்கிரஹம் பல நிலைகளில் இருபது மாத காலம் நீடித்திருந்தது. அது கேரளத்தில் மட்டுமன்றி, இந்தியாவின் ஏனைய பகுதிகளில் இருந்தும் தீண்டாமையை அகற்றி, தாழ்த்தப்பட்ட மக்களின் உள்ளன்பை நிலைநிறுத்துவதற்குரியதோர் அடித்தலமாக அமைந்தது. ஓர் புதிய சமுதாயப் பாங்கைப் படைக்கும் சூழலையும் அது தோற்றுவித்தது. கேரளத்தில் காங்கிரஸ் இயக்கத்தின் உளந் தொடும் வரலாற்றின் எழுச்சியூட்டும் அத்தியாயம் இது.

22

எதிர்பாராத துன்பங்கள்

'பொதுத் தொண்டாற்றுபவர்களுக்குச் சில சமயங்களில் பூமாலைகள் கிடைக்கலாம். ஆனால் பெரும்பாலும் அவர்களுக்குத் துன்பங்கள்தாம் கிடைக்கும். ஆனால் அவற்றைப் பிறர் அறியார்' என்று கோபால கிருஷ்ண கோகலே ஒரு முறை கூறினார். அவருடைய அந்தச் சொற்களை நிராசை மேலிடும்போதெல்லாம் நான் நினைத்துக்கொள்வதுண்டு. பொது வாழ்க்கை சுக வாழ்க்கையல்ல என்பதை நான் அறிவேன் என்றாலும் விவரிக்க இயலாததோர் சக்தி என்னைப் பொது வாழ்க்கைக் களத்துக்குக் கவர்ந்து இழுத்துக்கொண்டிருந்தது.

சிறையிலிருந்து வெளிவந்து நான் ஊர் திரும்பி வந்தபோது, என் மனைவி, உறவினர்களிடம் தனக்கு ஏற்பட்ட அநுபவங்களைக் குறித்துக் கூறினாள். 'எத்தனை உயர்ந்த நிலைக்கு வருவான் என்று நாங்கள் ஆசைப்பட்டோம்! எவ்வளவு செலவழித்துப் படிக்க வைத்திருக்கிறது! ஆனால் ஜெயிலுக்குப்போய்விட்டு வரப்போகிறானென்று இருக்கிறோம். பெண்சாதி, குழந்தைகள் என்று கொஞ்சமேனும் பொறுப்பு இருக்

இருக்கிறதா? அவர்களை எல்லாம் யார் காப்பாற்றுவார்களென்று எண்ணி இப்படிப் புறப்பட்டான்?' என்ற மாதிரியான சுடுசொற்களைக் கேட்காத நாளில்லை என்று வருந்தினாள். செலவுக்குப் பொருள் வேண்டுமென்றால் அவர்களை அண்டித்தானே ஆக வேண்டும்? ஆறுதல் கூற ஒருவரும் கிடையாது பொதுத் தொண்டாற்ற முன் வந்தவர் களுடைய தியாகத்தைக் குறித்துப் பேசுகிறோம் நாம். ஆனால் அவர் களுடைய குடும்பத்தினர் செய்யும் தியாகத்தை நாம் நினைவுகூர் கிறோமா? அவர்களன்றோ அருந்தியாகம் புரிகின்றனர்?

1921ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ஒத்துழையாமை இயக்கத்தில் சேருவதற்குத் தொழில் புரிவதை நிறுத்திவிட்டு நான் கோழிக்கோடு சென்றபோது, சில நாட்களுக்கு மட்டுமே வரக்கூடிய அளவுக்குத்தான் கைச் செலவுக்குரிய பணம் என்னிடம் இருந்தது. பணத்தைக் கருத் தாகச் சேமித்துச் செலவழிக்கும் பழக்கம் எனக்குக் கிடையாது. பணத்தைச் சேர்த்துவைக்கும் எண்ணமே எனக்குத் தோன்றியதில்லை. அதனால் நான் பல முறைகளிலும் கஷ்டப்பட்டிருக்கிறேன். அப்போ தெல்லாம் சில நாட்களுக்குக் கணக்கெழுவதும், அணை, பைசா எண்ணு வதும் வரப்போகும் செலவு குறித்து திட்டமிடுவதுமாகச் சில நாட்கள் கருத்தாக இருப்பேன். ஆனால் சில நாட்களுக்குப்பின் பழையபடியே பொருட்படுத்தாத நிலைக்குத் திரும்பிவிடுவேன்.

சிறையிலிருந்து வந்ததும், எப்படி நான் செலவுக்குப் பணம் தேடப் போகிறேன் என்ற கவலை என்னை ஆட்கொண்டது. மனைவியையும் ஐந்து குழந்தைகளையும் பராமரிக்க என்ன வழி? எனக்கு இன்னும் வேறு பொறுப்புக்களும் கடமைகளும் இருக்கின்றனவே! என்றெல்லாம் பிரச்னைகள் என்னுள் குடையலாயின. ஏதேனும் வழி பிறக்கும் என்று சற்றே நானே தேற்றிக்கொள்வேன்

தொழிலைத் துறந்து பொதுப்பணியில் ஈடுபட வந்த வழக்குரைஞர் களுக்கு உதவுவதற்காகக் காங்கிரஸில் பொருளாளராக இருந்த ஜம்னலால் பஜாஜ் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தார். அதிலிருந்து ஒவ்வொருமாதமும் நூறு ரூபாய்க்குக் குறையாமல் ஒரு தொகை எனக்கு வந்துகொண்டிருந்தது. காந்திஜிவேறு எனக்கு மாதம்தோறும் நூறு ரூபாய் அனுப்பிக்கொண்டிருந்தார். சுமார் ஒரு வருஷம் அதைக் கொண்டு சமாளித்தேன். 1922ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் காந்திஜி கைதான பிறகு அதெல்லாம் மாறிவிட்டன. பஜாஜின் நிதியிலிருந்த தொகை தீர்ந்துவிட்டது. காந்திஜி எனக்கு அனுப்பிக்கொண்டிருந்த பணமும் அவர் சிறைக்குச் சென்ற பிறகு இரண்டு அல்லது மூன்று மாசம் வரையிலும்தான் அது கிடைத்தது. பின்னர் அதுவும் வரவில்லை. சம்பாத்தியமுமில்லை. செலவை நிறுத்துவதற்கும் வழியில்லை. அவசிய

மான அன்றுடத் தேவைகளுக்கு இட்டு நிரப்பாமல் இருக்கவும் முடியாது. அரிசி வாங்குவதற்கு அரைரூபாய் சையிலின்றி அலமந்து நின்ற சந்தர்ப்பங்கள் பல.

இந்நாள், ஓர் முறை எர்ணாகுளத்தில் கேரளப் பிரதேச காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் கூடியது. சில முக்கியமான விஷயங்களைக் குறித்து ஆலோசனை செய்து முடிவு செய்வதற்காகக் கூடிய கூட்டம் அது. அந்நாள் நான் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் செயலாளன். அதனால் கூட்டத்துக்குச் செல்லாமலிருக்க முடியாது. செல்வதற்கு வழிச் செலவுக்குப் பணமில்லை. என் கையில் இரண்டே ரூபாய்தானிருந்தது. அதை நான் கொண்டுபோய்விட்டால் வீட்டுச் செலவுக்கு ஒன்று மிருக்காது. இதை எண்ணி வருந்துகையில் எனக்கு ஓர் வழி தோன்றியது. கல்லாயியில் இருந்து திருச்சூருக்கு டிக்கெட் வாங்குவது. அதற்கு ஒரு ரூபாயும் ஏதோ சில்லறையும்தான் வேண்டும். மீதிச் சில்லறையை நான் வீட்டுக்குக் கொடுத்தனுப்பினேன். காரூர் நீலகண்டன் நம்பூதிரிப்பாடு, அந்நாள் பிரதேச கமிட்டியில் ஒரு உறுப் பினர். அவர் அந்த வண்டியில் திருச்சூரிலிருந்து எரணாகுளம் வருவார். திருச்சூர் போய்ச் சேர்ந்துவிட்டால் அங்கிருந்து எரணாகுளத்துக்கு நம்பூதிரிப்பாடைச் சீட்டு வாங்கச் சொல்லலாம் என்பது என் எண்ணம். நல்ல வேளையாக அது இசைந்து வந்தது. பிரயாணச் சீட்டைக் காட்டிலும் முக்கியமான தேவை ஒன்று இருந்தது. அதுதான், காப்பி. கையில் சில்லறை இல்லாததால், காலையில் ஷோரனூரில் காப்பியருந்த முடியவில்லை. அதற்கும் நம்பூதிரிப்பாடின் பரந்த மனதைத்தான் தஞ்ச மடைய வேண்டியிருந்தது. எரணாகுளத்திலிருந்து கோழிக்கோட்டுக்கும் அவ்வாறேதான் திரும்பி வந்தேன்.

டெல்லியிலோ, கல்கத்தாவிலோ, வேறு இடங்களிலோ, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அவ்வப்போது கூடும். அதற்குச் செல்ல வேண்டுமானால் செலவும் அதிகம். அந்நாள் கேரளத்திலிருந்து ஏழெட்டுப் பேர் அகில இந்தியக் கமிட்டியின் உறுப்பினராக இருந்தனர். அவர்களில் பலரும் தம் சொந்தச் செலவுகொண்டு கூட்டங்களில் கலந்துகொள்ளச் செல்ல இயலாதவரே. அத்தகையவர்களில் நானும் ஒருவன். ஒவ்வொரு முறையும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பங்குகொள்ளச் செல்வதற்கு யாரேனும் தாராள சிந்தை யுடைய நண்பர்களை நாடிச் செல்லவேண்டும். ஓரிரண்டு தடவைகள் மகிழ்ச்சியுடன் உதவி செய்வார்கள். மீண்டும் மீண்டும் அவர்களைப் பணம் கேட்டுத் தொந்தரவு செய்தால், 'தியாகிகள், துரோகிகள்' என்று தோன்றுமல் இருக்காது. எங்களுக்கு வேறு வழியும் இல்லை. ஆனால் நாங்கள் கேட்டு இல்லை என்று கிடைக்காமல் நான் திரும்பிவந்த

சந்தர்ப்பங்கள் இல்லை என்றே சொல்லவேண்டும். இக்காலத்தில் எனக்கு ஏற்பட்ட இன்னொரு அனுபவத்தை இங்குக் கூறுகிறேன்.

வீட்டுச் செலவுக்குக் கையில் ஒரு காசுகூட இல்லாதிருந்த ஓர் நாளில் நான் வழக்கம்போல் மாத்ருபூமி அலுவலகத்துக்குச் சென்றேன். வீடு திரும்பும்போது கையில் ஏதேனும் செலவுக்குக் கொண்டுசெல்ல முடியும் என்று எண்ணியிருந்தேன். வீட்டிலிருந்து இறங்குகையில் அப்படிக் கூறிவிட்டே கிளம்பினேன். அலுவலகத்துக்கு வந்து வேலை செய்கையில் இடையிடையே பணத்தைப்பற்றிய நினைவு வரும். தபால் வந்தபோது ஏதேனும் பணம் வந்திருக்கிறதா என்று வினவினேன். இருபத்திரண்டு ரூபாய் கிடைத்திருக்கிறதென்றும், காகிதமும் தபால் தலையும் வாங்கவேண்டியிருந்ததால் அதுபோக மீதியை அச்சுக்கோப்பவர்களுக்குக் கொடுத்ததாகவும் மானேஜர் கூறினர். அதைக் கேட்டதும் நான் நிராசை கொண்டேன். ஆனால் நான் எவ்வாறு வீடு திரும்பிச் செல்வேன்? நெஞ்சம் வேதனையில் கவிந்தது. தெய்வத்தை எண்ணிவேண்டிக்கொண்டு வேலைகளுக்கு நடுவில் எப்படியோ மூன்று மணி நேரம் தள்ளினேன். பகலுணவுக்கு வீட்டுக்குச் செல்லும் நேரமாயிற்று. உணவு தயாராக இருக்குமா என்பது சந்தேகம். அன்று மிகுந்த சோர்வும் கவலையுமாக நான் ரிக்ஷாவில் ஏறி அமர்ந்தேன். அப்போது தபால்காரன் வருவதைக் கண்டேன். தபாலைப் பார்த்துவிட்டு வீட்டுக்குச் செல்லலாம் என்று எண்ணி, அலுவலகத்துக்குத் திரும்பினேன். அன்றைய கடிதங்களிலிருந்து ஒரு கவரைப் பிரிக்கையில், நூறு ரூபாய் நோட்டு ஒன்றும் ஒரு கடிதமும் அதில் இருந்தன. 'உங்களுக்கு மிகுந்த கஷ்டம் என்பதை அறிந்தேன். மனந்தளராதீர்கள். பணம் மேலும் வரும். இப்போது இதை அனுப்பி இருக்கிறேன்' என்று கடிதம் கூறியது. அதை யார் அனுப்பினர்கள் என்பது அப்போது எனக்குத தெரியாது; அதைப் பின்னரே அறிந்தேன். அந்தக் கடிதத்தைக் கண்டபோது எனக்கேற்பட்ட மகிழ்ச்சியையும ஆறுதலையும் எவ்வாறு எடுத்து இயம்புவேன்? அதிலிருந்து ஒரு பகுதியைத் துணையாசிரியர்களுக்கும், மற்றப் பணியாளருக்கும், வேறு சில முக்கியத் தேவைகளுக்குமாகப் பங்கிட்டு வழங்கினேன். எஞ்சியதை எடுத்துக் கொண்டு நான் வீடு திரும்பினேன். அன்று அந்தப் பணம் கிடைக்கவில்லையெனின், என்னுடைய நிலையைப்பற்றிக் கூறவேண்டியதில்லை. அத்தகையதோர் நிலையில் பணம் அனுப்பி வைக்கவேண்டுமென்று அந்த நண்பருக்கு எப்படித் தோன்றியதென்று எனக்கு இன்னமும் புரியவில்லை. இத்தகைய அநுபவம் எனக்கு ஓர் முறை மட்டும் நேர்ந்திருக்கவில்லை. அந்தப பேராற்றலின்மீதான என்னுடைய நம்பிக்கையை மேலும் மேலும் உறுதியாக்கும் வகையில், இது போன்று

எத்தனையோ நிகழ்ச்சிகள்! நான் முற்றிலும் ஆதரவற்றவனல்ல என்று மிகுந்த நெருக்கடி நிலைமைகளிலும்கூட அந்தப் பராசக்தியைத் தஞ்ச மடையும் எண்ணம் இத்தகைய அநுபவங்களின் வாயிலாகவே வளர்ந்து வந்திருக்கிறது.

மனைவியையும் குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு நான் பாலக்காட்டி லிருந்து கோழிக்கோடு திரும்பினேன். சில நாட்கள் சென்ற பிறகு வைக்கத்திலிருந்து திருவனந்தபுரத்துக்குக் கிளம்பியதோர் வருண இந்துக்களின் பாதயாத்திரையை வழியனுப்புவதற்காக நான் வைக்கம் செல்லவேண்டியிருந்தது. அங்கு ஒரு வார காலம் தங்கி ஏற்பாடுகள் செய்தேன். அணியுடன் நானும் சேர்ந்து திருவனந்தபுரம் செல்வதாக இருந்தேன். அப்போது, மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்றும் உடனே கோழிக்கோட்டுக்குத் திரும்பவேண்டும் என்றும் செய்தியைச் சுமந்து ஓர் தந்தி வந்தது. அன்றே வைக்கததிலிருந்து கிளம்பி மறு நாள் மாலை கோழிக்கோட்டை அடைந்தேன்.

கடுஞ்சுரம் பீடித்து, நலிந்துகிடந்த என் மனைவியைக் கண்டபோது, அது வெறும் சுரமல்ல என்று என் மனதில் தோன்றியது. கொஞ்ச நாட்கள் டாக்டர் என்னிடம் நோயைப்பற்றி எதுவும் தெரிக்கவில்லை, பின்னர் அவர் உண்மையைச் சொன்னார். 'என்னுடைய ஐயம் தெளிந்த பின் சொல்லலாம் என்று இருந்தேன் ... உங்களுடைய மனைவிக்கு எலும்புருக்கி நோய் பற்றியிருக்கிறது சற்றும் தாமதியாமல் சென்னைக்குக் கூட்டிச் சென்று சிகிச்சை செய்வது நலம்' என்றார் டாக்டர்.

'சற்றும் தாமதியாமல் சென்னைக்குக் கூட்டிச் சென்று சிகிச்சை செய்ய வேண்டும் ....' இதுதான் டாக்டருடைய அறிவுரை. ஆனால் நான் அதை எவ்வாறு நிறைவேற்றுவேன்? அன்றுடச் செலவுகளே திண்டாடிக்கொண்டிருக்கும் நான், சென்னைக்குச் செல்வதற்கும் அங்கே தங்கிச் சிகிச்சை செய்வதற்கும் பணத்துக்கு எங்கே போவேன்? அல்லது நோய்க்குச் சிகிச்சை செய்யாமல் அவளைக் கோழிக் கோட்டிலேயேதான் எப்படி வைத்துக்கொண்டிருப்பேன்?

அவளுடைய தந்தை கொஞ்சம் பணம் கொண்டுவந்தார். ஆனால் அது போதவில்லை. கையில் பணத்தட்டுடன் எவ்வாறு புறப்பட முடியும்? ஈசுவரா! இதென்ன சோதனை?

எப்படியானாலும் புறப்படுவோம். சென்னைக்குச் சென்ற பிறகு எல்லாவற்றையும் யோசிக்கலாம் என்று எண்ணி, புறப்படும் நாளை நிச்சயம் செய்தேன். புறப்படுவதற்கு முதல் நாள் ஓர் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் சீட்டு வாங்கி இடம ஒதுக்கியிருப்பதாக ஒரு நண்பர் கூறினார். அது மிகுந்த ஆறுதலளித்தது. மறுநாள் எங்களைச்

சென்னைக்கு வழியனுப்ப, கோழிக்கோடு ரயில் நிலையத்துக்குச் சில நண்பர்கள் வந்தார்கள். நோயாளியை வண்டியில் ஏற்றினேன். நானும் ஏறினேன். அவர்களிடமெல்லாம் விடைபெற்றுக்கொண்டேன். வண்டி நகரத் தொடங்கியபோது, ஒரு சேட் என்னிடம் வந்து ஒரு கவரைத் தந்தார். அதைத் திறந்து பார்த்தபோது, நானூறு ரூபாய்க்கு நோட்டுக்கள் இருந்தன. இருமுறைகள் அதை எண்ணிப் பார்த்தேன். அதைக் கையில் பிடித்துக்கொண்டு பரிதாபமாகப் படுத்திருந்த என் மனைவியை நோக்கிக்கொண்டு அமர்ந்திருக்கையில் என்னையுப் அறியாமல் மூன்று துளி கண்ணீர் விழுந்தது. என்னுடைய அப்போதைய நிலையை எண்ணி மேலிட்ட துயரமோ, நண்பருடைய பெருந்தன்மையை எண்ணிப் பெருகிய நன்றிப் பெருக்கோ, கண்ணீருக்குக் காரணம் யாதென்று நிச்சயமாகக் கூற முடியாது.

நேரில் கண்டறிய இயலாததோர் ஆற்றலுக்குக் கட்டுப்பட்டுத்தான் நாம் இயங்குகிறோம் என்று எனக்குப் பல சமயங்களிலும் தோன்றுவதுண்டு. எப்போது, எந்தப் பகுதியிலிருந்து எதிர்பாராத தாக்குதல் நேரிடுமென்று சொல்ல முடியாது. என்றாலும் மனிதன் ஓடும் ஆற்று நீரில் மிதக்கும் இலைபோன்ற பஞ்சையும் அல்ல என்று எனக்குத் தோன்றும். நம்மால தடுக்க இயலாத துன்பங்கள் நம்மை வருத்தலாம். என்றாலும் அனுபவங்கள் வாயிலாக, முயற்சியினால் தேடக்கூடிய நன்மைகளும், விலக்கக்கூடிய தீமைகளும் இல்லாமலில்லை என்பதை உணர்ந்துகொள்ளலாம். வாழ்க்கைப் பயணத்தில் நாம் ஓர் உறுதியான நம்பிக்கையை மட்டும் விடாமல் பற்றிக்கொள்ள வேண்டும்—சில ஆதாரப் பிரமாணங்களின்மீதான நம்பிக்கை. அந்த நம்பிக்கையை, அவரவருக்குத் தகுந்த வகையில் அவரவர்களே தேடிக் கண்டுகொள்ள முடியும். பல்வேறு நிலைகளில், பலதரப்பட்ட நண்பர்களுடன் பழகும் பேறு எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால், என்னுடைய தேவைகளுக்கு அந்தத் தாழ்மையை இலட்சியமாக்க நான் விரும்பியதே இல்லை. அதனாலேதான் அவர்களுடைய நட்பு நிலைத்து உறுதிபெற்றிருக்கிறதென்றும் எதிர்பார வகையில் பல சந்தர்ப்பங்களிலும் அவர்களிடமிருந்து உதவி கிடைத்திருக்கிறதென்றும் கருதுகிறேன்.

நான் பல சந்தர்ப்பங்களில் வஞ்சகம், கொடுமை, தன்னலம், பொய்மை எல்லாவற்றையும் காண நேர்ந்திருக்கிறது. அதுபோன்றே சத்தியத்தில் உறுதியும், பேச்சில் கனிவும் அன்பும், அளவற்ற மனிதாபிமானமும், தன்னலமறுக்கும் தியாக சிந்தையும் கொண்டு என்னைக் கவர்ந்த சில மாண்பு மிகு மனிதர்களையும் நான் நினைத்துப் பார்க்கிறேன். இந்த இருதரப்பாரும் உலகில் சொற்பமானவரே. இரண்டு பிரிவிலும் உட்படாத சாதாரண மக்களே பெரும்பாலோர்.

சாதாரண மனிதன் குரூரமானவனுமல்ல; நியாகியும் அல்ல—தன் னுடைய நலங்களுக்கு இடையூறு வராத அளவில் பிறருடன் தோழமை காட்டுவதற்கு மட்டுமே அவன் விரும்புகிறான். இரண்டுக்கும் நடுவில் வாழ்வது மட்டுமே அவனுடைய கவலை.

ஐந்து மாதம் மனைவியின் சிகிச்சைக்காக நான் சென்னையில் தங்கினேன். எலும்புருக்கி நோய்ச் சிகிச்சைக்கான மருந்துகளும் வழி முறைகளும் இந்நாள் போன்று அந்நாளில் முன்னேற்றம் கண்டிருக்கவில்லை. அந்நாள் இந் நோய்க்கான சிகிச்சை முறையில் தேர்ந்த மருத்துவர் கேசவன் பை. என்னிடம் எந்தப்பிரதிபலனையும் எதிர்பாராமல் சிகிச்சை செய்தார் அவர். நோயாளியிடம் மிகுந்த அன்பும் பரிவுமாக, அவர் மேலான மருந்துகளும் சிகிச்சையும் அளித்தார். தொழிலைத் துறந்து பொதுத்தொண்டில் இறங்கிய ஒருவன் என்று கருதித்தான் அவர் அத்துணைப் பரிவுகொண்டார் போலும்!

நோயாளியின் உடல் நிலையைப் பார்த்துக்கொண்டு, அவ்வப்போது சென்னையிலிருந்து ஏதேனும் காரணமாக நான் வெளியூருக்குச் சென்றேன். டி. வி. சாத்துக்குட்டி நாயருடன் மாத்ருபூமிக்கு—கம்பெனிக்கு மேலும் பங்குகள் சேர்ப்பதற்காக நான் கோலார் சென்றேன். அந்நாள் அங்குப் பொற்சுரங்கங்களில் ஏராளமான மலையாளிகள் பணி செய்துகொண்டிருந்தனர்; அதிகாரிகளாகவும் இருந்தனர். பங்குகள் வேண்டிச் சென்ற பயணம் வீண் போகவில்லை. அங்கு நான் சென்றதில் மாத்ருபூமிக்குச் சுமாராக மலையாளிகளிடம் வெற்றிகிடைத்தது. லிஃப்டில் இறங்கி ஆறுயிரம அடிக்குக் கீழ் பொற் சுரங்கங்களைக் காணச் சென்றோம். பொன்கலந்த பாறைப்படிவங்களை வெட்டி எடுப்பதையும், மேலேறி பாறையை உடைத்துப் பொடித்துப் பொன்னை அகற்றி உருக்கிக் கட்டியாக்குவதையும் கண்டோம். ஒரு வாரம் கோலாரில் தங்கிவிட்டுத் திரும்பினேம்.

இக்காலத்தில் தீண்டாமை ஒழிப்புப் பணிகளைக் குறித்து, முக்கியமாக வைக்கம் சத்தியாக்கிரஹம் குறித்து அறிவதற்காக பூஜ்யர் ஆண்ட்ரூஸ் திருவிதாங்கூருக்குக் கிளம்பியிருந்தார். வழி நடுவில் சென்னையில் அவர் இரண்டு நாட்கள் தங்கினர். நான் சென்னையில் இருப்பதை அறிந்து ரயில் நிலையத்தில் என்னைச் சந்திக்க விரும்புவதாகத் தந்தி கொடுத்திருந்தார். என்னைக் கண்டதும், வைக்கம் சத்யாக்கிரஹம் பற்றிப் பேசுவதற்காக அன்று பகல் மயிலாப்பூரில் அவர் தங்கியிருந்த இடத்துக்கு என்னை அழைத்தார். அங்கேயே பகலுணவு கொள்ளலாம் என்றும் கூறினர். நான் பகல் பன்னிரண்டு மணிக்கு அங்கே சென்ற போது ஆண்ட்ரூஸ் அங்கே இல்லை. அவர் வெளியில் சென்றிருப்பதாகவும் விரைவில் திரும்பிவிடுவாரென்றும் அங்கிருந்தவர்கள கூறினர்கள்.

நான் காத்திருந்தேன். ஒரு மணியாகியும் அவர் வரக்காணவில்லை. எனக்குப் பசி எடுக்கத் தொடங்கியது. சுமார் இரண்டு மணிக்கு அவர் வியர்க்க விறுவிறுக்க விரைந்து படியேறி வந்தார். என்னைக் கண்டதும், வெகு நேரமாகக் காத்திருக்கிறீர்களா? நினைத்ததற்கு மேல் நேரமாகி விட்டது. கொஞ்சம் இருங்கள். நான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன் என்றார். என்னை உணவு கொள்ள அழைத்ததை அவர் மறந்துவிட்டார். என்ன செய்வதென்று புரியவில்லை. பேசாமலிருக்கவும் என் பசி என்னை அநுமதிக்கவில்லை. 'என்னை உணவுகொள்ள அழைத்ததை மறந்து விட்டீர்களா, மிஸ்டர் ஆண்ட்ரூஸ்?' என்று நான் வினவியதும், அவருக்கு மிகவும் நாணமாகிவிட்டது. 'ஐயோ! எத்தனை வெட்கக்கேடு! நான் மறந்தே போய்விட்டேன். ஓராயிரம் தடவை மன்னிப்பு — நாம் சாப்பிடப் போகலாம் வாருங்கள்! என்று அழைத்துச் சென்றார். உணவுகொண்டுமுடிந்தபின். இரண்டு மணிநேரம் அவருடன் பேசினேன். அதுதான் எங்களுடைய கடைசிச் சந்திப்பு என்று நான் அப்போது நினைத்திருக்கவிலை. பின்னர் எங்களுக்கிடையே கடிதப் போக்கு வரத்து இருந்தது. என்றாலும், அதற்குப் பிறகு நான் அவரைக் காண்பதற்கில்லை. நான் சிங்கப்பூரில் இருந்த நாட்களில் அவருடைய மறைவு குறித்துச் செய்தியறிந்தேன். சிங்கப்பூரில் இந்தியர் ஏற்பாடு செய்த பொதுக்கூட்டத்தில் நான் இறுதியஞ்சலி செலுத்தினேன்.

நாலைந்து மாதங்கள் தொடர்ந்து சென்னையில் தங்கவேண்டி இருந்ததால், நான் மாத்ருபூமியின் ஆசிரியப் பொறுப்பை விட்டுவிட வேண்டியதாயிற்று. மாத்ருபூமி வாசகர்களிடையே நான் விடை பெற்றுக்கொண்ட கடிதம் 1925 ஜனவரி முப்பத்தொன்றும் நாள் வெளியாயிற்று.

'மூன்று வயசு நிறையாததொரு குழந்தையை விட்டுப் பிரிவதற்கு அதன் தந்தை எவ்வாறு வேதனைப்படுவாரோ, அதற்குச் சிறிதும் குறையாத வேதனையுடன் நான் மாத்ருபூமியை விட்டுப் பிரிகிறேன். வாழ்வில் எனக்கு மற்றத் துன்பங்கள் எது நேர்ந்தாலும் மாத்ருபூமிக்காகப் பணி செய்வதில், எழுதுவதில், அதற்காக உழைப்பதில், அதற்காகத் துன்பங்கள் அநுபவிப்பதில், ஒரு விவரிக்க முடியாத மகிழ்ச்சியும் ஆறுதலும் எனக்கு ஏற்படும். இப் பத்திரிகைப் பணியைத் தொடங்குவதற்குரிய பேறு எனக்கு வாய்த்ததற்காக நான் என்றும் நன்றியுடையவனாக இருக்கிறேன். தன்னுடைய நாட்டு மக்களுக்குச் சுதந்திர உணர்வையும், சகோதர அன்பையும், சுயமரியாதையையும் உணர்த்திப் பரவச் செய்வதற்குக் காரணமாகக் கூடிய சந்தர்ப்பங்களையும், நற்பணிகளையும் எந்த இந்தியன்தான் வரவேற்று ஏற்கமாட்டான்? நாட்டுப் பணிக்காகவே வாழும் பேறு சிலருக்கு மட்டுமே கிடைக்கும். மாத்ருபூமியை

விட்டுப் பிரிய என்னைக் கட்டாயமாக வலியுறுத்தும் காரணங்களை நான் இங்குக் கூறவேண்டியதில்லை. மிக முக்கியமான காரணங்கள் என்று மட்டுமே தெரிவித்துக்கொள்கிறேன். மாத்ருபூமிக்கு எழுதும் எழுது கோலை நான் எந்நாளும் பயன்படுத்திக்கொண்டிருப்பேன். ஆசிரியப் பொறுப்பிலிருந்து விலகுவதால், பத்திரிகையுடன் வேறு வகையாகத் தொடர்புகொண்டு மாத்ருபூமிக்கு எழுதுவதில் அதிக சுதந்திரமும், ஆற்றலும் எனக்கு இசையும் என்று கருதுகிறேன். பத்திரிகையின் வருங்காலம் குறித்துக் கவலைகொள்ளக்கூடியவாறு ஒன்றுமில்லை என்பதே எனக்குப் பெரிய ஆறுதலாக இருக்கிறது. மூன்றுண்டுகளுக்கு முன்னர், ஒரு மாபெரும் தேசிய இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் தோன்றிய மாத்ருபூமி, இந்நாள் கேரளத்தில் ஓர் ஸ்தாபனமாக வளர்ந்து நிலைத்துவிட்டது. கேரளத்திலும் வெளியிலும் வாழும் கேரள மக்கள், மாத்ருபூமிக்கு உதவ எவ்வாறு ஆவல்கொண்டிருக்கின்றனர் என்பதை நான் அறிந்திருக்கிறேன். பெருகிவரும் சந்தாதாரர் களுடைய எண்ணிக்கையே மாத்ருபூமியின்பால் பொதுமக்களுக்கு இருக்கும் அன்பைத் தெளிவாக்குகிறது. எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பாராமல் இரவும் பகலுமாக மாத்ருபூமிக்கு உழைத்தவர்கள், இனிமேலும் அதேமாதிரி பணியாற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை. என்னுடைய மரியாதைக்குரிய நண்பர்கள் மாதருபூமியின் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றனர். சத்யம்-சமத்துவம்-சுதந்திரம் என்ற இலட்சிய வாக்குகளை அச்சமற்று, மாத்ருபூமி தன் கொள்கைகளாக முழங்கிக் கொண்டிருக்கும். இந்த அருந்தொண்டாற்றும் பொறுப்பை ஏற்ப தற்குத் தேவையான உள்ளார்ந்த ஆசரவை மாத்ருபூமிக்கு வாசக மக்கள் தொடர்ந்து அளிக்கவேண்டும் என்பதுதான் இச்சந்தர்ப்பத்தில் நான் விடுக்கும் வேண்டுகோள்.'

கேரளப் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் செயலாளன் என்ற பொறுப்பையும் விட்டு நான் விலகினேன். 1925ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வைக்கத்தில் கூடிய கேரளப் பிரதேச காங்கிரஸ் கூட்டத்தில் என்விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்நிலையில் பி. ராவுண்ணி மேனன், பிரதேச காங்கிரஸ் செயலாளராகப் பொறுப்பேற்றார்.

மனைவியின் சிகிச்சைக்காக நாங்கள் சென்னையில் ஒன்றரை இருந்த காலத்தில் என் மனைவியின் தாய் வைசூரி கண்டு இறந்து போனாள். எங்களுடைய நிராதரவான நிலையில் மேலும் துன்பங்கள் பெருகின.

மனைவியின் உடல்நிலை நாளடைவில் மோசமாயிற்று. ஆயுர்வேத சிகிச்சை செய்யலாமென்று கருதி, பிப்ரவரி மாதத்தில் பாலக்காடு திரும்பினேன். மற்ற எல்லாப் பணிகளையும் நான் நிறுத்திவிட்டு, நோயாளிக்குப் பணிபுரிவதிலேயே முழுதும் கருத்தாக இருந்தேன்.

ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மனிதர்கள் எலும்புருக்கி நோயில் மடிந்து போகின்றனர். அதைக்காட்டிலும் பத்துமடங்கு எண்ணிக்கை யுள்ள மாந்தரை இந்நோய் பற்றியிருப்பதாகப் புள்ளிவிவரம் கூறு கின்றனர். அவர்களில் பெரும்பாலும் மருத்துவ வசதியோ, சிகிச்சை வசதியோ இல்லாதவர்களே அதிகம். நம் நிலை எத்துணைப் பரிதாபத்துக் குரிய நிலை? நோய்க்கான மருத்துவமனைகள் அண்மைக்காலத்தில் பெருகி இருக்கின்றன புதிய மருந்துகளும் கண்டுபிடித்திருக்கின்றனர் என்றாலும் இக் கொடிய நோயை அகற்றும் வகையில், தடுக்கும் வகையில், ஏற்பட்டிருக்கும் வசதிகள் இன்னமும் போதவில்லை என்ற நிலையிலேயே இருக்கிறோம். இந்திய மக்களை வருத்திக் குலைக்கும் ஐந்து கொடிய நோய்களில் முக்கியமானது எலும்புருக்கி நோய்.

நோயின் கொடிய நிலையை அவள் உணராதிருக்கும்பொருட்டு, புத்தகங்களைப் படித்துக்காட்டியோ, செய்திகளைப் பேசியோ, குழந்தை களைப் பாடச்சொல்லியோ, பொழுதைப் போக்கவேண்டியிருந்தது. ஏப்ரல் இறுதியில் நிலை மாறியது. இரவு முழுவதும் உறக்கம்கொள்ளாத நிலை. கால்களில் நீர் பற்றி வீங்கின. வாயில் புண்கள் தோன்றின. இருமவோ கோழை துப்பவோ சக்தியில்லை. தான் மிகவும் நலிந்த நிலையில் படுத்துக்கிடக்கும் ஆற்றுமை அவள் முகத்தில் தேங்கியிருந்தது. ஒரு வாரம் இதே நிலையில் நீடித்தது. பிறகு இரண்டு மூன்று நாட்கள் நோயாளிசற்றே ஆசுவாசமடைந்தாற்போலிருந்தாள். 1925 ஆம் ஆண்டு ஏப்ரல் இருபத்தாறும் நாள் நள்ளிரவு கடந்தது. லக்ஷ்மி படுத்திருந்த அறையில் ஓர் மங்கிய விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதுவரையிலும் நோயாளியின் அருகிலிருந்த நான் வராந்தாவுக்குச் சென்று சற்றே படுத்தேன். அஞ்சும்படியாக அப்போதும் ஒன்றும் தோன்றவில்லை. நான் இரண்டு மூன்று மணி நேரம் உறங்கினேன். சுமார் நான்கு மணியளவில் என்னை யாரோ தட்டி எழுப்பினார்கள். நான் விரைந்து லக்ஷ்மியின் அருகில் சென்றேன். ஒரு பெரிய இருமல் தொடர்ந்தது. கபம் வெளியே வரவில்லை. கண்கள் நிலைகுத்த என் அன்பிற்கினியாள் தவித்த நிலை என்னை உருகச் செய்தது. லக்ஷ்மியின் திறந்த கண்கள் அப்படியே மூடிக்கொண்டன. பின்னும் சிறிது நேரம் அசையாமல் கிடந்தாள். வீட்டிலுள்ளவர் ஒவ்வொருவரும் எழுந்து அவள் படுத் திருந்த அறைக்குள் வந்தனர். லக்ஷ்மி மீண்டுமோர் முறை கண்களை விழித்தாள். ஏதோ கூற முயற்சி செய்தாள். முடியவில்லை. சேவலும் காகமும் உதயத்தை வரவேற்றன. அச் சிறிய அறைக்குள் கூட்டமாக நெருங்கியிருந்தவர்களைப் பார்த்தாலும் அவளால் அவர்களை இனம் கண்டுகொள்ள இயலாததாக இருந்தது. திறந்த கண்கள் பாதியாக மூடிக்கொண்டன. மூச்சு நின்றது. எல்லாம் முடிந்துவிட்டது.

லக்ஷ்மியில்லாததொரு நிர்ப்பாக்கிய இல்லத்துள் காலை இளஞ் சூரியனின் கதிர்கள் மெல்ல எட்டிப்பார்த்தன.

23

மரணத்துக்குப்பின் வாழ்க்கை

பத்தொன்பது ஆண்டுகள் தொடர்ந்த இல்லற வாழ்க்கை இறுதியை எய்தியது. லக்ஷ்மி, ஒரு மனைவி எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தாள். உணவு வட்டிக்கவும், பரிமாறவும், வீட்டுப் பணிகளைப்பற்றிய எண்ணங்களும் செயல்களு மாகவே விளங்கிய இல்லாள், அவள். அன்றுடச் செலவுக்குக் கடினமாக நெருங்கியபோதிலும, அதை வெளியிட்டால் நான் வருந்துவேன் என்று கருதி மௌனம் புலர்த்துவாள். எதையேனும் பொடித்துப்போட்டோ சிறுபண்டங்கள் கூட்டியோ எனக்குச் சுவையான அமுது படைப்பாள். புத்தகங்கள் படிக்கவும், பல செய்திகளைக்குறித்துப் பேசவும் மிகுந்த விருப்பம் கொண்டிருந்தாள். என்னுடைய கருத்துக்களுடன் மனம் இசையவில்லையெனினும் அதை வெளியிட்டு மறுத்துரைக்கமாட்டாள். அது எனக்கு வருத்தத்தை அளிக்கும் என்று கருதி மௌனமாகவே இருப்பாள். ஆனால் லக்ஷ்மியின் இதழோரங்களில் நெளியும் கள்ளக் குறு நகையிலிருந்து என் கருத்தை அவள் ஏற்கவில்லை என்பது புலனாகும்.

உடல் நலிவுற்று அவள் படுக்கையோடு கிடந்த நாட்களில் ஒரு நாள் அவள் என்னிடம், 'நான் இறந்தாலும் உங்களை விட்டுப் போக மாட்டேன். நான் உங்கள் அருகிலேதான் இருப்பேன். அதை மறுக்கா தீர்கள்' என்றாள்.

அந்தச் சொற்கள் பல சமயங்களிலும் என் நினைவில் தோன்றும் அது சரி என்றாலும் இல்லை என்றாலும் லக்ஷ்மியின் உருவம் என்னுடைய உள்ளத்திலிருந்து அகலவில்லை. அவள் அணிந்த ஆடைகளிலும், அணி களிலும், கையாண்ட பொருள்களிலும் எனக்கு முன்னைக் காட்டிலும் மிகுந்த பற்று உண்டாயிற்று. அவற்றிலெல்லாம் நான் லக்ஷ்மியைக் கண்டேன். என்னைச் சூழ்ந்து பலர் இருந்தும் நான் தனியனாகவே உணர்ந்தேன்.

நாள்தோறும் லட்சக்கணக்கான பேர் உலகில் இறக்கின்றனர். அது நம்மை பாதிப்பதில்லை. அது ஓர் சாதாரண சம்பவம்தானென்று

எண்ணி நாம் பற்றுக்கொள்ளாமலே உலக நடவடிக்கைகளில் வழக்கப் போல் ஈடுபட்டு நாட்களைக் கழிக்கிறோம். நம்மீது அன்பு செலுத்திய வரைக் காலன் கவர்ந்து செல்லும்போதுதான் மரணத்தின் குரூரத் தன்மையையும் அதனுல் நேரும் இழப்புணர்வையும் நாம் உணர்ந்து கொள்கிறோம். விதியை ஏசுகிறோம். இட்டு நிரப்ப இயலாததோர் அகழ்வு வாழ்க்கையில் நேர்ந்துவிட்டாற் போன்று துயருறுகிறோம். எத்தனையோ மனிதர்கள் சூழ்ந்திருந்தாலும் நாம் தனியாக இருப்பது போன்றதொரு உணர்வு மனதைக் கவ்விக் கொள்கிறது. மற்றவர் கூறும் ஆறுதல் எதையும் அச் சமயம் ஏற்கப் பிடிப்பதில்லை. துயரத்தின் வெம்மையில் உருகி, தனியாக ஓரிடத்தில் அமர்ந்து என்றென்றைக்குமாகப் பிரிந்துவிட்ட அந்த அன்புக்குரியவரின் வடிவை மனதோடு உறையக்கண்டு, கடந்து சென்ற காலத்தைப்பற்றி எண்ணி எண்ணிக் கண்ணீரில் கரைவதிலதான் ஒரு சிறிதேனும் ஆறுதல் தோன்றுகிறது.

எனக்கு நேர்ந்த இந்த ஆற்றொணாத் துயரத்தை எண்ணிப் பார்க்கையில், பேராற்றல் படைத்த அந்த அருளாளனின் கருணை எனக்கு ஏன் கிடைக்காமல் போயிற்றென்று வெதும்பினேன். அது என்னுடைய பலவீன நிலையின் வெறுப்புத்தான். ஈசுவரனின் தீர்மானங்களுக்கு நம்மால் தவறு காண இயலுமோ? அநீதி கற்பிக்க முடியுமோ? காலச்சக்கரத்தின் சுழற்சியில், அந்தப் பேராற்றல் லயம் தவறுததொரு ஒழுங்கில் இயங்குகிறது. அறிவதற்கு இயலாத தத்துவத்தை நம்முடைய சிறு மதி கொண்டு தெளிய முயலுகையில், காரிய-காரணத் தொடர்புப், சம்பவங்களுடைய பொருளும் புரியாமல் மலைக்கிறோம். சாதாரண மனிதர்களுக்கில்லாத சக்தி முனிவர்களுக்கும் ஞானிகளுக்கும் உண்டென்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். நம்மால் அறிய இயலாத பல உண்மைகளை, அவர்கள் தம் தெய்வீக அருளாம் சக்தி கொண்டு அறிந்துகொள்கின்றனர். மனிதனிடம் இல்லாத பல ஆற்றல்களை அற்பப்பிராணிகளிடத்தில் காண்கிறோம். சில ஆண்பட்டுப்பூச்சிகள் நெடுந்தொலைவில் பறக்கும் பெண்பூச்சிகளை மோப்பம் கொண்டறிந்து கொள்கின்றன. இனிப்புப் பண்டங்கள் இருக்குமிடத்தைக் கண்டு கொண்டு ஒரு சிறிதும் வழி தவறாமல் சாரையாகச் செல்கின்றன எறும்பினங்கள். மனிதனிடம் இல்லாத செவி ஈர்ப்பாற்றல், சில பிராணிகளுக்கிருப்பதை ஆராய்ச்சியாளர் கண்டிருக்கின்றனர். ஓரிடத்திலும் நிற்காமல் மூவாயிரம் நாழிகை தொலைவுக்குமேல் பறந்து செல்லக் கூடிய வண்ணத்துப்பூச்சிகள் இருப்பதாக உயிரியல் புலவர்கள் கூறுகின்றனர். நம்மால் புரிந்துகொள்ள இயலாததோர் அற்புத ஆற்றல் பிராணிகளிடம் நிச்சயமாக இருக்கிறது. இதெல்லாம் வாழ்க்கையின் ஆழங் காண இயலாத இரகசியங்களையும், முடிவற்ற பேரருளையும் அல்லவோ விள்ளுகின்றன!

இரவு ஆகாயத்தை நோக்கும்போது, நம் மனதில் தோன்றும் உணர்ச்சிகள் சொல்லிலடங்கா. கோடிக்கணக்கான விண்மீன்களைக் காண்கிறோம். நம்முடைய பார்வையின் சக்திக்கு அப்பாற்பட்ட கோடிக்கணக்கான நட்சத்திரங்களும் இருக்கின்றன. இவையனைத்தும் நம் அற்ப அளவையும், படைப்புத் தத்துவத்தின் பெருமைகளையும், இறைவனின் பேராற்றலையுமல்லவோ எடுத்தியம்புகின்றன!

எனினும், இந்தச் சிந்தனைகள் ஏதும் என் மனதுக்கு அமைதியளிக்க வில்லை. மரணத்தின் இரகசியத்தை அறியத் துழாவுகிறேன்.

வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய-
நவானிக் ருஹ்ணாதி நரோ அபராணி,
ததா சரீராணி விஹாய ஜீர்ணானி,
அன்யானி ஸம்யாதி நவானி தேஹி.

[நைந்த துணிகளைக் கழற்றி எறிந்துவிட்டு மனிதன் புதிய துணிகள் கொள்ளுமாறு போல, ஆத்மா நைந்த உடல்களைக் களைந்து புதியன வற்றை எய்தும்] என்ற கீதைப் பேருரையும் எனக்கு ஆறுதல் நல்க வில்லை. பணியில் என்னால் கருத்தூன்ற இயலவில்லை. எதற்காகப் பணி புரியவேண்டும் என்று தோன்றியது. புத்தகங்கள், நண்பர்கள் வாயிலாகக் கிடைக்காத மன அமைதியை நாடி நான் புதுச்சேரி அரவிந்தாசிரமத்துக்குச் சென்றேன்.

என்னுடைய அன்பு நண்பர் துரைசுவாமி அடிக்கடி அரவிந்தரைத் தரிசிக்கப் புதுச்சேரி செல்வது வழக்கம். அவர்தாம் எனக்கு ஆசிரமத் துக்குச் செல்வதற்கும் அரவிந்தரைத் தரிசிப்பதற்கும் வசதிகள் செய்து கொடுத்தார்.

1925ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் காலையில் நான் புதுச்சேரியை அடைந்தேன். ஒரு நண்பர் தம்முடைய இருப்பிடத்துக்கு என்னைக் கூட்டிச் சென்றார். அன்று காலை பதினொரு மணிக்கு அரவிந்தரைக் காண நேரம் குறித்திருந்தோம். அதற்கு முன்பே நான ஆசிரமத்தை அடைந்தேன்.

அரவிந்த கோஷைப் பார்க்கச் செல்பவர் அவ் விவரம் அருகிலுள்ள போலீஸ் நிலையத்தில் அறிவிக்கவேண்டும். அரவிந்தர் ஒரு புரட்சி யாளர் அல்லவா? தேசிய சிந்தனைகளுக்கப்பால் ஆன்மீக உணர்வுகளில் அவர் ஒன்றிவிட்டாலும் பிரிட்டிஷாரின் சந்தேகம் தீரவில்லை. எனவே, அவரைச் சந்திக்கச் செல்பவர்கள், அது பற்றிய விவரத்தைப் போலீசாரிடம் முன்னதாகக் கூறிவிடவேண்டும். அதற்கேற்ப என் வரவுகுறித்தும் நான் எத்தனை நாட்கள் அங்குத் தங்குவேன் என்பது குறித்தும் முன்னதாகவே போலீசுக்கு அறிவித்திருந்தேன்.

அந்நாள், அரவிந்தரின் இளைய சோதரர் ஆசிரமத்தில் தங்கி இருந்தார். அவர் என்னை அங்குச் சிலருக்குப் பரிச்சயம் செய்துவைத்தார். நான் சிறிதுநேரம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். ஸ்ரீ அரவிந்தரின் முன் செல்வதற்குரிய நேரம் வந்ததும் என்னை அங்கு ஒருவர் கூட்டிச் சென்றார். ஒரு மாளிகையின் மாடிக்கட்டடம் அது. மச்சுப் படி வரையிலும் அவர் என்னுடன் வந்தார். பிறகு என்னை மாடி ஏறிச் செல்லப் பணித்தார். பின்னட்களில் வழக்குக்கு வந்தாற் போன்று, ஆண்டுக்கு ஓர் முறையே அவர் வெளி மக்களைப் பார்ப்பது என்றில்லாததால், நாள்தோறும் பகலுணவு கொண்டபின் சிறிது நேரம் அவர் மாடி வராந்தாவில் வந்தமருவார். அதுதான் எல்லோரும் பார்க்கும் நேரம்.

நான் சென்ற அந்நாளில், அவர் என்னை மட்டுமே காண்பதாக இருந்தார். அதனல், சுமார் அரைமணி நேரத்துக்கும் மேலாக எனக்கு அவருடன் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது.

படிகள் ஏறி வராந்தாவுக்குச் சென்றபோது, வாயிலுக்கு அருகில் ஓர் நாற்காலியில் அவர் அமர்ந்திருந்தார். வேறு யாரும் அங்கு இல்லை. இரண்டு வரிசைகளாகச் சில நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நான் கைகுவித்து அருகில் சென்றபோது, அவர் தம்மருகிலிருந்த நாற்காலியில் அமரும்படி எனக்குச் சைகை காட்டினர்.

அந்நாளில் அவருக்குச் சுமார் ஐம்பது பிராயமிருக்கும். சிறிது பருமனை உடல். முடியும் தாடியும் நன்கு வளர்ந்திருந்த கோலம். ஒரு வெண்மையான ஆடை அணிந்து மேல் வேட்டியினல் மேனியை மூடிக்கொண்டிருந்தார். பெரிதும் அடங்கிய அமைதியான குரலில் ஒவ்வொரு சொல்லாக நிறுத்தி நிறுத்திப் பேசினர். இடையில் ஏதேனும் அழுத்தமாகக் கூறவேண்டி வந்தால் கையால் சைகையாகக் காட்டினர். அமைதியும் ஆழமும் நிறைந்த அந்த முகத்தில் புன்னகை காண்பது அபூர்வமாக இருந்தது. அவரிடம் என்ன கேட்க வேண்டும்? எப்படி உரையாடத் தொடங்க வேண்டும் என்று புரியாமல் நான் சிறிது நேரம் மலைத்தேன். அது சில நிமிடங்கள்தாம். மரணத்துக்கு அப்பாலுள்ள நிலையைப்பற்றி அறியத்தான் நான் துடித்திருந்தேன். மரணத்துடன் எல்லாம் இறுதியை எய்திவிடுகின்றனவா? அல்லது வேறொரு உலகுக்கான வழிதானே அது?

மாண்டவருடைய சடலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியவர் கதைகளை நான் புத்தகங்களில் படித்திருக்கிறேன். அவை நம்பத் தகுந்தவைதாமா? பேய்களைக் காண முடியுமா? இன்னொரு உலகில் இன்னொரு உருவில் சூழலுக்குத் தகுந்தபடி மாறும் பேய்களுக்கு இவ்வுலகில் அவை வாழ்ந்த காலத்தில் அன்பு செலுத்தியவர்களைப்

பற்றிய சிந்தனை தோன்றுமா? நினைவிருக்குமா? அவர்களுடன் மீண்டும் தொடர்பு கொள்ள விருப்பம் இருக்குமோ? இவ்வாறான பல கேள்விகளுக்கும் நான் அவரிடம் தெளிவு வேண்டினேன். ஒரு விளைவுக்கு அவர் விடையளிக்குமுன் இன்னொரு வினை எழுப்பிவிடுவேன். என்னவெல்லாமோ கேள்விகள் கேட்டேன். என்னுடைய சில கேள்விகள், சிறுபிள்ளைத்தனமாக அவருக்குத் தோன்றியிருக்கக்கூடும்.

மரணத்துடன் எல்லாம் இறுதியை எய்திவிடுவதில்லை என்றும், மரணம் ஓர் நிலைமாற்றம்தான் என்றும், சில தனிப்பட்ட நிலைகளில், மரணத்துக்கு அப்பாற்பட்டும் அன்புக்குகந்தவருடன் தொடர்பு கொள்ளுதல் சாத்தியம் என்றும் அவர் என்னிடம் இயம்பினார்.

மரணம் ஒரு நிலைமாற்றம்தான் என்றும், இவ்வுடலை விட்ட பிறகும் வாழ்க்கை வேறொரு வகையில் தொடர்ந்து செல்கிறதென்றும் ஆன்மிகக் கருத்துக்களில் தெளிவு பெற்ற வேறொரு பெரியார் என்னிடம் ஓர் முறை கூறி இருக்கிறார்.

'நான் உங்களுடன் இப்போது உரையாடுவது போன்று பேயுலகிலுள்ளவருடன் என்னால் பேசமுடியும்' என்று அவர் என்னிடம் கூறியபோது, என்னால் அதை இயலாது என்று மறுத்துக் கூற முடியவில்லை. கூறத்துணிவில்லை எனினும் நம்புவதற்கும் கடினமாக இருந்தது.

ஸ்ரீ அரவிந்தருடன் நான் விடைபெற்றுத் திரும்பிய பிறகு, ஒரு சீடர் சில மலர்களைக் கொணர்ந்து அவர்முன் வைத்துத் தொழுது சென்றதைக் கண்டேன். ஸ்ரீ அரவிந்தரின் முன்னிருந்தகன்று கீழிறங்கி வருகையில் என்னென்ன மாதிரியான எண்ணங்களும் உணர்வுகளும் என் உள்ளத்தில் நிறைந்திருந்தன என்பதெல்லாம் இப்போது எனக்கு நினைவில்லை. ஆனால், அதாலேவில் ஏதோ ஓர் மங்கிய ஒளி புலனுணர்ப்போலிருந்தது. உண்ணவும் உறங்கவும், வாங்கவும் கொடுக்கவும், வெறுக்கவும் அன்பு செய்யவும் மட்டுமேதான் இந்த வாழ்க்கை என்பதல்ல. அவற்றுக்கெல்லாம் அப்பால், அவற்றைக்காட்டிலும் மேலானதோர் பொருள், ஓர் குறிக்கோள் இருக்கிறதென்று நான் உணர்ந்துகொண்டேன்.

அக்காலத்தும், அதற்குப் பிறகும் மரணத்துக்கு அப்பாற்பட்ட நிலை குறித்து அறியும் ஆவல் எனக்கு மேன்மேலும் வளர்ந்தது. அத்தகைய விஷயங்களைப்பற்றிய பல நூல்களை நான் படித்தேன். 'மரணத்துக்குமுன்' — 'மானம் நேரும்போது' — 'மரணத்துக்குப் பிறகு' என்ற தலைப்புக்களில் ஒரு பிரஞ்சு நூலாசிரியன் எழுதியிருந்த மூன்று நூல்கள் என்னை வெகுவாகக் கவர்ந்தன. அநுபவங்களையும் நிகழ்ச்சிகளையும் ஆதாரமாகக் கொண்டு விஞ்ஞான ரீதியில் எழுதப்பெற்ற நூல்கள் அவை. வெறும் கருத்துக் குவியல்களல்ல. இங்கிலாந்திலிருந்து வெளியான 'ஸ்பிரிச்சுவலிஸ்ட்' என்ற வார இதழை நான் வழக்கமாகப்

படித்தேன். நம்புவதற்குக் கடினமான பல விஷயங்கள் அதில் இருந்தாலும், என்னை ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டிய சில நிகழ்ச்சிகள் குறித்தும் நான் அதில் படித்தேன்.

விவேகானந்த அடிகளின் 'சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்' என்ற வரிசையின் ஏழு நூல்களை நான் பல முறைகள் படித்திருக்கிறேன். இப்போதும் அவ்வப்போது மனதில் உற்சாகத்தைத் தூண்டிக்கொள்ள அவற்றைப் பாராயணம் செய்வேன். ஆன்ம அமைதியை நாடுபவர்களுக்குப் புகலளிக்கும் அருமையான நூல்கள் அவை. ஆன்மீக விஷயங்களை அறிவைச் சார்ந்தும், நடைமுறைக்கு உகந்ததாயும், சாதாரண மக்களுடைய மனங்களில் பதியும்வண்ணமும் எடுத்துரைப்பதில் விவேகானந்தர் அசாதாரணத் திறனுடையவர் என்று புகழ் பெற்று விளங்கியவரல்லவா?

பகவத் கீதை அளிக்கும் அரும்பெரும் ஆன்மீகப் பொருள் விளக்கங்களிலும் நான் ஆறுதல் காண முயன்றேன். கீதையை நான் நாள் தோறும் பாராயணம் செய்பவனல்ல. நெருக்கடியான சந்தர்ப்பங்களில், துன்பங்களுக்கு ஆறுதலாக, சில பகுதிகளை மட்டும் தோந்து படிப்பேன்.

நமக்குத் தெரியாதவற்றையோ, தெரிந்துகொள்ள கடினமாக இருப்பவைகளையோ, அல்லது தெரிந்துகொள்ள முடியாதவற்றையோ குறித்து திட்டமாகக் கருத்துக்களை வெளியிடுவது ஓர் வகையில் துணிச்சலே. நம்முடைய அனுபவ எல்லைக்குட்படாத விஷயங்களைக் குறித்து வேறு எவரேனும் கூறிக் கேட்கையில், அது முட்டாள்தனமென்றோ, நடக்கக் கூடாததென்றோ கூறுவது சரியல்ல. நடக்க முடியாதவை என்று ஒரு காலத்தில் கருதியிருந்த பல செயல்களை இப்போது நடக்கக்கூடியவை என்று தெளிந்திருக்கிறோம். இயற்கைக்கு விரோதமென்று கருதியிருந்த சில விஷயங்களை இயற்கையின் போக்குக்கு உகந்தவையே என்று இப்போது உணரத் தலைப்பட்டிருக்கிறோம்.

புகழ்பெற்ற விஞ்ஞானி கோப்பர்னிகஸ்ஸின் காலத்துக்கு முன்பு, சூரியன் பூமியைச் சுற்றிக்கொண்டிருக்கிறதென்றுதானே உலகம் நம்பி இருந்தது! 1543ஆம் ஆண்டில் கோப்பர்னிக்கஸ் தம் கண்டுபிடிப்பை அறிவித்தபோது, அவ்வுண்மை, உலகைப்பற்றி நாம் கொண்டிருந்த கருத்துக்குப் புரட்சிகரமான மாற்றத்தைத் தோற்றுவித்தது. சூரியன் அசைவதில்லை என்றும், பூமிதான் சுற்றி வருகிறதென்றும் கோப்பர்னிக்கஸ் விவாதித்தபோது, மக்கள் அவர்மீது அசட்டுத்தனமான கருத்துக்களைப் பரப்புகிறாரென்று குற்றம் சாட்டினர். அதுபோன்றே, தத்தம் புதிய புதிய கண்டுபிடிப்புக்களால் உலகுக்குப்

பல நன்மைகளை வழங்கிய கலீலியோ, ப்ரூனோ முதலிய விஞ்ஞானிகள் தங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிட்டதற்காக, அந்நாளைய அதிகார வர்க்கத்தினரின் கடுமைகளை அநுபவிக்கவேண்டி இருந்தது. இன்று, அவர்களுடைய கருத்துக்களை விஞ்ஞானத் தத்துவங்களாக உலகம் கொண்டாடுகிறது.

எத்தகையதோர் ஐயத்துக்கும் இடமின்றி மரணத்துக்கு அப்பாலுள்ள நிலைகுறித்து ஒருநாள் அறிவதற்கியலுமாக இருக்கும்! இன்று அந்த நிலைக்கு நாம் முன்னேறியிருக்கவில்லை. அநுபவ மிகுந்த விஞ்ஞானிகளின் கூற்றை அறிவுத்தெளிவுடன் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். சில நம்பிக்கைகளின்மீது ஏற்படும் ஐயங்களைத் தீர்த்துக்கொள்ள இயலாத காரணம்கொண்டு, அவற்றை மறுப்பது சரியல்ல. அவற்றுடன் இணக்கமாகச் சோதனை செய்தும், ஆழ்ந்து சிந்தனை செய்தும் நோக்குதல் நன்று.

24

மலேயா பயணம்

1925ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நான் மீண்டும் சென்னையில் தொழில் செய்யத் தொடங்கினேன். நான்கு ஆண்டுகள் தொழிலை நிறுத்திவிட்டு, மீண்டும் தொழில் துவங்குவதனால், கட்சிக்காரர்கள் வருவதற்குச் சில நாட்கள் பிடிக்காதா? ஆனால் பொறுமையுடன் காத்திருக்கத் தேவையான பொருளாதார நிலைமை என்னிடமில்லை. 'மறுபடி இதைவிட்டு எப்போது ஓடிவிடுவாரோ? மேனனுக்கு பாலிடிக்ஸ்தான் முதல்படி' என்று ஒரு நண்பர் என்னைப்பற்றிச் சொல்வார். அப்படி ஓர் எண்ணம்வேறு பலருக்கும் உருவாகியிருந்தது. அதுவேறு எனக்கு இடையூறாக இருந்தது.

அன்றாடச் செலவுக்கே திண்டாடுபவர், பொதுப்பணி செய்யப் புறப்படலாமா? அதனால் தொழில் நன்றாகப் பிடிக்கும் வரையிலும் கருத்தைத் தொழிலில் பதிக்க உறுதிகொண்டேன். 'வேண்டாத வம்புகளில் தலைகொடுக்காமல் பிராக்டீஸ் தொடர்ந்திருந்தால், இப்போது எத்தனை மேன்மையாக இருந்திருக்கலாம்! இனியேனும் இங்குமங்கும் ஓடாமல் அவனவன் வேலை என்று பார்க்கவேண்டும்!' என்று என்னுடைய நலம் விரும்புவோர் சிலர் அறிவுரை நல்கினர்.

எனக்குப் பெரிய குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு இருந்தது. இரண்டாவது முறையாக நான் மணந்துகொண்டேன். லக்ஷ்மியின் சகோதரி அம்முவையே நான் மறுமணம் செய்து கொண்டேன். அம்மு அந்நாள் கைம்மை நிலையில் இருந்தாள். இரண்டு குழந்தைகளும் உண்டு. செல்லப்பன், கொச்சுண்ணி என்று பெயர். அம்முவின் சாந்தமான குணமும், இரக்க சிந்தையும், என்னுடைய புதிய குடும்ப வாழ்க்கையில் நலமும் இனிமையும் கூட்ட வல்லவையாக இருந்தன. என் ருலும், அன்ருடப்பாட்டுக்கேனும பொருள் வேண்டாமா? அதற்கே கடினமாக இருந்தது. 'கடன் கேட்கக் கூடாது; கொடுக்கவும் கூடாது' என்ற ஷேக்ஸ்பியரின் அறிவுரை செயல் முறைக்குகந்ததென்று எனக்குத் தோன்றவில்லை. கடன் வாங்காமல் வாழும் மனிதன், புண்ணியவான் என்பதில ஐயமில்லை. தேவை என்று வரும் ஒரு நண்பனுக்குக் கடன்கொடுத்து உதவுவது அதிலும் மேலான பேறு. நா உலர வருபவனுக்கு நீர் கொடுக்கும்போது ஏற்படும் நிறைவை அத்தருணத்தில் உணரலாம். அதற்கு இயன்றிராத நிலையில் பல சந்தர்ப்பங்களில் நான் வெதும்பியிருக்கிறேன். ஆனல் கடன் கேட்பது, அப்படியல்ல. இத்துணைச் சோர்வுக்கும் சிறுமைக்கும் உள்ளாக்கக்கூடிய செயல் வேறென்றுமில்லை. எளியர்க்கருளாளனை இறைவன் என்முன் தோன்றி ஏதேனும் வரம் வேண்டுமா என்று கேட்டால், 'ஐயனே, என்னைக் கடன்கேட்கும் நிலையிலிருந்து மீட்டருள்வீர்' என்பேன். இந்நாள் வரை, எத்தனை முறைகள் நான் இச் சிறுமையை அநுபவித்துவிட்டேன்! ஒரு கடன்காரனுகவே இவ் வாழ்க்கையை நான ஓட்டவேண்டியிருக்குமோ? யாருக்கும் ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை என்ற நிறைவு எனக்கு எப்போதேனும் வருமா? நான் பல முறைகளில் இப்படி எண்ணமிட்டிருக்கிறேன்.

சென்னையில் நான் தொழில் புரிந்துகொண்டிருந்த அந்நாளில், ஒரு சமயம், பினங்கில் நெடுங்காலமாகத் தொழில்செய்து பெயரும் பொருளும் ஈட்டிய பாரிஸ்டர் பி. கே. நம்பியார் என்னைக் காண வந்தார். அவர் ஒருகாலத்தில் சென்னையில் தொழில் புரிந்தவர்தாம். பின்னர் பினங்குக்குச் சென்ருர். அங்கே தொழில் செய்துவரும் அவர் அவ்வப்போது சென்னை வருவார். அவ்வாறு வந்த சமயத்தில்தான் அவர் என்னைக் கண்டார். மலேயாவில் தொழில் புரியும் பாரிஸ்டர் களைப் பற்றியும், அங்கு நிலவும் தொழில்முறைகள் குறித்தும் அவர் என்னிடம் கூறினர். அங்கு வருவதாக விருப்பமிருந்தால், தேவை யான உதவிகள் செய்து தருவதாகவும் நம்பியார் தெரிவித்தார். அப்போதைய நிலையில் நம்பியாருடைய வரவு எனக்குப் பேரருளாகத் தோன்றியது. அன்றைய பேச்சு, என்னுள் மலேயாவுக்குச் செல்லும்

எண்ணத்தைத் தூண்டிவிட்டது. அப்போது நான் எதையும் உறுதி செய்துகொண்டுவிடவில்லை. யோசனை செய்த பிறகு, மேலும் விவரங்களறிய, அவருக்குப் பிறகு எழுதுவதாக மறுமொழி கூறினேன். நம்பியார் சின்னட்களிலேயே பிறகு திரும்பிவிட்டார்.

பி. கே. நம்பியாரைக் காண்பதற்குச் சில நாட்கள் முன்னர், ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒருநாள் அதிகாலையில், ஒரு சந்நியாசி என் வீட்டுப் படி ஏறிவந்தார். முடியும் தாடியும் கிழிந்த காவியுடையுமாக இருந்தார் அவர், கையில் ஓர் தண்டமும் கொண்டிருந்தார். நான் இரண்டணாவை எடுத்து அவரிடம் அளிக்க முற்பட்டேன். அவர் அதைப் பெற மறுத்தார். தமக்குத் துணிதான் வேண்டுமென்றார். அவர் விரும்பியதை நான அளித்தேன். அப்போது, அவர் அருகிருந்த செடி ஒன்றிலிருந்து ஓர் இலையைப் பறித்து என் கையில் வைத்தார் என் கையில் நான் பெற்றது, திருநீறாக இருந்தது. நான் பெருவியப்புடன் அவர் முகத்தை நோக்கியபோது, என்னுள் ஏதோ ஓர் ஆறுதல் தோன்றிறைற்போன்று இருந்தது. 'நீங்கள் குடும்பத்துடன் கப்பலேறி அடுத்த சில மாதங்களில் இந்நாட்டை விட்டுச் செல்வீர்கள்' என்று மொழிந்தார். நான் மலேயாவுக்குப் புறப்படுவதற்கு நாலைந்து மாதங்களுக்கு முன்பு இச்சம்பவம் நடந்தது. துறவியைக் கண்டபோது மலேயாபற்றிய சிந்தனையே எழவில்லை. இரண்டு மூன்று மாதத்துக்குப் பின் மலேயா செல்ல நான் நிச்சயித்தபோது, துறவியின் வாய்மொழி எனக்கு அற்புதமாகவே தோன்றியது.

சென்னையில் இரண்டாம் முறையாக நான் தொழில் தொடங்கி ஒரு வருடம் சென்றதும், என்னுடைய மூத்தமகள் செல்லம்மா நோய்வாய்ப் பட்டாள். தாயின் நோயே அவளையும் பற்றி இருந்தது. பத்துமாத காலம் நோய்ப்படுக்கையில் இருந்த அவளுக்கும் டாக்டர் கேசவ பை தான் சிகிச்சை செய்தார். ஆயுர்வேத சிகிச்சையும், இயற்கை முறை கூனி சிகிச்சையும் செய்து பார்த்தோம். ஒரு பயனும் காணவில்லை நாளுக்குநாள் அவள் நோயில் உருகிக் கரைந்து சக்கைபோலானாள். சிகிச்சைச் செலவுக்குக் கையில் பொருளின்றி நான் அல்லலுற்றுத் தவித்தது கண்டு ஒருநாள் நான் அவளருகில் இருக்கையில் கேட்டாள் : 'இதற்கெல்லாம் என்ன பொருள் அப்பா? நான் மாளாத நோயுடன் கிடந்து தவிப்பதற்கும், நீங்கள் இப்படி அல்லல்படுவதற்கும் ..இந்த அனுபவங்களுக்கு நாம் என்ன பாவம் செய்தோம் அப்பா!'

மறுமொழி கூறமுடியாத கேள்விகள் —பலமுறைகள் என்னையே நான் கேட்டுக்கொண்ட கேள்விகள்.

'குணம் காண முடியாத நோயல்லவோ, மகளே? நீ ஏனிப்படி எல்லாம் கேட்கிறாய்?' என்றுதான் என்னால் ஆறுதல் கூறமுடிந்தது.

தான் மரணத்தை நெருங்கிக்கொண்டிருப்பதான உணர்வு அவளுக்குத் தோன்றியது. அதைப்பற்றி அடிக்கடி கூறுவாள். தன்னுடைய உடலை மயானத்துக்கு எப்படிக் கொண்டு செல்ல வேண்டும் என்பதைக்கூட அவள் திட்டமிட்டுக் கூறலானாள். அப்போதெல்லாம் நான் அவள் கருத்தை வேறு பக்கம் திருப்ப முயன்றேன்.

'அத்தாழச்சிற கிணற்று நீர் அருந்தவேண்டும்' என்று ஒரு நாள் அவள் தன் ஆசையை வெளியிட்டாள். ஓலவக்கோட்டுக்கு அருகில் இருந்த எங்கள் இல்லத்தின் பெயர்தான் 'அத்தாழச்சிற'. செய்தியை நான் உடனே ஓலவக்கோட்டுக்கு அறிவித்தேன். மறுநாளே காலையில் ஒரு கண்ணுடிக்குப்பியில் அந்த நீரை ஊற்றி எடுத்துக்கொண்டு ஒரு ஆள் சென்னைக்கு வந்தான். அதைத் தீராத ஆர்வத்துடன் பருகினாள். இரண்டு மணி நேரம் சென்றதும் குருதி குழம்ப வாந்தி எடுத்தாள். மிகவும் நலிந்து வெகுநேரம் மயங்கிய நிலையில் கிடந்தாள். நண்பகல் நேரத்தில் முகத்தில் சிறிது தெளிவு கண்டோம். சற்றே ஆறுதல் கொண்டு நாங்கள் உணவுகொள்ளச் சென்றோம். பகல் முழுவதும் அதே நிலையில் இருந்தாள். இரவு எல்லோரும் படுக்கும் வரையிலும் எதுவுமே தோன்றவில்லை. படுப்பதும், எழுந்து அமர்வதும், நடப்பதுமாக அவளுடைய கட்டிலின் அருகிலேயே நான் பொழுதைக் கழித்தேன். அம்முவும் அவள் அருகிலேயே இருந்தாள். இரவு ஒரு மணி அடித்ததும் அவள் என்னைக் கூப்பிட்டாள். குழந்தைகள் எல்லோரையும் எழுப்பிவரச் சொன்னாள். எல்லோரும் வந்தார்கள். ஒவ்வொருவராகப் பார்த்தாள். 'அப்பா, நான் இதோ போகிறேன்!' என்றாள். உரக்க அச் சொற்களைக் கூறிக்கொண்டு செல்லம்மா, எங்களை எல்லாமவிட்டுப் பரலோகம் புகுந்தாள்.

மரணம் ஒரு மாறும் நிலைதான் என்றாலும் என்னுடைய அன்பு மகள், அவள் படுத்திருந்த இடத்தின் வெறுமையைக் காண்கையில், அந்த நம்பிக்கை எனக்கு மன-அமைதி நல்கவில்லையே! வேறு யாருக்கும் நேராதது எனக்கு நேர்ந்துவிடவில்லை. வாழ்க்கைப் பயணத்தில் அன்புக்குரியவர்கள் பலரையும் வழியில் பிரிந்து செல்லவேண்டியிருக்கும் பயணத்தை எந்த நிலையிலும் தொடர்ந்தே யாகவேண்டும். வேறு வழியில்லை. இறக்கும்போது அவளுக்குப் பதினெட்டே வயசுதான். 'நான் சின்னவள்தானே? எனக்கு வாழ்க்கையே இப்போதுதானே தொடங்குகிறது? பின், இப்போது அது முடிவை நோக்கிப் போகிறதே அப்பா!' என்று அவள் ஒருநாள் கேட்டதை நான் எவ்வாறு மறப்பேன்?

''ஆண்டவனின் அருகாமையை நாடுங்கள். அவர் காட்டும் ஒளியில் இதயம் மலரட்டும். அந்த மகாசக்தியின் பிணைப்பில் நாளுக்கு நாள்

உறுதி கூடட்டும். உட்காரும்போதும், நடக்கும்போதும், படுக்கும் போதும், அது நினைவிலிருந்து நீங்காமலிருக்கட்டும். மறையாதிருக் கட்டும். எந்த இன்னலையும் எதிர்நோக்கும் திண்மையை அது உங்களுக்கு அருளட்டும்'' என்ற அருளாம் வாக்குகளை உன்னி நான் அமைதி காண முயன்றேன்.

சென்னையை விட்டுச் செல்லும் வேகம் என்னை உந்தித்தள்ளியது. மலேயாவில் இருந்த வேறு சில நண்பர்களுக்கும் நான் அங்கு நிலவும் விவரங்களைத் தெரிவிக்கக் கோரியிருந்தேன். அவர்களும் நான் அங்கே வருவதற்கு உற்சாகமளித்தனர். மலேயாவுக்குச் செலவது உறுதியாகி விட்டது. ஆனால் செல்வதற்குரிய வழி ஏதுமில்லாமலே உறுதி செய்து கொண்டேன்! அன்றுடச் செலவுக்கே வருந்தித் திணறும் நான், எனக்கும் குடும்பத்தினருக்குமான கப்பல் செலவுக்கு எங்கிருந்து பணம் திரட்டுவேன்? அவர்களை ஊரில் விட்டுவிட்டுத் தனியே செல்வதற்கும் எனக்கு மனமில்லை. பணத்துக்குத் தட்டு வரும்போது, கடன் கொடுக் கவும் மற்றவர் தயங்குவர். இச் சமயத்தில் அளவிட இயலாத வெறுப்பும் விரக்தியும் தோன்றியதென்றால் குற்றமில்லையே? எத்தனை விதமான பேச்சுக்களையும், சாக்குப்போக்குகளையும், அறிவுரைகளையும் நான் செவிமடுக்கவேண்டி இருந்தது? எனினும், இந்த நெருக்கடி நிலைமையிலும், எனக்கு உளம்கனிந்து உதவிய ஒன்றிரண்டு நண்பர்களை, குறுப்பத்துக் குட்டிகிருஷ்ண மேனனையும், காரூர் நீலகண்டன் நம்பூதிரிப்பாடையும் என்னால் மறக்க இயலாது. வீட்டுப் பண்டங்களை விற்றதன் வாயிலாகக் கிடைத்த பணம், கடனாகப் பெற்ற தொகை எல்லாமாகக் கப்பல் சீட்டுக்கும், வழிச் செலவுகளுக்கும் போதுமானதாக இருந்தது.

1927ஆம் ஆண்டு ஆகஸ்ட் பத்தொன்பதாம் தேதி, குடும்பத்துடன் நான் சென்னையில் கப்பல் ஏறினேன். குட்டிகிருஷ்ண மேனனும், வேறு இரண்டு மூன்று நண்பர்களும் எங்களை வழியனுப்ப சென்னைத் துறை முகத்துக்கு வந்திருந்தனர். ஒரு இடத்தில் நமக்கு ஏற்படும் அநுபவங் களைப் பொறுத்தே அந்த இடத்தின்மீது விருப்போ வெறுப்போ ஏற்படுகிறது. சென்னையில் எனக்கு ஏற்பட்ட துயர அநுபவங்களினால் தான் போலும், அந்த இடத்தைவிட்டு அகலுகையில் எனக்கு வேதனை தோன்றவில்லை. மாலை நான்கு மணியளவில் கப்பல் துறையிலிருந்து நகர்ந்தது. சென்னை விலகி விலகித் தொலைவில் சென்றது. கரை கண்ணிலிருந்து மறையும் வரையிலும் நாங்கள் மேல்தட்டில் நின்று அதைப் பார்த்தோம்.

அந்தக் கப்பலில் ஏராளமான தொழிலாளர் இருந்தனர். மலேயா வுக்குச் செல்லும் எல்லாக் கப்பல்களிலும் அவர்கள் இருப்பார்கள்.

அவர்கள் உட்காரவும், படுக்கவும், உணவு கொள்ளவும் வசதியில்லாத நிலையில்தான் பிரயாணம் செய்தனர். கப்பல் அதிகாரிகளுடைய பேச்சும் அவ்வாறுதானிருந்தது.

பல்வேறு நாடுகளுக்குப் கூலிப் பிழைப்பை நாடி நம் நாட்டிலிருந்து சென்றவர் பலர். வெள்ளையருக்கு உடைமையாக இருந்த தோட்டங்களில் வேலை செய்வதற்கு அவர்கள் தேவையாக இருந்தனர். அதற்காகவே மலேயா, இலங்கை, மொரீஷஸ், மேற்கிந்தியத்தீவுகள், ஃபிஜி, தென்னப்பிரிக்கா ஆகிய இடங்களில் கூலிவேலை செய்ய வந்து இந்தியர்களைக் கூட்டிச் சென்றனர். அது நம் நாட்டின் மக்கள் பெருக்கத்தைக் குறைத்து, செல்வம் சேர்க்க உதவியிருக்கலாம். ஆனால் நமது தேசிய மதிப்பையும், நாட்டுப் பற்றையும் நலியச் செய்வதற்குக் காரணமாயமைந்தது. இந்தியர்கள் கூலிக்காரர்கள் என்று வெளி நாட்டார் நம்மைப்பற்றி ஒரு பொது அபிப்பிராயம் கொள்வதற்கும் அது இடமளித்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பல நாடுகள் சுதந்திரம் பெற்றதும், ஆங்காங்கிருந்த இந்தியர்களுடைய பிரச்னை, நமக்கும் அந்நாட்டவருக்கும் பெரிய தலைவலியாக உருவெடுத்தது. அது இன்னும் தீர்ந்தபாடிலலை.

ஒய்வுக் கெடு தீர்ந்து மலேயா திரும்பும் சில இந்திய அதிகாரிகளும் அந்தக் கப்பலில் இருந்தனர். அவர்களுடன உரையாடியதில் இருந்து, மலேயாவில் நன்முகவே வாழ்க்கை நடத்தமுடியும் என்று தோன்றியது. சென்னை வாசத்தின் துயர அநுபவங்களின் நினைவுகள் மங்கலாயின. என்றாலும், தனிமையில் பலவாறான எண்ணங்கள் தோன்றின. சில சமயங்களில் உற்சாகமூட்டக்கூடிய எண்ணங்கள்; சில சமயங்களில் துன்பகரமான நினைவுகள். நண்பர்களுடன் நெருங்கி ஒன்முகப் பழகிப் பேசுவதற்குக் கப்பல் பயணம் வாய்ப்பளிக்கிறதெனறாலும், தனிமையில் அமர்ந்து சிந்தனைக்குத் தூண்டும் சந்தர்ப்பமும் கப்பல் பயணத்தில் ஏற்படுகிறது.

காலையில் கடலில் எழுமபி மேலே உயரும் இளஞாயிற்றின் மனங்கவரும் உற்சாகக் காட்சியும், அந்தி நேரத்தில் ஆழ்கடலில் அமிழும் மாலைச்சூரியனின் மங்கும் கதிர்களும் விவரிக்க இயலாத உணர்வுகளை மனதில் கிளர்த்துகின்றன. அலைகள் அணியணியாகச் சந்திரனின் ஒளிக் கிரணங்களில் முட்டி எழும்பி விழும் காட்சியைக் கண்ணுறும் மகிழ்ச்சியுடன், ஆகாயத்தில் மின்னி ஒளிரும் கோடானுகோடி விண்மீன்களை நோக்கிக்கொண்டிருக்கும் பரவச அநுபவமும் கூடுகின்றன.

சென்ற காலத்தைப்பற்றிய சிந்தைகள் ஒவ்வொன்முக என் மனதில் உயிர்பெற்றன. எனக்கு நாற்பத்தோரு வயதாகிவிட்டது, என்றாலும், பிறர் உதவியின்றி நானும் குடுமபமும் வாழ்வதற்கான பொருளை

நான் தேடவில்லை. என்னுடைய வயசுக்குப் பல நண்பர்கள் நல்ல நிலையிலிருக்கின்றனர். நான் கடனே மட்டுமே தேடிவைத்திருக்கிறேன், எதிர்காலத்தைப்பற்றிய கவலை ஏதுமின்றிச் சுகமாகத் தொழில்புரிந்து கொண்டிருக்க வேண்டிய வயசில், புதிய வாழ்க்கை தொடங்க மறு நாட்டுக்குப் புறப்பட்டிருக்கிறேன். இது என்னுடைய விதி. வாழ்க்கையைப் பயன்படுத்திக் கொள்ள மறுத்தேன். அதற்கான தண்டனையை நான் அநுபவித்துவிட்டேன். பொருளாதார சுதந்திரம் பெறுவதற்குத்தான் முதலில் முயற்சி செய்ய வேண்டும். அதன்றி வேறெதும் செய்யமுடியாது. இனியேனும் முயன்று சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று உறுதி பூண்டேன்.

ஆனால் இதுவரையிலும் வாழ்ந்த வாழ்வு தோல்விக்குரியதென்று மனம் ஒப்பவில்லை. முன் யோசனை இல்லாதவனாக இருக்கலாம். ஆனால், வாழ்க்கையை வீணாக்கிவிட்டதாகக் கொள்ள முடியுமா? பொருளைத் தேடும் விஷயத்தில் தோல்விதான் கண்டிருக்கிறேன். ஆனால் வாழ்க்கையின் வெற்றி தோல்விகளைப் பொருள்தான் நிர்ணயிக்கிறதா?

ஒரு நிலையில் பார்த்தால், துயர அநுபவங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவை என்றே கருதுகிறேன். தன்னம்பிக்கையூட்டுவதற்கும் ஆண்மையைப் பெருக்கிக் கொள்ளவும் அந்த நிலை வழிகோலுகிறது. ஆன்மீக உணர்வை வலியுறுத்துவதற்கும் அது ஒரு நல்லருளாகவே இசைகிறது. மனச்சாட்சிக்குத் துரோகமின்றி வாழ்க்கை நடத்த முடியுமென்றால், விதியின் கடுமையான வழிகள் அவ்வளவுக்குப் பொறுக்க இயலாததாகத் தோன்றுவதில்லை. துயர அநுபவங்களுடன் போராடிக்கொண்டு, வாழ்க்கையில் வெற்றி கண்ட பலருடைய வரலாறுகளை நான் நினைத்துக்கொண்டேன். வாழ்க்கையில் தோல்வி என்பதே நம்மில் மறைந்து கிடக்கும் ஆற்றலை இயன்ற அளவுக்குப் பயன்படுத்தாததனால்தானே? நம்மில் பலரும் எப்படியேனும் வாழ வேண்டும் என்றுதான் ஆர்வம் கொண்டிருக்கின்றனர். வாழ்க்கையை ஒரு கடமையாக நாம் கருதுவதில்லை. அதற்கொரு லட்சியமில்லை; தீர்மானமில்லை; அரிய குறிக்கோள் என்ற அவாவுமில்லை. ஆனால், லட்சியமும், கடமையுணர்வும், குறிக்கோளை அடையும் ஆர்வமும் உடையவர்களதாம் உலகை உன்னத நிலைக்கு உயர்த்தி வந்திருக்கின்றனர். இன்று நாம் அநுபவிக்கும் பல நலங்களுக்கும், வசதிகளுக்கும் அவர்களே காரணமாக இருப்பவர்கள்.

ஆகஸ்ட் இருபத்தைந்தாம் தேதி, கப்பல் ஸ்வெட்டன்ஹாம் துறையை அடைந்தது. முன்னதாகவே நிச்சயித்திருந்தபடி, பினாங்குக்குச் செல்லவில்லை. பி. கே. நம்பியார் உடல் நலம் குன்றிப் படுத்திருந்தார். அதனால் கோலாலம்பூரில் தொழில் புரிந்து

கொண்டிருந்த வீராசாமி என்ற பாரிஸ்டருக்கு அவர் என்னைப்பற்றி எழுதியிருந்தார். வீராசாமியுடன் சேர்ந்திருந்த ஜி. கே. நாராயணன் என்ற பாரிஸ்டரைச் சென்னையிலேயே எனக்கு அறிமுகம் செய்து வைத்திருந்தார். அவர் என்னைத் தம்முடன் சேர்த்துக்கொள்வதாகக் கூறினர். அதனால்தான் கோலாலம்பூருக்குக் கிளம்பினேன். ஜி. கே. நாராயணன் ஸ்வெட்டன்ஹாம் துறையில் என்னை வரவேற்க வந்திருந்தார். கப்பலிலிருந்து இறங்கியபோது என்னிடம் பதினைறு ரூபாயே இருந்தது. அதை மாற்றிப் பத்து டாலராக்கிக்கொண்டு நானும் குடும்பத்தினரும் கோலாலம்பூரிலுள்ள அவருடைய இல்லத்துக்குச் சென்றோம். மலேயா நாட்டில் புதிய வாழ்க்கை தொடங்கலானேன்.

புதிய வாழ்க்கை

அந்நாளைய மலேயா இந்நாள் காணும் மலேயாவிலிருந்து மிகவும் வேறுபட்டிருந்தது. பினாங்கு, மலாக்கா, சிங்கப்பூர் ஆகிய பிரதேசங்கள் நேர்முகமான பிரிட்டிஷாரின் ஆளுகைக்குட்பட்டிருந்தன. 'ஸ்ட்ரேட்டட் செட்டில்மெண்ட்ஸ்' என்று அவற்றைக் குறிப்பிட்டார்கள். அவற்றின தலைநகர் சிங்கப்பூர். ஒன்பது 'ஸ்டேட்'கள் மலேயாவிலிருந்தன. 'பேராக்', 'ஸிலாங்கூர்', 'நிகரீ ஸெம்பிலான்', 'பஹாங்' ஆகிய நான்கு ஸ்டேட்கள் ஒரு ஆட்சிக்குட்பட்டிருந்தன. அதை 'எஃப்.எம்.எஸ்.' என்று குறிப்பிட்டார்கள். அந்த ராஜ்யங்களின் தலைநகர் கோலாலம்பூர். இந்த நான்கு இடங்களிலும் பிரிட்டிஷார் சுல்தான்களுடைய பெயரில் ஆட்சி புரிந்தனர். எஞ்சிய ஐந்து ஸ்டேட்களில், 'ஜோஹோர்', 'கெலந்தான்', 'பேர்லிஸ்', 'ட்ரெங்காநு', 'கெடா' ஆகிய இடங்களில் சுல்தான்களே ஆட்சி புரிந்தனர். ஒவ்வொரு 'ஸ்டேட்'டிலும் பிரிட்டிஷ் அதிகாரி இருந்தார். ஆலோசகர் என்ற பெயரில் அவர் இருந்தாலும், உண்மையில் அவரே ஆட்சியாளர். இவ்வாறு மூன்று வகை ஆட்சி முறை அந்நாளைய மலேயாவில் நிலவிவந்தது. இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு, மலேயா ஸ்டேட்கள் ஒரு ஃபெடரேஷனையிற்று. கோலாலம்பூர் அதன்

தலைநகர். இப்போது மலேயாவும் சிங்கப்பூரும் இரு வெவ்வேறு ராஜ்யங்கள்.

சுமார் அறுபது லட்சம் மக்களைக் கொண்ட மலேயாவில் நாற்பத்து நான்கு சதவிகிதம் மலேயாக்காரர்களும், முப்பத்தெட்டு சதவிகிதம் சீனரும், பதினேழு சதவிகிதம் இந்தியரும் ஆவர். எஞ்சியவர்களில் ஐரோப்பியரும் மற்ற இனத்தினரும் உட்பட்டவர்கள். அங்குள்ள இந்தியர்களில் நூற்றுக்கு எண்பத்தைந்து பேர் ரப்பர் தோட்டங்களிலோ, நகரமன்றங்களிலோ, பொதுப் பணித்துறையிலோ பணி புரிபவர்கள். மற்றவர்களில் சிறு அதிகாரிகள், எழுத்தர், ஆசிரியர், டாக்டர், பாரிஸ்டர், வியாபாரிகள் எல்லாரும் இருந்தனர். பொருளாதார ரீதியாக, மலேயா மிகவும் வளர்ச்சியடைந்ததோர் நாடு. காடாகக் கிடந்த இடங்களில் நல்ல சாலைகளும், சிறப்பான கட்டடங்களும், மற்ற வசதிகளும் தோன்றிவந்திருக்கின்றன. அக்காலத்தில் மலேயாவில் தேசீய உணர்வென்று குறிப்பிடும் வகையில் மக்களிடையே மலர்ச்சி ஏதும் ஏற்பட்டிருக்கவில்லை. இந்தியரில் பலரும், தொழிலும் வியாபாரமுமாக நாட்களைக் கழிப்பவர்களாகவே இருந்தனர்.

அங்கு வக்கீல்கள் தொழில் புரியும் முறையில் சில தனிப்பட்ட பழக்கங்கள் இருந்தன. இந்தியாவிலிருந்து வரும் வழக்குரைஞர்களை அங்குத் தொழில் புரிய அநுமதிப்பதில்லை. பாரிஸ்டர்களும், ஸொலிஸிட்டர்களும் மட்டுமே அங்குத் தொழில் செய்ய முடியும். இல்லையேல், அங்கு நடைபெற்றதோர் தனியான சட்டப் பரீட்சை தேறினாலும் தொழில் செய்யலாம். அத்தகையோர் மிகக் குறைவாகவே இருந்தனர். அந்நாள் பிரிட்டிஷ்காரர்களான பாரிஸ்டர்களும், சொலிஸிட்டர்களுமே அதிகமாக அங்குத் தொழில் புரிந்தனர். சில சீனரும், இந்தியர்களும் இருந்தனர். இந்நாள், சீன-மலேயா, பாரிஸ்டர்கள் எண்ணிக்கையில் பெருகியிருக்கின்றனர். அக்காலத்தில் இவ்வளவு மிகுந்தவர்களில்லை. கோலாலம்பூரிலும், சிங்கப்பூரிலும் தனித்தனியாக ஒவ்வொரு உச்ச நீதிமன்றங்கள் இருந்தன.

மலேயாவில் வழக்குரைஞர் தனியாகத் தொழில் புரிவதில்லை. மூன்று நான்கு பேரோ, அல்லது இன்னும் அதிகமானவரோ கூடி ஒரு கம்பெனியாக அமைந்து தொழில்புரிவது வழக்கமாக இருந்தது. இந்த முறையில் சில நன்மைகள் இருக்கின்றன. சிலருக்குக் கோர்ட்டுக்குச் சென்று வழக்கை வாதிப்பதில் ஆர்வம் இருக்கும். அவர்கள் அதை உற்சாகமாக மேற்கொள்ளலாம். வேறு சிலருக்கு நீதிமன்றத்தில் ஈடுபாடு இருக்காது. அலுவலகத்திலிருந்துகொண்டு, கட்சிக்காரர்களுக்கு வேண்டியது கூறுவதும், வழக்கு நடத்துவதற்கான காகிதங்களை ஒழுங்கு

செய்வதிலும் மிகுந்த ஆர்வமும் திறமையும் கொண்டிருப்பார்கள். எல்லோரும் அவரவருடைய இயல்பையும் ஆர்வத்தையும் பொறுத்துத் தொழிலில் பங்கு கொள்ளலாம். ஒருவர் புதிதாகத் தொழில் தொடங்குகையில் இவ்வாறு ஏதேனும் தொழில் நிறுவன அமைப்பில் சேர்ந்துவிட்டால், தொழிலுக்காகக் கட்சிக்காரர்களைக்கூட எதிர் பார்த்து நிற்கவேண்டாம். சிறிது காலம் ஒரு கம்பெனியில் சம்பளத் துக்கு வேலை பார்த்தபின் அதில் ஓர் பங்காளராகவே சேர்ந்துவிடலாம். ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட முறையில் ஃபீஸ் வாங்க முடியாது. மொத்த வருவாயைப் பொதுக்கணக்கில் வரவு வைத்து, அலுவலகச் செலவு போக எஞ்சியதை ஒப்பந்தப்படி தொழில்புரியும் பங்காளர், பங்கு பிரித்துக்கொள்வர். ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் ஒரே கம்பெனியார் அலுவலகம் திறந்து தொழில் நடத்துவார்கள். தலைமை அலுவலகம் ஓரிடத்திலும், கிளைகள் வேறு இடங்களிலும் அமைந் திருக்கும். அக்காலத்தில் மலேயா - சிங்கப்பூரில் நிலவிய தொழில் முறை இது.

ஜி. கே. நாராயணன், வீராசுவாமி என்ற இரு இந்தியரும். 'ஸாண்டோர்ஸ் அண்ட்கம்பெனி' என்ற பெயரில் ஓர் நிறுவனம் அமைத்து பங்காளராகக் கோலாலம்பூரில் தொழில் புரிந்து கொண்டிருந்தனர். வீராசுவாமி, அங்குச் சட்ட நிர்மாணச் சபையில் இந்திய உறுப்பினராக இருந்தார். இனிய இயல்பும் வாக்கு வன்மையும் கொண்ட அவர் மக்களிடையே செல்வாக்கு மிகுந்ததோர் பாரிஸ்டராக விளங்கினர். கோலாலம்பூரிலிருந்து நூறு மைல் தொலைவில் மலாக்கா என்ற இடத்தில் புதிதாக ஓர் அலுவலகம் திறந்து, அங்கே என்னைத் தங்கச் செய்வதாகத் தீர்மானித்திருந்தனர். அந்நாளில், மலேயாவில் வந்து ஆறுமாதம் தங்கிய பின்னரே தொழில் புரியலாம் என்றோர் சட்டம் நடைமுறையிலிருந்தது. அந்த ஆறுமாத காலத்துக்கு எனக்கு ஓர் சிறு தொகை சம்பளமாக அளிப்பதென்றும், பின்னர் சம்பளத்தை அதிகமாக்குவதென்றும் முடிவு செய்திருந்தனர். இந்த ஏற்பாட்டுக் கிசைந்து நானும் என் குடும்பத்தினரும் மலாக்கா சென்றோம். அங்கு 'ஸாண்டோர்ஸ் அண்ட் கம்பெனி'யார் புதிதாகத் திறந்த அலுவலகத்தை என்னிடம் ஒப்படைத்தனர். என்னுல் நீதிமன்றம் சென்று வழக்கு நடத்த இயலாதாகையால் வாரத்துக்கு ஒரு முறை நாராயணனே, வீராசுவாமியோ வருவார்கள். இவ்வாறு ஆறு மாத காலம் சென்றது. எனக்கு மாதந்தோறும் கிடைத்த சம்பளம் செலவுக்குப் போதாமல் கடினமாக இருந்தது. ஆறு மாத காலம் சென்ற பின்னர் அவர்கள் கூடுதலாக அளிப்பதாகக் கூறிய தொகையும் அவ்வளவு அதிகமாக இல்லை. மேலும் நான் தொழில் புரிவதற்கு அரசாங்க அநுமதிக்கான

கட்டணம் வேறு ஐநூறு டாலர் கட்டவேண்டி இருந்தது. எனவே யோசனை செய்ததில் எனக்கு இந்த ஏற்பாடு திருப்திகரமாக இல்லை ஸாண்டர்ஸ் கம்பெனியை விட்டு, சொந்தமாகத் தொழில் புரிவதே நலமென்று கருதினேன். அதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிட லானேன். அது அவ்வளவு எளிதாக இல்லை.

சிறிதேனும் மூலதனமின்றி அங்குத் தொழில் தொடங்குவது சாத்திய மல்ல. தங்குவதற்கு மட்டுமன்றி, அலுவலகத்துக்கும் ஏற்றதோர் இடம் வாடகைக்கு எடுக்கவேண்டும். அலுவலகத்துக்குத் தேவை யான சாமான்கள் வாங்கவேண்டும். தொழில் ஊன்றிப் பிடிக்கும் வரையிலும் மூன்று நான்கு மாதங்கள் அலுவலகம் நடத்தப் பணம் வேண்டும்.

நாலைந்து எழுத்தர்களுக்கான சம்பளம்—பிற செலவுகள், எல்லா வற்றுக்குமாக ஒரு பெரிய தொகை செலவு செய்யவேண்டும். என் கையிலோ ஒன்றும் கிடையாது. ஸாண்டர்ஸ் கம்பெனியை விட்டு விலகி மாலையில் நான் வீடு திரும்பியபோது, மறுநாள் என்ன செய்யப் போகிறேன் என்று ஒரு நிச்சயமும் இல்லை.

ஒரு வாரம் சென்றது. ஆறு மாதங்கள் அந்த வதிந்திருந்ததின் காரணமாகப் பலரைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட் டிருந்தது. அவ்வாறு பழக்கமாயிருந்த ஒருவர் எனக்கு ஆயிரம் டாலர் அலுவலகம் தொடங்கக் கடன் தருவதற்கு முன் வந்தார். அந்த உதவியைப் பெற்று, 1928ஆம் ஆண்டு ஜூன் மாதம் மலாக்காவில் தொழில் தொடங்கினேன். அதிக நாள் தாமதமின்றி அங்கிருந்து முப்பது மைல் தொலைவில் மூவார் என்ற இடத்தில் ஓர் அலுவலகம் திறந்தேன். அது ஜோஹூர் ஸ்டேட்டிலிருந்தது மலாக்கா பிரிட்டி ஷாரின் நேர்முக ஆளுகைக்குட்பட்டிருந்தது என்று கூறினேன் அல்லவா? திங்களிலிருந்து சனிக்கிழமை வரையிலும் ஐந்து நாட்கள் நான் மலாக்காவில் தங்கினேன். சனி – ஞாயிறு கிழமைகளில் நான் மூவாருக்குச் சென்றேன். ஜோஹூரில் சுல்தான் முகமதியராதலால், அங்கு வியாழன் – வெள்ளி ஓய்வு நாட்கள் எனவே, ஓய்வின்றி வாரத்தில் ஏழு நாட்களும் பணிபுரிந்தேன்.

கட்சிக்காரர்களில், சீனர், தமிழர், மலேயாக்காரர் எல்லாருமே இருந்தனர். அவரவர் மொழி அறிந்த எழுத்தர் தேவையாக இருந்தனர். கட்சிக்காரர்களை அவர்கள் கண்டு, அவர்கள் சொல்வதை எழுதிக்கொண்டு, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 'ஸ்டேட்மெண்ட்' தயாரிக்க வேண்டும். அது ஒரு எழுத்தரின் வேலை. வழக்கு மன்றம் சென்று அங்கே காகிதங்களை ஒழுங்கு செய்யவும், விசாரணைக்கு வரும் வழக்குகளைப்பற்றி அறிந்து பணியாற்றவும் ஒரு 'கோர்ட் கிளார்க்'

இருப்பான். நிலம் சம்பந்தமான வழக்குகளுக்கு, பத்திரங்கள் ரிஜிஸ்தர் செய்வதற்காக, லாண்ட் ஆபீசுக்குச் சென்று ஆவன செய்வதற்கு ஒரு 'லாண்ட் ஆபீஸ் கிளார்க்' வேண்டும். பத்திரங்களை எழுதித் தயாரிப்பதற்குக் 'கன்வெயன்சிங்' குமஸ்தா ஒருவனும் தேவை. இவர்கள் அனைவரையும் தவிர, டைப் செய்யும் பணியாளன், அடெண்டர் என்று ஒவ்வொரு வழக்குரைஞர் அலுவலகத்திலும் ஏழெட்டுப் பேருக்குமேல் சம்பளம் பெறுபவர் இருந்தனர். இரண்டு அலுவலகங்களிலும் அந்நாள் எனக்கு மாதம் ஆயிரம் டாலர் செலவு செய்யவேண்டி வரும் என்று தோன்றியது.

அலுவலகம் திறந்து அதிக நாட்கள் செல்லு முன்னரே, உற்சாக மூட்டும் வகையில் வருமானம் வரத் தொடங்கியது. நெருக்கடிகள் தீர்ந்தன. 'நல்ல காலம் தொடங்கிவிட்டது' என்று ஆறுதலும் மகிழ்ச்சியுமாக நான் பணி புரியலானேன். அதே நிலை நீடித்துத் தொடர்ந்தால், கொஞ்சம் பணம் சம்பாதித்துக்கொண்டு தாய்நாடு திரும்பி விடலாம் என்ற நம்பிக்கைகூட என்னுள் வேர்விடலாயிற்று.

மலாக்கா ஒரு பெரிய நகரமல்ல. பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துகீசியர் மலாக்காவில் வந்து குடியேறினர். நெடுங்காலம் அது அவர்களுடைய காலனியாக இருந்தது. போர்த்துகீசிய நாகரிகத்தின் சின்னங்களை அங்கு ஏராளமாகக் காணலாம். போர்த்துகீசிய இனத்தைச் சார்ந்த பல மக்கள் இன்றும் மலாக்காவில் இருக்கின்றனர். அவர்களுடைய தாய்மொழி போர்த்துகீசியம்தான். பழக்க வழக்கங்களில் நிறைய மாறுதல்கள் ஏற்பட்டிருந்தாலும், அவர்கள் தம்மைப் போர்த்துகீசிய இனத்தைச் சார்ந்தவர் என்ற பெருமிதத்துடன் கருதி வருகின்றனர்.

மலாக்காவில் சீனரையும் மலாய்க்காரரையும் தவிர அதிகமான இந்தியர்களும் இருந்தனர். 'மலாக்கா இந்தியர்' என்ற தனிச் சமுதாயத்தினரும் அங்கே வாழ்ந்தனர். அவர்கள் அதிகமானவர்களில்லை. பல தலைமுறைகளாக அவர்கள் நிலையாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடைய முன்னோர் தமிழரே. ஆனால் தமிழ்மொழியை மறந்து போயிருந்தனர். மலாய் மொழி பேசி, சில மாறுதல்களுடன் இந்துக்களின் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து வந்தனர்.

அணிமையிலிருந்த ரப்பர் தோட்டங்களில் எழுத்தர்களும் அதிகாரிகளுமாகப் பல மலையாளிகள் இருந்தனர். வேலை முடிந்தபின், மாலை நேரங்களில் இந்தியர் ஒன்று கூடி மகிழ்ச்சிகரமாகப் பொழுதுபோக்குவதற்கு ஒரு கிளப் ஏற்படுத்துவதற்கு நான் முதலாக நின்று முனைந்தேன். இந்தியருடைய சமூக வாழ்வில் சிறிதளவேனும் அது மாற்றம் கொண்டு வந்தது. பட்டணங்களில் வாழ்பவர்கள் மட்டுமன்றி, அருகிலுள்ள

ரப்பர் தோட்டங்களில் பணிபுரிந்தவர்களும் அதில் உறுப்பின ராளர்கள். நாள்தோறும் மாலை நேரங்களில் அங்கே கூடும் பலதரப் பட்ட இந்தியரும், 'கிளப்'பை நடத்துவதற்கு உற்சாகத்துடன் ஒத்துழைத்தனர். அவ்வாண்டு தீபாவளியை ஒட்டி, மலாக்கா 'கிளப்'பில் நாங்கள் ஏற்பாடு செய்த களிச்சந்தை பெரும் வெற்றியாகப் பலனளித்தது. மூன்று நாட்கள் நீடித்த அந்தச் சந்தையைக் காண்ப தற்குப் பலர் வெகு தொலைவிலிருந்தெல்லாம் மலாக்காவுக்கு வந்தனர். இரண்டாண்டுகள் நான் அந்தக் கிளப்பின் தலைவனாக இருந்தேன். மலாக்காவிலிருந்து சிங்கப்பூருக்குச் செல்வதற்கு முன்புதான் அந்தப் பதவியை விட்டேன். இன்றும் நல்ல நிலையில் நடைபெற்று வருகிறது.

என்னுடைய சில பழைய நண்பர்கள், நான் மலாக்காவில் இருந்த காலத்தில் இந்தியாவிலிருந்து வந்தனர். அவர்களில் குறிப்பிடத் தகுந்தவராக, ஆந்திரத் தலைவர் பிரகாசமும் அவருடைய மனைவி யாரும் வந்திருந்தனர். சென்னையில் 'ஸ்வராஜ்யா' என்ற பத்திரிகை யைத் தொடங்கி வெளியிட, 'ஸ்வராஜ்யா' கம்பெனிக்குப் பங்குகள் சேர்ப்பதற்கு அவர் வந்திருந்தார். அந்நாளில் பிரகாசம் இராஜ்ய சபையில் ஒரு உறுப்பினர். அவர் தம் மனைவியுடன் ஒரு வாரம் என்னுடன் சேர்ந்து தங்கினர். அந்நாளில் நடந்த நிகழ்ச்சியின் நினைவு என் மனதில் பசுமையாக இருக்கிறது.

ஒருநாட் காலையில், நானும், பிரகாசமும், அவர் மனைவியும் மலாக்காவில் இருந்து பயணம் கிளம்பிச் சென்றோம். என்னுடைய அலுவலகத்தில் இருந்து புறப்பட்டோம். மலேயா நாட்டில் நல்ல சாலைகள் இருந்தன. சாதாரணமாகவே என்னுடைய டிரைவர் அகஸ்தியன் வேகமாகக் கார் ஓட்டுவான். அன்று எங்களுக்கு முக்கிய மாக ஓரிடத்திற்குச் செல்லவேண்டியிருந்தது. தன்னால் மிக விரைவாக வண்டியோட்ட முடியும் என்று திறமையைக் காட்டி அவன் வண்டி ஓட்டினான். காரில் அமர்ந்து பத்து நிமிடங்கள் செல்லுமுன் நாங்கள் குறிப்பிட்ட தொலைவுக்குமேல் சென்றுவிட்டோம். அவனிடம் நான் வேகத்தைக் குறைத்து ஓட்டச் சொன்னேன். ஓரிரண்டு முறைகள் கூறியும், எங்களைக் கடந்து வேறு ஒரு வண்டியும் சென்றுவிடாதவாறு அவன் ஓட்டினான். அரைமணி நேரத்தில் வண்டி மிக நீண்டதோர் சாலையில் ஓடலாயிற்று. சாலையின் ஓர் புறத்தில் ஒரு கால்வாய் இருந்தது. ஒரு மணிக்கு ஐம்பது மைல் ஓடிக்கொண்டிருந்த கார் வழி மாறிக் கால்வாயில் சாய்ந்தது. கால்வாய் அதிக அகலமானதல்ல. அதனால் கார் கீழே விழவில்லை. கால்வாயின் இரு புறங்களிலும் நிலைத்து, நீளவாக்கில் ஒரு பக்கம் எழும்பிச் சாய்ந்தாற்போன்று நின்றது. எங்களில் யாருக்கும் ஒன்றும் நேரவில்லை. ஆயுள் கெட்டியாக

இருந்ததால் மீண்டோம். என்றாலும் காரிலிருந்து வெளிவருவதற்குப் பிறர் உதவ வேண்டி இருந்தது. அகஸ்தியன் இதனால் அஞ்சித் திகைத்து விடவில்லை. தன்னுடைய கவனக்குறைவினால்தான் விபத்து நேர்ந்த தென்றுகூட அவன் கருதவில்லை. சாலை சரியாகப் பழுதுபார்க்கப் படாததால்தான் வண்டி வழிமாறிச் சாய்ந்ததென்று கூறினான். இத்தகைய பல விபத்துக்களில் நானும் அகஸ்தியனும் சிக்கிக் குதித்து மீண்டு வந்திருக்கிறோம்.

கோலாலம்பூரிலிருந்து ஒருநாள் நள்ளிரவில் மலாக்காவுக்குச் செல்ல வேண்டியிருந்தது. அகஸ்தியன் வழக்கம்போல் காரை விரைவாக ஓட்டினான். மலாக்காவிலிருந்து முப்பதுமைல் தொலைவில் உள்ள ஓரிடத்தை அடைந்தபோது, வண்டி வழியில் படுத்திருந்த ஒரு பெரிய எருதின் மீதேறி, அருகிலுள்ள கால்வாயில் சாய்ந்து வீழ்ந்தது. கால்வாயில் அதிக ஆழமில்லை. அப்போது நான் உறங்கிக்கொண் டிருந்தேன். சட்டென்று விழித்து நோக்கியபோது, வெளியிலிறங்க முடியாமல் கார் சரிந்து கிடப்பதை உணர்ந்தேன். அது ஏதோ ஒரு கிராமம். காரிருளில் ஒன்றும் புலனாகவில்லை. கார் சரிந்த ஓசை கேட்டு அருகில் இருந்த வீடுகளிலிருந்து மலாய்க்காரர் வெளிச்சத்துடன் வந்தனர். எனக்கு வியப்பும் மலைப்புமாக இருந்தது. எருது இறந்து கிடந்தது. அகஸ்தியனாலும் என்னாலும் இப்போதும் எழுந்திருக்க முடியவில்லை. பொழுது புலர்ந்து, சிலர் வந்து உதவிசெய்த பிறகு வண்டியைக் கால்வாயில் இருந்து பாதைக்கு ஏற்றியபின் நாங்கள் பயணம் தொடர்ந்தோம். அன்றுமட்டுமே அகஸ்தியன் காரைச் சிறிது வேகம் குறைத்து ஓட்டினான். ஒருகால் அதற்குக் காரணம் அவன் களைத்திருந்ததனால் இருக்கலாம்.

தான் காரோட்டும்போது, வேறு யாருடைய வண்டியும் தன்னைக் கடந்து செல்வதை அவன் சிறிதும் பொறுக்கமாட்டான். முன் செல்லும் வண்டியின்முன் தாவிக் கடந்து செல்லாமல் அவன் திருப்தி கொள்ள மாட்டான். ஒரு முறை மலாக்காவிலிருந்து முவ்வாறு என்ற இடத்துக்குச் செல்கையில், ஒரு வெள்ளையனின் வண்டியைக் கடந்து சென்றான். அவன் போலீசில் தெரிவித்துவிட்டான். பிறர் நலத்துக்கு ஊறு விளைவிக்கும் வகையில் வண்டியை ஓட்டியதற்காக அகஸ்தியன் மீது குற்றம் சாட்டினர்கள். அவன் பக்கம் சாட்சியாக நின்ற என்னை விசாரணை செய்தனர். கார் மணிக்கு ஐம்பதோ, அதற்கும் மேலான மைல் தொலைவோ சென்றதாக எனக்கு நினைவு. நீதிமன்றத்திலும் அதையே கூறினேன். அந்தச் சாட்சியத்தின்பேரில் ஐம்பது ரூபாய் அபராதம் விதித்தனர். அபராதம் கட்டவில்லையெனில், இரண்டு வாரம் காவலில் இருக்கவேண்டும். பணம் நான் கொடுத்தேன்

என்றாலும், அகஸ்தியனுக்குத் தண்டனை பெற்றது பிடிக்கவில்லை. 'முப்பது மைல் வேகத்தில்தான் நான் ஓட்டினேன் என்று எஜமானர் கூறியிருந்தால் தண்டனை கிடைத்திருக்காது' என்று அகஸ்தியன் வருந்தினான். 'அது சரியா? அகஸ்தியன் உண்மையில் ஐம்பது மைல் வேகத்திலல்லவா வண்டியோட்டினாய்?' என்று கேட்டேன். 'அதைக் கோர்ட்டில் சொல்லலாமா?' என்றான் பதிலுக்கு.

அகஸ்தியன் கெட்டிக்காரன் மட்டுமல்ல; நம்பிக்கைக்குரியவன். பணியாற்றச் சோம்பலில்லாதவன். காரோட்டும்போது வேகம் குறைக்க வேண்டும் என்று சொன்னால் மட்டும் அவனுக்குப் பிடிக்காது. வேகமாக ஓட்டவேண்டாம் என்றால், மோட்டார் கார் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லையே என்பது அவன் வாதம்.

அகஸ்தியன் சில மாதங்கள் என்னுடனே இருந்தான். பிறகு கிராமத்துக்குச் சென்றான். ஒரு ஆண்டு சென்ற பின்னர் அகஸ்தியனின் மறைவுச் செய்தி அறிந்தபோது, அன்புள்ளதொரு நண்பனை இழந்த துயரம் மிகுந்தது.

திராவிட கழகத் தலைவர் ஈ. வி. ராமசுவாமி நாயக்கர் நான் மலேயாவில் இருந்தபோது அங்கு வந்திருந்தார். சுயமரியாதை இயக்கப் பிரசாரம் செய்துகொண்டு நாயக்கர் மலேயாவில் பல இடங்களிலும் சுற்றுப்பயணம் செய்தார். இரண்டு நாட்கள் அவரும் அவருடைய மனைவியும் எங்கள் இல்லத்தில் தங்கினார்கள். ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டவர்கள் என்ற முறையில் நாங்கள் அடிக்கடி பார்த்துப் பழக சந்தர்ப்பங்களிருந்திருக்கின்றன. பின்னர், நாயக்கர் காங்கிரஸிலிருந்து பிரிந்ததுமட்டுமன்றி, காங்கிரஸுக்கு எதிரியாகவும் மாறினார். என்றாலும் எங்கள் தனிப்பட்ட நட்புறவுக்கு அது தடையாக இல்லை. மலேயாவில் திராவிட கழகத்தார் நாயக்கரின் அறுபதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியபோது, அக் கூட்டத்துக்கு என்னைத் தலைமை தாங்க அழைத்தார்கள். தேசியக் கருத்துக்களில் எங்களிருவருக்கும் இடையே ஒற்றுமை நிலவவில்லை எனினும், அவர் சமுதாய முன்னேற்றத்துக்கு ஆற்றிவரும் தொண்டைப் பாராட்டுவதற்குரிய வாய்ப்பாக அச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டேன். நாயக்கர் பேச்சாற்றல் மிகுந்தவர். பொதுத் தொண்டாற்றும் திறனுடன், தலைமைப் பொறுப்புக்குரிய பண்பும் அவரிடம் இசைந்திருந்தன. நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பொதுத் தொண்டாற்றி வரும் நாயக்கரை அவருடைய கருத்துக்களில் உடன்பாடு கொள்ளாதவர்கள்கூட அவர் ஒரு ஆற்றல் மிகுந்த தனிமனிதர் என்பதை ஒத்துக்கொள்வார்கள்.

சுமார் இரண்டு ஆண்டுகள் நான் மலாக்காவில் தொழில் புரிந்தேன். நாட்டுக்கோட்டைச் செட்டிமார் பலர் அங்கு வசித்தனர். பணம் வட்டிக்குக் கொடுப்பதுதான் அவர்களுடைய வாணிபம். அவ்வகையில் மலாயாவின் பல பகுதிகளிலுமாக அவர்கள் பல லட்சக்கணக்கில் பணம் முடக்கி இருந்தனர். நண்பரென்ற நிலையிலும் கட்சிக்காரர் என்ற முறையிலும் அவர்களிடையே பல நண்பர்கள் என்னுடன் மிகுந்த நட்புறவுடன் பழகினர்கள்.

செட்டிநாட்டு அரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் மலாக்காவுக்கு வந்தபோது, அவரை வரவேற்க ஒரு பெரிய பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்திருந்தனர். அதற்கு என்னைத் தலைமையேற்க அழைத்தனர். அன்றுதான் அண்ணாமலை செட்டியார் எனக்கு அறிமுகமானார். செட்டியார் சமுதாயத்தினர், அவரை மிகுந்த அன்புடன் வரவேற்று உபசரித்தனர். மலாக்காவில் நடந்த அந்த வரவேற்புக் கூட்டத்தில் நான் கலந்துகொண்டது இப்போதும் என் நினைவில் இருக்கிறது. அண்ணாமலை செட்டியாரின் வாக்குத் திறமையும் கவர்ச்சியும் ஒருமுறை கண்டாலும் மறக்க இயலாதவை.

செட்டிமார்களைப்பற்றிக் கூறும்போது, மலாக்காவில் நான் தொழில் புரிந்துகொண்டிருந்த நாட்களில் ஒரு கிரிமினல் வழக்கில் சிக்கிய செட்டியாருக்காக, நான் வழக்கை வாதிக்க முன்வந்த சம்பவம் நினைவுக்கு வருகிறது. செட்டியாரை ஜாமீனில் விடுதலை செய்யக் கோரி நான் நீதிமன்றத்துக்குச் சென்றேன். அங்குச் செட்டியார் சமுதாயத்தினர் திரண்டு கூடியிருந்தனர். பிரதிவாதியும் அவர்களிடையே இருந்தான். செட்டியாரை ஜாமீனில் விடவேண்டும் என்று கோர்ட்டாரிடம் கோரினேன். குற்ற இயல்பை உணர்ந்து, நீதிபதி என்ன செய்யலாம் என்று சிறிது நேரம் யோசனை செய்தார். இறுதியில் ஜாமீன் பேரில் விடுதலை செய்ய ஆணை பிறந்தது. ஜாமீன் விவரம் அறிவிக்க நான் செட்டியாரைத் தேடினேன். அவனைக் காணவில்லை. நான்கு புறங்களிலும் நானும் பார்த்தேன்; போலீசாரும் தேடினர். காவல் நிலையத்திலும் விவரம் அறிவித்தேன். செட்டியைக் காண்பதற்கில்லை. வழக்கு மன்றத்தில் கூட்டமாக மக்கள் இருக்கையில், யாரும் அறியாமல் பட்டப்பகல் இரண்டு மணியில் குதித்தோடிப்போன செட்டியாரின் திறமை பலரையும் வியப்புக்குள்ளாக்கியது. 'நிரபராதி'யான என்னுடைய கட்சிக்காரனின் நடவடிக்கையைக் குறித்து எனக்கும் வியப்பு மிகுந்தது! பின்னர் இதுவரையிலும் அந்தச் செட்டியாரைப்பற்றி எனக்கு யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. எப்படி அவனால் அங்கிருந்து குதித்தோடிச் செல்ல முடிந்ததென்று எனக்கு இன்னமும் தெளிவாகவில்லை.

26

குழப்பங்களின் தொடக்கம்

ரப்பரும் ஈயமும் ஏராளமாகக் கிடைக்கும் இடம் மலேயா. அவற்றின் விலையை ஒட்டி மலேயா நாட்டின் வாணிபம் உயர்ந்தும் தாழ்ந்தும், பொருளாதார வளமும் வறட்சியுமாக அமையும். நான் அங்கே சென்றிருந்த நாட்களில் ரப்பருக்கு நல்ல கிராக்கி இருந்தது. ரப்பர் தோட்டங்களை வாங்குவதும் விற்பதுமாகப் பரவலாக வாணிபப் பரிவர்த்தனை நடந்துகொண்டிருந்தது. அது சம்பந்தமான பத்திரங்கள் எழுதித் தயார் செய்யவும், பதிவு செய்யவும், சட்ட இயலாரின் தேவை மிகுதியாக இருந்ததால், வக்கீல்களுக்கு இது உகந்ததொரு தொழிலாக இருந்தது. ஒன்றிரண்டு உதவியாளர், அதை மட்டுமே கவனித்துக் கொண்டிருப்பார்கள். என்னுடைய மலாக்கா அலுவலகத்தில் அப் பணி புரிந்தவன் ஒரு சீனன். சுத்தோங் என்ற பெயருடைய அவன் தொழிலில் நல்ல அநுபவமும் அறிவும் உடையவன். தன்னுடைய நண்பனை ஒரு சீனனுக்கு ஆயிரம் டாலர் கடன் வேண்டுமென்றும் அவனுடைய ரப்பர் தோட்டத்தைப் பணயமாக எழுதிக் கொடுப்பதாகவும், யாரேனும் செட்டியாரிடம் கேட்டுப் பண உதவிக்கு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்றும் சுத்தோங் என்னிடம் வேண்டினான். எனக்குத் தெரிந்த ஒரு செட்டியாரிடம் நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர் கடன் கொடுத்து உதவினார். அந்தத் தோட்டம் சம்பந்தமான பத்திரங்களை நனகு ஆராய்ந்து பார்த்த பின்னரே கடன் கொடுப்பது நலமென்று நான் செட்டியாரிடம் யோசனை கூறி இருந்தேன். கடன் வாங்கியவன், என் முன்னர்தான் பத்திரத்தில் கையெழுத்திட்டான். அதற்குப் பிறகு பதிவு செய்ய நான் பத்திரத்தை லாண்ட் ஆஃபீசுக்கு அனுப்பினேன். இரண்டு நாட்கள் சென்ற பின்னர் பத்திரம் பதிவு செய்யப்படாமல் திரும்பி வந்தது. தோட்ட உரிமையாளர் இறந்துவிட்டாரென்றும், பத்திரங்களில் கையெழுத்திட்டவன் பொய்க் கையெழுத்துச் செய்திருக்கிறானென்றும் தெரிய வந்தது. சுத்தோங்குக்குப் பழக்கமானவன் என்று கூறி நான் செட்டியாரைப் பணம் கொடுக்கச் சொல்லியிருந்தேன். பத்திரம் பதிவாகாமல் திரும்பி வந்தபோது செட்டியார் கண்ணீரும் கம்பலையுமாக என்னுடைய அலுவலகத்துக்கு வந்தார். நண்பன் தன்னை நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாக சுத்தோங் வருந்தினான். செட்டியாருடைய நஷ்டத்துக்குச் சட்டப்படி நான் பொறுப்பாளனல்ல என்றாலும், என்

வாக்கை நம்பியே அவர் பணம் கொடுத்தார் என்பதை மறுப்பதற் கில்லை. பணத்தைப் பெற்றுக்கொண்டவன் உடனே இடத்தை விட்டுப் போய்விட்டான். அவன் பணம் திருப்பித் தரவில்லை என்றால், அதை நான் செட்டியாருக்குத் திரும்ப அளிப்பதாக வாக்குத் தந்தேன். அவர் சின்னாட்கள் காத்திருந்தார். ஓடிப்போனவனைப்பற்றி யாதொரு விவரமும் புலப்படவில்லை. போலீசாராலும் துப்புக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் சீனாவுக்குப் போய்விட்டான். செட்டியாருக்குக் கொடுக்க அப்போது என் கைவசம் பணம் இல்லை. அதனால் அத் தொகைக்கு அவரிடம் நான் ஒரு பிராமிசரி நோட் எழுதிக் கொடுத் தேன். அதை நான் கையெழுத்திட்டளிக்கையில் செட்டியாரின் முகத்தில் நன்றிப் பெருக்கும், வியப்பும் ஒளிர்ந்தன. அக் கடனடைய இரண்டாண்டுகளாயின.

முவ்வாறு அலுவலகத்தில் இன்னொரு அநுபவமும் வாய்த்தது. அது இதைவிட மோசமானது. முவ்வாறு அலுவலகத்தில் பத்திரங்கள் பதிவு செய்துவரச் சொல்லும் உதவியாளன் ஒரு பணிக்கர். கறுப்பாக சற்றே பருமனாக — குட்டையாக — சிறு மீசையுடன் தோற்றமளிக்கும் பணிக்கர் கட்சிக்காரர்களுடன் நன்றாகப் பழகி விவரங்களறிந்து செய லாற்றுபவன். செல்வாக்கும் உடையவன். கட்சிக்காரர்களுக்கு அவனிடம் மிகுந்த நம்பிக்கையுண்டு. நானும் அவனை நம்பியிருந்தேன். முவ்வாறு அலுவலகத்துக்கு நான் வாரத்தில் இரண்டு நாட்களே செல் வேன். கட்சிக்காரர்கள் பத்திரங்களில் என் முன் கையெழுத்துச் செய்த பின்னர், ரிஜிஸ்தர் செய்வதற்குரிய செலவுத் தொகையை நான் பணிக்கரிடம் கொடுப்பேன். பத்திரங்கள் பதிவு பெற்றுத் திரும்பி வந்த பின்னர் உரிமையாளரிடம் அவற்றை அனுப்பிவைப்பேன். கட்சிக் காரர்களின் பெயரும், பத்திரங்களில் கையெழுத்தான தேதியும், விவரமாகத் தெரிந்துகொள்வதற்கு அலுவலகத்தில் ஒரு பேரேடு வைத்திருந்தோம். பத்திரங்களைத் திருப்பியளிக்கையில் அவ் விவரத் துக்கு உரிமையாளரின் கையெழுத்தை அதில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அலுவலகத்தில் வலியுறுத்தியிருந்தேன். முவ்வாறு அலுவலகத்துக்குச் செல்லும்போதெல்லாம், நான் அந்தப் பேரேட்டைக் கவனமாகப் பரிசீலனை செய்வதுண்டு. ஒருபோதும் ஒரு தவறும் கண்டிருக்கவில்லை. சில மாதங்கள் சென்றன.

மலாக்கா சம்பவம் நிகழ்ந்து இரண்டு மாசங்களான பிறகு, ஒரு சனி யன்று நான் முவ்வாறுக்குச் சென்றபோது, ஒரு செட்டியார் என்னிடம் வந்தார். தமக்குச் சில பத்திரங்கள் திரும்பி வரவில்லை என்று குறை கூறினார். நான் பணிக்கரை அழைத்து, ஏன் கொடுக்கவில்லை என்று வினவியபோது, அதை வீட்டில் வைத்துவிட்டதாகக் கூறி எடுத்துவரச்

சென்ருன். வெகு நேரமான பின்னரும் பணிக்கர் திரும்பவில்லே. நான் ஐயம் கொண்டு வீட்டுக்கு ஆளனுப்பினேன். அங்கு அவன் செல்லவேயில்லே. உடனே நான் பரிசோதனே செய்த போதுதான், நான் நம்பிக்கை வைத்திருந்த பணிக்கரின் மோசச் செயல் வெளி யாயிற்று. சுமார் நாற்பது பத்திரங்களே அவன் பதிவு செய்ய அனுப்ப வேயில்லே. அலுவலகத்தில் வைத்திருந்த பேரேட்டில் அவை திரும்பக் கிடைத்த விவரத்துக்குக் காணப்பட்ட கையெழுத்துக்களெல்லாம் கட்சிக்காரர்களிடமிருந்து வாங்கியவை அல்ல. அவை அனேத்தும் அவனே போட்டவை என்ற உண்மையைப் பின்னரே அறிந்தேன். நான் ரிஜிஸ்தர் செய்வதற்கென்று கொடுத்த பணமெல்லாம் அவன் தன் சொந்த செலவுக்கு வைத்துக்கொண்டான். அத் தொகை அதிக மாகவே இருந்தது. பத்திரத்தில் கையெழுத்திட்ட மூன்று மாதத் துக்குள் பத்திரம் பதிவு செய்யப்படவில்லே என்ருல், எட்டுப்பங்கு அதிகமாக ரிஜிஸ்தர் செய்யப் பணம் கட்ட வேண்டும். கணக்குக் கூட்டிப் பார்த்தபோது, நாலாயிரம் டாலருக்குக் குறையாமல் வேண்டும் என்று கண்டேன். நான் உடனே 'லாண்ட் ஆபீசு'க்குச் சென்று அதிகாரியைக் கண்டேன். அவரிடம் விவரம் கூறினேன். அவர் என்மீது அன்புகூர்ந்து பழியிலிருந்து என்னேத் தப்புவித்தார். எல்லாப் பத்திரங்களேயும் பதிவு செய்வதற்குரிய தொகையை என் கையிலிருந்து கொடுத்தேன். அதற்கு ஆயிரம் டாலருக்குமேலாயிற்று. என்ருலும் கட்சிக்காரர்களுக்கு இதனல் ஒரு நஷ்டமும் வரவில்லே.

ஒரு மாதம் சென்ற பிறகு, கோலாலம்பூரில் பணிக்கரைக் கண்டு கைது செய்தார்கள். நம்பிக்கைத் துரோகம் செய்த பணிக்கருக்கு எட்டுமாசம் கடுங்காவல் தண்டனே கிடைத்தது. சிறையிலிருந்து அவன் எனக்கு ஒரு கடிதம் எழுதினன். கழிவிரக்கம் கொண்டு அவன் எழுதிய கடிதம் அது. இன்னனென்று அவன் கோரியிருந்தான். லட்டு தின்ப தென்ருல் அவனுக்கு மிகுந்த ஆசையாம். யார் வசமேனும் சிறைக்கு நான்கைந்து லட்டு வாங்கி அனுப்பிவைக்க வேண்டும் என்று எழுதி யிருந்தான்! இந்த அசாதாரணமான கோரிக்கையை, நிறைவேற்ற நான் சிறையதிகாரியின் அநுமதி பெற்று, லட்டு வாங்கிக் கொடுத்து அனுப்பினேன். தண்டனே முடிந்து திரும்பிய அவன் நோயாளியாக இருந்தான். அவனே என் வீட்டிலேயே வைத்துக்கொண்டேன். பிறகு, சிகிச்சையளிக்க, மருத்துவமனேக்கு அனுப்பவேண்டியிருந்தது. பின்னர், சிகிச்சை பெற்று நோயுற்ற உடல் குணமாகித் திரும்பி வந்த பிறகு எங்கேனும் ஓர் வேலே தேடித் தரவேண்டும் என்று கேட்டான். எனக்கு வியப்பு மேலிட்டது. உடனே பணிக்கர், 'தாங்கள் ஒரு கடிதம் தந்தால்தான் எனக்கு வேலே கிடைக்கும். இல்லேயேல் மிகவும் சிரம

மாக இருக்கும்' என்று அழுது கெஞ்சியபோது என் மனம் இளகியது. ஒருமுறை தவறியதற்காக அவனுக்கு ஒருவழியுமில்லை என்று தீர்த்து விட்டால் பிறகு எப்படிப் பிழைப்பான்? என்றாலும் செய்த தவறை அவனால் மறைக்கவும் முடியாது. அதனால் பணிக்கர் கோரியதற் கிணங்க நான் ஒரு கடிதம் பரிந்துரையாக அளித்தேன்.

நம்பிக்கைத் துரோகம் செய்து தண்டனை பெற்றவன் என்றும், தண்டனை நிறைவேறி வந்த பிறகு செய்த குற்றத்துக்கு மிக வருந்து கிறான் என்றும், தொழிலைப் பொறுத்து அனுபவமும் அறிவும் மிகுந்த வனென்றும், அவனுக்கு நல்ல வேலை கிடைப்பதில் நான் மகிழ்ச்சி கொள்வேனென்றும் தெரிவித்து எழுதிக் கொடுத்தேன். வெகு நாட்க ளாகுமுன்பே அவனுக்கு வேலை கிடைத்துவிட்டது. ஓராண்டு அவன் வேலை பார்த்தான். பின்னர் ஒருநாள் சீட்டாடிகொண்டிருக்கையில் மார்பு வலி என்று கூறியவன், அப்படியே இறுதியடைந்துவிட்டான். தன்னால் எனக்கு ஏற்பட்டுவிட்ட பொருள் நஷ்டத்தை எப்படியேனும் ஈடு செய்துவிடவேண்டும் என்று விரும்புவதாக அவன் பல முறைகள் எனக்குக் கடிதம் எழுதினான். சிறிது காலம் மேலும் உயிர் வாழ்ந் திருந்தால் அவன் அந்த விருப்பத்தையும் நிறைவேற்றிக்கொண்டிருந் திருப்பானாக இருக்கும்!

இக்காலத்தில் இன்னொரு பெருங்குழப்பத்துக்கும் ஆளானேன் நான். 1930ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கோலாலம்பூர் உச்ச நீதிமன்றத்தில் என்னை அட்வகேட்டாகப் பதிவு செய்துகொள்ள நான் செய்துகொண்ட விண்ணப்பத்தை அந்நாள் அங்கிருந்த வழக்குரைஞர் சங்கம் எதிர்த்தது. நான் முதலில் சிங்கப்பூர் உச்ச நீதிமன்றத்தில் அல்லவா தொழில் செய்யும் உரிமை பெற்றுச் சேர்ந்திருந்தேன். எஃப். எம். ஸ்டேட் நீதிமன்றங்களில் தொழில செய்பவருக்குக் கோலாலம்பூர் உச்ச நீதி மன்றத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். 1927ஆம் ஆண்டு மலேயாவுக்கு வந்தபோதே நான் அதற்கான விண்ணப்பம் அனுபபி யிருந்தேன். 1930ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில்தான், அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. நான் ராஜத் துரோகக் குற்றத்துக்காக இந்தியாவில் தண்டனை பெற்றவன் என்றும் அங்கு நான் நீதிமன்றம் துறந்து ஒத்துழையாமை இயக்கத்தில் தண்டனை பெற்றவன் என்றும், வழக்குரைஞர் சங்கத்தார் காரணம் காட்டி என் விண்ணப்பத்தை எதிர்த்தார்கள். அதைத் தொடர்ந்து கோலாலம்பூர் வழக்குரைஞர் சங்கக் கமிட்டி செயலாளர் இணைத்திருந்த பிரமாண பத்திரத்தில், ஜி. கே. நாராயணன் எழுதியதோர் கடிதமும், சென்னை போலீசார் கோலாலம்பூர் போலீஸ் கமிஷனருக்கு அனுப்பியதோர் அறிக்கையும் சாட்சியங்களாகக் கொடுத்திருந்தனர். அவற்றில் அடங்கிய விவரங்கள் குறிப்பிடத்தக்கவை.

நாராயணன் எழுதியிருந்தார் :—

''1919ஆம் ஆண்டிலிருந்து கேசவமேனனை நான் அறிவேன். நான் சென்னையில் தொழில் செய்த நாட்களில் அவரும் அங்குத் தொழில் புரிந்தார். 1921ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் அவர் சென்னையில் தொழிலை நிறுத்திவிட்டு ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொள்ளக் கேரளம் சென்றார். ஆட்சியாளருடன் ஒத்துழைக்கலாகாதென்ற அடிப்படை நோக்கில் இயங்கிய இயக்கம் அது. 'வக்கீல்கள் தொழிலை நிறுத்தி நீதிமன்றங்களை விட்டு வெளியேறுங்கள். வரிகள் கட்ட வேண்டாம்' என்பதெல்லாம் அந்த இயக்கத்தின் கோட்பாடுகள். 1921ஆம் ஆண்டுக்குப் பிறகு, எந்த வருஷம் என்று எனக்கு நினைவில்லை. கேசவமேனன் சிறைத்தண்டனை அநுபவித்திருக்கிறார். என்ன குற்றம் என்பது நிச்சயமாகத் தெரியாது.'' 1922ஆம் ஆண்டு மலபாரில் ஏற்பட்ட மாப்பிள்ளைக் கலகம் அந்த இயக்கத்தின் விளைவாக நடந்தது தான் என்றும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஸாண்டேர்ஸ் கம்பெனியில் ஒரு கூட்டாளியாக இருந்தவரல்லவா, நாராயணன்? அந்தக் கம்பெனியைவிட்டு விலகி நான் சொந்தமாகத் தொழில் தொடங்கியது அவருக்கு உவப்பாக இல்லை. அதற்கு எனக்கு ஒரு படிப்பினையாக இருக்கட்டும் என்று இவ்வாறு எழுதினர்போலும்! அவருடைய இந்த கனிவற்ற செயல்களால் எனக்கு ஏற்படக்கூடிய துன்பங்களைப்பற்றி அந்த அப்பாவி மனிதர் யோசனை செய்யவில்லை போலும்!

நான் மலாய் நாட்டுக்குப் புறப்படுவதை அறிந்ததும் 1927ஆம் ஆண்டு ஏப்ரலில் அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் என்னுடைய தியாகத்தைக் குறித்து நாவாரப் புகழ்ந்திருந்தார். ஆனல் இப்போது அதெல்லாம் மறந்துவிட்டாரோ, அன்றி மறைத் திருக்கிறாரோ?

சென்னைப் போலீசார் கோலாலம்பூர் போலீஸ் கமிஷனருக்கு என்னைக் குறித்து எழுதி அனுப்பிய அறிக்கை இது.

பெயர் : கே.பி. கேசவ மேனன்.

தொழில் : ஒத்துழையாமை இயக்கத்தினர். கிளர்ச்சியாளர்.

வரலாறு : ''சென்னையின் பல தொழிலாளர் இயக்கங்களிலும் முழுது மாகப் பங்கு கொண்டவர். ட்ராம்வே தொழிலாளர் சங்கம் நிறுவ முன்நின்று முயன்றவரில் ஒருவர். 1921ஆம் ஆண்டு பிப்ரவரியில் கோழிக்கோட்டில் யாகூப் ஹஸனையும் மற்றவர்களையும் கைது செய்த போது, 'பிராக்டீஸை' நிறுத்தி ஒத்துழையாமை இயக்கத்தில் சேர மலபார் சென்றார். மலபாரில் பல இடங்களிலும் பிரயாணம் செய்து, கிலாஃபத், ஒத்துழையாமை இயக்கங்களுக்குப் பிரசாரம் செய்தார்.

கேரள ஒத்துழையாமை இயக்கத்தின் உயிர்நாடி இவர். வைக்கம் சத்யாக்கிரஹம் சம்பந்தமாக 1924ஆம் ஆண்டு ஏப்ரல் ஏழாந்தேதி இவரைக் கைது செய்தார்கள். கோர்ட்டு தீர்ப்புக்கு இசைந்து ஜாமீன் அளிக்க ஒப்புக்கொள்ளாததால் ஆறுமாதத் தண்டனைபெற்றார். அவ் வாண்டு செப்டம்பர் முதல் தேதியன்று சிறையிலிருந்து விடுதலை பெற்றார். கோழிக்கோட்டிலிருந்து வெளியாகும் ஒரு ஒத்துழையாமை இயக்கப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். 1925ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சென்னை திரும்பி மீண்டும் தொழிலில் ஈடுபடலானார்.''

என்னுடைய செயல்களையும் கருத்துக்களையும் நீதிமன்றத்தில் ஒளிக்கும் எண்ணம் எனக்கு இல்லை. கோர்ட்டில் நான் சமர்ப்பித்த பிரமாணப் பத்திரத்தில் அதைத் தெளிவாக்கி இருந்தேன். 1915ஆம் ஆண்டில் கோழிக்கோட்டில் நான் தொழில்புரியத் தொடங்கிய காலம் முதல் மலாய் நாட்டுக்கு வந்து சேரும் வரையிலும் நான் ஈடுபட்டு ஆற்றிய பணிகளைச் சுருக்கமாக வெளியிட்டிருந்தேன்.

விசாரணையைக் கேட்க, நீதிமன்றத்தில் கூட்டம் திரண்டிருந்தது. எனக்காக வழக்காடியவர், பாரிஸ்டர் 'க்யாம்பெல்'. வழக்குரைஞர் சங்கத் தரப்பில், 'ஷேன்' என்ற பாரிஸ்டர் ஆஜரானார். பிரதம நீதிபதியின் முன்னர் வழக்கு விசாரணைக்கு வந்திருந்தது. அவர் அப்போதே தீர்ப்பெழுதிவிட்டார்.

"தேசிய சிந்தனைக்கும் வழக்குரைஞரின் தொழிலுக்கும் எந்த வகையான பிணைப்பும் கிடையாதென்றும், விண்ணப்பம் கொடுத்தவரிடம், தொழில் புரிவது சம்பந்தமான குற்றம் ஒன்றும் இல்லை என்ற மட்டில், அவருடைய மனுவுக்கு அநுமதியளிக்காதிருப்பதற்கு ஒரு காரணமும் இல்லை என்றும், அதனால் மனுதாரரை உச்ச நீதிமன்றத்தின் 'அட்வகேட்டாக' 'என்ரோல்' செய்வதற்கு ஆணையளிப்பதாக'' நீதிபதி தெளிவுறுத்தினர்.

'உங்களுக்கு எல்லா வெற்றிகளும் கூடிவர வாழ்த்துகிறேன்' என்று நீதிபதி என்னை வாழ்த்தினர்.

என்னை மிகவும் கவலைக்கும் பரபரப்புக்கும் ஆளாக்கிய வழக்கு இவ்வாறு சாதகமாகவே முடிவு பெற்றது.

அந்த வழக்கு மலாய் நாட்டில் மட்டுமன்றி இந்திய நாட்டிலும் பல நண்பர்களுடைய கருத்தைக் கவர்ந்திருந்தது. வெற்றியைப் பாராட்டி, 'ஹிந்து' நாளிதழ், தலையங்கமே வெளியிட்டது. மாத்ருபூமியும் அவ்வாறு பாராட்டியது. ராமசுவாமி நாயக்கருடைய மேற்பார்வையில் வெளிவந்த 'குடியரசு' இதழிலும், வரதராஜுலு நாயுடுவின் தலைமையில் வெளியான 'தமிழ்நாடு' இதழிலும்கூட இவ் வழக்குபற்றிய தலையங்கக் கட்டுரைகள் வெளியாயின.

வழக்கில் நான் இவ்வாறு வெற்றி பெற்றாலும், அது விளைவித்த கிக்கல்கள் தீர்வதற்குச் சிறிது காலமாயிற்று.

27

மலாக்காவிலிருந்து சிங்கப்பூருக்கு

கோலாலம்பூர் சுப்ரீம் கோர்ட்டில் நான் வழக்குரைஞராகத் தொழில் புரியப் பதிவு செய்து கொள்வதை எதிர்த்து, வழக்குரைஞர் சங்கம் செயல்படும் விவரங்களை மலேயா — சிங்கப்பூர் பத்திரிகைகள் வெளியிட்டன. மலாக்காவிலும் ஜோஹூரிலும் நான் தொழில் புரிந்து கொண்டிருந்த காலமல்லவா, அது! கோலாலம்பூர் கோர்ட்டில் நான் தொழில் செய்வதற்கு எதிர்ப்புத் தோன்றிய செய்தியை அறிந்த பிறகு, மலாக்காவிலும் சிங்கப்பூரிலுமுள்ள வழக்குரைஞர் சங்கமும் என்மீது நடவடிக்கை எடுக்கக்கூடும் என்று வதந்தி பரவியது. இந்த விவரங்கள் உண்மையா, இல்லையா என்று அறியும் பொறுமையோ நிதானமோ பொதுமக்களுக்கு இல்லை. அவர்கள் கேள்விப்பட்டதை எல்லாம் நம்புவார்கள். அது மட்டுமன்றி மற்றவர்களிடம் மிகைப் படுத்தியும் கூறுவார்கள். எவ்வாறாயினும், ஜோஹூரிலும் மலாக்காவிலும் என்னுடைய தொழில் வருமானம் கணிசமாகக் குறையக் காரணமாக அமைந்தது அது. புதிய கட்சிக்காரர்கள் வருவதற்குத் தயங்கினர்கள். வழக்கமாக இருந்தவர்கள், நாளடைவில் வேறிடம் செல்லலானார்கள். என்னுடைய துன்பங்களை நன்றாக உணர்ந்து கொண்டிருந்தவர்களும்கூட, புதிய வழக்குகளை என்னிடம் ஒப்படைக்கத் தயங்கினர்கள். அலுவலகத்திலும் வீட்டிலும் செலவுக்குக் கையில் பொருளில்லாத நிலை வந்தது. கடன் கொடுத்தவர்கள் நெருக்கத் தொடங்கினர்கள். மீண்டும் கடன் வாங்குவது தவிர்க்க முடியாததாயிற்று. கடன் கிடைக்கவுமில்லை. 'என்ரோல்மென்ட்' வழக்கை நடத்துவதற்கே ஒரு தொகை தேவையாக இருந்தது. நான் செய்வதறியாமல் மலைத்தேன்.

இதே சமயத்தில் பினாங்கில் வெளியானதோர் பத்திரிகை என்னைக் குறித்துத் தவறான முறையில் ஓர் கட்டுரை வெளிட்டது. இந்தியாவில் தொழிலாளர் இயக்கங்களில் முழுதுமாக நான் ஈடுபட்டிருந்தவன் என்றும், என்னை மலேயாவில் வாழ அனுமதித்தால், பெரும்பான்மை

இந்தியத் தொழிலாளிகளுள்ள இந்நாட்டில் தேவையற்ற குழப்பங் களையும் கலகங்களையும் நான் தோற்றுவிக்கலாம் என்றும் அப் பத்திரிகை எழுதியது. இதைக் கண்ணுற்றதும், அந்தக் கட்டுரையை எழுதி வெளியிட்ட பத்திரிகையின்மீது மான நஷ்டத்துக்கான வழக்குத் தொடுக்க நான் உறுதிகொண்டேன். பிறகு சென்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன். பத்திரிகையின்மீதான வழக்கைத் தொடுத் ததும், பத்திரிகைக்காரருக்கு வாதம் செய்யத் துணிவில்லை. எனவே அவர் மன்னிப்புக் கோரினர். நஷ்ட ஈடாகக் கோர்ட்டில் ஒரு தொகையைக் கட்டினர். வழக்கு முடிந்துவிட்டது. ஆனால், அத் தொகைக்கு மேலாக எனக்கு வழக்கு நடத்தப் பொருள் செலவாயிற்று. அதுவும் நான் கடன்பட்ட தொகையைப் பெருக்க ஒரு காரணமாயிற்று. இக்காலத்தில் என்னை மிகவும் வருத்தியதொரு சம்பவத்தைக் கூறுகிறேன்.

முக்கியமானதொரு கடனைக் கொடுத்து அடைக்கவேண்டியிருந்தது. அதற்காக மிகவும் நெருங்கியதொரு நண்பரை அணுகத் தீர்மானித் தேன். எனக்குக் கொஞ்சமும் உவக்காத இந்தச் செயலை நான் கட்டாயமாக மேற்கொள்ளவேண்டியிருந்தது. கடன் பட்டவன் இதெல்லாம் பார்க்க முடியாது. நாள்தோறும் என் வீட்டுக்கு வரும் நண்பர்தாம். என்னிடம் மிகுந்த நட்புறவுடன் பழகுபவர்தாம். எனினும், எனக்குத் துன்பங்கள் வரத் தொடங்கியதும் அவர் என் வீட்டுக்கு வருவதை நிறுத்திக்கொண்டார். நல்ல பொருள் வசதி யுடைய அவரை வேறு வழியொன்றும் காணுததால் நெருங்கினேன். என்னைக் கண்டதுமே அவர் என் வருகையின் காரணத்தை ஊகித்திருப் பார். நான் என் நெருக்கடி நிலையைத் தயங்கியவாறே தெரிவித்தேன். வேறெங்கும் பணம் கிடைக்காமலிருந்த நிலையையும் குறிப்பிட்டேன்.

'நான் யாருக்கும் பணம் கடன் கொடுப்பது வழக்கமில்லை. கடன் கேட்பவரை எனக்குப் பிடிக்காது' என்றார்.

நான் வீடு திரும்பினேன். சிறிதும் ஈரமற்ற அவருடைய மறு மொழியைக் கேட்டதும் சட்டென்று எனக்குத் துயரம் வெடித்து விட்டது. பண விஷயத்தில் அவர் மிகவும் கெட்டியானவர் என்பது எனக்குத் தெரியும். என்றாலும், என்னுடைய வேண்டுகோளைச் சிறிது பண்புடன் நிராகரித்திருக்கலாம். என் மனதில், இத்தகைய கடன் சுமைகளினாலும், சிறுமைக் கொடுமைகளாலும் வெறுப்பு மிகுந்தது. மக்களைக் காணவும் பிடிக்கவில்லை. அலுவலகத்தில் பணிபுரிய முடிய வில்லை. வீடு திரும்ப மனமில்லை. கடன் கொடுத்தவர்களுடைய கூச்சல் கேட்கப் பொறுக்கவில்லை. சிலர் என்மீது வழக்குத் தொடுத் தனர். கடனை அடைக்க ஒரு வழியும் தெரியவில்லை. எவ்வாறெல்லாம் ஆறுதல் கொள்ள முயன்றாலும் மனம் நைந்து புண்ணாயிற்று. கடன்

பட்டவனுடைய துன்ப அநுபவம் மிகக் கொடியது. அவன் அஞ்சி அஞ்சி வாழ்கிறான். உணவு உறக்கம் எதுவும் நலம் கூட்டுவதில்லை. பலவீனமும் நிராசையும் அவனை மேன்மேலும் வாட்டி வருத்துகின்றன. அவன் சத்தியத்தையே மறுக்கிறான். ஆண்மையைத் துறக்கிறான். மக்களை மறக்கிறான். வாழ்க்கையை வெறுக்கிறான். மரணத்தை விரும்புகிறான்.

ஸ்ரீராமனுடன் ராவணன் போருக்குப் புறப்படுகையில், ராவணனுடைய உள்ளத்து உணர்ச்சிகளைக் கம்பர், "கடன் பட்டார் நெஞ்சம் போய் கலங்கினன் இலங்கை வேந்தன்" என்றுதான் விவரித்திருக்கிறார். கடன் ஒரு மனிதனைக் கோழையாக்கிவிடக்கூடும் என்பதை இது தெளிவாக்குகிறது.

அந்நாட்களில், நான் மனிதர்களில்லாத இடத்துக்குச் சென்று தனித்திருக்க விரும்பினேன். ஒரு நாள் காரிலேறி மலாக்காவிலிருந்து சிறிது தொலைவிலுள்ள ஓரிடத்துக்குச் சென்று நான் கையிலிருந்த 'தத்வ ஞானத்தின் ஆறுதல்' என்ற நூலைப் பிரித்துப் படிக்கலானேன். அவ்வப்போது புத்தகத்தைப் பிரித்துக்கொண்டே சூழலின் இயற்கை எழிலில் ஆழ்ந்துபோனேன். பறவைகளின் இனிய ஒலிசளும், வண்டுகளின் ரீங்காரமும், ஆங்காங்கு மேயும் பசுக்களும் என் சிந்தையைச் சிறிது நேரம் கவர்ந்திழுத்தன. மனத் துயரை ஒருவாறு மறந்திருக்க முயன்றேன்.

அவற்றின் வாழ்க்கை என்னுடைய வாழ்க்கையைக் காட்டிலும் எத்துணை மேலானது என்று தோன்றிற்று. 'அப்போது, அந்தப் பறவைகள், பசுக்கள் போன்று நான் மாறவோ, அவற்றுக்கு என் வாழ்வை அளிக்கவோ முடிந்தால்.....' என்று எண்ணமிடலானேன்.

மனிதனைப்போன்று மற்ற உயிர்களும் துன்பம் அநுபவிக்கவேண்டுமாக இருக்கும். என்றாலும் மன வேதனை என்பது மனிதனுக்குமட்டுமே தனியாக நேரும் அநுபவம். அது உடல் வாதனையைக் காட்டிலும் பொறுக்க இயலாத துன்பமாகும். நிராசை மேலிடும்போதெல்லாம் நான் மன அமைதியை நாடி நல்ல நூல்களில் தஞ்சமடைவேன்.

என்னுடைய துன்பங்களை அறிந்த சில நண்பர்கள் எனக்கு உதவ ஒரு நிதி திரட்டினார்கள். மிகவும் இரகசியமாகச் செய்த முயற்சி அது. தொகை அதிகமில்லை என்றாலும், அதை அளிக்க முன் வந்த நண்பர்களின் அன்புக்கு முன் நான் நன்றிப் பெருக்கால் நெஞ்சு நெகிழ்ந்தேன். மலேயாவிலும் சிங்கப்பூரிலுமிருந்த மலையாளிகள்தாம் அதற்கு உதவியிருந்தனர். என் நிலை சற்றே மாறி முன்னேற்றம் கண்டதும், அவர்களில் சிலருக்கு அத்தொகையை நான் திருப்பிக் கொடுத்திருக்கிறேன். பணம் கொடுத்தவர்களுடைய பெயர்களெல்லாம் எனக்குத் தெரிய

வில்லை. நான் அறிந்து கொள்ள வேண்டும் என்று கருதி அவர்கள் அளிக்கவில்லையே!

இந்நாட்களில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியூட்டிய இரு நண்பர்களின் தோழமை பற்றிக் கூற வேண்டும். ஒன்று 'டாமி' என்று பெயரிட்டு வளர்த்த என் நாய் ஒன்று; ராமன் என்ற பெயருடன் வளர்த்து வந்த குரங்கு இன்னொன்று. அலுவலகத்திலிருந்து திரும்பிஞல் மாலையில் அவற்றுடன் சிறிது நேரம் விளையாடுவேன். ராமனும் டாமியும் கூடி விளையாடுவதைக் காண ரசமாக இருக்கும். ராமனை வழக்கமாகக் கட்டியே வைத்திருப்போம். மாலையில் சிறிது நேரம் விளையாடுவதற்கு அவிழ்த்து விடுவோம். அப்போது வீட்டினுள்ளும், வெளியிலும், மரத் தடியிலும், மரத்தின் மேலும், டாமியின் மேலும் அது தாவிக் குதிக்கும். மகிழ்ச்சி பொங்கும் குரலில் கத்தும். மகிழ்ச்சி, வெறுப்பு, கோபம், துயரம் போன்ற உணர்ச்சி வேறுபாடுகளுக்கேற்ப ராமனின் ஒலியும் வேறுபட்டிருக்கும்.

டாமி மிகுந்த மரியாதை கொண்டு பழகும் நாய். ஒன்றைச் செய்யக் கூடாதென்று ஆணையிட்டால் அது ஏற்றுக்கொள்ளும். என்னைக் காண வருபவர்களிடம் விரோதம் பாராட்டிச் சண்டைக்குப் போகாது. ஆனல் நான் உலவச் செல்கையில் அதை அழைத்துச் செல்லவில்லையென்றல் அது அமைதியிழக்கும். நான் செல்லும் வழியறிந்து பின் தொடர்ந்து வருகையில் நான் கோபம் கொண்டு கடிந்து கொள்ளாமலிருக்கும் பொருட்டு எனக்கு மகிழ்ச்சியூட்ட முயலும். வாலாட்டிக்கொண்டு செல்ல ஒலிகளை எழுப்பியவண்ணம் என்னைச் சுற்றிவரும். வழிகாட்டும் பாவத்துடன் என்முன் ஓடிச்செல்லும். பிறகு திரும்ப ஓடி வந்து என்னுடன் நடந்துவரும். அதன் ஆட்டங்களைக் கண்டால் கோபித்துக் கொள்ளத் தோன்றுது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வழியில் நான் உலவச் செல்வேன். சில நாட்களில் கானகப் பாதைகளிலோ, குறுக்குப் பாதைகளிலோ உலவச் செல்கையில் டாமி உடன் வருவது உறுதுணை யாக இருக்கும். என்னுடைய கடன் பளுவை அறிந்து அதைக் கரைக்கும் வகையில் டாமிக்குத் தன்னல் ஏதேனும் செய்ய முடிந்திருக்கு மென்று தோன்றியிருந்தால் நிச்சயமாக அதைச் செய்திருக்கும். தன் உயிரைத் துறக்கவேண்டுமென்றுல்கூடத் துறந்திருக்கும். நாய் ஒரு அற்புதமான பிராணி. அதன் நட்பும், தியாக சீலமும், பக்தியும் மனிதன் முன் மாதிரியாகக் கொள்ளத்தகுந்த அரும் பண்புகளாகும். ஒரு நாள் காலையில் நான் மலாக்காவிலிருந்து சிறிது தொலைவில் ஒரு வழக்கை முன்னிட்டுச் செல்லவேண்டியிருந்தது. அன்று மாலை நான் வீடு திரும்பியபோது வழக்கம்போல் வீட்டின் முன்வாயிலில் வரவேற்கும் டாமியைக் காணவில்லை. விவரம் பின்னரே அறிந்தேன்.

ஒரு கார் விபத்தில் சிக்கி நாய் இறந்துவிட்டது. வீட்டைச் சுற்றி யிருந்த வெளியிலேயே டாமியை அடக்கம் செய்தோம். டாமியின் பிரிவினால் ஏற்பட்ட துயரம் மறக்க எனக்குச் சில நாட்களாயின. நாயின் பிரிவினால் எங்களுக்கேற்பட்ட துயரைக் காட்டிலும் ராமனுடைய துயரம் குறைவானதல்ல என்பதைக் கண்டு நாங்கள் வியப்புக்குள்ளானோம். அது அவ்வாறு அழுது தன் துயரை வெளி யிட்டது.

என்னுடைய துன்பங்களுக்கெல்லாம் ராமன்தான் காரணம் என்று கூறினர் ஒரு நண்பர். வீட்டில் குரங்கை வளர்ப்பது நல்லதல்லவாம். இந்த நம்பிக்கைக்கு ஆதாரம் என்ன வென்பதை நான் அறியேன். எவ்வாறுயினும், அந்த நண்பர் ஒருநாள் யாரும் அறியாமல் ராமனைக் காட்டில் கொண்டு சென்று விட்டுவிட்டார்.

நான் மறுநாட் காலையில்தான் அந்த விவரமறிந்தேன். ராமன் போய்விட்டதனால் மட்டும் என்னுடைய துன்பங்கள் தீர்ந்து விடவில்லை. மாறாக ராமனுடைய பிரிவினால் என் துயரம் மேலும் கூடியது.

நான் மலேயாவுக்கு வந்து ஓராண்டு நிறைவேறு முன்பே என் அப்புக்குட்டன் அங்கே வந்தான். முவ்வாறில் என் அலுவலகத்தில் தங்கிப் பணி புரிந்தான். மலாக்காவில் எனக்கு நேர்ந்த துன்பம் முவ்வாறு அலுவலகத்தையும் பாதித்தது. 'கடனும் எலியும் விரைவில் பெருகக்கூடியவை' என்றொரு வழக்குச்சொல் உண்டு. இரண்டும் அளவற்ற நாசத்துக்கு வழிசெய்யும். மலாக்காவிலிருந்து முவ்வாறு செல்லும் வழியில் ஒரு பெரிய ஆற்றைக் கடக்க வேண்டும். பல சமயங்களிலும் காரைக் கரையில் நிறுத்திப் படகில் ஏற்றிக்கொண்டு மறுகரை செல்வோம். ஆறு கடந்து செல்வதற்கு ஐந்து நிமிடங்க ளாகும். பல முறைகளிலும் படகிலிருந்து ஆற்றில் குதித்துக் கடன் பட்டிருக்கும் துன்ப நிலையிலிருந்து மீட்சி தேடிக்கொள்ளலாம் என்று என்னுள் தோன்றுவதுண்டு. ஆனால், அவ்வாறு நான் விடுதலை நாடிச் சென்றால், என்னுடைய குழந்தைகளின் நிலை.....? அவர்கள் வேற்று நாட்டிலிருந்தல்லவா அல்லல்களுக்காளாவார்கள்! இந்த எண்ணமே அச்சமயங்களில் என்னை அத்துணிந்த செயலுக்கு ஊக்காமல் தடுத்து நிறுத்தியது. குடும்பம் எதற்காக? குழந்தைகள் எதற்காக? 'எத்துணை நாட்களாக நான் இந்த நரக வாழ்வில் கிடந்து உழலுகிறேன்? இதற்கு ஒரு முடிவை இன்னும் காணுதவனாகவே இருக்கிறேனே?' என்ற எண்ணங்கள் மீண்டும் மீண்டும் என்னுள் தோன்றி அலைக்கழிக்கும். ஒரு பைத்தியக்காரனிலும் பித்தனாய், அறிவு தெளியாத மன உளைச்சல்களில் தடுமாறித் தத்தளித்தேன்.

'நீங்கள் ஏன் இப்படிக் கவலைப்பட்டு உங்களையே வருத்திக் கொள்கிறீர்கள்? வருவது வரட்டும்? என்று என் மனைவி ஆறுதல் கூறுகையில் நானும் அப்படி நினைத்துச் சற்றே உறுதி கொள்வேன். அவ்வளவுக்குப் பெரிய அபாயநிலை ஒன்றும் எனக்கு வந்துவிடவில்லை. கவலைகளில்லாத மனிதர்கள் எங்குதானிருக்கின்றனர்? கடன்பட்டது குற்றமா? துன்பங்களைத் தடுக்கும் வழியறியாமலிருக்கிறேன் என்று தான் கொள்ளவேண்டும். அவற்றை எதிர்த்து நோக்கவேண்டியவ னல்லவா நான்?'

'உங்களுடைய கவலைகள் எத்தகையனவாலுலும் சரி. உங்களுடைய துணிவுக்கும் ஆற்றலுக்கும் விடுக்கும் அறைகூவல் என்று கொள்ளுங்கள். உங்களுடைய எதிர்காலத்தை உறுதியாக அமைக்கும் கற்களே அவை' என்று ஒரு ஆசாரியன் கூறியிருப்பதை நான் அப்போது நினைவு கூர்ந்தேன்.

கோலாலம்பூர் வழக்குரைஞர் சங்கக் கமிட்டியுடன் தொடர்ந்த வழக்கு முடிந்த பிறகு நான் தொழில் புரியச் சிங்கப்பூர் செல்வதாகத் தீர்மானித்தேன். வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்த நாள்களிலேயே என்னுள் அந்த எண்ணம் தோன்றியிருந்தது. ஆனால் அப்போது நான் அதை யாரிடமும் வெளியிடவில்லை. மலாக்காவில் கடன் கொடுத்திருந் தவர்கள் சிலர் வழக்குத் தொடுத்துத் தங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பும் பெற்றிருந்தனர். நான் சிலரிடம் நிலைமையை எடுத்துரைத்து வேண்டிக்கொண்டாலும் அவர்கள் என்மீது பரிவு காட்டத் தயாராக இல்லை. முக்கிய நடவடிக்கைகளில் முனைந்தார்கள். அலுவலகத்திலும் வீட்டிலும் இருந்த சாமான்களை 'ஜப்தி' செய்தார்கள். சட்டப்படி நான் வைத்துக்கொள்ளக்கூடிய சில பொருள்களை மட்டுமே நான் எடுத்துக்கொள்ள முடிந்தது. ஒருநாள் அதிகாலையில், நான் மனைவி குழந்தைகளுடன் காரிலேறிக்கொண்டு மலாக்காவிலிருந்து சிங்கப்பூர் கிளம்பிச் சென்றேன். என்னுடைய சிறிய மகள் பத்மினியின் ஒரு பொம்மை ஜப்தி செய்யப்பெற்ற பொருள்களில் சேர்ந்துவிட்டது. காரில் நாங்கள் ஏறும் தருணத்தில் அவள், 'அப்பா, என் பொம்மையை எடுத்துக்கொள்ளவில்லையே?' என்று நினைவுகொண்டவளாய் அதை எடுக்க இறங்கினாள். அதை எடுத்து வர இயலாது என்ற உண்மையை அவளுக்கு நான் எவ்வாறு எடுத்துரைக்க முடியும்? 'அது அங்கேயே இருக்கட்டும் மகளே, மற்ற சாமான்களுடன் கொண்டு வரலாம்' என்று சமாதானமாகக் கூறி அவளை நான் வண்டியிலேறச் சொன்னேன். பாவம், குழந்தை அதை நம்பினாள். 'ஜப்தி' செய்யப்பட்ட பொருள் களில் விலையுயர்ந்த பல பொருள்கள் இருந்தன. ஆனால், என் சிறிய மகளின் பொம்மைக் குழந்தையை அங்கே விட்டு வருவதில் அவளுக்

கேற்பட்ட துயரம் எனக்கும் உண்டாயிற்று. வழிநெடுக, அவள் அக் குறையை அறியாதிருக்கும்பொருட்டு ஏதேதோ மாறுதலாகப் பேசி னேன். ஆனல், மீண்டும் மீண்டும் அவள் தன் பொம்மையைப் பற்றியே பேசினுள். குற்றமற்ற குழந்தைகள், ஒரு கடனுளியின் துயரங்களை எவ்வாறு அறிவார்கள்?

மலாக்காவிலிருந்து சிங்கப்பூர், சாலை வழியில் 120 மைல் தொலைவில் இருந்தது. நல்ல பாதையாதலால் பயணம் நன்முக இருந்தது. வழியில் பல இடங்களிலும் நாங்கள் தங்கிச் சென்றதால் சிங்கப்பூரை அடையுந் தருவாயில் மாலை குறுகிவிட்டது. சிங்கப்பூரில் எனக்கு ஏராளமான நண்பர்கள் இருந்தனர். அதனல் மிகுந்த நம்பிக்கையுடன் நான் அங்கு வாழ்க்கையை எதிர்நோக்கியிருந்தேன். ஆனல் மலாக்காவிலிருந்து சிங்கப்பூருக்கு வந்தது, 'எண்ணெய்ச் சட்டியிலிருந்து எரியும் அடுப்பில் குதித்தாற் போன்றது'தான் என்ற வகையில் அநுபவங்கள் தொடர்ந்து ஏற்பட்டன.

28

சில வழக்குகள்

சிங்கப்பூரிலும் எனக்குப் பல துயர அநுபவங்கள் ஏற்பட்டன. என்முலும், அந் நகரைக் காட்டிலும் பெரிதும் நான் விரும்பிய இடம் வேறில்லை. அந் நகரின் தூய்மையும், எழிலும், வசிப்பதற்குரிய நல்ல வசதிகளும், அங்கே வாழும் மக்களின் பழகு முறையும், பழக்க வழக்கங் களும், ஆட்சிமுறைப் பாங்கும், பொறுப்பாகப் பணியாற்றும் தன்மையும் சிங்கப்பூரின்பால் என்னை மிகுந்த பற்றுடையவனுக்கின. ஏறக்குறைய ஒன்றரை நூற்முண்டுகளுக்குமுன், அத் தீவு ஒரு மீனவருடைய கிராமமாகத்தானிருந்தது. அதுவே இன்று பல வண்மை களும் வாழ்க்கை வசதிகளும் மிகுந்ததோர் நகராய் வளர்ச்சி பெற்றிருக் கிறது. அந்த வரலாறு கிளர்ச்சியூட்டும் ஓர் கதை போன்றது.

1819ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியில் ஒரு அதிகாரியாக இருந்த 'தாமஸ் ஸ்டான்ஃபோர்ட் ராஃபில்ஸ்' என்பவர் இன்னும் சிலருடன் இத்தீவில் வந்து இறங்கியபோது குற்றிக்காடுகளும் மீனவர் குடில்களுமாக இருந்தது. அந்நாள் அத் தீவு ஜோஹூர் சுல்தான் வசமிருந்தது. ஒரு காலத்தில் சிங்கபுரி என்ற பெயருடையதோர் பெரு

நகர் அத் தீவில் இடம் கொண்டிருந்ததென்றும், பதினென்காம் நூற்றுண்டில் ஜாவானியர் அந் நகரை அழித்தனர் என்றும் வரலாற்றில் செய்தி காணப்படுகிறது. சிங்கபுரியின் இழந்த பெருமைகளை மீண்டும் நிலைநிறுத்த ராஃபில்ஸ் தீர்மானம் கொண்டார். 1824ஆம் ஆண்டில் ஜோஹூர் சுல்தானின் வசமிருந்த அந்தத் தீவு சம்பந்தமான எல்லா உரிமைகளையும் அதிகாரங்களையும் பிரிட்டிஷார் கைக்கொண்டனர்.

அத் தீவின் சிறப்பைப் புவியல் ரீதியாகக் கண்டறிந்திருந்த ராஃபில்ஸ் சிங்கப்பூரின் வளர்ச்சிக்கான முதல் முயற்சிகளைத் தொடங்கி வைத்தார். இன்றும் ஒவ்வொரு வகையில் அவை தொடர்ந்து வருகின்றன. சிறிது காலம் சிங்கப்பூர் இந்திய ஆட்சிக்குட்பட்டும் இருந்திருக்கிறது. 1867ஆம் ஆண்டுதான் அந்தத் தொடர்பு துண்டிக்கப்பெற்றது.

பன்னிரண்டு லட்சம் மக்கள்தொகையுள்ள சிங்கப்பூரில் எட்டரை லட்சம் பேருக்கு மேல் சீனராவர். ஒன்றரை லட்சம் பேர் மலாய் நாட்டவர். இந்தியர் எண்பத்தேழாயிரம் பேர் வசிக்கின்றனர். எஞ்சியவரில் ஐரோப்பியர் முதலானோர் உட்படுவர். சிங்கப்பூரில் இறக்குமதி வரி கிடையாது. அதனல் அங்கே பெருமளவில் வாணிபம் நடக்கிறது. அந்நாள் நான் கண்ட ஆட்சிமுறை வேருனது. இந் நாளைய ஆட்சிமுறையைப் போன்றதல்ல அது. கொஞ்சங்கூடக் கலப்பில்லாத தனிக் காலனியாட்சி முறை அன்று நடைமுறையி லிருந்தது. அதைக் குறித்து யாரும் விஞ எழுப்பவில்லை. அந்த நடை முறைக்குகந்த வகையில், அந்த இடத்தில் அந்நாள் ஆட்சி மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. அந்நாள் யாரும் தேர்தல் முறையும் மந்திரிகளும் அண்மைக் காலத்திலேயே தோன்றி ஆட்சி புரிவார்கள் என்று எண்ணியிருக்கவில்லை. நாட்டைப் பொறுத்த மட்டில், சிங்கப்பூர் எதிர்பாராத வகையில் முன்னேற்றம் கண்டுவிட்டது.

அங்கு வக்கீல்-அலுவலகங்கள் ஏராளமாக இருந்தன. பெரிய அலுவலகங்களின் உரிமையாளர் பெரும்பாலோரும் வெள்ளையரே. சீனர், சட்டைக்காரர், இந்தியர், சிங்களவர் ஆகியோர் அங்குச் சட்டத் தொழில் புரிந்து வந்தனர். இந்தியருடைய எண்ணிக்கை குறைவு தான். அந்நாள் நான்கைந்து இந்திய வழக்குரைஞர்தாம் இருந்தனர்.

மலாக்காவில் அலுவலகம் திறப்பதற்கு வேண்டியிருந்ததைக் காட்டிலும் சிங்கப்பூரில் அலுவலகம் திறப்பதற்கு அதிகமாகச் செலவு செய்யவேண்டி இருந்தது. இங்கே வாழ்க்கைச் செலவும் அதிகம். நிறுத்தி வைக்க இயலாத சில முக்கியமான கடன்களை அடைத்தே தீர வேண்டியிருந்தது. இல்லையெனில் சிங்கப்பூரில் தொழில் நடத்துவதே கடினமாகிவிடும். அலுவலகம் திறப்பதற்கு வேறு பணம் தேவை. இரண்டுக்குமாக ஒரு நல்ல தொகை வேண்டும். அதை நான் எப்படித்

தேடிப் பெறுவேன்? கோர்ட்டுத் தீர்ப்பும் ஜப்தியுமாக வந்திருக்கும் ஒருவனுக்கு யாரேனும் கடன் தருவார்களா? என்றாலும் என்னுடைய தேவைகளை யாரிடமும் கூறுமலே இருந்தால் காரியம் நடக்குமா? ஒரு நண்பரிடம் என்னுடைய நிலையை மனம் திறந்து கூறினேன். அவருக்கு இரக்கம் உண்டாயிற்று. ஆனால் எனக்கு உதவக்கூடிய அளவுக்கு அவர் பொருள் வசதி பெற்றிருக்கவில்லை. அப்படி உதவும் அளவுக்கு வசதி பெற்றிருந்த சிலரை அவர் அணுகினர். அவருடைய 'ஜாமீன்' பேரில் எனக்குத் தேவையானதோர் தொகையை ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியார் கடனாக அளித்தார். நான் சிங்கப்பூரில் தொழில் புரியத் தொடங்கினேன். மிகவும் வருந்திக்கொண்டிருந்ததோர் நெருக்கடி நிலையில் எனக்கு உதவி கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்த நண்பரிடம் எனக்கு அளவு கடந்த நன்றியுணர்வு தோன்றியது. அதை விவரிக்க இயலாது. எந்தவிதமான பலனையும் எதிர்பாராமலே அவர் எனக்கு வழிகாட்டினர்.

தொழில் பிடிக்க வேண்டுமென்று நான் வெகு நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கவில்லை. அங்கே சிவில் வழக்குகளே மிகுதியாக வந்தன. கிரிமினல் கோர்ட்டுக்கும் வழக்குகள் வந்தன. அங்கு நான் ஏற்று நடத்திய சில வழக்குகளை நான் இன்னமும் நினைத்துப் பார்க்கிறேன். மனித இயல்பின் விசித்திரமான வண்ணங்களை, அவற்றின் தனித்த கலப்பில்லாத நிலையில் காண இயலும்.

சிங்கப்பூர் கப்பற்படைத் தளத்தில் பல மலையாளிகள் பணி புரிந்தனர். அவர்களனைவரும் 'ஸெலற்றூர்' என்ற இடத்தில் வசித்தனர். பல சாதிப் பிரிவுக்குட்பட்டிருந்த அவர்கள் எல்லோரும் பெரிய பெரிய கொட்டகைகளில்தான் வாழ்ந்தனர். அவர்களிடையே கோபாலன் என்ற பெயருடைய ஒரு தச்சு ஆசாரி வகுப்பிற்பட்ட இளைஞனும், ஒரு பிள்ளைமார் சாதிக்காரனும் இருந்தனர். இருவரும் ஒரே கட்டடத்தில் இருந்தனர். பிள்ளை தான் உபயோகித்த சோப்பை ஒரு பெட்டியில் வைத்து மூடி, பெட்டியை ஓரிடத்தில் வைத்திருந்தான். கோபாலன் குளிக்கச் சென்றபோது, அதை எடுத்துச் சென்றான். தேய்த்துக் குளித்து விட்டு மீண்டும் அந்த இடத்திலேயே வைத்து விட்டான். பிள்ளை திரும்ப வந்து சோப்பை எடுத்துப் பார்க்கையில், அதை யாரோ எடுத்திருப்பதை அறிந்துகொண்டான். யாரென்று விசாரித்தான். கோபாலன் தான் எடுத்ததாக ஒப்புக்கொண்டான். உயர்சாதியினனாகிய தன்னுடைய சோப்பை ஆசாரியான கோபாலன் எடுத்துத் தேய்த்துக்கொண்டுவிட்டான் என்று அறிந்தபோது, பிள்ளைக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. கோபாலனின் கன்னத்தில் ஓங்கி அடித்துவிட்டான். பிறர் முன்னிலையில் இவ்வாறு தன்னை

அவமானம் செய்துவிடும் வகையிலான குற்றம் எதையும் தான் செய்துவிட்டதாக கோபாலனுக்குத் தோன்றவில்லை. எனினும் அவன் அப்போது வாயைத் திறக்கவில்லை. சிறிது நேரம் அழுதான். அன்றிரவு உணவு கொண்ட பின்னர் எல்லோரும் வந்து படுத்துக்கொண்டனர். பிள்ளை, கொட்டகையின் திறந்த இடத்தில் ஒரு பெஞ்சில் படுத்திருந்தான். நள்ளிரவு நேரத்தில் ஒரு பெரிய சத்தம் கேட்டது. பிள்ளை படுத்திருந்த இடத்திலிருந்துதான் வந்தது. அங்கே சென்று பார்க்கையில், பிள்ளை ஒரு பக்கம் சரிந்து கிடந்தான். அவனுடைய முதுகின் இடப் பக்கம் ஓர் கோடலி பதிந்து தொங்கிக்கொண்டிருந்தது. ஒரே ரத்த வெள்ளம். பிள்ளை உயிரிழந்திருந்தான். அங்கு யாரையும் காணவில்லை.

பிள்ளையைக் கொலை செய்த குற்றத்துக்காக கோபாலனைக் கைது செய்தனர். மாஜிஸ்ட்ரேட் முன் முதல் விசாரணை முடிந்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது. ஜூரர்கள் உதவியுடன் தான் நீதிபதி வழக்கை விசாரணை செய்தார். நான் கோபாலனுக்காக வழக்கை நடத்துவதற்கிருந்தேன். கோபாலன் குற்றம் செய்ததை யாரும் பார்க்கவில்லை. கொலை நிகழ்ந்த அந்நாள், கோபாலனுக்கும் பிள்ளைக்குமிடையே சண்டை நடந்தது பற்றிய சாட்சியங்கள் இருந்தன. ஜூரர்கள் அவனைக் குற்றவாளி என்றே கருதினர்கள். குற்றவாளிக்கு நீதிபதி தூக்குத் தண்டனையளித்தார். அப்பீலுக்குச் சென்றும் பயனில்லை. மேல் கோர்ட்டும் அவனுடைய குற்றத்துக்குரிய அதே தண்டனையை உறுதி செய்தது.

போதுமான சில விஷயங்களிருந்தால், தண்டனையைக் குறைக்கும் அதிகாரம் கவர்னருக்கு இருந்தது. அதற்கான மனுவுக்குக் கையொப்பம் பெறுவதற்காக நான் கோபாலனைப் பார்க்கச் சென்றேன். கொலைத் தண்டனைக்குள்ளானவரை வைத்திருக்கும் தனியறையில் அவன் தனியே அமர்ந்திருந்தான். என்னைக் கண்டதும் கட்டிப்பிடித்துக் கொண்டு 'என்னை எப்படியேனும் காப்பாற்ற வேண்டும்; நான் என் தாய்க்கு ஒரே மைந்தன்' என்று அழுது கெஞ்சினான்; வேண்டினான். அந்தத் துர்ப்பாக்கியம் நிறைந்தவனுக்கு நான் ஆறுதல் கூற முயன்றேன். இரண்டு வாரம் சென்ற பின்னர், அந்தக் கருணை மனு தள்ளுபடியாகிவிட்டதாகத் தெரிய வந்தது. தூக்கு மரத்துக்கு கோபாலனைக் கொண்டு செல்வது மிகவும் கடினமாக இருந்ததாகப் பின்னர் கேள்விப்பட்டேன். கைகளையும் கால்களையும் உதறியும் திமிறியும், தன் ஆற்றலனைத்தையும் உபயோகித்து, இறுதி வரையிலும் தன் உயிரைக் காத்துக்கொள்ளப் போரிட்டானும். சட்டப்படி அந்தக் கொடுஞ் செயலை நிறைவேற்றுபவர்களுக்கு பெரிய பிரச்னையாக

இருந்ததாம். என்றாலும் அவர்கள் அவனுக்குரிய தண்டனையை நிறை வேற்றிவிட்டனர். இவ்வாறு, கோபாலனும் சாதியில்லா உலகுக்குப் பிள்ளையைத் தொடர்ந்து சென்றான்.

சில மலையாளிகள் பிரதிவாதிகளாக இருந்த இன்னொரு வழக்கும் என் நினைவுக்கு வருகிறது. அது சிங்கப்பூரை அடுத்த ஜோஹூரில் நடந்தது. அங்கே ஜப்பானியருடைய ரப்பர் தோட்டத்தில் சில மலையாளிகள் பணி புரிந்தனர். அவர்கள் அங்கேயே தங்கியிருந்தனர். ஒரு நாள் காலையில், அந்தத் தோட்டத்தில், ஒரு பெரிய மரத்தில் ஒரு மலையாளியின் உடல் தூக்கில் தொங்கிக்கொண்டிருந்ததை எல்லோரும் கண்டார்கள். போலீசாருக்கு, யாரோ கொலை செய்து அப்படித் தொங்கவிட்டுவிட்டதாக ஓர் ஐயம் தோன்றியது. அந்தத் தோட்டத்தில் பணி புரிந்துகொண்டிருந்த எட்டுப் பேரையும் அவர்கள் கைது செய்தனர். மாஜிஸ்ட்ரேட் விசாரணை செய்து அவர்களில் ஐவரை விடுதலை செய்தார். எஞ்சிய மூவரின்மீது குற்றம் சுமத்தி உயர்நீதி மன்றத்துக்கு விசாரணைக்கு அனுப்பினர்கள். மாஜிஸ்ட்ரேட் முன்னரும் பிரதிவாதிகளுக்காக நான்தான் வழக்கை நடத்தினேன். அவர்களில் நம்பியார் என்பவர், ஒரு கௌரவமுள்ள மனிதர் என்பது மட்டுமல்ல பணக்காரர். மாஜிஸ்ட்ரேட்டிடம் விடுதலை பெற்றவர்களில் அவரும் ஒருவர். வழக்கில் வெற்றியும் விடுதலையும் கிடைத்த உடனேயே அவர்கள் அங்கிருந்து அகன்றுவிட்டனர். கொலைக் குற்றம் சுமத்தப் பட்ட மற்ற மூவரும் நம்பியாரின் கீழ் வேலை செய்த தொழிலாளிகள். அவர்களுக்காக அந்நாள் வரை நம்பியாரே பணச் செலவு செய்திருந்தார். நம்பியார் சென்றுவிட்ட பிறகு, அவர்களுக்கு வழக்கு நடத்துவதற்குக் கைவசம் பணமில்லை. அதை அவர்கள் என்னிடம் கூறி, எங்களுக்கு ஊரில் சொத்து இருக்கிறது; வழக்கில் வெற்றி பெற்று வெளி வந்துவிட்டால் உங்களுக்கு எப்படியேனும் பணம் தந்துவிடுவோம். இப்போது நீங்கள் உதவி செய்யவில்லை என்றால் எங்களுக்கு மீட்சியே இல்லை' என்று இறைஞ்சினார்கள். அவர்களிடம் பணமில்லை என்றும் யாரும் உதவிபுரிய மாட்டார்கள் என்பதும் எனக்குத் தெரியும். பணம் இல்லை என்ற காரணம் கொண்டு அவர்களை அந்நிலையில் கைவிட எனக்கும் மனமில்லை. 'வழக்கை நடத்துகிறேன்; பணம் பிறகு தந்தாலே போதும்' என்று கூறி அவர்களைச் சமாதானம் செய்தேன். சுப்ரீம் கோர்ட்டில் நான் அவர்களுக்காக வழக்கு நடத்த முன்வந்தேன். வழக்கில் நிறையச் சிக்கல்கள் இருந்தன.

நம்பியார் அத்தோட்டத்தில் ஒரு மண்டோராக (கங்காணி) இருந்தார். தோட்டப் பணியாளரை மேற்பார்வை செய்யும் பணியாளனைக் குறிக்கும் சொல் அது. இறந்தவன் நம்பியாரை எதிர்த்து ஏதோ

பேசினனென்றும், அவனுக்குச் சரியாக ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று நம்பியார் சில தொழிலாளரிடம் கூறியதாகவும், அதன்படி சிலர் அவனைப் பிடித்துக் கழுத்தை நெறித்துக் கொன்று ரப்பர் மரக் கிளையில் தொங்கவிட்டதாகவும் குற்றம் சாட்டி வழக்குத் தொடுத் திருந்தனர். யாரும் கொலை செய்யவில்லை. அவன் தானே தூக்கு மாட்டிக்கொண்டு தொங்கினன் என்பது பிரதிவாதிகளின் வாதம். வழக்கு விசாரணை மூன்று நாட்கள் நீடித்தது. பிரதிவாதிகள் மூவரும் சேர்ந்து கொலை செய்ததாக அஸெஸ்ஸர் (நீதிபதியின் ஆலோசகர்) அபிப்பிராயம் தெரிவித்தனர். நீதிபதியும் அதை ஒப்பினர். அவர் களுக்குக் கொலைத் தண்டனை என்று தீர்ப்பு எழுதினர்.

நான் அவர்களுக்காக அப்பீல் கொடுத்தேன். மூன்று நீதிபதிகள் முன் விசாரணை நடந்தது. மேல் கோர்ட் அந்தத் தண்டனையை உறுதி செய்தது. தண்டனையைக் குறைக்கவேண்டி நான் சுல்தானுக்கு மனு அனுப்பினேன். அதில் கையொப்பம் பெறுவதற்காக நான் பிரதிவாதி களைக் காணச் சென்றபோது, அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி அறைகளில் இருக்கக் கண்டேன். 'எங்களைக் காப்பாற்றுங்கள்; எங்க ளுடைய எல்லாச் சொத்துகளும் உங்களுக்குத்தான்' என்று அவர்கள் கண்ணீர்விட்டுக்கொண்டு கூறினர்கள். ஒரு திங்கட்கிழமை காலையில் தான் அவர்களைத் தூக்கிலேற்றக் குறித்திருந்தனர். ஞாயிறன்று, அவர் களுடைய தண்டனை பத்தாண்டுக் காவல் தண்டனையாகக் குறைக்கப் பட்ட செய்தி கிடைத்த உடனே அவர்களுக்கு விவரம் தெரிவித்தேன். அதற்குப் பிறகு நான் இன்னொரு வழக்கைப் பற்றிய விவரங்களைப் பிரதி வாதியிடம் அறிவதற்காகச் சிறைக்குச் சென்றபோது பழக்கப்பட்ட கைதிகளாக அவர்களை அங்குக் கண்டேன். உடல்நிலையும் நன்றாகவே இருந்தது. 1941ஆம் ஆண்டில் மலாய் நாட்டில் போர் மூண்டபோது, சிறைக் கைதிகளை விடுதலை செய்தபோது அவர்களையும் விடுதலை செய்தனர். தூக்கு மரத்தின் சுருக்கிலிருந்து மீண்டும், அவர்கள் விடுதலையும் பெற்று வெளிவந்தனர். பின்னர் நான் அவர்களைக் காணவில்லை.

மற்றொரு வழக்கைப் பற்றிக் கூறுகிறேன். அதுவும் ஜோஹூர் தோட்டத்தில் நடந்ததுதான். சின்னப்பன் என்ற பெயருடைய ஒரு தொழிலாளி தோட்டத்தில் வேலை செய்தான். ஓராண்டு வேலை செய்த அவன் கையில் சிறிது பணமும் சேர்த்து வைத்திருந்தான். இதை அறிந்து இன்னொரு தொழிலாளி, தன் மகள் பொன்னம்மாளைச் சின்னப்பனுக்கு மணம் செய்து கொடுப்பதாக வாக்குக் கொடுத்து, பல தவணைகளாக அவனுடைய பணத்தை எல்லாம் வாங்கிக்கொண்டான். கல்யாணக் கெடுவை மட்டும் சாக்குப்போக்குச் சொல்லி நீட்டிக்

கொண்டு போனான். சின்னப்பனுடைய கைப்பணம் கரைந்ததும் பொன்னம்மாவை மற்றொருவனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதாக நிச்சயம் செய்தான். இந்த விவரத்தைச் சின்னப்பன் அறிந்து கொண்டான். 'பொன்னம்மா என்னுடையவள். அவள் மற்றொருவனை எப்படி மணம் புரிய முடியும்? ஒருபோதும் நடக்காது!' என்ற சின்னப்பன், அவளை எவ்வாறுயினும் தானேதான் மணந்துகொள்ள வேண்டும் என்று நிச்சயம் செய்தான். பொன்னம்மாவும் அதே தோட்டத்தில்தான் வேலை செய்தாள். ஒரு நாள் காலையில் அவன் அவள் வேலை செய்த இடத்துக்குச் சென்று, அவளை வெட்டிக் கொன்றான். தன்னைப் பொன்னம்மா விரும்பியிருந்தாள் என்பது அவனுக்குத் தெரியும். தந்தை சொல்லும் ஒருவனை மணந்துகொள்ள வேண்டிய கட்டாய நிலையில் ஏதும் செய்வதற்கியலாமலிருந்தாள் என்பதையும் அவன் புரிந்துகொண்டு, அது நடக்கக்கூடாது என்று அவன் தடுத்துவிட்டான்.

கொலை நிகழ்ந்தபோது அங்கு யாரும் இல்லை. சின்னப்பன்தான் அதைச் செய்தான் என்று உறுதி செய்யப் போதுமான சாட்சியங்களில்லை. சின்னப்பன் வாயைத் திறக்காமலிருந்திருந்தால் அவன் தண்டனையிலிருந்து மீண்டிருப்பான். ஆனால், அவன் அதற்குத் தயாராக இல்லை. 'பொன்னம்மா தனக்காகச் சொர்க்கத்தில் காத்துக் கொண்டிருப்பாள். அங்கே தான் சீக்கிரம் போய்விட வேண்டும்' என்று நம்பினான்; துடித்தான். அவனுக்காக நான் வழக்காடினேன். ஆனால், சின்னப்பன் பிடிவாதமாக இருந்ததால் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. தூக்குமரத்துக்கு அவன் கல்யாண மண்டபத்துக்குச் செல்லும் மணமகனைப் போன்ற மகிழ்வுடன் சென்றான். 'பொன்னம்மா, இதோ வந்துவிட்டேன்!' என்றுதான் தூக்கு மேடையிலும் அவன் இறுதியாகக் கூவினானாம்!

இந் நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு, மாத்ருபூமி வார இதழில் 'சொர்க்கத்தில் திருமணம்' என்ற தலைப்பில் நான் ஒரு சிறு கதை எழுதினேன்.

எனக்குக் 'கேஸ்'கள் வந்தாலும், வருமானம் என் செலவுக்குப் போதுமானதாக இல்லை. எனவே வேறு வகையிலும் வருமானம் தேட வேண்டியிருந்தது.

சிங்கப்பூரில், ஓய்.எம்.ஸி.ஏ.-க்காரர்கள் ஓர் வணிகப்பள்ளி நடத்தி வந்தனர். வாரத்தில் இரண்டு நாட்கள் அங்கு மாணவர்களுக்குக் கற்பிக்கும் பணியையும் மேற்கொண்டேன். வகுப்புகள் மாலை நேரத்திலிருந்ததால், என்னுடைய மற்ற வேலைகளுக்கு அது இடையூறாக இல்லை. சொற்பமான தொகைதான் அதன் வாயிலாக வந்த

தென்றலும், அன்றைய நிலைக்கு அது பெரிதும் உதவியாக இருந்தது. ஆறு மாதம் அப் பணி புரிந்தேன். ஆசிரியத் தொழில் புரியவும் இவ்வாறு ஓர் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது.

29

நிராசைக்கிடையே

நமது இன்ப-துன்பங்கள் வெற்றி-தோல்விகள் ஆகியவை, குறிப்பாகவும் முக்கியமாகவும் நம் முயற்சிகளையும் ஆற்றலையும் பொறுத்தே ஏற்படுகின்றன. ஆனல் நம்மால் அறிய முடியாத தவிர்க்க இயலாத சில காரணங்களும் நமது துன்பங்களுக்குக் காரணமாகின்றன. செய்யவேண்டியதனைத்தும் செய்தாலும் அநுபவம் நேர்மாறுக நேரும் போது நிராசை தோன்றுவது இயல்பே. காலத்தின் வலிய கொடுங்கரங்களினின்றும் மீள்வதற்கு இயலாதோ என்று தோன்றும். எனக்கு அவ்வாறு பல சமயங்களில் தோன்றியிருக்கிறது. இதுதான் செய்வேன்; இப்படிச் செய்யமாட்டேன் என்றெல்லாம் மனதில் திட்டமிட்டு முயன்றலும் என் முயற்சிக்குகந்தபடி நான் எண்ணியது நடக்கவில்லை. அநுபவங்கள் எதிர்பாரா வகையில் வேறு வழியில் திருப்பி விடுவதாக அமைந்தன. மலாக்காவில் எனக்கு ஏற்பட்ட துன்பங்கள் வரக்கூடாதென்று நான் மிகவும் கருத்தாக இருந்தும் இரக்கமற்ற விதி என்னைப் பின்னும் தொடர்ந்துதான் வந்தது. என்னைக் கடுமையாகவே வஞ்சித்தது.

சிங்கப்பூர் வந்து ஓராண்டுக் காலமானதும். முதலில் ஓர் ஐரோப்பிய வக்கீலை வைத்துத் தன் வழக்கை நடத்திய ஒரு கட்சிக்காரன், என்னை நாடி வந்து தனக்காக என்னை வழக்கு நடத்தும்படி வேண்டினன். இவ்வாறு வக்கீல்களை மாற்றிக்கொள்வது வழக்கம்தானெனினும் மாற்றும்போது சில நடைமுறைகளை அங்கே வழக்கத்தில் கொண்டிருந்தனர். அதுகாறும் வழக்கை ஏற்று நடத்தியதற்கான தொகையை அந்த வழக்குரைஞருக்கு அளித்தாலே பத்திரங்களைத் திரும்பப் பெற முடியும். தனக்குரிய பணம் கிடைக்கும் வரையிலும் வழக்கு சம்பந்தமான காகிதங்களைத் தன் வசம் வைத்திருக்க அந்த லாயருக்கு அதிகாரம் கூண்டு. கட்சிக்காரன் பணம் கொடுக்கவில்லை என்றால், அவருக்குச் சேரவேண்டிய தொகையைக் கட்சிக்காரனிடமிருந்து

பெற்று அளிக்கும் பொறுப்பைப் புதிய வக்கீல் ஏற்றுக்கொள்வார். இந்த விவரத்தைப் புதிய வக்கீல் பழைய வக்கீலுக்கு எழுத்து மூலமாக அறிவித்தால் அவர் காகிதங்களைப் பத்திரமாக, அனுப்பிவைப்பார். கட்சிக்காரரிடமிருந்து பணத்தைப் பெற முடிந்தாலும் முடியாவிட்டாலும், புதிய வக்கீல் பழையவருக்குச் சேரவேண்டிய கட்டணத்தைக் கொடுத்தாக வேண்டும்.

என்னை நாடி வந்து கட்சிக்காரன் வழக்கை ஏற்று நடத்தக்கோரிய போது, நான் ஐரோப்பிய லாயருக்கு வழக்கு சம்பந்தமான காகிதங்களை அனுப்பக் கோரிக் கடிதம் எழுதினேன். பணம் ஏதேனும் கொடுக்கவேண்டி இருந்தால் நானே தருவதாகவும் ஏற்றுக் கொண்டேன். இந்த உறுதியின் பேரில் அவர் எனக்குக் காகிதங்களை அனுப்பி வைத்தார். அவருக்குச் சேரவேண்டிய தொகை நூறு டாலர் இருந்ததாகவும் நான் அறிந்தேன். வழக்கு விசாரணைக்கு வரும் வரையிலும் இவ்வாறான சில முன்னேற்பாடுகளில் நான் முனைந்திருந்தேன். விசாரணைக்கு ஒரு வாரம் இருக்கையில், அந்த ஐரோப்பிய வக்கீலிடமிருந்து எனக்கு இன்னொரு கடிதம் கிடைத்தது. அந்த வழக்கில் வாதாட, கட்சிக்காரர்கள் மீண்டும் அவரையே அணுகியதாகவும், அதனால் காகிதங்களை அவருக்கே அனுப்பிக் கொடுக்கவேண்டும் என்றும், எனக்குச் சேரவேண்டிய பணம் எதேனும் இருந்தால் அதைத் தாம் அனுப்புவதாகவும் அவர் எழுதியிருந்தார். நான் உடனே காகிதங்களைத் திருப்பி அனுப்பிவிட்டேன். எனக்கு நூற்று இருபத்தோரு டாலர் சேரவேண்டுமென்று தெரிவித்தேன். அதை அவர் அளிப்பதாக ஏற்றுக்கொண்டார்.

சில நாட்கள் சென்ற பின்னர் அவருக்கு நான் அளிப்பதாக ஏற்ற நூறு டாலரைக் கேட்டு அவர் எழுதினர். எனக்குச் சேரவேண்டிய நூற்று இருபத்தோரு டாலரிலிருந்து நூறு டாலரை எடுத்துக்கொண்டு எஞ்சிய இருபத்தோரு டாலரை அனுப்பி வைக்கக்கோரி நான் மறுமொழி அனுப்பினேன். அதை அவர் பொருட்டாக்கவில்லை. நான் அனுப்ப வேண்டிய நூறு டாலரை முதலில் அனுப்பவேண்டும் என்றும் பின்னர் தாம் நூற்று இருபத்தோரு டாலரைத் தருவதாகவும் அவர் எழுதினர். எனக்கு இது வல்லடி வழக்காகத் தோன்றியது. நான் அவருக்குக் கொடுக்க வேண்டியதைக் காட்டிலும் அதிகமாக அவர் எனக்குக் கொடுக்க வேண்டும் என்றிருக்கையில், அந்தப் பணத்தை அவர் இவ்வளவு நெருக்கிக் கேட்டது எனக்குக் உசிதமாகத் தோன்றவில்லை. எனக்கும் அவ்வாறு பிடிவாதமாக இருக்க முடியும். ஏனெனில் இது சம்பந்தமாக எங்களிடையே கடிதப் போக்குவரத்து நடந்திருக்கிறது. வாக்களித்தபடி நான் செயல் புரியவில்லை என்று

வழக்குரைஞர் சங்கத்துக்கு அறிவித்து அவர் என்மீது குறை கூறினர். கமிட்டியார் என்னிடம் விளக்கம் கேட்டார்கள். நான் என்னுடைய நிலைமையைக் கமிட்டியாரிடம் எடுத்துரைத்தேன். மற்றவரிடமிருந்து எனக்கு நான் கொடுக்க வேண்டியதைக் காட்டிலும் அதிகமான தொகை வரவேண்டி இருந்தாலும், முதலில் நான் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துத் தீர்க்கவேண்டியதுதான் பொதுவாக வக்கீல்கள் கடைபிடிக்கும் முறை என்றும், அதை நான் மறுப்பது மரியாதைக்கு விரோதமாகும் என்றும், அதனல் என்னுடைய நடவடிக்கையை வழக்குரைஞர் சங்கம் கண்டனம் செய்து கோர்ட் டாருக்கும் உணர்த்தியது. வழக்குரைஞர் சங்கக் கமிட்டியின் முடிவை நீதிபதி ஏற்றுத் தீர்ப்பளித்தார். அதற்குத் தண்டனையாக நான் இரண்டு மாதங்கள் தொழில் நடத்த முடியாதென்று விதித்து, நீதிமன்றச் செலவை நான் சங்கத்துக்குக் கொடுக்கவேண்டும் என்றும் ஆணையிட்டார். அந்தத் தொகை அறுநூற்றைம்பது டாலர். சிங்கப்பூரில் தொழில் பிடித்து நிலைக்க இருந்த காலத்தில் எனக்கு நேர்ந்த பெரிய நஷ்டம் இது.

இரண்டு மாத காலம் வருமானம் கிடையாதென்று தீர்ந்தது. அது மட்டுமில்லை. என்னுடைய எதிர்காலமே ஆபத்துக்குள்ளாகி விபரீத நிலைக்கு வந்துவிட்டாற்போன்றதோர் அச்சம் என்னுள் கவிந்து கொண்டது. அவர் விழைந்த நூறு டாலரை முதலில் கொடுத்து விட்டு நூற்றிருபத்தோரு டாலரைக் கேட்டுப் பெற்றிருக்கமாட்டேனே என்று நினைத்தேன். என்னிடம் சிலர் அவரிடம் வம்பு வைத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளாமல் இல்லை. ஆனல் நான் நடந்துகொண்ட முறை சரியானதுதான் என்று நம்பினேன். இன்றும் நான் அக் கருத்தில் மாறுபடவில்லை.

விவரிக்க இயலாத துன்பங்களை அந்நாளில் நான் அநுபவித்தேன். மக்களைக் காணப் பிடிக்கவில்லை. நகரிலிருந்து நான்கு மைல் தொலை வில் என் வீடு இருந்தது. எதற்காகவேனும் நகரத்துக்குச் செல்ல வேண்டி வரும்போது, நடந்து செல்ல வேண்டிய நிலை வந்துற்றது. பஸ் செலவுக்குக் கொடுப்பதற்கான காசு கூட இல்லாமல் உச்சி வெயிலில் நான் நடந்து சென்றதை நினைத்துப் பார்க்கிறேன். அந்நாட்களில் என் உள்ளம் சுமந்திருந்த துயரங்களை எவ்வாறு விவரிப்பேன்!

இரண்டு மாதங்களை எப்படியோ தள்ளினேன். மீண்டும் தொழில் தொடங்கினேன். கடன் கொடுத்தவர்கள் அதற்காகவே காத்திருக் கின்றனரே! நான் தேடிய பொருளில் வீட்டுச் செலவுக்கு மட்டும் போதும் போதாததுமான தொகையை எடுத்துக்கொண்டு எஞ்சிய தனைத்தும் கடன் கொடுத்தவர்களுக்குத் திருப்பிக் கடனடைக்க முயன்றேன் என்றாலும் தொல்லைகள் குறையவில்லை.

பலதரப்பட்டவர்களிடம் நான் கடன் பட்டிருந்தேன். நான் யாரிட மேனும் பேசிக்கொண்டிருக்கும் சமயங்களில் கடன் கொடுத்தவர் களில் சிலர் வருவார்கள். அவர்களைக் கண்ட மாத்திரத்தில், நான் உடல் வியர்க்கத் தளர்ந்து போவேன். பிறருடன் நான் உரையாடிக் கொண்டிருக்கையில் கடனைத் திருப்பிக் கேட்கலாகாது என்று ஒதுங்கும் பண்பாளரல்லவே அவர்கள்! எனவே அவர்களைக் கண்டதுமே எழுந்து அவர்களைச் சற்று அப்பால் கூட்டிச் சென்று அப்போதைக்குக் கைகளில் இருப்பதைக் கொடுத்து அனுப்புவேன். அதை அவர்கள் கணக்கில் வைத்துக்கொள்ள மாட்டார்கள். அது அப்போதைக்கு அவர்களுக்கு அளிக்கும் லஞ்சத்தைப் போன்றது. நான் கொடுக்க வேண்டிய முதலிலோ வட்டியிலோ அதைச் சேர்க்கமாட்டார்கள்.

வேறு ஒரு வகையினர் உண்டு. அவர்கள் தந்திரசாலிகள். என் னுடைய துன்பங்களுக்கு இரங்குவார்கள். என் கவலைகளுக்காக அவர்கள் தெய்வத்தை வேண்டிக்கொள்வதாகச் சொல்வார்கள். அவர் களுக்குத் தெரிந்த கட்சிக்காரர்கள் எனக்கு ஏதேனும் பணம் கொடுக்க வேண்டுமென்றால் அந்த விவரத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டிருப் பார்கள். கட்சிக்காரர்கள் வந்து சென்ற உடனே அவர்கள் பணம் கேட்டுக்கொண்டு வருவார்கள். கெடு வைக்க முடியாது. கைக்குக் கிடைப்பதில் பாதியோ, முக்காலோ கடனுக்காகப் போய்விடும். கடன் கொடுத்த அவருக்கும் ஏதேனும் கோர்ட்டுக் காரியம் இருக்கும். அதற்கும் உதவக் கேட்பார். அதற்குப் பணம் எதுவும் கொடுக்க மாட்டார். என்னால் கேட்கவும் முடியாது.

இந்த இரு வகையினருக்கும் மேலாக ஒரு படி உயர்ந்தவர், நெஞ்சில் ஈரமற்ற மூன்றும் வகையினர். அவர்களை நேராகக் காண முடியாது. அவர்களுடைய காரியங்களெல்லாம் வக்கீல்களைக் கொண்டே நிறை வேற்றிக்கொள்வார்கள். கெடு கேட்டாலும், தொகை கொஞ்சம் குறைவாக இருக்கிறதென்றாலும், வேறு எதுவானாலும், வக்கீலிடம் கூறிக்கொள்; அவரிடம் பொறுப்பை விட்டுவிட்டேன் என்பார்கள். ஆனால், வக்கீலைக் கேட்டால், தம் கட்சிக்காரர் தமக்கு அறிவுறுத்திய படியே நடப்பதாகவும், தாமாக எதுவும் செய்வதற்கில்லை என்றும் கையை விரிப்பார். எந்த வகையான இரக்கமும் அவர் காட்ட மாட்டார். ஒருவரிடம் நான் கடனைப் பெற்றிருந்த ஆயிரத்து ஐநூறு டாலர் தொகையை, அசலும் வட்டியும், கோர்ட்டு தண்டமுமாக, நாலாயிரத்து முந்நூறு டாலர் கொடுத்துத் தீர்த்தேன். இடையே, அவர் பதின்மூன்று தடவைகள் வீட்டை ஜப்தி செய்திருக்கிறார். இங்கே கடன்காரர் ஒருவரைப் பற்றித்தான் கூறியிருக்கிறேன். இப்படி எத்தனையோ கடன் கொடுத்தவர்களுடன் நான் மோத வேண்டி யிருந்திருக்கிறது.

'மேனன் வருவதைப் பார்த்தால் மனக்கவலை ஏதும் இல்லாத ஆளாகத் தோன்றுகிறது' என்று என்னைக் கண்ட ஒரு வக்கீல் நண்பர் இன்னொரு வக்கீலிடம் ஒரு நாள் கூறக் கேட்டேன். சிலர் என் துன்பங்களையும் கவலைகளையும் அறிந்தவர்கள். என் உள்ளத்துள் அழுந்திக் கனிந்து என்னை உருக்கும் கவலைகளை நான் வெளிக் காட்டாவண்ணம் அடக்கிக்கொள்ள எத்தனை முயற்சி செய்தாலும், சில சமயங்களில், முகத்தில் அவற்றின் சாயை படிந்துவிடும்.

இக்காலத்தில் நடந்த சம்பவம் ஒன்றைக் கூறுகிறேன். ஒருநாள், ஒரு கடன்காரன், என்மீது வழக்குத் தொடுத்து, என் சொத்துகளைப் பெறுவதற்கான தீர்ப்புப் பெற்று, என் அலுவலகச் சாமான்களனைத்தையும் ஜப்தி செய்துகொண்டு சென்றான். அன்றே கடன் கொடுத்தவர்களில் வேறு சிலர், நான் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகைக்காக, வழக்குப் பதிவு செய்திருந்தனர். அடுத்து அவர்களும் தத்தமக்குச் சேர வேண்டிய கடன்களுக்காக ஜப்தி செய்ய வருவார்கள். நான் தங்கியிருந்த வீட்டு வாடகை பாக்கிக்காக, வீட்டுக்காரிக்கும் ஜப்தி செய்து கொள்வதற்கான தீர்ப்புக் கிடைத்திருப்பதாக அறிந்தேன். தொகை அதிகமில்லை என்றாலும், அந்த நிலையில் பெரிய தொகை சிறிய தொகை எல்லாம் ஒன்றுகவே இருந்தது. நிராசையினால் தளர்ந்து சோர்ந்த மனதுடன் நான் மாலையில் வீடு திரும்பினேன். இரண்டு மூன்று மாத மின்-கட்டணம் கட்டியிராததால் தொடர்பை அன்று துண்டித்துவிட்டனர் என்று வீடு வந்த பின்னரே அறிந்தேன். ஒரு லாந்தர் விளக்கையும் இரண்டு மூன்று மெழுகுவர்த்திகளையும் ஏற்றி வைத்துக்கொண்டு என் மனைவியும் குழந்தைகளும் இருந்தனர். அன்று நடந்த சம்பவங்களைக் குறித்தோ, மறுநாள் நடக்க இருந்த விஷயங்களைக் குறித்தோ என் மனைவியிடம் நான் எதுவும் கூறவில்லை. மனதில் தாங்க இயலாத துன்பச் சுமை என்னை அழுத்தியது. நான் உடுப்புகளைக் களைந்து, மாற்றுடை அணிந்து வராந்தாவுக்கு வந்து ஓர் நாற்காலியில் அமர்ந்தேன். ஜன்னல் படியில் ஒரு மெழுகுவர்த்தி ஒளி பரப்பிக்கொண்டிருந்தது. அங்கிருந்து வெளியே நோக்குகையில் இருள் அப்பிக் கிடந்தது. என்னுடைய எதிர்காலமே அத்தகைய காரிருளாகத் தோன்றிற்றுப்போலிருந்தது. அடுத்த அறையில் குழந்தைகள் மெதுவான குரலில் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தது செவியில் விழுந்தது. வயதில் முதிர்ந்திராத அவர்களுக்கேது கவலையும் துயரமும்! நான் அங்கு அமர்ந்திருந்ததையே அவர்கள் அறியவில்லை. சிறிது நேரம் அப்படியே அமர்ந்திருந்தேன்.

மனைவி குளிப்பதற்காகச் சென்றாள். சிறிது நேரம் சென்றபின் நான் அங்கிருந்து எழுந்து படுக்கை அறைக்குச் சென்றேன். கதவைச்

சாத்தினேன். குழந்தைகள் இதொன்றையும் கவனிக்கவில்லை. அன்றைய நிகழ்ச்சிகளைக் காட்டிலும் மோசமான நிலைக்கு என்னைத் தள்ளக்கூடிய நிகழ்ச்சிகள் காத்திருக்கும் அச்சமே என்னை வாட்டிக் குலைத்தது. என்னுள் வளர்ந்து என்னை ஆட்கொண்ட பலவீனத்தை எதிர்த்து வெல்லும் ஆற்றல் என்னிடம் இல்லாததாயிற்று. உடுப்புகள் மாட்டியிருந்த 'ஸ்டாண்டி'லிருந்து இடுப்புப் பட்டையை எடுத்துக் கழுத்தில் சுற்றிக்கொண்டு கையினால் பிடித்து அழுத்தினேன். அதே நிலையில் இரண்டு நிமிடங்கள் நின்றேன். நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பது எனக்கே நிச்சயமில்லாததாக இருந்தது. சட்டென்று கதவு திறக்கும் சத்தம் கேட்டது. லாந்தரும் கையுமாக அம்மு ஈரம் மாற்றிக்கொள்ள உள்ளே வந்தாள். என் முட்டாள் தனம் வெளிப்பட்டுவிட்டது.

'என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?' என்று கேட்டவாறு அம்மு என் கையைப் பற்றினாள். நான் எதுவும் செய்யாத மாதிரியில் நின்றாலும் அம்முவுக்கு என் செய்கை இனம் விளங்காமலில்லை. நாலைந்து நிமிடங்கள் சென்றபின் அம்மு அங்கு வந்திருந்தாளானால் என்ன நடந்திருக்கக்கூடும் என்பதை இப்போது கூற முடியாது. மிகுந்த கவலையுடனும், தவிப்புடனும் நாங்கள் அந்த இரவைத் தள்ளினோம்.

எதிர்பார்த்ததெல்லாம் மறுநாள் நிகழவில்லை. இரக்க மனம் கொண்ட வீட்டுக்காரி, வாடகை பாக்கியை இரண்டு வாரம் சென்ற பின் பெற்றுக்கொள்ள இசைந்தாள்.

இத்தகைய கடுந்துன்பங்களில் உழல நான் என்ன தீச்செயல் புரிந்தேன்? ஒருவர் தம்முடைய செயல்களுக்கேற்ற அநுபவங்களையே எய்துவர் என்று சொல்வதுண்டு. சாதாரணமாக அவ்வாறுதான் ஏற்படுகிறதா? தத்துவ ஞானமும் சில சமயங்களில் நம்மை முற்றிலும் கைவிட்டுவிடுகிறது. நான் அத்தகையதோர் நிலையில் தான் இருந்தேன். வாழ்க்கை தாள இயலாததாகத் தோன்றியது. எந்த வகையிலேனும் எனக்கு மரணம் வந்தெய்துமானால் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றிருப்பேன். என்றாலும் தற்கொலை செய்து கொள்ள மனம் துணியவில்லை. அதற்கு வேண்டிய தைரியம் இல்லை.

பலவாறாக எண்ணி எண்ணி அலைந்த மனதை அடக்க முயன்றேன். ஆனால் என் முயற்சியில் வெற்றி காண முடியவில்லை. தடுக்கவொண்ணா இன்னல்கள் வருங்காலை, அதைப் பொறுத்துக் கொள்வதுதான் தைரியம். பிறருடைய துணிச்சலை நாம் புகழ்ந்து பாராட்டவில்லையா? ஏன் அத்தகையோரைப் பின்பற்றக்கூடாது நான்? ஆபத்துக்காலத்தில் நல்லவர் நிச்சயமாக எதிர்நின்று சமாளிக்கும் துணிவு வேண்டும்?

துன்பம் அநுபவிக்காத மனிதன் இருக்கிறானு? கடன்பட்ட சில நண்பர்களைக் குறித்துப் பிறர் கூறும் சொற்களை நான் கேட்டிருக்கிறேன்.

'திருடர்கள். வேண்டுமென்றே கடனைக் கொடுக்காமலிருப்பார்கள்' என்றெல்லாம் கூறுவார்கள். அவர்களுடைய நிலைமையையும் இயல்பையும் நன்குணர்ந்த எனக்கு அச் சொற்களைச் செவியுறுகையில் வேதனையுண்டாகும். 'கடன்காரனுல் சத்தியத்தைக் காக்க முடியாது' என்று ஒருவர் கூறியதை நான் நினைத்துப் பார்க்கிறேன். ஒரு வகையில் அது உண்மையே. குறித்த காலத்தில் பணத்தைத் திருப்பி விட முடியாது என்று அறிந்துகொண்டேதானே பல முறைகளிலும் ஒரு குறித்த நாளில் திருப்பிக் கொடுப்பதாகக் கடன் பெற்றவர்களிடம் வாக்குக் கொடுக்கவேண்டி வருகிறது? எவ்வழியும் காணுமலிருக்கையில் அப்போதைய மீட்சிக்காக கூறும் வாக்குத்தான் அது. கடன் பட்டு விட்டால், அத்தகைய நிலைகளுக்குட்பட்டாக வேண்டி வருவது உண்மையே.

பெரிய அபாயங்கள் நேரும்போது, நம்மில் உறங்கிக் கிடக்கும் ஆற்றல் அனைத்தும் வெளிப்படும். நீந்தத் தெரியாதவன் என்ற நிலையிலுள்ளவன் மட்டுமல்ல; அதுகாறும் நீரில் இறங்கவும் அஞ்சியிருந்த ஒருவன் தன் குழந்தை குளத்தில் விழுந்ததும், உடனே தாவிக் குதித்துக் குழந்தையைக் காப்பாற்றியதாகக் கேட்டிருக்கிறோம். அதே போன்று, மிகுந்த நெருக்கடியில் சிக்கித் தவிக்கையில், எதிர் பாரா உதவிகள் நம்மைத் தேடி வருவதுண்டு. அந்த அநுபவத்தைத்தான் நான் முன்னர் கூறியுள்ளேன்.

ஒரு கடனை அடைக்க வழி தெரியாமல் நிராசை மேலிட நான் வருந்திக்கொண்டிருக்கையில் ஒரு நண்பர் எனக்குத் தேவையான பொருளைக் கொண்டு வந்தார். அப்போது என்னுல் வெளியிட இயலாத வியப்பெய்தினேன். நீதிமன்றத்தில் கட்ட வேண்டிய நேரத்துக்குச் சரியாகப் பதினைந்து நிமிடங்களுக்கு முன்பு அவர் பணத்தை எடுத்துக்கொண்டு வந்தார். பல நாட்கள் சென்ற பின்னர், இன்னொரு வகையில் ஒரு சந்தர்ப்பத்தில் என்னுல் உதவி செய்ய இயன்றபோது அவர் தம் நன்றிப் பெருக்கை வெளியிட்டார்.

இடுக்கண்களை எதிர் நோக்கி இருக்கும் சந்தர்ப்பங்களில், கடவுள் மீதான நம்பிக்கையைக் கைவிடாமல் நல்லது வரும் என்றே நம்பி இருப்பது நலமாகும். எப்போதும் அவ்வாறு நம்பி இருக்கத்தான் முடியாது. நாம் உணர்ச்சி வசப்பட்டுச் சில சமயங்களில் துயரம் வெடிக்கக் கண்ணீர் விடுவோம். எத்தனை தடவைகளில் நான் அவ்வாறு கண்ணீர் விட்டிருக்கிறேன்? ஓரிடத்தில் தனித்திருந்து

குழந்தை போன்று விம்மி வெடிக்க அழுவது, எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது!

'அழுவது கோழைத்தனமல்லவா' என்று சிலர் வினவக்கூடும். ஆம்—கோழைத்தனம்தான். என்றாலும் ஒரு சில சமயங்களிலேனும் இந்த பலவீனத்துக்காளாகாத வீர சிங்கங்கள் இருக்கிறார்களா என்பது ஐயத்துக்குரியதே. எத்தனையோ பெரும் போர்களை நடத்தி வென்று வீரனுகத் திகழ்ந்த நெப்போலியனும்கூடச் சில சமயங்களில் உணர்ச்சி வசப்பட்டுக் கண்ணீர் விட்டழுததாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு சாதாரண மனிதனை நான், பெரும் இடர்கள் மோதும் நெருக்கடி நேரங்களில் என் நிலையிழந்து கண்ணீர்விட்டது பெருங் குற்றமல்லவே?

இருளில் வழி தெரியாது தடுமாறுகையில், குளிரும் மழையுமாகச் சூழ்ந்து தாக்கும் நிலையில், புகலிடம் தேடி வழிப்போக்கன் ஒருவன் பாழுங்கிணற்றில் இடறி வீழ்ந்தாற் போன்று, எனக்கு மற்றொரு துயர அநுபவம் நேரிட்டது. என்னுடைய மூன்றாவது மகள் பத்மினி, திடீரென்று நோய்வாய்ப்பட்டு இறந்து போனாள். 1934ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்த அவலம் நிகழ்ந்தது. அந்நாளில் அவள் பதினெட்டே பிராயமுடைய இளம் பெண். வீட்டு வேலையிலும் சமையற் பணியிலும் தேர்ச்சி பெற்றிருந்த அவளுக்கு, பிறருக்கு உதவ வேண்டுமென்றால் மகிழ்ச்சியும் உற்சாகமும் பொங்கும். எங்கள் நெஞ்சில் ஆழ்ந்து சுவடுகளைப் பதித்து எங்களைத் தாளாதவராக்கி விட்டு அவள் மறைந்தாள்.

அறையிலிருந்து அவளுடைய உடலை எடுத்து முன் வாயிலில் கிடத்தியபோது, எங்கோ தொலைவிலிருந்து ஒலித்த கீதம், என்னுடைய இதயத்தின் சோகமே கிளர்ந்து எழும்பி ஓலக் குரலாய் எதிரொலித்த சோக கீதம் போன்று தோன்றியது. இப்போதும் அந்த கீதத்தை எங்கேனும் கேட்டால் நான் நெஞ்சு நெகிழ நிற்பேன். என்னுடைய இனிய மகளின் அன்பு வடிவம் மனக்கண்ணில் தோன்றும். அவளை என்னுடைய கற்பனையில்தானன்றோ காண முடியும்!

இக்காலத்தில் 'அஸ்தமனம்' என்றொரு நூலை நான் எழுதத் தொடங்கினேன். அதில் அடங்கிய கதைகளிலெல்லாம் என்னுடைய சொந்த அநுபவங்களின் துயரச் சாயைகளைக் காணலாம். அதை எழுதியதில் சுமை இறங்கிற்றென்று சிறிது ஆறுதல் தோன்றியது. பொது மக்களும் நான் எதிர்பார்த்ததற்கு மேல் அதை வரவேற்றனர். இன்றும் அதன் மதிப்புக் குறையவில்லை.

என்னைச் சில நண்பர்கள் நான் எப்போது எழுதுகிறேன், எழுதுவதிற் கென்று தனிப்பட்ட வரையறை ஏதேனும் வகுத்துக்கொண்டிருக்

கின்றேனு என்றெல்லாம் கேட்பது வழக்கம். இன்னொருவருடைய தேவைக்காக ஒன்றை உருவாக்க வேண்டும் என்றால், தனிப்பட்ட வரையறைகள் வைத்துக்கொள்வது கடினம். எழுதுவதற்குத் தூண்டுதல் ஏற்படவேண்டும். ஊக்கமும் உற்சாகமும்கூட வேண்டும். அப்போதுதான் எழுத முடியும். அதிகாலை ஐந்து மணியிலிருந்து ஏழு மணி வரையிலும் நான் அமர்ந்து எழுதுவேன். இது நெடுநாளாகத் தொடர்ந்து வரும் பழக்கம். அகன்ற வயலோ, உயர்ந்த மலையோ, ஓடும் ஆறோ, கடலோ கண்களில் படும் இடத்தில் அமர்ந்து எழுதுவதில் மிகுந்த விருப்பம் கொண்டவன். அதற்கு வசதி இல்லை என்றால், ஒரு தோட்டமேனும் கண் முன் தெரிந்தால் மகிழ்ச்சியுடன் எழுதுவேன். என்னால் ஓரிடத்தில் தனித்தமர்ந்துதான் எழுத முடியும். எந்தச் சூழலிலும் அமர்ந்து எழுதக்கூடிய சில நண்பர்களுண்டு. என்னால் அது இயலாது.

1934ஆம் ஆண்டில் ஒரு வழக்கை முன்னிட்டு நான் 'போர்னியோ' செல்லவேண்டியிருந்தது. ஒரு முகமதியரான தர்மகர்த்தா, நம்பிக்கைத் துரோகக் குற்றச்சாட்டுக்குள்ளாகி, வழக்கிலும் சிக்கியிருந்தார். அவர் எப்போதோ வழக்குக்காகச் சிங்கப்பூருக்கு வந்திருந்தபோது, என்னைப் பற்றி அறிந்திருந்தார் போலும்! எனவே, அவருடைய வழக்கை நடத்தக்கோரி எனக்குத் தந்தியடித்திருந்தார். நல்ல வருவாய்க்கும் இடமிருந்தது. சிங்கப்பூரிலிருந்து போர்னியோவின் தலைநகரமான 'ஸான்டேக்க'னுக்கு ஆறு நாட்கள் கப்பலில் செல்ல வேண்டும். வடக்கு போர்னியோவை அந்நாளைய கிழக்கிந்தியக் கம்பெனியாரைப் போன்ற பிரிட்டிஷ் — போர்னியோக் கம்பெனியார் ஆட்சி புரிந்தனர். போர்னியோவின் காட்டுப் பிரதேசங்களை வெட்டி வீழ்நிலமாக்கிக் கொண்டிருந்தனர். மக்கள் பெருகியிருந்த பிரதேசங்களிலிருந்து சிலரை அங்குக் குடியேற்ற வசதிகளிருந்தன. இந்திய அரசாங்கம் சில குடும்பத்தினரை அங்கே குடியேறச் செய்யலாம் என்று கருதி ஆலோசனைகள் செய்ததும்கூட வாசகருக்கு நினைவிருக்கலாம். போர்னியோவின் தட்பவெப்ப நிலை—நமது மக்களுக்குப் பழக்கமானதுதான். நான் அங்கு ஒரு வார காலம் தங்கினேன். வழக்கு என் கட்சிக்காரருக்குச் சாதகமாகவே தீர்ப்பாயிற்று. நல்ல உடல் நலம் பெற்றிருந்த அவருக்குச் சுமார் நாற்பத்தைந்து வயது இருக்கலாம். வழக்கில் வெற்றி பெற்றதால் மகிழ்ந்து எனக்குப் பேசியதற்கு மேலாகப் பணம் கொடுத்தார்.

நான் சிங்கப்பூர் திரும்பிய பிறகு, அவரைப்பற்றிக் கேள்விப்பட்டதொரு செய்தி என்னைத் திடுக்கிடச் செய்தது. ஒரு காரணமும் தெரியாமலே, ஒரு நாள் அவருடைய இரு கண்களும் ஒளியிழந்து

போயின. சாதுக்களுக்குரிய சொத்தைக் கவர்ந்த குற்றத்துக்குத் தெய்வம் அளித்த தண்டனை அது என்று அவருடைய விரோதிகள் மகிழ்ந்து கூறினர். தெய்வத்துக்கே உண்மை வெளிச்சம். அவரைக் கண்ணுறுகையில் அமைதியும் இரக்கமும் கூடியவராகவே எனக்குத் தோன்றியது. காரணம் யாதாயினும், அவர் முழுக் குருடரானர் என்று அறிந்தபோது, என்னுடைய வியப்பும் துயரமும் அளவிறந்த தாக இருந்தது.

30

சில நம்பிக்கைகளும் கருத்துகளும்

நாம் ஈடுபட்டிருக்கும் தொழிலும் பழக்க வழக்கங்களும் மட்டுமே நம் தனித்தன்மையை உருவாக்கிவிடுவதில்லை. நம் கருத்துகளையும் சார்ந்தே நம் தனித்தன்மை உருவாகிறது. சொல்லப் போனால், தனித்துவம் என்ற சிறப்புத் தன்மையே தனிப்பட்டதோர் கருத்தைக் கொண்டு இயங்குவதினாலேயேதான் உருவாகிறது. பிறந்து வளர்ச்சி பெறும் பழக்கமான சூழலும், அநுபவங்களும், நம்பிக்கைகளைத் தோற்றுவிக்க வழி வகுக்கின்றன. பழக்கமாகும் சூழ்நிலையின் வாயிலாகத் தோன்றி உறுதி பெறும் நம்பிக்கைகளை, சொந்த அநுபவங்கள் கொண்டு கூட்டியோ குறைத்தோ திருத்தம் செய்து கொள்வதற்கும் இடமுண்டு. வெகு காலத்துக்கு முன்பு நிலவியிருந்த சில கருத்து களுக்கு இப்போது என்னுள் இடமில்லை. ஒரு காலத்தில் உசிதமாகத் தோன்றுத சில கருத்துகளை இப்போது சரியென்று நம்ப வேண்டியிருக்கிறது.

ஐம்புலன்களையும் பயன்படுத்திப் பொருள்களை நன்கு உணர்வதற் குரியதோர் நிலை இருக்கிறது. ஐம்பொறிகளின் வாயிலாக நாம் ஒன்றை அறிவதைச் சார்ந்துதான் அதை இருக்கிறதென்றோ இல்லை என்றோ தீர்மானிக்க முடியும். கண் பார்வையற்ற ஒருவனால் அழகிய மலரொன் றின் நேர்த்தியைப் பூரணமாக அறிய முடியாது. செவிச் செல்வம் வாய்க்கப் பெற்றிராத ஒருவனால் இசையின் இனிமையை முழுதுமாக நுகர இயலாது. மலரின் எழிலைக் குறித்துச் செவிடன் கூறுகையில் கண்ணிழந்தவன் வியந்து நிற்பது போன்று, இசையின் இனிமையைப் பருகிக் குருடன் புகழ்ந்துரைக்கையில் செவிடன் வியந்து நிற்பான்.

ஆனல், தங்களால் அறிய இயலாததை இருவரும் இல்லை என்று மறுத்து விவாதம் செய்வதில் ஏதேனும் பொருளுண்டா? பிறருடைய கருத்துகளையும் நம்பிக்கைகளையும் இணக்கத்துடன் அறிந்துகொள்ள முயற்சி செய்வதுதான் நாகரிக மலர்ச்சிக்குரிய பண்பாகும். நியாய வாதங்களினுல் பிறர் கருத்தை வென்றுவிடலாம். ஆனல் பிறரைத் தோல்வியுறச் செய்வது அவருடைய மேன்மைக் குணத்தை விளக்கும் சிறப்பாகாது. பிறரின் இதயம் கவர்வதுதான் சிறப்பு. புத்தியை அதுதான் நிறைவு கொள்ளச் செய்கிறது.

எனது சில நம்பிக்கைகளை முட்டாள்தனமானவை என்று சிலர் கருதலாம். ஆனலும் அவை எனது நம்பிக்கைகள். என்னை 'நானுக' நினைக்கச் செய்யும் சில பகுதிகள். அநுபவங்கள் வேறுபடும்போது, கருத்துகள் மாறுமலிராது. மாறவில்லை எனினும், அக் கருத்துகளை மறு பரிசீலனை செய்துகொள்ளத் தோன்றும். என்னுடைய அனுபவத்தைக் கூறுகிறேன்.

திருவிதாங்கூரைச் சேர்ந்ததொரு பணிக்கர் மலாய் நாட்டில் வந்து வாழ்ந்தார். கைரேகை சாஸ்திரத்தில் அவர் மிகுந்த புலமை பெற்றிருந்தார். பலருடைய கைகளை அவர் பரிசீலனை செய்து, சென்ற காலத்தையும், எதிர் காலத்தில் நடக்கப் போகும் சம்பவங்களையும், நேரிட இருக்கும் அநுபவங்களையும் கூறியிருக்கிறார். ஒருவருடைய கையைப் பார்த்து எதிர்காலத்தைக் கூறுவதற்குச் சிங்கப்பூரில் சட்டப்படி தடை விதித்திருந்தனர். அவ்வாறு செய்த குற்றத்துக்காகப் போலீசார் அவர் மீது குற்றம் சாட்டினர். அந்த வழக்கில் பணிக்கருக்காகக் கோர்ட்டில் நான் வாதாடினேன். கைரேகை சாஸ்திரம் நல்லதொரு சாஸ்திரம் என்றும், மூட நம்பிக்கையன்று என்பதும்தான் பணிக்கரின் வாதம். அந்த வழக்குக்காகவே கைரேகை சாஸ்திரத்தைப் பற்றிய பல நூல்களை நான் படித்தேன். படிக்கப் படிக்க எனக்கு அதில் ஈடுபாடு மிகுந்தது. வழக்கு விசாரணையின்போது, பிரதிவாதியின் புலமையைப் பரிசோதனை செய்யும் வகையில் மாஜிஸ்ட்ரேட் பல கேள்விகளைக் கேட்டார். பணிக்கரின் மறு மொழிகள் அவரை வியப்பிலாழ்த்தின. இறுதியில் பிரதிவாதி குற்றவாளி அல்ல என்று அவரை விடுதலை செய்தார்.

சில நாட்கள் சென்ற பின்னர், அந்த மாஜிஸ்ட்ரேட், பணிக்கரிடம் தம் கையைக் காட்டினராம். ஒருநாள் என்னைக் கண்டபோது மாஜிஸ்ட்ரேட் 'அந்தப் பணிக்கர் என் கை ரேகைகளைப் பார்த்து, சென்ற நாட்களில் நிகழ்ந்தவை அனைத்தையும் புத்தகத்தில் படிப்பதுபோல் அவ்வளவு இசைவாகச் சொன்னர். எதிர்காலம் பற்றியும் அவர் கூறியிருக்கிறார். பொறுத்திருந்து பார்க்க வேண்டும்' என்றார்.

வழக்கில் வெற்றி பெற்றபின்னர் பணிக்கருடைய புகழ் பரவியது. அந் நாள் என்னுடைய ஒரு பாரிஸ்டர் நண்பர் அவரிடம் கையைக் காட்டும் எண்ணத்துடன் பணிக்கரிடம் என்னை அழைத்துச்செல்ல வேண்டி ஒரு நாள் இரவு என் வீடுதேடி வந்தார். அந்த பாரிஸ்டர் ஒரு வழக்கில் சிக்கி யிருந்தார். அந்தச் சமயத்தில், என்ன நேருமோ என்று அறிவதற்கு முக்கியமாக விரும்பினர். அது அவருக்குச் சாதகமில்லாமல் முடிந்தால், அவருடைய எதிர்காலமே சூனியமாகிவிடும்.

நான் அப்போதே பணிக்கருக்கு ஆளனுப்பி அங்கு வரவழைத்தேன். இரவு நேரமாக இருந்ததால் கைரேகைகளைப் பார்த்தறிவது கடின மாகவே இருந்தது. சிறிது அதிகமான வெளிச்சமுடைய பல்பைப் போட்டுக்கொண்டு பணிக்கர் பாரிஸ்டரின் கையைப் பார்க்கலானர். ரேகைகளைப் பரிசீலனை செய்து, அவருடைய இயல்பை விவரித்தார். பணிக்கர் அதற்கு முன் அவரைக் கண்டதே இல்லை. அவர் யாரென்றும் அறியார். என்றாலும் அவர் கூறியதனைத்தும் பொருத்தமாக இருந்தது. நான் பெருவியப்புற்றேன். அவருடைய குண-இயல்புகளை விவரித்த பின்னர், எதிர்காலம் பற்றியும் மொழிந்தார். அந்தக் கைக்குரியவர் ஒரு சிக்கலான வழக்குக்குட்பட்டிருப்பதாகவும், அதிலிருந்து அவர் மீள முடியுமென்றும், ஆனாலும் அதனால் ஏற்படும் அவப்பெயர் சிறிது காலத்துக்கு மாறாது என்றும், அது அவருடைய தொழில் சம்பந்தமான விஷயங்களை அழுத்தமாகவே பாதிக்கும் என்றும் பணிக்கர் விவரித்தார். பின்னர் அவருடைய அநுபவம் பணிக்கரின் கூற்றுப்படியே அமைந்தது.

கைரேகை சாஸ்திரத்தைப் பற்றிய என்னுடைய கருத்தை உருவாக்கிக் கொள்கையில் இந்த அநுபவத்தை அலட்சியமாக நினைத்து ஒதுக்கிவிட முடியுமா? மாதிரிக்கு இந்த ஒரு சம்பவத்தைக் கூறினேன்.

சில நாட்களுக்கு முன்பு, என்னுடைய நம்பிக்கைகளைக் குறித்து, மாத்ருபூமி வார இதழில் நான் எழுதியிருந்தேன். அதில் ஓர் பகுதியை இங்கே கொடுக்கிறேன்.

'இந்தப் பல்வகைப்பட்டவர்களுடைய உலகில் எல்லோருடைய நம்பிக்கைகளுக்கும் கருத்துகளுக்கும் இணக்கம் தோற்றுவித்து ஒருமைப்படுத்துவது இயலாத செயல். எந்த விஷயத்திலும் ஒருசில பகுதிகளை மட்டுமே நாம் ஒவ்வொருவரும் காண்கிறோம். நம்பிக்கை களும் கருத்துகளும் அவற்றுக்கேற்பவே தோன்றுகின்றன. அவ்வாறு நாம் கண்டறிவதையும் நம்புவதையும், வண்ணம் கூட்டாமல் மாற்றுக் குறைக்காமல் விவரிக்க முயற்சி செய்யவேண்டும். அப்போதுதான் அது நம்முடைய சொந்தக் கருத்தென்று கொள்ளலாம். வாழ்க்கையின் ரகசியம் யாதாயினும், நான் வாழ்க்கை இன்பத்தை அநுபவிக்கும் ஆர்வம் கொண்டவன். வாழ்க்கையின் ரகசியத்தைத் தேடுவதற்கு

இந்த ஆர்வம் தடையாக இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. உடலும் மனமும், தங்குமிடமும் சூழலும், தூசும் அழுக்கும் சேராமல் தூய்மையுடன் காக்க வேண்டும் என்பது மட்டுமன்றி, எழில் கூட்டவும் முனையவேண்டுமென்று நான் கருதுகிறேன். இயற்கையெழில் மிகுந்த இடம், வசதிகள் நிறைந்த இல்லம், விசாலமான தோட்டம், பல்வேறு கனிகள், கண்ணுக்கினிய மலர்கள், களங்கமற்ற நட்பு, சிறந்த நூல்கள், ஓடியாடி விளையாடும் குழந்தைகள், இனிமை செறிந்த பாடல்கள் எல்லாம் எனக்கு விருப்பமானவை. ஆனால், இவை ஒன்றுமேயில்லாத நிலையில் வாழவேண்டி வந்தாலும் நான் நிராசை கொண்டவனாவேன் என்று நம்பிவிடவில்லை.

அதிருஷ்டமற்றவர்கள் நிறைந்த இவ்வுலகில், ஒருவகையில் இல்லை யெனினும், இன்னொரு வகையில் நம்மை உதவிகோரி வருபவர் எங்கும் இருக்கின்றனர். எல்லோருக்கும் ஒரே மாதிரியில் உதவ முடியாது. என்றாலும் ஒரு சிலரின் வாழ்க்கைச் சுமைகளையேனும் நம்மால் குறைக்க முடியும். ஒருவருக்கு உதவிபுரிந்த காரணம்கொண்டு நாம் நஷ்டத்துக் காளாவதாலும், அதற்காகக் குறை கூறாமல் மகிழ்ச்சியுடன் பொறுத் திருப்பதுதான் நம் கடமை. அது மற்றவருக்கும் ஆறுதல் அளிக்கக் கூடியதாக இருக்கும். நமது தார்மீக உணர்வை விரிவு செய்யும். உரியவருக்குதவ வழியின்றி நான் துயருற நேர்ந்த பல சந்தர்ப்பங்களை நினைத்துப் பார்க்கிறேன். நான் மௌனமாக இருந்ததைத் தவறாகக் கருதியிருப்பார்கள். தவிர்க்க இயலாதது என்று கருதி ஆறுதல் கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லையே!

சில விஷயங்களில் தவறான கருத்துகளைத் தோற்றுவிக்காமல் இருக்க முடிவதில்லை. விரோதிகளே இருக்கக் கூடாதென்றால் தொழில் புரியாமலிருக்க வேண்டும். நமது கருத்தைப் பிறர் சரியாகவே புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்துவிட முடியாது. பதவி, செல்வம், செல்வாக்கு, அதிகாரம் இவை யாரிடம் இசைந்தாலும் அவர்களுக்கு விரோதிகளும் நிச்சயமாகத் தோன்றிவிடுவார்கள். ஒருகால் நம் வளர்ச்சிக்கு அந்நிலையும் தேவையாக இருக்கலாம். விரோதம் பாராட்டுபவர்களைக் குறித்து எண்ணி நான் என் மனதை வருத்திக் கொள்ள மாட்டேன். பழி வாங்கும் எண்ணமும் என் மனதில் ஒரு போதும் தோன்றியதில்லை. எனக்குத் தீங்கிழைத்தவர்களுக்கும் பின்னர் நான் உதவிபுரிந்ததுண்டு. அது கண்டு அவர்கள் மாறியதை அறிந்து நான் மகிழ்ச்சிகொள்ளப் பல சந்தர்ப்பங்கள் நேர்ந்திருக் கின்றன. எவரிடமேனும் உங்களுக்கு வெறுப்போ, பகைமையோ இருக்கிறதா என்று யாரேனும் கேட்டால் எனக்குக் கூறுவதற்கு ஒன்றுமே இல்லை. பல்வேறு விதமான துன்பங்களை நான் அநுபவிக்க

நேர்ந்திருக்கிறதென்றாலும், இந்தக் காரணம் கொண்டுதான், துன்பங்களை அநுபவிக்கும் மன நிதானமும், பொறுமையும், அமைதியும் பெற இயன்றதோ என்று நான் ஐயம் கொள்கிறேன்.

பெருமையும் பதவியும் நிலையற்றவை என்று தெளிந்து கொள்வது கடினமல்ல. அதற்கு நம்மைச் சுற்றிலும் கூர்ந்து நோக்கினாலே போதும். அவற்றைச் சார்ந்த இன்பங்கள் நிலைப்பதில்லை. களங்கமற்ற இதயம்கொண்டு மட்டுமே வாழ்க்கையின் அழகுகளையும் இன்பங்களையும் நுகர்ந்து அநுபவிக்க முடியும்.

மரணத்துடன் எல்லாம் முடிந்துவிட்டதென்று நான் கருதவில்லை. மரணத்துக்கு அப்பாற்பட்ட நிலையைப்பற்றியும் எனக்குத் தெரியாது. ஆனால் இறுதிவரையிலுமான வாழ்க்கை, பிறருக்கும் எனக்கும் பயன் படுவதாய் இருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

பலரும் கூறுவதுபோல் மனிதன் இரக்கமற்றவனோ குரூரமானவனோ அல்ல. நம் ஒவ்வொருவரிடமும் நல்லதும் தீயதும் இருக்கின்றன. பிறருடைய உள்ளத்தில் உறைந்திருக்கும் நல்லியல்புகளைத் தொடும் வகையில் நாம் கனிவுடன் பேசிப் பழகுவதே பண்பாகும்.

'நான் இன்னொருவர் கண் கலங்க எதுவும் செய்ததில்லை. அவர் துயர் துடைக்கவே உதவியிருக்கிறேன்' என்று கூற முடியுமானால் அது எத்துணை ஆறுதலையும் ஆனந்தத்தையும் அளிக்கக்கூடியதாக இருக்கும்!

எங்கும் விரிந்து பரவிய பேராற்றலின் அருளில் நிலையாய நம்பிக்கை கொள்வோருக்கு மன-அமைதி கிட்டாமலிராது. அது என்னிடம் இல்லாமலிருந்திருந்தால், நிராசை மேலிட்ட சந்தர்ப்பங்களில் நான் என்ன செய்திருப்பேன் என்பதை இப்போது சொல்வதற்கில்லை.

'என் வாழ்க்கை பாழாகிவிட்டதே! நான் நினைத்தாற்போன்று எதுவும் நடக்கவில்லையே' என்று புலம்பும் சில நண்பர்களை நான் கண்டிருக்கிறேன். உண்மையில் அவ்வாறெல்லாம் தவிப்பதற்கு ஒரு காரணமும் அவர்களுக்கு இருந்ததில்லை. 'ஒன்றுகப் படித்து வேலையில் அமர்ந்தோம்—எனினும் என்னால் அவனைப்போல் உயர முடியவில்லை. என்னைவிடத் தாழ்ந்த நிலையிலிருந்தவர்கள் நிறையப் பொருள் தேடிப் பிரமுகர்களாகிவிட்டனர். எங்களுக்கு அப் பேறு கிடைக்கவில்லை' என்று குறைப்படுகின்றனர். வாழ்க்கைப் போரில் தோல்வியடைந்து விட்டோம் என்ற கருத்தே அவர்களுக்குத் தோன்றுகிறது. இது, உடைமைகளை ஆதாரங்களாகக் கொண்ட தவறான கருத்துகளினால் விளையும் குறைபாடுதான். பணம், பதவி, புகழ் ஆகியவற்றின் நிலையாமையை நன்கறிந்தவர்கள் அவற்றுக்காக ஏங்குவதில்லை. அண்மைக் காலத்தில் நிகழ்ந்த சில உலக நிகழ்ச்சிகளைப்பற்றி ஆராய்வோம்.

எகிப்தில் சர்வாதிகாரம் நடத்திவந்த ஃபரூக் அரசன் ஒருநாள் காலையில் தன் நாடு, பதவி எல்லாம் விலகிச் செல்ல, வேறு நாடுகளில் அலைந்து புகலிடம் தேடவேண்டியிருந்தது. ஃபரூக்கை வெளியேற்றி அதிகாரம் கைக்கொண்ட நஜீப், விரைவிலேயே அதை நாஸருக்கு விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது. பாரசீகப் பிரதம மந்திரியாக இருந்த மொஸாதீக் பின்னாளில் ஒரு கைதியாகவே வாழ்நாளைத் தள்ளினார். ஸ்டாலின் அதிகாரத்துக்கு வந்ததும் 'ட்ராட்ஸ்கி'யின் பெயரையும் பணிகளையும் நினைவூட்டும் சின்னங்களை அழித்தார். ஸ்டாலின் இறுதியை எய்திய பின்னர், அவருடைய நினைவை அவருக்குப்பின் வந்தோர் அகற்ற முயன்றனர். இந்தோனேசியாவுக்குச் சுதந்திரம் தேடிக்கொடுத்த உயரிய தலைவர் டாக்டர் சுகர்ணோவுக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட அநுபவங்களைப் பாருங்கள்! அவரை அதிகாரத்திலிருந்து அகற்றினார்கள். அந்தப் பெருந்தலைவனை அலங்கரித்த பதவிகள், பொறுப்புகள் எல்லாவற்றையும் உருவிக்கொண்டனர். விதி மனிதர்களை அம்மானை ஆடுவதில் ஒரு தனித்தன்மையைக் கையாண்டாற்போலிருந்தது.

வரலாற்று நிகழ்ச்சிகளையே மாற்றியும் திருப்பியும் அமைத்துவிட முயற்சிகள் நடக்கும் உலகில் பெயரிலும் புகழிலும் ஆசை கொள்வது வீணல்லவா?

இரண்டே இரண்டு விஷயங்களில் மட்டும் அசையாத நம்பிக்கை கொள்ள இயலும். அவை—பிறப்பும் இறப்பும். அவற்றுக்கிடையே நிகழ்வன அனைத்தும் நிச்சயமற்றவை. பணம், பதவி, உடல்நலம், அதிகாரம் எல்லாம் மாறிக்கொண்டிருக்கும். நிலையிலா இவ்வாழ்வில், நமக்கு ஆறுதலளிக்கக்கூடியது ஒன்றுதான். மனம் கனிந்து பிறருக்கு உதவி செய்வதும், உள்ளார்ந்து அன்பு செலுத்துவதும்தான் செய்யக் கூடியவை. சிந்தனையாளரும் அறிவியல் புலவருமான ஆல்பர்ட் ஈன்ஸ்டைன் கூறியதுபோல், வாழ்க்கையின் குறிக்கோள் வெற்றி தேடுவதல்ல; தொண்டாற்றுவதேயாம். கொடுத்ததைக் காட்டிலும் அதிகம் பெறுபவரையே சாதாரணமாக நாம் வெற்றிக்குரியவராகக் கருதுகிறோம். அதற்கு நேர் மாறாக நாம் கொள்ளவேண்டும். இங்கே பெறுவதற்கு மேலாக அங்கே வழங்கவேண்டும். அதுவே வாழ்க்கையின் சரியான வெற்றியாகும்.

எனது நம்பிக்கைகளுக்கேற்ப, என்னால் எப்போதும் செயலாற்ற முடிவதில்லை. சில சமயங்களில் நேர் விரோதமாகவே செயல் புரிய வேண்டி வந்திருக்கிறது. பலவீனங்களை நேருக்குநேர் நின்று எதிர்க்கும் ஆற்றல் இல்லாததாலும், போதிய அளவுக்கு இயல்பாகவே நெஞ்சுரம் இல்லாததாலும்தான் அவ்வாறு நேரிடுகிறது போலும்! வாழ்வின்

வெற்றியும் இன்பங்களும் பெரும்பாலும் நம் இயல்பைப் பொறுத்தே அமைகின்றன. நாம் காலத்தைப் பயன்படுத்தும் முறையிலும், பிரச்னைகளைச் சமாளிக்கும் தன்மையிலும், மற்றவருடன் பழகும் விதத்திலும், வாழ்க்கைப் பொறுப்புகளைப் பற்றிய நம் கருத்துகளிலும் நம்முடைய இயல்பின் சாயை படிகிறது. அதிர்ஷ்டம் நம்மைக் கண் திறந்து பார்த்து அருள் புரிந்தாலும், செல்வம் தேவைப்பட்டபோது நமக்குக் கிடைத்தாலும், நம்முடைய நல்லியல்புகளை நாம் உருவாக்கிக் கொள்வதில் கவனம் செலுத்தவில்லையெனில், வேறெதுவும் நம்மை அமைதியான இன்பம் நிறைந்த வாழ்வுக்கான வழியைக் காட்டாது. மாசு மறுவற்ற மனச்சாட்சி கொண்டுதான் எதிரிகளின் அச்சத்தினின்றும் தீயகாலத்தின் துன்பங்களிலிருந்தும் நாம் மீட்சிகாண முடியும்.

31

மீண்டும் பொது வாழ்க்கை

1934ஆம் ஆண்டில் ஒரு வழக்கு நிமித்தமாக நான் போர்னியோ சென்றதாகக் கூறினேனல்லவா? அங்கிருந்து திரும்பிய பிறகு என் கடன் தொல்லைகள் சற்றே குறையலாயின. கடன்களை முழுதுமாகத் தீர்த்துவிட முடியவில்லை என்றாலும், தீர்த்துவிடும் வசதிகள் பெருகின. கடன்களைத் தீர்ப்பதற்கு நான்கு ஆண்டுக்காலம் ஆயிற்று. ஆனால் கருத்துடன் பணியாற்றுவதற்கு மனமொன்றும் நலமிசைந்தது. பொதுத் தொண்டில் ஈடுபடவும் வசதிகள் ஏற்பட்டன.

சிங்கப்பூருக்கு வந்தபிறகு, பொதுப்பணிகளில் அதிகமாக ஈடுபட இயலவில்லை. ஓரிரு முறைகளில் ராமகிருஷ்ண மிஷனிலும், இந்தியர் சங்கத்திலும், மலையாளிகள் சமாஜத்திலும் உரையாற்றச் சென்றதைத் தவிர, நான் விரும்பினாற்போன்றோ, நண்பர்கள் வலியுறுத்தினாற் போன்றோ ஏதும் அதிகமாகச் செய்ய முடியவில்லை. கடன்பட்டவனாகவே இருந்த நிலையில் அதை அடைப்பதிலேயே முழுக்கவனமும் செலுத்தியதில் பொழுதுபோயிற்று. கடனிலிருந்து விடுபட்ட பின்னரே பொதுப் பணிகளில் ஈடுபட முடியுமென்று நான் கருதியிருந்தேன். இருந்தாலும் சில சமயங்களில் அவ்வாறு ஒதுங்கிவிட முடியவில்லை. 1935ஆம் ஆண்டு மே மாதத்தில், அத்தகையதோர் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவ்வாண்டு ஜூன் மாதத்தில், பிரிட்டிஷ் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியின் வெள்ளி விழாவைக் கொண்டாட சிங்கப்பூரில்

பெரிய ஏற்பாடுகள் செய்திருந்தனர். அது சம்பந்தமாகச் சிங்கப்பூரிலிருந்து வெளியானதொரு பிரசுரத்தில், மார்ட்டின் என்ற பெயருடையதொரு ஐரோப்பியன் இந்தியரை அவமதிக்கும்வண்ணம் ஒரு கட்டுரை எழுதியிருந்தான். அதில் இவ்வாறு இருந்தது:

'மலாய் நாட்டில் வாழும் இந்தியர் பல்வேறு வகுப்பினராவர். அவர்களை உள்ளபடி அறிந்து கொள்வது கடினம். சாதி வேற்றுமைகள் அவர்களை வெகுவாகப் பிரிக்கின்றன. என்றாலும் அவர்களிடம் பொதுவாக ஓர் தனித்தன்மையைக் காணலாம். அவர்களைப் போன்று, நம்புதற்குரியாததொரு இன மக்கள் உலகில் இருக்கிறார்களா என்பது ஐயத்துக்குரியதாகும். இலங்கையில் நான் அவர்களிடையே வாழ்ந்திருக்கிறேன். மலேயாவிலும் அவர்களுடைய பழக்க வழக்கங்களைப் புரிந்துகொள்ள எனக்குச் சந்தர்ப்பங்கள் வாய்த்திருக்கின்றன.'

'இங்கே பெரிய இந்திய வணிக நிறுவனங்களைப்பற்றி நான் கூறவில்லை. அத்தகைய நிறுவனங்கள் வாணிபருக்குரிய மரியாதைகளைக் கடைபிடிப்பதாகக் கூறலாம். சிறு வியாபாரிகளைப்பற்றித்தான் நான் குறை கூற முன்வந்தேன். மலேயாவில் அவர்கள் அதிகமானவர்களைக் காணலாம். வியாபார விஷயத்தில் அவர்களிடம் தொடர்பு கொள்வது வீண் வேலை என்பதை ஐரோப்பியர் யாரும் ஒத்துக்கொள்ளாமல் இருக்கமாட்டார்கள்!'

இந்தியரை, இவ்வளவுக்கு அறவே மறுத்து அவதூறுகள் கூறி எழுதப் பெற்ற இக்கட்டுரை, சிங்கப்பூர் இந்தியரிடையே சலசலப்பைத் தோற்றுவித்தது. கூட்டங்கள் போட்டுத் தம் கண்டனத்தைத் தெளிவாக்கினர்கள். இந்த அவதூறு நிறைந்த கட்டுரையை வெளியிட்டதற்குரிய நடவடிக்கைகளை அவர்மீது எடுத்துக்கொள்ள வேண்டி அதிகாரிகளிடம் கோரினர்கள். இந்தியர்களுடைய நிறுவனங்களைச் சார்ந்து பெரியதொரு கண்டனக் கூட்டம் சிங்கப்பூர் டௌன் ஹாலில் கூடியது. அதைப் போன்றதொரு பெருங்கூட்டம் அதற்கு முன்பும் கூடியதாக நினைவில்லை; பின்னரும் இல்லை.

மார்ட்டினின் கட்டுரையைக் கண்டனம் செய்யும் முதல் தீர்மானத்தைக் கொண்டுவரும் பொறுப்பை என்பால் விட்டிருந்தனர். அந்தச் சந்தர்ப்பமும், சூழலும், மக்கள் திரண்ட அவையும் என்னைக் கிளர்ச்சி கொள்ளச் செய்தன. ''தம் நாட்டைப்பற்றியோ, நாட்டு மக்களைப் பற்றியோ பேசத் தொடங்கினால், மேனனுக்கு 'ஆவேசம்' தோன்றிவிடும். அன்று நிச்சயமாக அப்படித்தான் இருந்தார்'' என்று கூட்டத்தை விமரிசனம் செய்த ஓர் ஐரோப்பியன் ஒரு பத்திரிகையில் எழுதினான். நான் உணர்ச்சிவசப்பட்டிருந்தேன். என்றாலும் கூறத் தகாதது எதையும் கூறிவிடாமல் நான் கருத்தாக இருந்தேன். அந்த உரையிலிருந்து சில பகுதிகளை இங்கே பார்க்கலாம்:

'இதைவிட மறுக்கக்கூடியதோர் கட்டுரையைப்பற்றிச் சிந்திக்க முடியாது. இக் கட்டுரையைப் படிக்கும் ஒரு இந்தியனின் இரத்தம் கொதிக்காமலிருக்குமோ? மனிதனுடைய வர்க்காபிமானம் பேராற்ற லுடையது. நம் நாட்டின் தொன்மையிலும் நாகரிகத்திலும் நாம் நிறைந்த அபிமானம் கொண்டவர்கள். ஒரு தனிமனிதனென்ற நிலை யில் என்னை யாரேனும் குறை கூறினால் நான் அதைப் பொருட்படுத்தா மலிருக்கலாம்; மறந்துவிடலாம். ஆனால் என் நாட்டையோ, நாட்டு மக்களையோ, யாரேனும் அவமதிப்புக்குள்ளாக்கும் வகையில் பழித் துரைக்கும்போது என்றும் மறக்க இயலாவண்ணம் அவருக்கு ஒரு பாடம் கற்பிக்கும் ஆவேசம் என்னுள் மூண்டெழும் என்பதை இச் சந்தர்ப்பத்தில் நினைவுகூர்வது நலம்.'

அவையின்கண் நிலவிய அமைதியும் ஆர்வமும் போற்றற்குரியனவாக இருந்தன.

ஒரு புகழார்ந்த ஐரோப்பிய வக்கீல் அந்தக் கூட்டத்தைப்பற்றிப் பத்திரிகையில் இவ்வாறு எழுதினர்:

'நான் வெகு நாட்களாக இந் நகரில் வசிப்பவன். இந்தியரும் பிற சமுதாயத்தினரும் ஏற்பாடு செய்த பல கூட்டங்களைக் கண்டிருக்கிறேன். ஆனால் மே இருபத்தெட்டாந்தேதி விக்டோரியா மெமோரியல் ஹாலில் கூடிய இந்தியரின் மாபெருங் கூட்டத்தைப் போன்று சிங்கப்பூரில் வேறெருரு கூட்டம் கூடியதாக எனக்கு நினைவில்லை.'

அது உண்மையே. ஒன்று தவறாமல் எல்லாப் பத்திரிகைகளும் சிங்கப் பூரில் மார்ட்டினின் செருக்கைக் கண்டனம் செய்தன. பின்னர் மார்ட்டின் சிங்கப்பூர் பத்திரிகைகளில் மன்னிப்புக் கோரினான். ஆனால், அது சந்தர்ப்பத்துக்குரியவிதமாக ஆழ்ந்த உணர்வுடன் கோரியதாக இல்லை. அதைப் படிக்கையில் தான் செய்த தவறுக்காக உள்ளார்ந்து வருத்தம் தெரிவிப்பதாகத் தோன்றவில்லை. பேருக்கானதொரு மன்னிப்பாக இருந்தது. அத்தகையோருக்கு அவ்வாறு ஓர் உணர்வு தோன்றுவதும் கடினம்தான். எவ்வாறுயினும் பெரும் சந்தடியை விளைவித்த மார்ட்டினின் கட்டுரையைப்பற்றிய எதிரொலி அடங்கியது.

சிங்கப்பூரில் இராமகிருஷ்ண மிஷன் பணி ஆரம்பமுதலே என்னைக் கவர்ந்திருந்தது. அந்த நிறுவனத்தை வளர்க்கும் பணியில் அங்கிருந்த சில நண்பர்கள் புலர்த்திய உற்சாகமும் தியாகமும் பிறருக்கு மாதிரியாக விளங்கின. ஓர் அருமையான கட்டடமும், அநாதை விடுதியும், கல்விக் கூடமும், மிஷனைச்சார்ந்து தோன்றி, புகழார்ந்த வகையில் நடந்து கொண்டிருந்தன. தியாக சீலமும், செயல் நிர்வாகத் திறமையும் மிகுந்த துறவியர், சிங்கப்பூர் கிளைக்குக் கிட்டிய பெரும் பேறென்று கூற வேண்டும். அந்த நிறுவனங்களின் புகழுக்கும் வெற்றிக்கும் அதுதான் காரணம்.

நான் அங்கிருந்த காலத்தில் சிங்கப்பூர் ராமகிருஷ்ண மிஷன் பணிகளை அமைதியும் இனிமையும் தவழும் மலர் முகத்தினரான பாஸ்வரானந்த சுவாமிகள்தாம் பொறுப்பேற்றிருந்தார். சுமார் பதினைந்தாண்டுக் காலம் அவர் அங்கு இருந்தார்.

1936ஆம் ஆண்டு ஜனவரியில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடத் தீர்மானித்தோம். அதை முன்னிட்டு, ஓர் அனைத்துச் சமய மாநாடு ஏற்பாடு செய்தோம். அதன் புதுமையும் சிறப்பும் சிங்கப்பூரில் பல்வேறு சமயத்தினரையும் மாநாட்டுக்குக் கவர்ந்திழுத்தன. இந்து சமயம், இஸ்லாமிய சமயம், கிறிஸ்தவ சமயம், ஜாரதுஷ்ட்ர சமயம் ஆகிய எல்லாப் பிரிவினரைச் சார்ந்த பிரதிநிதிகளும் அந்த மாநாட்டில் பங்கு கொண்டனர். பல் வேறு சமயத்தினர் பங்கு கொண்ட அப் பேரவையில் இந்து சமயம் பற்றி உரையாற்றும் அறிவோ தகுதியோ எனக்கு இல்லை. இந்து மதத்தைச் சார்ந்தவனுக அப் பேரவையின் முன் நிற்பதற்கு என் சமயப் பற்று ஒன்றுதான் என்னை ஊக்கியது. பாஸ்வரானந்த சுவாமிகளின் அன்புக் கட்டளைக் கிணங்க, வேதாந்தத்தின் பெருமைகளைப்பற்றியும், ராமகிருஷ்ணரின் அளப்பரிய மனிதகுலத் தொண்டைப்பற்றியும் நான் அன்று உரையாற்றினேன். அதை நிறைந்த உளத்துடன் நினைத்துப் பார்க்கிறேன்.

இந்த அத்தியாயத்தை முடிக்குமுன் மற்றோர் அநுபவத்தையும் இங்குக் கூறவேண்டும்.

இந்தியராகிய தொழிலாளர் சிங்கப்பூரில் ஏராளமாக இருந்தனர். நகரமன்றங்களில் பல பிரிவுகளிலும், பொதுப்பணித் துறையிலும் வேலை செய்தவர்களே பெரும்பாலோரும். அந்நாளைக் காட்டிலும் இந்நாள் தொழிற்சங்கங்களுக்குப் பன்மடங்கு அதிகமான மதிப்பும் சக்தியும் இருக்கின்றன. சிங்கப்பூரிலுள்ள தொழிலாளர், இந்தியத் தொழிலா ளரைக் காட்டிலும் நல·வசதிகளை வேண்டுபவர்களாக இருந்தனர். காலத்துக்கேற்பப் பல பிரிவுகளிலும் பணிபுரிந்த தொழிலாளருக்கு அந்நாள் வழங்கிய கூலி அவ்வளவு மோசமானதாக இல்லை எனினும் அவர்கள் கிடைத்தது கொண்டு திருப்தியடைபவராக இல்லை. மேலும் கூலியைக் கூட்டவேண்டியும் தொழிலில் வசதி பெருக்கவேண்டியும் அவர்கள் அவ்வப்போது குரலெழுப்புவார்கள். தகராறுகள் ஏது மின்றியே தங்களுடைய தேவைகளை அதிகாரிகளுக்கு அவர்கள் உணர்த் தினார்கள். நாளடைவில் அவர்களுடைய அந்த முறையும் குரலும் மாறின. என்றாலும் அவர்கள் வேலை நிறுத்தம் செய்யத் துணியவில்லை. சில சமயங்களில் அதுவும் தேவையாக இருந்தது. 1936ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அத்தகையதோர் சந்தர்ப்பம் நேர்ந்தது. சிங்கப்

பூரில் பல பிரிவுகளிலும் பணிபுரிந்த தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினர்கள். அதற்கான காரணங்களை இங்கு விவரிக்க வேண்டியதில்லை. தொழிலாளர் சம்பள உயர்வு கோரினர்கள். சிலரை வேலையை விட்டு நீக்கியது சரியில்லை என்றும், அவர்களை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தினர்கள். அதிகாரிகள் அதற்கு இணங்கவில்லை. தொழிலாளருக்கும் முனிசிபல் அதிகாரிகளுக்குமிடையே நான்தான் கடிதப் போக்குவரத்து நடத்தினேன். ஒரு வக்கீல் என்ற நிலையில் நான் அத் தொடர்புகொண்டிருந்தேன். அதனால் குறிப்பிடத் தகுந்த பலனேதும் விளையவில்லை. தொழிலாளர் பொதுக்கூட்டம் போட்டு வேலை நிறுத்தம் செய்வதாகத் தீர்மானித்தனர். ஆயிரக்கணக்கான தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து போருக்குத் தயாரானர்கள். சிங்கப்பூரின் சூழ்நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஒரு வக்கீல் என்ற நிலையிலிருந்து திடீரென்று நான் ஒரு தொழிலாளர் தலைவனாக மாறிவிட்டேன். வீட்டிலும் அலுவலகத்திலும் வேறு வேலைகளைக் கவனிக்க எனக்குப் பொழுதும் வசதிகளும் இல்லாமலாயின. அலுவலகம், நீதிமன்றம் என்ற வேலைகளையும் நான் இரு வாரங்களுக்கு நிறுத்தி வைத்தேன். வேலை நிறுத்தத்தை நிறுத்தவும் தொழிலாளர் கோரிக்கைகளைப் பெற்றுத் தரவும் நான் முயற்சி செய்தேன். இதற்காகப் பல முறைகள் முனிசிபல் அதிகாரிகளைக் கண்டு பேசவேண்டியிருந்தது. நான் என்ன விதமாக முடிவெடுத்தாலும் அதைத் தொழிலாளர் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தது, என் பொறுப்பைக் கூட்டியது. இத்தகைய சந்தர்ப்பங்களில் நியாயமான தீர்ப்பாக நமக்குத் தோன்றினாலும்கூட, தொழிலாளரைத் திருப்தி செய்வது கடினமே. என்றாலும் அப்பொறுப்பை நான் ஏற்றிருந்தேன். இரண்டு மூன்று நாட்கள் தொழிலாளர் தலைவர்களையும் முனிசிபல் அதிகாரிகளையும் நான் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினேன். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தோம்.

சிங்கப்பூரில் தொழிலாளர் நிலை குறித்து, பொதுவாக ஓர் ஆராய்ச்சியை மேற்கொள்ள நகரமன்ற அதிகாரிகள் இசைந்தனர். அவ்வாராய்ச்சியின் விளைவாக அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய பயன்கள் எதுவாயினும், அதை 1936ஆம் ஆண்டு டிசம்பர் முதல் தேதியிலிருந்தே பெறுவதற்கும் ஆவன செய்யவேண்டுமென்றும் முடிவு செய்தோம். வேலை நிறுத்தம் காரணமாக வேலையிலிருந்து நீக்கப் பெற்ற தொழிலாளரை வேலைக்குச் சேர்த்துக்கொள்ள அதிகாரிகள் இசைந்தனர். தென்னிந்தியர் ஏற்றிருந்த தொழிற்பணிகளில் மற்ற வரை நியமிப்பதில்லை என்றும் அதிகாரிகள் உறுதிமொழி யளித்தனர். அந்நாளைய நிலையில் இது மிகவும் திருப்தியளிக்கக்கூடிய தீர்ப்பென்பதில்

சந்தேகமேயில்லை. பின்னர் இவ்வுறுதிமொழிகளுக்கேற்ப அவர்கள் செயலாற்றவும் தவறவில்லை. இச் சம்பவம் நடந்த உடனே, மதிப்புக் குரிய ஸ்ரீநிவாச சாஸ்திரி மலேயாவில் இந்தியத் தொழிலாளர் நிலையை ஆராய்ந்தறிய இந்திய அரசாங்கப் பிரதிநிதியாகச் சிங்கப்பூர் வந்தார்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் முழுவதும் பெயரும் புகழும் பெற்றிருந்த ஸ்ரீநிவாச சாஸ்திரியைப்போல் ஆங்கிலத்தில் உரையாற்றக்கூடியவர் மிகவும் சொற்பமே. அவருடைய மொழி நடையின் அழகும், பிழையற்ற உச்சரிப்பும், பொருட்செறிவு மிகுந்த சொற்களும் புகழ் பெற்றவை. அரசியலில் மிதவாதக் கருத்துகள் கொண்டிருந்தாலும் தேசத் தொண்டாற்றுவதில் அவர் ஒரு சிறந்த இந்தியக் குடிமகன் என்பதில் ஐயமில்லை. தொழிலாளர் சம்பந்தமாக அவர் ஒரு புரட்சிகரமான கருத்தைத் தோற்றுவிப்பார் என்று யாரும் எதிர் பார்த்திருக்கவில்லை. ஆனால் மலேயா தொழிலாளர் நிலை குறித்து ஸ்ரீநிவாச சாஸ்திரி வெளியிட்ட கருத்துகளும், பரிந்துரைகளும் எதிர் பார்த்ததைவிட மோசமாக இருந்தன. அது தொழிலாளர் மட்டு மன்றி, மற்றவருக்கும் ஆச்சரியத்தைத் தோற்றுவித்தது. கோலாலம் பூரில் 'இந்தியன்' என்ற பெயரில் வெளியானதோர் இதழில் ஒரு கட்டுரையாளர் இவ்வாறு எழுதினர்: 'அது தோட்டச் சொந்தக் காரர்களுக்கும் மலேயா அரசாங்கத்துக்கும் ஒரு பெரு வெற்றியாக இருந்தது. மலேயாவில் இந்தியத் தொழிலாளரைப்பற்றிய பிரச்னைகளை நன்கு உணராமலே அறிக்கையை வெளியிட்டிருக்கிறார் என்பது அறிக்கையைப் படிக்கையில் புலனாகிறது. அதன் தொனியும் பரிந்துரைகளும் நாம் மதிக்கத் தகுந்ததாக இல்லை.'

முனிசிபல் தொழிலாளருடைய வேலை நிறுத்தம்பற்றிய தகராறுகள் தீர்ந்த உடனே ஸ்ரீநிவாச சாஸ்திரி அங்கே வந்தார் என்று கூறினேனல்லவா? மலேயாவில் இந்தியத் தொழிலாளர் நிலையை விசாரணை செய்தறிய வந்திருந்த சாஸ்திரியார், நிச்சயமாக நகரமன்றத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்தைப்பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். அதற்காக நான் அவரைக் காண்பதற்கு நேரம் குறிக்க வேண்டி ஒரு கடிதம் எழுதியிருந்தேன். ஆனால் நான் அவருடன் வந்திருந்த மிஸ்டர் 'பாஸ்மெனை'த்தான் காண முடிந்தது. தமக்கு உடல் நலமில்லை என்ற சாக்கில், அந்தச் சந்திப்புக்கு சாஸ்திரி பின்வாங்கிவிட்டார்.

அதைத் தொடர்ந்து பத்திரிகைகளில் சில அறிக்கைகளும் விவாதங்களும் தொடர்ந்தன. அப்போது ஒரு பெரியார், எனக்கு எழுதியதோர் கடிதத்தின் சில பகுதிகளை இங்கே விவரிக்கிறேன். அந்நாளைய இந்தியரிடையே நிலவிய இவ்விஷயம் குறித்த கருத்துகளை அறிந்துகொள்ள முடியும்.

'உங்களுடைய பத்திரிகை அறிக்கையை நான் ஊன்றிப் படித்தேன். முனிசிபல் தொழிலாளருடைய நிலையை மதிப்புக்குரிய சாஸ்திரியாருக்கு உணர்த்துவதற்குத் தாங்கள் முழுமனதுடன் முயன்றதை அதிலிருந்து கண்டுகொள்ள முடிகிறது. குமுறிக் கொந்தளித்த அந்த உணர்ச்சித் தீயை அவிப்பதற்குத் தாங்கள் பொறுப்பேற்றுப் பணி புரிந்ததை யாரும் உணர்ந்து பாராட்டாமலிருக்க முடியாது. அந்த வேலை நிறுத்தம் சம்பந்தமான நிகழ்ச்சிகளை, மலாய் மக்கள் கவலையுடனும் துடிப்புடனும் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தனர். அத்தகைய தோர் முக்கியமான நிகழ்ச்சியைப்பற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பை சாஸ்திரி ஏனோ பயன்படுத்திக்கொள்ளவில்லை!'

அது வருந்தத்தக்கதோர் நிகழ்ச்சிதான். அதற்கு ஸ்ரீநிவாச சாஸ்திரி தாம் பொறுப்பாளியோ அல்லது அவருடைய கூட்டாளிகளோ நிச்சயமாகத் தெரியாது. அந்த அறிக்கையைக் கூர்ந்து முழுவதும் நுட்பமாக அலசி ஆராய்ந்தாலும், அறிவு சார்ந்த முறையில் வேறுபட்ட கருத்து இருக்குமோ என்று எண்ணக்கூடிய அளவுக்கும் நியாயம் காண முடியவில்லை.

32

இருள் சூழ்ந்தது!

வாழ்வில் எத்துணை இருள் சூழ்ந்தாலும், அவ்வப்போது சிறிது ஒளி தோன்றுவது அபூர்வமல்ல. இருளிலிருந்து மீட்சி காண்பதற்கான ஒளியை நான் காணலானேன். வாழ்க்கையின் குறுகிய இருட்டறையிலிருந்து வெளிவந்த நான் தாராளமாக நல்ல காற்றைச் சுவாசிக்கத் தொடங்கினேன். கடன் கொடுத்தவர்களுக்கு அடிமைப்பட்டிருந்த நிலையிலிருந்து விடுதலை பெற்று ஒரு சுதந்திர மனிதனுக்குரிய நல் வாழ்வை அநுபவிக்கும் காலம் வந்தது.

நான் திருப்பியளித்த கடன் தொகையைக் கூட்டிப் பார்க்கையில் எனக்கே வியப்புமேலிட்டது. திரும்பப் பெற்ற 'பிராமிசரி நோட்'களையும், தீர்ப்புகளையும், மற்றக் காகிதங்களையும் தீயிட்டுக் கொளுத்தினேன். அவை எரிந்து சாம்பரானபோது, எனக்கேற்பட்ட மகிழ்ச்சியை விவரிக்க இயலாது. கடன்பட்டவனுக்குரிய சிறுமைகளும் துன்பங்களும்

இனியேனும் என்னை வருத்தாதிருக்கட்டும் என்று இறைவனை வேண்டிக் கொண்டு நான் பணியில் கவனம் செலுத்தலானேன். வருமானம் பெருகியது. நண்பர்களும் பெருகினர்கள். மனதில் உவகையும் களிப்பும் மிகுதியாயின. தொழிலில் உற்சாகம் மேலிட்டது.

என்னுடைய இரண்டாவது மகள் தங்கத்துக்கு 1936ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் திருமணம் செய்து வைத்தேன். சிங்கப்பூரில் 'மக்-அலிஸ்டர்' கம்பெனியில் வேலை பார்த்துக்கொண்டிருந்த கே. கே. மேனன் என் மருமகனானான். நெடுங்காலமாகப் பல வகை களிலும் துன்பமே அநுபவித்திருந்த எனக்கு அது அளவற்ற மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும் அபூர்வமான சந்தர்ப்பமாக அமைந்தது. மூன்றுண்டுகள் சென்ற பின்னர், என்னுடைய கடைசி மகள் லீலாவின் திருமணத்தையும் நடத்தி வைத்தேன். ஸி. எம். தலாப் என்று சுருக்க மாக அழைக்கப்பெற்ற தலாப்பில் சாத்துண்ணி மேனன் அவள் கணவன். பெண்களின் திருமணத்துக்கேனும் நாடு திரும்ப வேண்டும் என்ற ஆவல் எனக்கு இருந்தது. ஆனல் அது நிறைவேறவில்லை.

1936ஆம் ஆண்டில் காங்கிரஸ் பொன்விழா கொண்டாடும் சந்தர்ப்பம் வந்தது. அது சம்பந்தமான பொதுக்கூட்டத்தில் தலைமை தாங்குவதற்கு எனக்கு அழைப்பு விடுத்திருந்தனர். சென்னையில் முதல் காங்கிரஸ் மந்திரி சபையின் சட்ட மந்திரியாக இருந்த கே. ராமன் மேனன், அந்நாளைய கேரளப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் என்ற முறையில் காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக என்னை அழைத்திருந்தார். அந்த அழைப்பை என்னல் ஏற்றுக்கொள்ள இயல வில்லை என்றாலும், அச் சந்தர்ப்பத்தில் என்னுடைய எளிய தொண்டை நினைவுகூர்ந்து என்னை மதித்து அழைத்த நண்பர்களிடம் எனக்கு அளவிறந்த நன்றி பெருகியது.

சிங்கப்பூரில் இந்தியச் சங்க உறுப்பினரை, கூறு கூறுகப் பிரிக்கும் வகையில் ஓர் நிகழ்ச்சி 1939ஆம் ஆண்டு ஏப்ரலில் உண்டாயிற்று. இந்தியாவில் இந்தியரிடையே ஆழ்ந்த தேசிய உணர்வு வெளியான காலம் அது. இந்தியர் சங்கத்தில், உறுப்பினர் கூடும்போதெல்லாம் இந்தியாவில் நடக்கும் நிகழ்ச்சிகளைப்பற்றியே பேசுவது வழக்கம். அன்றைய நிலையில் பிரிட்டிஷ் ஆட்சியாளரின் நடவடிக்கைகளைக் குறித்து ஆழமாக விமரிசனம் செய்யாமல் இந்தியருடைய வேறு விஷயங்கள் ஏதும் பேசுவதற்கில்லை. அத்தகைய பேச்சுகளும் உரையாடல்களும் சங்கத்தில் வைத்துக்கொள்வது அறிவு சார்ந்த செயலில்லை என்பது மட்டுமன்றி, அபாயம் விளைவிக்கக்கூடுமென்றும் சிலர் கருதினர்கள். 'இந்தியர் சங்கத்தில் இந்திய அரசியல் விஷயங்களைப்பற்றிப் பேசுவதும், விவாதிப்பதும் முறையல்ல' என்றதோர் தீர்மானத்தை அதற்காகவே

கூட்டப்பெற்றதோர் சங்கப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றுவ தென்று அவர்கள் முடிவு செய்தனர். அரசாங்கப் பணிகளிலும், வாணிபத் துறையிலும் ஈடுபட்டவர்களும், தேசிய விஷயங்களில் ஈடுபாடில்லாதவர்களும் அச் சங்கத்தில் நீடித்து உறுப்பினராக இருக்க வேண்டுமென்றால் அத்தகையதோர் உறுதி தேவை என்று விவாதித் தனர். அத்தகையதோர் தீர்மானம் நிறைவேறினால், இந்தியர் சங்க இயக்கத்தின் நோக்கத்துக்கே ஊறு பயப்பதாகும் என்று நான் கருதினேன். உறுப்பினரில் பெரும்பாலோரும் என் கருத்துக்குச் சாதகமாகவே கருதினர். அத்தகையதோர் தீர்மானத்தை நிறை வேற்றிய பின், சங்கத்துக்கே அவசியமில்லை என்று தோன்றியது. எனவே, தீர்மானத்துக்கு உடன்படுவதைக் காட்டிலும் சங்கத்தைக் கலைத்துவிடுவதே சாலச் சிறந்ததென்றும் நாங்கள் கருதினோம். பொதுக்கூட்டத்துக்குப் பல நாட்கள் முன்பிருந்தே இரு தரப்பினரும் தத்தமக்கு ஆதரவாளரைத் தேடும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ஒரு நாட் காலையில் சிறப்புக் கூட்டம் கூடியது. மூன்றுமணி நேரம் தொடர்ந்து நீடித்த விவாதத்துக்குப் பிறகு தீர்மானத்தைப் பெரும் பான்மைக்கு விட்டார்கள். அது தள்ளுபடியாயிற்று. அதை நாங்கள் பெரு வெற்றியாகக் கருதினோம். சில நாட்கள் இந்திய மக்கள் அதைப் பற்றியே பேசித் தீர்த்தனர்.

ஒவ்வொன்றாய் நிகழ்ச்சிகள் தொடர்ந்து மிக விரைவில் நடந்தன. இரண்டாம் உலகப் போர் தொடங்குவதற்கான அறிகுறிகள் தோன்றின. அதைக் கருத்தில்கொண்டுதான் போலும், கோடிக் கணக்கில் செலவிட்டு, சிங்கப்பூரில் பெரிய கப்பற்படைக்குரிய தளத்தை உருவாக்கினார்கள்.

ஐரோப்பாவில் நடந்த நிகழ்ச்சிகளை மலாய் நாட்டு மக்கள் மிகவும் பரபரப்புடனும் உன்னிப்பாகவும் கவனித்து வந்தனர். ஹிட்லருடைய பதவியும் ஆற்றலும் உயரிய நிலைக்கேறிவிட்ட காலம் அது. ஜெர்மனியில் 'ஃப்யூரர்' என்ன பேசுகிறார், என்ன செய்கிறார் என்று உலக மக்களனைவரும் கூர்ந்து நோக்குபவர்களாயிருந்தனர். நெப்போலியனுக்குப் பிறகு, ஹிட்லரைப் போல் ஐரோப்பாவை நடுங்கச் செய்த தனிமனிதன் உலக வரலாற்றில் யாருமில்லை. ஹிட்லரும் முஸோலினியும் சிறிது காலம் உலக அரங்கில் முக்கியமான ஆட்டக்காரர்களாக விளங்கினர். என்றாலும் இந்த இருவருடைய இறுதிக் காலமும் எத்தகைய இரங்கத் தகுந்த நிலையில் இருந்தது!

1939ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் போர் தொடங்கியதும் சிங்கப் பூரிலும் நிலைமை மாறியது. போருக்கான முன்னேற்பாடுகளைக் கருத்துடன் செயலாற்ற முனைந்தனர். இந்தியாவிலிருந்தும்,

ஆஸ்திரேலியாவிலிருந்தும், நியூஜீலந்திலிருந்தும் ராணுவம் அங்கு வந்தது. எதிர்த்தாக்குதலைச் சமாளிப்பதற்கான பயிற்சிகள் நகர மக்களுக்கு அளிக்கப் பெற்றன. ஐரோப்பாவில் தொடங்கிய போர் எப்போது மலேயாவுக்கு வந்துவிடுமோ என்று மக்கள் அஞ்சி யிருந்தனர்.

போர்க்காலத்தில் இந்தியரிடையே காணப்பெற்ற மனப்போக்கு, பிரிட்டிஷாரை அதிருப்தி கொள்ளச் செய்தது. ஜனநாயகத்தின் பேரிலும் சுதந்திரத்தின்மீதும் அக்கறை கொண்டவர்களாகவே தாங்கள் ஜெர்மனியுடன் போர் தொடங்கியிருப்பதாக முழக்கிக் கொண்டிருந்தாலும், அந்த இரு உரிமைகளும் இந்தியருக்கு இல்லை. அதற்கு பிரிட்டிஷார்தாம் காரணமாக இருந்தனர். அப்போது அவர்கள் தங்கள் அதிகாரத்தை இந்தியாவில் வலியுறுத்தி, இந்திய மக்களிடம் போருக்கு வேண்டிய உதவிகளைப் பெறுவதில்தான் நோக்கம் கொண்டிருந்தனர்.

இந்தியரிடையே, ஒருவருக்கொருவர் ஒற்றுமை இல்லாத காரணம் கொண்டு மட்டுமே இந்தியருக்கு சுயாட்சி உரிமையை அளிக்கவில்லை என்றும், இந்திய தேசிய நிலைமைகளுக்கேற்ப ஆட்சி முறையில் சீர்த்திருத்தங்கள் செய்திருப்பதாகவும், தொடர்ந்தும் அவற்றைச் செயலாற்ற பிரிட்டிஷ் அரசாங்கம் சித்தமாக இருப்பதாகவும் அவர்கள் உலகுக்குப் பிரசாரம் செய்தார்கள். அந்தப் பிரசாரத்தை உறுதி செய்யும் வகையில், 'எட்வின் ஹோவர்ட்' என்றோர் தனியதிகாரியும் அவருக்கு உதவியாளராகச் சிலரும் சிங்கப்பூருக்கு வந்தனர்.

போர்க்காலத்தில் இந்தியரின் பொது நடவடிக்கைகளை விமரிசிக்கும் வண்ணம் சிங்கப்பூரில் வெளியானதோர் முக்கிய இதழ் 'ஃப்ரீபிரஸ்' தலையங்கம் வெளியிட்டது. அதற்கு மறுமொழியாக, இந்தியருடைய நிலையைத் தெளிவுறுத்தும் நோக்குடன் நான் நீண்டதோர் கட்டுரை எழுதி அனுப்பினேன். 'ஜனநாயகத்துக்காக நடத்தப்படும் போர் ஐரோப்பியப் போர்க்களங்களிலில்லை; இந்தியச் சிறைகளில் நடக்கிறது' என்று நான் எழுதியது, எட்வின் ஹோவர்டை உறுத்தியதுபோலும்! இந்தியாவில் பிரிட்டிஷார் செய்திருக்கும் ஆட்சிச் சீர்த்திருத்தங்களை அவர் என் கட்டுரைக்கு பதிலாகச் சுட்டிக் காட்டினர்.

'புதிய ஆட்சிச் சீர்த்திருத்தங்களை நாங்கள் பிரிட்டிஷாரிடம் வேண்டி நிற்கவில்லை. இந்தியருக்குரிய முழு உரிமையை நாங்கள் வேண்டி நிற்கிறோம்' என்று நான் மறுமொழியளித்தேன். ஃப்ரீபிரஸ் பகுதிகளில் எங்களுக்கிடையே நிகழ்ந்த விவாதம், இந்தியரிடையே பெரும் உற்சாகத்தைத் தூண்டிவிட்டது. அந்நாளில் என் வீட்டுக்கு எப்போதும் பலர் வருவார்கள். 'போர்க் காலம். கவனமாக இருங்கள்!' என்றும் சிலர் அறிவுரை நல்கினர்.

என்னைச் சந்திக்கப் பெரிதும் விரும்புவதாகத் தெரிவித்து ஒரு நாள் 'எட்வின் ஹோவர்ட்' என்னைத் தேநீரருந்த அழைப்பு விடுத்தார். நாங்கள் இருவரும் சிங்கப்பூர் அடெல்ஃபி ஓட்டலில் சந்தித்தோம் நாங்கள் இருவர் மட்டுமே இருந்தோம். இந்தியர் நிலைமை குறித்து நாங்கள் இரண்டு மணி நேரம் உரையாடினோம். இருவரும் கருத்து மாறுதவராகவே பிரிந்தோம். இன்னொரு நாள் பேச்சு வார்த்தைகளைத் தொடரலாம் என்று நினைத்தோம். அதற்குச் சந்தர்ப்பம் வாய்க்க வில்லை. மலேயாவில் அப்போதே போர் வந்துவிட்டது.

1941ஆம் ஆண்டு டிசம்பர் எட்டாந்தேதி புலர்காலைப் பொழுதில் எவ்வகையான முன்னெச்சரிக்கையுமின்றி, சிங்கப்பூர் நகரின் மையப் பகுதியில் இரண்டு குண்டுகள் விழுந்தன. அவை வெடிக்கும் பயங்கர ஓசை கேட்டே நகர மாந்தர் சட்டென்று விழித்தெழுந்தனர். என்ன வென்றறியாமல் சிலர் திகைத்தனர். ஜப்பான் சக்ரவர்த்தி பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராக யுத்த முழக்கம் செய்திருந்த விவரம், பொழுது விடிந்த பின்னரே மக்களுக்குத் தெரியவந்தது. இரண்டு நாட்கள் சென்ற பின்னர், டிசம்பர் பத்தாந்தேதி, ஜப்பானியப் படை யினர். கோட்டம்பாரு, சிங்கோர, பட்டாணி ஆகிய மூன்று இடங் களிலும் இறங்கியிருக்கின்றனரென்றும், விரைந்து முன்னேறுகின்றன ரென்றும் கேள்விப்பட்டு மக்கள் அஞ்சி என்ன செய்வதென்றறியாமல் திகைத்தனர். பலரும் மலாய் நாட்டைவிட்டுச் செல்லத் தயாரானார்கள். ஆனால் அதற்குத் தேவையான கப்பல்கள் இல்லை. இருந்த கப்பல்களில் மக்கள் நெருக்கியடித்துக்கொண்டு விரைந்து புறப்பட்டனர். சில கப்பல்களை ஜப்பானியர் குண்டு வீசித் தகர்த் தனர். கலங்கள் பலவும் குறித்த இடத்தை அடைய முடியவில்லை. மனைவியர் கணவன்மாரைப் பிரியவேண்டி வந்தது. குழந்தைகள் தாய் தந்தையரைப் பிரிந்தனர். எவ்வாறேனும் போரரங்கை விட்டுச் சென்று விட வேண்டுமென்று மக்களில் பலரும் குறியாக இருந்தனர். செல்ல இயலாதவர்கள் பாதுகாப்புக்கான வழிமுறைகளைச் சிந்தித்து ஏற்பாடு செய்தார்கள். குண்டுகளினுல் சேதமடையாத 'ஷெல்டர்'கள் நிறுவினர்கள். உணவுப் பொருளைச் சேமித்து வைத்தார்கள். சாதாரணமான பொது முயற்சிகளெல்லாம் நடைபெற்றன. நானும் அலுவலகம் செல்வதை நிறுத்தினேன். பத்திரிகைகள், வானொலி, மற்றும் அவ்வப்போது மக்கள் வாயிலாகப் பரவும் தகவல்கள் ஆகியவை கொண்டு நாங்கள் ஆங்காங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளை அறிந்தோம். எல்லோரும் திகில் நிறைந்தவர்களாகவே இருந்தோம்.

புதிய இடங்களை ஜப்பானியர் கைப்பற்றி வரும் விவரங்களை நாள் தோறும் காலையில் அறியலாம். சிங்கப்பூரில் அகதிகள் வந்து நிறைந் தனர். என்ன நேர்ந்தாலும் ஜப்பானியர் சிங்கப்பூரைக் கைப்பற்ற முடியாது என்று மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் வின்ஸ்டன் சர்ச்சில், மக்கள் அவ்வாறு நம்பிக்கை வைத்திருக்கும் வரையில் ஜப்பானியரின் தாக்குதலைப்பற்றி அஞ்ச வேண்டாம் என்று கூறினர். ஆனல், எந்தத் தடுப்பையும் பொருட் படுத்தாமல் எதிரிகள் அநாயாசமாக முன்னேறி வந்தனர். ஜப்பானியர் சிங்கப்பூரை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கின்றனர்.... பினாங்கு-கோலாலம்பூர்-மலாக்கா-எல்லா இடங்களும் அவர் வசமாகின்றன.

1942ஆம் ஆண்டு ஜனவரி முப்பத்தொன்றும் தேதி ஜப்பானியப் படை சிங்கப்பூரை அடுத்த ஜோஹூரை அடைந்திருக்கிறதென்ற விவரம் கிடைத்தபோது, சிங்கப்பூர் நகரமும், சூழலும் சட்டென்று மாறிவிட்டன. சிங்கப்பூர்—படையினரும் போர்த் தளவாடங்களும் நிறைந்ததொரு பெரிய கோட்டையாக மாறியது.

ஜோஹூரிலிருந்து சிங்கப்பூருக்குப் பின்வாங்கிய பிரிட்டிஷ் படையும், அவற்றுடன் கூடிய கணக்கற்ற வண்டிகளும், போர்த்தளவாடங்களும் வெள்ளமென விரிந்து பரவியிருந்த காட்சி மறக்க இயலாததோர் காட்சியாக விளங்கியது. நான் வசித்த வீட்டிலிருந்து நோக்கியபோது அந்தப் படைவெள்ளம் வடிவதற்கு மூன்று நாட்கள் சென்றதைக் கண்டோம். ஜோஹூரையும் சிங்கப்பூரையும் இணைத்த பெரிய பாலத்தை பிரிட்டிஷார் வெடிமருந்து கொண்டு தகர்த்தனர். எதிரியின் முன்னேற்றத்தை அது தடுத்து நிறுத்தும் என்று அவர்கள் கருதினர்கள். ஜப்பானியரின் முன்னேற்றத்தை அவ்வாறு தடுக்க இயலவில்லை. 'சிங்கப்பூரைக் கைப்பற்றும் போராட்டத்தை உடனே தொடங்கு வோம். அது முடிவதற்கு அதிக நேரமாகாது. ஜப்பானியப் படை யினர் அதற்குரிய ஏற்பாடுகள் செய்கின்றனர்' என்று டோக்கியோ வானொலி அறிவித்தபோது, பயங்கர அநுபவங்கள் எதிர்நோக்கி இருப் பதை நாங்கள் உணர்ந்துகொண்டோம்.

நான்கு நாட்கள் சென்றன.

'சிங்கப்பூரை எதிரிகள் ஒருபோதும் கைப்பற்ற முடியாது; அவர்களை அதற்கு விடமாட்டோம். ஒவ்வொரு அங்குலத்துக்கும் நாங்கள் போராடுவோம். வெற்றி இறுதியில் நமக்கே என்பதில் ஐயமில்லை' என்று சிங்கப்பூர் கவர்னர் ஸர் ஷென்டன் தாமஸ் அறிவித்தபோது, பிரிட்டிஷார் பெரியதொரு போருக்குத் தயாராக இருப்பதாகவே எல்லோரும் நம்பினர்கள். ஆனல் நிகழ்ந்தது வேறு.

மிக விரைவில் எல்லாம் முடிந்து விட்டது.

33

போரும் அதற்குப் பின்னரும்

என்னுடைய போர்க்கால அநுபவங்களைக்குறித்து 'நிகழ்காலமும் எதிர்காலமும்' என்ற நூலில் விவரமாக எழுதியிருக்கிறேன். என்றாலும் சுய வரலாற்றை விவரிக்கும் இந்நூலில் வாழ்க்கையை நெருங்கித் தொடும் நிகழ்ச்சிகளைப் புறக்கணிப்பதற்கில்லையல்லவா?

போர் தொடங்கியிருந்த அந்நாள், நான் சிங்கப்பூர் நகரிலிருந்து நான்கு மைல் தொலைவிலுள்ள 'பயாலேபர்' என்ற இடத்தில் வாழ்ந்திருந்தேன். என் குடும்பத்தினர் தவிர சில நண்பர்களும் அவர்கள் குடும்பங்களுடன் எங்களுடன் இருந்தனர். பாதுகாப்புக்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் செய்துகொண்டிருந்தோம். சில நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சேகரித்து வைத்தோம். குண்டு வீசும் விமானங்கள் வரும்போது பாதுகாப்பாகப் பதுங்கிக்கொள்ள ஷெல்டர்கள் கட்டிக்கொண்டோம். காயம் பட்டால் முதலுதவிக்குத் தேவையான மருந்துகளும் சாதனங்களும் முன்னேற்பாடாகத் தேடி வைத்துக்கொண்டோம். எப்போது ஜப்பானியர் சிங்கப்பூரைக் கைப்பற்ற வருவார்களோ என்று அச்சமும் கலவரமுமாக நாங்கள் நாள்களைத் தள்ளினோம்.

1942ஆம் ஆண்டு, பிப்ரவரி எட்டாந்தேதி மாலையில் என் வீட்டின் முன் ஒரு குண்டு வெடித்த பயங்கர ஓசை கேட்டது. குபீரென்று தோன்றிய வெளிச்சமும் தொடர்ந்த பேரோசையும், எங்களைத் திடுக்கிட்டுத் திகைக்கச் செய்தன. ஐந்து நிமிடங்களில் இன்னொரு குண்டு வெடித்தது. ஜப்பானியர் தாக்குதலைத் தொடங்கிவிட்டனர். எங்களுடைய திகைப்பும் மலைப்பும் அதிகமாயின. அவர்கள் எந்த வழியாகச் சிங்கப்பூர் வருகின்றனரென்று தெரியவில்லை. அடுத்தடுத்துப் பின்னும் இரண்டு மூன்று குண்டுகள் வெடித்ததைக் கேட்டோம்—என்ன செய்யலாம் என்று நாங்கள் ஆலோசனை செய்யலானோம். ஆனால் அங்கே தொடர்ந்து தங்குவது அபாயமென்று தீர்ந்து கொண்டோம். நகரத்துக்குச் சென்றுவிடுவதென்று முடிவுசெய்தோம். அங்கே இரண்டு கார்கள் இருந்தன. மூன்று நான்கு தடவைகளாக, நாங்கள் பெரும்பாலோரும் நகரத்திலிருந்த ஒரு வீட்டுக்கு மாறினோம். நாலைந்து நாட்கள்சென்றன. ஜப்பானிய விமானங்கள் அங்கும் குண்டு

வீசத் தொடங்கியது. நகர் முழுவதையும் குண்டு வீசி அழித்துவிடுவ தாக அவர்கள் தீர்மானித்திருப்பதாக வதந்தி பரவியது. மக்கள் அங்கு மிங்குமாக ஓடித் தாவி அலைந்தார்கள். மீண்டும் நாங்கள் பயாலேபர் வீட்டுக்கே திரும்பிச் செல்லத் தீர்மானித்தோம். உணவு கொள்ளக் கூட நேரம் கிடைக்கவில்லை. ஒரு கார்தான் அங்கு இருந்தது. அதிலேறிப் பல தடவைகளாக நாங்கள் பயாலேபரை அடைந்தோம்.

அப்பொழுது மூன்று மணியிருக்கும். குண்டுகளும் பீரங்கிகளும் வெடிக்கும் ஓசை அவ்வப்போது கேட்டுக்கொண்டிருந்தாலும் பசியினால் தளர்ந்திருந்த நாங்கள் தேநீரேனும் தயாரித்து அருந்த முடிவு செய் தோம். அதற்காகக் கிளம்பினேம். அப்போது ஒரு குண்டு வெடித்து, சமையலறைக் கூரையைத் தகர்த்து வீழ்த்தியது. நெஞ்சில் திகில் மூண்டுவிட நாங்கள் ஷெல்டருக்கு விரைந்தோம். ஷெல்டருக்குச் செல்லுமுன் இன்னோர் குண்டு வெடித்து, சமையலறைச் சுவரின்மீதே விழுந்தது. பல பகுதிகளிலிருந்தும் மக்கள் கூக்குரலிடுவது கேட்டது. யாரும் வெளியிலிறங்க முடியாது. வசதியுமில்லை. குண்டுகள் மேலும் மேலும் பொழியத் தொடங்கின. வீட்டின் ஒவ்வோர் பகுதியும் இடிந்து விழுந்தது. மரங்கள் அடியோடு சாய்ந்தன. அண்மையில் இருந்த வீடுகள் தீப்பற்றி எரியலாயின. திக்-பிரமை கொண்ட மக்கள் தெய் வத்தைக் கூவியழைத்துப் பிரார்த்தனை செய்யலாயினர். ஒரு கண நேரத்தில் அந்த இடம் பயங்கர நரகமாய் மாறிற்று. ஒவ்வொரு குண்டும் வெடிக்கும் ஓசையைச் செவியுற்றதும் எவரேனும் விபத்துக் குள்ளாகிவிட்டனரோ என்று கூவிக் கேட்பேன். இருந்த இடத்தி லிருந்து நகர இயலாமலிருந்தது. இவ்வாறே ஒரு கரிய இரவு கழிந்தது.

பொழுது புலர்ந்தது. சுற்றுமுற்றும் பார்த்த நான் கண்ட காட்சிகளை எப்படி விரித்துரைப்பேன்! அந்த வீட்டில் இனி வாழ முடியாத நிலையில் பல பகுதிகளும் இடிந்து விழுந்திருந்தன. வேறு வீடு ஏதேனும் இருக் கிறதா என்று பார்க்க வெளியே செல்லமுடியாது. அப்போதுதான் போர் முடிந்துவிட்டதென்று தகவல் அறிந்தோம். அச் செய்தி கேட்டதும் மிகுந்த ஆறுதல் உண்டாயிற்று. 1942ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பதினைந்தாம் தேதி, கதிரவன் எழும்பிவரும் காலைப் பொழுதில், ஜப்பானியரின் உதய சூரியச் சின்னம் தாங்கிய கொடி சிங்கப்பூரின் 'காதே' கட்டடத்தின் உயரே பறந்து கொண்டிருந்தது.

இரண்டு நாட்கள் சென்ற பின்னர், ஜப்பானியனை ஒரு ராணுவ அதிகாரி என் வீட்டுக்கு வந்தான். அவனுடைய மேலதிகாரி என்னைக் காண விரும்புவதாகவும், மறுநாள் நான் அவனைக் காணத் தயாராக இருக்க வேண்டும் என்றும் என்னிடம் தெரிவித்தான். மறுநாள் குறித்த நேரத்தில் காரில் வந்தான். நான் அவனுடன் காரிலேறி அவனுடைய மேலதிகாரியைக் காணச் சென்றேன்.

வழிநெடுகிலும் நான் கண்ட காட்சிகளை மறக்க இயலாது. இடிந்த வீடுகளும், குண்டும் குழியுமாகத் தகர்ந்த சாலைகளும், முறிந்த மரங்களும், கருகிய சடலங்களுமாக, இரண்டு நாட்களுக்கு முன்பே முடிந்திருந்த போரின் பயங்கரத்தை நினைப்பூட்டின. வழியில் ஆங்காங்கு கையில் ஆயுதம் தாங்கிய படைவீரர் எங்களுடைய காரை நிறுத்திப் பரிசோதனை செய்தார்கள். உடன் இருந்தவர்கள் ஜப்பானியப் படையைச் சேர்ந்தவர்களாதலால், அதிகமாக நேரமாக்காமல் மேலே செல்ல அநுமதித்தனர். அரைமணி நேரப் பயணத்துக்குப் பிறகு, ஒரு பெரிய பங்களாவின் நுழைவாயிலில் கார் நின்றது உடன் மேஜர் ஃபூஜிவாராவின் முன் என்னை அழைத்துச் சென்றனர். அந்நாள் மேஜர் ஃபூஜிவாராவுக்கு நாற்பது வயதுக்குமேலிருக்காது. மலர்ந்த முகத்தினர்; வெகு சாமர்த்தியமாக உரையாடவல்லவர். ஒவ்வொரு இடத்துக்கும் வரும்போதெல்லாம், இந்தியருடன் தோழமை காட்டி, இந்தியன் இண்டிபெண்டன்ஸ் லீக் நிறுவுவது அவர் வழக்கம். இதில், ஜப்பானியருடன் அவருக்கு இந்திய அதிகாரிகள் சிலரும் உதவினர். ஃபூஜிவாராவுக்கு நன்றாக ஆங்கிலம் பேசத் தெரியாது. அதனால் அவர் என்னுடன் பேசும்போது, மொழிபெயர்ப்பாளராக 'குனிஷ்க்' என்ற பெயர் கொண்ட இன்னொரு ஜப்பானியனும் அருகில் இருந்தான். சுமார் இரண்டு மணி நேரம் அவர் உரையாடினார். நான் எல்லாவற்றையும் அப்போது கேட்டுக்கொண்டிருந்தேன். அவ்வளவுதான். ஆங்கிலேயர் இந்தியாவை அடக்கி ஆண்டு வருவது காண, ஓர் ஆசியாக்காரன் என்ற நிலையில் அவரை வேதனைக்குள்ளாக்குகிறதென்றும், இந்தியருக்கு விடுதலை வாங்கித் தருவதே தன்னுடைய வாழ்வின் குறிக்கோளாகக் கருதியிருப்பதாகவும், அதற்குரிய சந்தர்ப்பம் அப்போது நேர்ந்திருப்பதாகவும், இந்தியர் ஒன்றுகூடி முனைந்தெழவேண்டுமென்றும் அவர் எனக்கு எடுத்துரைத்தார். உடனே இந்தியன் இண்டிபெண்டன்ஸ் லீகின் ஓர் கிளையை அங்கே தோற்றுவிக்கவேண்டும் என்றார் அவர். பேசி முடிந்த பின்னர் என்னை ஒரு படை அதிகாரியுடன் கூட்டி அந்தக் காரிலேயே வீட்டுக்குத் திருப்பி அனுப்பினர். அடுத்தடுத்து இரண்டு மூன்று தடவைகள் மேஜர் ஃபூஜிவாரா எனக்கு ஆளனுப்பி நான் அவரைக் காணச்செய்தார்.

இரண்டு வாரம் சென்ற பின்னர், என்னுடைய இல்லத்திலேயே ஒரு கூட்டம் கூடியது. அன்றுதான் சிங்கப்பூரில் 'இண்டியன் இண்டிபெண்டென்ஸ் லீகி'ன் கிளையைச் சிங்கப்பூரில் நிறுவினேம். சிங்கப்பூரில் ஒரு புகழ்பெற்ற பாரிஸ்டராக இருந்த 'கோஹோ' அதன் தலைவர். நான் துணைத் தலைவர். கோஹோ நெடுங்காலம் சிங்கப்பூரில் வாழ்ந்து பெயரும் புகழும் பெற்ற வங்காளியர். இண்டிபெண்டன்ஸ் லீக் நிறுவு

வதிலும், அதன் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதிலும், ஜப்பானியர் பின்னணியில் நின்று உரிமை பாராட்டினர்.

அன்றைய சூழலில் ஜப்பானியருடன் உற்ற தொடர்பு ஓர் அருள் போலமைந்தது. படையினரின் தொல்லைகொண்டு மக்கள் மிகவும் அவதியுற்றனர். குறிப்பாக, போர் முடிவடைந்து சில நாட்கள் செல்லும் வரையிலும், படையினர் மக்களிடம் மிருகத்தனமாக நடந்து கொண்டனர். வீடுகளில் புகுந்து தங்களுக்கு வேண்டியதை எடுத்துச் செல்வார்கள். மக்களைத் துன்புறுத்துவதும் பெண்களை அவமானம் செய்வதும் வழக்கமான செயல்களாக இருந்தன. மக்கள் அஞ்சி அஞ்சிக் காலம் தள்ளிய நாட்கள் அவை. அந்த அச்சத்தினின்று எங்களுக்கு மீட்சியளிக்கும் வகையில் மேஜர் ஃபூஜிவாரா என் வீட்டின் முன் ஒரு அறிவிப்புப் பலகை மாட்டி வைக்கச் செய்தார். அங்கே அதைக் கண்ணுற்ற படையினர் என் வீட்டுப் பக்கம் வராமல் திரும்பிச் சென்றனர். அது எங்களுக்கு மட்டுமன்றி, சில நண்பர்களுக்கும் வரப் பிரசாதமாக அமைந்தது. இரண்டு வாரம் சென்றது.

மார்ச் மாத முதலில் ஒரு நாள் மேஜர் ஃபூஜிவாரா என்னைக் காண விரும்பினார். அன்றைய சந்திப்பில்தான் நான் டோக்கியோ புறப்பட்டுச் செல்ல வேண்டுமென்று அறிவித்தார். இந்திய விடுதலை குறித்து ஆலோசனைகள் செய்வதற்காக இந்திய மாநாடு ஒன்று டோக்கியோவில் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றனரென்றும், அதற்கு நானும் சில இந்தியர்களும் மலேயாவிலிருந்து செல்ல வேண்டும் என்றும் அவர் கூறினார். எனக்கும் உற்சாகமாகவே இருந்தது. மார்ச் பதினேந்தாம் நாள் காலை ஏழு மணிக்கு விமானத்தில் நான் ஜப்பான் கிளம்பினேன்.

நாங்கள் ஒரு தனி விமானத்தில் பயணம் செய்தோம். நாங்கள் எட்டுப் பேரில் மூவர் ஜப்பானியர். மேஜர் ஃபூஜிவாராவைத் தவிர்த்து, கர்னல் இவாகுருவும், இன்னொரு ஜப்பானியரும் இருந்தனர். மேஜர் ஃபூஜிவாராவுக்கு பதிலாக இந்தியன் இண்டிபெண்டன்ஸ் லீகின் புதிய லயாசான் அதிகாரியாக இவாகுரு நியமனம் பெற்றிருந்தார்.

என்னுடன் இருந்த மற்ற நான்கு இந்தியர்கள், மோகன் ஸிங், 'கர்னல் கில்', என். ராகவன், எஸ். ஸி. கோஹா ஆகியோராவர். பிரிட்டிஷ் ராணுவத்தில் ஒரு காப்டனாக இருந்த மோகன் ஸிங், ஜப்பானியருடைய உதவி கொண்டு உருவான இந்திய தேசீய ராணுவத்தின் ஜெனரல். அருந்திறம் வாய்ந்த வீரர் மோகன் ஸிங், அச்சத்தை வென்ற தேசாபிமானி. அவர் எனக்கு அறிமுகமான நாளிலிருந்தே நாங்கள் மிகுந்த தோழமை கொண்டு பழகினோம். இன்னும் அது மாறவில்லை. பிரிட்டிஷ் படையிலிருந்த நாட்களில்

கர்னல் கில்லின் பதவி மோகன் ஸிங்கின் நிலையைக் காட்டிலும் உயர்ந்த தாக இருந்தாலும், இந்திய தேசீயப் படையில் அவர் மோகன் ஸிங்குக்குக் கீழ்ப்பட்ட பதவியில்தான் இருந்தார். அவருடைய அறிவுரைகளும் உதவியும் மோகன் ஸிங்குக்குப் பெரு நன்மைகளாக வாய்த்தன. கர்னல் கில், நம் நாட்டின் தூதுவராகப் பல நாடுகளிலும் பணியாற்றிய பிறகு இப்போது ஓய்வுகொண்டிருக்கிறார்.

என். ராகவன், பினாங்கில் தொழில் செய்துகொண்டிருந்ததொரு பாரிஸ்டர். மலேயா–இந்தியருக்குத் தொடர்பான விஷயங்களி லெல்லாம் அவர் பங்கேற்றுத் திறமையுடன் செயலாற்றியிருக்கிறார். ராகவனும் பல நாடுகளிலும் தூதுவராகப் பணியாற்றிய பின்னர் ஓய்வு பெற்றிருக்கிறார். சிங்கப்பூரில் பாரிஸ்டராக இருந்த கோஹாவைப் பற்றி முன்பே கூறியிருக்கிறேன். அவரும் எங்களுடன் பிரயாணம் செய்தவரில் ஒருவர்.

சிங்கப்பூரிலிருந்து நாங்கள் புறப்பட்டு, சைகான், ஹனாய், ஷாங்ஹாய், தைஹாக் முதலிய இடங்களில் ஒவ்வொரு நாள் தங்கினோம். ஐந்தாம் நாள் டோக்கியோவை அடைந்தோம். பயண வழி நெடுகிலும் வேண்டிய வசதிகளை ஜப்பானியர் ஏற்பாடு செய்திருந்தனர்.

நாங்கள் ஜப்பானை அடைந்து இரண்டு நாட்கள் சென்ற பின்னரே வேறு சில இந்தியரையும் ஏற்றிக்கொண்டு எங்களுக்கு முன்பே புறப் பட்டிருந்த விமானம் ஜப்பான் மலைச் சிகரங்களுக்கிடையே விழுந்து நொறுங்கிற்றென்ற செய்தி அறிந்தோம். அவர்களும் ஜப்பானில் நடைபெறவிருந்த மாநாட்டுக்கு மலேயாவிலிருந்து புறப்பட்டிருந்தனர். நீலகண்ட ஐயர், காப்டன் அக்ரம் ஸிங், சுவாமி சத்யானந்தபுரி, பிரீதம் ஸிங் ஆகிய நால்வர் அந்த விமான விபத்தில் உயிரிழந்தனர்.

அவர்களில் நீலகண்ட ஐயரைப்பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். அவர் நெடுங்காலம் மலேயாவில் வாழ்ந்து, பல பணிகளில் பங்கு கொண்ட மதிப்புக்குரியதொரு மனிதர். மலாய் நாட்டின் பொது வாழ்வில், குறிப்பாக இந்தியர் சம்பந்தப்பட்ட பணிகளில் உற்சாக மாகச் செயலாற்றியவர். அவற்றிலிருந்து விலகி, தாய் நாடு திரும்ப அவர் எண்ணியிருக்கையில்தான் போர் தொடங்கியது. 'இந்தியன் இண்டிபெண்டன்ஸ் லீக்' தொடங்கியபோது, ஐயர் அதிலும் உற்சாக மாகச் செயலாற்ற முன்வந்தார். அதனால்தான் ஐயரையும் டோக்கியோ வுக்கு அழைத்திருந்தனர்.

டோக்கியோவுக்குக் கிளம்புவதற்கு முதல் நாள் மாலையில் அவர் எங்கள் வீட்டுக்கு வந்தார். அன்று ஐயர் அங்குதான் தங்கினார். இரவு எட்டு மணிக்கு ஜப்பானியர் அங்கு வந்தனர். மறுநாள் ஜப்பானுக்குச்

செல்வதற்கு ஒரு விமானம் தயாராக இருப்பதாகவும், அதில் சிலர் செல்லலாம் என்றும் அவர்கள் கூறினர்கள். அன்றே புறப்படுவதற்கு எனக்குச் சௌகரியமில்லாமலிருந்தது. எனவே, 'நான் நாளை புறப்படுகிறேன்' என்றார் ஐயர். எனக்கு பதிலாக அவர் அந்த விமானத்திலேறிச் சென்றார்.

அது அவரவர் காலவிதியா.....? இல்லையேல் என்ன சொல்லட்டும்? அந்த விமானந்தான் மலைச்சிகரத்தில் மோதி வீழ்ந்தது. முதலில் நிச்சயித்திருந்தபடி நான் அந்த விமானத்திலேறிச் சென்றிருந்தால் இன்று இதை எழுதவே இடமில்லை.

டோக்கியோவில் நிகழ்ச்சிகள் தொடங்கும் சந்தர்ப்பத்தில் இந்த விபத்தைப் பற்றி அறிந்ததும் நாங்கள் அதிர்ச்சியுற்றுச் சிலையானோம். மடிந்துபோன எங்களுடைய அன்பு நண்பர்களுடைய ஆன்ம சாந்திக்காக நாங்கள் நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்தில் அந்நாள் ஜப்பானிய முதல் மந்திரி ஜெனரல் டோஜாவும், டோக்கியோ நகரப் பிரமுகர்களும், உயர்ந்த பதவியிலுள்ள அரசு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இறுதியில், அந்த இனிய நண்பர்களின் ஆதரவின்றியே, நாங்கள் ஜப்பானில் நிகழ்ச்சி திட்டத்தை ஏற்று நடத்தவேண்டியிருந்தது.

34

ஜப்பானிலும் பாங்காக்கிலும்

ஜப்பானுக்குப் பார்வையாளராக வருபவர்களெல்லாரும், ஜப்பானில் மூன்று காட்சிகளை முக்கியமாகப் பார்க்க வேண்டும்.

ஒன்று, ஃபிஜியாமா மலை; இரண்டாவது, ஜப்பானிய கெய்ஷாப் பெண்கள்; மூன்றுவது, மனதைக் கொள்ளை கொள்ளும் வகையில் பூத்துக் குலுங்கும் செர்ரி மரங்கள். விமானத்தில் டோக்கியோ செல்கையில் ஃபூஜியாமா (எரி)மலையின் கண்கொள்ளாக் காட்சியைத் தொலைவிலிருந்து பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒரு முறை கண்டால் மறக்க இயலாத காட்சி. கெய்ஷாப் பெண்டிரில்லாமல் விருந்துபசாரங்களே இல்லை என்று சொல்லலாம். விசித்திரமான ஆடைகளணிந்து, கவர்ச்சியுடன் பேசிப் பழகி விருந்தினரை உபசரிக்கும் திறமையைக் காண்கையில், பார்வையாளரை அவர்கள் கவர்ந்திழுப்

பதன் காரணம் புலம்படும். ஜப்பானில் பெண்கள் ஆண்களுக்குச் சமமாக விருந்துபசாரங்களிலும், பொதுச் சபைகளிலும் கலந்து கொள்ளாததொரு காலம் இருந்தது. அக்காலத்தில், விருந்தினரை உபசரிப்பதற்காகவே சில பெண்களுக்குத் தனியாகப் பயிற்சி அளிக்கப் பெற்றது. அத்தகைய இனத்தோரே கெய்ஷாப் பெண்கள்.

சேர்ரி மரங்கள் பூத்துக் குலுங்கும் காட்சியும் காண்பதற்கரியதாகும். இளவேனிற் காலத்தில் இரண்டு மூன்று வாரங்களுக்கு மட்டுமே இக் காட்சி காணக்கிடைக்கும். நாங்கள் அந்தப் பருவத்தில் ஜப்பான் சென்றிருந்தோம். இயற்கையின் அந்த அழகுக் கொள்ளையைக் காண்பதற்கான நல்வாய்ப்பை, கண்கள் பெற்ற பயனை அடைந்தோம். கண்ணுக்கெட்டிய வரையிலும் விரிந்து சென்ற சேர்ரி மரங்களில் கதிரவனின் ஒளிக் கிரணங்கள் விழும்போது தோன்றும் எழிலை வருணிக்க வார்த்தைகளில்லை.

ஜப்பானை அடைந்து இரண்டு மூன்று நாட்கள் சென்றபின் ஜப்பானியர் எங்களுக்கு ஒரு பெரிய விருந்துபசாரம் அளித்தனர். சுமார் அறுநூறு ஜப்பானியர் அந்த வைபவத்தில் கலந்துகொண்டனர். மந்திரிகளும், படைத்தளபதிகளும், நகரப் பிரமுகர்களுமாக அந்த விருந்தில் நிறைந்திருந்தனர். இந்திய நாடு, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கத்தினின்று விடுதலை பெறுவதற்கான முயற்சிகளில், எத்தகைய தியாகத்தையும் மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக, அவர்களில் பலரும் பேசினர்கள். அவ்வளவு பெரிய அளவில் இல்லையெனினும் மேலும் பல விருந்துபசாரங்களும் எங்களுக்குப் பின்னரும அளிக்கப்பெற்றது. ஜப்பானில் சிறப்பான இடங்கள், புகழ்பெற்ற நிறுவனங்கள், புராதனக் கலைப்பொருட்கள் எல்லாவற்றையும் நாங்கள் காண்பதற்கான வசதிகளை அவர்கள் செய்திருந்தார்கள். ஜப்பானியருடைய நாட்டுப் பற்றும், தனி நாகரிகச் சிறப்பும், உழைப்பாற்றலும், தன்னடக்கமும், பார்வையாளர் எவரையும் கவர்ந்துவிடும். ஜப்பானில் தங்கியிருந்த சில நாட்கள் மகிழ்ச்சியும் அறிவும் சார்ந்த புதியதோர் அநுபவமாக இருந்தன. அந் நாட்டுக்கு நாங்கள் சுற்றிப் பார்ப்பதற்கு மட்டுமே செல்லவில்லையே? இந்திய விடுதலை குறித்து நடத்திய ஆலோசனைகளையும் விவரங்களையும் கூறுகிறேன்.

நாங்கள் டோக்கியோவை அடைந்து இரண்டு நாட்கள் சென்ற பின்னரே, மலேயா, ஹாங்காங், ஷாங்ஹாய், ஜப்பான் முதலிய இடங்களின் பிரதிநிதிகளாக வந்திருந்த சில இந்தியர்களுடன் மாநாடு தொடங்கியது. இருபது பேர்களே மாநாட்டுக்கு வந்திருந்தனர். கர்னல் இவாகுரு வரவேற்புரையளித்தார். இந்திய விடுதலைக்காக எந்த விதமான உதவியையும் ஜப்பான் செய்யத் தயாராக இருப்ப

தாகவும், அதற்கு என்னென்ன செய்ய வேண்டும், எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை எல்லாம் ஆலோசனை செய்து நாங்கள் முடிவு கூற வேண்டும் என்று இவாகுரு விவரித்தார்.

நெடுநாட்களாக ஜப்பானில் வாழ்ந்து வந்த ராஷ் பிஹாரி போஸ் தான் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினர். இந்திய வைஸ்ராய் ஹார்டிஞ்ச் பிரபுவின்மீது குண்டு வீசிய குற்றத்துக்காகத் தன்னைக் கைது செய்யப் போகின்றனர் என்றறிந்தபோது, ராஷ் பிஹாரி இந்தியாவை விட்டு ஜப்பானுக்குச் சென்றார். அந்நாளிலிருந்தே அவர் ஜப்பானிலேயே வாழ்ந்துவந்திருக்கிறார். நெடுங்காலம் ஜப்பானிலேயே வாழ்ந்து வந்திருந்ததால், அவருடைய இலட்சியங்களும், நடைமுறைகளும் மட்டுமன்றி, சிந்தனைப் போக்கும், வாழ்க்கை முறையும்கூட ஜப்பானியரைச் சார்ந்தே இருந்தது. ராஷ் பிஹாரி போஸ் ஒரு நல்ல மனிதர். ஆனால் சுதந்திரமாகச் சிந்திப்பதற்குரிய திறமையோ, தன் சொந்தக் கருத்துகளுக்கேற்ப செயல் புரியும் மனத் துணிவோ அவருக்கு இல்லை. 'இந்தியன் இண்டிபெண்டன்ஸ் லீகின்' பணிகளை அவருடைய தலைமையில் நடத்துவதாக ஜப்பானியர் தீர்மானித்தனர்.

லீகை நடத்துவதற்கு எல்லா அதிகாரங்களும் பெற்ற தலைவராக ராஷ் பிஹாரியை நியமித்தபின், அவருக்கு உதவவும், ஆலோசனைகள் கூறவும் ஒரு கமிட்டியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவ்வாறு, லீக், தங்களுடைய போராட்டத்துக்கானதோர் இயக்கத்துக்குரிய அமைப்பாகப் பயன்படுத்தப்பெற வேண்டும். இதுவே ஜப்பானியரின் ஆலோசனை.

இந்தத் தந்திரத்தைப் புரிந்துகொள்ள இயன்ற சிலர் இதை வெளியிட இயலாமலிருந்தனர். என்றாலும், இதன் உட்கருத்தை நன்றாக உணர்ந்தறிந்துதான் செயல்பட வேண்டும் என்று கருதினர்.

'இண்டிபெண்டன்ஸ் லீக்' போன்றதோர் புரட்சி இயக்கத்தை நடத்துவது குறித்து விஷயங்களை முடிவு செய்வதற்குமுன், தென் கிழக்கு ஆசியாவிலுள்ள இந்தியப் பிரதிநிதிகள் எல்லோரும் கலந்து கொள்ளும் பெரியதோர் மாநாட்டைக் கூட்டி அதில் தேர்ந்தெடுக்கும் ஒரு காரியக் கமிட்டியிடம் இந்த இயக்கத்தைப் பொறுப்பேற்று நடத்த விடுவது உசிதம் என்று நாங்கள் கருதினோம். எனவே, ரங்கூனிலோ, பாங்காக்கிலோ ஒரு மாநாடு கூட்டுவது நலம் என்று நாங்கள் கூறினோம். இறுதியில் டோக்கியோ மாநாடு அவ்வாறே முடிவு செய்தது.

டோக்கியோவிலிருந்து நாங்கள் திரும்புமுன், அந்நாளைய முதன் மந்திரி டோஜோவைக் கண்டோம். டோஜோவின் ஆற்றலும் புகழும் உச்சத்திலிருந்த நாட்கள் அவை. அவரை நாங்கள் படையினரின் அலுவலகத்தில்தான் சந்தித்தோம். சுமார் முக்கால் மணி நேரம்

உரையாடினேம். அந்தப் பதவிச் சிறப்புகளனைத்தையும் இழந்து, அடுத்த சில நாட்களிலேயே தூக்குமேடை யேறுவார் அவர் என்பதை அப்போது யாரே எண்ணினர்கள்! விதி, மனிதனுக்குத்தான் என்னென்ன வேடங்கள் புனைந்து பார்க்கிறது!

விமான வழியாகவே நாங்கள் ஜப்பானிலிருந்து திரும்பினேம். நொறுங்கி விழுந்த விமானத்தில் பயணம் செய்த நண்பர்களைப்பற்றிய நினைவு எங்களிடையேயிருந்து அகலவில்லை. விமானத்தில் குலுக்க லொன்றும் இல்லையெனினும் அதை விட்டுக் கீழிறங்கும் வரையிலும் என் மனம் பொருந்தியிருக்கவில்லை. சிங்கப்பூரிலிருந்து நாங்கள் கிளம்பி ஒரு மாதம் சென்ற பின்னரே ஊர் திரும்பியிருந்தோம். பாங்காக் மகா நாடு இரண்டு மாதம் சென்றபின் நடந்தது. அது வரையிலும் குறிப்பிடத் தகுந்த பணிகள் ஒன்றும் இல்லை. ஆங்காங்கு லீகின் கிளைகள் நிறுவி, நோக்கங்களை இந்தியருக்கு எடுத்துரைக்க முயன்றேன். அவ்வளவே.

அந் நாட்களில் மலாயாவில் சீன மக்களை ஜப்பானியர் பல வகை களிலும் துன்புறுத்தினர். ஆயிரக்கணக்கில் சீனரை வெட்டிக் கொன்றனர்; சுட்டு வீழ்த்தினர். இந்தியருடைய நிலை அவ்வளவுக்கு மோசமாக இல்லை. என்றாலும் சுற்றிலும் நடக்கும் அட்டூழியங்களைப் பார்த்துக்கொண்டு பேசாமலிருக்க முடியுமா? ஆனால் என்னதான் செய்ய முடியும்? அவர்களுடைய படையினர் செய்யும் கொடுமைகளைப் பற்றி ஜப்பானியரிடம் கூறும் துணிவு யாருக்கும் இல்லை. ஜப்பானியர் அதை விரும்பவும் மாட்டார்கள். வேறு வழியின்றி எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியிருந்தது.

1942ஆம் ஆண்டு ஜூன் பதினைந்தாம் தேதி, பாங்காக் மாநாடு ஆரம்பமாயிற்று. அதற்காக மலாயாவிலிருந்து ஐம்பதுக்கும் மேலான பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அவர்களிடையே இந்திய தேசியப் படையினரின் பிரதிநிதிகளும் இருந்தனர். சிங்கப்பூரிலிருந்து பாங்காக் செல்லும் பயணத்துக்கு ஒரு தனி ரயில் வண்டி ஏற்பாடு செய்திருந்தனர்.

போர் விளைவித்த நாசங்களை வழிநெடுகிலும் கண்டோம். பாங்காக்கை அடைய மூன்று நாள்களாயின. மாநாட்டில் பங்கு கொள்ள ஜப்பான், மஞ்சுக்கோ, ஹாங்காங், போர்னியோ, ஜாவா, மலேயா, ஷாங்ஹாய், மணிலா, இந்தோசீனை முதலிய இடங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். தாய்லாந்தில் வாழ்ந்த பல இந்தியரும் வந்திருந்தனர். பிரதிநிதிகள் தங்குவதற்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் ஜப்பானியர் செய்திருந்தனர். அதற்காக ஏராளமான பொருட்செலவு செய்திருந்தனர்.

அந்த மாநாட்டிலும் ராஷ் பிஹாரி போஸ் தலைமை தாங்கினர். அணிமையில், வருங்காலத்தில் இந்தியாவுக்கு முழு சுதந்திரம் வேண்டிச் செயல் புரிவதுதான் இந்திய இண்டிபெண்டன்ஸ் லீகின் குறிக்கோள் என்பதை மாநாடு விளக்கியது. அதற்கான போராட்டத்தில் ஜப்பானியரின் வசமிருக்கும் இந்திய ராணுவமும், புதிதாகப் பொது மக்களிடையே தேர்ந்தெடுக்கப் பெற்று பயிற்சி அளிக்கப் பெற்ற படைவீரரும் சேர்ந்து இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்குவ தென்றும் தீர்மானித்தது.

அதற்குத் தேவையான வேறு பல விஷயங்களையும் மாநாடு யோசனை செய்தது. 'இண்டிபெண்டன்ஸ் லீகை' ஒட்டிய எல்லா அதிகாரங்களும் ஐந்து பேர்களடங்கிய ஒரு காரியக் கமிட்டியைச் சார்ந்திருக்குமென்றும் அதில் ஒரு தலைவரும், இரண்டு ராணுவ உறுப்பினரும், பொது மக்களின் பிரதிநிதிகளாக இரண்டு உறுப்பினரும் அடங்கியிருப்பார்களென்றும் முடிவாயிற்று. காரியக் கமிட்டியின் உறுப்பினர் அங்கேயே தேர்ந் தெடுக்கப்பெற்றனர். என். ராகவனும் நானும், கௌன்சில் அஃப் ஆக்ஷன் என்ற அந்தக் கமிட்டியில் இரண்டு 'ஸிவிலியன்' உறுப்பின ராகினோம். ஜெனரல் மோகன் ஸிங்கும் கர்னல் கிலானியும் இரண்டு ராணுவ உறுப்பினராவர். ராஷ் பிஹாரி போஸ் தலைவர். பாங்காக் மாநாடு முடிவுபெற்றது.

பாங்காக்கில் உருவான முதல் கௌன்சில் அஃப் ஆக்ஷன் கூட்டத்தில் அதன் உறுப்பினராகிய எங்கள் ஒவ்வொருவர்க்குரிய பொறுப்புகளை யும் அதிகாரங்களையும் திட்டமிட்டு வரையறை செய்துகொண்டோம். நான் விளம்பர-வெளியீட்டு மந்திரியானேன். இண்டிபெண்டன்ஸ் லீக் கிளைகளைப்பற்றிய பொறுப்பை ராகவனுக்கு ஒதுக்கினர்கள். படைப் பகுதிப் பொறுப்பை மோகன் ஸிங் ஏற்றார். நிதிப் பொறுப்பு, தலைவருடைய அதிகாரத்துக்குட்பட்டதாயிற்று. இவ்வாறுக லீக் செயல்படலாயிற்று.

இந்தியன் இண்டிபெண்டன்ஸ் லீகின் தலைமைக்காரியாலயம் பாங்காக் கிலிருக்கும் என்று அந்நாள் நாங்கள் கருதினோம். ஆனால் அதில் பல தொல்லைகள் ஏற்பட்டன. போர்க்காலமாக இருந்ததனால் குடும்பத் தினரை சிங்கப்பூரில் விட்டு விட்டு நான் பாங்காக்கில் தங்குவதற்கு விரும்பவில்லை. தேசிய ராணுவக் காரியாலயமும் சிங்கப்பூரிலிருக்க வேண்டுமென்று மோகன் ஸிங்கும் கருதினர். மாநாடு முடிந்து ஒரு வாரம் நான் பாங்காக்கில் தங்கினேன். பிறகு சிங்கப்பூர் திரும்பினேன்.

35

மந்திரிப் பதவி

என்னைக் கௌன்சில் அஃப் ஆக்ஷனில் ஒரு உறுப்பினராகத் தேர்ந்து எடுத்துவிட்ட செய்தி, நான் சிங்கப்பூர் திரும்புமுன் அங்கு இந்தியரிடையே பரவிவிட்டது. பாங்காக்கிலிருந்து சிங்கப்பூருக்கு நான் இரவு நேரத்தில் வந்தேன். மறுநாள் காலையில் ஏராளமான நண்பர்கள் என் வீடு தேடி வந்தனர். சில ஜப்பானியப் படை அதிகாரி களும் வந்தனர். விளம்பர வெளியீட்டுத் துறையின் மந்திரியாக நான் நியமனம் பெற்றதற்காக என்னை வாழ்த்திப் பாராட்டினர். அவர்களுடைய பணிவார்ந்த பழகு முறையும், இந்திய சுதந்திரத்துக் காக அவர்கள் காட்டிய ஆர்வமும் என்னை வியப்பிலாழ்த்தின. அவர்களுடைய பேச்சும் மரியாதையும், நான் மிக உயர்ந்ததொரு பதவியில் இருப்பதை எனக்கு உணர்த்துவதாக இருந்தன.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், ஜப்பானிய விளம்பர வெளியீட்டுத் துறை அதிகாரிகளும் நானும், இந்தியன் இண்டிபெண்டன்ஸ் லீகின் வெளியீடுகள் குறித்துக் கலந்து ஆலோசனை செய்தபின் முடிவுகள் செய்தோம். அதற்கேற்ப, சிங்கப்பூர் வானொலி நிலையத்திலிருந்து இண்டிபெண்டன்ஸ் லீகின் பிரசாரம் தொடங்கியது. டோக்கியோவில் இருந்து, ரங்கூன் வரையிலும் ஜப்பானியரின் ஆளுகைக்குட்பட்ட எல்லா வானொலி நிலையங்களிலும், இண்டிபெண்டன்ஸ் லீக் பிரசார ஒலி பரப்புகள் யாவும் என் பொறுப்பில் இருந்தனவென்பது உறுதி. ஆனால், எனக்குத் தெரியாமலும் முன்பு நாங்கள் முடிவு செய்ததற்கு மாறுகவும், ஜப்பானியர் பலவாறுகப் பிரசாரம் செய்யலானார்கள். விளம்பர வெளியீட்டுத் துறையில் அதிகாரிகளை நியமனம் செய்யவும் விலக்கவும் எனக்கு அதிகாரம் இருந்ததாக நினைப்பு. ஆனால் அந்த வகையிலும் பல சமயங்களிலும் நான் நினைத்ததற்கு மாறுக அவர்கள் செயல்புரியத் தயங்கவில்லை. அது குறித்து நான் ஏதேனும் கேட்டால் சாக்குப்போக்குகள் கூறினர்கள். என்னுடைய துறையைப் பொறுத்த மட்டில்தான் இவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பதில்லை. தேசிய ராணுவத்தைப் பொறுத்தும் இவ்வாறு ஜெனரல் மோகன் ஸிங்குக்குத் தெரியாமலும் பல விஷயங்கள் நடந்தன. அது குறித்து அவர் என்னிடம் கூறி வருந்தினர்.

1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் பன்னிரண்டாம் தேதி மாலையில் இந்தியன் இண்டிபெண்டன்ஸ் லீகின் தீர்மானங்களைப் பொது மக்களுக்கு அறிவிப்பதற்காகச் சிங்கப்பூர் ஃபாரர் பூங்காவில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடத்தப் பெருமளவில் ஏற்பாடு செய்தனர். இந்தியர் இல்லங்களிலும் வியாபாரத்தலங்களிலும் அன்று தேசியக் கொடி யேற்ற வேண்டுமென்று ஆணையிட்டனர். கூட்டத்தில் இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் உரையாற்றுவதற்கும் முடிவு செய்திருந்தனர். இவை தவிர, இண்டிபெண்டன்ஸ் லீக் அலுவலகத்திலிருந்து ஒரு பெரிய ஊர்வலமும் நடத்த இருந்தனர். விளம்பரத்துறை மந்திரி என்ற நிலையில், அக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை நான்தான் மேற் பார்வை செய்தேன். இந்தக் கூட்ட நடவடிக்கைகளை இந்தியாவுக்கு ஒலிபரப்பும் ஏற்பாடுகளும் நான்தான் செய்தேன்.

அன்று காலை பத்து மணிக்கு நான் வீட்டில் ஏதோ வேலையாக இருக்கையில், 'ஆரப்' தெருவில் இந்தியரிடையே ஏதோ கலகம் நடக்கிற தென்றும், அதில் பலருக்கும் சேதமென்றும், நான் விரைந்து வர வேண்டும் என்றும், லீக் அலுவலகத்திலிருந்து தொலைபேசிச் செய்தி வந்தது. சிறிதும் தாமதமின்றி நான் புறப்பட்டேன். அச் சமயம் காரோட்டி இல்லாததால் என் மகன் உண்ணியே எனக்கு வண்டி ஓட்டினான். பத்து நிமிடங்களில் நான் ஆரப் தெருவை அடைந்தேன். தெருவில் ஒரு ஈ காக்கை இல்லை. கடைகள் பூட்டியிருந்தன. ஒரு கடையின் மாடியிலிருந்து சில முகமதிய நண்பர்கள் என்னை அங்கே ஏறி வரச் சொன்னார்கள். தேசியக் கொடிக்கு மாறுக, சிலர் 'முஸ்லிம் லீக்' கொடியை உயர்த்தியதுதான் கலவரத்துக்குக் காரணம் என்பதை நான் புரிந்துகொண்டேன். நான் மேலே சென்றதும், சற்றுமுன் அங்கே நடந்தவற்றை எல்லாம் கூறினார்கள். சிலர் காயமுற்றனர். பலரைக் கைது செய்துகொண்டு சென்றிருக்கின்றனர். அப்போதுதான் நான் அங்கே சென்றிருக்கிறேன். நான் அவர்களுக்கு ஆறுதல் மொழிந்து, காயம்பட்டவர்களைக் குறித்து விசாரிப்பதாக உறுதியளித்தேன். பின்னர், கீழிறங்கி வந்தேன். மீண்டும் அவர்கள் என்னை எதற்கோ அழைத்தனர். என்னவென்றறிவதற்காகத் தெருவிலிருந்து நான் மேலே நோக்கியபோது, சட்டென்று என் தொடையில் யாரோ உதைத்தனர். அது நல்ல பூட்ஸ் காலால் உதைத்த உதை. திரும்பிப் பார்த்தபோது, என்னை உதைத்தவன் ஒரு ஜப்பானிய ராணுவத்தான் என்றறிந்தேன். நான் அவனிடம் ஆங்கிலத்தில், 'என்ன செய்தாய்?' என்று கேட்டேன். அதற்கு மறுமொழியாக, 'பளா'ரென்று செவிட்டில் ஓர் அறை விழுந்தது. என்னுடைய மூக்குக்கண்ணாடி தெறித்துக் கீழே விழுந்தது.

'அப்பா, அவனிடம் ஒன்றும் பேச வேண்டாம். அவனுக்கு ஆள் யாரென்று புரியவில்லை போலிருக்கிறது. நாம் போகலாம் வாருங்கள்' என்று கூறி, கார் கதவைத் திறந்து என் மகன் ஓட்டுவதற்கு அமர்ந் தான். நானும் கதவைத் திறந்துகொண்டு உள்ளே ஏறி அமர்ந்தேன். அப்போது இன்னொரு ஜப்பானிய ராணுவத்தான் அங்கு வந்தான். அவன் தன் கையிலிருந்த தடியால் உண்ணியின் தலையில் ஓங்கி அடித் தான். காயம்பட்டு இரத்தம் ஒழுகியது. அவர்கள் அவனையும் என்னையும் தரதரவென்று காரிலிருந்து வெளியே இழுத்துத் தள்ளினர். எங்கள் இருவரையும் ஒரு ராணுவ வண்டியில் ஏற்றினர். எனது கார் அங்கேயே நின்றது. எங்களை அந்த வண்டி ராணுவப் போலீஸ் அலுவலகத்துக்குக் கொண்டு சென்றது. சிங்கப்பூரில் ஒய்.எம்.ஸி.ஏ. கட்டடத்தைத்தான் அவர்கள் தங்கள் அலுவலகமாகக் கொண்டிருந்தனர். நாங்கள் சிறிது நேரம் அங்கேயே இருந்தோம். அப்போது நிலைமை மாறிவிட்டது. என்னைக் கைது செய்துகொண்டு சென்ற விவரத்தை ராணுவ மேலிடத்தார் அறிந்துவிட்டனர். ஏதோ தவறு நேர்ந்துவிட்டது என்று உணர்ந்துகொண்டு சிலர் உடனே ஒய்.எம். ஸி.ஏ. கட்டடத்துக்கு விரைந்து வந்தனர். மேலதிகாரி வணங்கிக் கை கூப்பி, தவறு நேர்ந்துவிட்டதென்று மொழிந்தார். அந்தப் படை யாட்கள், நான் கலகக்காரரில் ஒருவன் என்று எண்ணிவிட்டனர். மேலதிகாரிகள் என்னிடம் வணக்கமும் மரியாதையுமாக நின்றது கண்ட அப் படையாட்கள் திகைத்தனர்; விழித்தனர். தங்களுக்குத் தக்க தண்டனை கிடைத்துவிடும் என்றஞ்சினர். இதற்குள் பல அதிகாரிகள் அங்கு வந்துவிட்டனர். தேநீரும் சிகரெட்டும் அளித்தனர். பல வரைகள் கைகூப்பி மன்னிப்புக் கோரினர். 'ஆரப்' தெருவிலிருந்து இரண்டாகி டியைக் கொண்டுவந்தனர். இதெல்லாம் முடிந்தபோது மணி பாறியதும் நி விட்டது. வீடு திரும்பி, உணவுகொண்டு, சிறிதே இளைப் படையாள் எ ன் ஊர்வலத்தில் பங்கு கொள்ளக் கிளம்பினேன். கொண்டு நடப்ப னை உதைத்துத் தொடையில் அழுந்த மிதித்துவிட்டது விரைவில் என் நண் சிறிது கடினமாக இருந்தது. இந்நிகழ்ச்சி, வெகு பெரிதாகச் சொ பர்களுக்கெல்லாம் எட்டிவிட்டது.

பாவனையுடன் நான் லும் வகையில் ஏதும் நேர்ந்துவிடவில்லை என்ற இடத்துக்குச் சென்றுவிட குறித்த நேரத்தில் ஊர்வலம் கிளம்பும் மிகப் பெரிய கூட்டமாக டேன்.

யிருந்தனர். பொது மக்க இருந்தது. பதினாயிரம் படையாட்கள் கூடி முதலில் நான்தான் உரையாற் ஐம்பதினாயிரம் பேருக்குக் குறையாது. நிகழ்ச்சி நிரலில் தொடர்ந்து றினேன். ஆங்கிலத்தில்தான் பேசினேன்.

இன்னொருவர் தமிழில் பேசுவதாகக்

கண்டிருந்தது. பிறகு மோகன் ஸிங் இந்துஸ்தானியில் உரையாற்றுவ தாக இருந்தார். மோகன் ஸிங், நிகழ்ச்சி நேரத்தைச் சுருக்கிவிடவேண்டு மென்று கருதினர். ஏனெனில் அந்திக்கு முன்பாக ராணுவத்தைப் பாசறைக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும். அதனல் மோகன் ஸிங்கின் பேச்சுக்குப் பிறகு தமிழ்ப் பேச்சைத் தொடரலாம் என்று மோகன் ஸிங் பேசத் தொடங்கினர். அவர் நாற்பது நிமிஷம் பேசினர். பொழுது இருட்டிக்கொண்டு வந்தது. இதற்குள் தமிழில் உரையாற்ற வேண்டாமென்று நிறுத்திவிட்டதாகக் கூட்டத்தில் வதந்தி பரவி விட்டது. ஆயிரக்கணக்கான தமிழர் அங்குக் கூடியிருந்தனர். யார் இந்த வதந்தியைக் கிளப்பினர் என்பது தெரியவில்லை. அதைக் கேட்டுத் தமிழர் ஆவேசம் கொண்டனர். கூட்டத்தில் கலவரம் உண்டாயிற்று. ஒலிபெருக்கி பழுதுற்றது. விளக்குகள் அணைந்தன. தமிழில் உரையாற்ற வேண்டாம் என்று நான்தான் தடுத்துவிட்டேன் என்று சிலர் கருதி, 'மாற்று, அதை மாற்று!' என்று கூக்குரலிட்டார்கள். கிளர்ச்சியுற்ற மக்களிடம், உண்மையைத் தெளிந்தறியும் பொறுமையையோ நிதானத்தையோ எதிர்பார்க்க முடியுமா? கூச்சலும் கோஷமும் அச்சுறுத்தலுமாக மக்கள் என்மீது பாய்ந்தனர்.

மேடையில் நானும் இன்னும் சிலரும் இருந்தோம். மக்கள் மேடையைக் குறிபார்த்துப் பாய்ந்து வருகையில் நண்பர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டனர். சூழ்ந்து வந்த இருளில் ஆட்களை இனம் புரிந்து கொள்ள முடியவில்லை. என்றாலும் அந்த வளையத்தின் இடைப்பட்ட என்னை ஒருவன் இனம் கண்டுகொண்டு ஓடிவந்து என் மூக்குக் கண்ணுடியைத் தட்டிவிட்டான். அன்று பகலில் ஜப்பானிடம் அடி பட்டுக் கண்ணுடி கீழே விழுந்ததாகத் தெரிவித்தேன் அல்லவா? அதற்குப் பிறகு நான் படிக்கும் கண்ணுடியையே பார்ப்பதற்கும் அணிந்திருந்தேன். அதுவும் போயிற்று. சுற்றி நிகழ்ந்ததொன்றையும் என்னல் காண முடியவில்லை. அந்தப் பெரிய மைதானத்தின் பல பகுதிகளிலிருந்தும் இரைச்சல் கேட்டது. மக்கள் பின்னும் கிளர்ந்து வந்துகொண்டிருந்தனர். 'இங்கு இருப்பதே ஆபத்து. இருளோடு இருளாய் யாரும் அறியாமல் அகல்வது நலம்' என்று ஒரு நண்பர் கூறினர். அதற்கு நான் இணங்கவில்லை.

கூட்டம் சட்டென்று முடிந்தது. ஃபாரர் பூங்கா. சிறிது நேரத்துக்குள் ஒரு பைத்தியக்காரர் விடுதியாக மாறிவிட்டது. அப்போது அங்குச் சில ஜப்பானியர் வந்தனர். என்னை மீட்டுச் செல்வதற்காக அங்கே வந்த படை அதிகாரிகள் அவர்கள். அவர்களுடைய காரில் என்னை ஏற்றிக் கொண்டு வீட்டில் கொண்டுவந்து விட்டனர். அப்போது இரவு பத்து மணி. நான் நீராடி, உணவருந்திப் படுக்கைக்குச் சென்றேன். கலகக்

காரர்கள் வீட்டைத் தாக்குவார்களோ என்று அஞ்சி, அன்று இரவு முழுவதும் ஜப்பானியப் படையாட்கள் காவலிருந்தனர்.

இத்தகைய அநுபவம் எனக்கு முன்னும் பின்னும் நேர்ந்திருக்கிறது. பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்களுக்கு, இம்மாதிரியான அநுபவங்கள் நேருவது இயல்புதான். தமிழ்ப்பேச்சு அவசியமானதென்று கலகக்காரர்களைக் காட்டிலும் நான் முக்கியமாகக் கருதியிருந்தேன். அன்றைய நிகழ்ச்சி நிரலில் அதற்கு இடமும் அளித்திருந்தோம். வேண்டாம் என்று அதை ஒதுக்கவுமில்லை. சில முக்கியமான காரணங்களால் அதை மாற்றவேண்டியிருந்தது. அதைக்குறித்து விசாரித்து அறிய மக்களுக்குப் பொறுமையோ நிதானமோ இல்லை. சினத்தால் கிளர்ச்சி கொண்ட மக்கள் கூட்டத்தின் நிலை மடை உடைந்த வெள்ளப் பெருக்குப் போன்றது. அது எப்பக்கம் பாயும், என்னென்ன அழிவுகளை விளைவிக்கும் என்பதைக் கூற முடியாது. அமைதி நிறைந்த இயல்பினனும் கூட்டத்தின் வெறியுணர்ச்சியில் கிளர்ந்து பைத்தியக்காரனைப் போன்று செயல்புரிவான். மேலே கூறிய இரண்டு நிகழ்ச்சிகளும் ஒரே நாளில் நிகழ்ந்தவை. 1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் பன்னிரண்டாம் தேதியை எப்படி மறப்பேன்?

'இண்டிபெண்டன்ஸ்' லீகுடன் கொண்ட தொடர்பைத் தொடர்ந்து கொண்டு செல்வது இயலாததாகத் தோன்றியது. ஜப்பானியருடைய சொல்லும் செயலும், அவர்களுடைய உள்ளெண்ணத்தை மேலும் மேலும் விளக்கும்வண்ணம் அமைந்திருந்தன. ஜப்பானியருடைய உதவியையும் ஆலோசனையையும் சார்ந்தே லீக் நிலைநிற்கவேண்டி இருந்தது; இயங்கவேண்டியிருந்தது. பின் ஏன் அதை ஜப்பானியரின் ஆளுகைக்குட்பட்டதாகவே வைத்துக்கொள்ளக்கூடாது? இதன் உட்கருத்தைப் பொதுமக்கள் அறியவேண்டியதில்லை என்று ஒரு ஜப்பானிய ராணுவ அதிகாரி என்னிடம் கூறியபோது, அவர்களுடைய உட்கருத்தை என்னால் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது.

இந்த நிலையில் யாது செய்ய வேண்டும் என்பது குறித்து 'கௌன்சில் ஆஃப் ஆக்ஷன்' உறுப்பினர் கலந்தாலோசனை செய்தனர். அதன் பயனாக, இண்டிபெண்டன்ஸ் லீகின் நடைமுறை சம்பந்தமாகச் சில விஷயங்களைத் தெளிவுறுத்தும்படி கோரி ஜப்பானியருக்கு ஒரு கடிதம் எழுதத் தீர்மானம் செய்தோம். பாங்காக் மாநாடு நடந்தவுடன், அதில் நிறைவேற்றிய தீர்மானங்களை ஜெனரல் டோஜோவின் பார்வைக்குக் கொண்டுவந்து, அவை குறித்து ஜப்பானின் நிலைமையைத் தெளிவாக்க வேண்டும் என்றும் நாங்கள் கோரியிருந்தோம். நான்கு மாத காலம் சென்றபின்னரும் அக் கடிதத்துக்கு அவர்கள் பதில் அனுப்பவில்லை. இக் கடிதத்தில் அதற்கும் மறுமொழி அனுப்ப வேண்டும்

என்றும், அதுவரையிலும் லீக் செயல்பட முடியாமலிருப்பதாகவும் நாங்கள் கடிதத்தில் குறியிட்டுக் காட்டியிருந்தோம். இந்த விஷயத்திலும் 'கௌன்சில் ஆஃப் ஆக்ஷன்' உறுப்பினர் கருத்து ஒரே மனதாக இருந்ததாகக் கூறுவதற்கில்லை. ஜப்பானியர் மனத்தாங்கல் கொள்ளும் வகையில் ஏதேனும் எழுதுவதே அபாயகரமானதென்று 'ஆக்ஷன் கௌன்சிலில்' சிலர் கருதினர்கள். என்றாலும், அப்படி ஓர் கடிதம் எழுதாமலிருப்பதும் தன்மானத்துக்கும் நாட்டு நலனுக்கும் உகந்ததல்ல என்று பெரும்பாலோருக்கும் தோன்றியது. அக் கடிதம் அனுப்பி இரண்டு நாட்கள் சென்றபின்னர், கர்னல் இவாகுரு (லயாசான் அதிகாரி) எங்களை நேர்முகப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தார்.

கர்னல் இவாகுருவைத் தவிர, நாலைந்து ஜப்பானிய அதிகாரிகளும் பேச்சு வார்த்தையில் பங்கு கொண்டனர். கௌன்சில் அஃப் ஆக்ஷன் உறுப்பினராகிய நாங்கள் ஐவரும், கௌன்சில் செயலாளர் ஸ்ரீ பி. கே. தாஸும் லீகின் பிரதிநிதிகளாய் அங்கு இருந்தோம். எங்களுடைய கருத்து, கர்னல் இவாகுருவைச் சினங்கொள்ளச் செய்திருந்ததை அவருடைய பேச்சிலிருந்தும் நடத்தையிலிருந்தும் நாங்கள் உணர முடிந்தது. எதற்காக அப்படி ஒரு கடிதம் நாங்கள் எழுதவேண்டும் என்று கர்னல் இவாகுரு கேட்டார். அதற்கு, 'கௌன்சில் ஆஃப் ஆக்ஷன்' நிலைமையைத் தெளிவாக்கி நான் மறுமொழி கூறினேன். இரண்டு மணி நேரம் நீடித்த அந்தப் பேச்சு வார்த்தைகளில், மோகன் ஸிங்கும், ராகவனும் கலந்துகொண்டனர். இவாகுருவின் குரல், சினமிகுந்து ஓங்கியது. நாங்கள் கொண்டிருந்த முடிவை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை.

அந்தச் சந்திப்பின் நிகழ்ச்சிகளைக் குறித்து மறு ஆலோசனை செய்ய இரண்டு நாட்கள் சென்ற பின் 'கௌன்சில் ஆஃப் ஆக்ஷன்' மீண்டும் கூடியது. இன்னும் சில நாட்கள் காத்திருக்கலாமென்று தலைவர் ராஷ் பிஹாரி போஸ் விரும்பினாலும், எல்லா உறுப்பினரும் அதற்கு இணங்கவில்லை. எங்களைப் பரபரக்கச் செய்வதற்கு இன்னொரு நிகழ்ச்சியும் காரணமாயமைந்தது. 'கர்னல் கில்'லை ஜப்பானியர் கைது செய்துகொண்டு சென்றனர் என்று அறிந்தோம். இனி, இப் பதவிப் பொறுப்புகளிலிருந்து நாங்களும் விலக வேண்டுமென்று உறுதிகொண்டோம். 1942ஆம் ஆண்டு டிசம்பர் எட்டாந்தேதி நானும் மோகன் ஸிங்கும், கிலானியும், கௌன்சில் ஆஃப் ஆக்ஷன் உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்த விவரத்தைத் தலைவருக்கு அறிவித்தோம். அந்தக் காரணத்தையும் கடிதத்தில் தெளிவாக்கியிருந்தோம்.

ஆறுமாத காலம் விளம்பர வெளியீட்டுத்துறை மந்திரியாக இருந்த பிறகு, 'இண்டிபெண்டன்ஸ் லீகு'டன் கொண்ட தொடர்பை விட்டு மீண்டு நான் சொந்த வாழ்க்கைக்குத் திரும்பினேன்.

36

ஜப்பானியரின் கைதி

'இண்டிபெண்டன்ஸ் லீகி'னின்று விலகிய பிறகு, ஜப்பானியருக்கு என்மீது சந்தேகம் தோன்றிவிட்டது. என் வீட்டுக்கு யாரெல்லாம் வருகின்றனரென்று உளவறிய ரகஸியப் போலீசார் நடமாடினர். நெருங்கிய நண்பர்களும் என்னைக் காண வருவதற்கு அஞ்சினர்கள். மாலையில் உலாவச் செல்வதைத் தவிர, நான் வீட்டை விட்டு எங்கும் செல்வதில்லை. பெயருக்குத்தான் அலுவலகத்தைத் திறந்து வைத் திருந்தேனே ஒழிய, அங்குக் குறிப்பிடத் தகுந்த பணியொன்றும் நடக்க வில்லை. அந்நாட்களில், சிங்கப்பூரில் வாழ்ந்த குடும்பத்தினர் ஒரு நாளைத் தள்ளுவதற்கே அல்லலுற்றனர். ஒருபொழுது கஞ்சி; ஒரு பொழுது சோறு. சில நாட்களுக்குக் கோரைக் கிழங்கு; சில நாட்கள் மரவள்ளிக் கிழங்கென்று நாட்களைத் தள்ளினோம். உணவுப் பிரச்சினை கூடப் பெரிதில்லை. அச்சமும் திகிலுமாக என்ன நேருமோ என்பதறி யாமலே பொழுதைக் கழித்தோம். பெண்களும் குழந்தைகளுமாக அவ்வாறு நாங்கள் வீட்டுக்குள் முடங்கியிருந்த காலத்தை இப்போதும் கூட அமைதியுடன் நினைக்க முடியாது.

ஓரிரண்டு முறைகள் ஜப்பானிய ராணுவப் போலீசார், என் மனதை ஊடுருவி அறிய, எனக்கு ஆளனுப்பிக் கூட்டிச் சென்றனர். மூன்று நான்கு ஆளனுப்பிக் கூட்டிச் சென்றனர். மூன்று நான்கு மணி நேரத்துக்கு என்னைக் கேள்விகள் கேட்டுத் துருவினர். என்னுடைய மறுமொழிகளை எழுதிக்கொண்டு, மீண்டும் வீட்டில் கொண்டுவந்து விட்டனர். இதற்கிடையில், 'இண்டி.பெண்டன்ஸ் லீக்' புதிய தலைமையின் கீழ் மீண்டும் இயங்கத் தொடங்கியது. 1943ஆம் ஆண்டு ஜூலை இரண்டாம் நாள் சுபாஷ் சந்திர போஸ், டோக்கியோவில் இருந்து விமானம் வழியாகச் சிங்கப்பூருக்கு வந்தார். இந்தியரிடையே புதிய உற்சாகமும் எழுச்சியும் தோன்றின. இந்தியா பூரண விடுதலை உரிமை பெற வேண்டுமென்பதே சுபாஷ் போஸின் இலட்சியம். அதற்காக, எத்தகைய வழிமுறையையும் மேற்கொள்ள அவர் சித்தமாக இருந்தார். சிங்கப்பூரிலும் மலேயாவிலும் மட்டுமன்றி, பர்மா, தாய்லந்து முதலிய இடங்களிலும் சுற்றுப் பயணம் செய்து, மக்களுக்குப் புத்துணர் வூட்டினர். தேசிய ராணுவத்துக்கு உரமூட்டினர். பர்மாவுக்கு

ராணுவத்தை நடத்திச் செல்லத் திட்டமிட்டார். 1943ஆம் ஆண்டு அக்டோபர் இருபத்தொன்றும் தேதி, ஆஸாத் ஹிந்த் அரசை, சுதந்திர இந்திய அரசை அவர் தோற்றுவித்தார். அதன் தலைவராக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், தேசீய ராணுவத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 'கௌன்சில் ஆஃப் ஆக்ஷ'னின் ராஜினாமாவைத் தொடர்ந்து தேசீய ராணுவத்திலிருந்து விலகிவிட்ட பெரும்பாலோரும் மீண்டும் வந்து சேர்ந்தனர். 1944ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், ஆஸாத் ஹிந்த் அரசின் தலை நகர், சிங்கப்பூரிலிருந்து ரங்கூனுக்கு மாறியது. இடையில் படையினர் பர்மாவுக்குப் பெயர்ந்து சென்றனர்.

இண்டிபெண்டன்ஸ் லீகுடன் நான் கொண்ட தொடர்பு விட்டுப் போனாலும், என்னுடன் பணியாற்றிய பல நண்பர்களும் என்னை அடிக்கடி காண வந்துகொண்டிருந்தனர். அவர்களுடன் பேசுகையில், என் கருத்துகளை மனம் திறந்து வெளியிட்டிருக்க வேண்டாமென்று பின்னரே நான் உணர்ந்துகொண்டேன். ஜப்பானியருடைய உதவி கொண்டு இந்தியா விடுதலை பெறுமானால் அது பூரணமான இந்திய விடுதலையாக இராது என்று நான் உறுதியாக நம்பி இருந்தேன். அந்த நண்பர்களிடம், பேச்சுக்கிடையே அக் கருத்தை நான் வெளியிடாமலில்லை. அந்தப் பேச்சு வார்த்தைகளில், என்னைப் பிணித்து விடக்கூடிய கண்ணிகளை நானே கோத்துவிட்டேன் என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை. எத்தனை முன்னெச்சரிக்கை கொண்டு கருத்துடன் இயங்கினாலும், சில சமயங்களில் நம்முடைய விவேகம்—நிதானமாக ஆய்ந்து பேசும் பாங்கு, நம்மைக் கை விட்டு விடுகின்றன. அத்தகைய சந்தர்ப்பம் எனக்கு நேர்ந்துவிட்டது. என்னுடன் உரையாடித் தெரிந்துகொண்ட விஷயங்களனைத்தையும் அந்த நண்பர்கள் ஜப்பானியரிடம் அறிவித்திருக்கின்றனர். நான் கூறுதவற்றையெல்லாம்கூடக் கூறியதாகவும் அறிந்துகொண்டேன்.

சில நண்பர்கள் என் நிலைமையறிந்து என் கருத்தை மாற்றிக் கொள்ளும்படி அறிவுரை கூறினர்கள். என்னுடைய கருத்துச் சரியான தென்ற எண்ணம் அவர்களுக்கும் இருந்தது. ஆனால் அது என் பாதுகாப்புக்கு உகந்ததல்ல என்று அவர்கள் வலியுறுத்தினர்கள். பெயருக்காகவேனும் 'இண்டிபெண்டன்ஸ் லீகு'டன் தொடர்பு கொள்வது நலம் என்று என்னை இணங்கச் சொன்னர்கள். நான் ஏற்கவில்லை. அவ்வாறு செய்வதை நான் என் மனச்சாட்சிக்கிழைக்கும் துரோகமாகக் கருதினேன். ஜப்பானியர் இந்திய மண்ணில் அடி வைத்தால் நிகழக் கூடிய பயங்கரங்களை நான் கற்பனையில் நன்றாகக் கண்டேன். சொல், செயல், நடத்தை என்று எந்தவிதமாக நான் அதற்கு உதவினாலும், அது மன்னிப்புக்குரியதல்லாத குற்றம் என்று எனக்குத் தோன்றியது.

என் கருத்து அத்துணை அசைக்கமுடியாததாக இருக்கையில், அதற்கு மாறுக நான் செயல்பட இணங்கவில்லை. இதேநிலையில் நான் இருந்தால் எனக்கு நேரக்கூடிய அபாயத்தைக் குறித்து நான் அறியாமலில்லை. என்றாலும், என்னுடைய நம்பிக்கைக்குத் துரோகமின்றி நடக்கும் மன அமைதி அந்த நெருக்கடி நிலையிலும் எனக்கு ஆறுதலாக இருந்தது. சரியான பாதையில் என் அறிவைச் செலுத்தும் வழிகாணுமல் நான் குழம்பினேன். இறுதியாக ஓர் முடிவுக்கு வரும் வரையிலும் மனம் அங்குமிங்குமாக அலைபடும் வேதனைக்காளாகித் தவிக்கவேண்டி இருந்தது. இந்நிலையை நான் எவ்வாறு எதிர்த்துநின்றேன்!

வாழ்க்கையில் நாம் கொண்டுள்ள குறிக்கோளைப்பற்றியதோர் உறுதியான கருத்து, நம்மை எதிர்நோக்கியிருக்கும் பிரச்னைகளை, அமைதியுடன் சமாளித்து நாம் தீர்வு காண்பதற்கான துணிவை நல்குகிறது. நமது ஆன்மீக நம்பிக்கை வெறும் நம்பிக்கையாகவே இருந்தால் மட்டும் போதாது. அதை நம் வாழ்க்கையில் ஏற்று, படிப்படியாக வாழ்ந்து பழகவேண்டும். அவ்வாறு பழகுகையில், தடுமாறுமல், பதறுமல், வாழ்க்கையில் நேரும் பிரச்னைகளையும், இடையூறுகளையும் நாம் எதிர் நின்று சமாளிப்பது சாத்தியமாகும். பிறர் துயரை நாம் ஏற்று அநுபவிக்கவேண்டியிருக்கும். ஆனல், நம்முடைய ஆன்மீக நம்பிக்கையினின்று தோன்றும் சக்தி, அத்தகைய கவலைகளையும், துன்பங்களையும் அமைதியுடன் ஏற்று உதவ வகைசெய்யும்.

இறை நம்பிக்கை, நாம் ஆதரவற்றவர்களாக உணருங்கால் நம் முன் ஆன்ம சக்தியைத் தோற்றுவிக்கிறது; நிராசை கொள்ளும்போது, உற்சாகமாக நமக்கோர் வரப்பிரசாதத்தை அளிக்கிறது. பலரும் நம்முடைய நிலையைத் தவருகக் கருதநேரும் சந்தர்ப்பங்கள் வாய்ப்பதுண்டு; சிலர் அதை மிகவும் கடுமையாக விமரிசனமும் செய்வார்கள். நம் உள்ளத் தூய்மையைச் சந்தேகிக்கக்கூடத் தயங்கமாட்டார்கள். இந்த எல்லா நிலைகளிலும் நமக்கு மரமும் நிழலுமாக, ஆதாரமும் ஆதரவுமாக அந்த நம்பிக்கையே விளங்குகிறது. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் பல சான்றோரின் வாழ்க்கை வரலாறுகள் எனக்கு நம்பிக்கையும் ஆறுதலும் அளித்திருக்கின்றன. அவர்களுடைய சொற்களும், செயல்களும், நாட்டங்களும், அநுபவங்களும் எனக்கு நினைக்க நினைக்க, கற்கக் கற்க, மேலும் மேலும் விரிவான பொருளை உணர்த்தி உற்சாகமளித்திருக்கின்றன. ஒரு காலத்தில் சேமித்துவைக்கும் பொருள், பஞ்சம் வரும்போது அருமையாக உதவுவதுபோல், சிலருடைய அநுபவங்களைப் படித்தறிந்த அநுபவம், அதே நிலைமையில் நாம் நிற்கையில், நமக்குத் துணிவும் ஆறுதலுமாகத் துணைநிற்கின்றன.

என்னை ஜப்பானியர் கைது செய்யப்போகின்றனர் என்ற செய்தியை சில நாட்களாகவே நான் அறிந்திருந்தேன். நண்பர்கள் அத்தகைய தோர் நிலையைக் கருதிச் சில முன்னேற்பாடுகளைச் செய்யும்படியும் அறிவுறுத்தினர். ஜப்பானியரின் கைதியாக இருப்பதற்கும் பிரிட்டி ஷாரின் கைதியாக இருப்பதற்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. முன்னவர் கைதுசெய்து கொண்டு சென்றவர் திரும்பி வந்தது அபூர்வம். என் குடும்பத்தினரைப் பற்றித்தான் எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. அவர்கள் என்னைப் பிரிந்தால் ஆதரவற்ற நிலையிலல்லவோ நிற்பார்கள்? அந்நாள், சிங்கப்பூரில் என்னுடைய குடும்பம் மிகப் பெரிது. ஜப்பானியர் கைப்பற்றிவிடக் கூடாதென்று கருதி, சில முக்கியமான காகிதங்களை எல்லாம் நான் வேறு சிலரிடம் கொடுத்து அனுப்பினேன்.

1944ஆம் ஆண்டு ஏப்ரல் இருபத்து நான்காம் தேதி அதிகாலை நான்குமணிக்கு வாயிற்கதவை யாரோ தட்டிய ஓசை கேட்டது. கதவைத் திறந்ததும் எட்டு, பத்து ஜப்பானியர் உள்ளே வந்தனர். அவர்கள் ராணுவபோலீஸ் அதிகாரிகள். என்னைக் கைது செய்து கொண்டு செல்லத்தான் வந்திருக்கின்றனர் என்று உணர்ந்து கொண்டேன்.

வீட்டில் உறங்கியவர்களைத் தட்டி எழுப்பினேன். குழந்தைகளும் பணியாளரும் மற்றவருமாக இருபது பேரிருந்தனர். அவர்களை ஒரு அறையினுள் இருத்தி, வாயிலில் துப்பாக்கியுடன் ஒருவன் காவல் நின்றான். மற்றோர் அறையில் நான் இருந்தேன். இருமருங்கிலும் இரு ஜப்பானிய அதிகாரிகள் இருந்தனர். வீடு முழுதும் வெகுநுட்பமாக நான்குமணிநேரம் பரிசோதனை செய்தார்கள். புத்தகங்கள், படங்கள், இன்னும் பல்வேறு பொருள்கள் எல்லாவற்றையும் ஒரு காரில் அடைத் தனர். இன்னோர் காரில் இரு ராணுவ அதிகாரிகளின் காவலுடன் என்னை ஏறச்செய்தனர். ஒன்பது மணியளவில் வீட்டிலிருந்து வண்டிகள் கிளம்பின.

ஜப்பனியர் கைது செய்து கொண்டு சென்றவர்களுடைய அநுபவங் களையும் நிலைமைகளையும், கண்டும் கேட்டும் நன்கு அறிந்திருந்த எனக்கு என்னுடைய எதிர்காலத்தைப்பற்றிய திகிலும் கவலையும் இருளாய்ப் படர்ந்தது.

கைது செய்துவிட்டால், பின்னர், ஜப்பானியர் யாருடனும் அவரைப் பேச விடமாட்டார்கள். என்னால் என்னுடைய குடும்பத்தினரிடம் விடைபெற்றுக்கொள்ளவும் முடியவில்லை. ஜப்பானியரின் காரில், ராணுவத்தார் காவல்செய்ய, செல்லுமிடம் தெரியாமல் நான் செல்கை யில், தெளிவில்லாத பலபல எண்ணங்களும் கலவரங்களும் என்னுள் மூண்டன. அந்நாள், என் மகள் தங்கம் நோயாளியாக ஆஸ்பத்திரியில்

படுத்திருந்தாள். குடும்பத்தினரைப்பற்றிய கவலைகளை நான் மறக்க முயன்றுலும் அதுவே எனக்குத் தாங்கொணு வேதனையாக இருந்தது.

என்னை ஓர் இருளடைந்த அறை வாயிலில் கொண்டு சென்றனர். உள்ளே நுழையுமுன், நான் அணிந்திருந்த சட்டையையும் நிஜாரையும் தவிர, மற்றெல்லா உடைகளையும் ஜப்பானியர் வாங்கிக்கொண்டனர். என்னுடைய மூக்குக் கண்ணுடியையும் பறித்துக்கொண்டனர். அதன் உதவியின்றி நான் எதையும் நன்முகப் பார்க்க இயலாதென்று இறைஞ் சியும் பயனில்லை. பன்னிரண்டடி நீளமும், அதே அளவு அகலமும் கொண்ட அந்த அறையில், காற்றும் வெளிச்சமும் வருவதற்காகச் சுவரில் ஆறேழு துவாரங்கள் இருந்தன. அறையினுள்ளிருந்தவர்களுக்குப் பகலும் இரவும் ஒன்றேதான். அறையின் ஓர் மூலையில் ஒரு மரப்புனர் யும், வெளிச்செல்லும் குழாயும் இருந்தன. என்னைத் தவிர, அப்போது உள்ளே எட்டுப்பேர் இருந்தனர். அமர்ந்திருக்க வசதியாக நிலத்தில் விட்டுவிட்டு மரப்பலகைகளைப் பாவியிருந்தனர். அவரவருடைய இடப் பிடத்தில் அமர்ந்திருக்க வேண்டுமேயல்லாது நடப்பதற்கு அனுமதி கிடையாது. கைதிகள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளக் கூடாது. பகல் முழுவதும் சதுரங்கப் பலகையில் நிற்கவைத்த காய்களைப் போல் இருந்து, தள்ள வேண்டும். இரண்டு மூன்று மணி நேரத்துக் கொரு முறை, காவலர் எங்களை எழுந்து ஐந்து நிமிடங்கள் அங்குமிங்குமாக நடக்க அனுமதித்தனர். அது எல்லோருக்கும் பெரிய ஆறுதலாக இருந்தது. ஒரே அறையில் ஆண்களையும் பெண்களையும் ஒன்ற அடைத்திருந்தனர். கேள்வி கேட்டுத் துளைப்பதற்கோ, வேறு வகை யில் துன்புறுத்துவதற்கோ வெளியே இட்டுச் செல்லாத நேரங்களி லெல்லாம் உள்ளேயே இருந்தாகவேண்டும். கூலிக்காரரும், டீச்சரு பதியும், அறிவாளியும், நோயாளியும் ஒரே நிலையில் அறையினுள் அடை பட்டிருந்தனர்.

தீ எரிந்துகொண்டிருக்கையில் அடுப்படியில் கனலும் வெம்மையை அச் சிறையில் அனுபவித்தோம். உள்ளே அடிவைத்ததும் மூச்சுக்கூடத் திணறியது. உணவோ, கூற வேண்டாம். காலை ஏழுமணிக்கு ஒரு சிறு பாத்திரத்தில் கஞ்சியும் ஒரு துண்டு உலர்ந்த மீனும் தருவார்கள். சில சமயங்களில் மீனுக்குப் பதிலாக ஏதேனும் வேகவைத்த காயோ கிழங்கோ வரும். மீண்டும் மாலை ஐந்து மணிக்கு இதே போன்ற உணவு. அந்தப் பாத்திரத்திலேயே குடிப்பதற்குச் சிறிது குளிந்த நீர் கொடுப்பார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கோர் முறை கஞ்சிக்குப் பதிலாக ஒரு நேரம் சிறிதளவு சோறு கிடைக்கும்.

நான்கு மாத காலம் நான் லாக்கப்பிலேயே இருக்க வேண்டிய தாயிற்று. அடுத்த கணம் ஜப்பானியர் என்ன செய்வார்களோ என்று

அஞ்சி நடுங்கிய காலம் அது. வீரியமும் மலர்ச்சியும் அழிந்தன; தன்னம்பிக்கை மாய்ந்தது. தற்காப்பைப் பற்றியே எக்காலமும் எண்ணியிருந்ததோர் விலங்கு வாழ்வு அது. அங்கே கண்ட பயங்கரக் காட்சிகளும், செவிகளில் வீழ்ந்த பரிதாப ஓலங்களும், அநுபவித்த துன்பங்களும், என்னுள் என்றும் அழியாவண்ணம் தழும்பேறியுள்ளன. மனிதனுடைய குரூரத்தன்மை எந்த அளவுக்கு உயிர்த்து ஓங்கும் என்பதை அப்போதுதான் நான் உணர்ந்தேன்.

என்னை நாள்தோறும் கேள்விகள் கேட்டுத் துளைக்க அந்த அறையிலிருந்து என்னை வேறொரு இடத்துக்குக் கொண்டு செல்வார்கள். தாங்கொணா அநுபவங்களுக்கு ஆளானேன் அங்கு. ஒரு சாதாரண மனிதன், அவர்களுடைய மிடுக்கும் அகம்பாவமும் நிறைந்த பாவனையின் முன் அஞ்சி நிற்கையில், வஞ்சகக்கொடுமை வாய்ந்த நரியின்முன் நிற்கும் ஆடுபோன்றிருப்பான். ஜப்பானியரின் சித்திரவதை பொறுக்க இயலாது, அடுத்த அறைகளிலிருந்து பஞ்சை மக்கள் இடும் ஓலங்கள் என் செவியில் விழுந்து அச்சத்தால் ஊன் குறுக நடுங்கச் செய்யும். மனதும் உடலும் ஒன்றுக நலிந்து சோர்ந்து துவள நாள்தோறும் ஐந்தாறு மணி நேரம் பல வகைகளில், பல தோரணைகளில் கேள்விக் கணைகள் கொண்டு உளம் சல்லடையாகத் துளைப்பார்கள்.

ஒருநாள், ராணுவ அதிகாரி ஒருவன் கேட்ட கேள்விக்கு நான் கூறிய மறுமொழி திருப்திகரமாகத் தோன்றவில்லை. என்னுடைய பதிலைப் பொய்யென்றிகழ்ந்து, என்னை அவனுடைய மேலாளனிடம் கொண்டு செல்லக் கட்டளை இட்டான். சிறிது நேரத்தில் மிகவும் பயங்கரமான அவனுடைய மேல்-அதிகாரியின் முன் நான் இழுத்துச் செல்லப் பட்டேன். அவனுடைய குரலும், தோற்றமும், கையசைப்புகளும், மிகவும் நலிந்து தளர்ந்திருந்த என் உள்ளத்தில் விவரிக்க வொண்ணாத திகிலையும் நடுக்கத்தையும் தோற்றுவித்தன. அவன் ஜப்பானிய மொழியில் எவ்வாறு கடுமையைக் கக்கிக்கொண்டு அதட்டிக் கேள்வி கேட்டானோ, அதற்குச் சிறிதும் குறையாத அதே கடுமையுடன் கேள்விகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தான் ஒரு கொரியன். அவன் இடி முழக்குவதுபோல் கேட்டான். 'நடப்பது பெரும் போர். நாங்கள் நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்களைக் கொல்கிறோம். அத்துடன், கூட ஒரு தலை அதிகமாக உருளச் செய்வதில் எங்களுக்கு ஒரு பிசுக்குமில்லை. நாளை பத்துமணிக்கு உன் கதை முடியும். உன்னைத் தூக்கிலேற்றுவோம்; சுட்டுக் கொல்வோம்; இல்லையேல் கழுத்தைச் சீவியெறிவோம். நாளை பத்துமணி! கொண்டு போங்கள் இவனை.....'

அவனுடைய சொற்கள், என்னை எவ்வாறு கொல்லலாம் என்ற முடிவுக்கு இன்னும் வராமலிருப்பதான பிரச்னை மட்டுமே இன்னும்

நான் உயிரோடிருப்பதற்கான காரணம் என்று உணர்த்தியது. எவ்வாறேனும் மறுநாள் என் உயிர் பறிக்கப்படும். அவனுடைய அந்த இடி முழக்க ஒலிச் சொற்கள் என் செவிகளில் எதிரொலித்துக்கொண்டே இருந்தன. ஒரு சிகரெட் டின்னில் கஞ்சி வந்தபோதுதான் மணி ஐந்து என்று எனக்கு நினைவு வந்தது. உணவருந்தத் தோன்றவில்லை. வீட்டைப்பற்றிய கவலையும், குழந்தைகளுடைய நினைவும், என்னுள் மறக்க முயன்றாலும் முடியாமல் அப்பிக்கொண்டன. கண்களைக் கட்டாயமாக மூடிக்கொண்டால், வரப்போகும் நாளின் பயங்கரங்கள் படலங்களாக அவிழ்ந்தன. தூக்குமேடையில் கைகளும் கண்களும் கட்டப்பெற்றவனாய் நான் நிற்கிறேன்—கழுத்தில் தூக்கை மாட்டக் காவலன் வருகிறான். ஒரு குழியின் விளிம்பில் பின்புறம் கட்டுண்ட கைகளுடன் தலை குனிந்து நான் முழந்தாளிட்டமர்ந்திருக்கிறேன்—தலையைச் சீவுவதற்காக ஜப்பானியன் வாளை ஓங்குகிறான்—கண்களையும் கைகளையும் பிணித்துச் சுவரருகில் என்னை நிறுத்தி இருக்கின்றனர். என்னைச் சுடுவதற்காகப் படையாட்கள் துப்பாக்கியை உயர்த்திக் குறி பார்க்கின்றனர். உணர்ச்சியை அடக்கமுடியாமல் நான் விம்மி வெடிக்கக் கண்ணீர்விட்டழுதேன். படுத்துக்கொள்ளும் நேரமென்று காவலன் ஆணையிடும் குரல் கேட்டது. நான் படுத்தேன். உறக்கம் எப்படி வரும்? சாய்ந்து படுத்தாலும், நிமிர்ந்து படுத்தாலும், குப்புறப் படுத்தாலும், தூக்கு மரமும், வாளும், துப்பாக்கியுமே என் கண் முன் நின்றன. கொல்லென்று அமைதி நிலவிய அந்த இரவில் மணி அடிக்கும் ஓசை மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது. மூன்று மணி அடித்தது. நான் எழுந்தமர்ந்து மனதை இழுத்தடக்கி, இவ்வுலக நினைவுக்கப்பால் கொண்டு செல்லப் பிரார்த்தனையில் ஈடுபடலானேன். அதுவும் இயலவில்லை. நேரம் புலருமுன்னரே சற்று மனதுக்கு ஆறுதல் கிட்டியதாகத் தோன்றியது. எனினும் காலை ஏழுமணிக்கு வந்த கஞ்சியைக் குடிக்க மனமில்லை. எட்டு மணிக்குக் கதவு திறந்தனர். என் இறுதி யாத்திரைக்கு நான் புறப்படலானேன்.

என்னை எப்போதும் வழக்கமாகக் கேள்வி கேட்டுத் துளைத் தெடுப்பவனின் முன்னரே அழைத்துச் சென்றனர். முதல் நாள் கூறிய விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தேனா என்று கேட்டான். உண்மையில் அவற்றைப்பற்றி நான் சிந்திக்கவில்லை எனினும், 'ஆம்' என்று விடையளித்தேன். 'அதை நேற்றே சிந்தித்து நேரான மறுமொழி அளித்திருக்கலாமென்றும், இன்றும் இரண்டு மணி நேரம் நான் அவ்வாறு விடையளிக்காமல் கடத்தினால் என் தலை உருளும்' என்றும் மீண்டும் அறிவுறுத்தினான். ஆனால், அந்த இருபத்து நான்கு மணி நேரம் நான் அநுபவித்த கொடிய வேதனைகளை எவ்வாறு விவரிப்பேன்?

'நீங்கள் எதற்காக ரேடியோ கேட்கிறீர்கள்? ஜப்பானியர் தோற்றுப் போவதை அறிவதற்கா?' என்பதுதான் அவர்கள் முதல் நாள் என்னிடம் கேட்ட வினா.

'இல்லை, போர் எப்படி நடக்கிறதென்று அறிந்துகொள்ளும் ஆவலில் கேட்டேன்' என்றேன்.

'உண்மையைக் கூறு? இல்லையெனின், என்ன நடக்கும் தெரியுமா?'

இது கேட்டு நான் தலைசுழல மௌனமாக நின்றேன். அவன் கோபம் மிகுதியாயிற்று. 'நீ சரியான பதில் கொடுக்கவில்லை எனில் என்ன நேரும் என்று காட்டுகிறேன்!'

இதற்குப்பின் பெரிய அதிகாரியின் முன் என்னைக் கொண்டுசென்றனர். முதல் நாள் கேட்ட அதே கேள்வியை அவன் என்னிடம் கேட்டான். நான் அதற்கு இவ்வாறு பதிலளித்தேன்.

'என்னுடைய நாடு, பிரிட்டிஷ்காரரை வெளியேற்றுவதற்காகப் பெரும் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறது. அவர்கள் அந்தப் போராட்டத்தில் எவ்வளவு முன்னேறியிருக்கின்றனர் என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வம் எனக்கு இயல்பாகவே இருக்காதா? அதற்குத்தான் ரேடியோ கேட்டேன்' என்றேன்.

'அப்படிச் சொல். பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டுமல்லவா? இந்த பதிலை நேற்றே சொல்லியிருக்கலாம் அல்லவா? சரி, இந்த கண்டம் பிழைத்தாய்..... இப்போது நீ இதைச் சொல்லி யிருக்கவில்லையெனில், இரண்டு மணி நேரத்துக்குள் உன் தலை கீழே உருண்டிருக்கும். பிழைத்தாய்!' என்றான் மீண்டும். தாற்காலிகமாக வேனும் நான் மரணத்தின் வாயிலினின்று மீண்டேன்.

நான்கு மாதங்கள் சென்ற பின்னர், என்னை அங்கிருந்து ராணுவச் சிறைக்கு மாற்றினர்கள். அங்கே ஓர் அறைக்கு இருவராக அடைத் திருந்தனர். காலை ஒன்பது மணிக்குக் குளிப்பதற்கு வெளியே கொண்டு செல்வார்கள். உடலில் துணியே இல்லாது, கைதிகளை நடத்திச் செல்லும் காட்சியை ஜப்பானியச் சிறைகளில் மட்டுமே காண முடியும்! எல்லாக் கைதிகளும் ஒரே நிலையில் இருக்கையில் யாரைப்பற்றி யார் இகழ்ச்சியாக நினைக்க முடியும்! நோயுற்றவரையும் இல்லாதவரையும் ஒன்றாக அறையிலிட்டுப் பூட்டுவார்கள். நோயாளிக்கு மருந்தென்ற பேச்சே கிடையாது. எனக்குத் தெரிந்து பழக்கமான பல அதிகாரிகள் அச் சிறையில் கைதிகளாக இருந்தனர். சொறியும் சோகையும் பீடித்து அவர்களில் பலர் மடிந்தனர். இரண்டுமூன்று பேருக்கு, இறுதிக்காலப் பணிவிடை புரியும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நெஞ்சை உருக்கும் காட்சிகள் அவை. மலேயாவில் பின்னாளில் கமிஷனர் ஜெனரலாகப் பணியாற்றிய ஸர் ஜான் ஸ்காட் அந்நாள் அச் சிறையில்

இருந்தார். ஜப்பான் படையினரின் காலணிகளுக்கு மெருகேற்றும் பணியை அவருக்கும் எனக்கும் கொடுத்திருந்தனர். அடி வாங்காமல் பணிபுரியும் பேறு ஒரு சிலருக்கு மட்டுமே இருந்தது. அந்தச் சிறையிலிருந்து என்னை விசாரணை செய்வதற்கு ராணுவக் கோர்ட்டுக்குக் கொண்டு சென்றனர். விசாரணை என்பது வெறும் கேலிக் கூத்துத் தான். 'கௌன்சில் ஆஃப் ஆக்ஷனிலிருந்து நான் ஜப்பானியருடன் பகையுணர்வு கொண்டதன் காரணமாகவே விலகினேன்' என்பதுதான் என்மீது காட்டப்பெற்றிருந்த தலையாய குற்றம். 'ஆஸாத் ஹிந்த்' அரசாங்கத்துடன் ஒத்துழையாதது இன்னோர் குற்றம். ராணுவக் கோர்ட் எனக்கு ஆறு வருடக் கடுங்காவல் தீர்ப்பளித்தது.

தீர்ப்புக்குப் பிறகு, என்னை வேறொரு சிறைக்குக் கொண்டுசென்றனர். போர் முடியும் வரையிலும் நான் அச் சிறையிலேயே இருந்தேன். படுக்க ஓர் மரப்பலகையும், தலைக்கு வைத்துக்கொள்ள ஓர் மரக்கணுவும் கிடைத்தன. உணவோ—காலையில் பருக்கை ஏதும் இல்லாத கஞ்சியும், இரண்டிரண்டு பிடி சோறு பகலிலும் மாலையிலும் கொடுத்தனர். நான் பொதுவாகவே வயிற்றுப்பசி மிகுந்தவன். நாள்தோறும் பத்து அல்லது பதினைந்து கைதிகள் மடிந்தனர். பலரைத் தூக்கிலிட்டும் கொன்றனர். சவுரி துவைத்தல், கயிறு பிரித்தல், காலணிகள் துடைத்து மெருகேற்றுதல், ராணுவத்தினருடைய உடைகள் மடித்து வைத்தல் என்று எனக்கு அவர்கள் அந்தந்த நேரத்துக்குரிய பணிகளளித்தனர். சிறையில் கிடைத்த உணவை மட்டும் உண்டு உயிர் வாழ்வது கடினம். பொதுவாகவே மிகுதியான பசிகொண்ட இயல்பினனை எனக்கு, பருக்கையில்லாத நீர்த்த கஞ்சியும், இரண்டுபிடி சோறும் எவ்வாறு போதும்? எத்தனையோ வேறு வகைத் துன்பங்களை நான் சிறையில் அநுபவித்தேன் என்றாலும், என்னை மிகவும் வருத்திக் குலைத்தது, எப்போதும் நீங்காதிருந்த கொடிய பசிதான்.

ஒரு நாள் மாலையில் அறைக்குள் எங்களை அடைத்த பின்னர், 'கொஞ்சம் சோறு இருக்கிறது, வேணுமா?' என்று ஒரு வார்டர் என்னிடம் கேட்டான். அச் சொற்கள் என் செவியில் மிகவும் இனிமையாக விழுந்து அடங்கொணாத என் ஆவலை உசுப்பின. 'வேண்டும்' என்றேன். ஆனால் அறையைத் திறக்கும் திறவுகோல் வார்டரிடம் இல்லை. அறை வாயிலிலிருந்ததோர் சிறு ஓட்டை வழியாக மறுபுறம் சோறு இருந்ததைக் காணத்தான் முடிந்தது. எனக்கொரு வழி புலனுயிற்று. அடைத்த கதவின்கீழ், சுமார் அரை அங்குல அளவுக்கு இடம் காலியாக இருந்தது. நான் அணிந்திருந்த கிழிந்த சட்டையை அவிழ்த்துக் கீழே பரப்பி அந்த இடுக்கின் வழியாக மெல்ல வெளியே தள்ளினேன். வார்டர் சோற்றை அதில் பரப்பினான். நான்

உள்ளிருந்தவாறே சட்டையின் ஓர் நுனியை மெள்ள இழுத்துக்கொண் டேன். அந்தச் சோற்றுப் பருக்கைகளை நான் எவ்வளவு ஆவலுடன் உண்டேன்? வெறும் பருக்கைகள்—குடிக்க நீரும் இல்லை! என்றாலும் அந்தச் சோறு அப்போது எத்துணை சுவையாக இருந்தது! பசியாற்றிக் கொள்ள மனிதன் எதுவும் செய்வான்.

சிறையில் கிடைத்த உணவை மட்டுமே அருந்தவேண்டியிருந்தால் நான் உயிரோடு வெளிவந்திருக்கமாட்டேன் எனலாம். முதலில் என்னையும் பெரிபெரி சோகை வருத்தியது. என்னுடைய வீட்டிலிருந்து அநுமதி கிடைக்கும்போதெல்லாம் உணவுப் பொருள் அனுப்பிக் கொண்டிருந்தனர். அச் சிறையில் ஓர் உயர்ந்த அதிகாரியாக இருந்த தளபதி, இவ்வகையில் எனக்கு உதவிகள் செய்து தந்திருந்தார். சிறு உதவிகள் சில சமயங்களில் பேருருளாக மாறிவிடுகின்றன.

மனித இயல்பின் இரண்டு முனைகளையும்—நன்மையையும் தீமையையும் சிறையில் காணலாம். சிலரது இயல்பின் குரூரங்களும், மற்றும் சிலரது இயல்பில் ஒளிர்ந்த தியாக நெறியும் இரக்க சிந்தையும் என்னை வியப்பிலாழ்த்தின. ஒரு மனிதனுடைய உண்மையான இயல்பின் வடிவை இத்தகைய சந்தர்ப்பங்களில்தான் அறிய இயலும்.

37

சிறையிலிருந்து விடுதலை

என்னுடைய மகள் தங்கம் உடல் நலமின்றி ஆஸ்பத்திரியில் இருந்த தாகக் கூறினேன் அல்லவா? நோயின் கடுமையான நிலையை அறிந்து நான் மிகவும் வேதனைகொண்டிருந்தேன். அக்காலத்தில் ஒரு நாட் காலையில் சிறை சூபரின்டென்டண்டின் அறைக்கு என்னை அழைப்பதாக வார்டர் வந்து கூறினான். அங்கே என் மகன் உண்ணி என்னைக் காண வந்திருந்தான். தங்கம் காலமாகிவிட்டாள். அவளைத் திருமணம் செய்து கொடுத்திருந்தேன். இரண்டு குழந்தைகளுக்குத் தாயான அவள், இவ்வுலகிலிருந்து மறைந்துவிட்டாள். நாள்தோறும் பலர் மடிந்துகொண்டிருந்தனர். சில குடும்பங்கள் பூண்டின்றி அழிந்தன. சூழல் முழுதும் மரணத்தின் கருநிழலையே கண்டிருந்தாலும், அத்தகைய பொதுச் சிந்தனைகள் எனக்கு அச் சமயம் ஆறுதலளிக்கவில்லை. என் மகளுடைய உருவத்தை மனக்கண்ணாடியில் கண்டவனுய் கண்ணீர்

வடிதீதுக்கொண்டு சிறையில் தனியனையிருந்து நாட்களைத் தள்ளினேன்.

போர் பற்றிய விவரங்களை அவ்வப்போது சில சிறையதிகாரிகளின் வாயிலாக அறிந்தேன். ஆகஸ்ட் பதினேந்தாம் நாள் ஜப்பானியர் கீழ்ப் படிந்தனர் என்ற விவரமறிந்தபோது எங்களால் நம்ப முடியவில்லை. சிறையில் மிகக் கருத்தாக நடந்த ஏற்பாடுகள் அச் செய்தியை உண்மை என்று உறுதி செய்தன.

ஜப்பானியர் தோல்வி கண்ட செய்தியறிந்து மகிழ்ச்சி கொண்ட எங்களுடைய நெஞ்சங்களில், மீண்டும் திகிலின் குளிர்திரி பனி வீச்சாய்ப் பாய்ந்தது. சிறைக்குள்ளேயே ஓர் அச்சுறுத்தும் விஞ மெல்ல எழும்பிப் பரவியது. பிரிட்டிஷார் வருமுன்னரே, ஜப்பானியர் தேசீயக் கைதிகளை எல்லாம் கொன்றுவிட நிச்சயம் செய்திருக்கின்றனர் என்ற செய்தியே அது. இது, எங்கே தொடங்கி, எவ்வாறு பரவிற்றென்று தெரியாது. ஆனலும் அது மிக விரைவில் சிறை முழுதும் பரவிவிட்டது. செய்தி ஆதாரமற்றதல்ல என்று எங்களை நம்பத் தூண்டியதோர் சம்பவம் ஒன்றும் நிகழ்ந்தது. ஆகஸ்ட் பதினெட்டாம் தேதியோ, பத்தொன்பதாம் தேதியோ, காலையில் சிறையின் கழிவுநீர்க் கால்வாயில் இரத்தம் பெருகி வந்ததைச் சிலர் கண்டிருந்தனர். அது தலைகளை வெட்டி வீழ்த்திய பின்னர் பெருகி வந்த குருதிதான் என்று அறிந்து நாங்கள் வெலவெலத்துப் போனேம். இதற்கு மேலும் எங்களைத் திகிலுறச் செய்ய வேறென்ன வேண்டும்? மரணத்தின் தலைவாயிலில் காத்திருக்கும் மந்தையாக நாங்கள் சோர்ந்து தளர்ந்தோம். அந்த நேரத்தை இப்போது நினைத்துப் பார்த்தாலும் நான் உள்ளுற நடுங்குகிறேன். அன்று நண்பகலுக்குப்பின் இந்தியனை ஒரு சிறை அதிகாரி எங்களிடம் வந்து விவரம் கூறிய பின்னரே உண்மை புரிந்தது. கைதிகளுடைய உணவுக்காகக் கொல்லப்பெற்ற பன்றிகளின் உடல்களிலிருந்து வடிந்த இரத்தம்தான் அவ்வாறு வடிகாலில் பெருகி வந்ததாம்! இந்த விவரம் எத்துணை ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளித்தது!

1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் இருபதாம் தேதி பகலுணவு கொண்ட பின் நான் அறைக்குள் இருந்தேன். ஒரு வார்டர் வந்து என்னைச் சூபரின்டென்டண்ட் அழைப்பதாகச் சொன்னன். நான் அவனுடன் சென்றேன். சிறை உடுப்புகளைக் களையச் சொன்னர். என்னுடைய பழைய கிழிந்த சட்டையை என்னிடம் திருப்ப அளித்தனர். என்னைச் சிறையிலிருந்து விடுதலை செய்துவிட்டனர்.

வீட்டிலிருந்து வந்த புதிய உடுப்பை அணிந்து, காரில் ஏறி, பிற்பகல் மூன்று மணியளவில் நான் வீடு திரும்பினேன். என்னல் படி ஏற முடிய வில்லை. சுற்றிப் பார்க்க இயலவில்லை. வீட்டில் அனைவரும் என் வரவை எதிர்நோக்கி இருந்தனர். ஆனல், அங்குத் தங்கத்தை மட்டும் நான்

காண்பதற்கில்லை. அவளைக் காண முடியாது. அவள் இருந்தால் எத்துணை மகிழ்ச்சியுடன் என்னை வரவேற்றிருப்பாள்? விடுதலையின் இன்ப உணர்வுகளை அந்தப் பேரிழப்பின் துயரம் வறட்டிவிட்டது. விதியின் ஆணையை யாரால் தடுக்க முடியும்? அநுபவித்துத்தான் ஆகவேண்டும்.

ஒருவாரம் நான் வீட்டில் ஓய்வெடுத்துக்கொண்டேன். ஜப்பானிய ருடைய அதிகார ஆட்சி முடிவு பெற்றதனால் தோன்றிய மகிழ்ச்சி எல்லோர் முகங்களிலும் விளங்கியது. மூன்றுண்டுகளுக்கு முன் பிரிட்டிஷார் வெளியேறியதையும், ஜப்பானியர் அதிகாரம் கைப்பற்றி யதையும் கண்டேன். ஜப்பானியர் அகன்று மீண்டும் பிரிட்டிஷார் ஆட்சியைக் கைப்பற்றுவதை இப்போது காணலானேன். ஒரு அரசாட்சி முடிந்து இன்னொரு அரசாட்சி ஆரம்பமாகும் கால - சந்தி மிகுந்த அபாயங்களை விளைவிக்கக்கூடியதாகும். அதிகாரிகளுக்கு அஞ்ச வேண்டியதில்லை; சட்டம் கிடையாது; எதையும் செய்யலாம். ஆனால் பிரிட்டிஷார் இரண்டாவது முறையாக ஆட்சி மாறும் நிலையில் முந்தைய ஆட்சி மாற்றம் நிகழ்ந்தபோது ஏற்பட்டாற் போன்று கொடுமையாக இல்லை.

போர் முடிந்து, சிறிது காலம் சிங்கப்பூரில் ராணுவ ஆட்சிதான் நிலவியது. போர்க்காலத்தில் ஜப்பானியருக்கு உதவி செய்ததற்காக, அநேக மக்களை ராணுவக்கோர்ட் விசாரணை செய்தது. அவர்களில் இந்தியரும் இருந்தனர். அத்தகைய வழக்குகளில், இந்தியரான பிரதிவாதிகளுக்கு ஆதரவாக ஒரு வழக்குரைஞர் குழு இந்தியாவி லிருந்து சிங்கப்பூர் வந்தது. சென்னையிலிருந்து அட்வகேட் கே. பாஷ்ய மும், பம்பாயிலிருந்து பாரிஸ்டர் நரிமனும், அலகாபாதிலிருந்து பாரிஸ்டர் ஸப்ரூவும் அங்கே வந்தனர். அதுபோன்று, பாரத சேவா சங்கத்தின் பிரதிநிதிகளாகிய பண்டித ஹ்ருதயநாத் குன்ஸ்ருவும், கோதண்டராவும், இந்தியரின் நிலையை நேரில் கண்டறிவதற்காக சிங்கப்பூர் வந்தனர். இவர்கள் அனைவரும் பலமுறைகள் என் இல்லத் துக்கு வந்து என்னிடம் போர்க்காலத்தில் நடந்த செய்திகளைப் பற்றி அறிந்தனர். பத்திரிகைப் பிரதிநிதிகள் பலர் இந்தியாவிலிருந்து சிங்கப்பூருக்கு வந்தனர். என் வீட்டில், சுமார் மூன்று மாத காலம், பல்வேறு வகைப்பட்ட விருந்தினர் இரு நேரங்களிலும் உணவு கொள்ள வருபவர்களாக இருந்தனர். அவர்கள் என்னிடம் போர்க்காலத்தில் மலாய்நாட்டு நிலைபற்றிய விவரங்களை அறிவதற்கு அவாக்கொண்டாற் போன்று, எனக்கும் தாய்நாட்டு நிலைபற்றிய விவரங்களை அவர்களிட மிருந்தறியும் ஆர்வம் உண்டாயிற்று.

போர் முடிந்து முதலில் சிங்கப்பூரை அடைந்த பல ராணுவ அதிகாரி களிடையே கர்னல் உண்ணி நாயரும் ஒருவர். போருக்கு முன் ஒலி பரப்புத் துறையின் ஒரு அதிகாரியாக அவர் சிங்கப்பூரில் தங்கியிருந்தார். அவரைப் பல நாட்களிலும் எங்கள் இல்லத்தில் காணலாம். உணவுத் திட்டத்தில் 'சாம்பார்' என்று கண்டால் நிச்சயமாக அவர் வந்து விடுவார். உண்ணி நாயருக்குச் சாம்பார் எவ்வாறு விருப்பமோ, அவ்வாறே நண்பர்களிடமும் மிகுந்த நட்புறவுடன் பழகுவார். நண்பர் களுக்குதவ எஞ்ஞான்றும் தயங்கமாட்டார். ஐந்து ஆண்டுகள் சென்ற பின்னர், அவர் கொரியாவில் வீர மரணம் தழுவிய செய்தியறிந்து, எங்கள் குடும்பத்தினர் ஒருவரை இழந்தாற்போன்று துயருற்றோம்.

ஒரு மாதம் சென்றபின், நான் மீண்டும் தொழில் புரியலானேன். நல்ல வருமானம் கண்டேன். அந்த மாறும் நிலையில், போருக்குப் பிறகு ராணுவ நீதிமன்றங்களே அவசியமாக இருந்தன. ஜப்பானியருக்கு உதவிபுரிந்ததாக, சில நண்பர்கள்மீது அந்தக் கோர்ட்டுகள் குற்றம் சாட்டியிருந்தன. ஜப்பானியருக்குத் தொடக்க காலத்தில் உதவி புரிந்த குற்றத்துக்காக முதலில் என்னையும் கைது செய்யும் எண்ணம் அவர்களுக்கு இருந்தது. பின்னர் வேண்டாமென்று அவ்வெண்ணத்தை விட்டனர். என்றாலும், என்னுடைய சில நெருங்கிய தோழர்களை பிரிட்டிஷார் கைது செய்தது, என்னை மிகவும் வருந்தச் செய்தது. சொற்ப அளவிலேனும் அவர்களில் சிலருக்கு நான் உதவ நேர்ந்ததைப் பெரும் பேறாக நான் கருதினேன்.

சில பிரதிவாதிகளுக்காக நான் ராணுவக் கோர்ட்டில் வழக்காட முன் நின்றேன். மிக முக்கியமான பல வழக்குகள் அந்நாளில் நடை பெற்றன. அவற்றில் ஒன்றை இங்கு விவரிக்கிறேன் :

அது போர்னியோவில் நடந்தது. 'ஸோஹன் ஸிங்' என்றொரு சீக்கியன். போர்னியோவின் தலைநகர் 'ஸான்டேக்கனி'ல் ஒரு போலீஸ் அதிகாரியாக இருந்தான். ஜப்பானியர் போர்னியோவைக் கைப் பற்றிய பிறகு, ஸோஹன் ஸிங்குக்குத் தங்கள் போலீஸில் ஒரு உயர்ந்த பதவியளித்தனர். அக்காலம், போர்னியோவில் சீனர் நிறைந்திருந் தனர். அவர்களில் சிலர் காடுகளில் மறைந்திருந்து, ஜப்பானியருடன் கொரில்லாப் போர் புரிந்தனர். அதற்குக் காட்டுப் பிரதேசங்களில் நிறைந்த வசதிகளிருந்தன. அவ்வாறு மறைந்திருந்து போரிட்ட சீனரைப் பிடித்துக் கொல்லுமாறு ஜப்பானியர் ஸோஹன் ஸிங்குக்கு ஆணையிட்டனர். ஸோஹன் ஸிங் ஒரு போலீஸ் கோஷ்டியுடன், காட்டில் ஒளிந்து போரிட்ட ஏழு சீனரைப் பிடித்தான். அனைவரையும் சுட்டுக் கொன்றான். ஜப்பானியருக்கு ஸோஹன் ஸிங்கின்பால் நன் மதிப்பு உண்டாயிற்று. எனவே, அவனுக்கு இன்னும் உயர்ந்த பதவி

யளித்தனர். ஆனால் அந்தப் பதவியை ஸோஹன் ஸிங் அதிக நாட்கள் அநுபவிக்கவில்லை. அதற்குள் போர் முடிந்துவிட்டது. பிரிட்டிஷார் திரும்பி வந்தனர். ஜப்பானியருக்கு உதவியதற்காகக் குற்றம் சாட்டினர். அதுமட்டுமன்று, அவன்மீது கொலைக்குற்றமும் சாட்டினர். பிரிட்டிஷ் ராணுவக் கோர்ட் அக் குற்றத்துக்காக ஸிங்கை விசாரணை செய்து மரண தண்டனை விதித்தது.

அந்நாள் மலேயா போன்ற நாடுகளில் நிலவிய ராணுவ ஆட்சியின் தலைவர் மௌன்ட்பாட்டன் பிரபு, சிங்கப்பூரையே தலைநகராகக் கொண்டிருந்தார். ஜப்பானியருடைய ஆணைப்படியே ஸிங் சீனரைக் கொன்றானென்றும், சட்டப்படி அவன் குற்றவாளி இல்லை என்றும், விசாரணை நடந்தபோது சட்டம் அறிந்தவர்களுடைய உதவி தனக்கு இல்லை என்றும், அதனால் ராணுவக் கோர்ட்டின் தீர்ப்பைத் தள்ளுபடி செய்து மறு விசாரணை நடத்தும்படி உத்தரவளிக்க வேண்டுமென்றும் கோரி, அவன் மௌன்ட்பாட்டன் பிரபுவுக்கு ஓர் மனு அனுப்பினான். மௌன்ட்பாட்டன் பிரபு அதை அநுமதித்தார். ஸோஹன் ஸிங்கின் வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது.

போர்னியோவுக்கு அருகில் லாபுவான் என்ற இடத்தில் வழக்கை இரண்டாவது முறையாக விசாரணை செய்யத் தீர்மானித்தார்கள். இந்திய அரசாங்கம் கோரியதற்கிணங்க, ஸோஹன் ஸிங்குக்காக ராணுவக் கோர்ட்டின் முன் வழக்கு நடத்த, 1946ஆம் ஆண்டு பிப்ரவரியில் நான் விமானமேறி லாபுவான் சென்றேன். போர்க்காலத்தில் லாபுவான் ஓர் பெரிய படைத்தலமாக இருந்தது. அங்கு ஜப்பானியரின் படையும் இருந்தது. அமெரிக்கர் குண்டு வீசி, கட்டடங்களைத் தகர்த்து அழித்திருந்தனர். இடிந்து தகர்ந்திராத ஒரு கட்டடத்தைக் கூட அங்கு நான் பார்க்கவில்லை. ராணுவத்தினர் கூடாரங்களில்தான் வசித்தனர். எனக்கும் தங்குவதற்கு அத்தகைய கூடாரத்திலேயே வசதி செய்திருந்தனர்.

நான் அங்குச் சென்ற நாளிலேயே, ஸோஹன் ஸிங்கைப் பார்த்தேன். வழக்கு சம்பந்தமான விவரங்களை அறிந்தேன். இரண்டு ஆலோசகர் உதவிகொண்டு ஒரு பிரிட்டிஷ் நீதிபதி வழக்கை விசாரணை செய்தார். போர்க்காலத்தில் போர்னியோவில் ஜப்பானியர் ஆட்சி முறையே நிலவியதால், அவர்களுடைய ஆணைப்படி சீனரைக் கொலை செய்தது குற்றமல்ல என்பது என் வாதம். நடந்த சம்பவங்களை நடக்கவில்லை என்று நான் வாதிக்கவில்லை. சட்டப்படி ஸோஹன் ஸிங் குற்றவாளி அல்ல என்று வாதித்தேன். ஆலோசனையாளர் இருவரும் இந்திய ராணுவ அதிகாரிகள். அவர்களும் பிரதிவாதி குற்றவாளியல்ல என்று கருதினர். நீதிபதி அக் கருத்துக்கு இணங்கவில்லை. அவன் குற்ற

வாளியே என்று மரணதண்டனை விதித்தார். அந்தத் தீர்ப்பின்மீது 'அப்பீல்' செய்த பின்னர் நான் சிங்கப்பூர் திரும்பினேன்.

ஒரு மாதம் சென்ற பின் 'அப்பீல்' விசாரணை நடந்தது. போர்னியோ வில் ஜஸில்டன் என்ற இடத்தில் அது நிகழ்ந்தது. பிரதம நீதிபதியும், போர்னியா கவர்னரும், மற்றொரு நீதிபதியும் அப்பீல் கோர்ட்டில் நீதிபதிகள்.

நானும் அரசாங்கத்தரப்பு வக்கீலும் வாதிட்ட பிறகு, நீதிபதிகள் வழக்கு முடிவை ஆலோசனை செய்ய உள்ளே சென்றனர். கால் மணி நேரம் சென்று அவர்கள் மீண்டுவந்தனர். அப்பீல் தள்ளுபடியான தாகத் தீர்ப்பெழுதினர். இது முடிந்த பின்னர், நான் என் அறைக்குத் திரும்பி கௌனை அவிழ்த்து உடுப்பு மாற்றிக்கொண்டிருந்தேன். அப்போது ரிஜிஸ்ட்ரார் வந்து, பிரதம நீதிபதி என்னைப் பார்க்க விரும் புவதாகத் தெரிவித்தார். நான் அவருடைய அறைக்குச் சென்றேன். ஸோஹன் ஸிங்குக்காக அருமையாக வாதித்ததற்காக என்னைப் பாராட்டி வாழ்த்தினர். 'அது வீணுயிற்றே என்று வருந்தவேண்டாம். ஸோஹன் ஸிங்குக்கு மரண தண்டனையைக் குறைத்து, கொல்ல வேண்டாம் என்று பரிந்துரை நல்கியிருக்கிறோம். மகிழ்ச்சியுடன் சிங்கப்பூர் திரும்புங்கள்' என்று மொழிந்தார். அதற்கேற்ப செயலாற்ற வும் தயங்கவில்லை. ஸோஹன் ஸிங்குக்கு மரண தண்டனைக்கு மாற்றாக, பத்தாண்டுக்காலக் கடுங்காவல் விதித்து, அவரும் மற்ற நீதிபதிகளும் ராணுவ மேலாளருக்கு எழுதினர்கள். ஸோஹன் ஸிங் தூக்குமரத்தி லிருந்து மீண்டான். எனக்கு ஆறுதலாக இருந்தது.

போர்க்காலத்தில் 'மாத்ருபூமி'யைப் பார்க்கக் கிடைக்கவில்லை எனக்கு. போர் முடிந்து மலையாளிகளான சில படை அதிகாரிகள் அங்கு வந்தபோதுதான் பல நாட்களுக்குப் பின்னர் நான் 'மாத்ரு பூமி'யைப் பார்த்தேன். சிறிது காலம் பிரிந்திருந்த குழந்தையைக் கண்டாற்போன்று உணர்ச்சிவசப்பட்டு நெகிழ்ந்தேன். மலேயா நிகழ்ச்சிகளைக் குறித்து 'மாத்ரு பூமி' என்ன கருதுகிறதென்றறிய ஆவல் தோன்றியது. 'இங்குள்ள அநுபவங்களைக் குறித்து மாத்ரு பூமிக்கு எழுதவில்லையா?' என்று அந்தப் படை அதிகாரிகளில் ஒருவர் என்னை வினவினர். 'சிறிதுகாலமாகட்டும்' என்று விடை பகர்ந் தேன் நான்.

அவர் கூறுமுன்பே, என் அநுபவங்களைக் குறித்து மாத்ரு பூமியில் எழுத நான் முடிவு செய்திருந்தேன். ஆனால் அதற்குத்தேவையான நேரம் எனக்குக் கிடைக்கவில்லை. ஐ.என்.ஏ. விசாரணை வேறு தொடங்கி விட்ட காலம். காங்கிரஸ் பொதுத் தேர்தலுக்கும் தயாராய்க் கொண்டிருந்த நிலைவேறு. போர்க்காலத்தில் மலேயாவில் நிகழ்ந்த

சம்பவங்களுக்கும், அவற்றுக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. அவ்வாறிருக்கையில் நான் எழுதும் விவரங்களும், வெளியாகும் சந்தர்ப்பமும், தேர்தலுக்கு ஆதரவளிக்கக்கூடிய வகையில் இசைய வேண்டும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை என் நாட்டு மக்களுக்கு அறிவிக்கும் பொறுப்பு எனக்கு உண்டு. நான் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளைப் பலரும் சரியில்லை என்று கருதியதாக நான் அறிந்திருந்தேன். 'இண்டிபெண்டன்ஸ் லீகில்' நான் முதலில் சேர்ந்ததையும், பின்னர் அதிலிருந்து விலகியதையும், அந்நாளைய சூழ்நிலையையும், என்னுடைய மனப்போக்கையும் ஒருவிதமான உரசலுமின்றி என் நாட்டு மக்களுக்குமுன் வைக்கவேண்டுமென்று நான் உறுதிபூண்டேன். ஆரம்பகாலச் சந்தடிகள் அடங்கட்டும் என்று மாத்ருபூமிக்கு எழுதக் காத்திருந்தேன்.

போர் முடிந்து எட்டு மாதம் சென்ற பின்னர், போர்க்கால அநுபவங்களைக் குறித்து, நான் மாத்ருபூமிக்கு எழுதத் தொடங்கினேன். முதலில் ஆறேழு கட்டுரை வெளி வந்ததும், அக் கட்டுரைத் தொடர் தொடர வேண்டுமா என்று சில நண்பர்கள் எழுதிக் கேட்டனர். கூறுவதெல்லாம் உண்மையாக இருக்கலாம்; ஆனால் அவற்றை வெளியிடுவதனால் நலம் ஏதேனும் விளையுமா என்று அவர்கள் ஐயம் கொண்டு வினவினர்கள். அக் கட்டுரைத் தொடரின் வாயிலாக ஏற்பட்ட திருப்புமுனையின் சக்தியை நான் தாய் நாடு திரும்பியபோதுதான் அறிந்தேன்.

38

தாய்நாட்டில் மூன்று மாதம்

போர் முடிவுற்றதும், பல இந்தியர் தாய்நாடு செல்லத் துடித்துக் கொண்டிருந்தனர். ஆனால் அத்தனை பயணிகளும் செல்வதற்கான கப்பல்கள் இல்லை. போருக்குப் பிறகு இந்தியப் பிரதிநிதியாகச் சிங்கப்பூருக்கு எஸ். கே. செட்டூர் நியமனமாய் வந்தார். பலவாறான தொல்லைகளுக்குள்ளாக நேரிடும் சந்தர்ப்பம் அது. இந்தியர் சம்பந்தமான பல பிரச்னைகளை அவர் எதிர்நோக்கவேண்டியிருந்தது. ஆயிரக்கணக்கான இந்தியர் தாய்நாடு செல்லத் துடித்துக்கொண்டிருந்ததால், அவர்களுடைய பயணத்துக்கான கப்பல்கள் ஏற்பாடு செய்வதும் அப் பிரச்னைகளில் ஒன்றுக இருந்தது. செட்டூர் மிகுந்த திறமையுடன் அப்

பணியை ஆற்றினார். பிறர் புகழையோ விமரிசனத்தையோ பொருட்டாக்காமல், முக்கியமானது எதுவோ, அதை உடனே நிறை வேற்ற அவர் தயங்கவில்லை.

என் குடும்பத்தினர் சிலரைப் போர் முடிந்ததும் உடனே தாயகம் அனுப்பினேன். நான் செல்வதற்குக் காத்திருக்கவேண்டி இருந்தது. அலுவலகப் பணிகள் ஏராளமாக இருந்தன. என்றாலும், தாயகம் திரும்ப வேண்டுமென்ற ஆர்வமும் அடக்க முடியாமலிருந்தது. மூன்று மாத காலம் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தேன். 1946ஆம் ஆண்டு அக்டோபரில் நான் தாயகம் கிளம்பினேன்.

சென்னை வழியாகச் செல்லக் கப்பலில்லாததால், கல்கத்தா வழியாக நாங்கள் பிரயாணம் செய்தோம். நான் காக்கைகளைக் கண்டே நெடுங் காலமாகியிருந்தது. கல்கத்தாவை நெருங்குகையில் காக்கைகள் கரைவதும் பறப்பதும்கூட எனக்குப் புதுமையாக இருந்தது. 1927ஆம் ஆண்டு ஆகஸ்டில் நான் மலேயா சென்றேன். பத்தொன்பது ஆண்டுகள் சென்ற பின்னர் தாய்நாடு திரும்புகிறேன். இந்தக் கால வரையறையில் என்னவெல்லாம் நடந்துவிட்டன! என் னென்ன துன்பங்களை அநுபவிக்கவேண்டியிருந்தது! கப்பலிலிருந்து இறங்கினேன். கல்கத்தா துறைமுகத்தில் அடிவைத்தபோது என் உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் அலைமோதின!

நான் கல்கத்தாவில் இரண்டு நாட்கள் தங்கினேன். என் பழைய நண்பர் வி. ஆர். நாயர் அங்கு இருந்தார். அவருடைய விருந்தினனாகத் தங்கும் வாய்ப்பைப் பெற்றேன். கல்கத்தாவில் கேரள சமாஜத்தினர் ஒரு வரவேற்பு உபசாரம் நல்கினர். அங்குதான் முதன்முதலாக நான் எனது போர்க்கால அநுபவங்களைப்பற்றி உரையாற்றினேன். இரண்டு நாட்களுக்குப்பின் நான் சென்னையை அடைந்தேன். உள்ளன்போடு அங்கும் நண்பர்கள் என்னை வரவேற்று கௌரவித்தனர். மலேயாவில் நிகழ்ந்த சம்பவங்களைக் குறித்தும், நான் மேற்கொண்ட நிலைபற்றியும், பலரும் என்னிடம் விவரம் கேட்டார்கள். அப்போது நாட்டில் என்னைப் பற்றிய பல தவறான கருத்துகள் பரவியிருந்ததாகத் தெரியவந்தது.

மூன்று நாட்கள் நான் சென்னையில் தங்கிவிட்டு மலபாருக்குப் பயண மானேன். என்னை வரவேற்க, ஒலவக்கோட்டுக்குப் பல நண்பர்கள் வந்திருந்தனர். 'மாத்ருபூமி'யில் நான் எழுதிய கட்டுரைத்தொடர் விளைவித்த சலசலப்பைக் குறித்து அவர்கள் கூறுமலில்லை. அக்டோபர் இருபத்தைந்தாம் நாள், பகல் வண்டிக்கு நான் ஒலவக்கோட்டிலிருந்து கோழிக்கோடு கிளம்பினேன். மனைவியும் வேறு சிலரும் எங்களுடன் இருந்தனர். வண்டி கல்லாயியை அடைந்ததும், கறுப்புக் கொடி பிடித்திருந்த சிலர் வண்டியின் மிதிப்பலகையில் ஏறிக்கொண்டனர்.

அவர்கள் ஏதோ கோஷங்களும் எழுப்பினர்கள். என்னை அவர்கள் 'திரும்பிப் போ!' என்று கோஷமிட்ட ஒலி தெளிவாகச் செவிகளில் விழுந்தது. என் வரவை எதிர்நோக்கி, கோழிக்கோடு ரயில் நிலையத்தில் ஒரு பெருங்கூட்டம் காத்திருந்தது. என்னை வரவேற்று கௌரவிக்க வந்திருந்த நண்பர்களுடன், என்னை எதிர்த்துக்கடிய வந்திருந்த மக்களும் இருந்தனர். பிந்தையவர்கள்தாம் அதிகம். வண்டி ரயிலடி மேடையில் நுழைந்ததும், உடனே சினம் கொண்ட மக்கள் சிலர் நான் அமர்ந்திருந்த பெட்டிக்கு முன் திரண்டு நெருங்கினர். நண்பர்களால் என்னை அணுக முடியவில்லை. என் நண்பர்களும் எதிர்ப்பாளரும் வெளியே மோதிக்கொண்டனர். பத்து நிமிடநேரம் நான் காத்திருந் தேன். வண்டியிலிருந்து இறங்க வழியில்லை. கிளர்ச்சியுற்ற கூட்டத் தினரின் கீழ்த்தரமான நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

பிறகு நிகழ்ந்த சம்பவங்களை மறுநாள் மாத்ருபூமி வெளியிட்டிருந்தது. அது கீழேவருமாறிருந்தது :

"இன்று மாலை வண்டியில் ஸ்ரீ கே. பி. கேசவ மேனன், ஒலவக் கோட்டிலிருந்து இங்கு வந்தார். அவரை வரவேற்க ஒலவக்கோட்டு ரயில் நிலையத்தில் பெரியதோர் கூட்டம் கூடியிருந்தது. கம்யூனிஸ்ட் தலைவர்களும் கலந்துகொண்டிருந்தனர். ரயில் நிலையத்தில், கறுப்புக் கொடி கையிலேந்தி, கறுப்பு வட்டச் சின்னங்களும் உடையிலணிந்து சிலர் வந்திருந்தனர். சில கறுப்புக் கொடிக்காரர்கள், கல்லாயி நிலையத்திலேயே வண்டிக்குள் ஏறிவிட்டனர். ஸ்ரீ கேசவ மேனனை வண்டியிலிருந்து இறங்கவிடாமல் அவர்கள், அவரைச் சூழ்ந்து கொண்டனர். அக் கறுப்புக்கொடிக்காரர், 'கேசவமேனன், கோ பாக்! (திரும்பிப் போ!) மாத்ருபூமி அழியட்டும்!' என்று கூவினர். இன்னும் தரம் குறைந்த மொழிகளையும் எழுப்பினர்கள். கேரளப் பிரதேச காங்கிரஸ் கமிட்டி, மாத்ருபூமி, தாலுக்கா காங்கிரஸ் கமிட்டி, நகர காங்கிரஸ் கமிட்டி ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் ஸ்ரீ கேசவ மேனனுக்கு மாலையிட்டனர். இதற்குள் கறுப்புக்கொடி ஏந்தியவர்கள், மாலையைப் பிடித்திழுத்து, கேசவ மேனனின் சட்டையையும் கிழித் தார்கள். தலைவர்கள், பெருமுயற்சி செய்து மேனனை ரயில் நிலையத்தி லிருந்து வெளியே அழைத்துவந்தனர். ரயில் நிலையத்துக்கு வெளியிலும் கறுப்புக்கொடிக்காரர், கொஞ்சமும் பண்பில்லாமலே நடந்து கொண்டனர். அவர் காரில் ஏறியபோது, அவர்மீது சேற்றை வாரி வீசினர். சிலர் காரின் மேலேறி அவரை அடித்தும், காரின் கண்ணாடியை நொறுக்கியும் துன்புறுத்தினர். கல்லெறியுண்டு ஒருவர் காயமுற்றார். சிலர் கையிலேந்தியிருந்த தேசியக்கொடியைப் பிடித்து இழுத்தனர்.

பின்னும் கலகக்காரர் கொடித்தண்டை ஒடித்தனர். சுமாராகக் காய முற்றவர் பலர்; பலருக்குப் பொருள் நஷ்டம். மாத்ருபூமி ஊழியர் பலரும் சில்லறைக் காயங்களுக்குள்ளாயினர். அவருடைய உறவினரையும் கறுப்புக்கொடிக்காரர் அச்சுறுத்தினர். கிழிந்த சட்டையும் சேறு படிந்த கோலமுமாக, ஸ்ரீ கேசவ மேனன் நேராக மாத்ருபூமி அலுவலகம் சென்றார். சிறிதும் கோபமின்றி, நிதானமிழக்காமல், மென்னகை புரிந்தவராக ஸ்ரீ கேசவ மேனன் தனக்கெதிராக நிகழ்ந்த ஆர்ப்பாட்டங்களைக் கண்ணுற்றவராக இருந்தார். கறுப்புக்கொடியினர், மாத்ருபூமி அலுவலகத்தின் முன்னும் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர்.''

கிளர்ச்சியுற்றிருக்கும் மக்கள் கூட்டத்தை எதிர்த்துப் பயனில்லை. 'மாப்' என்று சொல்லக்கூடியதோர் கட்டுப்பாடற்ற கூட்டுச்சக்தி கிளர்ச்சியுறும்போது, சிந்தனை சக்தி, பொறுமை, ஈவு, இரக்கம் ஒன்றுமே தோன்றுவதற்கு இடமில்லை. ஒருவர் செய்ததை மற்றவர் செய்வார். ஒருவர் கூறுவதை மற்றவரும் கூறுவர். புகழ்பெற்ற கால்ஸ்வர்த்தியின் 'மாப்' என்ற நாடகத்தில் பாடகனை எதிர்த்து வரும் 'மாப்' என்ற மக்கள் கூட்டத்தைச் சமாளிக்கும் வகையில் கூறிய மொழிகள் நினைவு கொள்ளுதற்குரியவை. கதாநாயகன் கூறுகிறான்: ''வன்முறையே உங்களுக்குத் தெரியும். பைத்தியக்காரனின்மீது கல்லெறிவீர்கள். பெண்களை நீங்கள் அவமானம் செய்வீர்கள். உங்களுக்கு விருப்பமில்லாததைக் கூறுபவர்களை நீங்கள் பழித்துரைப்பீர்கள். இறை ஒன்று; நாளை இன்னொன்று. உங்களுக்கு அவ்வளவுதான் வேண்டும். உங்கள் மண்டையில் மூளை கிடையாது; துணிவும் கிடையாது. நீங்கள் கயவரில்லை என்றால் அச் சொல்லுக்குப் பொருத்தமானவர் வேறு எவருண்டு? நாட்டுப்பற்றுத் துளியும் உங்களுக்குக் கிடையாதா? உங்களால் என்னை அழித்துவிட முடியும். ஆனால் எனது நம்பிக்கையை உங்களால் அழிக்க முடியாது. நான் தனிமனிதன்தான். நீங்கள் ஆயிரமாய் இருந்தாலும் உங்களால் அதைச் செய்ய இயலாது.''

கோழிக்கோடு சென்ற மூன்றாம் நாள், விக்டோரியா டவுன் ஹாலில் கேரளப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி எனக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தது. அங்கும் என்னை எதிர்க்கும் மக்கள் கூடியிருந்தனர். நான் பேசுவதற்கு எழுந்தபோது, கூச்சலும் சீழ்க்கையொலியுமாகப் பத்து நிமிடங்கள் என்னைப் பேச விடாமல் அடித்தனர். அங்கும் போர்க்கால நிகழ்ச்சிகள் குறித்துத்தான் பேசினேன். கூட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கையில், பல முறைகள் இரைச்சலும் எதிரொலிகளுமாக இடையூறு விளைவித்தனர். கூட்டம் முடிந்து 'மாத்ரு பூமி' அலுவலகம் திரும்பியபோது, எதிர்ப்போரின் தாக்குதலிலிருந்து என்னைக் காக்கும்

வண்ணம் சில நண்பர்கள் என்னைச் சூழ்ந்துகொள்ள, நடந்தோம். நான் கோழிக்கோட்டில் மூன்று நாட்கள் தங்கினேன். பல வகையான கடிதங்களும் அச்சுறுத்தல்களும் எனக்கு வந்தன. நான் அங்கிருந்து திரும்பிய பிறகு என் நண்பர்களும் ஆதரவாளரும் பெரும் ஆறுதல் கொண்டு பெருமூச்செறிந்திருப்பார்கள்.

மனச்சாட்சிக்குத் துரோக மிழைக்காமல், நம் உள்ளத்து நம்பிக்கைக் கேற்பச் செயலாற்றியவாறு வாழ்க்கையிலும், பலருடைய எதிர்ப்புக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாகிப் பொறுக்கவேண்டியிருக்கிறது. பொதுப் பணியில் ஈடுபட்டவர்களுக்கு, குறிப்பாக, இங்கிலாந்தில் முதன் மந்திரி யாக இருந்த லாயிட் ஜார்ஜுக்கு ஒரு முறை நேர்ந்த அநுபவம் நினைவுக்கு வருகிறது 1903ஆம் ஆண்டில், இங்கிலாந்துக்கும் தென்னப்பிரிக்காவுக்கும் இடையே நிகழ்ந்த போரில், இங்கிலாந்து-பொது மக்களுடைய கருத்துக்கு மாறுக லாயிட் ஜார்ஜ் கருத்துக் கொண்டிருந்தார். இங்கிலாந்து தென்னப்பிரிக்காவுடன் போரிடக் கிளம்பியது சரியல்ல என்று அவர் வாதம் செய்தார். அதை விவரமாக வெளியிட அவர் தயங்கவுமில்லை. ஒரு பொதுக்கூட்டத்தில் அவர் தம் கருத்தை வெளிப்படையாகக் கூறினர். கூடியிருந்த மக்கள் அனைவரும் போர்த் தினவெடுத்துப் பரபரத்துக்கொண்டிருந்தனர். லாயிட் ஜார்ஜின் உரை கேட்டதும், சினம் கொண்ட மக்கள் கலகம் விளைவிக்கப் பாய்ந்தனர். அவருடைய உடலுக்கே ஊறு செய்யப் பாய்ந்தனர். நிலைமை மோசமாகிவிட்டதை உணர்ந்த அவர், ஒரு போலீஸ் காவலனின் உடுப்பை வாங்கி மாற்றிக்கொண்டு, யாரும் அறியாமல் அங்கிருந்தகன்றார். முதல் உலகப் பெரும்போர் நிகழ்ந்த காலத்தில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்த ஒரு பெரிய மனிதரின் அநுபவம் இது.

மற்றொரு முதன் மந்திரி ராம்ஸே மக்டனல்டின் அநுபவமும் குறிப்பிடத் தகுந்ததாகும். அதுவும் முதல் உலகப் பெரும்போர் நிகழ்ந்த காலம்தான். மக்டனல்ட், இங்கிலாந்து ஜர்மனியுடன் போர் புரிவதற்கு ஆதரவான கருத்தைக் கொண்டிருக்கவில்லை. அதனால் அவருக்குச் சிறிதுகூடச் செல்வாக்கே இல்லாமலாயிற்று. வெளியி லிறங்கி உலவச் செல்வதற்குக்கூட அவருக்குக் கடினமாக இருந்தது. ஏனெனில் அந்நாளிலும் இங்கிலாந்து முழுதும் மக்கள் போருக்கு ஆதரவாகவே இருந்தனர். எல்லோரும் போருக்கு ஆதரவளிக்கும் வகையில் உற்சாகம் கொண்டு பணியாற்றுகையில், போருக்கு எதிராக ஏதேனும் பேசினாலோ செயல் புரிந்தாலோ, அவர் எத்துணைப் பெரிய மனிதராக இருந்தாலும் மக்கள் அவரிடம் மரியாதையோ இணக்கமோ காட்டுவதில்லை. அந்நாளில் அவர் ஓர் முறை ஃபிரான்ஸுக்குச் செல்வ

தற்காகக் கப்பலேறினர். கப்பற் பணியாளர் மக்டனல்டைக் கண்டு கொண்டனர். அவர்கள் உடனே, மக்டனல்ட் கப்பலிலிருந்து இறங்க வேண்டும், அல்லது அவர்களாகவே அவரைக் கப்பலிலிருந்து இறக்கி விடுவதற்குக் கப்பல்-தலைவன் சம்மதம் தர வேண்டும் என்று பிடிவாத மாகக் கோரினர். மக்டனல்ட் கப்பலிலிருந்தால் தாங்கள் கப்பலில் பணி புரிவதற்கில்லை என்று அறுதியிட்டுக் கூறினர். வேறு வழியில்லை என்று கண்டு, கப்பல் தலைவன், அவரைக் கலத்தினின்றிறங்கிவிட ஆணை பிறப்பித்தான். மக்டனல்ட் கப்பலைவிட்டிறங்கிவிட்டார். போருக்குப் பிறகு, மிகப் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று, 'லேபர்' கட்சி அதிகாரம் கைப்பற்றியது. மக்டனல்ட் முதன் மந்திரியானர்.

இத்தகைய அநுபவங்கள் பலருக்கும் நேர்ந்திருக்கிறது. மக்களுடைய அன்பையும் ஆதரவையும் மட்டுமே பெற வேண்டுமானால், சுதந்திரமான கருத்துகளுடன் வாழ முடியாது. தன் மனச்சாட்சிக்கு ஒப்ப வாழ்க்கையை நடத்தும்போது தோன்றும் அமைதியும் ஆனந்தமும் காணவும் இயலாது. மக்கள் நிலை மாறும் தன்மைகொண்டது. சிந்திக்கத் தெரியாத மக்கள் கூட்டத்துக்கு இசைய, உள்ளார்ந்து கொள்கைப்படி வாழ நினைக்கும் மனிதன் மாற முடியாது. அவர்களை விட்டுக் கூடியவரை விலகியே இருக்க நினைப்பான். பின்னாளில் மக்கள் தாம் பைத்தியக்காரர்களாக நடந்துகொண்டதை உணராமலிருக்க மாட்டார்கள். இது எக்காலத்தும், எந்நாட்டிலும் நிகழக்கூடியது தான்.

கோழிக்கோட்டிலிருந்து திரும்புமுன் நான் சிறுதுருத்தி சென்றேன். ஐக்ய கேரளம் பற்றி யோசனை செய்யும் ஓர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்ற என்னை அழைத்திருந்தனர்.

மாகவி வள்ளத்தோள், கேளப்பன், கே. ஏ. தாமோதர மேனன், யூ. கோபால மேனன், மிஸ் ஆனி மஸ்கரனெஸ் ஆகியோர் அக் கூட்டத் துக்கு வந்திருந்தனர். கேரளப் பிரதேசத்தை உருவாக்குவது குறித்துச் சிந்தித்து ஆவன செய்வதற்கு, கேரளத்தின் பல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகளை வரவழைத்து, ஓர் கூட்டரங்கு (கன்வென்ஷன்) ஏற்பாடு செய்ய ஓர் செயற்குழுவைத் தேர்ந்தெடுத்தோம். ஐக்ய கேரளம் உருவாக்குவதற்கான அடிநிலை முயற்சியே அது. பின்னர் நான் பாலக் காடு திரும்பினேன்.

காங்கிரசும், முஸ்லிம் லீகும் ஒருவருக்கொருவர் பகைமை உணர்வு மேலிடக் கிளர்ச்சி செய்ததன் விளைவாக நாட்டுச் சூழலே அப்போது கொந்தளித்துக்கொண்டிருந்தது. ராஜப் பிரதிநிதி சபையில், காங்கிரஸ் – முஸ்லீம் லீக், இருதரப்பினருக்கும் பிரதிநிதிகளாக இருந்த வர்கள் இணைந்து செயல்படுவது சாத்தியக்கூறாக இல்லை. அன்றுடம்

எதிர்பாராத தகராறுகள் விளைந்துகொண்டிருந்தன. என் முழும் அப்போது யாரும் இந்தியாவைத் துண்டாடவேண்டி வரும் என்று நினைத்திருக்கவில்லை. நிலைமையை நேரில் கண்டறியும்பொருட்டு நான் டில்லிக்குச் சென்றேன். ஜெனரல் மோகன் ஸிங்கும் அங்கு வந்திருந்தார். போர்க்காலத்தில் சிங்கப்பூரிலிருந்த பல படையதிகாரிகளை அங்கே காண முடிந்தது. ஜெனரல் மோகன் ஸிங்குடன், நான் மீரட்டில் கூடிய காங்கிரஸுக்குச் சென்றேன். அங்கு ஓர் தனிக் கூடாரத்தில் பண்டித நேரு தங்கியிருந்தார். என்னையும் மோகன் ஸிங்கையும் அவர் அங்கே அழைத்தார். சிங்கப்பூரில் நடந்தவற்றை எல்லாம் அப்போதுதான் நாங்கள் அவரிடம் பேசிமுடித்தோம்.

ராஜகோபாலாசாரி, அந்நாள் மந்திரி சபை உறுப்பினர். டில்லியில் நான் அவரையும் கண்டு அளவளாவி மகிழ்ந்தேன். அவரைக் கண்டு இருபதாண்டுகளுக்கு மேலாகியிருந்தது. சிங்கப்பூரில் போர்க்காலத்தில் ஜப்பானியருடன் நேர்ந்த மோதலில் நான் மேற்கொண்ட நெறியைப் புகழ்ந்துரைத்தார்.

இரண்டு வார காலம் நான் வட இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்த பின்னர், மலபார் திரும்பினேன். நாட்கள் ஓடியது தெரியவில்லை. மேலும் சில நாட்கள் ஊரில் தங்கவேண்டுமென்றிருந்தது. ஆனால் சிங்கப்பூர் திரும்புதற்குரிய நாள் நெருங்கிவிட்டதால், நான் அடுத்த கப்பலிலேயே புறப்பட்டேன்.

39

மலேயாவிடம் விடைபெறுதல்

போர் முடிந்த பிறகு மலேயாவிலும் சிங்கப்பூரிலும் எத்தகைய மாறுதல்கள் கூடிவிட்டன! எத்திசை நோக்கினும் புதிய ஆக்கத்துக்கான அறிகுறிகள் தோன்றலாயின! மக்களிடையே தன்னம்பிக்கையும் புத்துணர்வும் மிகுந்தன. தேசிய விஷயங்களிலும் புரட்சிகரமான மாறுதல்கள் கண்டோம். வாணிபம் வியத்தகு முன்னேற்றம் கண்டது. சுதந்திர ஆர்வம் மக்களிடையே கொழுந்துவிட்டெளிர்ந்தது. ஒரு புதிய மலாய் நாட்டை உருவாக்கும் உற்சாகம் பெருகிவந்தது.

தொழிலைப் பொறுத்தமட்டில் எனக்கும் நற்காலம் கூடிவிட்டது. போருக்குப் பிறகு சிங்கப்பூரில் போரினால் விளைந்த வழக்குகளின் எண்ணிக்கையும் தரமும் மிகுதியாயின. வருமானமும் பெருகியது.

இந்தியாவில் தோன்றிய சுதந்திர இயக்கம், பர்மா, இந்தோனேசியா மலேயா ஆகிய எல்லா நாடுகளிலும் பரவி வளர்ந்தது. இந்திய விடுதலை நன்னாளை, உரிய வகையில் நாங்கள் சிங்கப்பூரில் கொண்டாடி மகிழ்ந்தோம். இந்தியாவில் நிகழும் சம்பவங்களை மலாய் நாட்டு மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் கவனித்துக்கொண்டிருந்தனர்.

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் பதினைந்தாம் நாள், இந்திய ஆட்சிப் பொறுப்பை பிரிட்டிஷாரின் சார்பில் மௌன்ட்பாட்டன் பிரபு இந்தியரிடம் ஒப்படைத்தபோது, புது டில்லியில் நடந்த சடங்குகளையும் கொண்டாட்டங்களையும் பற்றிய நிகழ்ச்சிகளின் வருணனையை அடக்க இயலாத உணர்ச்சிப் பரவசத்துடன் நான் வானொலியில் கேட்டேன். இரு நூற்றாண்டுக்கால பிரிட்டிஷ் ஆட்சி முடிவடைந்துவிட்டதென்ற உண்மையை நினைத்துப் பார்க்கையில் ஆச்சரியமாக இருந்தது. வெளி நாடுகளிலிருந்த இந்தியரின் மதிப்பு, திடீரென்று உயர்ந்துவிட்டது. அந்த நாடுகளிலிருந்த இந்தியர் தாய் நாடு திரும்புவதற்குரிய சூழலும் உருவாயிற்று. சுதந்திரம் பெற்றதும், இந்தியரிடையே தோன்றிய தன்னம்பிக்கையும் நாட்டுப் பற்றும் தோற்றுவித்த மாறுதல்கள் வியப்புக்குரியனவாக இருந்தன. வெள்ளையருக்குக் கீழடங்கி, அவர்கள் ஆணையிடும் பணி புரிந்து காலம் கழிப்பது தவிர, சொந்தமாக எந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளும் தகுதி நமக்கில்லை என்று நம்மைக் கருதச் செய்திருந்தனர்.

இன்றைய இளந் தலைமுறையினரால் இதெல்லாவற்றையும் உணர்ந்து கொள்ள இயலாது. அவர்கள் சுதந்திர இந்தியாவிலன்றோ கண் விழித் திருக்கின்றனர்! அவர்களால் எய்த இயலாத பதவியொன்றும் இந்நாளில் இல்லை. அவர்களுடைய நல்வளர்ச்சியை எதுவும் தடுத்து விட முடியாது.

சுதந்திரத் திருநாளின் கொண்டாட்ட எதிரொலி இன்னமும் மறைய வில்லை. உடனே தொடர்ந்து மகாத்மா காந்தியின் மரணச் செய்தி கேட்டுச் சிலையானேம். அஹிம்சையையே வாழ்க்கைக் கோட்பாடாகக் கொண்டு, தன் அன்றுட வாழ்க்கையில் அவ் விரத நெறி கைக்கொண்டு வாழ்ந்து, உலக மக்களுக்கோர் இலட்சிய நாயகராகத் திகழ்ந்த காந்தி யடிகள் ஒரு வகுப்புவாத வெறி பிடித்த கொலைகாரனின் கைத் துப்பாக்கிக்கு உயிர்ப்பலியானதைக் குறித்து அறிந்தபோது, விதியின் குரூரத்தைச் சபிக்காமலிருக்க முடியுமோ? வேறு பல இடங்களிலும் நிகழ்ந்தாற் போன்று, சிங்கப்பூரிலும் ஒரு மாபெரும் இரங்கற் கூட்டம் கூடியது. சீனரும், வெள்ளையரும், மலாய் நாட்டவரும், மற்றும் பலரும் அக் கூட்டத்தில் மகாத்மாவுக்கு அஞ்சலி செலுத்தினர். மகாத்மா காந்தியை மக்களனைவரும், ஒரு உலகத் தலைவராக, போற்றற்

குரிய ஆசாரியனைக் கண்டனர். சின்னட்கள் சென்றபின், காந்தியடி களின் சிதையிலிருந்து திருநீற்றைக் கொணர்ந்தபோது, சிங்கப்பூரில் அதை ஏற்று இறுதியாஞ்சலி செலுத்தப் பெருமளவில் ஏற்பாடுகள் செய்திருந்தனர். நானும் அதில் குறிப்பாகப் பங்கு கொண்டேன். ஒரு பிரிட்டிஷ் மூதாட்டி நாள்தோறும் காந்தியடிகளின் நீற்றுக் கலசம் வைக்கப்பெறறிருந்த விக்டோரியா டவுன் ஹாலுக்கு வந்து, பக்தி மேலிட வணங்கித் தொழுவாள். அதுகண்டு நான் நெஞ்சம் கரைந்து நின்றேன். மிகவும் நெருங்கிய உறவினர் மறைந்தாற் போன்று துயருற்றிருந்த அவள், சிறிது காலம் இந்தியாவில் வாழ்ந்திருக்கிறளாம். அவளுடைய ஒரே புதல்வன், கடற்படையில் ஒரு அதிகாரி. அவன் அடிக்கடி சிங்கப்பூர் வருவான். அவனைக் காணும் வாய்ப்பைக் கருதியே அவள் சிங்கப்பூரில் வந்து தங்கியிருந்தாள். எனினும் தன் வாழ்க்கைச் செலவுக்கு யாரிடமும் கையேந்துவதில்லை என்ற கோட்பாட்டுடன், பல பொருள்களை வாங்கியும் விற்றும், அதனால் கிடைக்கும் பொருள் கொண்டு வாழ்ந்தாள். தெய்வ நம்பிக்கையும் தொண்டு மனப்பான் மையும் கொண்ட அம்மூதாட்டி, எந்த நிலையிலும் மனிதனால் பிறருக்கு உதவ முடியும் என்பதற்கோர் விளக்கமாகத் திகழ்ந்தாள். காந்தியடி களின் நீற்றுக் கலசத்தின் முன் மூன்று நாட்கள் பிரார்த்தனை நடத்தி னேம். அந்த மூன்று நாட்களும், அந்த அம்மையே உடல் வருந்த ஏற்பாடுகள் செய்தாள். அப்மாதிரி உழைத்தவர் அந்நாளில் அங்கு வேறு யாருமில்லை. கோடிக்கணக்கான மக்களின் இதயம் கவர்ந்த காந்தியடிகளின் அற்புத சக்தி கண்டு வியக்காமலிருக்க முடியுமோ? அவர் வாழ்ந்த காலத்தில் வாழவும், அப் பெருந்தகையின் ஆற்றலில் ஓர் துளியேனும் உள்ளம் தொடப் பெறவும் சந்தர்ப்பம் பெற்றவர்கள் பேறு பெற்றவர்களே. காந்தி பிறந்த நாட்டில் நாம் பிறந்திருக்கிறோம் என்ற உண்மையே நமது பொறுப்புணர்வையும் தொண்டு மனப்பான் மையையும் வலியுறுத்தக்கூடியதாகும். இடைவிடா முயற்சியினாலும், அசையாத நம்பிக்கையினாலும், மனிதன் உயரிய நிலையை எய்த முடியும் என்பதற்கு காந்தியடிகளின் அற்புத வரலாறே சான்று. மனிதன் எந்த அளவுக்கு தார்மிக வளர்ச்சியாம் அரிய உயர்நிலையை எய்த முடியும் என்பதை அவர் நமக்கு வாழ்ந்து காட்டி விளக்கி இருக்கிறார்.

இந்நாட்களில் நிகழ்ந்ததோர் நிகழ்ச்சியை இங்குக் கூறுகிறேன். என் இதயத்தைத் தொட்ட நிகழ்ச்சி அது. என்னை மிகவும் கலங்கச் செய்த தொரு கடன் கொடுத்தவரைப்பற்றி முன்பு கூறினேனல்லவா? அவர் எனக்கு ஆயிரத்து இருநூறு டாலர் கடன் கொடுத்திருந்தார். அக் கடனை அடைப்பதற்கு எனக்குச் சிறிது காலமாயிற்று. அக்காலத்தில் நான் வாங்கிய தொகையைப் போன்று மூன்று மடங்கு—நாலாயிரத்து

முந்நூறு டாலராகத் திருப்பியளிக்க வேண்டிவந்தது. இடையில் பதின் மூன்று தடவைகள் என் வீட்டுப் பொருளையும், அலுவலகச் சாமான்களை யும் ஜப்தி செய்து பறித்துக்கொண்டார். சிறிதுகூட இரக்கம் காட்டாது நடந்துகொண்டார். அவர் சில நாட்களுக்குக் காத்திருந்த தனால் அவர் எதையும் இழந்துவிடப் போவதில்லை. ஆனால் என் நிலை உடனே கடனைக் கொடுக்குமளவுக்கு வளமுடையதாக இல்லை. அதனால் அவர்பால் அப்போது நான் கோபம்கொண்டிருந்தேன் என்றால் வாசகர் புரிந்துகொண்டிருப்பார்கள். அதெல்லாம் நடந்து பத்தாண்டுக் காலம் ஓடிவிட்டது. அந்த வெறுப்பும் கோபமும் நீறுபூத்து அவிந்துவிட்டன. எனது நிலை முன்னேற்றம் கண்டது. ஆனால் விதியின் சுழற்சியில் அவர் பாதுகாப்பற்றுடார். போர்க் காலத்தில் சொத்துகள் அழிந்தன. மின்றி, என்னை அண்டியிருந்த குடும்பம் இருந்தது. கை செலவுக்குப் பண வந்துற்றது. அவருடைய மகளுடைய நிலைமை அவர் குடும்பத்தினருக்கு வந்தான். நான் அதைக் கொடுக்கையில் என்னிடம் ஐநூறு டாலர் வேண்டி ஒருவர், 'முன்பு அவர்கள் செய்ததெல்லாம் மறந்துவிட்டாயா?' என்று நினைவுறுத்தினர். 'நான் மறக்கவில்லை. அதனால்தான் தேவை என்று வந்ததும் பணத்தை உடனே அளிக்க உறுதி கொண்டேன். இப்போதேனும் அவர்கள் என்னுடைய அந்நாளைய நிலையைப் புரிந்து கொண்டிருப்பார்கள். இவ்வுலகில் எதுவும் நிலையல்ல; அதிர்ஷ்டமும் துரதிர்ஷ்டமும், செல்வமும் வறுமையும், இகழ்ச்சியும் புகழ்ச்சியும் மாறக்கூடியவை' என்றேன்.

இது போன்று இன்னொரு சம்பவமும் இக்காலத்தில் நிகழ்ந்தது. நான் ஜப்பானியரின் ராணுவச் சிறையில் கைதியாக இருந்த நாட்களில், துணி யின்றி அல்லலுற்றதொரு கைதிக்கு, என்னுடைய நிஜார் ஒன்றைக் கொடுத்திருந்தேன். அவ்வாறு ஒரு சட்டைக்காரனுக்கு நான் துணி கொடுத்ததனால் அவனுக்கும் எனக்குமிடையே ஏதேனும் ஒப்பந்தமிருக்கு மென்றும், அதை நான் தெரிவித்துவிட வேண்டும் என்றும் என்னைச் சிறையதிகாரிகள் தொந்தரவு செய்தனர். நான் அவனுடைய கஷ்டத்துக்கிரங்கி அளித்தேனே ஒழிய வேறொன்றுமில்லை என்று எவ்வளவு முறைகள் கூறியும் அவர்களுக்கு அது திருப்தியளிக்கவில்லை. இளைஞனை ஒரு ஜப்பானிய அதிகாரி, நான் பொய்யுரைக்கிறேனென்று தன் கையிலிருந்த இரும்புத்தடியால் என்னை அடிக்கவும் கூசவில்லை. ஒருமுறை யல்ல—பல முறைகள், அவன் என்னை அடித்திருக்கிறான். அவன் அருகில் வரும்போதே நெஞ்சில் அச்சம் கிளர்ந்தெழும்.

போர் முடிந்த பிறகு, போர்க்காலத்தில் மக்களை அக்கிரமமாகத் துன்புறுத்திய குற்றத்துக்காக ஜப்பானியரைத் தனியாக நீதி விசாரணை

செய்தார்கள். அத்தகைய ஜப்பானியரில் ஒருவருக்காக, அவருடைய ஒரு நண்பன் என்னிடம் அவருக்காக வழக்காட வேண்டினன். நான் இசைந்தேன். அப்போது, என் கட்சிக்காரர் யாரென்று எனக்குத் தெரியாது. விவரங்கள் அறிவதற்காக நான் சிறைக்குச் சென்றபோது தான், நான் யாருக்காக வழக்காடப் போகிறேன் என்பது புரிந்தது. என்னைச் சிறையில் இரும்புத் தடிகொண்டடித்த இளைஞன் அவன். என்னைக் கண்டதும், அவன் அறியாக் குழந்தைபோல் அழுதுகொண்டு, 'நான் உங்களை அடித்துத் துன்புறுத்தினேன். எனக்கு உங்கள் முன் நிற்கவே நாணமாக இருக்கிறது. நான் என்ன பிராயச்சித்தம் செய் வேன்!'' என்று கரைந்தான்.

'போனதெல்லாம் போகட்டும். இப்போது வழக்கு பற்றிப் பேசுவ தற்காக நான் வந்திருக்கிறேன்' என்று அவனைத் தேற்றினேன். விசாரணைக்குப் பிறகு பிரதிவாதி குற்றவாளி என்று தெளிவாயிற்று. தீர்ப்பு அறிவித்தபோது நீதிபதி கூறினார்:

'ஆதரவற்ற நிரபராதிகளைப் பிரதிவாதி மிருகத்தனமாக உடலுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் துன்புறுத்தியவன் என்பது கோர்ட்டாரின் முன் துலங்கியிருக்கிறது. இதற்குரிய தண்டனை, பத்தாண்டுக் கடுங் காவல். அதைக் குறைப்பதற்குத் தகுந்த காரணம் ஒன்றுமில்லை. எனினும், நான் ஒரு விஷயத்தை ஊன்றிப் பார்க்கிறேன். பிரதிவாதியின் கையால் துன்பத்துக்குள்ளாகியிருந்தும், அதைப்பற்றிச் சிறிதும் எண்ணிப்பாராமலே அவனுக்காகக் கோர்ட்டில் வழக்காட முன் வந்த வழக்குரைஞரின் பண்பைக் கருதி, குற்றவாளிக்கு இருபத் தோரு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்.' மிகுந்த ஆறுத லுடன் குற்றவாளி அத் தீர்ப்பைச் செவியுற்றான். அந்த நிலையில் அவனுக்குக் கிடைத்த தண்டனை மிகக் குறைந்ததென்பதில் ஐயமில்லை.

ஒரு சிந்தனையாளர் நல்கிய அறிவுரை எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. அதைக் கூறுகிறேன்:

'உங்களுக்கு எவருடனேனும் வெறுப்புத் தோன்றினால், அந்த உணர்வு உங்களுடைய மனிதத் தன்மைக்கே ஊறு செய்வதாகும். அதன் பலன், உங்களை மட்டுமன்றி, உங்கள் குடும்பத்தினரையும், உங்களுடன் தோழமை கொண்டவரையும் பாதிக்கும். பிறரை வெறுப் பதினால் யாதொரு பயனுமில்லை. பின் யாது செய்தல் வேண்டும்? தீங்கிழைப்பவரை வெறுக்காமல் அவருக்கு மன்னிப்பளியுங்கள். அப்போது உங்கள் மனதில் அமைதியுண்டாகும். உங்களுக்கு ஆற்றல் பெருகும்.'

1946ஆம் ஆண்டின் இறுதியில் நான் தாயகம் வந்தபோது, நான் மேலும் சிங்கப்பூரில் அதிக நாட்கள் தங்காமல் தாயகம் திரும்பிவிட

வேண்டும் என்று நண்பர்கள் வேண்டினர். அவர்கள் கூறுவதற்கு முன்பே எனக்கே அவ்வாறு ஓர் எண்ணம் இருந்தது. இருபது ஆண்டுக் காலத்துக்கு முன், பொருளைத் தேடி நான் தாயகம் விட்டுச் சென்றேன். ஆனால் அதற்கு மாறுகக் கடன் தொல்லையிலேயே நான் நெடுங்காலம் உழலவேண்டியிருந்தது. கடனை அடைப்பதற்குச் சிறிது காலமாயிற்று. பணம் சம்பாதிக்கத் தொடங்குகையில் போர் மூண்டது. போருக்குப் பிறகு வருமானத்தைப்பொறுத்த அளவில் நல்ல காலமாகத்தானிருந்தது. ஆனால் எனக்கு அங்கே தங்கிவிட விருப்ப மில்லை. என் மனம் தாய்நாட்டிலிருந்தது. விரைந்து திரும்பவேண்டும் என்ற ஆர்வம் நாளுக்கு நாள் பெருகியது. உறவினரும் நண்பர்களும் என்னுடைய விவேகமின்மை குறித்துப் பேசாமலில்லை. குடும்பச்சுமை அதிகமாகத்தானிருந்தது. அதைச் சமாளிக்கும் ஆற்றல் குறைவுதான். ஊர் திரும்பி யாது செய்யப்போகிறேன்? பொது வாழ்வில் பங்கு கொள்ள ஆர்வமிருந்தாலும்கூட, என் சொந்தக் கருத்துக்கொப்ப நான் நடக்க வேண்டுமானால், செலவுக்குப் பிறரை அணுகலாகாது. இதெல்லாம் சிந்தனைக்கு உகந்ததாகவே இருக்கின்றன. ஆனால் நடை முறைக்குகந்த வகையில் எனக்குச் சிந்தனை செய்யத் தெரியவில்லையே? என்னை ஊர் திரும்பும்படி அழைத்த நண்பர்கள் என் பொருளாதார நிலையை நன்கு அறிந்திருக்க மாட்டார்கள். சிங்கப்பூர் சென்றவரனைவரும் பொருள் தேடி வருகின்றனர். அவ்வாறே நானும் வன்மையுடையவனாக இருப்பேனென்று அவர்கள் கருதியிருந்தனர். நான் இன்னொரு நிலையிலிருக்கிறேன் என்பதை அவர்களுக்கு அறிவுறுத்தவும் நான் விரும்பவில்லை. எவ்வாறுயினும் நான் நாடு திரும்ப உறுதி செய்துகொண்டேன். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலானேன். இருபதாண்டுக்காலம் பணிபுரிந்து வளர்த்ததோர் அலுவலகம்தான் நான் சேர்த்திருந்த சொத்து. அதை வேறொருவருக்கு விற்க முடிந்தால், அத் தொகையை எனது சேமிப்பாகக் கருதலாம். அதற்குரிய வசதி எனக்குக் கிடைத்தது. ஆனால் கல்விப் பயிற்சி பெற என் மகனை வெளிநாட்டுக்கு நான் அனுப்பியிருந்ததால், அந்தச் செலவுக்கு அத் தொகை தேவையாக இருந்தது. அவன் படிப்பு நிறைவேற அது போதாமல் கடனும் வாங்க வேண்டியிருந்தது மலேயாவில் இருந்து நான் திரும்புகையிலும் அவ்வகையில் ஒரு கடனாளியாகவே இருந்தேன். வாழ்க்கையின் பெரும்பகுதி கடன்பட்ட வனாகவே இருக்க வேண்டிய நிலையினின்றும் விடுபட்டு ஒரு நிலையை எய்துவதற்கு நான் பெருமுயற்சி செய்யவேண்டியிருந்தது. என்றாலும், கடன்பட்டவன் என்ற நிலையில் அப்போதைக்கிப்போது மோசமில்லை என்று கொள்ளலாமே ஒழிய, முழு விடுதலை கிடைக்கவில்லை.

டிக்கன்ஸின் நாவலில் வரும் 'மிக்காபர்' பாத்திரத்தைப் போன்று நல்ல காலம் வருமென்று காத்திருக்கிறேன். ஆனால் அது குறித்து எனக்கு மனத்தாங்கலேதுமில்லை. என்றாலும் செலவைக் கட்டுக்குள் அடக்குவதற்கு இயலவில்லை. பலவாறு முயன்றிருக்கிறேன். குறிப்பிடத் தகுந்த பயன் விளையவில்லை. பயன் விளையுமோ என்பதும் ஐயமே.

இருபது ஆண்டுக்காலம் வாழ்ந்துவந்த சிங்கப்பூரிலிருந்து விடை பெற்று வருவது கடினமாகத்தான் இருந்தது. அங்கிருந்து கிளம்புவதற்குப் பல நாட்கள் முன்பிருந்தே எங்களுக்கு விருந்துபசாரங்கள் தொடர்ந்துகொண்டிருந்தன. கடைசியில், 'காதே' ரெஸ்டாரெண்டில் எல்லாச் சமுதாயப் பிரிவினரும் ஒன்று சேர்ந்து எங்களுக்களித்த விருந்துபசாரம் கண்டு என் மனம் நன்றிப்பெருக்கால் கரைந்தது. நீதிபதிகள், பாரிஸ்டர்கள், வியாபாரிகள், அதிகாரிகள் எல்லோரும் மிகுந்த அன்புகொண்டுவந்தளித்த அந்த விருந்துபசாரம் எனது இனிய நினைவுகளில் ஒன்றாக இப்போதும் பசுமையாக இருக்கிறது.

வழக்குரைஞன் என்ற நிலையில் நான் இறுதியாகச் செய்த பணியும் குறிப்பிடத் தகுந்தது. போர் முடிந்த பின்னர் இந்தியப் பிரதிநிதி சிங்கப்பூரிலேயே நிலையாகத் தங்கலானார். பிரதிநிதியின் இல்லத்துக்கும் அலுவலகத்துக்குமாக இரு பெரிய கட்டடங்களை அரசாங்கம் வாங்குவ தற்கு முன் வந்தது. அதற்கான பத்திரங்களைப் பரிசீலனை செய்து, முடிவான பத்திரங்களைத் தயாரித்து விற்பனையை நிறைவேற்றி வைத்தேன். சிங்கப்பூரை விட்டு வரும் நாளில், இந்தியாவுக்கும் மலேசியாவுக்குமிடையே இருந்த தொடர்பு புதிய நிலையில் வளர்ச்சி பெறுவதற்கானதோர் பணியில் நான் ஈடுபட நேர்ந்ததை எண்ணி மகிழ்ச்சி கொண்டேன்.

1948ஆம் ஆண்டு, ஜூலை பதினேழாம் நாள் சிங்கப்பூரிலிருந்து விடை பெற்றேன். துறைமுகத்தில் என்னை வழியனுப்ப வந்திருந்த நண்பர்கள் ஒவ்வொருவரிடமும் நான் விடைபெற்றுக் கப்பலில் ஏறினேன். கப்பல் கிளம்புவதற்கான நேரத்துக்குரிய சங்கு ஒலிக்கலாயிற்று. கலம் மெல்ல மெல்ல அசைந்தது. கரையில் நின்ற நண்பர்களை நோக்கிய வண்ணம் நான் சிறிது நேரம் மேல்தட்டில் நின்றேன். வாழ்க்கையே நண்பர்களைக் கண்டு பழகுவதும் பிரிவதுமான தொடர் நிகழ்ச்சிதா னென்று கூறுகின்றனர். நண்பர்களின் பிரிவு ஆற்றுமைகூடியதுதான். என்றாலும், பிரிவு என்றென்றைக்குமானதென்ற உணர்வுடன் பிரியும் போது, நெஞ்சம் தாங்கொணா உணர்ச்சிக்கடிமையாகிறது.

துறைமுகத்தை விட்டுக் கப்பல் கடலில் செல்கையில் எழும்பியும் விரிந்தும் மடிந்தும் விழும் அலைகள் அதைத் தாலாட்டலாயின. இருபதாண்டுக்கால அநுபவங்களைப்பற்றி எண்ணியவாறே நான் அங்கு

நெடுநேரம் நின்றேன். என் சிந்தனைகளினின்றும் நான் விடுபட்டபோது சிங்கப்பூர் என் கண்களிலிருந்து அகன்றுவிட்டது. என்றாலும், மேல் தட்டில் உலவும்போதும், உணவு கொள்ள அமரும்போதும், நண்பர் களுடன் உரையாடும்போதும் சிங்கப்பூர் என் மனதினின்றும் அகலவில்லை.

கப்பலில் பயணம் செய்வதில் எனக்கு மிகுந்த விருப்பம் உண்டு. விமானப் பயணத்தைக் காட்டிலும் இதில் சிறப்பு உண்டு. பலதரப் பட்ட மக்களை ஒன்று சேரக் காணமுடியும். சுயநலப் போர்வழிகளையும் தன்னலமற்றவனையும், அதிர்ஷ்டசாலியையும் அதிர்ஷ்டமற்றவனையும், சாமர்த்தியம் வாய்ந்தவனையும் அசடனையும், கூட்டத்தை விரும்பி அளவளாவுபவனையும் கூட்டத்தை வெறுத்துத் தனிமையை நாடு பவனையும் கப்பலில் காண இயலும். கால உணர்வு, பிறர் வசதிகளை எண்ணிச் செயலாற்றும் மனப்பான்மை, தூய்மையையும் ஒழுங்கையும் கடைப்பிடித்தல் ஆகிய அரும்பண்புகளைப் பயிலுவதற்கான சந்தர்ப் பங்கள் கப்பற்பயணத்தில் வாய்க்கும்.

சிங்கப்பூரை விட்டு மூன்று நாட்களாயின. வங்கக் கடலில் கப்பல் தன் இலட்சியத்தை நோக்கிப் பயணம் தொடர்கிறது. காலை உணவு கொண்டபின், மேல் தட்டில் நின்று நுங்கும் நுரையுமாக ஒன்றன் பின் ஒன்றுகப் பல்வேறு நீள-அகலங்களில், ஆற்றலில், எழும்பிவிழும் அலைகளின்மீது கதிரவனின் ஒளிதட்டும் மனதை ஈர்க்கும் காட்சியில் கருத்தூன்றி மகிழ்ந்துகொண்டிருந்தோம் நாங்கள். ஆழ்கடலின் விரிக் கொணைப் பெருமைகளைப்பற்றிச் சிந்தனை செய்யாதவர்தாம் யார்? பெரிய பெரிய பாறைக் குன்றுகளையும், மெல்லிய மணல் துகளையும் தன்னுள்ளே கொண்டிருக்கிறது. சிறியதும் பெரியதும் அதற்கு வேறு பாடில்லை. விரிந்து பரந்ததோர் பேராற்றல்-நெளியும் புழுவினிடத்தும் சிந்திக்கும் சக்திவாய்ந்த மனிதனிடத்தும் விளங்கும் அற்புதத்தைப் போன்றதுதான் அதுவும். 'அந்தப் பேராற்றலின் ஓர் துளியே நாம்' என்று எண்ணும்போது, வாழ்க்கையை ஓர் புதிய கோணத்தில் கூர்ந்து நோக்கி நம்மால் ஆராய இயலுகிறது. வெறுப்பும்-அன்பும், உயர்வும்-தாழ்வும், இன்பமும்-துன்பமும், இறப்பும் – பிறப்பும், எல்லாம் எவராலும் மாற்றுதற்கியலாததோர் நியதிக்குட்பட்டிருக்கிறதன்றே! இதை நன்கறிந்திருந்தும் நாம் தவருன செயல்களில் ஈடுபடுகிறோம். அவரவர் குற்றத்துக்குப் பிறரைப் பழிக்கிறோம். பொருளற்ற மதிப்பு களுக்கும் பதவிகளுக்குமாக வீணுக வருந்தித் துன்புறுகிறோம். பகை வராகத் தோற்றுபவர்களை அழித்துவிடத் துடிக்கிறோம். நிறைவற்ற தோர் ஆசைச் கொடியில் இடைவிடாது அலைப்புண்டு மாய்கிறோம்.

ஒரு நாள் இதற்கெல்லாம் பட்டென்று ஓர் இறுதியான முடிவு வந்து விடுகிறது. வாழ்க்கை அத்துடன் இல்லாததாகிவிடுகிறது. பின்..... பின்..... என்ன?

கப்பலின் குழல் இடைவிடாமல் ஒலிக்கிறது. பணியாளர் அங்கு மிங்கும் ஓடுகின்றனர். கப்பலின் வேகம் குறைகிறது. கடல் நடுவே மெல்ல நிற்கிறது. படகுகளை விரைந்து இறக்குகின்றனர். என்ன நேர்ந்துவிட்டது? ஒரு பிரயாணி, கடலில் வீழ்ந்துவிட்டான். அறியாமல் நழுவிவிட்ட விபத்தோ, வேண்டுமென்று விழுந்தானே? யாரறிவார்? அவனை மீட்கப் பணியாளர் அரும்பாடு பட்டனர். நான்கைந்து சிறு படகுகளிலேறி அவர்கள் சுற்றுமுற்றும் அலைந்து பார்த்தனர். அந்த அதிர்ஷ்டமற்றவனைக் கண்டுபிடிக்க இயலவில்லை. அவர்கள் கலம் திரும்பி, படகுகளை உயர்த்திக் கப்பலில் பிணைத்தனர். பயணம் தொடர்ந்தது. நான்கு நாட்கள் சென்றபின் நாங்கள் சென்னையை அடைந்தோம்.

பல பழைய நண்பர்கள் என்னை வரவேற்கச் சென்னைத் துறையில் காத்திருந்தனர். அன்று மாலை, ராஜாஜி ஹாலில் மலையாளிகள் பலர் சேர்ந்து எனக்கு ஓர் வரவேற்பளித்தனர். அந்நாள் சென்னை மந்திரி சபையில் ஒரு மந்திரியாக இருந்த கோழிப்புரத்து மாதவ மேனன்தான் முன்னின்று அதை ஏற்பாடு செய்திருந்தார்.

கப்பலிலிருந்து இறங்கிய உடனே எனக்கு, 1948ஆம் ஆண்டு ஜூன் இருபத்து ஏழாம் தேதி, மாத்ரு பூமி டைரக்டர்கள் அனுப்பியிருந்த தோர் கடிதம் கிடைத்தது. அதில் கண்ட செய்தி இதுவே:— ''தாய் நாடு திரும்பி வரும் 'மாத்ரு பூமி'யின் முதல் ஆசிரியர் ஸ்ரீ கே. பி. கேசவ மேனனை 'மாத்ரு பூமி' டைரக்டர்கள் வரவேற்கின்றனர். கூடிய விரை வில், அவரை 'மாத்ரு பூமி'யின் ஆசிரியர் பொறுப்பை வந்து ஏற்றுக் கொள்ள வேண்டுமாய்க் கோருகிறோம்.''

மாத்ருபூமியுடனான என்னுடைய உறவு, இவ்வாறு மீண்டும் புதுப் பிக்கப்பட்டது. கேரளத்தின் பொதுவாழ்வில் பங்குகொள்ளும் சந்தர்ப்பமும் எனக்கு வாய்த்தது.

40

மீண்டும் பத்திரிகாசிரியர்

1948ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் தேதியன்று நான் மீண்டும் 'மாத்ருபூமி' ஆசிரியனாகப் பொறுப்பேற்றுக்கொண்டேன். பன்னிரண்

டாண்டுக்காலம் அதன் ஆசிரியராக இருந்த ஸ்ரீ கே. ஏ. தாமோதர மேனன் ஜூலை இருபத்தைந்தாம் தேதி அப் பதவியினின்றும் விலகினர். சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் நின்று பங்கு கொண்ட மாத்ருபூமியை அருந்திறனுடன் நடத்திவந்த தாமோதர மேனன், பத்திரிகைத் தொழிலை விட்டுத் தீவிரமான நேர்முக நாட்டுப்பணியில் இறங்கத் தீர்மானம் செய்தார். விஷயங்களை நன்கறிந்து, சுயமாகச் சிந்தனை செய்யவும், ஆற்றலுடன் எழுதவும் உரையாற்றவும் திறமை வாய்ந்த அவருக்கு, கேரளத்தின் பொதுத்துறையிலும் நல்ல செல் வாக்கு இருந்தது. இலட்சியங்களைக் கூறி வெறும் வார்த்தைப் பந்தல் போடுவது அவருக்குப் பிடிக்காத செயல். நடைமுறையில் கொள்ளக் கூடிய செயல்முறைகளைப் பற்றியே அவர் பேசுவார். நான் சிங்கப் பூரிலிருந்து திரும்பி வந்தபிறகு, பொதுப்பணிகளில் பங்கு பெற, எனக்கு மனமொன்றி உதவிய நண்பர் தாமோதர மேனன். அவருடைய கருத்துகளுடன் எக்காலமும் எனக்கு இணக்கமிருந்ததாகச் சொல் வதற்கில்லை. ஆனால் சிந்திப்பதற்குரிய விஷயங்களை தாமோதர மேனன் சுட்டிக்காட்டும் தன்மை போற்றற்குரியதாகும்.

எதிர்க்கட்சியைச்சார்ந்தவருடன் மனமொன்றித் தோழமை புலர்த்து வதும் எல்லோராலும் இயலாத செயல். நமது சமூக வாழ்வில் பெரும் பாலும் இப் பண்புக் குறைவைக் காண்கிறோம். ஆனால் தாமோதர மேனன் அத்தகையவரல்லர். எதிர்க்கட்சியைச் சார்ந்தவரோடும் மாற்றுக்கருத்துக் கொண்டவரோடும், அவரால் நட்புறவோடு பழக முடியும்.

ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, 1948ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் தேதி வெளியீட்டில் நான் எழுதினேன். 1925ஆம் ஆண்டு ஜனவரி முப்பத்தொன்றும் தேதி மாத்ருபூமியின் ஆசிரிய னென்ற நிலையிலிருந்து மாத்ருபூமி வாசகர்களிடம் விடைபெற்றுக் கொண்டேன். அந்நாளைய தலையங்கத்தில், " 'இப் பணியை மீண்டும் தொடர்ந்தாற்றும் பேறு எனக்குக் கிடைக்குமானால் எனது இதயம் நிறைந்த நன்றிக்கு அது காரணமாக இருக்கும்' என்று விவரித்திருந் தேன். அந்தப் பேறு எனக்கு இந்நாள் கிட்டியிருக்கிறது. நான் குழந்தைப் பருவத்தில் விட்டுச் சென்ற மாத்ருபூமி, இந்நாளில் வாலிபப்பருவத்தை எய்தியிருக்கிறது. அந்நிய ஆதிக்கத்தினின்று இந்திய நாடு விடுதலை பெறுவதற்கு, மாத்ருபூமியும் தனக்குரிய பணியை ஆற்றியிருக்கிறதென் பதை நினைக்கையில் நெஞ்சம் கனிந்து நிறைகிறது. தனிமனிதர், சமுதாயம், நாடு என்று பல்வேறு துறைகளிலும் உறுவதற்கான ஓர் வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு ஓர் பத்திரிகை இயங்க வேண்டும். இந்த வகையில், இரு முக்கிய விஷயங்களை நினைவில்

கொள்வது நலம். (1) பத்திரிகைத் தொழிலை, ஏனைய வணிகத் தொழில்களைப்போன்று 'வாணிபம்' என்று சிறிதும் கருதலாகாது. வரவையும் செலவையும் கட்டுக்குள்ளாக்கி ஒழுங்கு செய்யாமலிருந் தால் எந்த வியாபாரமும் அதிக நாட்களுக்கு நிலைப்பதற்கில்லையல்லவா! வியாபாரத்தின் முக்கிய நோக்கம் லாபமே. ஆனால், பத்திரிகைத் தொழிலின் தலையாய நோக்கம் அதன்று. பொதுமக்களுக்கான சேவையே பத்திரிகையின் தலையாய நோக்கம். (2) கட்சி வாதத்திலோ குறுகிய மனப்பண்பிலோ சிக்கி, அதன் விளைவான நச்சுத்தீக்கு இட மளிக்காமல் பத்திரிகையைக் கருத்துடன் பேணவேண்டும். பொது மக்களுக்காற்றும் தொண்டையே குறிக்கோளாகக் கொண்டு, ஒரு சாதாரண மனிதனின் எல்லா நலங்களையும், சுதந்திரத்தையும் பெருக்கு வதற்கானதோர் சக்திவாய்ந்த நிறுவனமாக்கி, மாத்ருபூமியை மேலும் மேலும் வளரச்செய்வதற்கு நான் இடைவிடா முயற்சி செய்வேன்.''

இம் முயற்சியில் ஏதேனும் வெற்றி கிடைத்திருக்கிறதென்று நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள இயலுகிறதென்றால், அதற்கு இப் பெரிய அமைப்பில் பணியேற்றிருக்கும் டைரக்டர்கள் முதல், மிகவும் தாழ்ந்த நிலையிலிருக்கும் பணியாளர் வரையிலும் ஒருங் கிணைந்து நல்கும் ஒத்துழைப்பே காரணமாகும். சிலர் தகராறுகளுக்கு வழிவகுக்கும் இயல்பினர்தாம். என்றாலும், நிறுவனம் வளர வளர, சந்தர்ப்பங்களும் பெருகி வருகின்றன. அதனால் குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு, கருத்தூன்றி, விவேகத்துடனும் தொலைநோக் குடனும், பத்திரிகையின் பொறுப்பேற்றவர்கள் செயலாற்ற வேண்டியது அவசியம்.

டைரக்டர்கள் அனைவரும் நெடுங்காலமாக எனக்குப் பழக்கமான நண்பர்கள்தாம்.

ஒத்துழையாமை இயக்க நாட்களிலேயே காரூர் நீலகண்ட நம்பூதிரிபாடு என்னோடு நெருங்கிய தோழமை கொண்டிருந்த உற்ற நண்பர். தோற்றத்திலும் தன்மையிலும் அந்நாளைக்கிந்நாள் ஒரு மாறுதலையும் நான் காணவில்லை. வயது எழுபது நிறைந்திருந்தும் இன்னும் உற்சாகம் கொண்டதொரு இளைஞரைப்போன்று பழகினர். மாத்ருபூமி கம்பெனி தோன்றிய நாளிலிருந்தே அவர் டைரக்டர்தாம். சிறிது காலம் மானேஜிங் டைரக்டராகவுமிருந்தார். மாத்ருபூமியின் வளர்ச்சி குறித்துக் கூறுகையில், சொந்தக் குடும்ப முன்னேற்றத்தைப் பற்றி உரையாடுவது போன்ற மகிழ்ச்சி அவர் முகத்தில் விளங்கக் காணலாம். பணிவும் மலர்ச்சியுமான பேச்சும், பழகு முறையும் அவருடைய தனிச் சிறப்புகள். இந்நூலை வெளியிடும் இந்நாள் அவர்

டைரக்டராக இல்லை எனினும் மாத்ருபூமியை அச்சிட்டு வெளியிடுபவர் அவரே. மாத்ருபூமியைப் பொறுத்த மட்டில் அவரது அன்புக்குக் குறைவேயில்லை.

அம்பலக்காட்டுக் கருணாகரமேனன், இன்னொரு டைரக்டர். மலபார் காங்கிரஸிலும் ஹரிஜன முன்னேற்றத்திலும் தொண்டாற்றிய மதிப்புக்குரியதொரு நண்பர். சட்ட மறுப்புக் கொள்கையில் நம்பிக்கை கொண்டு இயக்கத்தை ஆதரித்தாலும் சட்ட ஒழுங்கு மீறி நடக்க விரும்பாதவர். அந்தந்தப் பணிகளை அததற்குரிய முறையில் ஆற்ற வேண்டும் என்பது அவருடைய கொள்கை. இரக்கமும் நெகிழ்ச்சியும், ஒழுங்கான நடவடிக்கைகளுக்குத் தடையாக இருப்பதாக அவர் பொருமுவார். உண்மையொழுக்கத்திலும் செயல் திறனிலும் அவர் விளக்கிய அரும் பண்புகளை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

டி. வி. சுந்தரமய்யர் புகழ்பெற்றதொரு கிரிமினல் வக்கீல். புகழில் கொஞ்சமும் விருப்பமில்லாத மனிதர். தொடக்கநாளிலிருந்து இந்நாள் வரையிலும் ஒரு டைரக்டராக இருப்பவர். தம் கட்சிக்காரர்களுக்காக நீதிமன்றத்தில் இறுதிவரையிலும் போராடுவாரென்றாலும், டைரக்டர் கூட்டத்தில் போராடவோ வாதிக்கவோ விரும்பாதவர். வாத மில்லாத விஷயங்களை 'எக்ஸ்பார்ட்டே' வழக்குகளைப் போன்று ஒரு கணத்தில் முடிவு செய்துவிடலாம் என்று சுந்தரமய்யர் கூறுவார். பண விஷயத்தில் 'கருக்'கான மனிதர் என்றாலும், மாத்ருபூமிக்கான பொறுப்புகளை ஏற்கத் தயங்கமாட்டார்.

ஸ்ரீமதி ஏ. வி. குட்டி அம்மாளு அம்மா இன்னொரு டைரக்டர். கேரளத்தில் காங்கிரஸ் தொண்டாற்றிப் புகழ்பெற்ற ஒரு சில பெண்மணிகளிடையே உயர்ந்த நிலையை எய்தியவர். ஸ்ரீ கே. மாதவ மேனன் மற்றொரு டைரக்டர். இந்நாள், அவர் 'மாத்ரு பூமி' டைரக்டர் போர்டு தலைவராகவும், கம்பெனியின் இணை மானேஜிங் டைரக்டராகவும் இருக்கிறார். ஸ்ரீ வி. எம். நாயர் மானேஜிங் டைரக்டர். ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குகொண்டு நெடுங்காலமாகக் கேரள காங்கிரஸுக்குப் பழக்கமான மாதவமேனன் சென்னை மந்திரிசபையில் ஒருவராகவும் தொண்டாற்றினார். அடி நாளிலிருந்தே மாத்ருபூமி யுடன் அவர் தொடர்பு கொண்டவர். ஆசிரியராகவும் பொறுப்பேற் றிருந்திருக்கிறார். எனக்கு இளமைப் பருவத்திலிருந்தே பழக்கமானவர். டைரக்டர்கள் கூடும்போது, அவர் மிக உற்சாகம் கொள்வார். பல முறைகளில் மாத்ருபூமியின் வளர்ச்சிக்கான ஆதரவை நல்கியிருக்கிறார்.

நான் சிங்கப்பூரிலிருந்து திரும்பி வந்த பிறகு, சிறிது காலம் டாக்டர் சந்துவும் மாத்ருபூமி டைரக்டராக இருந்தார். உடல்நலக் குறைவு காரணமாக அந்தப் பதவியை அவரால் தொடர்ந்தேற்க முடியவில்லை.

மாத்ரு பூமி தோன்றுவதற்கு முன்பிருந்தே பணியாற்றியவர் இன்னொரு டைரக்டர், ஸ்ரீ கேசவன் நாயர். அண்மைக்காலத்தில் டைரக்டர் போர்டில் உறுப்பினரானவர் அவர். ஆனால் அதற்கு முன்பிருந்தே மாத்ரு பூமியின் வளர்ச்சியில் உற்சாகமாக ஈடு பட்டிருக்கிறார்.

ஸ்ரீ ஜின சந்திரனும், கே. குமாரன் நாயரும், குட்டிகிருஷ்ண மேனனும் டைரக்டர் குழுவின் மற்ற உறுப்பினராவர். காங்கிரஸில் முழு மூச்சுடன் பணியாற்றிய ஸ்ரீ ஜினசந்திரன், சிறிது காலம் பார்லிமெண்ட் உறுப்பினராக இருந்தார். மாத்ருபூமியின் முதல் மானேஜிங் டைரக்டரும், அதன் அடிநிலை அமைப்பாளரில் ஒருவருமான கே. மாதவன் நாயருடைய மகன், குமாரன் நாயர். கே. குட்டி கிருஷ்ண மேனன் டைரக்டர் குழுவில் சிறிது காலமாகத்தான் உறுப்பினராயிருக்கிறார்.

இருபத்து மூன்று ஆண்டுகள் சென்ற பிறகல்லவா நான் மீண்டும் ஆசிரியப் பொறுப்பேற்றிருக்கிறேன்! ஒன்றிரண்டு பேரைத் தவிர தொடக்ககாலத்தில் என்னுடன் பணிபுரிந்தவர் யாரும் நான் திரும்பி வந்த பிறகு மாத்ருபூமியில் இல்லை. டி. பி. ஸி. கிடாவைத் தவிர, ஆசிரியப் பகுதியில் என்னைப் பொறுத்தவரை எல்லோரும் புதியவரே. ஆனால், பல நாளைய பழக்கத்தினால் மட்டுமே வேரூன்றக்கூடிய நட்புறவு மிக விரைவில் அவர்களுடன் என்னைப் பிணைத்தது. பத்திரிகைத் தொழிலிலிருந்து நெடுங்காலம் விடுபட்டிருந்த எனக்கு அவர்களுடைய உதவியும் அறிவுரையும் மிகுந்த நன்மை பயந்தன.

கேரளத்தின் தேசீய அரங்கிலும் பொது வாழ்விலும் பல புதிய கருத்துகள் தோன்றியிருந்தன. பல புதிய தலைவர்கள் உருவாகியிருந்ததையும் நான் கண்டேன். நெடுங்காலம் தாய்நாட்டிலில்லாமலிருந்த எனக்கு எல்லோரையும் பற்றி அறிவதற்கு என்னுடைய தோழர்களின் உதவி இன்றியமையாததாக இருந்தது. பத்திரிகையைச் சிறந்த முறையில் நடத்துவதற்கும் அவர்கள் உதவி தேவையாயிருந்ததென்பதைக் கூறவும் வேண்டுமா?

காங்கிரஸின் லட்சியத்தை நிறைவேற்றுவதற்கான கருவியாகவே மாத்ருபூமி விளங்கும் என்பதுதான் மாத்ருபூமியின் தொடக்ககாலக் குறிக்கோளாக இருந்தது. சுதந்திரப் போராட்ட நாட்களில், அக் கொள்கைக் கிசையப் பத்திரிகை நடத்துவதில் தொல்லைகளேதுமில்லை. சுதந்திரம் பெற்ற பிறகு, காங்கிரஸின் லட்சியம் மாறிவிட்டது. பொதுநலம் வளர்ந்ததோர் நாட்டை உருவாக்குவது அதன் இப்போதைய குறிக்கோள். அதற்கேற்ப மாத்ருபூமியின் கொள்கைகளும் உருவாயின. ஆனால் அதைத் தொடர்ந்து கொண்டு செல்கையில்

சில சிக்கல்கள் தோன்றின. காங்கிரஸின் லட்சியத்துக்கு ஆதரவாக இருப்பதன் பொருள், காங்கிரஸ் அரசாங்கம் செய்வதெல்லாம் சரி என்று தலையாட்டுவதுதான் என்று கொள்ளலாகாது. ஒரு பொது நல மேன்மை மிகுந்த நாட்டை உருவாக்கும் மாபெரும் லட்சியத்தை நோக்கி நம்மைக் கொண்டுசெல்லும் பாதையில் அரசாங்கம் செல்ல வில்லை என்று தோன்றக்கூடிய போக்கை, அது காங்கிரஸாக இருந்தாலும் கண்டிப்பதற்கு மாத்ருபூமி தயங்கியதில்லை. கட்சிப் பற்றுக்கு அப்பால் நின்று உண்மை தெளியும் கண்ணோட்டத்துடன் செய்திகளை வெளியிட்டு, நடுநிலை விமரிசனம் மேற்கொண்டு, மாத்ருபூமி ஓர் உயர்ந்த தன்மையுடன் இயங்கிவந்திருக்கிறது. மாத்ருபூமியின் செல்வாக்குக்கு இந்நிலையே தலையாய காரணம்.

மாத்ருபூமி கம்பெனியின் தனிச் சிறப்பைப் பற்றியும் பலர் அறியார். கம்பெனியின் மூலதனம் இப்போது பதினேழாயிரம் ரூபாய்க்கு மேலில்லை. அதன் வாயிலாகப் பெறும் லாபம் ஆண்டுதோறும் பெருகி வருகிறது. ஆனால் இதை அப்படியே பங்குகளுக்குரியவர்கள் பகிர்ந்து கொள்வதில்லை. லாபத்தில் மிகவும் சிறியதோர் பகுதியையே அவர்கள் ஏற்கின்றனர். அந்தப் பொருளை, மாத்ருபூமியின் வளர்ச்சிக்கே செலவழிக்கிறோம். இந்தப் பெரும் நிறுவனம் இவ்வாறுதான் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இந்நாள், தரமானதோர் செய்திப் பத்திரிகை நடத்துவதற்குத் தேவையான இயந்திர சாதன வசதிகளனைத்தும் மாத்ருபூமிக்குச் சொந்தமாக இருக்கிறது. பணிபுரிபவர்களுக்கு நியாயமான சம்பளம், குறித்த நாளில், தவறுமல் வழங்கப்பெறுகிறது. 'போனஸ்', 'பிராவிடண்ட் ஃபண்ட்', 'கிராச்சுவிடி', 'பென்ஷன்' எல்லாம் உண்டு. அரசாங்க அலுவலகங்களிலுள்ள லீவு வசதியும் மாத்ருபூமி ஊழியர்களுக்கு இருக்கிறது. மாத்ருபூமி, லாபம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் அமைக்கப்பெற்ற வியாபார நிறுவனமல்ல—தொண்டாற்றுவதற்காக அமைக்கப்பெற்றதோர் தேசீய அமைப்பு, நிறுவனம். இந்திய செய்திப் பத்திரிகைகளுக்கிடையே மாத்ருபூமி ஓர் உயர்ந்த மதிப்பைப் பெற்றிருக்கிறதென்றால், அதற்கான காரணங்கள் இவையே.

பாரதப் பிரதமர் நேரு, 1955ஆம் ஆண்டு டிசம்பர் இருபத்தெட்டாம் தேதி மாத்ருபூமி அலுவலகத்துக்கு வருகை தந்தார். அந்நாளில் அவர் கூறினார்:

"'மாத்ருபூமி' இப் பிரதேசத்துக்குரிய நாளிதழ்தானென்றாலும், இது இந்தியா முழுவதும் அறிந்திருக்கக்கூடியதோர் பத்திரிகையாகத் திகழ்கிறது. இந்தப் புகழார்ந்த தினத்தாள், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பணியாற்றியிருக்கிறது. மேலும் மக்களிடையே மிகுந்த புகழும் செல்வாக்கும் பெற்று மாத்ருபூமி நாளுக்கு

நாள் வளர்ச்சி எய்துவது கண்டு நான் மகிழ்ச்சி கொள்கிறேன். கேசவ மேனன், தம்முடைய வரவேற்புரையில், மாத்ருபூமிக்கும் எனக்கும் தொடர்பாக இருக்கும் முக்கியமானதோர் செய்தியைக் குறிப்பிட வில்லை. என்னுடைய நூல்கள் மாத்ருபூமியில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கின்றன. இதனால், ஒரு நூலாசிரியன், வெளியீட்டாளர் என்ற தொடர்பு மாத்ருபூமிக்கும் எனக்குமிடையே பிணைப்பாக இருக் கிறது. மாத்ருபூமியை நான் வாழ்த்துகிறேன்.''

இவ்வாறுன பாராட்டுரைகளை, மாத்ருபூமி, பல தலைவர்களிடமிருந்து பெறும் பேறும் பெற்றிருக்கிறது.

மாத்ருபூமி இவ்வுயரிய மதிப்பைப் பெற பலரும் உழைப்பை நல்கி யிருக்கின்றனர். காலம் சென்ற பி. ராமுண்ணி மேனன், கே. கேளப்பன், குஞ்ஞராமபதியார், பி. நாராயணன் நாயர், எம். கே. ராஜா, கே. ஐ. தாமோதர மேனன், ஸி. எச். குஞ்ஞப்பா ஆகியோர் ஒவ்வோர் தருணத்தில் மாத்ருபூமியின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றிருந்திருக் கின்றனர். அதன் தனித்தன்மையை உருவாக்கப் பாடுபட்டிருக் கின்றனர். மாத்ருபூமியின் இணையாசிரியர் என்ற நிலையில் ஸ்ரீ குஞ்ஞப் பாவின் பணி இன்னும் தொடர்ந்துவருகிறது. கேரளப் பத்திரிகை யாளரிடையே, குஞ்ஞப்பாவைப் போன்று பழக்கமும் திறமையும் இணைந்தவர்கள் மிகச் சிலரே. அனைவரும் படித்து மகிழக்கூடிய உரை நடைப்பாணி, அவருக்கே உரிய சிறப்பு. ஆங்கிலச் சொற்களின் பொருளும் நோக்கமும் அணுவளவும் சிதையாது அவற்றைத் தனி மலையாளத்தில் வழங்கக்கூடிய திறமையுடையவர். இந்திய தரிசனம், பிளவற்ற பாரதம், சுயசரிதம் (நேரு) முதலிய நூல்களின் மொழி பெயர்ப்புகளின் உரைநடையில் அவருடைய தனிப்பாணி அழகைத் தெளிவாகக் காணலாம்.

ஆசிரியப் பகுதியில் பணியாற்றிய சில முக்கியமான நண்பர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் வாரப் பதிப்பின் பொறுப்பேற்றிருக்கும் ஸ்ரீ என். வி. கிருஷ்ண வாரியரைப் பற்றிக் கூறுமலிருக்க இயலாது. சிறந்த புலமை வாய்ந்தவரும், எழுத்தாற்றல் மிகுந்தவருமான வாரியர் எந்த விஷயத்தையும் வெகு நுட்பமாகக் கிரகித்துக்கொள்ளும் ஆற்ற லும் மிகுந்தவர். மிகவும் நெருடலான விஷயங்களைக்கூட, வெகு விரைவில் தெளிவாகப் புரிந்துகொண்டு, பிறர் புரிந்து கொள்ளும் வண்ணம் வழங்கும் அருந்திறனுண்டு, அவருக்கு. மேலும், பல விஷயங் களைக்குறித்தும் சில உறுதியான கருத்துகள் கொண்டவர். அவருடைய கருத்துகளுடன் இணங்காதவரும்கூட, ஒரு தேர்ந்த புலவர் என்ற நிலையிலும், சிந்தனையாளர் என்ற நிலையிலும் கிருஷ்ணவாரியரை மறுக்க இயலாது.

மிகுந்த திறமையும் துடிப்பும் வாய்ந்த இளைஞர் பலர் மாத்ருபூமி ஆசிரியக் குழுவில் பணியாற்றி வந்தனர்.

ஆனால், மாத்ரு பூமியின் உயிர்நாடியாக விளங்கியவர், அதன் மானேஜர் ஸ்ரீ என். கிருஷ்ணன் நாயர்தான். அசாதாரணத் திறமையும் அளவற்ற பணிவும் ஒருங்கிணைந்ததொரு அரிய மனிதர் அவர். அவருடைய தனிச்சிறப்புகளை, நெருங்கிப் பழகியவர்களால் மட்டுமே அறிந்துகொள்ள இயலும். எழுத்துப்பொறுக்கி அச்சுக்கோப்பதி லிருந்து, ரோட்டரி சுழற்றுவது வரையிலுமான அச்சுக்கூடத்தின் எல்லாப் பகுதிகளையும் தேர்ந்த அறிவுடனும் அநுபவத்துடனும் கிருஷ்ணன் நாயர் விவரிக்க வல்லவர். மாத்ருபூமி அச்சகத்திலும், பத்திரிகையின் ஏனைய பிரிவுகளிலும் பணியாற்றும் நடைமுறைகள் அனைத்தும் நன்கறிந்தவர். அச்சுப்பொறியின் எந்தக் கோளாறுகளும் பழுதுபார்ப்பதும் செப்பனிடுவதுமான விவரங்களிலும் அநுபவமிக்கவர். ஒரு சிறு வியாபாரியின் கூரிய நோக்கும், ஒரு குடும்பத்தலைவனுக்குரிய நன்மதிப்புக்குரிய நடத்தையும், ஒரு தொழிலதிபருக்குரிய செயல் பொறுப்பும், ஒரு சமயப்பிரசாரகனிடமே காணக்கூடிய உறுதிப்பிடியும் ஒருங்கமைந்ததொரு மனிதரைக் காண வேண்டுமென்றால், மாத்ருபூமி மானேஜர் கிருஷ்ணன் நாயரைத்தான் காணவேண்டும். இவ்வளவுக் கும், எந்த நேரத்திலும் கிருஷ்ணன் நாயரிடம் பரபரப்பைக் காண்பதற் கில்லை. ஒரு பணியும் அரைகுறையாகவும் இராது. அவரிடம் பணி புரிபவர்களை, அவர்களே அறியாதவண்ணம் கிருஷ்ணன் நாயர் அரவணைத்துச் செல்வார். இயலாததோர் செயலை, 'இயலாது' என்று மலர்ந்த முகத்துடன் கூறுவதற்குத் தயங்கமாட்டார். மாத்ருபூமி அலுவலகத்தில் பணிபுரிவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டவர் அவர். சில மனிதர்களுக்கும் சில நிறுவனங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு, அம் மனிதர்களைத் தவிர்த்து அந்த நிறுவனங்களைப்பற்றி நினைக்கவும் இயலாத அளவுக்குப் பிணைந்திருக்கும். மாத்ருபூமிக்கும் கிருஷ்ணன் நாயருக்கும் இடையேயுள்ள தொடர்பு, அத்தகையதாகும். செய்திகளை விரைந்து சேகரிப்பதற்கு இன்றியமையாததான 'டெலி பிரிண்டர்' பொறி வசதிகளை அமைக்கவும், பத்திரிகையை வெகு விரை வில் அச்சிட்டுத்தரும் 'ரோடரி பிரஸ்' நிறுவவும், இன்னும் இதுபோன்ற தேவையான பல வசதிகளை உடனுக்குடன் நிறுவுவதற்கும், புதுமைகள் கூட்டுவதற்கும் முன்நின்று முனைந்து ஆவன செய்தவர் கிருஷ்ணன் நாயர்தாம்.

இன்னொருவரைக் குறித்தும் இங்குக் கூறவேண்டும். அவர் மாதவப் பணிக்கர். மாத்ரு பூமிக்குப் பணிபுரிவதையே கருத்தாகக் கொண்ட வர்களில் மாதவப் பணிக்கரை மிஞ்சுபவர் யாருமில்லை. இருபது

ஆண்டுக்காலம், பணிக்கர், மாத்ருபூமியில் ஓர் 'அட்டெண்டர்' என்ற நிலையில் பணியாற்றினர். உண்மையொழுக்கும், செயல்பொறுப்பு, வேலைப்பாங்கு ஆகிய பண்புகளுக்கு உறைவிடமான பணிக்கர், முன் மாதிரியாகக் கொள்ளத் தகுந்ததொரு பணியாளராகத் திகழ்ந்தார். 1948ஆம் ஆண்டில் நான் மீண்டும் மாத்ருபூமியில் பொறுப்பேற்க வந்த நாளில், பணிக்கருக்கு ஐம்பது வயதிருக்கலாம். நீராடி, நெற்றியில் குறியிட்டு, தூய ஆடை அணிந்து, குறித்த நேரம் தவறாது பணிக்கர் அலுவலகத்துக்கு வந்துவிடுவார். பொறுப்பிலுள்ள பணிகளைச் செம்மையுறச் செய்வார். ஏதேனும் வாங்குவதற்குப் பணம் கொடுத்தால், பொருளுடன் கணக்கையும் கொண்டுவருவார். பணிக்கருக்கு உறவினரென்று யாரும் கிடையாது. அவருடைய குடும்பமே மாத்ருபூமிதான். நான் மீண்டுவந்து இரண்டாண்டுகள் சென்ற பின்னர், நோயாளியாகப் பணிக்கர் மருத்துவமனை செல்லும் வரையிலும் எனது இல்லத்தில்தான் தங்கியிருந்தார். ஒருநாள் இரவு பணிக்கருடைய இறுதிச்செய்தி கேட்டபோது, வீட்டிலும் அலுவலகத்திலும் ஈடுசெய்ய இயலாத அவருடைய இழப்பை எண்ணி மிக வருந்தினேன். ஒரு மனிதரை உண்மையாக உணர்த்துவது அவர் ஏற்றிருக்கும் பதவிக்குரிய பணியல்ல. இயல்பான அருங்குணங்களே ஒரு மனிதனின் உண்மை உயர்வை உணர்த்துகின்றன. அவ்வகையில் மாதவப் பணிக்கர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர்.

மாத்ருபூமியின் தொடக்க காலத்தைக் காட்டிலும் பல்வேறு வகைகளில் வாசகர் மாறியிருக்கின்றனர். அவர்களுடைய ரசனைகள் மாறியிருக்கின்றன; தேவைகள் மிகுந்திருக்கின்றன. செய்திகளை அறியும் ஆர்வம் பெருகியிருக்கிறது. எத்தகைய கருத்துடன் கூர்ந்து பணிபுரிந்தாலும் வாசகரைத் திருப்தி செய்வது எளிதாக இல்லை.

மாத்ருபூமி வெளியிடும் செய்திகளில் குறிப்பிடத்தகுந்ததோர் கணிசமான பகுதி தனிப்பட்ட எழுத்தாளர் அனுப்பும் கட்டுரைகளில் தொகுக்கப் பெறுவதுதான். அவை குறித்து வாசகரிடமிருந்து மறுப்புக் கடிதங்கள் வராத நாட்கள் மிகக் குறைவு. உண்மை தெளியும் கண்ணோட்டத்துடன், பொருள் நுட்பமறிந்து செய்திகளை அறிவிக்க வேண்டும் என்று கருத்துடன் முனைந்தாலும் சில சமயங்களில் அறிந்தும் அறியாமலும் செய்திகளின் தரமும் வண்ணமும் மாறிவிடுவதுண்டு. பிசகு நேர்வது எல்லா வகை மனிதருக்கும் இயல்பேயன்றே?

தனி மனிதரையோ, பொது அமைப்புகளையோ, நிறுவனங்களையோ சார்ந்த விஷயங்களில் மாத்ரு பூமி கையாண்ட கொள்கை தங்கள் கருத்துகளுக்கு இசைவாக இல்லை என்று கண்டபோது, சுயநலவாதிகள் அந்நிலையை மாற்றும்வண்ணம் மாத்ருபூமியைத் தங்கள் வசமாக்கிக்

கொள்ள முயற்சி செய்யாமலில்லை. சில பிரபல மனிதர்கள் தங்கள் செல்வாக்கை இதற்காகப் பயன்படுத்தவும் தயங்கவில்லை. ஆனால், பொது நலம்—சத்தியம்—இரண்டுக்கும் மாறுனதோர் நடைமுறையைக் கைக்கொள்ள மாத்ருபூமி ஒருபோதும் உடன்பட்டதில்லை. இதன் காரணம் கொண்டு சில நண்பர்களுடைய விரோதத்தையும் ஏற்க வேண்டி வந்திருக்கிறது. எனினும் 'செய்ய வேண்டியதைச் செய்தோம்' என்ற மனநிறைவு பெரிதும் ஆறுதலாக இருக்கிறது.

இந்நாளில், பத்திரிகையில் வெளியிடுவதற்கான விஷயங்களும், விவாதிக்கக்கூடிய பிரச்னைகளும் மிகுதியாகப் பெருகி இருக்கின்றன. பொதுவாக நடக்கக்கூடிய சம்பவங்களிலிருந்து தனித்து விளங்கக் கூடிய வகையில் செய்திகளைத் தரம் பிரித்துத் தேர்ந்து விவரிப்பதில் காட்டும் பாங்கும் முறையும்தான் பத்திரிகைக்குப் புகழும் செல்வாக்கும் பெருகக் காரணங்களாய் அமைகின்றன. எனினும் அவ்வாறு தேர்ந்து எடுத்த செய்தியும், வெளியிட்ட முறையும் சில சமயங்களில் திருப்தி யளிப்பதாகத் தோன்றுது. என்றாலும் என் துணையாசிரியர்கள் தத்தம் திறமைக்கும் கருத்துக்கும் தக்கபடி ஆற்றும் பணியைச் சரியில்லை என்று மறுத்துரைக்க நான் விரும்புவதில்லை. தவறைச் சுட்டிக் காட்டாம லிருப்பது நேர்மையாகாது. நன்மையையும் தீமையையும் அவற்றுக் குரியதோர் நேர்த்தியான மொழியில் விவரிக்கும் திறமை வாய்த் திருப்பது ஒரு பத்திரிகையாளனுக்குப் பேரருளாகும். ஆனால் வெகு சிலரிடமே அது அமைந்திருக்கிறது.

நான் பல வகைகளில் பணியாற்றியிருக்கிறேன். பல தொழில்களை மேற்கொண்டிருந்திருக்கிறேன். என்றாலும், மாத்ருபூமி அலுவலகத்தில் நான் பணியாற்றும்போது எனக்கேற்படும் மகிழ்ச்சியும் நிறைவும் வேறு எந்தத் தொழிலிலும் எனக்குக் கிடைக்கவில்லை. மாத்ருபூமி யோடு நான் கொண்டுள்ள தனிப்பட்ட நெருங்கிய தொடர்புதான் என்னை அவ்வாறு உணரச் செய்வதற்கான காரணம்போலும்! பத்திரி கையில் ஏதேனும் தவறு நேர்ந்துவிட்டாலோ, அதன் நடப்பையும் போக்கையும் பற்றி யாரேனும் குறை கூறினாலோ, என் மனதில் விவரிக்க இயலாததொரு சங்கடம் தோன்றும். எத்துணைக் கருத்துடனிருந் தாலும், மறுப்புகள் வராமல் இராது. 'ஒரு செய்திப் பத்திரிகை என்ற அளவில், மாத்ரு பூமியை நான் ஓர் லட்சிய நாளேடாகக் கருதுகிறேன்' என்று ஒரு அரசாங்க உயரதிகாரி ஓர் முறை என்னிடம் புகழ்ந்து கூறினார். அந்தப் புகழ்ச்சொல், என்னை மட்டிலா மகிழ்ச்சி கொள்ளச்செய்தாலும், ஒருங்கே ஓர் மலைப்பையும் தோற்றுவித்தது. மாத்ரு பூமியைப் பொறுத்தமட்டில், என்னுடைய கற்பனையில் ஓர் உன்னதமான லட்சியம் கொண்டிருந்தேன். அதை நடைமுறையில்

செயலாக்கும் முயற்சியில் எனக்கு முழு வெற்றி கிட்டியதாக நான் நம்பவில்லை. அது செயல்முறைக்கு இயலுமோ என்ற ஐயமும் என்னுள் இருந்தது. என் மனப்புக்கு அதுவே காரணம். மாத்ருபூமியின் உயரிய லட்சியமே குறியாக, அதோடு தொடர்புகொண்டவரனைவரும் உள்ளார்ந்து முயற்சி செய்ய இயலுமானால் அது எத்தகைய பேரருளாக இருக்கும்!

மாத்ருபூமியின் பக்கங்களில் காண்பது முழுவதையும் நம்பும் வாசகரை நான் அறிவேன். எனவே, அதில் தவறான பல செய்திகளைக் கண்டால், மிகுந்த வேதனை தோன்றுகிறது. கருத்துகளை வெளியிடும் போதும் அவ்வாறே உண்மைக்குப் புறம்பானதை ஏற்கையில் சங்கடம் தோன்றுகிறது. பொதுநலமே குறியாகக் கொண்டு நடுநிலை நின்று செய்திகளை விமரிசிக்கவேண்டுமென்பதே மாத்ருபூமியின் குறிக்கோள். பலதரப்பட்ட கருத்துகளை உடையவர்கள் ஆசிரியப் பகுதியில் பணி யாற்றுகின்றனர். என்றாலும், மாத்ருபூமிக்கென்று ஒரு தனிப் பாங்கு, பொதுக் கருத்து இருக்கிறதென்பதை அவர்கள் அறிவார்கள். அவர்கள் தங்கள் சொந்தக் கருத்துகளைப் பத்திரிகையின் வாயிலாக வெளியிட இயலாது. பொதுமக்களின் கருத்தை மையமாகக் கொண்டு மட்டும் பத்திரிகையை நடத்திச் செல்லாமல், பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதும் பத்திரிகையின் கடமை எனக் கருதவேண்டும். மாத்ரு பூமியின் கருத்தும், ஆசிரியரின் சொந்தக் கருத்தும் எஞ்ஞான்றும் இசைந்திருக்கும் என்று கொள்ளலாகாது. சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு இணங்காமலும் இருப்பதுண்டு. அப்போதும் மாத்ருபூமியின் கொள்கைக்கேற்ற கருத்துக்கே முதலிடம் அளிப்பேன். தலையங்கத்தில் ஒலிக்கும் 'நாம்' யாருடைய குரலென்பதை விவரிக்க இயலாது. ஆனால் கருத்தை வெளியிடுவதற்கு, இதைக் காட்டிலும் வசதியுள்ளதோர் சொல் வேறு இருக்கிறதா என்பது ஐயத்துக்குரியது. பத்திரிகை தர்மத்தைப்பற்றி ஒரு முறை மாத்ருபூமியில் எழுதியதை இங்கு விவரிக்கிறேன்:—

"சுதந்திரம் கிடைத்தபிறகு நம் நாட்டில் பத்திரிகைகளின் எண்ணிக் கையும் தரமும் கூடியிருக்கின்றன. நாளேடுகளும், வார, மாத இதழ் களுமாக மொத்தம், இந்தியாவில் ஆறுயிரத்துத் தொள்ளாயிரம் வெளியீடுகள் அச்சாவதாகப் புள்ளிவிவரம் கூறுகிறது. அவற்றில் அறுநூறு நாளேடுகள். வாரப் பத்திரிகை, மாத இதழ்களை வாங்கிப் படிக்கும் சந்தாதார், நம் நாடு முழுதுமாக நாற்பது லட்சத்துக்குமேல் இல்லை. இந்தியாவின் மக்கள்தொகையை எண்ணிப் பார்க்கையில், இது மிகக் குறைவுதான். இங்கிலாந்தில், 'நியூஸ் அஃப் தி வோர்ல்ட்' என்ற ஒரு இதழுக்கு மட்டுமே எண்பது லட்சம் சந்தாதார் இருக்கின்

றனர். இதை அறியும்போது, நாம் இன்னும் எவ்வளவுக்கு முன்னேற வேண்டியிருக்கிறதென்று புலனாகும். மொத்த சந்தாதாரர் குறைவுதானென்றாலும், பத்திரிகை படிப்பவர்களின் எண்ணிக்கையும் படிக்கச் சொல்லிக் கேட்பவர்களின் தொகையும், நம் நாட்டில் ஆறு மடங்கோ எட்டு மடங்கோ ஆகும் என்று கொள்ளலாம். பொதுமக்களிடையே பத்திரிகைகளின் செல்வாக்கு மேலும் மேலும் பெருகி வருகிறதென்பதில் ஐயமில்லை. இந்நிலை, பத்திரிகைகளின் பொறுப்பை அதிகமாக்குகிறது. செய்திகளை வழங்குவதும், அவை குறித்து விமரிசனம் செய்வதும் மட்டுமல்ல, பத்திரிகைகளின் பணி. பொதுமக்களின் அறிவையும் நாகரிக - மறுமலர்ச்சியையும் வளர்க்கவும், அவர்களுடைய நல்லியல்புகளையும் வண்மைக்குணங்களையும் மேலும் ஊக்குவதற்கும் பொறுப்பேற்க வேண்டும். பத்திரிகைகளின் வாயிலாக மக்கள், கருத்துகளை மட்டுமன்றி, செம்மையான மொழியையும் கற்றுப் பயனெய்தலாம். எனவே, பத்திரிகைகள் கருத்துகளைக் கூறுவதிலும், மொழியைப் பயன் படுத்துவதிலும் மிகவும் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டியது அவசியம். எண்ணிக்கை பெருகும்போது, தரம் குறைந்துவிடுவது இயல்புதான்—நாட்டில் சில உயர்ந்த பத்திரிகைகளைப்பற்றிக் குறிப்பிடும்போதுகூட, இந்நிலை உண்மையாக இருப்பதை ஒளிக்க வேண்டியதில்லை. 'அபிப்பிராயம் கூறுவது' என்ற போர்வையில் உண்மையல்லாததும் அவமானம் நிறைந்ததுமான கட்டுரைகளும் விமரிசனங்களும், இந்நாளில், பத்திரிகையின் பக்கங்களில் இடம் பெற்றுவிடுகின்றன. இச் சீர்கேடுகளை வெளியிடும் பத்திரிகைகள் கொஞ்சநஞ்சமல்ல. சில பத்திரிகைகளின் போக்கையும் குரலையும் பார்க்கையில், நமக்குக் கிடைத்த சுதந்திரத்தை நாம் உரிய வகையில் தான் பயன்படுத்துகிறோமா என்றுகூடத் தோன்றுகிறது. தீய எண்ணம் கொண்டு தனிமனிதர் மீது அவதூறு கூறுவதும், பழிப்பதும் அப்போதைக்குப் பத்திரிகைக்கு ஓர் விளம்பரமாகலாம். ஆனால் ஓர் பத்திரிகையின் மதிப்பை நிர்ணயிப்பது அதுவன்று. செல்வத்தைப் பெருக்குவதற்கு மட்டுமே ஒரு பத்திரிகையை உருவாக்குவதனால், அப் பத்திரிகையின் மதிப்பு நிச்சயமாக உயர்ந்துவிடாது. தனிமனிதர்களைப் போன்றே பத்திரிகைகளும் சுய மதிப்பையும் தன்மானத்தையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். உண்மையை ஓர்ந்து தெளிந்து செய்திகளை வழங்கியும், நடுநிலை நின்று நியாயமான முறையில் நிகழ்ச்சிகளை விமரிசனம் செய்தும், தனிமனிதரைப் பழிவாங்குவதற்கோ, சொந்த லாபம் கருதித் தனிப்பட்டவரின் நடத்தையையோ சொந்த வாழ்க்கையையோ பாதிக்கும் வகையில் கட்டுரைகளேதும் வெளியிடாமலும், பத்திரிகைகள் தம் பணியின் புனிதம் கெடாமல்

பாதுகாத்துக்கொள்ளவேண்டும். எல்லோருடைய தனி வாழ்க்கை களையும் மதிக்க வேண்டியது நம் கடமை. ஒருவரைப் பற்றி யாரேனும் ஏதேனும் கூறவேண்டுமென்றால், பத்திரிகைப் பகுதிகளில் அதற்கு இடம் கொடுக்கலாகாது. சாதாரண மக்கள் அனைவருமே பிறரைப் பற்றிய கெடுதலான செய்திகளை அறிவதில் ஆர்வம் கொண்டிருப்பது இயல்புதான். அத்தகைய ஆர்வங்களுக்குப் பொறுப்பான பத்திரிகை இரைபோட முன் வராது. 'கிறிஸ்டியன் சயன்ஸ் மானிட்டர்' என்ற பத்திரிகையைத் தொடங்கியபோது, அதன் நோக்கம் குறித்து இவ்வாறு மொழிந்திருந்தனர் : 'யாருக்கும் தீங்கு நினைக்கக்கூடாது; எல்லோ ருக்கும் அருள் புரியவேண்டும்' அதுதான் மானிட்டரின் லட்சியம்.

தனிமனிதர்களைப் போன்று பத்திரிகைகளுக்கும் சில உயர்ந்த லட்சியங்கள் இருக்க வேண்டும். அவற்றை நிறைவேற்றுவதற்கு மான்செஸ்டர் கார்டியனின் ஆசிரியர் 'ஸி. பி. ஸ்காட்' கூறினாற் போன்று, நல்ல கல்வியும், அறிவும், திறமையும் வேண்டும். அவற்றுடன் உறுதியான மனமும், பலவீனங்களுக்கு இடங்கொடாத அற உணர்வும் இசைந்திருக்க வேண்டும். ஒரு புதிய நன்ஞட்டின் மறுமலர்ச்சியையும் தொல்புகழையும் வளர்த்துக் காத்துவரும் அரும் பணியில் கூட்டாளி களாக இருக்கும் நாம் அனைவரும் பத்திரிகைகளுக்கான இப் புனித தர்மத்தை நினைவுறுத்திக்கொள்வது சாலவும் நன்று.

1962ஆம் ஆண்டு மாத்ருபூமியை எரணாகுளத்திலிருந்தும் வெளி யிடத் தொடங்கியதும் அதன் புகழ் ஓங்கியது. மதிப்பு உயர்ந்தது; வருமானமும் மிகுதியாகப் பெருகிற்று. சென்ற ஆண்டின் நிகர வருமானம் ஒரு கோடிக்கும் மேலாக உயர்ந்தது. இந்நாளில் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட பிரதிகள் அச்சாகின்றன. கேரளத்தில் மக்களின் இதயங்களில், மாத்ருபூமி பெற்றிருக்கும் நன்மதிப்பை இது உறுதியாக்குகிறது. சாதாரண மக்களும் மாத்ருபூமியைத் தங்க ளுடைய பத்திரிகையாகவே கருதுகின்றனர். மாத்ருபூமியின் பொறுமைக்குரிய இந்த உயர்வை பாதிக்கும் வகையில் யார் என்ன செயல்புரிந்தாலும், அது மன்னிப்பதற்கு இயலாததோர் குற்றமாகவே கருதுவதற்குரியது. அத்தகைய துணிச்சலான செயல்புரிய யாரும் முன்வரவேண்டாம் என்பதுதான் எனது உள்ளார்ந்த பிரார்த்தனை.

41

வேறு களங்கள்

நெடுங்காலம் தாய்நாட்டிலிருந்து வெளிநாடு சென்று தங்கி விட்டுத் திரும்பிய பிறகு, பழைய தொடர்புகளைப் புதுப்பித்துக் கொள்ளவும், புதியவர்களைக் கண்டு பழகுவதற்கும், முக்கியமான அரசியல் கட்சித் தலைவர்களைப்பற்றி அறிந்துகொள்வதற்கும் சிறிது காலமாகும். என்நிலை அவ்வாறுதானிருந்தது. நிலைமையை நன்குணர்ந்து கொள்ளுமுன் அரசியல் அரங்குகளில் அடிவைக்க நான் விரும்பவில்லை. சென்னையில் கப்பலைவிட்டிறங்கிய நாளில், அந்நாள் கேரளக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரிடமிருந்து நான் சட்ட மன்றத்தில் ஒரு உறுப்பினராக வேண்டுமென்று விரும்புவதாக ஓர் தந்திச் செய்தி வந்திருந்தது. நான் மாத்ருபூமியின் பொறுப்பைத்தான் ஏற்க விரும்பினேன்.

மீண்டும் காங்கிரஸில் சேர்ந்து தொண்டாற்றும் உற்சாகம் எனக்கு இல்லை. ஆனால் கேரளத்தில் காங்கிரஸ் பணிகளைப் பற்றியும், சிறப் பாகத் தொண்டாற்றிய காங்கிரஸ்காரரைப் பற்றியும் நான் நன்கு புரிந்துகொண்டிருந்தேன். காங்கிரஸ்காரர்களிடையே கண்ட கோஷ்டி மனப்பான்மைகளும், தனிப்பட்ட விரோதங்களும் என்னை வருந்தச் செய்தன. அதிகார ஆசையும், பதவி மோகமும் மக்களிடையே ஆதிக்கம் செலுத்தின. பொது நலம் கருதி, தன் ஈடுபாடுகளை அதற் கேற்ப வசதி செய்துகொண்டு பணியாற்றலாம். அதற்குப் பெரிய தியாகம் புரியவேண்டியதில்லை. சாதாரணமாக மரியாதையுடன் சமுதாயத்தில் பணிபுரிந்து வாழ்பவர் அனைவரும் பொதுநலம் கருதிச் செயலாற்ற முடியும். அந்த மனப்பான்மையே இல்லாதது கண்டு மிகுந்த வேதனைகொண்டேன். இந்த வருந்தத்தக்கதான நிலை, இந்நூல் வெளியாகும் இந்நாளிலும் மாற்றம் காணுமல்தான் இருக்கிறது. சொல்லப்போனால் இன்னும் மோசமாகவே மாறி இருக்கிறது. பிரபல மான சில காங்கிரஸ்காரர்களிடையே நட்புறவைத் தோற்றுவிப்பதற் காகப் பெரிதும் முயன்றேன். வெற்றி கண்டதாகச் சொல்வதற்கில்லை.

காங்கிரஸ் இயக்கத்தில் வெளிப்பார்வைக்குச் சேர்ந்திருக்கவில்லை யெனினும், காங்கிரஸின் லட்சியங்களிலும், அதன் செயல் திட்டங் களிலும் நான் நம்பிக்கை கொண்டிருந்தேன். 1915ஆம் ஆண்டில் நான் காங்கிரஸில் சேர்ந்த நாளிலிருந்து இந்நாள்வரை, அம் மாபெரும் ஸ்தாபனத்தின்மீது என் அன்பும் நம்பிக்கையும் உறுதியாக, மாறும மிருக்கிறது. சில காங்கிரஸ்காரர்களையும், அவர்களுடைய ஒவ்வாத

செயல்களையும் நான் கட்சிக்கு உகந்ததாக இல்லை என்பதை ஒத்துக் கொள்ளாமலில்லை. ஆனால், அதனால் அந்தப் பெரிய அமைப்பின்மீதான என் மதிப்புக் குறைந்துவிடவில்லை. அந்த ஸ்தாபனத்தின்பேரில் அவர்கள் புரியும் முறைகேடான செயல்களைக் காணப் பொறுக்கவில்லை. சுதந்திரப் போராட்ட காலத்தில், அதில் முழுதுமாகப் பங்கு கொண்டிருந்த தேசியக்கட்சி காங்கிரஸ் ஒன்றுதான். ஆனால், சுதந்திரம் பெற்ற பிறகு, நாட்டில் பல அரசியல் கட்சிகள் தோன்றின. அவற்றில் காங்கிரஸும் ஓர் அரசியல்கட்சியாக நிலைபெற்றிருந்தது. ஆனால் ஆளும் கட்சி என்ற நிலையில் அதற்குத் தனியான முக்கியத்துவம் பெற்றிருந்தது.

புதிய ஜனநாயக அமைப்பை நிலையுறுத்துவதிலும், கட்சிகளை உருவாக்குவதிலும், நாம் இங்கிலாந்தைப் பின்பற்றியே முயற்சிகள் செய்திருக்கிறோம். காங்கிரஸ் என்றதோர் அமைப்பு நல்ல முறையில் இயங்கும் வகையில், அதன் உறுப்பினரிடையே ஓர் ஒழுங்கும் பாங்கும் நெறியாக அமைந்திருக்கவேண்டும். இந்நாளில் 'கதர் உடுத்தால் காங்கிரஸ்காரர்' என்று நம்புபவர்களே மிகுதி. கதர் உடுத்தாததனால் காங்கிரஸ்காரரல்ல என்று கூறவும் தயங்கமாட்டார்கள். காங்கிரஸ் காரர் யார்? உண்மையில், காங்கிரஸின் கொள்கைகளிலும் லட்சியத்திலும் உள்ளார்ந்த நம்பிக்கை கொண்டு அக் கொள்கைகளுக்கேற்ப ஒழுகுபவரே காங்கிரஸ்காரர். ஒரு காங்கிரஸ்காரர் ஆவதற்கு அவையே தகுதிகள். திறமையும், செயலும், தொண்டுள்ளமும்தான் கட்சியில் அவனுடைய இடத்தை உறுதி செய்கிறது.

கதரணிவதில் நம்பிக்கையில்லாதவரென்றாலும், காங்கிரஸின் மற்றக் கொள்கைகளிலும் லட்சியத்திலும் முழு நம்பிக்கை கொண்டவர் பலர் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் உண்மையில் காங்கிரஸ்காரர்களாக ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. நாம் நம்முடைய கொள்கைகளுக்குகந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்போதுதான் மன-நிறைவு உண்டாகிறது. அதையே நாம் விரும்புகிறோம். பிறரைத் திருப்தி செய்வதற்காக, தான் நம்பாதவற்றைக் கூறுவதற்கும் செயல் புரிவதற்கும் முனைந்தால் அது தனக்குத்தானே இழைத்துக்கொள்ளும் தீங்காகுமே அன்றி, பொது வாழ்வின் மதிப்பை உயர்த்திவிடாது. கீழ் நோக்கியே கொண்டு செல்லும்.

காங்கிரஸில் சேர்ந்து பணிபுரியவில்லை என்றாலும் வேறு பல களங்களில் பணியாற்றும் வசதிகள் எனக்கு இருந்தன. கேரளத்திலும் வெளியிலும் பலதரப்பட்ட பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டி எனக்கு நிறைய அழைப்புகள் வந்தன. மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர் முதலியோருக்கான மாநாடுகளிலும், சமயம், சமுதாயம், அரசியல், இலக்கியம். நாகரிகம் ஆகிய அமைப்புகளைச் சார்ந்த

பொதுக்கூட்டங்களிலும் நான் பங்கு கொள்வது வழக்கமாகிவிட்டது. இவ்வாறு, பல்வேறு வகை மனிதர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களுடைய கருத்துகளையும் பிரச்னைகளையும் அறிவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. நாட்டு மக்களுடன் தொடர்பு கொள்வதனால் ஏற்படும் பரந்த அறிவும் அனுபவமும் பொதுத் தொண்டாற்றும் ஒருவனுக்கு வரப்பிரசாதம் என்றே கருத வேண்டும். எத்தனை நூல்களைப் படித்தாலும் மக்களை நேரில் கண்டு தொடர்பு கொள்வதன் வாயிலாகப் பெறும் அறிவும் அனுபவமும் தனியானதாகும்.

1948ஆம் ஆண்டு அக்டோபரில், 'இறந்த காலமும் எதிர்காலமும்' [பூதவும் பாவியும்] என்ற நூலை நான் வெளியிட்டேன். சிங்கப்பூரிலேயே அந்நூலின் முக்கால் பகுதியையும் நான் எழுதி முடித்து விட்டேன். போர்க்காலத்து அனுபவங்களைப்பற்றி மாத்ருபூமியில் வெளியிட்ட கட்டுரைகளைச் சில திருத்தங்களுடன் தொகுத்து வெளியிட்ட அந்நூலில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை என் அறிவுக்கெட்டியவாறு இயன்ற வரையிலும் விளக்குவதற்கு முயன்றிருக்கிறேன். எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் என்னுள் வேரூன்றிய கருத்துகளையுமே நான் விவாதித்திருக்கிறேன். தன்னுடைய புத்தகத்தைப் பொதுமக்கள் விரும்பி வரவேற்கின்றனர் என்ற செய்தி ஒரு நூலாசிரியனுக்கு எத்துணை மகிழ்ச்சியை அளிக்கிறது!

மலபார் 'லோகல் லைப்ரரி அதாரிட்டி'யின் தலைமைப் பொறுப்பை நான் ஓராண்டுக்காலம் ஏற்றிருந்தேன். மலபார் மாவட்டத்தில் நூலகங்களைப் பெருக்கும் நோக்கத்துடன் சென்னை அரசாங்கம் தொடங்கிவைத்த ஏற்பாடு அது. கிராமங்களிலும், பஞ்சாயத்துகளிலும், பட்டணங்களிலும் நூலகங்களை அமைக்கும் விதிகளையும் நடத்தும் முறைகளையும் நாங்கள் தயாரித்தோம். சென்னைப் பொது நூலகச் சட்டத்தின்படி நிறுவப்பெற்ற இயக்கம் அது. இப்போது அது முன்னேற்றமடைந்து வருகிறது.

1949ஆம் ஆண்டில் கோழிக்கோட்டில் 'ரோடரி கிளப்' நிறுவப் பெற்ற நாளிலிருந்து நான் அதன் உறுப்பினன். அதற்கு முன்பிருந்தே ரோட்டரி இயக்கத்தில் நான் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தேன். கடந்த சிறிது காலத்துக்குள் போற்றற்குரிய பல பணிகளைக் கோழிக்கோடு ரோடரி கிளப் ஆற்றியிருக்கிறது. பல்வேறு தொழில்களில் ஈடுபட்ட மதிப்புக்குரிய மனிதர்களிடையே நட்புறவைத் தோற்றுவிப்பதற்கும், பழகு முறைகளில் எடுத்துக்காட்டாக இருப்பதற்கும், நோயாளிகளுக்கும் ஆதரவற்றோருக்கும் உதவுவதற்கும், சமூக வாழ்வில் மகிழ்ச்சியும் மலர்ச்சியும் கூட்டுவதற்கும் ரோடரி கிளப் ஆற்றிவரும் பணிகள் புகழார்ந்ததாகும். அதன் வரலாறும், நோக்கங்களும்,

முயற்சிகளும் அறிந்த பின்னர் அதன் மிதமான மதிப்பை மேலும் உயர்த்துகின்றன. மனிதனை உயர்நிலைக்கு வளரச்செய்து, சமுதாயத்துக்குத் தொண்டாற்றுவதற்கு ரோடரி இயக்கம் செய்துவரும் முயற்சிகளையும், அதன் வெற்றிகளையும் அறிந்தவர்களுக்கு அந்த அமைப்பின் மீது பெருமதிப்பு ஏற்படாமலிராது.

அனைத்திந்தியப் பத்திரிகையாளர் மாநாட்டின் செயற்குழுவிலும் நான் உறுப்பினனாக இருந்தேன். அதன் கூட்டத்தில் கலந்துகொள்ள அடிக்கடி டில்லிக்கும் பிற இடங்களுக்கும் செல்லவேண்டி இருந்தது. பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் சங்கங்கள் நாட்டில் பெருகிவந்திருக்கின்றன. ஒரே தொழிலில் ஈடுபட்ட பிரபலமான பலரைத் தெரிந்துகொண்டு தொழில் சம்பந்தமான விஷயங்களைக் குறித்துப் பரிமாறிக்கொள்வதற்குச் சந்தர்ப்பமளித்த பத்திரிகையாளர் மாநாடும், அதன் பணிகளும் இந்நாளிலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அந்நாளில் டில்லியில் கூடிய அனைத்திந்தியப் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் நிகழ்ந்ததொரு சம்பவத்தை நினைத்துப் பார்க்கிறேன். மாநாட்டு நிகழ்ச்சிகள் இந்தி மொழியில் நடைபெற வேண்டும் என்ற தோர் தீர்மானத்தை வட இந்திய உறுப்பினர் ஒருவர் கொண்டு வந்தார். மாநாட்டில் தென்னிந்தியர் பலர் உறுப்பினராக இருந்தனர். பெரும்பாலும் அவர்கள் இந்திமொழி அறியாதவர்களே. அவ்வாறிருக்கையில், மாநாட்டு நடவடிக்கைகள் இந்தியிலிருக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்து வாதித்தது அர்த்தமற்றது என்பதை அந் நண்பர் உணர்ந்திருக்கவில்லை. அவர் ஒரு இந்தி வெறியர். ஆங்கில மொழியில் உரையாடுவதை மன்னிக்க இயலாத குற்றம் என்று கருதுபவர். தீர்மானத்தை அவர் பின்வாங்கிக் கொள்ளவில்லை. நான் அத் தீர்மானத்தை எதிர்த்தேன். பெரும்பான்மைக்கு விட்டபோது, தீர்மானம் தள்ளுபடியாயிற்று. இத்தகைய மனோபாவம் இந்தியைப் பரப்புவதற்குப் பெரிய தடை என்பதில் ஐயமில்லை. தேவையில்லாத இந்திப் பிரசாரத்தை எதிர்க்கும் இந்தி எதிர்ப்பாளரைப் போல், இந்தியை விரைவாகப் பரப்பவேண்டுமென்று கட்டாயத்தை நடைமுறையில் வலியுறுத்த வேண்டுமென்று வாதிப்பவர்களும், நாட்டின் ஒற்றுமைக்கு இடையூறுகளாக நிற்கின்றனர்.

42

இலங்கையில் இந்தியத் தூதர்

1951ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அனைத்திந்தியப் பத்திரிகை யாளர் மாநாட்டின் செயற்குழுக் கூட்டத்துக்காக நான் டில்லி சென்றேன். மூன்று நாட்கள் அங்குத் தங்கினேன். மலபாருக்குத் திரும்புவதற்கிருந்தநாளில் பிரதமர் நேரு என்னைக் காண விரும்புவ தாகச் செய்தி கிடைத்தது. பயணத்தை மறுநாள் தள்ளி வைத்தேன். அவர் எதற்காக என்னைக் காண விரும்புகிறார் என்பதை ஊகிக்கவும் முடியவில்லை.

மறுநாள் பிரதம மந்திரியின் மாளிகையில் அவரைக் கண்டேன். என்னை இலங்கைக்கு இந்தியத் தூதுவராக அனுப்ப விழைவதாக அப்போதுதான் அவர் தெரிவித்தார். அதைக் குறித்து நாங்கள் அரை மணி நேரம் உரையாடினோம். யாதொரு முன்னறிவிப்பும் இன்றித் திடீரென்று இந்த யோசனையைத் தெரிவித்தபோது உடனே என்னால் முடிவு செய்து இசைவு அளிக்க முடியவில்லை. மலபார் சென்றபிறகு அறிவிப்பதாகக் கூறி விடைபெற்றேன்.

சிங்கப்பூரிலிருந்து திரும்பி இரண்டே ஆண்டுகளாகியிருந்தன. மீண்டும் நாடுவிட்டுச் செல்ல நான் விரும்பவில்லை. என்றாலும், பிரதமருடைய அழைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது. ஸி. ராஜகோபாலாசாரியும் எனக்கு அதற்கு ஊக்க மளித்தார். அந்நாள் அவர் டில்லி மத்திய மந்திரி சபையில் ஒருவராக இருந்தார். டில்லியிலிருந்து திரும்பி அதிக நாட்களாகுமுன்பே, இந்தச் செய்தியைத் தாங்கி, அதிகாரபூர்வமானதோர் கடிதம், வெளி நாட்டு மந்திரி அலுவலகத்திலிருந்து எனக்கு வந்தது. நெருங்கிய நண்பர்களிடம் கலந்து ஆலோசனை செய்த பின்னர், நான் இலங்கை செல்வதற்கு ஒப்புக்கொண்டு தெரிவித்தேன்.

உடனே மாத்ருபூமி ஆசிரியப் பொறுப்பை ஏற்பதற்குத் தகுந்த வரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினேன். அது அவ்வளவு எளிதாக இல்லை. பல பெரிய மனிதர்களின் பெயர்களையும் இது சம்பந்தமாக நாங்கள் நினைவிலிறுத்தி யோசனை செய்து பார்த்தோம். ஸ்ரீ வி. எம். நாயரின் நினைவுதான் எனக்கு முதலில் தோன்றியது. அந்நாளில் அவர் கல்கத்தாவிலிருந்து சொந்த ஊர் திரும்பி இருந்தார். ஒத்துழையாமை இயக்கக் காலத்திலிருந்தே அவர் எனக்குப் பரிசய

மானவர். அந்நாளில் வி. எம். நாயர் பம்பாயில் இருந்தார். கேரளத்தில் காங்கிரஸ் பணிகளுக்கு நிதி திரட்டவும், மாத்ருபூமி கம்பெனிக்குப் பங்குகள் சேர்க்கவும் அவர் பேருதவி புரிந்திருக்கிறார். மாத்ருபூமி தொடங்கிய நாள் முதல், அதன் நடப்பிலும் வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார். பத்திரிகைத் தொழிலிலும் அவர் அநுபவம் வாய்ந்தவர். அப்போது வி. எம். நாயரைப் போன்று செயல்திறமையும் அநுபவமும் மாத்ருபூமியின்பால் பற்றும் கொண்ட ஒரு நண்பரைக் காண இயலாததாக இருந்தது. முதலில் நான் அவரிடம் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியபோது, அவர் அதற்கு இணங்கவில்லை. என்றாலும் என்னுடைய வற்புறுத்தலுக்கிணங்கி, பின்னர் இசைவு தெரிவித்தார். எனக்கு அது மிகுந்த ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அவரிடம் நான் நம்பிக்கை வைத்திருந்ததற்கேற்ப, பதினைந்து மாத காலம் அப் பொறுப்பைச் செம்மையாக நிர்வாகம் செய்து, தன் திறமையை விளக்கினார். இந்நாள் வி. எம். நாயர், மாத்ருபூமி பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர்; மாத்ருபூமி கம்பெனியின் மானேஜிங் டைரக்டர்.

1951ஆம் ஆண்டு மே மாதம் முப்பதாம் தேதி மாத்ருபூமியிடமும் கோழிக்கோட்டுக்கும் விடைகொடுத்துவிட்டு நான் இலங்கைக்குப் புறப்பட்டேன். என்னுடன் என் மனைவியும் மகள் லீலாவும் வந்தனர். பாலக்காட்டிலும் சென்னையிலும் இரண்டு நாட்கள் தங்கி, மண்டபம் வழியாகப் பயணம் செய்து, ஜூன் ஏழாந்தேதி கொழும்புக்கு வந்தேன். கொழும்பு ரயில் நிலையத்தில் எனக்களிக்கப்பெற்ற வரவேற்பை மறக்க இயலாது. ஒரு தூதுவர் என்ற உத்தியோக பூர்வமான வரவேற்பு மட்டுமல்ல அது. இலங்கை - இந்தியரின் நட்புறவு கூடிய மகிழ்ச்சியை விளக்குவதாகவும் திகழ்ந்தது. மலையாளிகளும் கலந்துகொண்டிருந்தனர். அந்நாள் பதினேழு மணிக்கு, ஸ்ரீ என். இ. எஸ். ராகவாசாரியிடமிருந்து நான் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். 1951ஆம் ஆண்டு ஜூன் ஏழாந் தேதி, நான் இலங்கையில் இந்தியத் தூதுவரானேன்.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே, மிகப் பழைய காலத்திலிருந்தே தொடர்பு நிலவிவருகிறது. சுமார் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன், முதன் முதலாக ஆரியர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சென்றனர் என்று கூறப்படுகிறது. சிங்களவருடைய முன்னோர்கள் வங்கத்தின் அருகிலிருந்து இலங்கையில் வந்து குடியேறியவர்கள். தொடக்கத்தில் அவர்கள் பல இடங்களில் தனித்தனி குழுவினராகப் பிரிந்து வசித்தனர். பின்னர் ஒருவரை ஒருவர் வெற்றி கொள்ள, பல நாட்கள் தங்களிடையே போர்புரிந்தவண்ணமிருந்தனர்.

அப் போராட்டங்களில், சில குழுவினருக்கு உதவியாக, மலபாரிலிருந்து படை வீரர்களை அவர்கள் இலங்கைக்கு அழைத்துச் சென்றதாக வரலாற்றில் காணப்படுகிறது. ஆரியர்கள் அங்குச் செல்வதற்கு முன்பே, தென்னிந்தியாவிலிருந்து தமிழர் இலங்கையில் குடியேறி வசிக்கத் தொடங்கியிருந்தனர். வட இந்தியாவிலிருந்து விஜயன் என்ற ஒரு அரசனும், அவனுடைய ஆதரவாளர் எழுநூறு பேரும், இலங்கைக்குச் சென்றதிலிருந்துதான் இலங்கை வரலாறு தொடங்குகிறதென்று பலர் கருதுகின்றனர். அது, கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி.

பின்னர் மூன்று நூற்றாண்டுக் காலம் சென்றது. அசோக சக்கரவர்த்தியின் புதல்வன் மகேந்திரன், புத்தமதக் கொள்கையைப் பரப்ப இலங்கை சென்றான். சிங்களவரைப் புத்த சமயத்தில் சேரத் தூண்டியவன் மகேந்திரன். அவர்களது அளவற்ற பக்திக்கும் நம்பிக்கைக்கும் எடுத்துக்காட்டாக, பல புத்த விகாரங்களை அங்கே எழுப்பினர்கள். அவற்றின் சின்னங்களை இன்றும் அங்கே காணலாம். இந்திய நாகரிகப் பழக்கங்கள் இலங்கையில் மிகுதியாகப் பரவியிருக்கின்றன. என்றாலும், இந்தியாவிலிருந்து வேறுபட்டு நிற்கும் இலங்கைத் தீவில், மக்கள் தங்கள் தனி நாகரிகத்தையும் வளர்த்து வந்திருக்கின்றனர்.

பல்வேறு வகுப்பினரையும் இலங்கையில் காணலாமென்றாலும், அங்குச் சிங்களவரும் தமிழருமே மிகுதியாக வாழ்கின்றனர். எண்பது லட்சத்துக்கு மேலான மக்கள்தொகையுள்ள இலங்கையில் அறுபத்தேழு விழுக்காடு சிங்களவர். அவர்கள் புத்த சமயத்தைத் தழுவியவர். தமிழர் இலங்கையில் பத்துலட்சம்பேரிருக்கின்றனர். இந்துக்களாகிய தமிழர், முக்கியமாக யாழ்ப்பாணத்தில்தான் அதிகமாக வசிக்கின்றனர். இவர்களைத் தவிர, அராபியர், சட்டைக்காரர், வெள்ளையர் முதலியோரும் இலங்கையில் வாழ்கின்றனர்.

இந்தியாவிலிருந்து கூலிவேலை செய்வதற்கும் பிறவுமாக, அங்கே குடியேறியிருப்பவர்களில் எட்டு லட்சம் பேரில் பெரும்பாலோர் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். சிறு தொழில் செய்பவர்களும், 'உத்தியோகம்' பார்ப்பவர்களும், எழுத்தர்களுமான இந்தியரனைவரும் இச்சமுதாயத்தில் அடங்கியவரே. இலங்கை-இந்தியர் பிரச்னை குறித்து நாம் பலவாறுகக் கேள்விப்படுகிறோமல்லவா? கூலித் தொழிலுக்கும், ஏனைய தோட்ட வேலைகளுக்குமாக அங்கே வாழ்ந்து வரும் இந்தியர் சம்பந்தமான பிரச்னைதான் அது.

ஒரு காலத்தில் இலங்கை, சென்னை அரசாங்கத்துக்கு உட்பட்டிருந்தது. 1802ஆம் ஆண்டுக்குப் பிறகே இலங்கை ஓர் கிரௌன் காலனியாயிற்று. காலனியாக இருந்ததால், அங்குள்ள தேயிலைத்

தோட்டங்களிலும், காபித் தோட்டங்களிலும், ரப்பர்த் தோட்டங்களிலும் வேலை செய்வதற்குத் தென்னிந்தியாவிலிருந்து ஏராளமான மக்கள் இலங்கை சென்றனர். அவ்வாறு தோட்டப்பணி புரியச் சென்றவரனைவரும் தமிழ்நாட்டவரே. நாளடைவில் அவர்கள் அங்கேயே ஊன்றி நிலைத்தனர். அவர்களுடைய உழைப்பும் முயற்சியும் கொண்டுதான் இலங்கையில் தேயிலைத் தோட்டத்தொழில் வியத்தகு வளர்ச்சி பெற்றது.

இலங்கையில் ரப்பர், கொப்பரை, தேயிலை மூன்றும் முக்கியமான ஏற்றுமதிப் பொருள்கள். இவற்றிலும் முதலிடம் தேயிலைக்கே உரியது. 1952ஆம் ஆண்டில், முப்பத்திரண்டரைக் கோடி ரூபாய் மதிப்புள்ள தேயிலை அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. எட்டரை லட்சம் மக்கள் தேயிலைத் தோட்டங்களில் பணி செய்து பிழைக்கின்றனர். அவர்களில் எண்பது விழுக்காடும் இந்தியரே. தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் அத் தொழிலாளர், அதில் மிகுந்த அநுபவமும் தனித்தேர்ச்சியும் பெற்றிருக்கின்றனர். சிங்களவருக்கோ, மற்றவருக்கோ, அவர்களைப்போல் திறமையுடன் பணிபுரிய இயலவில்லை. இவ்வாறு இலங்கையில் தேயிலைத் தோட்டங்களில் முதல் போட்டவர்கள் வசம் பொன்னைக் குவிக்கும்வண்ணம் தேவையான உடலுழைப்பை நல்கும் தமிழருக்கு அம் மண்ணில் வாழப் பிரஜா-உரிமையளிப்பதற்குச் சிங்களவர் உடன் படவில்லை. தோட்டப் பணிக்காக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஆட்களைத் திரட்டிச் செல்லும் வழக்கத்தை நிறுத்திவிட்டார்கள். இலங்கையில் இந்நாள் வசித்து வரும் இந்தியருக்கு அங்குத் தங்கி வாழும் குடியுரிமையைப் பெற்றுக் கொடுப்பதுதான் இப்போதைய பிரச்னை. அம் மண்ணைத் தங்கள் சொந்த மண்ணைக் கருதி, அங்கே நிலையாகத் தங்குவதற்கு விரும்பும் இந்தியருக்குக் குடியுரிமை வழங்க வேண்டுமென்பது நமது வாதம். இந்தியருக்குக் குடியுரிமை வழங்குவது சம்பந்தமாகச் சில சட்டங்களை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிறது. அதற்கிசைய, இலங்கைக் குடியுரிமை வேண்டி, ஏராளமான இந்தியர் விண்ணப்பம் செய்திருக்கின்றனர். ஆனால், இந்தக் கோரிக்கையாளரில் ஒரு சிலருக்கு மட்டுமே குடியுரிமை அநுமதி வழங்கப்பெற்றிருக்கிறது. ஏதேதோ காரணம் காட்டி, மற்றவை அனைத்தையும் செல்லாது என்று தள்ளிவிட்டனர். இவ்வகையில், இந்தியா - இலங்கைப் பிரச்னை ஒரு சிக்கலான நிலையில் இருந்த நாட்களில்தான் நான் அங்குத் தூதுவராகப் பணியேற்கச் சென்றிருந்தேன்.

தூதுவராக வேலையேற்று மூன்று நாட்கள் சென்றதும், நான் இலங்கைப் பிரதமர் சேனநாயகாவை அவருடைய அலுவலகம் சென்று

கண்டேன். என்னுடன் கௌன்சிலர் என். இ. எஸ். ராகவாசாரியும் இருந்தார். நானும் பிரதமரும் அரைமணி நேரம் உரையாடினோம். ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்துகொள்ளும் முதல் சந்திப்புத்தான் அது. அதற்குப் பிறகு அவரை நான் பலமுறைகள் கண்டிருக்கிறேன். எங்களிடையே பல விஷயங்களில் கருத்து வேற்றுமை இருந்தாலும், தனிப்பட்ட முறையில் நட்புறவு கொண்டு பழகி வந்தோம். சேனநாயகாவின் ஒப்பரிய தலைமைச் சிறப்பையும், செயல் திறமையையும், அருங்குணத்தையும் உணர்ந்துகொள்ளும் சந்தர்ப்பங்கள் இசைந்தன. இலங்கையின் தேசியத் தலைவர்களிடையே பெருமதிப்புக்குரிய நிலையைப் பெற்றவர் அவர் என்பதில் ஐயமில்லை.

சேனநாயகாவை ஒரு பழுத்த ராஜதந்திரி என்று கூறுவதற்கில்லை. பெரிய பேச்சாளருமில்லை. அனேத்து நாடுகளின் விஷயங்களைப்பற்றிய அறிவோடு சார்ந்த புலமையும் அவருக்கு அவ்வளவாகக் கிடையாது. அவ்வாறான தனிச்சிறப்புக்கள் ஏதுமின்றி, சுதந்திர இலங்கையின் பிரதமராக, தம் நாட்டு மக்களின் அன்புக்கும் மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவரான சேனநாயகாவின் வரலாறு கேட்பதற்குப் பெரு வியப்பைத் தோற்றுவிக்கும். சேனநாயகாவின் பெருமைக்குரிய தனிச் சிறப்பு யாதென்பதை அவருடைய நெடுங்கால நண்பர் ஒருவரிடம் நான் வினவியபோது, "சேனநாயகாவின் உள்ளார்ந்த ஈடுபாடே அவருக்கு உயர்ந்த இடத்தை நல்கியிருக்கிறது" என்றார். நண்பர்களிடமும், தம்மை அண்டி வருபவரிடமும், உடன் பணியாற்றுபவர்களிடமும், அவர் காட்டும் உளம் கனிந்த அன்பு அவருடைய இன்னொரு அருங்குணமாகும்.

எந்தப் பிரச்னையையும் தெளிந்து முடிவு காணும் ஆற்றல் அவருக்கு இருந்தது. விவாதம் செய்வதில் சேனநாயகாவை விஞ்சக்கூடியவர்கள் இருக்கலாம். ஆனால், விவாதம் செய்தவர்களின் உரைகளெல்லாம் முடிந்தபின்னர், சேனநாயகா அதைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறத் தொடங்கினால், "இவ்வளவு எளிதா இது?" என்று கேட்டவர் வியக்கும்வண்ணம் அவர் விவாதப் பொருளின் சிக்கலைத் தெளிவாக எடுத்துரைப்பார். ஒரு முடிவை அவர் தீர்மானம் செய்துவிட்டால், பின் எவ்வளவு தூண்டினாலும் அதிலிருந்து மாறுவதற்கிசையார். செருக்கோ, பதவி கர்வமோ, மமதையோ அவரிடம் கிடையாது. ஒரு எளிய உழவர் குடிமகனாக இருந்து நாட்டின் பிரதமர் பதவிக்கு உயர்ந்த சேனநாயகா, எல்லாப் பிரச்னைகளையும் சாமானிய மனிதனின் நிலையிலிருந்துதான் கூர்ந்தாராய்வார்.

ஒரு தூதுவர் என்ற நிலையில் என்னுடைய அதிகார பத்திரங்களை கவர்னர்-ஜெனரலின்முன் சமர்ப்பிப்பதற்கு மூன்று நாட்கள் காத்திருந்

தேன். நான் கொழும்பு சென்ற சமயத்தில் கவர்னர்-ஜனரல் ஸோல்பரி பிரபு அங்கு இல்லை. அதனால்தான் உத்தியோக முறையிலான அச் சடங்கைச் செய்வதற்குத் தாமதமாயிற்று. இம் மாதிரியான சடங்குகளை, அழகாகவும் பாங்காகவும் செய்துவரும் முறையில் பிரிட்டிஷார் தம் பரம்பரைப் பெருமையை விளக்குகின்றனர். குறித்த நேரத்தில் தூதுவராலயத்தின் முதன்மைச் செயலாளருடன் நான் அரசினர் மாளிகைக்குச் சென்றேன். அங்கிருந்த அதிகாரிகள் என்னை வரவேற்று மாடிக்குக் கூட்டிச் சென்றனர். பெரிய ஹாலில் நான் அடிவைத்ததும், கவர்னர்-ஜனரல் அங்கு வந்தார். சிறிது நேரம் உரையாடிய பின்னர் நான் என் பதவிக்குரிய பத்திரங்களைச் சமர்ப்பித்தேன். பின்னர் திரும்பினேன். இந்தச் சடங்குடன் நான் பதவியேற்றதாக ஆயிற்று.

ஸோல்பரி பிரபு ராஜதந்திரத்தில் தேர்ந்த கெட்டிக்காரர். இலங்கையின் ஆட்சிச் சீர்திருத்தம்பற்றி விசாரணை செய்து அறிக்கை தயாரிக்கத் தீர்மானித்த கமிஷனில் அவர்தாம் தலைவர். அதனால்தான் இலங்கை சுதந்திரம் பெற்றதும் முதல் கவர்னர்-ஜனரலாக ஸோல்பரி பிரபுவை நியமித்தனர்.

அந்நாளில் அவருக்கு எழுபது வயதிருக்கும். என்றாலும், நல்ல திடமான உடல் நலமும் சுறுசுறுப்பும் கூடியவராகவே இருந்தார். எல்லா நிலைகளிலுள்ள மனிதர்களிடமும் அன்பாகவும் நேர்த்தியாகவும் பழகும் இயல்பினர். எந்தப் பொருளைக்குறித்தும் உரையாட வல்லவர். மனிதர்களைத் தெரிந்துகொள்வதற்கும், அவர்களுடைய ரசனைக்கு உகந்த வகையில் உரையாடி மகிழ்விப்பதற்கும் திறமை வாய்ந்திருந்ததாலேயே, அவர் மக்களின் அன்புக்குரிய கவர்னர்-ஜனரலாகத் திகழ்ந்தார். ஸோல்பரி அதிகாரப் பதவியிலிருந்து விலகியபிறகு, இலங்கையில் பிரிட்டிஷ் கவர்னர்-ஜனரல் இல்லை என்றாயிற்று. அந்தப் பதவியையும் சிங்களவரே ஏற்றனர்.

கவர்னர்-ஜனரல், பிரதம மந்திரி, தூதுவர்கள், இந்திய நிறுவன அமைப்புகள் என்று விருந்து வைபவங்கள் சில நாட்கள் தொடர்ந்தன. ஹை கமிஷனரின் பல பணிகளில், விருந்து வைபவங்களில் பங்கு கொள்வதும், விருந்தளிப்பதுமாக மதிப்புக்குரிய மக்களுடன் தொடர்பு கொள்வதும் ஒன்று. விருந்தோம்பும் செயல்முறையில் கலாபூர்வமான தோர் அம்சமும் உண்டு. விருந்து வைபவங்களை நேர்த்தியான பாங்கில் நடத்துவதற்கு நல்ல முறையில் திட்டமிடவேண்டும். விருந்தினரைப் பொருட்படுத்தவில்லை என்றோ, அவர்களுக்கு வசதிக்குறைவு நேர்ந்ததென்றோ ஒரு குறையும் எழும்பாத வகையில் சிறுசிறு விஷயங்களில் கூடக் கருத்தூன்றிச் செயலாற்றவேண்டும்.

1952ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தில் இந்தியக் குடியரசு நாளின் விழாவை முன்னிட்டு என் இல்லத்தில் நான் ஒரு விருந்தளித்தேன். அறுநூறுக்கு மேற்பட்ட விருந்தினர் அதற்கு வந்திருந்தனர். உணவு வகைகளின் பல்சுவை விருந்துடன் களிப்பூட்டும் வேடிக்கை விநோத நிகழ்ச்சிகளும் விருந்தினர் மனங்கவர்ந்து மகிழ்ச்சியிலாழ்த்தின. விருந்து நிறைவேறிய பின்னர், வெள்ளையரான சில விருந்தினர் என்னிடம் கூறினர்:

''இந்த விருந்து வைபவம் எங்களைப் பெரிதும் மகிழ்ச்சியூட்டியது மட்டுமன்றி, உங்கள் நாட்டின் மதிப்பையும் உயர்த்திவிட்டது!'' தூதுவர் வதியும் இல்லத்தில் இன்பமும் மகிழ்வுமாக வாழும் வசதிகள் அனைத்தும் அமைந்திருந்தன. இந்தியாவின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவாறு, தூதுவராலயமும் தூதுவரின் இல்லமும் மேன்மையாகவே இருந்தன. மதிப்புக்குரிய உயர் பணிபுரியும் வாழ்க்கையில், ஒரு பாங்கும் நேரிய ஒழுங்கும் இசைய வாழ்வது, அந்த உயர்பணிக்குரிய மதிப்பை அளிக்கிறது. அது மட்டுமன்றி, நேரிய ஒழுங்கும் பாங்கும், மக்களின் நல்வாழ்க்கைக்கும் தேவையாக இருக்கின்றன.

இலங்கையில் இந்தியத் தூதுவராலயம் பெரியதொரு நிறுவனம். அங்குப் பணியாற்றும் அலுவலரின் எண்ணிக்கையைப் பொறுத்துக் கூறுவதாக இருந்தால், இலங்கையிலுள்ள ஏனைய தூதுவராலயங்களைக் காட்டிலும் இந்தியத் தூதுவரகமே மிகப் பெரியதென்று கூறலாம். குறித்த நேரத்தில் அலுவலகம் செல்வதை நான் மிக முக்கியமாகக் கருதினேன். பல்வேறு காரணங்களை முன்னிட்டு, அலுவலகத்தில் என்னைப் பார்க்கப் பலரும் வந்தார்கள். அவரவர் தேவைகளறிந்து ஆவன செய்வதற்குத் தாமதமாகக்கூடாதென்பது என் கருத்து. அலுவலகத்தில் மற்றவர்களிடமும் பணிகளை உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டும் என்று கட்டளை இட்டிருந்தேன்.

இலங்கை இயற்கையெழில் சூழ்ந்தது. கண்கவர் காட்சிகளும் வரலாற்றுச் சிறப்புடைய இடங்களும் நிறைந்த இடம். சுற்றுலா செல்பவர்களுக்கான ஏற்பாடுகளும் வசதிகளும் ஏராளமாக இருக்கின்றன. நான் அவ்வப்போது உள்நாட்டில் சுற்றிப் பார்க்கச் செல்வதுண்டு. பெரும்பாலும் காரிலேயே பயணம் மேற்கொண்டேன். இலங்கையில் நல்ல சாலை வசதிகள் இருக்கின்றன.

ஆண்டுதோறும் கண்டியில் நடைபெறும் 'பெரஹர' விழாக் காண ஆயிரக்கணக்கான மக்கள் வருகின்றனர். அவ்விழாவில், புத்தரின் புனிதப் பல்லை எழுந்தருளச் செய்து பவனிவரும் காட்சி, மக்களை பக்தியுணர்வுகொண்டு பரவசமடையச் செய்வதாகும். யானைகள், அசைந்து செல்ல, பல்வேறு இசைக்கருவிகள் முழங்க, ஒளி விளக்குகளும், ஆட்ட

பாட்டங்களுமாக அந்த நெடும் பவனி, இரவு நேரத்தை ஜாஜ்வல்ய மாக்கிக்கொண்டு கண்டியின் முக்கியமான வீதிகளில் வலம் வரும்.

புத்த தேவனின் அந்தப் புனிதப் பல், வங்கத்திலிருந்து நான்காம் நூற் றாண்டில் இலங்கைக்குக் கொண்டுவரப் பெற்றதாகும். கண்டியின் பெரிய விகாரத்தில், அதைப் பாதுகாப்பாக வைத்திருக்கின்றனர். அதை வைத்திருக்கும் அறையின் வாயிலே, பொன்னும் வெள்ளியுமாக இழைக்கப்பெற்றிருக்கிறது. அந்த அறையினுள், அலங்கார வேலைப் பாடுக ளமைந்ததோர் உயர்ந்த வெள்ளிபீடத்தில் நடுவே அப் புனிதச் சின்னத்தைப் பொதிந்து வைத்திருக்கின்றனர். அதைச் சுற்றிலும் அமைந்த இரும்பு அழிகளின் இடையே நின்று பார்க்கலாம். உலகி லுள்ள புத்த சமயம் சார்ந்த மக்களனைவரும் இங்கே புனித யாத்திரை வருகின்றனர். துறவியாடை அணிந்து, மந்திரங்கள் ஓதியபடி அமர்ந்துகொண்டும் அங்கு மிங்குமாக நடந்துகொண்டும் இருக்கும் புத்தசமயத் துறவியரையும், கைகளில் மலர்களும் பூசனைப் பொருள் களுமாக வரும் மக்களையும், கோயிலிலும் அதன் சூழலிலும் ஏராள மாகக் காணலாம்.

ஆண்டுதோறும் ஜூலை - ஆகஸ்ட் மாதங்களில் இந்த விழாவைக் கொண்டாடுகின்றனர். நேர்த்தியாக அலங்கரிக்கப் பெற்றதொரு ஆண் யானையின் முதுகில் அதற்கென்று தகுதிபெற்ற அறவோர், அப் புனிதச் சின்னத்தை பக்தியுடன் எழுந்தருளச் செய்வர். இலங்கை யின் இந்தப் பெருவிழாவைக் காண்பதற்கு உள்நாட்டிலிருந்து மட்டு மன்றி, வெளி நாட்டிலிருந்தும் மக்கள் கண்டிக்கு வந்து குழுமுகின்றனர். இத்துணைச் சிறப்பு வாய்ந்த மக்கள் திரண்டுவரும் வேறு ஒரு விழாவையும் இலங்கையில் காண்பதற்கில்லை.

நான் பல முறை கண்டிக்குச் சென்றிருக்கிறேன். ஒரு முறை கண்டியி லிருந்து கொழும்பு திரும்பிவந்த நாளில் ஏற்பட்ட நிகழ்ச்சி, இலங்கையில் நான் வதிந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளில் மறக்க இயலாத தொன்றாகும்.

அந்நாள், கண்டியிலிருந்து நாங்கள் கொழும்பு திரும்பிவந்தபோது இரவு மணி எட்டு. அம்முவும் லீலாவும் என்னுடன் இருந்தனர். எங்கள் இல்லம் கொழும்பு ஹார்பர் சாலையில் இருந்தது. பெரிய அந்த மாடிக் கட்டடத்தில், இரண்டு மூன்று பணியாளரும், ஒரு தோட்டக்காரனும், சமையற்காரனும், காரோட்டியும், 'அட்டெண்டர்' களும் எங்களுடன் தங்கியிருந்தனர். அவர்கள் கீழ்த்தளத்தில் படுத்துக் கொள்வார்கள். மாடியில் ஒரு அறையில் அம்முவும் நானும் தங்க, அடுத்த அறையில் லீலா உறங்கச் சென்றாள். பயணக்களைப்பு மேலிட் டிருந்ததால் நாங்கள் மூவரும் பதினொரு மணிக்கே நன்றாக உறங்கி

விட்டோம். வாயில் கதவுகள், மாடிப்படி வாயில் எல்லாவற்றையும் நன்முகச் சாத்தியிருந்தோம். இரவு இரண்டு மணி சுமாருக்கு, அடுத்த அறையிலிருந்து லீலா கூக்குரலிடுவது கேட்டது. நான் உடனே விரைந்தோடிச் சென்றேன். அம்முவும் என் பின்னர் அவளுடைய அறைக்குள் வந்தாள். விளக்கை ஏற்றிப் பார்த்த போது அவள் பேச்சற்றுக் கிடந்தாள். ஏதோ ஓர் ஒலிதான் எழுப்பினளே ஒழிய, கேட்பதற்கொன்றும் அவள் மறுமொழியே கூற வில்லை. கீழிருந்து பணியாளர் மாடிக்கு விரைந்து வந்தனர். அறைக்குள் பெட்டி, அலமாரி இரண்டும் திறந்து கிடந்ததை அப்போது தான் பார்த்தோம். நகைகள் எல்லாவற்றையும் கொண்டு சென்றிருந் தனர். கீழே வாயிலும் திறந்து கிடந்தது. அதிகமாக நேரம் கடத்தா மல் டாக்டரை வரவழைத்தோம். அடுத்த வீட்டில் வசித்த சட்ட மந்திரி டாக்டர் ராஜபக்ஷியும் அவருடைய மனைவியும் வந்து உதவி செய்தனர். லீலாவின் மயக்கம் தெளிய ஒரு மணி நேரமாயிற்று. அவளால் பேச முடிந்தபின்னரே நடந்த விவரங்களறிந்தோம்.

அவள் நன்முக உறங்கிக்கொண்டிருக்கையில் யாரோ கழுத்திலிருந்த பொற்சங்கிலியைப் பிடித்து இழுத்தாற்போன்றிருந்தது. கண் விழித்துப் பார்த்தபோது, சட்டையும் முழு நிஜாரும் அணிந்த ஒருவன் கட்டிலுக்கருகில் நிற்பதைக் கண்டாள். அவள் கூச்சலிடத் தொடங்கிய போது அவன் அவள் முகத்தில் ஏதோ பொடியைத் தூவினான். அப்போது அவள் கத்தினாள். பின்னர் என்ன நடந்ததென்று அவளுக்கு நினைவில்லை. அந்தத் தீய அநுபவத்தின் பயங்கர நினைவிலிருந்து மீளுவ தற்கு அவளுக்கு இரண்டு நாட்களாயின.

திருடர்கள் இரண்டு மூன்று பேர் வந்திருக்க வேண்டும். சுமார் இரண்டாயிரம் ரூபாய் விலைமதிப்புள்ள நகைகளையும் சேலைகளையும் அவர்கள் கொண்டு சென்றிருந்தனர்.

போலீஸ் அதிகாரிகள் அங்கு உடனே வந்து சேர்ந்தனர். பின்னர் இரண்டு நாட்கள் பலர் எங்களை விசாரிக்க வந்தனர். பிரதமர் சேனநாயகாவும் விவரங்களறிய வந்தார். போலீஸ் அதிகாரிகள் மிகவும் கவனமாக விசாரணை செய்து துப்புத்துலக்க முயன்றாலும் திருடர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. திருடுபோன நகைகளும் கிடைக்கவில்லை. என்னுடைய கலகலப்பு நிறைந்த இலங்கை வாழ்க்கையில் இது ஓர் கசப்பான அநுபவம்.

43

இலங்கையிலிருந்து திரும்புதல்

இந்திய-இலங்கைப் பிரச்னைக்கு முடிவு காணும் பொருட்டு நான் பல முறைகள் பிரதமர் சேனநாயகாவுடன் பேச்சு வார்த்தை நடத்தினேன். குடியுரிமை கோரும் இந்தியருடைய வாதத்தை இணக்கமான கண்ணோட்டத்துடன் ஆராய்வதற்கு அவர்கள் தயாராக இல்லை. இலங்கையில் ஊன்றி வாழ விரும்பும் இந்தியரின் எண்ணிக்கையை இயன்ற மட்டிலும் குறைப்பதற்கே பிரதமர் விரும்பினர். அந்த விருப்பத்தை, குடியுரிமை மனுக்களைப் பரிசீலனை செய்து அநுமதி வழங்க உரிமை பெற்றிருந்த அதிகாரிகள் இயன்றவரையிலும் நிறைவேற்றினர்.

ஜனநாயக ஆட்சி முறையின் அடிநிலையே வோட்டுரிமையல்லவோ? இலங்கையைத் தாயகமாகக்கொண்டு அங்கு நிலைத்து வாழ உறுதி கொண்டவர்கள் மட்டுமே அங்கு வாக்குரிமை பெறுவதற்கான குடியுரிமை பெற இயலும் என்று இலங்கையர் விவாதம் செய்கின்றனர். அந்தக் கொள்கை சரியானதுதான். அவ்வாறு கருதியே 1948ஆம் ஆண்டில் இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றினர். அதற்கு முன் குடியேற்ற உரிமையைக் கட்டுப்படுத்தக்கூடிய சட்டமொன்றும் அங்கு இருந்ததில்லை. இந்தியர் குடியேற்ற உரிமையைக் கட்டுப்படுத்துவதற்கென்ற தனியானதொரு சட்டம் 1949ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. அச் சட்டப்படி குடியுரிமை கோரி, பல இந்தியர் அரசாங்கத்துக்கு விண்ணப்பம் செய்துகொண்டனர். ஆனால் அதிகாரிகள் ஏதேனும் காரணங்களைக் கூறி அவற்றை அநுமதிக்காமலே தள்ளிவிட்டனர். குடியுரிமை கோரி வரும் மனுக்களைப் பரிசீலனை செய்யும் விஷயத்தில் இன்னும் சிறிது கனிவும் நியாயமும் காட்ட வேண்டுமென்று பிரதமரிடம் நான் வேண்டினேன். அந்நிய நாட்டுக் கொள்கைகளுக்கான பொறுப்பைப் பிரதமரே ஏற்றிருந்தாலும், இந்தியர் குடி-உரிமை சம்பந்தமான பிரச்னைகளை ஸர் ஆலிவர் குணதிலகாதான் மேல் விசாரணை செய்தார். பின்னாளில் அவர்தாம் இலங்கை கவர்னர்-ஜெனரலானார். அந்நாளில் ஸர் ஆலிவர், இலங்கை மந்திரி சபையில் ஒருவராக இருந்தார்.

இந்தியர் குடியுரிமை குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தும் பொருட்டு நான் பல முறை குணதிலகாவைச் சந்தித்தேன்.

எவரையும் கவர்ந்துவிடும் ஆற்றலுடையவர் குணதிலகா. இனிமையாக உரையாடுவார்; நேர்த்தியாகப் பழகுவார். அவருடைய தனிப்பட்ட கருத்து யாதாக இருந்தாலும், சேனநாயகாவின் விருப்பத்துக்குகந்தவாறுதான் அவரால் செயல் புரிய முடியும். பிரதமர் அதிகமான இந்தியருக்குக் குடியேற்ற உரிமையளிக்க விரும்பவில்லை. சேனநாயகாவின் பதவிக்காலத்தில் இந்திய - இலங்கைப் பிரச்னைக்கு முடிவு காண்பது எளிதல்ல என்று நான் கண்டேன். என்றாலும் சோர்வடையாமல் நான் முயற்சியைத் தொடர்ந்தேன்.

இந்தியர் குடியுரிமைக்காக இலங்கை இந்தியக் காங்கிரஸ், உறுதியான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. பின்னாளில் அந்த இயக்கமே 'டெமக்ராடிக் காங்கிரஸ்' என்று பெயர் மாற்றம் பெற்றது. அதன் உறுப்பினர் பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்தாம். அதன் தலைவர்கள் பலருடனும் நான் தொடர்புகொண்டிருந்தேன். ஆனால், அவர்களுடைய போக்கும் செயல்முறைகளும் எனக்கு ஒத்துப் போகக் கூடியதாக இல்லை. எனவே, அவசியமாகத் தோன்றிய சந்தர்ப்பங்களில் மட்டுமே அவர்களுடைய எண்ணங்களையும் கருத்தையும் வேண்டினேன். அவர்களுடைய போக்கு எனக்கு உகந்ததாகத் தோன்றியிராதது போன்று அவர்களுக்கும் நான் மேற்கொண்ட நடவடிக்கைகளில் உடன்பாடு இல்லாமலிருந்திருக்கலாம். என்றாலும் அவர்களுடன் உத்தியோகபூர்வமாகத்தான் தொடர்புகொள்ள முடிந்ததே தவிர, நட்புறவுடன் பழகிப் பேச்சு வார்த்தை நடத்த முடிந்ததாகக் கூறுவதற்கில்லை.

1952ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இலங்கை அரசு மிகப் பெரிய தோர் கண்காட்சி ஏற்பாடு செய்தது. அதில் பல நாடுகள், குறிப்பாக இந்தியாவும் பங்குகொண்டன. கால வரையறை குறுகியிருந்ததால் மிகுந்த விரைவில் ஏற்பாடுகள் செய்யவேண்டியிருந்தது. என்றாலும் கண்காட்சியில் இந்தியப் பகுதி, கருத்தைக் கவரும் வகையில் மிக அருமையாக அமைந்திருந்தது. ஒரு மாத காலம் நீடித்திருந்த அக் கண்காட்சி முடிவடையு முன் இலங்கையில் ஓர் விபத்து நிகழ்ந்தது.

பிரதமர் சேனநாயகாவுக்குக் குதிரைச் சவாரி செய்வதில் மிகவும் விருப்பம். அவர் அதைத் தம் உடற்பயிற்சியாகக் கருதியிருந்தார். நாள்தோறும் காலையில் ஒரு மணி நேரம் அவர் குதிரைச் சவாரி செய்வது வழக்கம். ஒரு நாள் அவ்வாறு அவர் குதிரைமீதேறிக் கடற்கரையில் சவாரி செய்கையில் கீழே விழுந்து நினைவிழந்தார். பல மருத்துவ நிபுணர்கள் அவருடைய உயிரை மீட்கப் பல வகைகளிலும் முயன்றும் பயனில்லை. 1952ஆம் ஆண்டில் மார்ச் இருபத்திரண்டாம் நாள் அவர் காலமானார்.

இலங்கை மக்கள் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும்வண்ணம், அவருடைய சடலம் ஒருவார காலத்துக்குப் பொது இடத்தில் வைக்கப் பெற்றிருந்தது. இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் லட்சக் கணக்கில் வந்து அவருக்கு இறுதியஞ்சலி செலுத்தினர்கள். ஆறு நாட்கள் இரவும் பகலுமாக அந்த உடலைக் காண மக்கள் திரள் திரளாக வந்து அவர்மீது தங்களுக்கிருந்த அன்பை வெளியிட்டனர். சடலத்தை மயானத்துக்குக் கொண்டுசெல்லக்கூடிய ஊர்வலத்திலும் மக்கள் திரண்டு வந்தது, மறைந்த தலைவரின்பால் அவர்கள் கொண்டிருந்த மதிப்பையும் அன்பையும் வெளிக்காட்டுவதாக இருந்தது. விரிவான சடங்குகளுடன் சிதைக்குத் தீயிட்டபோது, சூழ்ந்திருந்த மக்கள் தங்கள் அருமைத் தலைவருக்கு இறுதி மரியாதை தெரிவிக்கும் வகையில் ஓர் முறை தாழ்ந்து வணங்கினர். ஸ்டீஃபன் சேனநாயகாவின் வாழ்க்கை திரைக்குப்பின் மறைந்தது.

சேனநாயகா மறைந்ததும், இலங்கையின் அரசியல் தலைமைப் பதவிக்குப் போராட்டம் தொடங்கியது. அவருடைய புதல்வர் டட்லி சேனநாயகாவையே இறுதியில் அவருடைய பதவிக்குத் தேர்ந் தெடுத்தார்கள். தந்தையைப் பின்பற்றிப் புதல்வர் முதன் மந்திரி யானார்.

தந்தையின் திறமையோ செல்வாக்கோ மகனுக்கு இல்லை. ஆனால், இந்தியரைப் பொறுத்த மட்டிலும் சிறிது ஆதரவுடன் அவர் நடந்து கொள்வார் என்று நான் எதிர்பார்த்தேன். ஏனெனில் அவருடன் முதலில் உரையாடியபோது எனக்கு அவ்வாறு நம்பிக்கை தோன்றியது. அந்த நிலையை இந்தியருக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் என்று நான் கருதியிருந்தேன். ஒரு குறித்த காலத்துக்குள் அவர்வசமிருக்கும் குடியுரிமை மனுக்களைப் பரிசீலனை செய்து முடிவு தெரிவிக்க வேண்டியும், அவ்வாறு பரிசீலனை செய்கையில் சட்டபூர்வமாகத் தோன்றும் சிறு குறைகளைப் பொருட்படுத்தாமல் மனுக் கொடுத்தவர் களுக்கு உதவக்கோரியும் நான் கேட்டுக்கொண்டேன். இந்த முயற்சிக் காக, நான் இலங்கை அரசாங்கத் தலைவர்களையும் பல பிரமுகர்களையும் சந்தித்து ஆதரவு விழைந்தேன். அப்போதுதான் இலங்கை - இந்தியக் காங்கிரசார் குடியுரிமை கோரி சத்யாக்கிரஹப் போராட்டம் தொடங்கினர்.

டட்லி சேனநாயகா பதவிப் பொறுப்பேற்று அதிக நாட்களாகவில்லை. அவருக்கும் தம் நிலையில் ஊன்றிக் கொள்வதற்குச் சிறிது காலமாகும். அதற்கு முன் சத்யாக்கிரஹம் தொடங்குவது விவேகத்துக்குரிய செயலன்று என்று நான் கருதினேன். என் கருத்தை இலங்கை இந்தியக் காங்கிரசாரிடம் வெளியிட நான் தயங்கவில்லை. ஆனால் அவர்கள் காத்திருக்க இணங்கவில்லை.

காங்கிரசார் சத்யாக்கிரஹப் போராட்டம் தொடங்கினர். அது நீடித்தும் நடந்தது. குடியுரிமை மனுக்களைப் பரிசீலனை செய்ய வேண்டிய முறைகளைப்பற்றி, பிரதம மந்திரி, குணதிலகா, வெளி நாட்டுப் பிரிவில் செயலாளராக இருந்த வைத்தியநாதன் ஆகியோரிடம் பல முறைகள் பேச்சுவார்த்தை நடத்தினேன். அவர்கள் என் கருத்துக்கு இணங்கினர்கள். இந்த விவரங்களை அவ்வப்போது நான் டில்லிக்கும் தெரிவித்துக்கொண்டிருந்தேன். இந்நிலையில் டில்லியி லிருந்து இலங்கை அரசாங்கத்துடன் நான் நடத்திக்கொண்டிருந்த பேச்சு வார்த்தைகளை அப்போதைக்கு நிறுத்தி வைக்குமாறு எனக்குச் செய்தி வந்தது. இது என்னை வியப்பிலாழ்த்தியது. இலங்கை - இந்தியக் காங்கிரசாரின் தூண்டுதலின் விளைவாகத்தான் டில்லியிலிருந்து எனக்கு அத்தகைய செய்தி வந்ததென்று தோன்றியது.

இந்நிலையில் ஸ்ரீ ஆர். டி. சாரியை இலங்கை-இந்திய உதவித் தூது வராக நியமித்தது, இந்திய அரசாங்கம். அவர் இலங்கையில் பதவி யேற்க வந்தார். ஒரு உதவித்தூதுவரை நியமிக்கப் போவதாக எனக்கு முன்னதாக அறிவித்திருக்கவில்லை. மேலும், நான் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பக்கூடுமென்று சில நாட்களுக்குப் பின்னர் டில்லிப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. இந்திய அரசாங்கம், தங்களுடைய கொள்கைக்கேற்ப நான் மேற்கொண்ட நடவடிக்கை களைத் திருப்திகரமாகக் கருதவில்லை என்று எனக்குத் தோன்றியது.

இச் சூழ்நிலையில் தொடர்ந்து நான் தூதுவராகப் பணியாற்றுவது கடினமென்று தோன்றியது. எனவே, இக் காரணங்கள் கொண்டு, அரசாங்கம் கோரியபடி, 1952ஆம் ஆண்டு செப்டம்பர் ஆறுந்தேதி நான் தூதுவர் பணியிலிருந்து விலகிக்கொண்டேன். அன்றே பிரதமர் நேருவுக்கு ஒரு கடிதம் வரைந்தேன்.

இலங்கையில் தூதுவராகப் பணியேற்று அந்நாள் பதினைந்து மாதம் நிறைவேறுகிறதென்றும், அக் கால வரையறையில் நான் என் மனச் சாட்சிக்கொப்ப, பணிகளை ஏற்று நிறைவேற்ற முயன்றதாகவும், இலங்கை அரசாங்கத்தின்மீது நம்பிக்கைகொண்டு இந்திய நாட்டின் பரந்த நோக்கம்கொண்ட கொள்கைகளைப் பாலிக்கும்வண்ணம் செயல் பட முயன்றதாகவும் அக்கடிதத்தில் தெரிவித்திருந்தேன். முக்கியமான செய்திகளை மிகைப்படுத்தாமலும் பொருளுணர்ந்தும் அவ்வப்போது இந்திய அரசாங்கத்துக்கு அறிவித்து வந்திருந்ததையும் கடிதத்தில் தெளிவாகக் கூறியிருந்தேன். நான் தூதுவர் பணியை நானாக முன் வந்து ஏற்க விரும்புவதாகத் தெரிவிக்கவில்லையென்றும், பிரதமருடைய அழைப்பை என் நாட்டின் ஆணையாகக் கருதி ஏற்றதாகவும் தெரிவித் திருந்தேன். அக் கடிதத்தில் மேலும், இலங்கை அரசாங்கத்துடன்

பேச்சுவார்த்தை தொடர்ந்திருந்ததை நிறுத்திவிடும்படி கோரியதற்கு நான் விளக்கம் வேண்டி இருந்தேன். எவ்வாறுயினும் நடைமுறையிலுள்ள பேச்சுவார்த்தைகளைச் சுமுகமாகவே முடித்துக்கொள்வதற்கான சூழலைத் தோற்றுவிப்பதற்கு என்னால் இயன்ற முயற்சிகளை எல்லாம் மேற்கொள்ள முடிந்ததென்ற நிறைவுடன் இலங்கையிலிருந்து திரும்புகிறேனென்றும் தெளிவுறுத்தியிருந்தேன்.

அத்தகைய கடிதத்தை நான் சிறிதும் வெறுப்புணர்வு கொண்டு எழுதவில்லை யென்றும், ஆனால், டில்லியில் மேற்கொண்ட செயல் முறை என்னை மனம் வருந்தச் செய்திருக்கிறதென்றும் பிரதமருக்குத் தெரிவித்திருந்தேன்.

இக் கடிதத்துக்குப் பதினேழாம் தேதி பிரதமர் மறுமொழி அனுப்பியிருந்தார். இலங்கை - இந்தியர் பிரச்னையைப் பொறுத்தமட்டில் இந்திய அரசாங்கம் மேற்கொண்ட கொள்கையில் எனக்கும் இந்திய அரசாங்கத்துக்குமிடையே வேற்றுமையிருப்பது உண்மையே என்று பிரதமர் ஒப்புக்கொண்டிருந்தார். இலங்கை - இந்தியர் மேற்கொண்ட செயல்களனைத்தும் சரியே என்று இந்திய அரசாங்கம் கருதிவிடவில்லை. அதை அவர்களிடம் அரசாங்கம் அறிவிக்கவும் தயங்கவில்லை. ஆனால், தங்களுடைய நோக்கங்களுக்கு ஆதரவாக இருக்குமென்று கருதி அவர்கள் முயற்சியை மேற்கொள்ளுகையில், அவ்வாறு செய்யாது தடுப்பது இந்திய அரசாங்கத்தின் நோக்கமல்ல என்பதுதான் அக் கடிதத்தின் சாரம். என்னுடைய நோக்கில் சில அரிய உண்மைகள் இல்லாமலில்லை என்றும், ஆனால் அரசாங்கத்தின் நிலை வேறு வகையாகக் கருதுகிறதென்றும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார். அரசாங்கத்தின் இந் நிலையை அரசாங்கம் விரும்பிவண்ணம் விளக்குவதற்கு என்னால் இயலாததுதான் கருத்து வேற்றுமைக்கான காரணம் என்றும் பிரதமர் வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

இக் கடிதத்துக்கு செப்டம்பர் இருபத்தாறும் தேதி நான் அனுப்பிய பதிலைப் பற்றியும் சுருக்கமாகக் கூறவேண்டும். இலங்கை - இந்தியர் விஷயங்களைக்குறித்த இந்திய அரசாங்கத்தின் கொள்கைக்கு வேறுபட்ட நிலையை நான் மேற்கொள்ள முயலவில்லை என்றும், ஆனால் என் அநுபவத்தில் கண்ட வெளிச்சத்தில் இந்திய அரசின் கொள்கையை மறுபரிசீலனை செய்வதற்குகந்ததென்று கூறும் கடமை எனக்கு இருந்ததாக நான் நம்பியதையும் என் பதிலில் தெளிவாக்கினேன். என்னுடைய முயற்சிகளெல்லாம் பிரச்னைகளுக்கு முடிவு காண்பதைக் கருதிச் செயலாக்கப்பட்டவையே—பிரச்னைகளை நீடிக்கச் செய்யும் எண்ணம் கொண்டு செய்யப்பட்டவை அல்ல—இலங்கையில் இந்தியத் தூதுவர் என்ற நிலையில் இந்திய அரசாங்கத்துடன் என்னை இணைத்திருந்த

தொடர்பு எனக்கோர் படிப்பினையாக இருந்திருக்கிறதென்றும், என் பொது வாழ்க்கையில் இந்த அநுபவம் மேலும் உதவியாக இருக்கு மென்றும் நான் அக் கடிதத்தில் விவரித்திருந்தேன்.

நான் தூதுவர் பொறுப்பிலிருந்து விலகுகிறேன் என்ற செய்தி வெளி யானபோது, பல நண்பர்களும் அதற்குக் காரணம் கேட்டார்கள். பத்திரிகைகளில் பல ஊகங்கள் செய்திகளாக வெளிவரலாயின. அவ்வமயம் மௌனம் சாதிப்பதொன்றுதான் உகந்தாக இருந்தது.

தூதுவராலயத்தில் என்னுடன் பணிபுரிந்த பலரும் எனக்கு நல்கிய ஒத்துழைப்புக் குறிப்பிடத்தகுந்ததாகும். அவர்கள் இப்போது வெவ் வேறு நாடுகளில் இருக்கின்றனர். என்றாலும், நான் அவர்களுடன் இப் போதும் அன்புகொண்டு தோழமை பாராட்டிவருகிறேன். இலங்கை யில் என்னுடைய அந்தரங்கச் செயலாளராக இருந்த வெங்கடாத்ரியைப் பற்றித் தனியாகக் கூறவேண்டும். மிகுந்த திறமைசாலி; நம்பிக்கைக் குரியவர். என் கருத்தறிந்து பணியாற்றுவார்; ஒரு வேலை அரை குறையாக நிற்காது; சாக்குப் போக்குக் கூறமாட்டார். நான் நம்பி யிருந்ததை வெங்கடாத்ரி செய்வார் என்று உறுதியோடிருக்கலாம். சில பழைய நண்பர்களை என்னால் கொழும்பில் காண முடிந்தது. அவர் களிடையே பாகிஸ்தான் தூதுவர் சர்தார் சேட்டுவை நான் தனியாகக் குறிப்பிடவேண்டும். வடக்கு மலபாரில் தலைச்சேரியில் வாழ்ந்தவர் அவர். ஒத்துழையாமை இயக்க காலத்தில் காங்கிரஸின் முக்கியத் தொண்டர்களில் அவரும் ஒருவர். திலகர் சுயாட்சி நிதிக்குப் பணம் திரட்டுவதற்கு அவர் என்னுடன் பெரிதும் ஒத்துழைத்திருக்கிறார். தேசத்தொண்டாற்றுவதில் உற்சாகமாக ஒத்துழைத்தவர் சர்தார். ஒரே லட்சியம் கொண்டு, ஒரே நாட்டினர் என்ற ஒட்டுறவுடன் இந்திய விடுதலைப் போரில் தோளோடு தோள் நின்று பணிபுரிந்த நாங்கள் இருவரும், விடுதலைக்குப்பின்னரே கண்டு கொண்டோம் - இரண்டு வேறு நாடுகளின் தூதுவர் என்ற நிலையில்!

நான் இலங்கையிலிருந்து திரும்புவதற்கு ஒரு மாதம் முன்பிருந்தே பிரிவுபசாரங்கள் தொடங்கிவிட்டன. தூதுவர்கள், சிங்களவர், இந்தியர், வெள்ளையர் என்றவாறு பலர் தரப்பிலும் பெருமைக்குரிய விருந்துபசாரங்கள் அவர்களுடைய நட்பையும் அன்பையும் மட்டுமே புலப்படுத்தவில்லை. சமையற்கலையின் அருமை பெருமைகளுக்கும் விளக்கமாக இருந்தன!

கண்டிக்குச் சென்று, நானும் என் மனைவியும் ஸோல்பரி பிரபுவைக் கண்டு விடை பெற்றுக்கொண்டோம். அவருடைய இல்லத்தில் பகலுணவு கொண்டோம். அம்முவுக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியா தென்றாலும், பேசுவதைப் புரிந்துகொள்ள முயன்று, மற்றவர் உரை

யாடும்போது உன்னிப்பாகக் கவனிப்பாள். ஸோல்பரி, இலக்கியம் வரலாறு போன்ற துறைகளில் பற்று மிகுந்தவர். நாங்கள் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு கொழும்புக்குத் திரும்பினேம். ஒரு வாரம் சென்றபின்னர் ஸோல்பரி எனக்கு இவ்வாறு எழுதினர்:

"தாங்களும் தங்கள் மனைவியும் என்னிடம் விடைபெற்றுச் சென்ற போதிலும், தங்கள் இருவரையும் நான் மீண்டும் பார்க்க முடியும் என்று கருதுகிறேன். தங்களுடைய பிரிவில் மிக வருத்தம் தெரிவித்து நான் இக் கடிதம் எழுதுகிறேன். பலமுறை நாம் சந்தித்துப் பேசி யிருக்கிறோம். அச் சந்தர்ப்பங்களிலெல்லாம் தங்களுடைய கருத்து களில் பொதிந்த நியாயத்தையும், தங்கள் பரந்த இதயத்தையும் என்னால் உணர்ந்துகொள்ள முடிந்திருக்கிறது. அறிவுசார்ந்த தங்கள் உரையாடலை அநுபவித்து மகிழும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தாங்களும் தங்கள் மனைவியும் இங்கிருந்து பிரிந்து செல்வதை எண்ணும் போது மிகுந்த வேதனை தோன்றுகிறது. நான் கற்பித்த ஆங்கிலத்தைத் தங்கள் மனைவி மறக்கமாட்டாள் என்று நம்புகிறேன்.

என்றும் உங்கள் நண்பர்
ஸோல்பரி.

இத்தகைய பல கடிதங்களைப் பல நண்பர்கள் எனக்கு எழுதியிருந் தார்கள். பதினைந்து மாதம் என்னோடு ஒன்றாக அலுவலகத்தில் பணி புரிந்த அதிகாரிகள், ஏனைய அலுவலர்களிடம் விடைபெற்றது வேதனைக்குரிய அநுபவமாகத்தானிருந்தது. என்றாலும் வாழ்க்கை நம்மை ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத்தான் அழைத்துச் செல்கிற தன்றோ?

1952 செப்டம்பர் ஏழாந் தேதி, காலையில் நானும் அம்முவும் கொழும்பிலிருந்து புறப்பட்டோம். தூதுவர்களும் நண்பர்களுமாக ஏராளமானவர்கள் எங்களை வழியனுப்ப விமான நிலையத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்டு நான் விமானத்திலேறினேன். ஐந்தே நிமிடத்தில் அது கொழும்பு நகரை விட்டுச் சென்னையை நோக்கி எங்களைக் கொண்டுசென்றது. என் வாழ்க்கை நாடகத்தில் இன்னொரு காட்சி முடிவுற்றது.

44

தாயும் அம்முவும்

தூதுவராகப் பணியாற்றிவிட்டு நான் திரும்பப் போகிறேன் என்று செய்தியறிந்ததுமே, ஸ்ரீ வி. எம். நாயர் நான் மாத்ருபூமி ஆசிரியப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றொரு தந்தி அடித்தார். டைரக்டர்களும் அதற்கு என்னை வற்புறுத்தினர்கள். சில நாட்கள் ஓலவக்கோட்டில் என் இல்லத்தில் ஓய்வு எடுத்துக்கொண்ட பின், நான் அக்டோபர் மாதத்தில் மீண்டும் மாத்ருபூமியின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

இலங்கை செல்வதாக நிச்சயம் செய்தபின், என் தாயிடம் விடை பெற்றுக்கொள்ளச் சென்றேன். அப்போது அவள், ''என் கடைசிக் காலத்தில் நீ என் அருகிலிருக்கவேண்டும். எனக்கு உடல் நலமில்லை என்ற செய்தி கேட்டால் நீ உடனே வரவேண்டும்'' என்றாள். அந்நாள் என் தாய்க்கு எண்பத்தைந்து வயது. நான் இலங்கையிலிருந்து திரும்பி வந்ததில் எல்லோரைக் காட்டிலும் என் தாயே மிகுந்த மகிழ்ச்சி கொண்டாள். சிறிது ஞாபகசக்தி குறைந்திருந்ததே தவிர, வேறு வகையில் அதிகமான நலிவொன்றும் அவளுக்கு ஏற்படவில்லை. எத்துணைத் தள்ளாமையாக இருந்தாலும், சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்து மாத்ருபூமி படிப்பாள். ஒருமுறை நான் பாலக்காட்டில் ஓர் கல்லூரி ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கச் சென்றிருந்தேன். அக் கூட்டத்துக்குத் தானும் வருவதாக அவள் கூறினாள். கூட்டம் நடக்கும் இடத்துக்கு ஏறிச் செல்ல வேண்டும்; அது கடினம் என்று நான் மொழிந்தபோது, ''இனிமேலும் உன் பேச்சைக் கேட்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. அதனால்தான் இந்த 'மீட்டிங்'குக்கு வரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்'' என்றாள் பதிலுக்கு. கூட்டம் நடக்க இருந்த இடத்துக்கு மிகுந்த சிரமம் கொண்டுவந்தாள். கூட்டம் முடியும் வரையிலும் அங்கேயே இருந்தாள். வீடு திரும்பியதும் நினை விழந்துவிட்டாள். இரண்டு மணி நேரம் நினைவிழந்திருந்தாள். அன்று தோன்றிய உடல் நலிவு பின்னர் முற்றிலும் தேறவில்லை. என்ன வானாலும் அம்மா நீராடாமல் இருக்கமாட்டாள். குழந்தைகள் பாட்டுப்பாடும்போது தாளம் தவறினாலும், அபசுரம் ஒலித்தாலும் உடனே அதைக் கூறித் தவறினைத் திருத்துவாள்.

நாட்கள் சென்றன; மாதங்கள் ஓடின. இலங்கையில் இருந்து திரும்பிய பின்னர்தான் நான் 'வாழ்க்கை நினைவுகள்' என்ற நூலை

எழுதத் தொடங்கினேன். அத்தகையதோர் நூலை எழுத வேண்டு மென்று சில நாட்களாகவே எனக்கு ஓர் ஆர்வம் இருந்தது. 'வாழ்க்கை நினைவுகள்' வெளியிட்டபோது, மக்களிடையே அதற்குக் கிடைத்த வரவேற்பு என்னைப் பெருமகிழ்ச்சி கொள்ளச் செய்தது. பலதரப்பட்ட மக்களிடமிருந்து எனக்கு வந்த கடிதங்களிலும் அப் புத்தகத்துக்கு மக்களிடையே தோன்றியிருந்த ஆர்வம் நன்கு புலனாயிற்று.

இலங்கையிலிருந்து திரும்பிய ஓராண்டு செல்லு முன்பே அம்மு நோய்வாய்ப்பட்டாள். கொடிய கான்சர் நோய் அவளைப் பற்றி யிருந்தது. இதற்கு நான்காண்டுகளுக்கு முன்னரே, அவளுக்கு ஒரு ரண சிகிச்சை செய்திருந்தோம். அத்துடன் அந்த பயங்கர நோயின் தொல்லையை நீக்கிவிட்டதாக நம்பியிருந்தோம். அதன் பின்னரே நாங்கள் இலங்கை சென்றோம். அவ்வப்போது மருத்துவர்கள் அவளைப் பரிசோதிப்பது வழக்கம். அஞ்சுவதற்கொன்றுமில்லை என்றும் கூறி யிருந்தார்கள். என்றாலும், கான்சருக்கான ரண சிகிச்சை செய்தாலும், தொண்ணூறு சதவிகிதமும் பின்னும் தொடர்ந்து வருவதற்கு இட முண்டு என்று ஒரு மருத்துவர் என்னிடம் கூறியிருந்தார். மீண்டும் அம்மு நோயின் கடுமைக்குள்ளானாள். பிறருக்குத் துன்பமளிக்கக் கூடாதென்று கருதி, கொடிய வேதனையை அநுபவிக்கவேண்டி இருந் தாலும் அம்மு வாய் திறக்காமல் பொறுத்துக்கொண்டிருப்பாள்.

சிகிச்சைக்காக நாங்கள் சென்னை சென்றோம். கான்சர் நோய்க்கான சிகிச்சை வசதிகள் அண்மைக்காலத்தில் அதிகமாகி இருக்கிறதென் றாலும், அந் நோயை அறவே ஒழிக்கும் வழிகளை இன்னமும் ஆராய்ச்சி யாளர் கண்டுபிடிக்கவில்லை. நான்கு வார சிகிச்சைக்குப் பிறகு, சிறிது ஆறுதலுடன் நாங்கள் கோழிக்கோடு திரும்பினோம். ஆனால் அந்த ஆறுதல் வெகு நாட்களுக்கு நீடித்திருக்கவில்லை. நோய் மீண்டும் கடுமை கூடியது. ஆயுர்வேத சிகிச்சை மேற்கொண்டோம்; பயனில்லை. 1954 ஆம் ஆண்டு ஏப்ரல் எட்டாந்தேதி, அம்முவைக் கோழிக்கோட்டி லிருந்து ஒலவக்கோட்டுக்கருகிலுள்ள எங்கள் 'அத்தாழச்சிற' இல்லத்துக்குக் கொண்டுவந்தோம். அங்கே என் பேத்தி நளினியின் திருமணத்தை நடத்தத் தீர்மானித்திருந்தோம். அம்முவின் உடல் நிலை - நோயின் கடுமை அச்சுறுத்தும் நிலையில் இருந்தாலும், திருமண வைபவத்தை நிச்சயித்தபடி நடத்திவிடவேண்டும் என்று வலியுறுத் தினாள். திருமணமும் அவ்வாறே நிறைவேறியது. ஆறுண்டுக் காலம் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் கல்விப் பயிற்சி பெறச் சென்று தங்கியிருந்த என் மகன் உண்ணியும் அப்போது தாய்நாடு திரும்பி வந்தான்.

நோயை குணப்படுத்த முடியாது என்று நாங்கள் யாவரும் உள்ளூற அஞ்சியிருந்தாலும், நோயாளி எதிர்மாறாக நோய் விரைவில் குண

மடைந்து விடலாமென்றே நம்பிக்கை கொண்டிருந்தாள். அது ஒன்று தான் மிகுந்த ஆறுதலளித்தது. அடிக்கடி அவள் கோழிக்கோட்டுக்கு விரைந்து திரும்பிச் சென்றுவிடலாம் என்று கூறுவதுண்டு. அப்போது தான் நான் 'கடந்த காலம்' நூலை எழுதத் தொடங்கியிருந்தேன். எழுதிய பகுதிகளை என்னைப் படித்து காட்டச் சொல்வாள். அதில் விவரித்துள்ள நிகழ்ச்சிகளைப் பற்றிய தன் கருத்தைக் கூறுவாள்; விட்டுப்போன நிகழ்ச்சிகளை நினைவுறுத்துவாள். 'கடந்த காலம்' படித்துக் கேட்கவேண்டுமென்று மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த அம்முவுக்கு அது நிறைவேறும் நாளில் படித்துக் காட்டி மகிழும் பேறு எனக்குக் கிடைக்கவில்லை. அவளுடைய நோய் அவளை இறுதிக் காலத்துக்குக் கொண்டு சென்றது. மனிதர்கள் நடமாட்டம் அவளுக்குப் பிடிக்கவில்லை. தன்னைச் சுற்றிய உலகைப் பற்றிய சிந்தனை மறந்தாள். ''என்னால் தாங்க முடியவில்லையே, முடியவில்லையே'' என்று இடையிடையே அரற்றலானாள். இரண்டு மூன்று பேர் இரவும் பகலுமாக அத்தாழச்சிற வீட்டில் அவளுக்குப் பணிபுரிந்தோம். அந்த கிராம இல்லம் எனக்கு மிகவும் விருப்பமான இடம். அம்மு நோயாளியாக அங்குப் படுத்திருந்த நாட்களில் அந்தி நேரங்களில் படியை விட்டிறங்கி வயலருகில் நான் காற்றுட நிற்பது வழக்கம். அத்தாழச்சிற-கிராமத்தின் அமைதியும் இயற்கையெழிலும் கொழிக்கும் சூழல்-வலப்புறத்தில் சிறிது தொலைவில் மலம்புழையின் ஒளிவிளக்குகள் ஒளிர்ந்துகொண்டிருக்கின்றன. இடப்புறத்தில் ஒலவக்கோடு ரயில் நிலையத்தின் ஒளிப்பூக்கள் இலங்குகின்றன. முன்புறம் அணியணியாகத் தோன்றும் மலைத் தொடரில் ஆங்காங்குக் காட்டுத்தீ, இருபுறங்களிலும் தெரியும் மின் விளக்குகளைக் காட்டிலும் அற்புதமாய்த் தோன்றுகிறது. அந்த அமைதியின் சூழலை, வேதனை தோய்ந்த அம்முவின் மெல்லிய அரற்றலொலிகள் கீறும்போது, என் இதயம் விதும்பித் துடிக்கிறது. இறைவன் மனிதரை ஏனோ இவ்வாறெல்லாம் வாட்டுகிறான்! தண்டனையா இது? அந்த வேதனையை எவ்வாறேனும் சிறிதளவேனும் என்னால் குறைக்க முடியவில்லையே என்று வருந்திக் கரைந்தேன்.

''இன்று எப்போதும் போலில்லை. ரொம்பக் களைப்பாயிருக்கிறது. டாக்டருக்கு ஆள் அனுப்புங்களேன்!'' என்று அதிகாலை நான்கு மணிக்குக் கூறினாள் அம்மு. அந்நாள் ஜூன் இருபத்து மூன்றாந்தேதி. உடனே டாக்டர் விரைந்து வந்தார். நோவைக் குறைக்க ஏதேதோ செய்தார். பொழுது புலர்ந்தது. நாங்கள் அனைவரும் நோயாளியின் மார்பு விம்மித் தணிவதை மட்டும் பார்த்துக்கொண்டு செய்வதறியாமல் நின்றோம். அம்மு, தன்னை எழுப்பி உட்கார்த்தி வைக்க வேண்டுமென்று விருப்பத்தை மெலிதத் தெரிவித்தாள். படுக்கையில்

சாய்ந்தாற்போன்று மெல்ல எழுப்பி உட்கார்த்தி வைத்தேன். மூச்சு விட அவள் திணறியதைப் பார்க்க இயலாமலிருந்தது. பின்னர் அதிக நேரம் அவள் சிரமப்படவில்லை. உட்கார்ந்த நிலையிலேயே அம்மு இறுதியாக மூச்செறிந்தாள்.

இருபத்தொன்பது ஆண்டுகளுக்குமுன், லக்ஷ்மியும் அதே இடத்தில் தான் இப் பூவுலகைத் துறந்து சென்றாள். அத்தாழச்சிறவின் பரந்த வெளியில் அம்முவுக்கு இறுதிச் சடங்குகள் செய்தோம். அம்முவின் கதை முடிந்தது.

எனது சுக சௌகரியங்களுக்காகவே தன் வாழ்வை ஈந்தவள் அம்மு. அதற்கு மேலானதொரு வாழ்க்கை நோக்கம் அந்தப் பெண்ணரசிக்கு இருந்ததில்லை. செய்திப் பத்திரிகைகள், புத்தகங்கள் படிப்பதற்கு விரும்பினாலும், அரசியல் விஷயங்கள் ஒன்றிலும் பற்றுக் கொண்டவளல்ல. வீட்டுப்பணிகளைச் செவ்வையாகச் செய்துகொண்டு குடும்பப் பாங்குடன் கடமையாற்றுவதையே விரும்பியிருந்தாள். விருந்தினரை உபசரிப்பதும், பணியாளருக்குரிய கட்டளைகளை இட்டு அவர்களை நிர்வகிப்பதுமாக அவள் நன் மனைவியாகத் திகழ்ந்தாள். சமயற்கலையில் அவள் தேர்ந்தவள். இல்லற வாழ்வே ஓர் சாபமாகத் தீர்ந்துவிட்ட அநுபவம் பெற்ற சில நண்பர்களை நான் அறிவேன். அவ்வகையில் நான் பேறு பெற்றவன். லக்ஷ்மியும் அம்முவும் என் வாழ்வில் இசைத்த இனிமை நலங்களுக்காக என்றென்றும் நான் கடமைப்பட்டுள்ளேன். அவர்கள் விட்டுச் சென்ற இனிய நினைவுகள், என் இதயத்தில் என்றும் மங்காதவை.

இது நடந்து மூன்றுவார காலம் செல்லுமுன்பே என் தாயும் இறுதி எய்தினாள். அவள் முடிவு, பழுத்த பழம் காம்பு இற்று உதிர்ந்தாற் போலிருந்தது. தெய்வம் அவளுக்கு நீண்ட ஆயுளை அருளியிருந்தது. என்றாலும் ஒரு தாயின் இடத்தை யாரால் இட்டு நிரப்பமுடியும்? தன்னலமற்ற சேவைக்கு ஓர் உன்னத விளக்கமல்லவா, தாய்மை! மிகக் குறுகிய காலத்துள் என் அன்பைச் சுமந்த இரு பெண்மணிகளும் என்னை என்றென்றைக்குமாக விட்டுப் பிரிந்தனர்.

1955ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் என் மகன் உண்ணியின் திருமண நிகழ்ச்சியை முன்னிட்டு நான் மீண்டும் சிங்கப்பூர் சென்றேன். அம் மண்ணில் அடிவைத்தபோது என்னுள் பல உணர்வுகள் தோன்றின. நாற்பது ஆண்டுக்காலமாகச் சிங்கப்பூரில் வாழ்ந்து வந்த டாக்டர் வி. பி. மேனனின் மகள் லீலாதான் மணமகள். மகளும் தந்தையின் தொழிலுக்குப் பயின்றிருந்தாள். லீலா, சிங்கப்பூர் மருத்துவமனையிலேயே டாக்டராக இருந்தாள்.

ஏழு ஆண்டுகளுக்கு முன் நான் சிங்கப்பூரை விட்டுச் சென்றேன். அந்தக் குறைந்த காலத்துக்குள், சிங்கப்பூரில் நான் கண்ட மாறுதல்கள் என்னை வியப்பிலாழ்த்தின. முன்னர், ஏழெட்டு நாட்கள் கப்பலில் பிரயாணம் செய்தபின்னரே சிங்கப்பூர் செல்ல முடியும். இந்நாளில் சென்னையில் விமானமேறினால் மூன்றரைமணி நேரத்துக்குள் சிங்கப்பூர் வந்து சேரலாம். போருக்குப் பிறகு சிங்கப்பூரில் ஏற்பட்டிருந்த பல்வேறு துறைகளின் வளர்ச்சியை, அங்கே நான் கண்ட புதிய கட்டடங்கள் எடுத்துரைத்தன. கருத்துச் செறிவைப் போன்றே கட்டடக்கலையின் மலர்ச்சியையும், கட்டட அமைப்புகளிலும் தோற்றங்களிலும் விளங்கிய அற்புத மாறுதல்கள் விண்டுரைத்தன. பாதைகளில் சாரி சாரியாகச் சென்றுகொண்டிருந்த கார்களைக் கண்டு வியந்து நின்றேன்.

மூன்றுவார காலம் நான் சிங்கப்பூரில் தங்கியிருந்தேன். பல நண்பர்களைக் காண்பதிலும், பலதரப்பட்டவர்களுடைய நட்புறவைப் புதுப்பித்துக் கொள்வதிலுமாக மூன்றுவார காலம் இனிமையாகச்சென்றது. அந் நண்பர்கள் பலரும் போர்க்காலத்தில் என்னைப் போன்றே துன்பங்களை அநுபவித்தவர்கள். சிலர் என்னுடன் சிறையிருந்தவர்கள். அவர்களில் ஒருவரான ஸர் ராபர்ட் ஸ்காட், அந்நாளில் சிங்கப்பூரில் கமிஷனர்-ஜனரலாக இருந்தார். 'இன்று நாம் மகிழ்ச்சியான நிலையில் கண்டு கொள்கிறோம்' என்று என்னை வரவேற்றார். ஒருநாள் நான் அவருடைய விருந்தினனாகத் தங்கியிருந்தேன். முன்னாளில் பழகிய இடங்களையும், நண்பர் முகங்களையும் காண்கையில் இன்பமும் துன்பமும் கலந்ததொரு உணர்ச்சி தோன்றுகிறது. வாழ்க்கையின் புரிந்து கொள்ள இயலாத பரம ரகசியமான அழகுகளை இத்தகைய சந்தர்ப்பங்களில்தான் நன்கு உணர்ந்துகொள்ள முடிகிறது.

நவம்பர் மாத இறுதியில் நான் தாய்நாடு திரும்பி வந்தேன்.

45

ஐக்கியக் கேரள இயக்கம்

ஐக்கியக் கேரளமென்ற கருத்து எனக்கு அப்போதுதான் உருவாயிற்று என்று சொல்வதற்கில்லை. வெகுநாட்களாகவே என் உள்ளத்தில் அக் கருத்துத் தோன்றியிருந்தது. கேரளத்தில் பல பகுதிகளில், பலருடைய ஆளுகைக்குட்பட்ட ஆட்சி நிலவிவந்தது குறித்து எனக்கு ஓர்புறம் வியப்பும், ஓர் புறம் குறையாகவும் இருந்தது. நான் பொதுவாழ்வில் ஈடுபடுவதற்குப் பல நாட்கள் முன்பிருந்தே இதை எண்ணிப்பார்த்திருக்

கிறேன். ஆனால், அந்நாளைய சூழலில் கேரளத்தில் பல பகுதிகளையும் ஒன்றுக இணைத்து, ஐக்கியக் கேரள அமைப்பைத் தோற்றுவிப்பதற்கு ஒரு வழியும் காணக்கூடியதாக இல்லை. ஆனால் அந்தக் கருத்து என் உள்ளத்தைக் கவர்ந்ததோர் லட்சியமாய் மனதின் ஓர் மூலையில் இடம் பெற்றிருந்தது. சுதந்திர பாரதம் என்ற கருத்தும் அந்நாளில் அத்தகைய தொரு கனவாகத்தானே இருந்தது? 1919ஆம் ஆண்டில் சென்னை மலையாளிகள் சங்கச் சார்பில் நடந்ததொரு கூட்டத்தில்தான் நான் முதன்முதலாக ஐக்கியக் கேரளம் குறித்துப் பேசினேன். திருவிதாங் கூரும், கொச்சியும், மலபாரும் இணைந்ததொரு பிரதேசம் உருவாக வேண்டும் என்று நான் வெளியிட்ட கருத்து அந்நாள் கூட்டத்திலிவரை வியப்பிலாழ்த்தியது. முதிர்ச்சியும் அநுபவமுமற்ற என் உள்ளத்தில் தோன்றிய கருத்தென்று அவ்வெண்ணத்தை, குறிப்பாகத் தன் உரையில் கண்டனம் செய்தார் அவர். அப்போது ஆற்றவேண்டியிருந்த முக்கிய மான பணிகளை விடுத்து, தேவையற்றதும் நடைமுறைக்கு இயலாத மான விஷயங்களில் இளைஞர் சிந்தையைச் செலுத்துவது சரியல்ல என்று அவர் அறிவுரை கூறினர். அன்று மட்டுமன்றி, என்றுமே அது சாதிய மல்லாததொரு செயல் என்றுதான் அந்நாளில் அங்குக் கூடியிருந்தோர் பலரும் கருதியிருந்தனர். ஆனால், இரண்டு ஆண்டுகள் செல்லுமுன்பே, ஐக்கியக் கேரளத்துக்கு ஒருமாதிரியான வடிவம் தோன்றக்கூடிய நிலை வந்து விட்டது. ஒற்றப்பாலத்தில் கூடிய முதல் கேரளப் பிரதேச மாநாட்டில் அதற்குரிய சந்தர்ப்பம் ஏற்பட்டது ஒத்துழையாமை இயக்கம் தோன்றியபோது, காங்கிரசை நிர்வகித்துச் செல்வதற்கு வசதி யாக, மொழியின் அடிப்படையில் புதிய காங்கிரஸ் பிரதேசங்களை உருவாக்கினர்கள். அப்போதுதான் கொச்சி - திருவாங்கூர் - மலபார் மூன்றும் இணையுமாறு, கேரளப் பிரதேசக் காங்கிரஸைத் தோற்று வித்தனர். அந்நாள் நான் கேரளப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டிச் செயலாளனாக இருந்தேன். ஒற்றப்பாலத்தில் நடந்த மாநாட்டில், கொச்சியிலிருந்தும், திருவிதாங்கூரிலிருந்தும், மலபாரிலிருந்தும் பிரதி நிதிகள் கேரளீயரென்ற நிலையில் ஒன்று கூடிய காட்சி, உணர்ச்சி வசப் படச் செய்தது. பிரசாரம், நிர்வாகம் போன்ற செயல்களுக்கான வசதி களை முன்னிட்டுத்தான் அவ்வாறு மொழியின் அடிப்படையில் பிரதேசங் களை உருவாக்கினரென்றாலும், அதுவே சரியான முறையில் கேரளப் பிரதேசம் உருவாவதற்குரிய முதற் படியாயிற்று.

ஓராண்டுச் சென்ற பின், காங்கிரஸ் பிரசாரப் பணிக்காக நான் திருவிதாங்கூர் சென்றபோது, கொல்லத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் கேரளப் பிரதேசம் பற்றிக் கூறினேன். அப்போது கூட்டத்தில் ஒரு மரியாதைக்குரிய மனிதர், ''கேரளம் தனிப் பிரதேசமாவதென்றால்,

கொச்சி-திருவிதாங்கூர் மகாராஜாக்களின் நிலை யாது?'' என்ற கேள்வியை எழுப்பினர். அது சிக்கலான விஷயம்தான். ''சூழ்நிலை மாறும் போது, மன்னர்கள் நிலை ஒரு பிரச்னையல்ல'' என்று மட்டுமே நான் அப்போது அக் கேள்விக்கு விடையளித்தேன்.

1923ஆம் ஆண்டில் மாத்ருபூமி வெளிவரத் தொடங்கியபோது, நான் எழுதிய முதல் தலையங்கத்தில், ஐக்கியக் கேரளம் பற்றிய கருத்தை இவ்வாறு வெளியிட்டிருந்தேன் :

''ஒரு மொழி பேசி, ஒரே வரலாறு, கொள்கைகளால் ஒன்றுபட்டு, ஒரே மாதிரியான பழக்க வழக்கங்களைக்கொண்ட கேரளீயர் இப்போது, பிரிந்து சிதறி நால்வகை ஆட்சியாளருக்குட்பட்டிருக்கின்றனரென்றாலும், கேரளீயரின் பொது நல வளர்ச்சிக்கும் மேன்மைக்கும், கேரளத்தின் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் மக்கள் தம்மில் இப்போதைக் காட்டிலும் இணக்கமும் ஒற்றுமையும் கொள்வது அவசியம் என்று கருதி, மாத்ருபூமி அந் நோக்கத்துக்காக இடைவிடாது முயன்று கொண்டிருக்கும்.''

ஐக்கியக் கேரள லட்சியத்தைப் பரப்ப, நான் கிடைத்த சந்தர்ப்பங்கள் ஒன்றையும் விட்டதில்லை. 1925ஆம் ஆண்டு ஜனவரியில் நான் மாத்ருபூமி ஆசிரியப் பொறுப்பை விட்டுப் பிரிந்து செல்கையில், என்னைத் தொடர்ந்துவந்த பி. ராமுண்ணி மேனன் ஐக்கியக் கேரளம் குறித்த என் முயற்சியைப் பற்றித் தலையங்கத்தில் இவ்வாறு மொழிந்தார்: ''தொலைவில் கண்டிருந்தாலும், சிறிதும் குழப்பமில்லாத நிலையில் ஒளிரும் ஓர் மகத்தான லட்சியம் நிறைவேறிக் காண்பதற்கு அவர் முயற்சி செய்தார்; முயற்சி செய்கிறார். அது பயனற்றது என்று கூறும் துணிவு யாருக்கு இருக்கிறது? கடந்த நான்காண்டு அநுபவங்கள் யாதாயினும், இந் நவீன கேரளத் தோற்றம், நான்காண்டுகளுக்கு முன் இருந்ததைக் காட்டிலும் இந்நாள் மிக அண்மையில் நெருங்கியதாக இல்லை என்று கூறவல்லார் யார்?''

1927ஆம் ஆண்டில்தானே நான் மலேயா சென்றேன்! பின்னர் இருபது ஆண்டுக்காலம் அங்கு வாழ்ந்தேன். இதற்கிடையில் இரண்டு மூன்று தடவைகள் மாத்ருபூமியில் ஐக்கியக் கேரளத்தைப் பற்றி எழுதியிருக்கிறேன். 1934ஆம் ஆண்டில் ஓணப்பதிப்பில், அந்நாளைய சூழ்நிலையில் ஐக்கியக் கேரளம் உருவாக்குவதைப் பற்றி நான் இவ்வாறு எழுதினேன் :

''கொச்சி - திருவிதாங்கூர் அரச குடும்பத்தினர் தத்தம் பதவிகளையும், இடங்களையும் பொது நன்மையைக் கருதி விட்டுக் கொடுக்கவில்லையெனின், அவற்றைச் சுமாரான மாறுதல்களுடன் நிலைநிறுத்தும் வகையில் ஒரு ஃபெடரல் ராஜ்யத்தைத் தோற்றுவிக்க முடியும். மலாய்

நாட்டிலுள்ள 'ஃபெடரேட்டட் மலாய் ஸ்டேட்டஸ்' இதற்கு ஓர் முன் மாதிரியான அமைப்பாகும். ''அங்கே நான்கு அரசர்கள் வாழும் நான்கு பிரதேசங்கள் இணைந்து ஒரு ஃபெடரல் ஸ்டேட்டாகியிருக்கிறது. அவரவர் பிரதேசங்களில் அவரவர் வாழ்ந்தாலும், ஒரு 'ஸ்டேட்' என்ற நிலையில் பொதுவானதோர் ஆட்சி முறையே இந் நான்கு ராஜ்யங் களிலும் நிலவிவருகிறது. இம் முறையை நாமும் பின்பற்றுவது நல மாக இருக்கும். மன்னர்களே இல்லாத ஆட்சி முறையைத்தான் நாம் லட்சியமாகக் கருதி இருக்கிறோம். அது இப்போதைக்கு இயலாதது என்றாலும், ஃபெடரல் சமஸ்தானம் என்ற அமைப்பையேனும் நாம் உடனே தோற்றுவிக்க முயற்சி செய்ய வேண்டும். ஆனால் அதைத் தற்காலத்துக்குரிய அமைப்பாகவே கருதமுடியும்.''

1945ஆம் ஆண்டில் 'வருங்காலக் கேரளம்' என்ற தலைப்பில் சென்னை மலையாளிகள் சங்க வெள்ளி விழாவை முன்னிட்டு வெளியான மலரில் நான் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அதில் என் கற்பனையில் நான் கண்ட கேரளத்தின் பரப்பையும் உருவையும் ஒருவாறு கண்டுகொள்ள லாம். ஐக்கியக் கேரள லட்சியம், இக்காலத்தில் என் சிந்தையை வெகு வாகக் கவர்ந்திருந்தது.

ஒரு தனி மலையாளப் பிரதேசம் மட்டும் என் நோக்கமல்ல. திருவிதாங்கூரும், கொச்சியும், மலபாரும் அவற்றுடன் இணையக்கூடிய மற்றப் பிரதேசங்களும் ஒன்றுக இணைந்த கேரளமே என கற்பனையில் தோன்றிய ஐக்கியக் கேரளம். ஒன்றுக்கு மேற்பட்ட தாய் மொழிகளுக் குரியவர் அங்கு உண்டு.

சுதந்திரப் போராட்டத்தை நடத்துவதிலேயே முழுக் கவனமும் செலுத்தியிருந்த அந்நாளில் ஐக்கியக் கேரள லட்சியத்தை மெய்யாகவே நடைமுறையில் கொண்டு வருவதற்கு எந்த முயற்சியும் செய்ய இயலாமலிருந்தது. ஆனால், கேரள மக்கள் மிகவும் விரும்பத் தகுந்த தோர் அந்த இலட்சியத்தை, ஏராளமானவர் ஆதரித்தனர். ஐக்கியக் கேரளத்துக்கு எதிராக அன்று யாரும் ஒலி எழுப்பியிருக்கவில்லை. எழுப்பியிருந்தாலும், அந்நாளைய நிலையில் அதை யாரும் பொருட் படுத்தியிருக்க மாட்டார்கள்.

1946ஆம் ஆண்டு அக்டோபரில், இருபது ஆண்டுகள் தங்கி வாழ்ந்த சிங்கப்பூரிலிருந்து தாயகம் திரும்பிய பிறகே ஐக்கியக் கேரள லட்சி யத்தை எய்துவதற்கான வழிமுறைகளை ஆலோசனை செய்வதற்கு என் தலைமையில் ஓர் ஆரம்பக் கூட்டம் கூடியது. அதைக் குறித்து முந்தைய அத்தியாயத்தில் விவரித்துள்ளேன். கேரளக் காங்கிரஸ் கமிட்டி தேர்ந்தெடுத்து அமைத்ததொரு 'சப்-கமிட்டி'யின் சார்பாக, ''சிறு துருத்தியில்'' அந்தக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் செய்த முடிவின் பயனுகத்தான் 1947ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஸ்ரீ கேளப்பனின் தலைமையில் திருச்சூரில் வரலாற்றுப் புகழ்பெற்ற ஐக்கியக் கேரள மாநாடு நடைபெற்றது. அதற்கு முன்னரே, கொச்சி மகாராஜா சட்ட நிர்மாணச் சபைக்கு அனுப்பிய செய்தியில், இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "கேரள நாகரிகம் நிலைநிற்க வேண்டுமென்றால், அது ஒரே ஆளுகைக்குட் பட்டிருக்க வேண்டும் என்ற உறுதியான கருத்து எனக்கு இருக்கிறது. அதற்காக மலபாரும், கொச்சியும், திருவிதாங்கூரும் ஒருங்கிணைந்து, கேரளத்துக்குப் பொதுவான ஆட்சிமுறையை நிர்ணயம் செய்ய ஒரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும்."

ஆனால் இக்கருத்து அந்நாளைய திருவிதாங்கூர் ஆட்சியாளருக்கு உகந்ததாகத் தோன்றவில்லை.

கேரளத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் திருச்சூர் மகாநாட்டுக்கு வந்திருந்தனர். பல பொது இயக்கங்களைச் சார்ந்தும் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொண்டனர். அத்துணை அதிகமான பிரதிநிதிகள் கலந்துகொண்ட மாநாடு வேறொன்றும் கேரளத்தில் அப்போதைக்கு நடைபெற்றதாகத் தெரியவில்லை. ஐக்கியக் கேரளத்தை உருவாக்குவதற்குச் சாதகமாக ஒரு தீர்மானத்தை மாநாட்டுக் கூட்டம் நிறைவேற்றியது.

கூட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்கென்று நூறு பேரடங்கியதொரு கௌன்சிலையும் அப்போது தேர்ந்தெடுத்தனர். அவ்வாறு கேரளப் பிரதேசத்தை உருவாக்குவதற்கு அடிநிலை முயற்சிகள் தொடங்கப் பெற்றன.

அம் மாநாடு கூடியபோது நான் சிங்கப்பூரிலிருந்தேன். அங்கிருந்து ஓர் வாழ்த்துச் செய்திதான் என்னால் அனுப்ப முடிந்தது.

1946ஆம் ஆண்டு பிப்ரவரி இருபதாம் தேதி, ஆல்வாயில் ஐக்கியக் கேரளக் கூட்டம் (கன்வென்ஷன்) ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது அந்த இயக்கத்துகு ஓர் புத்துணர்வு கூடியது. முன்பு கூறிய ஐக்கியக் கேரளக் கௌன்சில் உறுப்பினரைத் தவிர, திருவிதாங்கூர் சட்டசபை உறுப்பினர், சென்னை சட்டசபையின் மலபார் உறுப்பினர், கேரளக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர், மேலும் சிறப்பழைப்புப் பெற்றவர், எல்லோருமாக இருநூறுக்கும் மேலான பிரதிநிதிகள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். ஐக்கியக் கேரளக் கௌன்சிலின் தலைவர் ஸ்ரீ கேளப்பன் இந்தக் கூட்டத்துக்கும் தலைமை தாங்கினர்.

"கேரளத்தின் இயற்கையமைப்பில் காணும் ஒற்றுமை இயல்பையும் கேரள மக்களின் பொருளாதார நாகரிக மலர்ச்சியையும், ஆட்சி முறை

வசதிகளையும் கருத்தில் கொண்டு, திருவிதாங்கூரும் கொச்சியும் மலபாரும் அவற்றுடன் இணையக்கூடிய ஏனைய இடங்களையும் ஒருங் கிணைத்து ஒரே பிரதேசமாக்க வேண்டுமென்ற பொதுமக்களின் கருத்தை இக்கூட்டம் வலியுறுத்துகிறது. மேலும். அத்தகைய கேரளப் பிரதேசம், இப்போதைய மக்கள் பிரதிநிதிச் சபையின் நடைமுறை ஆட்சியின்கீழ் சேர்க்கப்படவேண்டுமென்றும் கருதுகிறது'' என்ற தீர்மானத்தை அக் கூட்டம் நிறைவேற்றியது. தீர்மானத்தை நான் முன்மொழிந்தேன். டி. எம். வர்கீஸ் அதை வழி மொழிந்தார். கோழிப்புரத்து மாதவ மேனன், ஸி. கேசவன், பனம்பள்ளி கோவிந்த மேனன் ஆகியோர் அதை ஆதரித்துப் பேசினர்.

அந்தத் தீர்மானம் கோரிய இலட்சியம் நிறைவேறு முன்பே உருவாகி யிருந்த ஐக்கியக் கேரளக் கௌன்சிலுக்கு பதிலாக, பதினைந்து பேரடங்கிய ஐக்கியக் கேரளக் கமிட்டியைத் தேர்ந்தெடுத்தோம். வேண்டிவந்தால், புதிய உறுப்பினரைச் சேர்த்துக்கொள்ளவும் கமிட்டிக்கு அதிகாரம் வழங்கினோம். அந்தக் கமிட்டியில் நான் ஒரு உறுப்பினன். ஐக்கியக் கேரளக் கமிட்டி என்ற பெயரிலிருந்த இந்த அமைப்புத்தான் ஐக்கியக் கேரள அமைப்புக்கான முயற்சிகளைத் தொடர்ந்தாற்றியது. கமிட்டித்தலைவர், கேளப்பன்; செயலாளர், கே. ஏ. தாமோதர மேனன். கேரளப் பிரதேசத்தை விரைந்து உருவாக்கு வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆல்வாய் மாநாடு இக் கமிட்டிக்கு உரிமையும் வழங்கியது.

ஆல்வாய் கூட்டம் நடைபெற்ற ஆறு மாதங்களுக்குள், மிகவும் முக்கியமானதொரு நிகழ்ச்சி நடந்தது. 1949 ஜூலை முதல் தேதி திருவிதாங்கூரும் கொச்சியும் இணைந்தன. கேரளப் பிரதேசம் உருவா வதற்கு அது மிக விரைவில் வழியமைக்கும் என்று பலரும், அதனால் கேரளப் பிரதேசம் தோன்றுவதற்குத் தாமதமாகும் என்று சிலரும் கருதினர்கள். அந்நாள் ராஜ்யங்களுக்கான மந்திரியின் அலுவலகத்தில் செயலாளராக இருந்த வி. பி. மேனனின் சற்றும் தளரா உழைப்பின் பயனாகவே அது சாத்தியமாயிற்று.

திருவிதாங்கூர்-கொச்சி இணைப்பு, ஐக்கியக் கேரளக் கமிட்டி உறுப்பின ரிடையே வெவ்வேறு கருத்துகளைத் தோற்றுவித்தன. ஐக்கியக் கேரள லட்சியத்துக்கு இணைப்பு ஆதரவாக இருக்குமென்று தீர்மானித்த பிறகு, அக் கமிட்டியில் தனக்கு இடமில்லை என்று கேளப்பன் ஐக்கியக் கேரளக் கமிட்டியிலிருந்து விலகினார். அதன் பின்னர், செப்டம்பர் பதினெட்டாம் தேதி, திருவனந்தபுரத்தில் நடந்த ஐக்கியக் கேரளக் கமிட்டிக் கூட்டத்தில் என்னைக் கமிட்டித் தலைவனாகத் தேர்ந்தெடுத் தார்கள். அக் கூட்டத்தில் மேலும், கேரளப் பிரதேசத்தைச் சிறிதும்

தாமதியாமல் உருவாக்க, மத்திய அரசுக்கு ஒரு கோரிக்கை விடுக்கவும், அது சம்பந்தமாக ஆவன செய்யவும் ஒரு சப்-கமிட்டியையும் உருவாக்கினேம். கே. ஏ. தாமோதர மேனன், மாணிக்கத்து நாராயண மேனன், கே. பி. மாதவன் நாயர், ஜி. சங்கரன் நாயர், டாக்டர் ஆர். கிருஷ்ண பிள்ளை ஆகியோர் அக் குழுவின் உறுப்பினர். ஐக்கியக் கேரளக் கமிட்டித் தலைவர் என்ற நிலையில் நானும் அக் குழுவில் இருந்தேன். மத்திய அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க, அக் கமிட்டி ஓர் அறிக்கை தயாரித்தது. மேலும், பாலக்காட்டில் ஐக்கியக் கேரள மாநாடு ஒன்றை நடத்தவும் உறுதி செய்தது.

1949ஆம் ஆண்டு நவம்பர் ஆறுந் தேதி ஐக்கியக் கேரள மாநாடு பாலக்காட்டில் கூடியது. பிரதிநிதிகளும் பார்வையாளருமாக ஏராளமானவர் அம் மாநாட்டுக்கு வந்திருந்தனர். திருச்சூர் மாநாடு, ஆல்வாய் மாநாடு இவற்றைப் போலன்றி, பாலக்காட்டு மாநாடு வித்தியாசமாக இருந்தது. அதற்குச் சில காரணங்கள் இருந்தன.

1950 ஜனவரியில் புதிய குடியரசு ஆட்சி முறை ஏற்படும்போது, கேரளப் பிரதேசத்தையும் உருவாக்கி விடவேண்டும் என்று எங்களில் சிலர் கருதினேம். திருவிதாங்கூர் - கொச்சி இணைந்த பிறகு, கேரளப் பிரதேசம் உருவாவதற்கு, மலபாரையும், அத்துடன் சேர்ந்த பிரதேசங்களையும் அத்துடன் இணைத்துவிட வேண்டும். இக் கருத்துக்கு நாங்கள் ஆதரவாளரைச் சேர்க்க முனைந்தோம். சிலருக்கு எங்கள் செயல் பிடிக்கவில்லை. அதற்கு அவர்கள் தெரிவித்த காரணங்கள் இரண்டு.

அரசியல் மதிப்பில் சென்னை ராஜ்யத்தைக் காட்டிலும் தாழ்ந்த நிலையிலுள்ள பி (பிரிவு) ராஜ்யம், திருவிதாங்கூர்-கொச்சி. மலபார் சென்னை ராஜ்யத்தின் ஓர் பகுதியல்லவா? அந்த நிலையில் மலபார், திருவிதாங்கூர் - கொச்சி ராஜ்யத்துடன் சேர்ந்தால் மலபாரின் அரசியல் நிலை தாழ்ந்துவிடக்கூடும். திருவிதாங்கூர் - கொச்சி ராஜ்யத்தின் அரசியல் மதிப்பு, சென்னை ராஜ்யத்துக்கு இணையாக உயரும் வரையிலும் மலபார் அத்துடன் இணைவது உகந்ததல்ல என்று அவர்கள் விவாதம் செய்தனர்.

இன்னொரு பிரச்னை, ராஜப் பிரமுகர் சம்பந்தமானது. திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்யத்துடன் மலபார் சேர வேண்டுமென்றால், அப் பிரதேசத் தலைவர் ராஜப் பிரமுகராவார். இணைந்துவிட்டால் திருவிதாங்கூர் மன்னரின் வாழ்நாள் வரையிலும் அந்த ராஜ்யத்தில் ராஜப் பிரமுகரே இருக்கக்கூடிய நிலை வரும். ராஜப் பிரமுகரும் கவர்னரும் அதிகாரப் பதவியைப் பொறுத்து ஒரே நிலையில் உள்ளவர்கள்தாம். சிலருக்கு, அந்தப் பதவிக்குரிய பெயரும், ராஜப் பிரமுகருடைய பதவிக் கால

வரையறையும் பிடிக்கவில்லை. மக்களாட்சிக் கொள்கைகளுக்குச் செல்வாக்கும் சக்தியும் பெருகிவந்த அக் காலத்தில், ஒரு ராஜப் பிரமுகரை ராஜ்யத் தலைவராக ஏற்றுக்கொள்வது உசிதமில்லை என்று அவர்கள் பிடிவாதமாகக் கூறினர். விவாதங்கள் சூடுபிடித்தன. ராஜ்யப் பிரமுகர் இல்லாததொரு கேரளப் பிரதேசத்தை ஆதரித்து ஒரு தீர்மானமும் நிறைவேற்றினர். பாலக்காட்டு மாநாடு முடிவடைந்தது.

இரண்டு மாதம் சென்ற பின்னர், துணைக்குழு உறுப்பினர் டில்லிக்குச் சென்று பிரதமரையும், சர்தார் படேலையும், காங்கிரஸ் தலைவரையும் கண்டு, ஐக்கியக் கேரளத்துக்காக ஓர் அறிக்கை சமர்ப்பித்தனர். அந் நாள் ராஜ்யங்களுக்கான மந்திரி அலுவலகச் செயலாளராக இருந்த வி. பி. மேனன், ஐக்கியக் கேரளத் தூது கோஷ்டி உறுப்பினருக்கு உற்சாகமாக ஆதரவும் அறிவுரைகளும் நல்கினர்.

கேரளப் பிரதேசத்தை உருவாக்குவதற்குப் பெரிய இடையூறுகளேதும் இல்லை. ஆனால், ஆந்திரப் பிரதேசத்தை அமைக்குமுன், மற்றப் பிரதேசங்களை உருவாக்குவது சரியில்லை என்றும், தகுந்த தருணத்தில், அரசாங்கமே இவ்வாறான முயற்சியை முன் நின்று செயலாற்றும் என்றும், அதனால் இன்னும் சில நாட்கள் காத்திருப்பது நலமென்றும் அவர் எடுத்துரைத்தார். டிசம்பர் நான்காம் தேதி, நானும் குழு உறுப்பினரும் டில்லியிலிருந்து திரும்பினேம்.

பாலக்காடு மாநாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, ஐக்கியக் கேரளத்துக்கு எதிரான கிளர்ச்சிகளும் அவ்வப்போது தோன்றிக்கொண்டிருந்தன. கேரளப் பிரதேசத்துக் குட்படக்கூடிய இடங்களைக் குறித்துத் தெளிவற்ற பல கருத்துகளைப் பலரும் கூறிக் கொண்டிருந்தனர். ஐக்கியக் கேரளக் கமிட்டி அவ்வப்போது கூடினாலும், குறிப்பிடத் தகுந்த செயலொன்றும் அந்தச் சிறிது காலத்தில் நடக்கக்கூடியதாக இல்லை. இந் நிலையில்தான் நான் இலங்கைக்கு இந்தியத் தூதுவராகச் சென்றேன். 1952ஆம் ஆண்டு செப்டம்பரில் நான் ஊர் திரும்பிவந்த பிறகு ஐக்கியக் கேரள முயற்சி மீண்டும் தொடர்ந்தது.

இதற்கிடையே, 1952ஆம் ஜூன் மாதத்தில் கேரளக் காங்கிரஸ் கமிட்டி இரண்டாகப் பிரிந்தது. திருவிதாங்கூர் - கொச்சி பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி என்றும், மலபார் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி என்றும் தனித்தனியாயின. ஐக்கியக் கேரளம் சம்பந்தமாக அதுகாறும் இல்லாததொரு மாற்றம் இதன் காரணமாக வந்தது. 1953ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்தில், பாலக்காட்டைச் சேர்ந்த மலபார் பிரதேச தேசிய மாநாடு, தென் பிராந்தியப் பிரிவுக்குச் சாதகமாக ஓர் தீர்மானம் நிறைவேற்றியது. 'திருவிதாங்கூர் - கொச்சியும்,

மலபார் உட்பட்ட சென்னை ராஜ்யமும் சேர்ந்தது தட்சிணப் பிரதேசம்'. இதை அம் மாநாடு ஆதரித்தது.

ஐக்கியக் கேரளக் கமிட்டி, ஐக்கியக் கேரளத்தை உருவாக்க முயற்சி செய்துகொண்டிருக்கையில் மலபார் பிரதேசக் காங்கிரஸின் தட்சிணப் பிரதேசத் தீர்மானம் புதியதொல்லைகளைத் தோற்றுவித்தன. இத்தகைய முரண்பாடான கருத்துகளைக் கொண்டவர்களுடன் போராடிக் கொண்டு ஐக்கியக் கேரளக் கமிட்டி தன் முயற்சிகளைத் தொடர்ந்தது.

1953ஆம் ஆண்டு டிசம்பர் இருபத்திரண்டாம் தேதி, ராஜ்யங்கள் மறு சீரமைப்பைக் குறித்து ஆலோசனை செய்வதற்கு ஒரு கமிஷனை நியமிப்பதாக இருக்கும் விவரத்தை, பிரதமர் பார்லிமென்டில் அறிவித்தார். ஒரு வாரம் சென்றதும், மூன்று பேர் கொண்ட கமிஷனின் உறுப்பினரை அறிவித்தார். ஹஸன் அலி, ஹ்ருதயநாத் குன்ஸ்ரு, சர்தார் கே. எம். பணிக்கர் ஆகியோர் உறுப்பினராவர். ஐக்கியக் கேரளம் சம்பந்தமாக, கமிஷனிடம் சமர்ப்பிக்கவேண்டிய அறிக்கை யைத் தயாரிப்பதற்கு, கமிட்டி பிறகு முனைந்து செயலாற்றியது. இதற்குச் சில நாட்களாயிற்று. கமிட்டி இதற்காகப் பலமுறை கூடிற்று.

1954ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கோழிக்கோடு வந்தபோது, ஐக்கியக் கேரளக் கமிட்டியின் அறிக்கையை அவர்களிடம் அளித்தோம். திருவிதாங்கூர் - கொச்சி ராஜ்யமும், மலபாரும், தென் கர்நாடகத்தில் சில பகுதிகளும், நீலகிரி ஜில்லாவில் கூடலூரும், ஊட்டியும், குடகும், லக்ஷத்தீவுகளும் சேர்ந்ததொரு பிரதேசத்தை ஐக்கியக் கேரளமாகக் கமிட்டி அறிவித்தது. கமிஷன் அறிக்கை வெளியாகச் சிறிது கால தாமதமாயிற்று. அதற்கிடையில் பல தடவைகள் நான் கமிஷன் உறுப்பினரைக் கண்டு, கேரளப் பிரதேசத்தில் உட்பட வேண்டிய பகுதிகளைக் குறித்துப் பின்னும் உரையாடினேன். ஐக்கியக் கேரளத்தை உருவாக்குவதற்குச் சாதகமாகவும் பாதகமாகவும், பல இடங்களி லிருந்தும் கமிஷனுக்கு அளிக்கப்பெற்ற அறிக்கைகள் பற்றி அக் காலத்தில் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் மிக ரசமாக இருந்தன. கேரளப் பிரதேசத்துக்குச் சாதகமான அறிக்கை வெளி யானபோது, தட்சிணப் பிரதேசம் கோரி வாதம் செய்தவர்கள், கிளர்ச்சி செய்யத் தொடங்கினர்கள். டில்லியிலும் கேரளத்திலும் அவர்களுக்குச் சில ஆதரவாளரிருந்தனர். ஐக்கியக் கேரளத்துக்கு ஆதர வாளராயிருந்த சில பிரமுகர்களும் கூட, தட்சிணப் பிரதேசம் வேண்டுபவராக மாறியது வேதனையளிப்பதாக இருந்தது. என்னுடைய சில நெருங்கிய நண்பர்களும் அவ்வாறு மாறினர். மலபார் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி இந்த விஷயத்தில் கடைப்பிடித்த முறை மிக

வருந்தத்தக்கதாக இருந்ததென்பதைக் கூறுமலிருக்கமுடியாது. ஒரு பிரபல பத்திரிகை வெளியிட்டாற்போன்று ''கேரளப் பிரதேசம் கோரி முதலில் பேச்சுவார்த்தை தொடங்கியதே காங்கிரஸ்தான். அதற்கு எதிராகக் கடைசியில் விவாதம் செய்வதும் காங்கிரஸ்தான். தேசிய அரங்கில் தோன்றியிருக்கும் வருந்தத்தக்க நிலை இது. கேரளக் காங்கிரஸுக்கு வித்தூன்றிய இடமே மலபார். அந்தப் பழம்பெரும் குடும்பத்திலேயே இந்த விபரீத மாறுதலும் தோன்றியிருக்கிறது.'' அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் கொண்டதோர் ஆலோசனைக் கூட்டத்தை நான் ஒருமுறை கூட்டினேன். காங்கிரஸ் பிரதிநிதிகளைத் தவிர மற்ற எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும் அதற்கு வந்திருந்தனர்!

கமிஷனின் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு இந்திய அரசாங்கம் முடிவு செய்த தீர்மானங்கள் வெளியானபோது, பம்பாயிலும், பிற இடங்களிலும், அவற்றை ஏற்க மறுத்து, பெருத்த கலவரங்கள் விளைந்தன. தங்கள் விருப்பத்துக்கிணங்க ராஜ்யங்கள் மறு சீரமைப்பு செய்யப்படவில்லை என்பதே கலவரங்களுக்குக் காரணம்.

கேரளப் பிரதேசத்தை உருவாக்க முடிவு செய்த பிறகு ஏற்பட்ட நிலைகளைப் பற்றி ஆலோசனை செய்யும்பொருட்டு, ஐக்கியக் கேரளக் கமிட்டி 1956ஆம் ஆண்டு மார்ச் மாதம் நான்காம் தேதி திருச்சூரில் கூடிற்று. கமிட்டி அன்று நிறைவேற்றிய தீர்மானம் குறித்து இங்குக் குறிப்பிடுவது அவசியம் என்று கருதுகிறேன்.

''ஐக்கியக் கேரளக் கமிட்டி, கேரளப் பிரதேசத்தை உருவாக்கத் தொடர்ந்து உறுதியாக நின்று செயல்படுகிறது''

''கேரளப் பிரதேசத்தில் சேரவேண்டிய இடங்கள் சம்பந்தமாகக் கமிட்டி அறிவித்த உரிமைகள் முழுவதையும் ஏற்றிருந்ததாகத் தெரியவில்லை. என்றாலும், கேரளப் பிரதேசத்தை உருவாக்குவது குறித்து எஸ். ஆர். ஸி [ராஜ்ய மறுசீரமைப்புக் கமிஷன்] யின் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு இந்திய அரசாங்கம் செய்த முடிவை, கமிட்டி ஏற்றுக்கொள்கிறது.''

''எல்லைத் தகராறுகள் சம்பந்தமான கிளர்ச்சிகளை நீடிக்க விடுவது, ராஜ்யத்தின் உயரிய நோக்கங்களுக்கே தீங்கு விளைவிக்கக்கூடும் என்று கமிட்டி கருதுகிறது. புதிய கேரளப் பிரதேசத்தின் வெற்றிகரமான முயற்சியில், ஊக்கமும் உற்சாகமுமாகச் சேர்ந்து ஒத்துழைக்க, கமிட்டி பொதுமக்களுக்கு அழைப்புவிடுக்கிறது.''

''கேரள மக்களின் உள்ளார்ந்த விருப்பங்களுக்கெதிராகக் கேரளத்தைச் சென்னையுடனே மைசூருடனே அல்லது இரண்டு ராஜ்யங்களுடனே இணைப்பதற்காகச் சில தலைவர்கள் மேற்கொண்ட

முயற்சிகளைக் கமிட்டி அசீசத்துடனும் வேதனையுடனும் கண்ணுற்று வந்திருக்கிறது. அத்தகைய முயற்சிகளை அறவே தவிர்த்து, கேரளத்தை ஒரு தனிப் பிரதேசமாக்குவதென்று இந்திய அரசாங்கம் செய்திருக்கும் முடிவை, இயன்ற அளவு விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான சூழலை உருவாக்கவேண்டுமென்று கமிட்டி பொறுப்புள்ள எல்லா மக்களிடமும் வேண்டிக்கொள்கிறது.''

ஐக்கியக் கேரளக் கமிட்டி ஏற்றிருந்த நிலை இதுதான். இந்த நிலையைத் தெளிவாகவே, கேரளத்திலும் வேறு இடங்களிலும் கூடிய பல ஐக்கியக் கேரள மாநாடுகளில் நான் எடுத்துரைத்திருக்கிறேன்.

நான் விரும்பியிருந்தாற்போன்று கேரளப் பிரதேசம் உருவாகவில்லை என்பதை அறிவேன். திருவிதாங்கூரின் நான்கு தாலூக்காக்களும், கூடலூரும் கேரளப் பிரதேசத்தில் உட்படாதது குறித்து மிகுந்த வருத்தமே. ஆனால், தட்சிணப் பிரதேசத்தைக் காட்டிலும் இவ்வாறான கேரளப் பிரதேசம் உருவாவதை நான் வரவேற்றேன். என்னுடைய கருத்தையும் மாத்ருபூமியின் போக்கையும், கடுமையான மொழியில் கண்டனம் செய்து பல கடிதங்கள் எனக்கு வந்தன. ராஜ்ய மறு சீரமைப்பு மசோதா நிறைவேறும் வரையிலும் என்ன நேரிடப் போகிறதென்பது நிச்சயமில்லாமலிருந்தது. அது நிறைவேறியதும், கேரளப் பிரதேசம் உருவாவது உறுதியென்று கண்டதும் அளவற்ற மகிழ்ச்சி கொண்டேன். நெடுங்காலமாக ஆவல் கொண்டு எதிர் நோக்கியிருந்த ஒரு விருப்பம் நிறைவேறும்போது ஆனந்தமும் நிறைவும் ஏற்படுவது இயல்புதானே?

அனைத்துக் கேரள சாஹித்ய பரிஷத்தின் வெள்ளிவிழாவை இக் காலத்தில்தான் கொண்டாடிஞேம். இவ் விழாவில் நான் பேரார்வம் கொண்டு தலைமை தாங்க இசைந்தேன். பரிஷத், கேரளத்தில் இலக்கிய வாதிகளின் மிகப் பெரியதொரு அமைப்பு என்பதனால் மட்டுமல்ல - ஐக்கியக் கேரளம் தோன்றிய உடனே பரிஷத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டமும் இசைந்து வந்தது. இதை ஒரு நல்ல சூசமாக நான் கருதினேன். பரிஷத் அரசியலுக்கப்பாலிருந்து இயங்கினாலும், கேரள மக்களை ஆண்டுதோறும் ஒரே மேடையில் கொண்டுவந்து, அவர்கள் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொள்வதற்கும் ஒற்றுமைக் கான வித்துக்களை ஊன்றுவதற்கும் வழியமைத்தது. பண்பாட்டு ரீதியானதோர் ஐக்கியக் கேரளத்துக்காகப் பரிஷத்தைப் போன்று முனைந்து ஈடுபட்ட நிறுவனம் வேறொன்றுமில்லை.

பாரதத்தின் முக்கிய மொழிகளில் பிரபலமான சில இலக்கிய ஆசிரியர்கள் இந்த விழா நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப்பெற்றிருந்தனர். இதன் காரணமாகவும் நான் தலைமை தாங்குவதில் பெருமகிழ்ச்சி

கொண்டேன். குறிப்பாக, மொழியின் அடிப்படையில் பிரதேசங்களை உருவாக்குவது இந்தியருடைய ஒற்றுமையைக் குலைக்காது; அதற்கு உறுதி சேர்க்கும் என்று நான் அந்நாளில் நம்பி இருந்தேன். வெவ் வேறு மொழிப் பிரதேசங்களுடன் மிக நெருங்கிப் பழகி, பண் பாட்டிலும் இலக்கியத்திலும் நிலையுறுத்தப்பெற்ற பாரத ஒருமைப் பாட்டை உறுதியாகக் காணலாம் என்று கருதினேன். இலக்கிய வாதிகளின் மாநாட்டை அத்தகையதோர் கருத்தின் விளக்கமாகவே கருதி நான் மிகுந்த உவகை கொண்டு வரவேற்றேன்.

என் தலைமையுரையில், இலக்கியவாதிகள் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களைப்போல் சுட்சிகூடிச் சச்சரவுகள் செய்வதைப் பற்றியும், அதலை ஏற்படும் முறைகேடுகள் குறித்தும் விமரிசனம் செய்தேன். அறிவியற் சிறப்புக்களையுடையதும் எழுச்சியூட்டக்கூடியதுமான உயரிய நூல்களை ஏராளமாக உருவாக்க வேண்டுமென்று இந்நாளைய எல்லா இலக்கியப் படைப்பாளிகளையும் வெளியீட்டாளரையும் ஒத்துழைக்கு மாறு கேட்டுக்கொண்டேன். சிறந்த நூல்கள் உருவாவதற்கு அவ் வாறான ஒத்துழைப்பு இன்றியமையாததென்று சுட்டிக்காட்டினேன். பரிஷத்தின் நடைமுறையில் கைக்கொள்ளவேண்டிய காலத்துக்கேற்ற சில சீர்திருத்தங்களையும் எடுத்துக் கூறினேன்.

மாநாட்டில் கட்சி வேற்றுமை பாராட்டாமல் பல மக்கள் கலந்து கொண்டது என்னை உணர்ச்சிவசப்படச் செய்தது. இலக்கிய வளர்ச்சி யில் எல்லாத்துறைகளையும் சார்ந்த கேரளமக்கள் காட்டும் பற்றும் ஆர்வமும், கேரளத்தின் நாட்டு முன்னேற்றத்தில் ஏற்படவேண்டும் என்று நான் விரும்பினேன். பண்பாட்டு நாகரீக அரங்கில், ஏற்பட் டிருக்கும் இந்த ஒத்துழைப்பு தேசிய அரங்கில் ஏற்பட்டால் கேரளப் பிரதேசத்தின் வருங்காலம் குறித்து எவரும் கவலையுற வேண்டாம். கேரளத்தின் விரைவான முன்னேற்றத்தில் எல்லா மலையாளிகளுக்கும் உள்ளார்ந்த ஆர்வம் உண்டு என்பது எனது நம்பிக்கை. தேசிய, பொரு ளாதார, சமுதாய, அரங்குகளில் ஒத்துழைப்புக்கான அறிகுறிகள் தோன்றத் தலைப்பட்டிருப்பதாகவும் எனக்குத் தோன்றிற்று. இலக்கிய மாநாட்டில் கண்ட ஊக்கமும் ஒற்றுமையுணர்வும், கேரளத்தின் உன்னதமான எதிர்காலத்துக்கான அறிகுறிகள் என்ற நம்பிக்கையுடன் நான் மாநாட்டிலிருந்து திரும்பினேன்.

1956ஆம் ஆண்டு நவம்பர் முதல் தேதி கேரளம் ஒரு தனிப் பிரதேச மாயிற்று. அதைக் கொண்டாடும் விழாக் கூட்டத்தில் தலைமை தாங்க நான் எரணாகுளம் சென்றேன். மக்கள் திரள்திரளாக வந்து அந்த மாபெருங் கூட்டத்தில் உற்சாகமாகக் கலந்து கொண்டார்கள். கேரள ராஜ்யத்தின் மீதிருந்த என் எதிர்கால நம்பிக்கை அதைக்

கண்டதும் மேலும் உறுதியாயிற்று. கேரளத்தைப்போன்றே ஏனைய இடங்களிலும் உற்சாகமும் களிப்புமாக அந்நாளைக் கொண்டாடினர். ஒளி மிகுந்ததொரு எதிர்காலத்தை நோக்கி உள்ளம் நிறைந்த நம்பிக்கையுடன் செல்லும் மக்களை நான் இவ்விழா நிகழ்ச்சிகளில் கண்டு உணர்ச்சிப் பரவசமானேன்.

46

என் கற்பனையிலுள்ள கேரளம்

பேரார்வம் கொண்டு ஓர் லட்சியத்தை எய்துவதற்காக ஓய்வு ஒழிதலின்றி முயற்சி செய்யுங்கால், அம் முயற்சியே பேரானந்த அநுபவத்தை நல்குவதாகும். லட்சியத்தை அடைந்தபின் முழுதுமாக எய்தும் ஆனந்தத்தில் வெகுநாட்கள் திளைத்துவிட முடியாது. சிறிது நேரம் சென்றபின் இன்னது செய்வதென்று புரியாததோர் மலைப்பு உண்டாகிறது. சிந்தனைகள் அலைக்கழிக்கின்றன. அத்தகையதோர் மனநிலை, கேரளப் பிரதேசம் உருவானபின், பிரச்னைக்குள்ளான தாயிற்று.

கேரளப் பிரதேசம் உருவாகிவிட்டது. இனி என்ன செய்யவேண்டும்? கேரளத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வது சாத்தியம் தானு? அதற்குரிய வழி யாது? முன்னேற்றத்துக்கான திட்டங்களைப் பற்றி நான் கூறவில்லை. திட்டங்களை உருவாக்கிச் செயலாற்றுவதற்கான மனநிலை குறித்துத்தான் கூறப்போகிறேன். நம் மக்கள் உற்சாகம் நிறைந்தவர்தாம். தொண்டாற்றுவதற்கும் பின் வாங்க மாட்டார்கள். ஆனால் பெரும்பாலோரும் யாது செய்ய வேண்டுமென்ற தெளிவில்லாத மூடர்கள் என்றுல் தவறில்லை. நமக்குள் நம் இலட்சியத்தைப் பற்றிய தெளிவானதோர் விளக்கமான அறிவு வேண்டும். லட்சியம் வெறும் ஆர்வமாக இருந்தாலும் போதாது. எத்துணைக் கவர்ச்சிகரமான லட்சிய மென்றாலும், முயற்சிகளாலும் செயல்முறை கொண்டும் நிறைவேற்றுவதற்குரிய தெளிவான திட்டங்களிடவில்லை என்றுல் பயனில்லை. எந்த லட்சியத்தை நோக்காகக் கொண்டு நாம் செயலாற்ற வேண்டும்?

என் கற்பனைக் கேரளம், நான் இன்று காணும் கேரளத்திலிருந்து மிகவும் வேறுபட்டதாகும். வறுமையும் தொழிலில்லாமையும், அங்குக் கிடையா. மலினமடைந்த ஓலைக் குடில்களையும், பட்டினியால் வாடும்

மக்களையும் அங்கே காண முடியாது. புதிய தொழில்களும், பெருமளவி லான வாணிபங்களும், சீர்திருத்தம் பெற்ற புதிய விவசாய முறைகளும் கேரளத்தை முழுதுமாக மாற்றிவிடும். ஆரம்பப்பள்ளி இல்லாத கிராமம் இருக்காது. பசுமை கொழிக்கும் வண்ணப் பூங்காக்களில் ஓடி விளையாடும் குழந்தைகளின் ஆரோக்கியம் காண்பதற்கு மனம் உவகை கொள்ளும். நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் கச்சிதமாகவும் தூய்மையாகவும் காணப்பெறும் சாலைகளும், தெருக்களும், நேர்த்தியா கவும் பலவாறுன எழில்மிகு தோற்றங்களுடனும் கட்டப்பெற்ற கட்டடங்களும், பார்வையாளர் மனங்கவரும் வண்ணமாயிருக்கும். மக்களின் மரியாதை நிரம்பிய பேச்சும், பழகு முறையும் வந்தவர் மனம் மகிழச் செய்யும். மருத்துவமனைகளும் சிகிச்சை வசதிகளும் பெருகி யிருந்தாலும், நோயாளிகள் மிகச் சிலரே இருப்பர். தொழிலாளர், மகிழ்ச்சியும் நிறைவும் குலவும் முகத்தினராய், பணி முடிந்ததும் மாலையில் வீடு திரும்பி, உடுப்பு மாறி, பொழுது போக்கும் உல்லாச இடங்களுக்குச் செல்லும் காட்சி காண்பதற்கு எத்துணை மகிழ்ச்சி யளிக்கக் கூடியதாக இருக்கும்! அகன்ற சாலைகளில் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருக்கும் போக்குவரத்து ஊர்திகளும், சீருடை அணிந்து மலர் முகத்தினராகப் பணிபுரியும் ஊர்திப் பணியாளரும், எத்துணை மன-நிறைவளிக்கின்றனர்? பயணியரின் வசதிக்காக ஆங்காங்கு நிறுவப்பெற்ற உணவு விடுதிகள், இன்னொரு வகையில் புதுமை கூட்டும். குறைந்த விலைக்கு, சத்துள்ள நல்லுணவு கிடைக்கும் இங்கே.

அரசாங்க அலுவலகங்களில் கச்சிதமாகவும் ஒழுங்காகவும் பணிகள் நடைபெறும் அருமை சொல்லத்தரமன்று. மக்களின் தேவைகளை உணர்ந்து, நொடிகளில் நிறைவேற்றித் தரச் சித்தமாக இருக்கும் அலுவலரைப் பற்றிப் பெருமையாகக் கருதவேண்டும். பயணிகளின் சொர்க்கமென்று கேரளத்தைக் கருதும்வண்ணம் காண்பதற்கினிய காட்சிகள் ஏராளமாக உண்டு. அவர்களுக்கு விருப்பம் போல் பிரயாணம் செல்ல வசதிகளும், ஏற்ற சுற்றுலா விடுதிகளும், ஏராள மான மக்களைக் கவர்ந்திழுக்கும். புதிய கேரளத்தின் ஆக்கத்துக்கான வருமானத்தைக் குவிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும். பிச்சை எடுப்பவரையோ, பசியால் தள்ளாடி வருப வரையோ காணமுடியாது. விளையாட்டுக்கான தலங்கள் பெருகி யிருக்கும். மேனி நலனையும், வலிமையையும், எழிலையும், வீரத்தையும் பெருக்கிக்கொள்ளும் வகையில் எத்தனை எத்தனை விளையாட்டுகள்! ஆண்டுதோறும் திருநாவாயில் நடக்கும் கேரளக்கலை விழா கேரளத்தின் பெயரையும் புகழையும் விளக்கவல்ல கலைத்திருவிழாவாக இருக்குமே?

மக்களின் பிரதிநிதிகள் கூடும் சட்டசபை மண்டபம், புதுமையெழில் மிகுந்ததாக இருக்கும். கட்டப்பெற்றிருக்கும் பாங்கு மட்டுமல்ல; பார்வையாளரின் கவனம் கட்டடத்துக்கப்பாலும் கவர்ந்திழுக்கப் பெறும் வகையில், உறுப்பினரனைவரும் மதிப்புக்கும் மரியாதைக்கு முரிய உடுப்பணிந்து அவையின்கண் வீற்றிருப்பர். நாகரிகமாக நயந்து பழகும் இனிய தன்மையும், அன்னரின் அறிவார்ந்த உரைகளும் விவாதங்களும், பார்வையாளர் கேரள சட்டசபையைக் காண்பதற்கு விரும்புமோர் இடமாக உயர்ந்து நிலைபெறும்.

இவ்வாறான கற்பனைகளுக்கேற்றவாறு, பொருள் வளமும், நாகரிக மலர்ச்சியும் கை கோத்துக் குலவும் ஐக்கியக் கேரளம் நம் இலட்சியம். அதன் அடிநிலையே ஐக்கியம்தான். வெவ்வேறு சமுதாயத்தினர், சமயம் சார்ந்தவரின் உள்ளார்ந்த ஒற்றுமை. அத்தகையதோர் கேரளத்தை நாம் அடிநிலையிலிருந்து உறுதியாக அமைக்க வேண்டும்.

லட்சியம் இன்னதென்று தெளிவாக உறுதியாகத் துலங்கிவிட்டால், பின்னர் வழிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். செயல்முறையில் ஏற்படக்கூடிய தடங்கல்களைப்பற்றியும் யோசனை செய்யவேண்டும். பொதுநலப் பணிகளில் குறுக்கிட்டு இன்னல் விளைவிப்பவர் அநேகமாகக் குறுகிய மனப்பான்மை கொண்ட வகுப்புவாதிகள்தாம். பிறருடைய கருத்துகளை மதிக்கத் தெரியாத மனப்பான்மை, உழைப்பதற்கு ஊக்கமும் உற்சாகமும் கொண்டவர்களையும் பாதித்துவிடுகின்றன.

''எனக்கு, என் இனத்தார், என் சாதி'' என்ற எண்ணங்களுக்கு அப்பால் சென்று, ''என் நாடு - என் நாட்டுக்குப் பின்னரே நான்'' என்ற மனப்பான்மை கொள்ளவேண்டும். ''ஐக்கியக் கேரளம் எனக்கு என்ன கொடுத்தது என்று கேட்டுக்கொள்வதற்கு பதிலாக, ஐக்கியக் கேரளத்துக்கு நாம் என்ன செய்தோம்'' என்று கேட்டுக்கொள்ள வேண்டும் ஒவ்வொருவரும். எந்த சமயத்தவராயினும், எந்தக் கொள்கை கொண்டவராயினும் நாட்டுமக்கள் என்ற நிலையில் கொண்டதொரு பொது லட்சியத்தைச் சொந்த நோக்கங்களுக்காக பலி கொடுத்து விடலாகாது.

லட்சியத்தை நோக்கிச் செல்வதற்குத் தன்னம்பிக்கை இன்றியமையாததாகும். திறமை இருந்தால் போதாது; உற்சாகம் இருந்தாலும் போதாது. எண்ணிய கருமத்தைத் திண்ணமாக முடிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை அவசியம். தன்னம்பிக்கையுடைய மனிதனே செயற்கரிய செய்ய வல்லவன். ''பிரிட்டிஷ் ஆதிக்கத்தில்தான் நாம் அடிமையாகவே இருந்துகொண்டிருப்போம்'' என்று நாம் உறங்கிக்கொண்டிருந்தோம் ஒரு காலத்தில். ''இன்பமும் சுதந்திரமும் வெள்ளையருக்கே; வறுமையும் மிடிமையும்தாம் நமக்குரியவை'' என்று ஒடுங்கிக் கிடந்த

காலம் இருந்தது. அதெல்லாம் வெறும் நினைவுகளாக இப்போது நிலைமை மாறிவிடவில்லையா? அதை எப்படிச் சாதித்தோம்? தன்னம் பிக்கை கூடிய முயற்சிகளினால் அல்லவோ சாதித்துக்கொண்டோம்?

இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். அதுதான் ஒற்றுமை. ஒன்றுபட்டாலே நாம் கருதிய இலக்கை எய்த இயலும். எத்தனை சமர்த்தனும், தீரனும், உற்சாகமுடையவனும்கூட, பிறருடன் இணைந்து செயல்படவில்லையெனின் அந்த மேன்மைகளால் ஒரு பயனு மில்லை. நாடு மேன்மையுற, ஒன்றுபட்டாலே நல் வாழ்வு வாழலாம்.

ஒத்துழைக்கும் மனப்பாங்கு; வட்சியத்தைத் தெளிவாகப் பாகுபாடு செய்துகொண்டு வழிமுறைகளை ஆராய்தல்; தன்னம்பிக்கை கொண்டு அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படும் உறுதி. புதிய கேரளத்தை வண்மையும் மேன்மையுமாக உருவாக்கி நிலைபெறச் செய்வதற்கு இவை அனைத்தும் இன்றியமையாதவை. மக்களுக்கு இதுகாறும் நல்ல முறையிலான குடிமையுணர்வு தோன்றியிருக்கவில்லை. நாட்டின் பெருமையை, நல்லுணர்வு பெற்ற குடிமக்களல்லவா நிலைநிறுத்தக் கூடியவர்? அத்தகைய ஆழ்ந்த உணர்வை, ஆழ்ந்த பயிற்சிகளால் மட்டுமே மக்களிடத்தில் தோற்றுவிக்கமுடியும். ஒரு குடிமகனுக்கு, அவனுடைய நாட்டைச்சார்ந்து அரியதொரு பொறுப்புண்டு. அதை நிறைவேற்றுதற்குரிய பயில்முறை, வாழ்வின் பல்வேறு பகுதிகளையும் சார்ந்திருக்கவேண்டும். அதனால், குடிப்பயிற்சிச் சங்கங்களை நாடு முழுதும் தோற்றுவிப்பது ஒன்று. இந்நாட்டின் குடிமக்கள் என்ற நிலையில், நம் பொறுப்பைச் செவ்வனே உணர்ந்து செயலாற்றுவதற் குரிய இயல்புகளை வளர்ப்பதில் நாம் கவனம் செலுத்தவேண்டும்.

1. கல்வியறிவு : ஜனநாயக ஆட்சிமுறையில் மக்களிடம்தான் அதிகாரம் நிலைகொண்டிருக்கிறது. முதற்கண், மக்களுக்குச் சுயமாகச் சிந்திக்கக்கூடிய ஆற்றல் வேண்டும். சரியான கருத்தை உருவாக்கிக் கொள்வதற்குரிய அறிவை மக்கள் யாவரும் பெறவேண்டும். அறிவைச் சார்ந்திராத அதிகாரம் அபாயத்தை விளைவிக்கக்கூடியது. பெரிய பதவிகளில் இருப்பவர்களைப் பற்றி நான் இங்குக் கூறவில்லை. பல்வேறு தரத்திலுள்ள மக்களைப்பற்றியே குறிப்பிடுகிறேன். வாக் குரிமை பெற்றவர்களையும், இல்லாதவரையும், சட்டசபைகளிலும் சுயாட்சி மன்றங்களிலும் இருப்பவர்களையும், வெளியே வெவ்வேறு தொழிலைச் சார்ந்து பிழைப்பவர்களையும், பெண்களையும், ஆண்களையும், எல்லோரையும் பாதிக்கக்கூடிய விஷயங்களைக் கூறுகிறேன். இன்றைய உலகைப்பற்றிய சுமாரான உணர்வேனும் பிரக்ஞையேனும் பொது வாக மக்களிடம் இருக்கவேண்டும். பின்னர் நம்முடைய தனிப்பட்ட பிரச்னைகளைப்பற்றிய அறிவையும் அவர்கள் பெற்றிருக்கவேண்டும்.

கல்வியறிவு-படிப்பு என்று வருங்கால், பள்ளிக்கூடங்களிலோ, பல்கலைக் கழகங்களிலோ சென்று கற்கும் விஷயங்களைப்பற்றி நான் இங்குக் குறிப்பிடவில்லை. குடிமக்களின் பொதுவான அறிவு மலர்ச்சியையே முக்கியமாகக் குறிப்பிடுகிறேன். சட்டசபைகளில் பதவி ஏற்றிருப்பவர்களுக்கு, தங்கள் செயல் பொறுப்புக்கு இன்றியமையாததான தனிக் கல்வி வேண்டும். விஷயங்களை உரியவகையில் மனதில் புரிந்து கொண்டு தெளிந்தால்தான் அவையில் செல்வாக்குடன் செயலாற்ற முடியும். அவ் வகையில் மக்களுக்கான பொது அறிவுக் கல்வியும், தனிப்பட்ட முறையில் பணிபுரிவோர்க்கு அப் பணிக்கேற்ற சிறப்புக் கல்வியும் பெறுவதற்கான அமைப்புகள் வேண்டும்.

2. நடத்தை: நடத்தை என்றால் யாது? அதில் பல தன்மைகள் அடங்கி இருக்கின்றன. பிறருக்கு மகிழ்ச்சியும் நம்பிக்கையும் தோன்றுமாறு பழகுவது நன்னடத்தைக்குரிய சிறப்பு. சொல்லும் மொழிகளுக்கேற்ப செயலாற்ற—ஏற்ற பொறுப்பைச் செய்து முடிக்க—பிறருடைய நலங்களிலும் வசதிகளிலும் ஊறு புரியாமலிருக்க—அநீதி-அக்கிரமங்களைக் கண்டு தாளாமல் எழுச்சி கொள்ள—இத் தன்மைகளனைத்தும் ஒருங்கிணையப் பெறுவதே நன்னடத்தை. ஒரு சிறந்த குடிமகனுக்கு இத் தன்மைகள் வேண்டும். இவ்வியல்புகளை உருவாக்கவல்ல ஒழுங்கு முறைகளை மக்களுக்கு அவசியம் பயிற்றவேண்டும். குடிமக்களுக்குக் கல்வியைக் காட்டிலும் நன்னடத்தை முக்கியமாக இருக்கவேண்டும்.

3. பாங்கு: இச் சொல்லுக்கு உடல் தூய்மை என்பது மட்டும் பொருளல்ல. உடல் தூய்மை தலையாய அவசியம்தான். ஆனால் அது மட்டும் போதாது. வாழும் வீடும் சுற்றுப்புறங்களும், சுத்தமாகவும் எழில் மிகுந்ததாகவும் திகழ வேண்டும். அவ்வாறு வைத்துக் கொள்வது ஒரு பண்பு. கிராமங்களும் நகரங்களும் தூய்மையுடன் விளங்குவதற்கு, ஒவ்வொரு குடிமகனும் இத்தகைய ஆழ்ந்த மனப் பாங்கு கொள்ளல் வேண்டும். கிராம மக்கள் ஒருங்கிணைந்து முயன்றால் கிராமங்களை நேர்த்தியாக வைத்துக்கொள்ள முடியாதா? நம் நாடு எத்துணை எழிலுடனும் பாங்குடனும் விளங்கக்கூடும்?

4. உடை: உடை மனிதனுடைய உடலை மட்டும் காக்கவில்லை. அவனுடைய மதிப்பைக் காப்பதற்கும் உடை உரியதாகிறது. இந்நாளில் உடை அணியும் பழக்கங்களில் தோன்றியுள்ள அலட்சிய மனப்பான்மை தாள இயலாதவண்ணம் ஒழுங்கீனங்களுக்கு வழி வகுத்திருக்கின்றன. மேற்கத்திய பாணியில் உடை அணிவதாகச் சிலர் கூறுவார்கள். தொன்மையான காலந்தொட்டே, நம் முன்னோர், அழகும் கச்சிதமுமாக உடை அணியும் மேன்மையான வழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். அண்மையில் சிறிதுகாலமாக அவ் வழக்கத்துக்

கேற்ப யாரும் உடை அணிவதில்லை. எளிய வாழ்க்கை என்ற பெயரில், எந்த இடத்துக்கும், எந்த உடையையும் அணிந்து செல்லலாம் என்ற வழக்கம் நடைமுறையாக வந்துவிட்டது. இவ்வகையில், இளைஞர், முதியோர் இரு சாராரும் தவறிழைக்கின்றனர். நமது சட்டசபை களிலும், அரசாங்க அலுவலகங்களிலும், சில கோலங்களைக் காண் கையில், நமது மதிப்பு உயருவதற்கே வழியிருப்பதாக நம்பிக்கை விழவில்லை. அலுவலக ஒழுங்கை நிலைநிறுத்த, உடைப்பாங்கிலும் ஒழுங்கும் தூய்மையும் அவசியமாக இருக்கவேண்டும். ஆடம்பரம் தேவையில்லை. ஆனல், தூய்மையும் எழிலும், கச்சிதமான பாங்கும் பொருத்தமும் இசைய உடையணிய வேண்டும். அது நம் நாகரிகத் தின் ஓர் பகுதி.

5. உடல்நலம்: உடலுறுதியையும், மேனி எழிலையும் ஊக்குவிப்பதற் கான பயிற்சிகளை இளைஞருக்கு அளிக்க வேண்டும். கால்-பந்து, கிரிக்கெட் போன்ற ஆட்டங்களில் இளைஞர் பற்று மிகுந்தவராயிருக் கின்றனர். ஆனல், அது போதாது. உடல் வலிமையும் மேனியழகும் பெறுவதற்கு, எல்லா உறுப்புகளுக்கும் சீரான பயிற்சியும் ஓய்வும் இன்றியமையாதவை. மனத்தூய்மையும் மலர்ச்சியும் பெற வேண்டு மானல், உடலையும் அழகும் ஆற்றலும் மிகுந்ததாகப் பேணவேண்டும். முன்னுட்களில், போர்ப்பயிற்சி, குஸ்தி, சிலம்பம் ஆகிய விளையாட் டுகள் மேனியழகையும் வலிமையையும் போற்றி வளர்ப்பதற்கான வழி வகுத்தன. விரிந்த அளவில், அத்தகைய பழக்கங்களை நாடு முழுதும் பரப்புதல் நன்று. பதினைந்து வயதாகுமுன், சிறுவர்களுக்கும் சிறுமி களுக்கும், உடலுறுதி மிகுந்தவர்களாக வளரச் செய்வதற்கான பயிற்சிகளை அளித்தல் ஏற்றவும் நலமானது. இதற்கான செயல் முறைகளை ஆக்க ரீதியாக மேற்கொள்ளவேண்டும்.

6. பொழுதுபோக்கு: மகிழ்ச்சியற்றதொரு கிராம வாழ்க்கையையே இந்நாளில் காண்கிறேம். பொழுதுபோக்கு மன மலர்ச்சிக்கான வசதி களும் நேரமும் கிராம மக்களுக்குக் குறைவுதான். நகரங்களில் வாழ் பவர்களுக்கு அத்தகைய வசதிகள் அதிகமாக இருக்கின்றன. பழைய காலத்தில் பல்வேறு வகை விளையாட்டுகள் இருந்தன. விழாக்காலங் களிலும் பண்டிகை நாட்களிலும், அத்தகைய விளையாட்டுகள் பொழுதுபோக்குக்குரிய உற்சாகமான வாய்ப்புகளை அளித்தன. இந்நாளில் அவையொன்றுமில்லை. அவற்றிற்குரிய இடங்களில் வேறு விநோதக் களியாட்டங்கள் தோன்றவுமில்லை. பழைய களியாட்டங் களுக்கு மறுமலர்ச்சியளித்தும், புதிய பொழுதுபோக்கு விளையாட்டு களுக்கு இடமளித்தும், நம் இளைஞருக்கு நாம் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கவேண்டும்.

7. தொண்டு : மனிதன் ஒரு சமுதாயப்பிராணி. பல வசதிகளையும் நன்மைகளையும் வழங்கும் சமுதாயத்தின்பால் அவனுக்குச் சில கடமைகள் உண்டு. அக் கடமைகளை அவன் ஆற்றவேண்டியது மிகவும் அவசியம். ஒருவகையி லில்லையெனினும் வேறுரு வகையிலேனும் சமுதாயத்துக்கு நாம் ஒவ்வொருவரும் தொண்டாற்றுவதற்கியலும். அவ்வாறுன தொண்டுதான் உண்மையில் நமக்கு நலமளிக்கிறது. உலக ஆன்றோரனைவரும், பிறருக்கு நலம் பயக்கும்வண்ணம் நாம் நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதே சிறந்ததென்று அருளிப்போந் திருக்கின்றனர். நம் வாழ்வின் ஒரு பகுதி அத்தகைய தொண்டுக்காகப் பயன்படவேண்டும். எல்லா நிலை மக்களுக்கும் இது இயன்ற செயல் தான். பேரரசர் ஆல்ஃப்ரட்டை பற்றிக் கேள்விப்பட்டதில்லையா? நிறைந்த செல்வமும் செல்வாக்கும் இருந்தன. மக்கள் தொண்டுக்கே அனைத்தும் உரியதென்று வாழ்ந்தான். மக்கள் கல்வி மலர்ச்சி எய்த வேண்டுமென்று பிறமொழி நூல்களனைத்தும் தன்மொழியிலாக்கினான். அவனது வாழ்க்கையின் லட்சியமே மக்கள் தொண்டுதான். பாரத நாட்டில் மங்காப் புகழ்கொண்ட காந்தியடிகளின் உயரிய வாழ்க்கை மக்கள் தொண்டுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டதன்றே ! எவ்வாறு யினும் வாழவேண்டும் என்று நாம் நினைக்கிறோம். வாழ்க்கையில் நன்மையும் பயனும் எய்த வேண்டுமானால், தொண்டுள்ளம் கொண்டு பணியாற்றுவதே சிறப்பு. நம் நேரத்தில் ஒரு பகுதியைப் பொதுநலப் பணிக்காக நாம் ஒவ்வொருவரும் ஒதுக்க உறுதி கொள்ளவேண்டும். அது நம் ஆற்றலைப் பெருக்கும். செல்வாக்கும் நன்மைகளும் பெருகும்.

மேற்கண்டவாறு பயிற்சியளிப்பதற்கு, அரசைச் சார்ந்த அமைப் புகள் அவசியம் ஏற்படவேண்டும். பல பருவத்தினருக்கும் உரிய வகைகளில் பயிற்சித் திட்டங்களை வரையறை செய்யலாம். பெண் களுக்கென்றே தனிப்பயிற்சி அவசியம். நம் நாடு, அந்நாள், எவ்வாறு மேன்மை கொண்டு மாறிவிடும்! எக்காலத்துக்கும் உரிய ஏற்பாடு களையோ, எல்லோருக்கும் ஒரே மாதிரியான செயல் திட்டமோ அமைப்பது சாத்தியமல்ல. காலத்துக்கேற்ப எல்லாவற்றிலும் மாறுதல் செய்ய வேண்டியிருக்கும். ஆனால், அணிமையில் நமது எதிர் காலத்தில் மேற்கொள்ளத் தகுந்த சில செயல்முறைகளையே இங்கு வரையறுக்க முயலுகிறேன்.

சிந்தனையிலிருந்துதான் செயல் பிறக்கிறது. நாம் இந்நாளில் அநுப விக்கும் பல்வேறு வசதிகள் அனைத்தும் பலருடைய சிந்தனையாற்றலில் விளைந்த பயன்களே. ஆக்க ரீதியிலான சிந்தனைப் பயிற்சி, மனிதனைச் செயல்வீரனுக்கும். நாம் வாழும் சூழ்நிலையில் ஈடுபாடு கொள்வ தற்கும் அது உதவியாக இருக்கும். பகற் கனவு கண்டுகொண்டு படுத்

திருக்கும் நிலைபற்றி இங்கு நான் குறிப்பிடவில்லை. செயலாற்றத் தூண்டுதலும் உற்சாகமும் கூட்டவல்ல ஆக்க ரீதியான சிந்தனையே நலம் பயக்கும். முன்னர் விளக்கமாக இயம்பியவாறு குடிமைப் பயிற்சி சங்கங்களைக் கேரளம் முழுதும் நிறுவினால், வியத்தகு மாற்றங்களைச் சாதிக்க முடியும் என்பதில் ஐயமில்லை. இந்த யோசனையைப் பரிசீலனை செய்து பார்க்கலாகாதா?

இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் 'கிரீஸி'ல் வாழ்ந்த தத்துவ ஞானியும் நன்னெறி ஆசானுமான 'பிதகோரஸ்' தம் சீடர்களை நோக்கி ஒரு சமயம் மொழிந்தார்:

"ஒரு உயரிய குடிமகனுக்கு, தன் நாட்டுடன் உள்ள பிணைப்பைப் பற்றி நான் விவரமாகக் கூறுகிறேன்: நாடு, தாய் தகப்பனைக் காட்டிலும் சிறந்ததாகும். மக்களிலும் நண்பர்களிலும் மேலான வகையில் நெருக்கம் கொண்டது. நாடு அனைவருக்கும் தாயும் தந்தையுமாகும். மனைவிக்குக் கணவன்; கணவனுக்கு மனைவி. குடும்பம் என்ற அமைப்பே மேலானதோர் நிறுவனம். மனைவி மக்களின் வாயிலாக ஒருவர் பெறும் மகிழ்ச்சி எத்துணைப் புனிதமானது! ஆனால் அதினினும் சிறந்தது எல்லோரையும் காத்தருளும் நாடு. அதில்லை எனின் அக்கிரமக்காரர் குடும்பங்களைக் கொள்ளையடித்து அழிப்பார்கள். பெற்ற தாயின் மானம் நற்குடி மக்களுக்கு எத்துணை மதிப்பற்றது! தம் காலைப் பற்றிக் கொஞ்சும் அருமை மக்களின் தாயின் மானமும், உற்ற மனைவியின் மானமும் அவ்வாறே அரியதாகுமன்றே! மனைவியையும் குழந்தைகளையும் காக்கும் நாட்டின் மானத்தை, அவற்றைக்காட்டிலும் விலை மதிக்க வொண்ணாததாகக் கருதவேண்டும். உங்கள் வாழ்வுக்கு வளம் நல்குவது நாடுதான். உங்களுக்கு அமைதியும் ஆதரவும் அளிப்பது அதுவே. நாட்டின் வாயிலாகவே நாகரிக மனிதன் காட்டுமனிதனிலிருந்து வேறுபட்டு நின்று மனித இயல்புகளை வளர்த்துக்கொண்டு கலைகளையும் வளர்த்து உயர்வு எய்துகிறான். வீரர்கள் தம் சொந்த வீட்டுக்கும் குடும்பத்தாருக்கும் எதையும் துறப்பர் என்றால், தாய் நாட்டுக்காகத் தம் அரிய உயிரைத் துறப்பதற்கு அதனினும் மகிழ்ச்சியுடன் முன்வருவர்."

47

ஒரு நெருக்கடி நிலை

கேரளப் பிரதேசம் உருவானபோது, நான் மிகப் பெரிய சாதனைகளை ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருந்தேன். கேரள மக்கள் கல்வியறிவும் தொண்டுள்ளமும் கொண்டவர்கள். அவர்கள் உற்சாகத்துடன் கூடி உழைத்தால் கேரளம், இந்திய நாட்டில், ஏனைய பிரதேசங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக, மறுமலர்ச்சி கொண்டு திகழும் என்று நம்பி இருந்தேன். நான் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் கேரளத்தில் இசையவில்லை. நேர் மாறுக, நான் எதிர் பார்த்திராத, விரும்பத்தகாத, நன்மைக்கு ஊறு விளைவிக்கும் சரிவுகளைக் காண வேண்டிய இரங்கற்குரிய நிலை வந்தது. என்றாலும், கேரளப் பிரதேசம் உருவானதே கேரள மக்களுக்கு நலமானதல்ல என்று நான் கருதவில்லை. குற்றங் குறைகளைத் தவிர்த்துத் தவறுகளைத் திருத்திக் கொண்டு முன்னேற்றத்துக்கு வழி வகுக்கலாம்.

கேரளப் பிரதேசம் தோன்றி அதிக நாட்கள் செல்லு முன்பே, திருவனந்தபுரத்தில் ஒரு பெரிய கிளர்ச்சி தோன்றியது. கேரள உயர் நீதிமன்றம் சம்பந்தமான கிளர்ச்சி அது. திருவிதாங்கூரும் கொச்சியும் இணைந்ததும், புதிய திருவிதாங்கூர்-கொச்சிப் பிரதேசத்தின் தலைநகர் திருவனந்தபுரம்தான் என்று முடிவு செய்யப்பெற்றது. உயர்நீதிமன்றம் எரணாகுளத்திலிருக்குமென்றும் முடிவாயிற்று. ஆனால் வழக்கைப் பதிவு செய்துகொள்ளும் ஃபைலிங் அதிகாரங்களுடன் உயர்நீதிமன்றத்தின் ஒரு 'பெஞ்ச்' திருவனந்தபுரத்திலும் நிறுவ ஏற்பாடு செய்தனர். கேரளப் பிரதேசம் ஐக்கியமாக நடைமுறைக்கு வந்ததும், அந்த 'பெஞ்சு'க்குரிய அதிகாரத்தை எடுத்துவிடுவதாக நிச்சயம் செய்தனர். கிளர்ச்சி இதற்கு எதிராகத்தான் தொடங்கியது. உயர்நீதி மன்றத்துக்குரிய 'பெஞ்சு'களைப் பல இடங்களிலும் நிறுவுவது ஓர் உயர்நீதிமன்ற மதிப்புக்குரியதல்ல என்ற காரணம் கொண்டு, இக் கிளர்ச்சி நியாயமற்றது என்று மாத்ருபூமி கருதியது. இக் கருத்துச் சரியா, இல்லையா என்பது இங்கே பிரச்னைக்குரியதன்று. கிளர்ச்சிக்குத் தலைமைப் பொறுப்பேற்றவர்களுடைய நடவடிக்கைகளும், கையாண்ட முறைகளும் முற்றிலும் சரியல்ல என்று மாத்ருபூமி தெரிவித்தது. அது கிளர்ச்சியாளரை மேலும் சினம்கொள்ளச் செய்தது. அவர்கள் மாத்ருபூமியின் திருவனந்தபுர அலுவலகத்தைத் தாக்கினர்.

இக் கிளர்ச்சி இரண்டு மாதம் நீடித்தது. இடையே, பல வருந்தத் தக்க நிகழ்ச்சிகள் நடந்தன. கேரள சட்டசபையின் முதல் கூட்டம் கூடும் வரை, கிளர்ச்சியை நிறுத்தி வைப்பதாகத் தீர்மானம் செய்த விவரம் அறிந்தபோது, அது மிகுந்த ஆறுதலளித்தது.

உயர்நீதிமன்ற 'பெஞ்சு'க்கான கிளர்ச்சி முடிவடையும் தருவாயில், தேர்தல் களேபரம் தொடங்கிவிட்டது. ராஜ்யங்களின் மறு சீரமைப்புக்குப் பிறகு நிகழவிருந்த முதல் தேர்தல் அது. கட்சிகள் மிகுந்த முனைப்புடன் போட்டியிட்டன. காங்கிரசின் லட்சியத்தையும் கொள்கைகளையும் மாத்ருபூமி ஆதரித்தது. அதனால் காங்கிரஸ் கட்சியாளர் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று மாத்ருபூமி விரும்பினாலும், ஓர் தேசீய நாளிதழ் என்ற நிலையில் மற்ற எல்லாக் கட்சியாளரின் தேர்தல் பிரசாரங்களையும் மாத்ருபூமி வெளியிட்டது. அவ்வாறு செய்வது சரியன்று என்று சில காங்கிரஸ் தலைவர்களும், தங்களைப்பற்றி வெளியிடும் செய்திகள் நியாயமான அளவுக்குப் போதுமானதல்ல என்று பிற கட்சித் தலைவர்கள் சிலரும் மறுத்துரைக்காமலில்லை. தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவளித்ததன் காரணமாக மாத்ருபூமி ஆற்றிய தொண்டு அற்பமன்று என்று அந்நாள் காங்கிரஸ் தலைவர் யு. என். தேபர் என்னிடம் ஒரு சமயம் கூறியதுண்டு. தேர்தல் முடிவுகள் வெளியானதும் பலரும் வியந்தனர். சிலர் நிராசைகொண்டனர். பொதுவுடைமைக் கட்சி அறுபது இடங்களையும், காங்கிரஸ் நாற்பத்து மூன்று இடங்களையும், பி. எஸ். பி. ஒன்பது இடங்களையும், லீக் எட்டு இடங்களையும், சுயேச்சையாளர் ஆறு இடங்களையும் பெற்றிருந்தனர். சுயேச்சையாரில் ஐந்து பேர் பொதுவுடைமைக் கட்சியின் ஆதரவாளர். ஒருவர் காங்கிரசுக்கு ஆதரவாளர். நியமனம் செய்யப்பெற்ற ஒரு ஆங்கிலோ-இந்தியருக்குரிய இடத்தையும் சேர்த்து, மொத்தம் நூற்று இருபத்தேழு உறுப்பினர் சட்டசபையில் இருந்தனர். பொதுவுடைமைக் கட்சியினருக்கே பெரும்பான்மை கிடைத்திருந்தது. இந் நிலையில் நமது கடமை யாதென்பதைக் குறித்து அந்நாள் மாத்ருபூமி தலையங்கத்தில் கூறியிருந்தேன்.

1957ஆம் ஆண்டு மார்ச் பத்தொன்பதாம் தேதி வெளியிட்ட அந்தத் தலையங்கத்தின் முக்கியப் பகுதிகளை இங்குக் காணலாம்.

"கேரளப் பிரதேசத்தில் ஒரு அரசாங்கம் நிலை பெறுவது சம்பந்தமான சில விஷயங்களை இங்கே ஆராய்வோம். இந்தியா, பார்லிமென்டரி குடியரசு - ஆட்சி முறையை அங்கீகரித்திருக்கிறதல்லவா? அதன் உட்பொருளையும் உரிமைகளையும் கருத்துடன் உணர்ந்து அதில் நம்பிக்கையும் கொண்டிருப்பவர்களுக்குக் கேரளத்துத் தேர்தல் முடிவுகள் எதிர்பார்த்தவாறில்லை யெனினும், மேற்கொண்டு தொடர

வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிய தயக்கமோ, அச்சமோ தோன்று வதற்கொன்றுமில்லை. தேர்தல் முறையினுல் கம்யூனிஸ்ட் கட்சி கேரள சட்டசபையில் பெரும்பான்மை பெற்ற நிலையில் மதிப்படைந்திருக் கிறது. அந்தக் கட்சி கேரளப் பிரதேச ஆட்சியைக் கைக்கொள்வது தான் ஜனநாயக அமைப்புக்குரிய மரியாதை. கம்யூனிஸ்ட் கட்சி உறுப் பினர்களுக்கும், அந்தக் கட்சியுடன் இணங்கி, சட்டமன்ற நடவடிக்கை களில் அதற்கு ஆதரவாக இயங்க ஒப்பும் மற்ற உறுப்பினருக்கும், கேரள அரசை உருவாக்குவதில், பிரச்னை ஏதுமில்லை என்றே தோன்றுகிறது. இன்றைய நிலையில் இது மிகவும் இயல்பாக நடைபெறக்கூடியது மட்டு மன்றி, எளிதானதும்கூட.''

இக் கருத்துக்கு ஆதரவான நிலையில் மாத்ருபூமி இயங்கிவந்தது. அதைக் காங்கிரஸ் கட்சியிலிருந்த சில பிரமுகர்கள் மறுத்தார்கள்.

கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் செயல்முறை கண்டனத்துக்குரியதாகத் தோன்றிய பல சமயங்களிலும் அவற்றை மாத்ருபூமி கருத்தூன்றி விமரிசனம் செய்யத் தயங்கியதில்லை. அத்தகைய பல சந்தர்ப்பங்கள் நேர்ந்தன. இதனுல், கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாத்ருபூமியின்பாலுள்ள விரோதம் முதிர்ந்தது.

காங்கிரசாரில் ஒரு பிரிவினரின் தாக்குதலையும், பொதுவுடைமைக் காரரின் பகையுணர்வையும், மேலும் சிலரின் எதிர்ப்பையும் மாத்ரு பூமி தாங்கிக்கொண்டு அதன் லட்சியத்துக்கும் கொள்கைக்கும் ஏற்ற வகையில் நடத்திச் செல்வது எளிதாக இல்லை. என்றாலும் லட்சியத்தைக் காப்பதை உறுதியாகக் கொண்டேன். நான் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர் வசம் சாய்ந்துவிட்டதாக என் நெருங்கிய தோழர்கள் சிலர்கூட இக் காலத்தில் கூறியதுண்டு. பொதுவுடைமைக் கருத்துகளுடன் எனக்கு எந்த வகையான இணக்கமும் கிடையாது. ஆனல், பார்லிமென்டரி ஜனநாயக வழிமுறையை ஏற்றிருக்கும் நாம், தேர்தலில் பெரும்பான்மை பெற்று ஆட்சியைக் கைக்கொள்ளத் தயாராக இருக்கும் கட்சிக்கு, அது கம்யூனிஸ்டானலும் வேறு எந்தக் கட்சியானலும், அது ஆட்சியேற்று நடத்துவதற்கான வசதிகளையும் ஒத்துழைப்பையும் அளிக்கவேண்டும். அதுதான் எதிர்க்கட்சிகளின் மரியாதை. மாத்ருபூமி இதைச் சுட்டிக் காட்டி, இவ்வாறு செயல்புரியும்படி தேசத் தலைவர்களைக் கோரியது. ஆனல், நான் மேற்கொண்டிருந்த நிலைக்கு, மேலிடத்தில் மாத்ருபூமி யுடன் தொடர்புகொண்டவர்களிடமிருந்து உள்ளார்ந்த ஆதரவு கிடைத்ததாகக் கூறமுடியாது. என் முன் கொண்டிருந்த லட்சிய ஒளியை நோக்கிய பாதையில் நான் சென்றேன்.

இக்காலத்தில் பத்திரிகையை நடத்திச் செல்வது சம்பந்தமான குழப் பங்கள் மட்டும்தான் என்னைச் சோர்வுகொள்ளச் செய்ததென்பதில்லை.

கேரளத்தின் புதிய ஜனநாயக நடவடிக்கைகளும் அச்சுறுத்தும்வண்ண மிருந்தன. வயது வந்தோருக்கு வாக்குமுறை என்ற நடைமுறை நாட்டுக்கு நன்மை பயக்குமா என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கும் வகையில் சம்பவங்கள் நடந்தன. அறிவும் நிதானமும் இசைந்திராத குடியரசு, அராஜகத்தையும் தீமையையும் நோக்கி மக்களைக் கொண்டு செல்லும் என அஞ்சினேன். அற்ப காரணங்களுக்காக தேசீயக் கட்சிக் காரர் பலரும் 'சத்யாக்கிரஹம்', 'உண்ணாவிரதம்' என்று அமைதிக்கு ஊறு விளைவித்தனர். மாணவரிடையே பதற்றம், கலவரம்; அரசாங்க அலுவலரிடையே பரவிய செருக்கேறிய ஒழுங்கீனங்கள்; எல்லாம் என் ஐயத்தை உறுதியாக்கின. நாம் சுதந்திரம் பெற்றபின், நம் பண்புகள் மேன்மை பெற்றிருக்கின்றனவா? மேன்மையைக் கருத்தில் கொண்டு நாம் முயற்சி செய்கிறோமா என்றெல்லாம் கேள்விகள் என்னுள் எழும்பின. நாளடைவில் இவற்றுக்கெல்லாம் தீர்வும் வழியும் காண்போம் என்று அமைதியாகவும் என்னால் இருக்க முடியவில்லை. இந்நிலைக்கு யாரைக் குறை கூற முடியும்? யார்மீதேனும் குற்றத்தைப் போடுவதனால் ஏதேனும் பயன் விளையுமா? அதை நீக்குவதற்கான பொறுப்பு மற்றவரைப் போன்று எனக்கும் இல்லையா? இந்நிலையை மாற்றுவதற்கு என்ன செய்யவேண்டும் என்று என்னை நானே வினவிக் கொள்கையில், எனக்கு நிறைவளிக்கும் வகையில் ஒருவழியும் தோன்றவில்லை. கடமையை நிறைவேற்ற இயலாததொரு மனிதனுக்குரிய குற்ற உணர்வுடன் என்ன செய்வதென்றறியாமல் நான் நாட்களைத் தள்ளினேன்.

48

சில முயற்சிகள்

இக் காலத்தில், பல காரணங்கள் கொண்டும், முழுமூச்சுடன் அரசியல் விஷயங்களில் என் சிந்தனையைச் செலுத்துவதிலிருந்து விலகிக் கொள்வதை விரும்பினேன். அதுமட்டுமல்ல, அரசியல் சம்பந்தமாகப் பேசும் கூட்டங்களில் கலந்துகொள்ளும் உற்சாகமும் குறைந்துவிட்டது. அரசியல் கருத்துகளில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றமே அதற்குக் காரணம் எனலாம். பிறருடைய சில கருத்துகளை நான் சிறிதும் ஏற்க முடியாதென்று கருதியிருந்தாலும் அவற்றை எதிர்க்காமலிருக்கும் பக்குவத்தை நான் இளமைப் பருவந்தொட்டே என்னுள் வளர்த்து வந்திருக்கிறேன். ஆனால் அண்மைக்காலத்தில், கருத்தை வெளியிடுவதில் கையாளப்பெறும் முறைகளும், அவற்றுக்குப் பயன்படுத்தப்

பெறும் மொழிகளும், என் ரசனைக்குகந்ததாக இல்லை. ஒருகால், மாறிக்கொண்டிருந்த சூழலுக்கேற்ப என்னை நான் மாற்றிக்கொள்ளாம லிருந்ததால் அவ்வாறு தோன்றிற்றோ? எதுவானாலும், அரசியல் அரங்கிலிருந்து விலகும் ஆர்வம் என்னுள் முதிர்ந்தது. பிற களங்களில் என் கவனத்தைச் செலுத்துவதற்கு நான் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொண்டேன்.

தென்மொழிகள் புத்தக டிரஸ்டின் பணிகளில் நான் கருத்தைச் செலுத்தலானேன். 1955ஆம் ஆண்டில்தான் தென்-பிராந்திய மொழிகளுக்கான 'டிரஸ்ட்' நிறுவப்பெற்றது. தமிழ், தெலுங்கு, மலை யாளம், கன்னடம் ஆகிய தென்மொழிகளில் நல்ல நூல்களைக் குறைந்த விலையில் அச்சிட்டு வெளியிட்டு வழங்கும் எண்ணத்துடன் சென்னையில் 'டிரஸ்ட்' தொடங்கப்பெற்றது. இதற்கு, அமெரிக்காவில், ஃபோர்ட் ஃபௌண்டேஷனிலிருந்து தேவையான பொருளுதவி கிடைத்திருந்தது. புத்தக வெளியீடு சம்பந்தமாக டிரஸ்டுக்கு ஆலோசனைகள் கூறுவதற் கென்று ஒவ்வொரு மொழியைச் சார்ந்தும் ஒவ்வொரு கௌன்சில் உரு வாயிற்று. மலையாள மொழியைச்சார்ந்த ஆலோசனையாளர் குழுவுக்கு நான் தலைவனானேன். சுமார் இருநூறு புத்தகங்களை, டிரஸ்ட் பல்வேறு தென்னிந்திய மொழிகளில் வெளியிட்டது. அவற்றில் மலையாள நூல்கள் நாற்பதாகும்.

கேரள சாஹித்ய அகாதமியின் செயற்குழுவின் தலைவன் என்ற நிலை யில் சிறிது காலம் நான் பணிபுரிந்திருக்கிறேன். 1956ஆம் ஆண்டில் அகாதமி சர்தார் கே. எம். பணிக்கரின் தலைமையில் தொடங்கியது. அப்போது கேரளப் பிரதேசம் உருவாயிருக்கவில்லை. பின்னர், சர்தார் பணிக்கர், ஃபிரான்சில் இந்தியத் தூதுவராகச் சென்றபிறகு அந்தப் பொறுப்பிற்குரிய பணிகளையும் அதிகாரத்தையும் நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் என்னிடம் கோரியது. 1957ஆம் ஆண்டு பிப்ரவரியில் நான் கேரள அகாதமியின் செயற்குழுத் தலைவனைப் பொறுப்பேற்றுக்கொண்டேன். புதிதாக நிறுவப்பெற்ற அந்த நிறுவனத்தில், வளர்ச்சிக்காகவும் நன்மதிப்பைக் கருதியும் செயல்பட வேண்டியிருந்தது. கேரளத்தின் புகழ்பெற்ற இலக்கிய ஆசிரியர்கள் பலரும் அதன் உறுப்பினர். இத்தகையதொரு நிறுவனத்தில் தொண் டாற்றும் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பெரிய கௌரவமாக நான் கருதி னேன். அகாதமி, திருவனந்தபுரத்திலிருந்து திருச்சூருக்கு மாறியது. அங்கிருந்த பழைய 'ஜில்லா கோர்ட்' கட்டடத்தில் சில மாறுதல்களைச் செய்து அகாதமியை அங்கு இடம் பெறச் செய்தோம். அகாதமி சம்பந்தமான பல்வேறு பணிகளும் நிறைவேறுவதற்குரியதான முன்னேற்றங்கள் ஏற்பட்டன. சுமார் இரண்டு ஆண்டுகள், நான்

செயற்குழுவின் தலைமைப் பதவியை ஏற்றிருந்தபிறகு அப் பொறுப்பி லிருந்து விலகநேர்ந்தது. அதன் காரணம் குறித்து 1958ஆம் ஆண்டு மார்ச் எட்டாந்தேதி நான் பதவியிலிருந்து விலகியபோது வெளியிட்ட தோர் அறிக்கையில் தெளிவுறுத்தியிருந்தேன். அதன் சில பகுதிகள் பின் வருமாறு :

அகாதமியின் பணிகளுக்குரிய பொறுப்பு என்னைச் சார்ந்திருந்ததைத் தொடர்ந்து, எனக்குத் தேவையான அலுவலரைத் தேர்ந்துகொள்ளும் விஷயத்தில் நான் முதன்முதலாகக் கவனம் செலுத்தினேன். அகாதமி யின் அன்றாட அலுவலகப் பணிகளைத் திறமையுடன் ஆற்றுவதற்குச் செயலாளருக்கு உதவிபுரியவும், அலுவலகச் சம்பந்தமான பணிகளை மேற்பார்வையிடுவதில் நல்ல அநுபவமும் ஆற்றலும் வாய்ந்ததொரு அதிகாரியை, அகாதமியின் எக்ஸிக்யூடிவ் அதிகாரியாக நியமிப்பது நலமாக இருக்கும் என்று செயற்குழு முடிவுசெய்தது. அதன் பலனை, நான் கோரியதற்கிணங்க, ரெவின்யூ பிரிவில் பொறுப்பான பதவியில் பணி செய்து அநுபவம் வாய்ந்ததொரு அதிகாரியை அரசாங்கம் அகாதமியின் எக்ஸிக்யூடிவ் அதிகாரியாக நியமனம் செய்தது.

சில மாதங்கள் சென்றதும் திடீரென்று அந்த எக்ஸிக்யூடிவ் அதிகாரி யின் பணிகளுக்கு முடிவுசெய்து, ரெவின்யூ பிரிவுக்குத் திரும்ப அழைத்துக் கொள்வதாகவும், அந்த இடத்தில் யாதொரு முன்னறிவிப்புமின்றிப் புதிதாக ஒருவரை நியமித்திருப்பதாகவும் அகாதமியின் செயலாள ருக்குச் செய்தி கிடைத்தது. மேற்படி அதிகாரியின் பணி, அகாதமிக்கு மேலும் அவசியமில்லை என்பதாக அந்த ஆணையில் காரணம் காட்டி யிருந்தனர். ஆனால் அது முற்றிலும் உண்மைக்கு மாறானது. அகாதமி ஒருபோதும் அவ்வாறு கூறியிருக்கவில்லை. எக்ஸிக்யூடிவ் அதிகாரியைத் திரும்ப அழைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானிக்குமுன் அகாதமியின் கருத்தை ஒரு மரியாதையைக் கருதியேனும் கேட்டறிவது உசிதமாக இருந்திருக்கும். அந்த அளவுக்குக்கூட அரசாங்கம் மரியாதை கருதாமல், அகாதமியின் இயக்கத்தை ஆழ்ந்த அளவில் பாதிக்கக்கூடியதோர் விஷயத்தில், அதைப்பற்றிய விவரம் ஏதும் புரிந் திராததொரு புதிய மனிதரை எக்ஸிக்யூடிவ் அதிகாரியாக நியமனம் செய்ய முற்பட்டது, எவ்வகையிலும் நியாயம் காண இயலாத நட வடிக்கையாக இருந்தது. அரசின் மேற்பார்வையில் நிறுவப்பெற்றது தானென்றாலும், சாஹித்ய அகாதமி அரசாங்கத்தின்கீழ் அடங்கியதோர் துறையல்ல. முற்றிலும் சுதந்திரமாகச் செயல்படக்கூடியதொரு நிறுவனம். செயலாளரைத் தவிர அதன்கீழ் அடங்கிய எல்லா அலுவலர்களுடைய நியமன அதிகாரமும் முறைப்படி அகாதமி செயற் குழுவையே சார்ந்திருக்கிறது. முதல் முறை மட்டும் அரசாங்கம் ஐந்து

ஆண்டுகளுக்கு அந்த நியமனங்களுக்குரிய உரிமையை ஏற்கலாம் என்ற ஒரு விதி, ஆட்சியறிக்கையின் பதினைந்தாம் பிரிவில், 'இ' கிளைப்பிரிவில் உட்பட்டிருக்கும் விவரத்தை உணர்ந்துகொண்டே நான் இவ்வாறு கூறுகிறேன். அரசாங்கம் செய்த புதிய நியமனம் முதல் முறையல்ல— இரண்டாவது முறை. முதல் முறையாக இருந்தாலும்கூட, அகாதமியின் சுதந்திர நிலையையும் மதிப்பையும் கருதி, அந்த அமைப்பின் குழுவினரின் கருத்தை அறியாமல் ஒரு நியமனமும் செய்வது சரியல்ல. அகாதமியின் கருத்தை அறியாமல் அதன்கீழ் பணியுரியும் ஒரு அதிகாரியை மாற்றியதும், பதிலாக வேறு ஒருவரை நியமித்ததும், அகாதமியின்பால் புலர்த்திய கடுமையான மரியாதைக் குறைவான செயல்களென்றே கருதுகிறோம்.

இதைக் குறித்து மறுப்புத் தெரிவித்து அரசாங்கத்துக்கும் முதன் மந்திரிக்கும் எழுதிய கடிதங்களுக்குத் திருப்திகரமான பதில் கிடைக்க வில்லை. அதுகாறும் எக்ஸிக்யூடிவ் அதிகாரியாக இருந்தவருடைய பணி ரெவின்யூ பிரிவில் தேவையாக இருப்பதாக இடையில் ஓர் அறிக்கை மட்டும் கிடைத்தது. ஆனால், அரசாங்க ஆணையில் காட்டப்பெற்ற காரணம் அதுவன்று. அதுதான் என்று திட்டவட்டமாகக் கூறவுமில்லை. அல்லது காரணம் யாதாக இருந்தாலும்கூட, அகாதமியிடம் காட்டிய மரியாதைக் குறைவுக்கு நியாயம் கூறும் வகையிலும் அது சமாதான மாகாது.

ஒரு தனிமனிதனை ஒரு பணியிலேயே நிலைக்கச் செய்யவேண்டு மென்றோ, அவனை ஒருபோதும் மாற்றக் கூடாதென்றோ அகாதமி கூற வில்லை. தனிப்பட்ட முறையில் யாதொரு கருத்துக்கும் இங்கு இடமில்லை. அகாதமியைப் போன்றதொரு உயரிய நிறுவனங்களுடன் அரசாங்கம் காட்டுவதற்குரிய உயர் மதிப்புக்கு முற்றிலும் மாறான வகையில் நடந்தது குறித்தே மறுப்புத் தெரிவிக்கிறோம். அதற்கு ஒரு பதிலும்கூட அரசு தெரிவிக்காமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

மார்ச் ஒன்றாந் தேதி காரியக் கமிட்டிக் கூட்டமும், பொதுக் கௌன்சில் கூட்டமும் கூடி, அரசாங்கத்தின் நடத்தைக்கு மறுப்புத் தெரிவித்தது. அகாதமியின் கருத்தை ஏற்று, அரசாங்கம் தன் உத்தரவை மறு ஆலோசனைக்குக் கொள்ளவேண்டும் என்று கருதியது. இந்த விவரம் அன்றே அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் பலனில்லை.

கேரள சாஹித்ய அகாதமியை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற ஆசையுடன்தான் நான் அப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். அதன்பொருட்டு தொடக்கத்திலேயே அரசாங்கம் ஒப்புக்கொள்ளத் தகுந்த நடவடிக்கைகளைத் தோற்றுவிக்க வேண்டு

மென்று எண்ணியிருந்தேன். ஆனால் அகாதமிக்கு எதிராக அரசாங்கம் தெளிவாக்கிய மனோபாவம், என் இலட்சியத்துக்குப் பொருந்தாமலிருக்கையில், என்னால் உளமொன்றி அப் பொறுப்பை நிறைவேற்றுவது கடினமாகிவிடும். அந்த நிலையில் என்னால் அகாதமியை இயக்கிச் செல்வதற்கில்லை. அதனால் மிகுந்த வருத்தத்துடன் இப் பதவியிலிருந்து நான் விலகவேண்டியிருக்கிறது.

அகாதமியின் செயற்குழுவின் தலைவன் என்ற பொறுப்பில் இருந்து நான் விலகிக்கொண்டேன். என்றாலும் ஒரு சாதாரண உறுப்பினன் என்ற நிலையில் தொடர்பு இருந்தது.

இச் சந்தர்ப்பத்தில் துஞ்சன் நினைவுச்சின்னக் குழுவைப்பற்றியும், வள்ளத்தோள் நினைவுச்சின்னக் கமிட்டியைப்பற்றியும் கூறுவது நன்று. திருருக்கருகில், துஞ்சன் பறம்பில், துஞ்சத்து ஆசானுக்கு உரியதோர் நினைவுச்சின்னம் அமைக்கவேண்டும் என்றும், வேறு சில தீர்மானங்களுடனும், 1955ஆம் ஆண்டில் துஞ்சன் நினைவுச்சின்னக் குழு ஒன்றை அமைத்தோம். அதற்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்பே, அந்நாளைய சில பிரமுகர்கள் இதே தீர்மானங்களுடன் துஞ்சன் பறம்பில் கூட்டம் கூடி ஆலோசனை செய்திருந்தனர். என்றாலும், தொடர்ந்து பின்னர் யாரும் முயற்சி செய்திருக்கவில்லை. 1954ஆம் ஆண்டு டிசம்பர் பதினேழாந் தேதி, துஞ்சன் நினைவுநாளைக் கொண்டாட, துஞ்சன் பறம்பில் ஒரு கூட்டம் கூடியது. அப்போது, துஞ்சத்து ஆசானுக்கு, உரியவாறு ஓர் நினைவுச்சின்னம் எழுப்புவதற்கான முயற்சிகளை மேற் கொள்ள அதிகமான உறுப்பினரைச் சேர்த்துக்கொள்ளும் உரிமையுடன் ஓர் கமிட்டியை உருவாக்கினேம். அதுதான் துஞ்சத்து ஆசான் நினைவுச்சின்னக் குழு. குழுவினர் நினைவுச்சின்னம் அமைப்பதற்கு முயன்று நிதி திரட்டினாலும், இடம் வாங்குவதற்கும் நினைவுச்சின்னம் அமைப்பதற்கும் முழுதுமாகச் செலவழிந்த பொருளில், சிறு பகுதியே நிதியில் திரட்ட முடிந்தது. அரசாங்க ஆதரவின்றி நினைவுச்சின்னம் எழுப்ப இயலாது என்றுணர்ந்து, குழுவினர் கேரள அரசாங்கத்தை அணுகினர். அந்நாள் கேரள முதலமைச்சர், பட்டம் தாணுப்பிள்ளை. அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் இப்பணிக்கு உதவுவதாக வாக்களித்தார். அதற்கிணங்க முயற்சியும் செய்தார். அந்நாள் கேரள மந்திரி சபையில் மந்திரியாக இருந்த கே. சந்திரசேகரனும், பின்னர் முதன் மந்திரியான ஆர். சங்கரும், நினைவுச்சின்னம் அமைக்கும் பணியில் மிகுந்த உற்சாகம் காட்டினர். அதன் பயனாகவே 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதினேந்தாம் தேதி, நிறைவேறிய நினைவுச்சின்னத்துக்குத் திறப்பு விழாக் கொண்டாடினேம். செலவு மூன்று லட்சம் ரூபாய் ஆயிற்று. துஞ்சன் நினைவுச்சின்னக் கமிட்டியினர் திரட்டிய நிதியை அரசாங்கத்

தினரிடம் ஒப்படைத்துவிட்டனர். இந்த நினைவுச்சின்னத்தின் நிர்வாகத்துக்கு, 1964ஆம் ஆண்டு அக்டோபர் முப்பத்தொன்றும் தேதி அரசாங்கம் ஓர் கமிட்டியை அமைத்தது. அதன் தலைவனாக என்னைப் பொறுப்பேற்க வேண்டினர். நான் ஏற்றுக்கொண்டேன்.

நினைவுச்சின்னப் பணி நிறைவேறிவிட்டாலும், பார்வையாளர்கள் கண்டு மகிழ ஓர் கலைச்சிறப்புடைய அழகிய சின்னம் மட்டும் போதாது என்று கருதினேன். அறிவுசார்ந்த ஆராய்ச்சிக்கான நூல்கள் கொண்ட நூலகம் ஒன்றை அங்கு அமைக்க வேண்டும்; மேலும், துஞ்சன் எழுத்தச்சனுடன் தொடர்பு கொண்ட எல்லாவகை நூல்களும், இன்னும் மலையாளத்திலும் வடமொழியிலும் உள்ள உயர்ந்த நூல்களும் அங்கே இடம் பெறவேண்டும். நன்கமர்ந்து நூல்களைப் படித்து மகிழ்ந்து அநுபவிப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் அங்கே வசதிகள் அமைக்க வேண்டும். இதன்பொருட்டு துஞ்சன் இல்லத்துக்கு வரும் புலவர்களுக்கும், இலக்கிய ஆசிரியர்களுக்கும், தங்கும் வசதிகளும் செய்து கொடுக்கவேண்டும். அவ்வப்போது, புலமை மிக்கோரின் கருத்தரங்க ஆராய்ச்சிக் கூட்டங்களும் நடத்தவேண்டும். அறிவைப் பரப்புவதற்கான சிறந்த நூல்களைத் துஞ்சன் இல்லம் வெளியிடவேண்டும். துஞ்சன் இல்லத்தைச் சூழ்ந்த இடங்களில் எழில்மிகு பூங்காக்கள் அமைத்து, கவர்ச்சிமிகுந்த இடமாகச் செய்ய வேண்டும். கேரளத்திலிருந்து மட்டுமல்ல; இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பார்வையாளர் இடைவிடாமல் வந்துகொண்டிருக்கும் புனித யாத்திரைத் தலமாகத் துஞ்சன் இல்லம் விளங்கவேண்டும். இந்த லட்சியங்களைக் கமிட்டி நிறைவேற்ற முயன்றுவருகிறது.

வள்ளத்தோள் நினைவுச்சின்னக் கமிட்டியினரின் முயற்சிகளும் ஒருவாறு வெற்றிகரமாகவே நிறைவேறியது. 1958ஆம் ஆண்டு மார்ச் மாதம் பதின்மூன்றும் தேதி மாகவி வள்ளத்தோள் பூதவுடல் நீத்தார். பின்னர் ஒரு மாதத்துக்குள் சிறு துறுத்தியில் கூடிய பொதுக்கூட்டத்தில் வள்ளத்தோளுக்கு ஓர் நினைவுச்சின்னம் அமைக்கவேண்டும் என்று தீர்மானித்து அதற்கான முயற்சிகளைச் செய்வதற்கு ஓர் கமிட்டியைத் தேர்ந்தெடுத்தோம். அந்தக் கமிட்டிக்கும் நானே தலைமைப் பொறுப்பேற்றேன். அதற்கும் சிலர் பொருளுதவி செய்தனர். ஆனால், பொது மக்களிடமிருந்து கிடைத்த தொகை மிகக் குறைவு. பத்திரிகையின் வாயிலாகக் கோரிக்கை விடுத்தும், கடிதங்கள் பலருக்கும் எழுதியும், கூறத் தகுந்த பலன் விளையவில்லை. திரட்டிய பொருளைக்கொண்டு சிறிதும் தாமதியாமல் ஓர் நினைவுச்சின்னம் அமைத்துவிடலாம் என்று கமிட்டி உறுதி செய்தது. பன்னிரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்தான் கிடைத்த தொகை. இதைக் கேரளப் பல்கலைக்கழகத்தில் அளித்து, கலை-

இலக்கியம் குறித்து ஒன்று விட்டு ஒரு ஆண்டில், நினைவுச் சொற்பொழிவு களாற்ற ஏற்பாடு செய்ய வேண்டினேம். பல்கலைக்கழகம் அதனை ஏற்றது. 1962ஆம் ஆண்டு, மே பதின்மூன்றும் நாள் சிறு துறுத்தி கலாமண்டபத்தில் நடைபெற்ற எளிய விழாவில், பன்னிரண் டாயிரத்து ஐநூறு ரூபாய்க்கு ஒரு 'செக்' வள்ளத்தோள் நினைவுச் சின்னக் கமிட்டித் தலைவன் என்ற நிலையில், அந்நாள் துணை வேந்தராக, இருந்த கே. எஸ். கே. இ. ராஜாவிடம் அளித்தேன். அகில இந்திய ரேடியோ நிலையத்தின் டைரக்டர் ஜெனரலாக இருந்த டாக்டர் பி. கே. நாராயண மேனன், திருவனந்தபுரத்தில் 1966ஆம் ஆண்டு பிப்ரவரி பதினென்கு, பதினைந்து தேதிகளில் முதல் 'வள்ளத்தோள் நினைவுச் சொற்பொழிவு' ஆற்றினர்.

இன்னோர் நினைவுச்சின்னம் குறித்தும், கிடைத்த வெற்றி குறித்தும் இங்கே குறிப்பிடத்தகுந்ததாகும். மாத்ருபூமி தொடங்கிய 'மண்ணூர்க் காட்டு கிருஷ்ணன் குடும்ப உதவி நிதி' அது.

1957ஆம் ஆண்டு நவம்பர் இருபத்தெட்டாந் தேதி, மண்ணூர்க் காட்டில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. தேநீர்க்கடைப் பணியாளனாகவிருந்த வட்டத்தொட்டி கிருஷ்ணன் என்பவன், தன் அண்டை வீட்டில் குடியிருந்த முகமதிய நண்பரின் வீடு நெருப்புப் பிடித்து எரிவதைக் கண்டான். உடனே உள்ளே அகப்பட்டுக்கொண்ட இரு இளங் குழந்தைகளை மீட்பதற்காகத் தீயில் புகுந்தான். குழந்தைகளைத் தீயினின்று உயிர் மீட்டான். ஆனால் அந்த முயற்சியில், கிருஷ்ணன் தன்னுயிரைக் கொடுத்துவிட்டான். கிருஷ்ணனுக்குத் தாயும், தாரமும், இரு குழந்தைகளும் இருந்தனர். அவனுடைய இந்த உயிர்த்தியாகம் அவன்பால் மக்களுக்கு மிகுந்த மதிப்பையும் உணர்ச்சியையும் பெருக் கியது. வறுமையில் வாடிய கிருஷ்ணனின் குடும்பத்துக்கு உதவும் எண்ணத்துடன் மாத்ருபூமி பொதுமக்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்தது. டிசம்பர் பத்தாந் தேதி இதழில், மண்ணூர்க்காடு கிருஷ்ணனின் குடும்ப நிதி தொடங்கியது. நாள்தோறும் பல இடங் களிலிருந்தும் சிறு தொகையாகவே வந்து பெருகலாயிற்று. அயல் நாட்டிலிருந்தெல்லாம் கூட நிதிக்குப் பணம் அனுப்பியவண்ணம் இருந்தனர். ஒரே மாதத்தில், இருபத்து மூவாயிரத்து முந்நூற்று எண்பத்தைந்து ரூபாய், எண்பத்து நான்கு பைசா [23,385·84] சேர்ந்து விட்டது. அதைக் கிருஷ்ணனின் தாய்க்கும் மனைவிக்கும் இரு குழந்தை களுக்குமாக, முன்பே தீர்மானித்தபடி, அந்நாள் கேரள கவர்னர் ஸ்ரீராம கிருஷ்ண ராவின் தலைமையில், கோழிக்கோட்டில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்து, பங்கிட்டு அளித்தோம். கிருஷ்ணனுடைய மனைவி தங்கிய வீட்டையும், எரிந்துபோன முகமதியனின் வீட்டையும் செப்பனிட்டுக்

கொடுத்ததுமன்றி, கிருஷ்ணனுக்கு இறுதி மரியாதை செய்த இடத்தில் ஓர் சிறு நினைவுச்சின்னமும் அமைத்தோம். இத்தகையதோர் நிதிக்கு, மக்கள் இவ்வளவு குறுகிய கால வரையறைக்குள், இவ்வளவு அதிகமான பணம் அனுப்பிக் கொடுத்தது, நினைவில் கொள்ளக்கூடியதாகும்.

சில நினைவுச்சின்னங்களுக்கு, மக்களுடைய உதவி தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். சிலவற்றுக்கு எத்துணை முயன்றாலும் தேவையான பணம் கிடைக்காது. நினைவுச்சின்னத்துக்கான பொறுப்பேற்றவர் களுடைய தீர்மானத்துக்குரிய பொருள், அவர்களுடைய முயற்சிகளின் வாயிலாகக் கிடைக்காது. இதன் காரணம் அவர்களது உற்சாகக் குறை வென்றோ, மக்களுக்கு, நினைவுச்சின்னத்துக்குரிய பெரியவர்மீது மதிப்போ மரியாதையோ இல்லாததன் விளைவென்றோ கருதிவிடலா காது. சில தனிப்பட்ட காரணங்கள் மக்களுடைய இதயங்களை ஆழ்ந்து பாதிக்கின்றன; சில விஷயங்கள் மக்களிடம் ஆர்வத்தைத் தோற்றுவிப்பதில்லை. இதற்காக யாரையும் குறை கூற முடியாது. கோழிக்கோடு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கான சிகிச்சை வசதி களைக் கூடியவரையில் பெருக்கி, ஆஸ்பத்திரி நிர்வாகிகளுக்கு உதவு மாறு, ''கோழிக்கோடு ஆஸ்பத்திரி அமெனிட்டீஸ் ஃபண்ட் அஸோஸி யேஷன்'' என்ற பெயரில் 1956ஆம் ஆண்டில் ஒரு சங்கம் உருவாயிற்று. நான் அதன் தலைவன். சில டாக்டர்களும், பொதுமக்கள் பிரதிநிதி களும் இதில் உறுப்பினராக இருந்தனர். சங்க முயற்சிகளின் விளைவாகக் கோழிக்கோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, ஓர் ஆழ்கதிர் எக்ஸ்ரே சாதனமும், 'கார்டியோகிராமும்' வழங்கி உதவினோம். மேலும், குதிரை வட்டத்து மனநோய் மருத்துவமனைக்கும், கோழிக் கோடு பொது மருத்துவமனைக்கும், ஒவ்வொரு ரேடியோவும் வழங்க இயன்றது. பதிவு செய்யப்பெற்ற இந்தச் சங்கத்தின் பணி இன்னும் தொடர்ந்துவருகிறது.

இத்தகைய கூட்டு முயற்சிகள் கேரளத்தின் பிற இடங்களிலும் தோன்றுமாறுல், நோயாளிகளுக்கு ஓர் அரிய உதவியாகவே இருக்கும்.

இதே நோக்கத்துடன் ஓர் சங்கத்தை, கோழிக்கோடு மனநோய் மருத்துவமனை நோயாளிகளுக்கு உதவும் வகையில் அணிமைக்காலத்தில் நிறுவியிருக்கிறோம். அதற்கும் நான் தலைமைப் பொறுப்பேற்றுள்ளேன். இச் சங்கத்தின் முயற்சியின் பயனாக, ஒரு லட்சம் ரூபாய் செலவில் மருத்துவமனையில் நோயாளிகளுக்காக ஓர் புதிய கட்டடம் எழும்பி யிருக்கிறது. சங்கத்தின் ஒரு முக்கிய உறுப்பினரான ஸ்ரீமதி குட்டி வெள்ளோடி இப் பணியில் முன்நின்று முனைந்து செயலாற்றினர்.

49

கண் சிகிச்சைக்காக லண்டன் பயணம்

1954ஆம் ஆண்டில்தான் முதன் முதலாக என் கண் பார்வை மோசமானதை அறிந்தேன். என்றாலும் படிப்பதையும் எழுதுவதையும் நான் நிறுத்திவிடவில்லை. படிக்கும்போது சிறிது கடினமாகத் தோன்றினால் யாரையேனும் படிக்கச் சொல்லிக் கேட்பேன். அவ்வாறே தொடர்ந்து சில நாட்களாயின. என் நண்பர் டாக்டர் பி. பி. மேனன், கண்களை அடிக்கடி பரிசோதித்துத் தேவையான சிகிச்சை செய்தார். மூன்று ஆண்டுகள் சென்றபின்னர், கோழிக்கோடு ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியில் இடது கண்ணில் ரண சிகிச்சை செய்தனர். எதிர் பார்த்த பலன் ஏற்படவில்லை. ரண சிகிச்சைக்குப்பின் ஒரு மங்கிய வெளிச்சம் மட்டுமே தெரிந்தது. வலது கண்ணில் திமிரம் முதிரத் தொடங்கியதும் சாதாரணமான தேவைகளை நிறைவேற்றிக் கொள் வதும், விருப்பம்போல் நடமாடுவதும்கூடக் கடினமாக இருந்தது. என்றாலும் அதிகாலையில் எழுந்து எழுதும் வழக்கம் தடைப்படவில்லை. எழுதுவதை என்னால் நன்கு பார்க்கமுடியாது. காகிதம் மட்டுமே தெரியும். நிறுத்தி எழுதிவிட்டு, நேரம் புலர்ந்ததும், என் பேத்திகள் யாரையேனும் அழைத்து அவர்களைப் படிக்கச் சொல்லிக் கேட்பேன். சிறிது காலம் இவ்வாறு சென்றது.

ஒருநாள் அதிகாலையில் வழக்கம்போல் நான் எழுந்து எழுதினேன். சிறிதுநேரம் எழுதிய பின்னர், என் பேத்தி நளினியை அழைத்துப் படித்துக்காட்டும்படி மொழிந்தேன். அவள் என்னிடமிருந்து பெற்ற கடிதாசை நோக்கி வியந்தவாறு, ''தாத்தா ! இதில் நீங்கள் எதுவுமே எழுதி இருக்கவில்லையே!'' என்றாள். நான் பேனாவில் மை தீர்ந்து போனது தெரியாமல் எழுதியிருக்கிறேன் என்பதை அப்போதுதான் உணர்ந்தேன். அவ்வமயம் அவள் கூறியதைக் கேட்டு நான் நகைத் தேன். ஆனால் என்நிலை இரங்கத் தகுந்ததாக முதிர்ந்து வருவதை இந் நிகழ்ச்சி எனக்கு அறிவுறுத்தியது. இதன் பின்னர் சில நாட்களில் நான் அதிகாலையில் எழுந்து எழுதும் பழக்கத்தை அறவே நிறுத்த வேண்டியதாயிற்று. என்றாலும் வழக்கம்போல் அலுவலகம் சென்று பணியாற்றுவதையும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதையும் நிறுத்தவில்லை. நான் படிப்பதற்கு பதிலாகப் படிக்கச் சொல்லிக் கேட்டேன்; எழுதுவதற்கு பதிலாகச் சொல்லி எழுதச் செய்தேன்.

இத்தகைய முறையில் என் பணிகளை நிறுத்தாமல் தொடர்ந் தாற்றினேன்.

1956ஆம் ஆண்டில் எரணாகுளத்தில் நடந்த சாஹித்ய பரிஷத் விழாவில் நான் தலைமை தாங்கியபோது, என்னுடைய தலைமை உரையைப் படிக்க முடியாத நிலை எனக்கு மிகுந்த வேதனையளித்தது. பெருங்குறையாக உணர்ந்தேன். என்னுடைய ஒரு நண்பர் எனக்காக அவ்வுரையைப் படித்தார். வலது கண்ணில் திமிரம் முதிர்ந்த பின்னர், ஏறக்குறைய ஒரு குருடனின் நிலையிலேயே நான் நாட்களைக் கழித்தேன். என்னுடைய நிலையைப் பலரும் அறிந்திருந்ததால், பொதுக்கூட்டங் களில் நான் கலந்துகொள்ளும்போதும், பயணம் செல்லும்போதும், என்னை மிகவும் ஆதரவுடனும் கனிவுடனும் உடனிருந்து கவனித்துக் கொள்வார்கள். அதற்காக நான் அவர்களுக்கெல்லாம் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்.

வலது கண்ணின் திமிரம் ரணசிகிச்சைக்கேற்ற நிலைமையை எய்தி யதும், அதற்கு லண்டன் நகர் செல்வது நலமென்ற கருத்தை என் நண்பர்கள் சிலர் எடுத்துரைத்தனர். அங்கு நிறைந்திருந்த வசதிகளை எண்ணிப் பார்த்ததும், நானும் லண்டன் செல்ல உறுதி கொண்டேன். சுமார் நான்குமாத காலம் லண்டனில் தங்கவேண்டி வரும் என்றறிந்து, நான் அதற்காக ஏற்பாடுகள் செய்யலானேன். மாத்ருபூமி ஆசிரியப் பொறுப்பை, என் அன்பு நண்பரும், மாத்ருபூமி கம்பெனியின் மானேஜிங் டைரக்டருமான ஸ்ரீ வி. எம். நாயர், பரிந்து ஏற்றுக் கொள்ள முன்வந்தார். எட்டாண்டுகளுக்கு முன்னர், நான் இலங் கைக்குச் செல்லவேண்டியிருந்த காலத்திலும் அவரே அப் பொறுப்பை மனமுவந்து ஏற்க முன்வந்தார். மாத்ருபூமியை நாயரின் திறமை வாய்ந்த பொறுப்பில் ஒப்படைத்துவிட்டுக் கவலையின் பளு குறைந்த வனாக, நான் பயணத்துக்கான வேறு ஏற்பாடுகளில் முனைந்தேன். பயணத்துக்கும், சிகிச்சைச் செலவுகளுக்கும், லண்டன் நகரில் தங்கு வதற்கும் தேவையான பொருளைத் தேடவேண்டியிருந்தது. அநுபவ பாடங்களிலிருந்தும் நான் பண விஷயத்தில் ஒன்றையுமே கற்றுக் கொள்ளவில்லை. பணத்தைச் சம்பாதித்துச் சேமிக்கும் திறமையோ, செலவைக் கட்டுக்குள் அடக்கும் விவேகமோ என்னிடம் கிடையாது. இது சரியான முறையல்ல என்று பல சமயங்களிலும் எனக்குத் தோன்றுவதுண்டு. என்றாலும் நெடுங்காலப் பழக்கத்தை எப்படித் திடீரென்று மாற்றிக்கொள்ள இயலும்?

லண்டன் பயணத்துக்கு என்னுடனே ஒருவர் துணையாக இருக்க வேண்டியிருந்தது. மொத்தச் செலவைக் கணக்கிட்டுப் பார்த்தபோது, சுமார், இருபதினாயிரம் ரூபாய் தேவையாக இருந்தது. நான்கு மாதச்

சம்பளத்தை முன்கூட்டி வாங்கிக்கொண்டாலும்கூடப் பின்னும் ஒரு பெருந் தொகை துண்டுவிழும். சிங்கப்பூரிலிருந்து உண்ணி கொஞ்சம் பணம் அனுப்பினான். மாத்ருபூமியிலிருந்தும் சிறிது உதவியளித்தனர். பின்னரும் ஐயாயிரம் ரூபாய் வேண்டியிருந்தது. அதற்கு என்ன செய்வதென்று குழம்பிக்கொண்டிருந்தபோதுதான் மத்திய சாஹித்ய அகாதமி, 1956, 1957, 1958ஆம் ஆண்டுகளில் வெளியான சிறந்த மலையாள நூல் என்று 'கடந்த காலம்' நூலுக்குப் பரிசளித்துக் கௌரவிப்பதாகச் செய்தி தெரிந்தது. ஐயாயிரம் ரூபாயுடன் அளிக்கப் பெறும் தாமிரப்பட்டயத்தை நான் நேரில் சென்று பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தனர். லண்டன் செல்வதற்குக் கிளம்பிய நேரத்தில் டில்லிக்குப் பயணம் கிளம்புவது அத்துணை எளிதாகத்தானில்லை. எனினும், 1959ஆம் ஆண்டு பிப்ரவரி இருபத் தாறும் தேதி டில்லியில் நடைபெற்ற அப் பரிசளிப்பு விழாவில் நேரில் சென்று பரிசு பெறவேண்டும் என்று நண்பர்கள் வற்புறுத்தியதால் நான் சென்று பரிசைப் பெற்றேன். இது சம்பந்தமாக டில்லியிலும் சென்னையிலும் வேறு சில இடங்களிலும் பாராட்டுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். நண்பர்களுடைய ஆதரவும், மகிழ்ச்சியுட் என்னை நெஞ்சம் நெகிழச் செய்தன.

டில்லியிலிருந்து திரும்பி இரண்டு மூன்று நாட்களில், மார்ச் ஆறுந் தேதி, நான் கோழிக்கோட்டிலிருந்து புறப்பட்டேன். என் மகள் லீலாவும், பேத்தி பத்மினியும் என்னுடன் சென்னை வரையிலும் வந்தனர். அங்கிருந்து அவர்கள் சிங்கப்பூர் சென்றனர். பத்மினிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே திருமணம் நடந்திருந்தது. அவளுடைய கணவன் ஸ்ரீதரன், சிங்கப்பூரில் ஆசிரியனாக வேலை பார்க்கிறான்.

மார்ச் எட்டாந் தேதி, சென்னையிலிருந்து விமான வழியாக நான் லண்டனுக்குப் பயணமானேன். என் மருகர் கே. பி. கருணாகரமேன னும், டாக்டர் பி. பி. மேனனும் என்னுடன் இருந்தனர். சென்னையி லிருந்து கிளம்பிய மறுநாளிரவு பத்து மணிக்கு நாங்கள் லண்டனை அடைந்தோம். 1915ஆம் ஆண்டில் முதல் உலகப் பெரும் போர் நடந்துகொண்டிருந்த காலத்தில் சட்டம் பயின்ற பின் பாரிஸ்டராக லண்டனிலிருந்து நான் தாயகம் திரும்பினேன். நாற்பத்து நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், நான் மீண்டும் லண்டன் வந்திருக்கிறேன். அந்நாள் கப்பலில் பிரயாணம் செய்தேன். ஆறுயிரம் மைல் தொலைவி லுள்ள அந்த நெடுங்கடல் பயணம் நிறைவேற இருபத்திரண்டு நாட்கள் வேண்டியிருந்தன. இந்நாளில், சில மணி நேரத்தில், விமானம் நம்மை லண்டன் கொண்டுசென்று விடுகிறது.

லண்டன் விமான நிலையத்தில் எங்களுக்காக நண்பர்கள் காத்திருந்தனர். நாங்கள் ஒய். எம். ஸி. ஏ. விடுதியில் தங்குவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அங்குச் சென்றோம். நான் மூர்ஃபீல்ட் கண் ஆஸ்பத்திரியில் பத்து நாட்கள் சென்ற பின்னரே சிகிச்சைக் காகச் சேர்ந்தேன். அதுகாறும் அங்கேயே தங்கினேன். மூர்ஃபீல்ட் மருத்துவமனை, கண் சிகிச்சைக்குப் பெயர்பெற்றது. இந்தப் பெரிய ஆஸ்பத்திரியில், 'டாக்டர் ஸ்டெல்லார்ட்' என்ற கண் மருத்துவர்தாம் என் வலது கண்ணில் ரணசிகிச்சை செய்தார். லண்டன் கண் மருத்துவர்களிடையே 'டாக்டர் ஸ்டெல்லார்ட்' முன்னணியில் நிற்கும் புகழ் பெற்ற மருத்துவர்களில் ஒருவர். அவர் கண்களைப் பரிசோதனை செய்தபின், வலது கண்ணில் நன்முக ஒளி தெரியும் என்றுதான் கருத்துத் தெரிவித்தார். அது எனக்கு மகிழ்ச்சியளித்தது. மிகுந்த ஆவலுடன் நான் சிகிச்சை மேசைச்குச் சென்று படுத்துக்கொண்டேன். சிகிச்சை முடிந்து பத்தாம் நாள் கண் கட்டவிழ்க்கப் பெற்றபோது, ஒளி கண்டதும் நான் பெருமகிழ்வு கொண்டேன். இரண்டு நாட்கள் சென்றதும், மீண்டும் கண்ணைப் பரிசோதனை செய்து, கண்ணுடி எழுதிக் கொடுப்பதாக அவர் மொழிந்தார்.

குறித்த நாள் காலையில் என்னைப் பரிசோதனை அறைக்குக் கொண்டு சென்றனர். சிகிச்சை செய்த எனது வலது கண்ணை, டாக்டர் அரை மணிக்கும் மேல் உன்னிப்பாக ஆராய்ந்தார். பிறகு அவர் என்னிடம், "மிஸ்டர் மேனன், தங்கள் ஆவலை மிகுதியாக்கிவிட்டு, இப்போது அதற்கு மாருகக் கூறுவதற்கு மிக வருந்துகிறேன். எதிர் நோக்கிய குணம் காணவில்லை. திமிரத்தை அகற்றுமுன் கண்ணின் சரியான நிலையை அறிய முடியவில்லை. கண் பார்வை முழுதும் பெற வேண்டுமானால் இன்னொரு பெரிய ரணசிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது. அதற்கும் ஒரு மாதமாக வேண்டும். மூன்று மணி நேரம் மயக்கம் கொடுக்கவேண்டியிருக்கும். சிகிச்சை முடிந்த பிறகு இரண்டு வார காலம் அசையாமல் படுத்திருக்க வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்பதை உங்கள் யோசனைக்கும் முடிவுக்கும் விட்டுவிடுகிறேன்" என்ருர்.

"ஆனால் இதெல்லாம் முடிந்த பிறகு, பலன் என்னவாக இருக்கும்? கண் பார்வை நன்முக வந்துவிடுமா?" என்று நான் கேட்டேன்.

"அதை நிச்சயமாகச் சொல்ல முடியாது" என்ருர் டாக்டர்.

"பார்வை நல்ல வகையில் கூடவேண்டும்" என்றுதான் அவர் கருதினர். "கூடவேண்டும்' என்ற நிச்சயமில்லாத சொற்கள் என்னைத் திகைக்கச் செய்தன.

''பின் நான் யோசனை செய்கிறேன்'' என்றேன். தாங்க இயலாத சோர்வு கொண்டேன். சக்கர நாற்காலியில் அமர்த்தித்தான் என்னை அறைக்குக் கொண்டுசென்றனர். பணிப்பெண் என்னைக் கட்டிலில் படுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு வெளியேறினாள். அவள் திரும்ப ஐந்து நிமிடங்களாயிற்று. அதற்கிடையில் என் மனதில் ஏதேதோ எண்ணங்கள் கவிந்தன. கட்டிலில் சாய்ந்து ஜன்னல் வழியாகப் பார்த்தபோது தெரிந்த சிறு வெளிச்சம் எனக்குச் சிறிது ஆறுதலாக இருந்தாலும், ரணசிகிச்சை முடிந்த பிறகும் இவ்வளவுதான் கிடைத்திருக்கிறது என்ற எண்ணம் எனக்குத் தளர்ச்சியூட்டியது. எத்தனை முயன்றும் தைரியம் என்னைக் கைவிட்டு விட்டதாகத் தோன்றியது. ''சிறிது ஒளியேனும் கிடைத்ததற்காக மகிழ்ச்சியல்லவோ கொள்ள வேண்டும்? அதிகம் கிடைக்கவில்லை என்று நிராசை கொள்வது சரிதானு?'' என்று என்னையே நான் கேட்டுக்கொண்டேன்; தேற்றிக் கொள்ள முயன்றேன்; பயனில்லை. நேரம் செல்லச் செல்ல என் பலவீனம் மிகுதியாயிற்று. ஒருகால் என் முகத்திலும் அந்தத் தளர்ச்சி தோன்றியிருக்க வேண்டும். பணிப்பெண் ஹார்லிக்ஸ் எடுத்துக்கொண்டு திரும்பியதும், ''நீங்கள் எதற்காக மனதை இப்படி வருத்திக்கொள்கிறீர்கள்? எப்போதுமுள்ள அமைதியையும் புன்னகையையும் காணவில்லையே!'' என்று கேட்டாள். ''பாட்டுக் கேளுங்கள். மனதுக்கு இனிமையாக இருக்கும்'' என்று ரேடியோவைத் திருப்பினாள். இசையின் இனிய ஒலியில் என் மனம் அமைதி காணவில்லை. ''ரேடியோவை மூடிவிடுங்கள். எனக்கு எந்த ஒலியும் கேளாத அமைதி வேண்டும்'' என்றேன். அவள் மூடிவிட்டாள். நான் ஏதேதோ எண்ணியவனைப் படுத்திருந்தேன்.

நிராசை அதிகரித்தபோது நான் பிரார்த்தனையில் ஈடுபட்டேன். பிரார்த்தனையினால் அமைதியையும் நம்பிக்கையையும் பெறலாம் என்று கருதியிருந்த நான் அதைப் பரிசோதனை செய்வதற்குரிய சந்தர்ப்பம் என்று சிறிது நேரம் பிரார்த்தனையில் ஆழ்ந்தேன். இத்தகைய நேரங்களில்தாம் நாம் அன்புக்குரியவர் அருகே இருக்க விரும்புகிறோம். ஆதரவும் கனிவும் கொண்டு பணிப் பெண் பணிவிடை செய்வதும், அன்பு ததும்பப் பேசுவதும் எனக்கு ஆறுதலாக இருந்தது. என்றாலும் நான் பெரிதும் அன்பு செலுத்துவோர், என்மீது அன்பு செலுத்துவோர் போல அவள் ஆவாளா? அந்த நெருங்கிய உள்ளார்ந்த அன்பு கொண்டவர்களுக்காக ஏங்கினேன்.

அருகில் அடைக்கலங் குருவிகள் கலகலவென்று ஒலி எழுப்பிக்கொண்டிருந்தன. தொலைவில் சென்றுகொண்டிருந்த கார்களின் குழல் ஒலியும், பணிப் பெண்ணின் ஆறுதல் மொழிகளும் என் செவிகளில்

தெளிவில்லா ஒலிகளாய்த்தாம் விழுந்தன. சிறிது நேரம் சென்ற பின்னரே, கருணாகர மேனனும், டாக்டர் பி. பி. மேனனும் அங்கு வந்தனர். அவர்களிடம் நான் டாக்டர் ஸ்டெல்லார்டின் கருத்தைத் தெரிவித்தேன். அவர்கள் எனக்குத் தேறுதல் கூற முயன்றும் பயனில்லை. தாங்க இயலாத தளர்வும் பலவீனமும் என்னைப் பற்றியிருந்தன. அன்று முழுதும் நான் பிரார்த்தனையிலேயே மனதைச் செலுத்தினேன். என்னைக் காண வந்திருந்த சில நண்பர்களுடன் சாதாரணமாக நான் பேசிக்கொண்டிருந்தாலும், என் உள்ளத்தில் கனன்றுகொண்டிருந்த வேதனையை அவர்கள் யாரும் அறிந்திருக்க மாட்டார்கள். அன்றிரவு நான் உறங்கவேயில்லை. அடிக்கடி கட்டிலிலிருந்து எழுந்து அங்குமிங்குமாக நடந்தவாறு மனதில் பொங்கி வந்த துயரை அடக்கிக்கொள்ள முயன்றேன். மறுநாட் காலையில் டாக்டர் ஸ்டெல்லார்ட் என்னைப் பரிசோதிக்க வந்தபோது, ''இனியும் ஆபரேஷன் வேண்டாம் என்று தீர்மானம் செய்துவிட்டீர்களா?'' என்று வினவினார்.

''அதற்கு எனக்கு விருப்பமில்லை'' என்று மறுமொழி பகர்ந்தேன்.

''டாக்டர், நோய் குணமாக மூன்று வழிகள் உண்டு. மருந்தினால் குணம் காணலாம்; இல்லையேல் ரணசிகிச்சை; இவ்விரண்டுக்கும் குணம் தெரியவில்லையெனின் மூன்றாவது வழியைத்தான் நம்பவேண்டும். அது பிரார்த்தனையும் நம்பிக்கையும்தான். முதல் இரண்டு வழிகளிலும் கிடைக்காத பலன் அதில் கிடைக்குமென்று நம்புகிறேன்'' என்றேன்.

''மிஸ்டர் மேனன்! உங்கள் நம்பிக்கையைப் பாராட்டி வாழ்த்துகிறேன்! கடவுள் உங்களுக்கு அருள்புரிவார்!'' என்றார் டாக்டர்.

பின்னர் இரண்டு நாட்கள் நான் மருத்துவமனையில் தங்கியிருந்தேன். எதிர்பார்த்த பலன் ரணசிகிச்சையின் விளைவாக வாய்க்கவில்லையெனினும் முன்னைக் காட்டிலும் கண்களில் சிறிது வெளிச்சம் கிடைத்ததாகத் தோன்றியது. வெளியே வந்து சுற்றிலும் நோக்கியபோது, சிறிது மலர்ச்சியும் கூடியது. லண்டனில் பழக்கமான இடங்களும், பழைய கட்டடங்களும், சாலையில் செல்லும் ஊர்திகளும் எனக்கு மகிழ்ச்சியூட்டின என்றாலும் இயலாமையின் ஓர் மெல்லிய இழை என்னுள் ஊடுருவாமல் இல்லை.

இரண்டு வார காலம் நான் மருத்துவமனையில் தங்கியிருந்தேன். மருத்துவர்களுடைய திறமையும், பணிப்பெண்களின் கனிவு கூடிய பணிவிடைகளும், மருத்துவமனையின் வசதிகளும் எனக்கு எத்தனைப் புகழ்ந்தாலும் போதாவென்று தோன்றியது. தொண்டு செய்வதை ஓர் உயரிய கலையாகக் கருதி அதை வளர்த்துவரும் சில பணிப் பெண்டிரை அங்கு நான் கண்டேன். அவர்களுக்கு என் மனம் கனிந்த நன்றியையும் மாயாதைக்குரிய அன்பையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பிய பிறகு, நான் லண்டன் நகரில் சில நாட்கள் தங்கியிருந்தேன். இடையில் டாக்டர் ஸ்டெல்லார்ட் கூறிய ரணசிகிச்சை குறித்தும் தீவிரமாகச் சிந்தனை செய்தேன். என் மக்களும் உறவினர்களும், நண்பர்களும் செய்தி அறிந்ததும், இரண்டாவது ஆபரேஷன் குறித்து நன்கு சிந்தனை செய்யுமாறு கேட்டுக்கொண்டார்கள். டாக்டர் பி. பி மேனனும், லண்டனில் என் நண்பர்களாக இருந்த சில டாக்டர்களுடன் கலந்து ஆலோசனை செய்தார். அதைப் பற்றிய குற்றங் குறைகளை நன்கு ஆராய்ந்து சிந்தித்த பிறகே இரண்டாவது ரணசிகிச்சை வேண்டாமென்று முடிவு செய்தோம்.

இந்நிலையில் பின்னும் லண்டனில் அதிக நாட்கள் தங்குவானேன்? ரணசிகிச்சை முடிந்தபிறகு, ஸ்காட்லாந்துக்கும் ஐரோப்பாவில் வேறு சில இடங்களுக்கும் செல்லலாம் என்று முதலில் எண்ணியிருந்தேன். அதெல்லாம் வேண்டாமென்று முடிவு செய்து நாடு திரும்பச் சித்தமானேம். ஆபரேஷன் கொண்டு பெற்ற சிறிது ஒளி, புதிய கண்ணாடி போட்டுக்கொண்டதும், மேலும் சிறிது தெளிவடைந்தது. எனக்குப் பரிசயமான லண்டன் நகரை நான் மீண்டும் நன்கு காண முடிந்தது. புதிய கட்டடங்களின் தோற்றங்களும், அமைப்புகளும் எண்ணிக்கைகளும் மட்டும் என் கருத்தைக் கவர்ந்திருக்கவில்லை. பெரிய புரட்சி ஏதுமின்றி, சோஷலிஸ்ட் நடைமுறையில் இயங்கிய புதியதோர் சமுதாயத்தைப் படைப்பதில் ஆங்கிலேயர் பெற்றிருந்த வெற்றிகண்டு வியந்தேன். தொழிலில்லாதவரின் எண்ணிக்கை மிகக்குறைவு. மாறிய சூழ்நிலையில், நிறைவுகண்டு வாழும் ஆங்கிலேயரின் கூரிய நோக்கையும் உயர்வையும் கண்டு யாரே மதிப்பும் மரியாதையும் கொள்ளாமாட்டார்கள்?

50

லண்டனிலிருந்து திரும்புதல்

1959ஆம் ஆண்டு ஏப்ரல் இருபத்தொன்றும் தேதி பகல் மூன்று மணிக்கு நாங்கள் லண்டனிலிருந்து விமான வழியாகப் புறப்பட்டோம். சில நண்பர்கள் எனக்கு விடையளித்து வழியனுப்ப விமான நிலையம் வந்திருந்தனர். மாலை ஆறு மணிக்குப் 'ப்ராகை' அடைந்தோம். அங்குக் காத்திருந்த இந்திய நண்பர்களைச் சந்தித்து ஒருமணி நேரம் அளவளா

வினேன் ஏழு மணிக்கு அங்கிருந்து கிளம்பி டமாஸ்கஸில் இறங்கினேம். அப்போது பொழுது புலர்ந்துவிட்டது. காலை ஏழு மணிக்கு டமாஸ் கஸிலிருந்து கிளம்பி, பம்பாய்க்குப் பயணமான விமானம், அந்த நீண்ட பயணத்தில் மிகவும் அசைந்து குலுங்கிக்கொண்டிருந்தது. விமானப் பணிப் பெண்டிருக்கும், ஏனைய விமானச் சிப்பந்திகளுக்கும் அது பழக்கம்தானென்றாலும், பயணிகள் பலருக்கும் அது கவலையையும் அச்சத்தையும் அளித்தன. காலையுணவு கொண்டுவந்து தந்த பணிப் பெண், அது ஒன்றுமில்லை என்று சிரித்தவாறு மொழிந்தாலும், என் மனச்சஞ்சலத்தை அது போக்கவில்லை. உணவை விரும்பிப் புசிக்க இயலவில்லை. அந்த ஆட்டம் குறைந்து அமைதியுறும் வரையிலும் காத்திருந்தோம். நான் அதன் பின்னரே உணவு கொண்டேன். நல்ல வெயிலாக இருந்ததனால், பூமி நிலையை அறிவதற்கும் சில சமயங்களில் இடங்களைக் காண்பதற்கும், விமானப் பணிப்பெண் உதவினாள். இருப தாயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்துகொண்டிருந்தது. என்றாலும் ஓர் அறையிலமர்ந்து பேசிக்கொண்டு உணவருந்துவதுபோல் எனக்குத் தோன்றியது. நாவிகேட்டர், பைலட் ஆகியோரது நுண்ணறிவும், சமயோசிதத் திறமையும், நாங்கள் கவலையின்றிப் பயணத்தைத் தொடர்வதற்கான வழிசெய்தன. எந்த நிமிஷத்திலும் எதுவும் நேரலாம். என்றாலும் விமானம் ஆடும் சமயம் தவிர, மற்ற நேரத்தில் பயணிகளுக்கு எதுவும் அச்சமாகத் தோன்றவில்லை. காலை யுணவும் பகலுணவும் கொண்டு தேநீரும் அருந்திய பின்னரே எட்டு மணி நேரம் பயணம் செய்தபின், இருபத்திரண்டாம் தேதி மாலை நாலரை மணிக்கு பம்பாய் வந்து சேர்ந்தோம். பல நண்பர்கள் பம்பாய் விமான தளத்தில் இருந்தனர். அவர்களைச் சந்தித்துப் பேசிய பிறகு எனக்குத் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்த இடத்துக்குச் சென்றோம்.

வி. எம். நாயரின் மருமகனுடைய வீட்டில் நானும் கருணாகரனும் தங்கினேம். மாதவ தாஸும், அவர் மனைவி கமலாவும் அன்பும் கனிவும் கொண்டு எங்களை வரவேற்றனர். நான்கு நாட்கள் அங்குத் தங்கி பூரண ஓய்வு எடுத்துக்கொண்டோம்.

ஏப்ரல் இருபத்தாறாந் தேதி பம்பாயிலிருந்து சென்னைக்கு வந்தோம். டாக்டர் பி. பி. மேனனும் அன்றே கோழிக்கோடு திரும்பிவிட்டார். சென்னைக்குத் திரும்பிய பிறகுதான் நாட்டில் பொதுவாகவே நிலவி யிருந்த மோசமான நிலைமையையும் அதற்குத் தீர்வுகாணும் வகையில் அரசு எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளாமலிருந்ததையும் கண்டு, ஸ்ரீ கேளப்பன் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொள்வதாக இருப்பதாகவும் செய்தி அறிந்தேன்.

இது என்னை மிகவும் வருத்தியது. தன்னலமற்ற தியாக சீலராகிய கேளப்பனுடைய நாட்டுப் பற்றிலும், இலட்சிய நோக்கிலும் எனக்கு அரிய மதிப்புண்டு. ஆனல் உண்ணுவிரதம் மேற்கொண்டு நாட்டு நிலைமையைச் சீர்செய்ய முடியுமென்று நான் கருதவில்லை. கேளப்பனிடம் நான் உண்ணுவிரதத்தைக் கைவிட வேண்டினேன். நான் கடிதம் எழுதியதும், அவர் கருத்தை மாற்றிக்கொண்டு விடுவாரென்று நிச்சயமாகக் கருதவில்லை. என்றாலும் கேளப்பனிடம் வேண்டி ஓர் கடிதம் அனுப்பியது எனக்கு ஆறுதலாக இருந்தது.

நானும் கருணாகரமேனனும் ஒரு வாரம் சென்னையில் தங்கிய பிறகு, மே இரண்டாந் தேதி இரவு விமானத்தில் சிங்கப்பூருக்குப் பயணமானேம். மூன்றாந் தேதி காலையில் சிங்கப்பூரை அடைந்தோம். சிங்கப்பூரில் ஆறுவார காலம் தங்கினேன். என் மகள் லீலாவின் இல்லத்தில் தான் தங்கினேன். அவளுடைய கணவன் தலாப் அங்கு ஆசிரியராக இருப்பதாக முன்பு கூறினேனல்லவா? என் மகன் உண்ணியும் சிங்கப்பூரில்தானிருந்தான். ஜப்பானிய விமானக் கம்பெனியில் உண்ணி ஒரு அதிகாரி. அவர்களைத் தவிர, என் உறவினர் பலர் அங்கே இருந்தனர். உண்ணியின் மகனுக்கு மூன்று வயசு நிரம்பியிருந்தது. கண் சிகிச்சை செய்துகொண்டு வெளிச்சம் கண்ட பிறகு, முதன் முதலாக, என் பேரன் ஹரியின் முகத்தைக் காண முடியுமோ என்றுதான் எண்ணினேன். சிங்கப்பூர் சென்ற அந்நாள் காலையில் தான் நான் அவனை முதன் முதலாகக் கண்டேன். அப்போதைய என் மன உணர்வுகளை நான் எவ்வாறு விவரிப்பேன்?

நான் சிங்கப்பூரை விட்டுப் பதினேராண்டுகளாகியிருந்தன. இருந்தும் அங்கு வாழ்ந்த மலையாளிகளும், பிறரும் என்னை வரவேற்று உபசரித்தது கண்டு மனம் நெகிழ்ந்தேன்.

சிங்கப்பூரின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கி இருந்த நிலையில் நான் அங்குச் சென்றிருந்தேன். சிங்கப்பூர் ஒரு தனிப் பிரதேசமாயிருந்தது. நான் அங்கு இருந்த நாட்களில் புதிய ஆட்சிமுறைக்கேற்ப பொதுத்தேர்தல் நடைபெற்றது. தேர்தல் கோலாகலங்களையும் பி. ஐ. பி. கட்சி பதவியேற்றதையும் கண்டேன். அதைக் கொண்டாடுவதற்குக் கூடிய பொதுக்கூட்டம் கண்டு வியப்பிலாழ்ந்தேன். பிரிட்டிஷார் சுயேச்சாதிகாரம் செலுத்திய இடம் சிங்கப்பூர். பி.ஐ.பி. அரசாட்சி வந்த பின்னர், பிரிட்டிஷார் ஒவ்வொருவராக அங்கு விட்டகன்றனர். அச் சிறு தீவில் என்னென்ன மாறுதல்கள் வந்து விட்டன!

மலேயாவிலும் அவ்வாறே நடந்தது. அந்நாடும் சுதந்திரம் பெற்று விட்டது. பிரிட்டிஷார் அதையும் விடவேண்டி வந்தது. ஒன்பது

ராஜ்யங்களும் இணைந்து, ஒரு ஃபெடரேஷனுயிற்று. தேர்ந்தெடுக்கப் பெற்ற ஒரு சுல்தான் ஆட்சிமுறைகளை ஏற்று ஆளுந் தலைவராஞர். ஒரு பார்லிமென்டும், மக்களாட்சி வழக்கிலுள்ள ஆட்சி முறையும் மிக விரைவில் கூடிவந்தன.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், நான் முதன்முதலாக மலேயா வந்து, அங்கிருந்த உச்ச நீதிமன்றத்தில் அட்வகேட்டாகத் தொழில்புரிய விண்ணப்பம் செய்தபோது, என்னுடைய தேசியக் கருத்துகள், அந்த நீதிமன்றத்தில் என்னை வழக்குரைஞுகத் தொழில்புரியத் தகுதியில்லாதவனுக அந்நாள் வழக்குரைஞர் சங்கத் தினரால் கருதுமாறு செய்தன. இப்போதைய அந்த நாட்டு நிலையை எண்ணிப் பார்க்கையில் ஒருகால் என்னை அங்குள்ள பல நண்பர்கள், என்னைப் பழைமைவாதி என்று கருதுவார்களாக இருக்கும்! ஒரு காலத்தில் எத்தகைய தேசியக் கருத்தையும் நகைச்சுவைக்குரியதாக விமரிசனம் செய்த பலரும் அப்போது முழுமூச்சுடன் அரசியல் நடவடிக்கைகளில் பற்று மிகுந்தவராக இருந்தனர்.

பழைய நண்பர்களைக் காண்பதற்கும், பல விருந்துகளிலும் பொதுக் கூட்டங்களிலும் கலந்து கொள்வதற்கும், நான் சிங்கப்பூரில் தங்கிய நாட்களில் சந்தர்ப்பங்களேற்பட்டன. 'பிலாத்தி விசேஷம்' புதிய பதிப்பு வெளியிடுகையில், அதில் சேர்ப்பதற்காக ஐந்து புதிய அத்தியாயங்கள் அங்குத் தங்கிய நாட்களில் எழுதி முடித்தேன்.

ஜூன் பதினுன்காம் தேதி, இரவு பத்து மணிக்கு நானும் கருணுகர மேனனும், விமான வழியாகச் சிங்கப்பூரிலிருந்து ஏழு மணி நேரம் பயணம் செய்தபின் சென்னை வந்து சேர்ந்தோம். ஒருநாள் அங்குத் தங்கி, பதினுறும் தேதி கோழிக்கோடு திரும்பினேம்.

சிங்கப்பூரில் என் கண்ணுடியை மீண்டும் ஓர் முறை மாற்றிக் கொண்டேன். புதிய கண்ணுடி சற்று அதிகமாகவே ஒளி தந்தது. கோழிக்கோடு ரயில் நிலையத்தில் வந்து கூடியிருந்த நண்பர்களுடைய முகங்கள் தெளிவாகத் தெரிந்தபோது நான் பெருமகிழ்ச்சியுற்றேன். அவர்களில் பலர் முகங்களை நான் தெளிவாகக் கண்டு இரண்டாண்டுக் காலத்துக்குமேலாகியிருந்தது.

நான்கு மாத லீவில் நான் லண்டன் சென்றிருந்தேன். அது முடிவு பெற இன்னும் இரண்டுவார காலமிருந்தது. அந் நாட்களில் பாலக் காட்டுக்கும் வேறு சில இடங்களுக்கும் சென்று, உறவினரையும், நண்பர் களையும் கண்டேன். பின்னர் கோழிக்கோடு திரும்பி, ஜூலை ஆறுந் தேதி மீண்டும் அலுவலகப் பணியேற்றேன்.

51

மாறிய சூழ்நிலை

கண் சிகிச்சையை முன்னிட்டு இங்கிலாந்து செல்லு முன் இருந்ததைக் காட்டிலும் ஒளி கூடிய கண்களுடன் நான் நாடு திரும்பி யிருந்தேன். என்றாலும் எழுதுவதற்கும் படிப்பதற்கும் கடினமாகவே இருந்தது. இரண்டு பணிகளுக்கும் முன் போலவே பிறர் உதவி தேவையாக இருந்தது. என்றாலும் மிகுந்த தொல்லையின்றி என் அன்றாட அலுவல்களை நான் சமாளித்துக்கொண்டேன். உடல் நலிவோ, பணிபுரியச் சோர்வோ, உற்சாகக் குறைவோ இல்லை. இங்கிலாந்திலிருந்து திரும்பிய பின்னர் வருங்காலத்தைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கும்வண்ணம் நாட்டில் நிலைமை மாறியிருந்தது.

ஆம், நாட்டுச்சூழல் முற்றிலும் மாறியிருந்தது. கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர் பதவியிலிருந்தனர். அந்த அரசாங்கத்துக்கு விரோதமாக மற்றக் கட்சியினரின் எதிர்ப்புச் சக்தி பரவலாக அதிகரித்தது. அரசாங்கத்தின் கல்விச் சீர்திருத்தச் சட்டத்துக்கு எதிராக முதலில் கிளர்ச்சி தொடங்கியது. அது விரைவில் நாடு முழுவதும் பரவிய பெருங்கிளர்ச்சியாக உருவெடுத்தது. கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான கூக்குரல் நாடு முழுதும் எதிரொலிக்கலாயிற்று. பொதுவுடைமைக் கட்சியைத் தவிர்த்து ஏனைய கட்சிகளனைத்தும் ஒன்று சேர்ந்தன. சிறு குற்றத்தையும் அவர்கள் ஆட்சியாளரிடம் பொறுத்து, விட்டுக் கொடுப்பவர்களாக இல்லை. தேர்தலில் வெற்றி பெற்று, பதவியேற்ற தங்களுக்குச் சட்ட சபையில் பெரும்பான்மை இருக்கும் வரையிலும் ஆட்சிபுரியும் உரிமை இருக்கிறதென்று பொதுவுடைமைக் கட்சி ஆட்சியாளர் வாதித்தனர். அதிகாரத்திலிருக்கும் ஒரு கட்சியினரை நேரடிப் போராட்டம் நடத்தி வீழ்த்த முயற்சி செய்வது ஜனநாயக முறைக்கு உகந்ததல்ல என்று அவர்கள் சுட்டிக் காட்டினர். இரண்டாண்டுக் காலமாக நிலவி வரும் கம்யூனிஸ்ட் தலைவர்களின் மோசமான ஆட்சிக்கு எவ்வாறேனும் முடிவு கட்டவில்லை யெனின், அது கேரளத்தின் ஜனநாயக முறைக்கே தீங்கு விளைவிக்கக்கூடும் என்று காங்கிரசைச் சேர்ந்தவர்களும், மற்றக் கட்சிக்காரர்களும் கருதினர்கள். மக்கள் இருதரப்பினராகப் பிரிந்தனர். ஒரு பிரிவு கம்யூனிஸ்ட் ஆதரவாளர்; மற்றவர் கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்.

மக்கள் போராட்டத்தை அடக்க, கம்யூனிஸ்ட் அரசாங்கம் முனைப்பாக நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டபோது எதிர்ப்பாற்றல் தான் மிகுதியாகப் பெருகிற்று. கேரளத்துக்கு வெளியிலும் உள்நாட்டிலும், கிளர்ச்சிக்கு ஆதரவாளரும் எதிர்ப்பாளரும் பெருகினர். கேரளத்தில் நடந்த நிகழ்ச்சிகளை இந்தியாவின் மற்ற ராஜ்யங்களிலும் வெளி நாடுகளிலும்கூட மக்கள் மிகுந்த கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்தனர்.

கேரளத்தில் தேசிய அரங்கு வெறுப்பும் பகையுமாக மிக மோசமாகிக் கொண்டிருந்தது. ஆற்றலுடன் பரவிய கிளர்ச்சிப் பெரு வெள்ளத்தில், தேசியக் கட்சிகளைப்போல் பத்திரிகைகளும் மிகுந்த சோதனைக் குள்ளாயின. கம்யூனிஸ்ட் கட்சியினரின் கொடிய ஆட்சி முறையிலிருந்து விடுபட, மாற்றுக் கட்சியினர் விடுதலைப் போராட்டம் தொடங்கினர். நாட்டில் நிலவிய ஆட்சி முறை பற்றிய கருத்து வேற்றுமை எனக்கும் இருந்தது. அது முடிவடைய வேண்டும் என்று நானும் ஆர்வம்கொண்டிருந்தேன். ஆனால், அதற்காகக் காங்கிரஸ் கட்சியும் மற்றக் கட்சியாளரும் கையாண்ட வழிமுறைகள் என்னை வேதனைக்குள்ளாக்கின. குடியரசாட்சி முறைக்குச் சற்றும் அச் செயல் பொருந்தாததென்று எனக்குத் தோன்றியது. கம்யூனிஸ்ட் ஆட்சியாளரின் மோசமான ஆட்சி முறைபோன்றே விடுதலைப் போராட்டக் காரரும் கையாண்ட வழி முறைகள் ஜனநாயகத்தின் வீழ்ச்சிக்கு வழிகோலும் என்று நான் அஞ்சினேன். கம்யூனிஸ்ட் ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணத்துடன் களத்திலிறங்கிய அரசியல் கட்சிகளோ பத்திரிகைகளோ தாம் கொண்டிருந்த ஆவேச வெறியில், ஜனநாயக முறைக்கு வந்துவிடக்கூடிய இந்த அபாயத்தைக் குறித்துச் சிந்தனை செய்யவில்லை. ஆதரவற்ற நிலையில் இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர, வேறு வழி ஏதும் எனக்குப் புலப்படவில்லை. என்றாலும், எதுவுமே கூறாமல் நான் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பது என்னுடைய நாட்டு மக்களுக்கு நான் செய்யக்கூடிய துரோகத்தைப் போன்று மனம் துன்புற்றது. 1959ஆம் ஆண்டு, ஜூலை இருபத்தொன்பதாம் தேதி மாத்ருபூமி இதழில் நான் ஓர் அறிக்கை வெளியிட்டேன். கேளப்பனும் அதில் கையெழுத்திட்டிருந்தார். இந்த அறிக்கை மற்றும் சில பத்திரிகைகளிலும் வெளியாயிற்று. அதன் சில பகுதிகளைக் கீழே காணலாம் :

முன்னர் ஒருபோதும் ஏற்பட்டிராத வகையில் ஓர் நிச்சயமற்ற நிலை இந்நாளில் கேரளத்தில் தோன்றியுள்ளது. ஒழுங்கும் அமைதியும் சீர்குலைந்திருக்கிறது. சட்டத்தை மதித்து, நீதிநெறிக்குக் கட்டுப்பட்டு வாழும் வாழ்வு அறவே குலைந்துவிட்டது. மாணவர் படிப்பில் கவனம்

செலுத்தாதவராயினர். வயதுவந்த பெரியோர் தம் பணிகளில் கவனம் செலுத்தவில்லை. கட்டுப்பாடற்ற பேச்சுகளும், செயல் முறைகளும், நாகரிகப் பண்பு வாய்ந்த மக்களால் ஒப்ப முடியாத அளவுக்குத் தரம் தாழ்ந்துவிட்டன. இரு கட்சிக்காரர்களும், ஒரு கட்சியிலும் சேராமல் தனித்திருப்பவர்களும் நாணித் தலைகுனியும்படியானதோர் மோசமான நிலையையே இந்நாள் கேரளத்தில் காண்கிறோம். இதன் பொறுப்பாளர் யார் என்பதோ, எந்தக் கட்சியின்பால் நியாயம் இருக்கிறதென்றோ விவாதத்துக்குரிய விஷயங்களை இங்கு விவரிக்கப்போவதில்லை. இந்நாளில் நடக்கும் சில விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்ந்துகொண்டிருப்பது, நாட்டின் வருங்காலத்தை மிகவும் பாதிக்கக்கூடும் என்றஞ்சி, மௌனத்தைக் கைவிட்டு நாங்கள் இவ்வாறு ஓர் அறிக்கை வெளியிட முன்வந்தோம்.

''வேறொரு பரம்பரையில் வளர்ந்து வந்த எங்களுக்கு, இதெல்லாவற்றையும் காண்கையில் சோர்வு மேலிடுகிறது. மனம் வெம்புகிறது. தாங்கொணா வேதனை தோன்றுகிறது. இந்த நிலைமைக்கு ஓர் முடிவு தேடுவது, இந்நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் உரிய புனிதமானதொரு கடமையன்றோ? பொதுமக்களுடைய தார்மிக உணர்வுகளை நம்மால் நல்வழிக்குத் திருப்பி உயர்வு காணச் செய்ய இயலாததாகுமா?.....''

கிளர்ச்சியை அதிக நாட்கள் தொடர்ந்து நடத்த முடியாதென்று நம்புகையில் சற்றே ஆறுதலாக இருந்தது. நாட்டில் நிகழ்ந்த முறையற்ற செயல்களும், ஆட்சிக்கு நேரிட்ட சோதனையும், கேரளத்தில் பொதுவுடைமைக் கட்சியினரின் ஆட்சிக்கு முடிவுகாண வேண்டுமென்பதே காரணம் என்று மத்திய அரசு உணர்ந்தது. அதனால் 1959ஆம் ஆண்டு செப்டம்பர் ஒன்றாந் தேதி நடைமுறையிலிருந்த ஆட்சியைத் தள்ளுபடி செய்து அதிகாரத்தை இந்திய யூனியன் தலைவர் கைக்கொண்டார். போர் முடிந்தது. நாட்டில் பழைய நிலை திரும்பிற்று. அரசியல் கட்சிகள் மீண்டும் ஓர் பொதுத் தேர்தலுக்குத் தயாராகத் தொடங்கின. 1960ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அந்தத் தேர்தல் நடந்தது. அதன் விளைவாக, காங்கிரஸும் பி. எஸ். பி. யும் இணைந்ததோர் மந்திரிசபை பதவியேற்றது. முஸ்லீம் லீகின் ஆதரவும் இந்த மந்திரிசபைக்குக் கிடைத்தது. அப்போதே எனக்கு லீகுடன் இணைந்தது நன்மைக்குகந்ததன்று என்று தோன்றியது.

இந்த மாறுபட்ட சூழ்நிலையில், எனது பொறுப்புகளைப் பற்றி நான் சிந்தனை செய்யலானேன். முக்கியமான பல வேலைகளையும் பிறர் உதவியின்றி நான் சமாளித்துக்கொண்டேன். என்றாலும், எழுதுவதற்கும் படிப்பதற்கும் பிறர் உதவி தேவையாக இருந்தது.

இந்த விஷயங்களைப் பற்றி மற்றவர்களுடன் விவாதிப்பதற்கு நான் விரும்பவில்லை. ஆனால் பத்திரிகை ஆசிரியன் என்ற நிலையில் எனது பணிகளைச் செவ்வையாக ஆற்றுவதற்கு இந்நிலை கடினமென்றே தோன்றியது. இனி யாது செய்வதென்று குழம்பியவனாகக் கவலை கொண்டிருந்தேன்.

கண் சிகிச்சைக்காக நான் லண்டன் சென்றிருந்தபோது ஆசிரியர் பொறுப்பேற்றிருந்த வி. எம். நாயர் நான் திரும்பிய பிறகும் எனக்கு உதவியாகச் சிறிது காலம் பத்திரிகைப் பணியைத் தொடர்ந்தாற்றினார். அவ்வாறு அவர் பத்திரிகையின் ஆசிரியர் என்ற நிலையில் பெரு மளவுக்குப் பொறுப்பேற்றிருந்ததால் எனக்கு ஆறுதலாக இருந்தது. வி. எம். நாயர் இவ்வாறு மாத்ருபூமியின் மானேஜிங் எடிட்டரானார். நான் சீஃப் எடிட்டர் என்ற நிலையிலிருந்தேன். பின்னர், மாத்ருபூமியின் நல் வளர்ச்சிக்கும், மலர்ச்சிக்கும், வி. எம். நாயர் ஆற்றிய பணி பேரருளாக இருந்தது.

இப் புதிய நிலை, நான் வேறு களங்களில் செயலாற்றுவதற்கும் எனக்கு வசதியாக இருந்தது. கேரள சாஹித்ய அகாதமியின் செயற்குழுத் தலைவனாக இருந்து விலகியதாக முன்பு கூறினேனல்லவா? அகாதமியின் துணைத்தலைவராக இருந்த மாகவி வள்ளத்தோள் காலமான பிறகு, அந்தப் பதவியை நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று புதிய அரசாங்கம் என்னை வேண்டியது. அகாதமி முற்றிலும் சுதந்திரமாகச் செயல் புரியும் நிறுவனமாக இருக்கவேண்டும். அதன் நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடக்கூடாதென்ற காரணம் கொண்டுதானே தலைமைப் பொறுப்பிலிருந்து விலகினேன்? அகாதமியின் பதவி நிலையையும் அதிகாரத்தையும் பற்றிய என் கருத்தைப் புதிய அரசாங்கம் ஏற்று மதிக்கும் என்ற நம்பிக்கையுடன் நான் துணைத் தலைவர் பொறுப்பை மீண்டும் ஏற்றுக்கொண்டேன். நான் விரும்பினேற் போன்று அகாதமியை ஒழுங்கு செய்யும் வகையில் சீர்திருத்தம் செய்ய முயன்றதும் பலனளிக்கவில்லை. 1961ஆம் ஆண்டு அக்டோபர் ஏழாந் தேதி சாஹித்ய அகாதமியின் நான்காம் ஆண்டுக் கூட்டத்தில் நான் தலைமையுரை நிகழ்த்தினேன். அப்போது அக் கருத்தைத் தெளி வாகத் தெரிவித்தேன். அந்த உரையின் சில பகுதிகளை இங்கே வெளியிடுகிறேன்.

"அகாதமி அதன் சொந்தப் பொறுப்புகளை நன்கு நிறைவேற்றிக் கொள்ளவேண்டுமானால், முற்றிலும் அது தானாகவே சுதந்திரமாக நிர்வாகம் செய்துகொள்ளும் நிறுவனமாகத்தான் இருக்கவேண்டும். அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான நெறிகளை வகுப்பது அரசாங்கத்தின் கடமை என்று 1956ஆம் ஆண்டில் அகாதமி முதலில்

தொடங்கப்பெற்றபோது அந்நாளைய திரு – கொச்சி ராஜ்ய ஆலோசகராக இருந்த ஸ்ரீ பி. எஸ். ராவ் மொழிந்தார். இதே கருத்தைத்தான் 1954ஆம் ஆண்டில் மத்திய சாஹித்ய அகாதமி திறப்பு விழா உரையிலும் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தெளிவுறுத்தியிருந்தார். அகாதமிகளை, சார்பற்ற நிறுவனங்களாக நடத்தவும், அவற்றின் இயக்கத்துக்குத் தேவையான நிதியளிப்பதும்தான் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள். இந்த முறையில், காட்சிக்கான திரையைத் தூக்குவது ஒன்றுதான் அரசாங்கத்தின் கடமை – பணி அகாதமியை நிறுவிய பின்னர், அதன்மீது எத்தகைய கட்டுப்பாட்டையும் அரசாங்கம் செலுத்தலாகாது. தன்னாட்சி முறையிலுள்ள ஓர் நிறுவனமென்ற நிலையில், அதன் கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள அதற்கு முழு உரிமையும் அளிக்கவேண்டும். அகாதமி, உயர்ந்த நோக்கங்களைத் தோற்றுவிக்கவும் மக்களுடைய ரசனையுணர்வைப் பண்படுத்தவும், செயல்பட வேண்டுமானால், நாட்டு மக்களுக்கு அதைப்பற்றிய நல்மதிப்பு வேண்டியது இன்றியமையாததாகும். அதற்கு அகாதமி ஒரு சுதந்திரமான அமைப்பாகத்தான் இருக்கவேண்டும். அரசாங்கம் அதன் இயக்கத்துக்குத் தேவையான நிதியளிப்பதால், அது, அரசின் ஆணைகளை ஏற்று, அரசாங்கச் சார்பாகவே செயல் புரிவதற்குப் பொறுப்பான அரசாங்கத் துறையல்ல. இந்த விஷயத்தை அகாதமி உறுப்பினரும், பொதுமக்களும், அரசாங்கமும் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

அகாதமியின் வளர்ச்சிக்கு உதவுவது தவிர, அகாதமியை அரசாங்கத்தை அண்டி நிற்கும் ஓர் குழுவாக மாற்றுவதற்கு அரசாங்கம் ஒரு நாளும் முயற்சி செய்யலாகாது. அது அகாதமியின் மதிப்பைக் குறைத்துவிடும். தானே தன்னை நிர்வாகம் செய்துகொள்ளும் உரிமை கொண்ட அமைப்பாக இருக்கவேண்டும் என்று கருதியே அதை நிறுவிய அமைப்பாளர் கருதியிருக்கின்றனர். ஆனால், அந்தத் தொடக்ககால முறையிலிருந்து மாறுதல்கள் ஏதேனும் காணவேண்டுமென்றாலும், அப்பொறுப்பையும் அகாதமிக்கே விட்டிருக்கின்றனர். இதைத் தொடர்ந்து ஆழ்ந்த யோசனைகளுக்குப் பின்னர், அகாதமி தயாரித்த நிர்வாகச் சீர்திருத்தங்களை அரசாங்க அங்கீகாரம் பெற அனுப்பி எட்டு மாதத்துக்கு மேலாகிறது. இன்னும் அதை அரசாங்கம் ஏற்கவில்லை என்பது மட்டுமல்ல - அது சம்பந்தமாக அகாதமியுடன் யாதொரு ஆலோசனை செய்யவும் முன் வரவில்லை. பல முறை இவ்விஷயம் குறித்து அகாதமி அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்க முயன்றும் பயனில்லை. அரசாங்கத்தின் அலட்சிய பாவமும், இணக்கமற்ற நிலையும் மாறவில்லை. இது அகாதமியின் நல் வளர்ச்சிக்கு ஏற்றதல்ல என்பதைக் கூற வேண்டியதில்லை.''

எவ்வாறுயினும் அந்த ஆண்டுடன் நான் அகாதமியுடன் கொண்ட தொடர்பை விடுவித்துக்கொண்டேன். இப்போதும் கேரள சாஹித் அகாதமிக்கு அதற்குரிய சுதந்திரமோ உரிய மதிப்போ வாய்க்கவில்லை.

லண்டனிலிருந்து திரும்பி வந்தபிறகு நான் பல நூல்களை எழுதினேன். 'விஜயத்திலேக்கு'(வெற்றியை நோக்கி), 'பிரபாத தீபம்' (காலை விளக்கு), 'ஆப்ரஹாம் லிங்கன்', 'நாம் முன்னேட்டு' (நாம் முன்னேறுகிறோம்), 'நவபாரத சில்பிகள்' இரண்டு தொகுதிகள், 'ஜவஹர்லால் நேரு', 'மகாத்மா காந்தி' இரண்டு தொகுதிகள், 'நாட்டினுவேண்டி' (நாட்டுக்காக), 'மகாத்மா' என்ற இரு நாடகங்கள்—என்று பன்னிரண்டு நூல்கள் எழுதிவிட்டேன்.

இந் நூல்களை எழுதுவதற்கு எனக்குப் பலரும் உதவியிருக்கின்றனர். கண்களில் வெளிச்சமில்லாத தொல்லையுடன் இந்நூல்களை நான் எவ்வாறு எழுதினேன் என்பதை வாசகர்களுக்கு அறியும் ஆர்வம் இருக்கும். அதிகாலையில் மூன்று மணிநேரம் நான் புத்தகமெழுத அமர்வேன். ஒன்று முடிந்ததும் இன்னொன்றைத் தொடங்குவேன். சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதுவதும் உண்டு. இவ்வாறே எட்டு ஆண்டுகளில் பன்னிரண்டு புத்தகங்களை எழுதினேன்.

எனக்கு எழுதுவதற்கு உதவி செய்தவர்களில் சிலரை இங்குக் குறிப்பிடுகிறேன். மதுரவனம் கிருஷ்ண குரூப், பி.எம். வேணுகோபாலமாரார், என். ஏ. கிருஷ்ணன் நாயர் ஆகியோராவர். நூல்கள் எழுத முற்படும்போது, நான் வேறு பல புத்தகங்களைப் படிக்கவேண்டியிருக்கும். எப்போதும் என் நினைவிலிருந்தே நூல்களை எழுதிவிட முடியாது. அதனால் பல சமயங்களிலும் அதற்குத் தேவையான நூல்களிலிருந்து வேண்டிய பகுதிகளைப் படித்துக் கூறும்படி உதவியாளரிடம் கேட்பேன். பிறகு நூலை எழுதத் தொடங்குவேன். நான் சொல்லிக் கொண்டே செல்கையில் உதவியாளர் எழுதுவது வழக்கம். என் மகள் லீலாவும், பேத்தி நளினியும், மாத்ருபூமி ஆசிரியர் என்ற நிலையில் தங்கமும் நூல் எழுதுவதற்கு உற்சாகமாக ஒவ்வொரு வகையில் தொடர்ந்து எனக்கு உதவியிருக்கின்றனர். இந்தத் தொல்லை மிகுந்த பணியில் எனக்கு உதவியாக இருந்தவர்கள் அனைவருக்கும் எனது நன்றியை இங்குப் புலப்படுத்திக்கொள்கிறேன்.

பல பொதுக்கூட்டங்களிலும் நான் பங்கு கொள்ளவேண்டியிருந்தது. காலந்தவறுமை எனது முக்கியமான கொள்கை. குறித்த நேரத்துக்குள் கூட்டம் நடக்கும் இடத்துக்குச் சென்றுவிடவேண்டும் என்று நினைப்பேன். எத்துணைச் சிறிய கூட்டமானாலும் அங்கே சென்று பேசவேண்டிய விஷயங்களைப்பற்றி முன்னதாகவே யோசித்துத் தயார் செய்துகொண்ட பிறகே கூட்டத்துக்குச் செல்வேன். வானொலிப் பேச்சுக்கும் அழைப்பு

வருவதுண்டு. எழுதியதைப்பார்த்து என்னால் படிக்க முடியாதல்லவா? என்றாலும் பேச வேண்டியதை முன்னதாக எழுதித் தயாரித்துக் கொள்வேன். பிறகு மைக்கின்முன் நின்று பேசுவது எனக்குக் கஷ்டமில்லை.

பத்திரிகை சம்பந்தமான வேலைகளை முக்காலும் வி. எம். நாயர்தாம் ஏற்றிருந்தார் என்றாலும் அலுவலகம் சென்றதும் எனக்கும் நிறைய வேலை இருக்கும். அன்றன்று வரும் முக்கியமான கடிதங்களையும் பத்திரிகைகளையும் என் செயலாளன் ஸ்ரீ குமாரன் எனக்குப் படித்துக்காட்டுவான். கடிதங்களுக்கு பதில் எழுதச் சொல்வேன். தத்தம் பிரச்னைகள் சம்பந்தமாகப் பலரிடமிருந்து வரும் கடிதங்கள் மிகுதியாக இருக்கும். இதன் பின்னர் பார்வையாளரைச் சந்தித்து பேசுவேன். பகலுணவு கொண்டபின் ஒரு மணி நேரமேனும் நான் உறங்குவது வழக்கம். எது வேண்டாமென்று வைத்தாலும் பகலுறக்கம் கொள்ளாமல் முடியாது. பிறகு மீண்டும் அலுவலகம் சென்று ஒன்றரை மணி நேரம் பணியாற்றுவேன். சில நாட்களில் எனக்குக் கூட்டங்களில் பங்கு கொள்ளவேண்டியிருக்கும். அது இல்லாத நாட்களில் வீடு திரும்பினால் லீலாவோ, நளினியோ எனக்குப் பிடித்த புத்தகங்களைப் படித்துக்காட்டுவார்கள். இரவு உணவு கொண்டபின்னர் சிறிதுநேரம் படிக்கச் சொல்லிக் கேட்டோ, பாட்டுக் கேட்டுக்கொண்டோ உட்கார்ந்திருக்க விரும்புவேன். ஒன்பதரை மணிக்குப் படுக்கச்செல்வேன். எனக்கு வயதான போதிலும், நான் வயதானவன் என்ற எண்ணம் எனக்கு ஏற்படவில்லை. பசியின்மை, ஞாபகக் குறைவு, தூக்கமின்மை போன்ற உடல் நலக் குறைவுகள் முதிர்ந்த பிராயத்தில் தொல்லை கொடுக்கும். இதுவரை அத்தகைய குறைகளேதும் என்னை பாதிக்கவில்லை.

பொதுக்கூட்டங்களில் பங்கு கொள்வதற்கோ, வேறு ஏதேனும் காரணம் குறித்தோ, நான் அவ்வப்போது வெளியூர் செல்லவும் வேண்டியிருக்கும். விரும்பிய உணவு தேவையான சமயத்தில் கிடைப்பதற்கான பயண வசதிகளைச் செய்துவிட்டால் பயணம் துன்பமாகத் தோன்றியதில்லை. மாறாக, பயணம் செய்ய விரும்புவேன்.

கண்ணொளி குறைவுபெற்றதால் ஏற்பட்ட துன்பம் என் பணியையோ, மன நலத்தையோ பாதித்து விடாதவண்ணம் நான் கவனமாக இருக்கிறேன். கண்சிகிச்சை செய்துகொண்ட பிறகு எனக்குச் சிறிது மனச்சோர்வு ஏற்பட்டது உண்மைதான். நாளடைவில் அந்தச் சோர்வும் கவலையும் குறையத் தொடங்கி, பின்னர் அறவே அகன்று விட்டது. சாதாரணமாக உற்சாகத்துடனே அன்றாடப் பணிகளைத் தொடர்ந்து செய்யலானேன். நம் மனநிலைக்கேற்ப உலகும் நம்மைக் கருதுகிறதன்றோ? முழுதுமாகக் கண்ணொளியற்றோர், எத்தனை அரிய சாதனைகளைப் புரிந்திருக்கின்றனர்!

''கண்ணெளி முழுதுமாக மாய்ந்தாலும் வாழ்கையைப் பயனும் மகிழ்ச்சியும் கூடியதாகவே கருதுகிறேன். அந்த நம்பிக்கையே தலையாய தாகக் கொள்ளவேண்டும்'' என்று 'ஃப்ரேய்ஸர் பிரபு' ஒருமுறை இயம் பினர். கண்ணெளியற்றோர் துன்பம் துடைக்கக் கடுமையாக உழைத் பெரியார் அவர். அவரும் கண்ணெளியற்றவர்தாம். இத்தகைய சான்றோரின் நல்லுரைகளைக் கேட்பதில் மிகுந்த பற்றுக்கொண்டவன் நான். இத்தகையோர் பலரது வாழ்க்கை வரலாறுகளை நான் படித் திருக்கிறேன். இன்னும் படிக்கச்சொல்லிக் கேட்டு இன்புறுகிறேன். கட்புலனும் செவிப்புலனும் இல்லாத பெருமாட்டி ஹெலன் கெல்லரின் வாழ்க்கை வரலாறு என்னை மிகவும் கவர்ந்த நூலாகும். அப்பெருமாட்டி செப்பினைற் போன்று ஐம்பொறிகளின் வாயிலாக நாம் பெறும் அநுபவங்களை இயற்கை நமக்களித்த, ஈடுசெய்ய இயலாத பேரரு ளாகவே கொள்ளவேண்டும். எல்லாப் புலன்களிலும் நமக்கு மிகவும் ஆனந்தம் அளிப்பது கண்களேயென்று ஐயமின்றிக் கூறலாம்.

நாளின் பெரும்பொழுதும் நான் பணியில் ஈடுபட்டிருப்பதால், என் குறையை உன்னி மனம் வருந்த எனக்குச் சந்தர்ப்பங்கள் மிகக் குறை வாகவே இருக்கின்றன. கண்ணெளி குறைந்தாலும், வாழ்க்கையைப் பயனுடைய தாக்கிக்கொள்ளும் வழிகளை நான் இப்போதும் ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். அந்த முயற்சியில் நான் தோல்வி காண்பதாகக் கூறமாட்டேன். மாறிக்கொண்டிருக்கும் வாழ்க்கையில், என் இயலாமை அன்றுட நடவடிக்கைகளுக்குத் தடையாக இல்லாமல் இருக்கட்டும் என்பதுதான் என் உளம் கனிந்த பிரார்த்தனை.

52

பொது வாழ்க்கையின் இரு பக்கங்கள்

அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலம் நான் பொது வாழ்வில் பங்குகொண்டிருந்திருக்கிறேன். அவ்வாறு கேரளத்திலும் வெளி யிலும், பொது வாழ்வின் இருபுறங்களையும், கரிப்பையும் இனிமையையும் நுகரும் சந்தர்ப்பங்கள் எனக்கு நிறைய வாய்த்திருக்கின்றன.

பொது வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு எனக்குத் தூண்டுதலளிப்பது எது? என்று யாரேனும் என்னை வினவினால், நான் விடையளிப்பதற்கு இயலாமல் திகைப்பேன். சிறு வயது முதலே எனக்கு அரசாங்க அலுவ

லகத்தில் அடிவைக்கும் ஆவல் இருந்ததில்லை. பொது வாழ்வில் பங்கு பெற்றுப் பணியாற்றுவதற்கேற்ப சுதந்திரமும் வசதியும் நிறைந்த தொரு தொழிலை மேற்கொள்வதற்கே நான் விரும்பினேன். மாணவனாக இருந்த நாட்களிலிருந்தே நாட்டுப்பற்று மிகுந்த தலைவர் களது வாழ்க்கை வரலாறுகளைப் படிக்கும் ஆர்வம் எனக்கு மிகுதியாக இருந்தது. எந்த நாட்டவர்களாக இருந்தாலும், சுதந்திரத்துக்காகப் போராடிய வீரர்களின் கதைகள் என்னைக் கிளர்ச்சி கொள்ளச்செய்தன. இத்தாலியை ஒரே நாடாக்க முழுமூச்சாக முனைந்துபோராடிய மாஜினி; அமெரிக்க நாட்டுக்கு விடுதலை தேடிக் கொடுத்த வாஷிங்டன்; மஞ்சு வம்சத்தாரின் கொடுங்கோலாட்சியிலிருந்து சீனாவை மீட்ட டாக்டர் ஸன்-யாட்-ஸென்; அயர்லாந்தில் பிரிட்டிஷாட்சிக்கு முடிவு கட்டிய டிவேலரா; நீகிரோ அடிமைகளுடைய விடுதலைக்காக மனங்கனிந்து செயல்புரிந்த லிங்கன் ஆகியோரது வாழ்க்கை வரலாறுகளை அடங்காத ஆர்வம் கொண்டவனாக நான் படித்தறிந்தேன். பொதுப்பணியில் என் ஆர்வத்தையும் ஆவலையும் வளர்ப்பதற்கு அவை பெருமளவில் எனக்குத் தூண்டுதலளித்திருக்கின்றன.

நான் கோழிக்கோட்டில் தொழில் தொடங்கிய காலத்தில்தானே ஹோம்ரூல் லீகின் செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்? அவ்வாறு தொடங்கிய பொதுப்பணி, நெடுங்காலம் தொடர்ந்து வந்தது. ஒரு களத்தில் இல்லையெனின் இன்னொரு களத்தில் மாறி யிருக்கும்; பணியின் முறை மாறியிருக்கும். ஆனால் எனக்கு விருப்பமான பொதுச்சேவையில் நான் தொடர்ந்து ஈடுபட்டவனாகவே இருந்தேன். எந்தக் களமாக இருந்தாலும் பொதுத்தொண்டாற்றுங்கால், எதிர்ப்பு களைச் சந்திக்காமல் இருக்க முடியாது. ஹோம்ரூல் இயக்கத்தில் பங்கு கொண்ட காலத்தில், தாழ்த்தப்பட்ட சாதியினரின் விரோதத்தை நான் ஏற்கவேண்டியிருந்தது. வைக்கம் சத்தியாக்கிரஹ நாட்களில் உயர்ந்த சாதியாருடன் மோதவேண்டியிருந்தது. ஒத்துழையாமை இயக்க காலத்தில் அரசாங்கத்தரப்பைச் சார்ந்த பிரமுகரனைவரும் எனக்கு எதிரிகளாயினர். தொழிலாளர் இயக்க விஷயத்தில், முதலாளி களின் பக்கமிருந்து வந்த கடுமையான எதிர்ப்புக்கு ஆளானேன். கொள்கையின்மீதான நம்பிக்கையும், எண்ணத் தூய்மையும்தாம் இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒரு பொதுநலத் தொண்டருக்குத் தெம்பும் உறுதியும் அளிக்க வல்லவை.

"சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் புகழும் சக்தியும் எங்கே? அதை எதிர்க்கிறார்களாம், இந்த ஹோம்ரூல் காரர்கள்? இது போன்ற பைத்தியங்களிடம் என்ன பேசலாம்?" என்றுதான் அந்நாளைய காங்கிரஸ்காரர்களைப் பற்றிப் பலரும்

பேசினர்கள். அவர்களுடன் விவாதம் செய்வதில் பயனில்லை. எதிராளியின் கருத்தைச் செவிமடுக்கும் பொறுமையோ, ஏற்கும் மனமோ அந்நாளில் அத்தகையவர்களிடம் இல்லை.

பொதுத்துறையில் பணியாற்றியபோது, குறிப்பாக நான்கு முனை எதிர்ப்புகளைச் சமாளிக்கவேண்டி யிருந்தது. என் குடும்பத்தினர், உறவினர் ஆகியோருடைய ஆசைக்குகந்தவன் நான். நான் மேல்நாடு சென்று உயர் கல்விகற்று, பாரிஸ்டராக வரும் நாளில் என்னிடம் ஏதேதோ மேன்மைகளை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். என்னுடைய மனப்போக்கும், பொதுத் தொண்டாற்றும் ஆர்வமும் அவர்களுடைய ஆசைகளையும் விருப்பங்களையும் தகர்த்துவிட்டன. சாதாரண நிலையில் என்னை மிகவும் அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்கும் உறவினரும் நண்பர்களும், நான் தொழிலை நிறுத்தி ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தபின் என்னைக் கண்டாலே வெறுப்பை வெளியிடத் தயங்கவில்லை. என்னுடைய துணிவான நடத்தை அவர்களை அயரச் செய்தது மட்டுமன்றி, எனது நடத்தையினால் அந்நாளில் அவர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே நிலவிய நல்லுறவுக்கும் ஏதேனும் தீங்கு விளைவித்துவிடுமோ என்ற அச்சத்தையும் கூட்டியது. அதை அறிந்து நான் அவர்களை எல்லாம் காணச் செல்வதை நிறுத்திக்கொண்டேன். பணத் தட்டுப்பாடு தன்னம்பிக்கையையே எவ்வாறு பாதித்துக் குலைத்து விடுகிறதென்பதை அந்நாளைய அனுபவங்கள் எனக்கு உணர்த்தின. கையில் காசின்றி, அன்றுடச் செலவுக்கும் நான் திண்டாடுபவனைக் குன்றிப்போயிருக்கிறேன். வேறு எதைக் காட்டிலும் அந்நாளைய நினைவுகள் மறக்க இயலாத அளவுக்குக் கசப்பை நினைவூட்டுபவை. மாணவனாக இருந்த நாள் முதற்கொண்டே கடன் தொல்லை என்னைத் தொடர்ந்து வந்திருக்கிறது. அதன் கடுமையான முனைப்பு வேண்டு மானால் அவ்வப்போது கூடியும் குறைந்துமிருக்கலாம். இன்றும் நான் அதிலிருந்து முழுதும் விடுபட்டுவிட்டதாகக் கூறுவதற்கில்லை. அந்நாளில் நிலையான வருமானம் கிடையாது. கையிருப்பும் ஏதுமில்லை. செலவுகளைக் குறைக்கவும் முடியாது. இந்நிலையில் ஒருவன் வெறுப் படைவது இயல்புதானே? தத்துவஞானமும், வேதாந்த சிந்தனைகளும் அப்போது நமக்கு ஏற்காது. வாழ்வை எவ்வாறேனும் முடித்துக் கொள்ளலாம் என்றுகூடத் தோன்றிவிடும். அந்தத் துன்பமயமான நேரத்தை எல்லாம் நான் எப்படிக் கடந்துவந்தேன் என்று நினைக் கையில் வியப்பு மேலிடுகிறது.

அரசாங்க பயமும், அதிகாரிகள் சிலரது அச்சுறுத்தலும் என்னை விடாது கலங்கச் செய்திருக்கிறது. கைது செய்துகொண்டு செல் வார்கள்; போலீசார் வீட்டைச் சோதனையிட வருவார்கள். ஏதேனும்

குற்றம் சாட்டி என்னைக் கோர்ட்டில் நிறுத்தி அபராதம் விதித்து அதை வசூல் செய்வதற்கு ஜப்தி செய்வார்கள் என்றெல்லாம் பலவாறான அச்சமும் கவலையும் என்னை விடாது துரத்தியிருக்கின்றன. ஏர நாட்டில் கலகம் விளைந்தபோது, என்னைக் கைது செய்வார்களென்று பலமுறை நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் அது நடக்கவில்லை. எனினும் திகிலும் கலவரமுமாகவே பல நாட்களை நான் தள்ளியிருக்கிறேன். ஜப்பானியர் சிங்கப்பூரில் ஆட்சியைக் கைப்பற்றியிருந்த நாட்களிலோ, மிகவும் பயங்கரமான அநுபவங்களில் குழம்பிப்போயிருக்கிறேன். வரப்போகும் பயங்கரங்களைப் பற்றிய திகில், வந்த பிறகு அநுபவிப்பதைக் காட்டிலும் கொடுமையான அநுபவம். எனக்கு நேரப்போகும் சோதனைகளைக் குறித்து அச்சம் மட்டுமல்ல—என் குடும்பத்தினருக்கு நேரக்கூடிய துன்பங்களைக் குறித்த திகிலும்கூட மிகுதியாக வாட்டும்.

சினம் கொண்ட மக்கள் கூட்டத்தின் வன்முறை எழுச்சிக்கு இலக்காகாமல் ஒரு பொதுநலத் தொண்டன் தப்பிவிட இயலாது. துரோகங்கள், வீண் பழிகள், எல்லாவற்றுக்கும் நான் பல முறைகள் ஆளாயிருக்கிறேன். நமது இன்ப - நலங்களுக்குப் பிறரை அணுகிப் பயன் பெறமுடியாது. பிறருடைய சிந்தனைகளையும் செயல்களையும் நம்மால் ஒழுங்கு செய்யமுடியாது. ஒரு பொதுநலத் தொண்டன், பூமாலையையும் புகழ் மாலையையும் போன்றே கல்லெறியையும் பழிச் சொல்லையும் ஏற்கவேண்டியிருக்கும். இதை ஒருகாலும் மறக்கலாகாது. இரண்டையும் சமமாகக் கருதித் தொண்டாற்ற இயலவில்லையெனின், பொதுநலத் தொண்டாற்றும் களத்திலிருந்து விலகி விடுதல் நலமாகும். இவ்வாறு அறிவுரைகள் கூறுவது எளிதுதான். ஆனால் நடைமுறைக்குக் கொண்டுவருவது கடினமானது. மாதிரிக்கு ஓர் சம்பவம் கூறுகிறேன் :

சட்டசபை மறுப்பைத் தொடர வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்து விசாரணை செய்தறிய காங்கிரஸ் ஒரு தனிக் கமிட்டியை நியமித்திருந்தது. ஏரநாட்டுக் கலவரங்களுக்குப் பிறகு நடந்தது இது. டாக்டர் அன்ஸாரி, பண்டித மோதிலால் நேரு, ஹக்கீம் அஜ்மல்கான், ராஜகோபாலாசாரி, வித்தல்பாய் படேல், கஸ்தூரிரங்க ஐயங்கார் ஆகியோர் அந்தக் கமிட்டியின் உறுப்பினராவர். மலபாரில் அடி வைப்பதற்கு அவர்களுக்கு அரசாங்கம் அநுமதி அளிக்கவில்லையாதலால், மலபாரில் காங்கிரஸ் தொண்டர்களுடைய சாட்சியங்களைக் கேட்டறிய ஈரோடிலேயே அந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்தனர். அந்நாளில் நான் கேரளப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியின் செயலாளன். என்னுடைய பிற நண்பர்களுடன் சாட்சியம் கூறுவதற்காக நான் ஈரோடு சென்றேன். என்னுடனிருந்தவர்கள், பல விஷயங்களிலும் என்னுடைய கருத்துடன் வேறுபாடு கொண்டவர்கள்தாம். அவர்கள்

விசாரணைக் கமிட்டியின் முன் சாட்சியம் கூறுகையில் எனது வாதங்களை மறுக்கவில்லை. தனிப்பட்ட முறையில் கண்டனம் செய்தனர். ஆதார மற்ற அம் மறுப்புரைகளைக் கேட்டுக்கொண்டிருப்பதைத் தவிர வேறு வழியில்லை. என்னால் அதைத் தாள முடியவில்லைதான். உள்ளமொன்றி உழைத்தும், இத்தகைய மறுப்புகளைக் கேட்கவேண்டி இருக்கிறதே என்று மனம் குமைந்தது.

"எதற்காக இதெல்லாம் பொறுத்துக்கொண்டு தொண்டாற்ற வேண்டும்? அவனவன் தொழிலைச் செய்துகொண்டு சுகமாக நாட்களைக் கழிக்கக்கூடாதா? அதைவிட்டு எதற்காக இனியும் பொறுக்கவேண்டும்?" என்றுகூட அப்போது தோன்றியது. "நீங்கள் மிகவும் குற்றமாகக் கருதப்பட்டவரில்லை, மிஸ்டர் கேசவ மேனன்?" என்று வித்தல்பாய் படேல் அந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டது, இன்னும் என் செவிகளில் அப்படியே ஒலிக்கிறது. ஈரோடிலிருந்து திரும்புகையில் மூன்றும் வகுப்பு ரயில் பெட்டியின் மேல் தட்டில் படுத்தவாறு எனது துன்பங்களை எல்லாம் எண்ணிக் கண்ணீர்விட்டேன். என் உள்ளம் திறந்து நான் பேசுவதைக் கேட்க என்னோடு ஒட்டி உறவாடுபவர் யாருமே அப்போது என்னருகில் இல்லை.

நமது எண்ணங்களை நன்கு புரிந்துகொள்ளாமலே தவறுகக் கருதிக் கொண்டே பல சமயங்களிலும் எதிர்ப்பார்கள். கிளர்ந்தெழும் மக்கள் கூட்டத்தின் கூச்சலையும் முழக்கங்களையும் எதிர்நோக்கவேண்டி வரும் போது, நிதானத்துடனும் மிகுந்த தைரியம் கொண்டும், பதறுமலும் இயங்கவேண்டும். முடியுமானால், கூட்டத்தினின்றும் அகலுவதே மேலானது.

உளமொன்றிப் பொதுத் தொண்டில் ஈடுபடும் ஒருவருக்கு எப்போதும் மக்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. சில சமயங்களில் கடைசிக்காலத்தில்தான் அதற்கு வாய்ப்புக் கிடைக்கு மாக இருக்கும்! தன் வாழ்நாளின் பெரும்பகுதியும் நாட்டு விடுதலைக் காகவே தொண்டாற்றி, வெளி நாட்டில் பல வகைகளிலும் துன்பம் அநுபவித்த மாடம் 'காம' ஈவின் மரணத்துக்குப் பிறகே பலரும் அவருடைய அரிய சேவையைப்பற்றி உணர்ந்தனர். வாழ்நாளிலும், மரணத்துக்குப் பிறகும்கூட, தங்கள் சேவை ஏற்கப்படாமலே மாய்ந்த வரும் உண்டு. நமது பணி ஏற்கப்படும் என்ற தெம்பு கொண்டுதானே பொதுவாழ்க்கையில் துன்பங்களை அநுபவிக்க முற்படுகிறோம்? நமது லட்சியத்துக்குரிய வாழ்க்கை நடத்த முயன்றோம் என்ற ஒரே எண்ணம் தானே நமக்கு உள்ள நிறைவை அளிக்கிறது!

ஒரு பொதுநலத் தொண்டருக்கு மக்கள் வாயிலாகக் கிடைக்கும் புகழ் நிச்சயமாக மகிழ்ச்சியளிக்கவல்லதாகும். புகழார்ந்த உரையாளர் ஸ்ரீநிவாச சாஸ்திரியைப்பற்றி ஒரு கதை சொல்வதுண்டு. ஒருமுறை

கல்கத்தாவில் ஸ்ரீநிவாச சாஸ்திரி உரையாற்றினர். உரை முடிந்து அவர் தமது இருப்பிடம் சென்றபோது, அங்கிருந்த ஒரு நண்பர் சாஸ்திரியை அணுகினர். "தங்களுடைய பேச்சு மிக நன்முக இருந்தது. இத்தகைய பேச்சைக் கேட்கும் சந்தர்ப்பம் வாய்த்ததே அரியதோர் பேறுகும்" என்முர். அதற்கு சாஸ்திரியார் இவ்வாறு மறுமொழி கூறினர். "இத்தகைய புகழ்மாலைகள் நான் எவ்வளவோ கேட்டு விட்டேன். என்முலும் நண்பர்களுடைய உள்ளார்ந்த பாராட்டு களில் எனக்கு அலுப்போ சலிப்போ தோன்றுவதில்லை" என்முராம். எத்தகைய மனிதருடைய இதயத்திலும் தோன்றக்கூடிய இயல்பான உணர்ச்சிகளையே சாஸ்திரியார் வெளியிட்டார்.

பொது வாழ்வில் எத்துணைக் கடுமையான அநுபவங்கள் நேரிட்டாலும் மக்களின் அன்பை ஏற்கும் பல சந்தர்ப்பங்கள் எனக்கு வாய்த்திருக் கின்றன. நமக்கு ஏற்படும் அநுபவங்களை நம்மால் ஒழுங்கு வரையறை செய்துகொள்ள முடியுமா? எல்லையற்ற அன்புப் புகழ்ச்சிகளைப் போன்றே பலவித பழிச் சொற்களையும் ஏற்கவேண்டியிருக்கும். ஆனால் இவை இரண்டும் நம்மை வழிதவறிச் செல்லுமாறு தூண்டுவதற்கிடங் கொடுக்கலாகாது. பொதுத் தொண்டாற்றுபவர்கள் எதற்கும் தயாராக இருக்கவேண்டும். போர்க்களம் புறப்பட்ட போர் வீரரைப் போன்றவரே அவர்கள். எதிர்காலம் நிச்சயமில்லாதது. போரில் மடிந்தாலும் மடியநேரலாம். வெற்றியுடன் திரும்பவும் திரும்பலாம். என்முலும் அவர்களுக்குத் தங்கள் நாட்டுச் சுதந்திரத்துக்காகவே போரிடக் கிளம்புவதான நம்பிக்கையே புத்துணர்வூட்டவல்லது. அதே போன்று, மக்கள் சேவைக்காகத் தன்னை வழங்கிக் கொள்ளும் பொதுநலத் தொண்டனுக்கும் அநீதியோடு போராடும் ஆர்வமும், துன்பங்களிலிருந்து எளியவரை மீட்டு ஆறுதலளிக்கும் உற்சாகமும், மற்றவர்களது நல-வசதிகளைப் பெருக்கும் ஆவலும் உறுதியான நம்பிக்கையளிக்கிறது. பொதுத் தொண்டாற்றும் செயற்களத்துக்குக் கொண்டுசெல்கிறது. துயர் பொறுத்தும் இடையூறுகளுடன் போராடிக் கொண்டும் முன்னேறிச்செல்லும் அசாதாரண ஆற்றல் சிலரிடம் உண்டு. எதிர்ப்பு முனைப்பாகும்போதெல்லாம் விரைந்து முன்னேறு வார்கள். இத்தகையோர் தலைவர்களாக இருந்தாலும் இல்லையென் முலும், தங்கள் திறன் முழுவதையும் பொது நலத்துக்கே ஈந்துதவினர் என்ற நற்புகழுக்குப் பாத்திரமாவது திண்ணம்.

வாழ்க்கையில் எனது அநுபவங்கள் இந்நாளில் மங்கிவரும் நினைவு களாகவே எஞ்சி நிற்கின்றன. அந்த நினைவுகளின் இனிமையை நான் நுகர்ந்தநுபவிக்கிறேன் இப்போது. துன்பங்கள் எனக்கு ஏராளமாக இருந்திருக்கின்றன. பொது வாழ்வில் நான் பங்கேற்றிருக்கவில்லை

யெனின், இந்நாள் நான் காணும் மனநிறைவு எனக்கு ஒருபோதும் கிடைத்திருக்காது. வாழ்க்கையின் மாலை நேரத்தில் மன-நிறை வல்லவா முக்கியமாக வேண்டும்?

53

அமைதியின்மை

இந்திய யூனியன் தலைவர், 1966ஆம் ஆண்டு குடியரசு நாள் விழாவில் எனக்கு பத்மபூஷண் விருதளித்துக் கௌரவித்தார். அது சம்பந்தமாக முன்னதாகவே ஊகமான தகவல்கள் கிடைத்திருந்தன. குடியரசு நாளில் இந்த விவரமும் வெளியானபோது, பல நண்பர்களிட மிருந்தும் பாராட்டுச் செய்திகள் கிடைத்தன. அவர்களுடைய அன்புக் கடிதங்கள் என்னை நெகிழச் செய்தன. இரண்டு மாத காலம் சென்றதும் இது சம்பந்தமான விழா நிகழ்ச்சி டில்லியில் நடந்தது. நேரில் விருதுபெற நான் டில்லி சென்றேன். என்னுடன் மகள் லீலாவும், பேத்தி நளினியும், தலாப்பும், தாமோதரனும் இருந்தனர். ராஷ்டிரபதி பவனில் நடந்த சடங்குகளை என்னால் நன்கு காண இயல வில்லை யென்றாலும், அன்பும் மகிழ்வும் கூடிய அச் சூழலை மனதில் அப்படியே காணமுடிந்தது.

ஒருவாரம் நாங்கள் டில்லியில் தங்கினோம். அதற்கிடையில் என் பழைய நண்பர் ஜெனரல் மோகன் ஸிங்கின் அழைப்புக்கிணங்கி, நாங்கள் சண்டீகட் சென்றோம். மோகன் ஸிங் எத்தனை கனிவான வரவேற்பளித்தார்! ஐ.என்.ஏ. காலத்தில் எங்களுக்கு நேர்ந்த அநுபவங்களைக் குறித்தெல்லாம் நினைவுகொண்டு நாங்கள் அளவளாவி மகிழ்ந்தோம். அவருடன் ரத்தன் ஸிங்கும் இருந்தார். ஐ.என்.ஏ. நாட்களில் மோகன் ஸிங்கின் செயலாளராக இருந்தவர் ரத்தன் ஸிங். பின்னர் அவர் பஞ்சாப் மந்திரிசபையில் ஒருவராகவும் பணிபுரிந்தார்.

டில்லியிலிருந்து திரும்பி வந்த பிறகு பல பாராட்டுக் கூட்டங் களிலும் நான் கலந்துகொண்டேன். அது முடிந்ததும் என்னுடைய எண்பதாம் ஆண்டு நிறைவு நாள் வந்தது. நண்பர்களிடமிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் அந்நாளில் எனக்குக் கிடைத்த பரிசுகளை நான் விலைமதிப்பற்ற கருவூலமாகக் கருதி இன்றும் வைத்திருக்கிறேன். இவ்வாழ்க்கை எத்தனையதொரு விசித்திர நாடகம் என்று அடிக்கடி

இந்நாட்களில் நான் நினைப்பதுண்டு. சிறிது காலத்துக்கு முன்பு கடுந்துன்பங்கள்; இப்போது இதயங்கனிந்த பாராட்டுகள்!

அவ்வாண்டு கோழிக்கோடு நகர நூற்றாண்டு விழா நடந்தது. அவ்விழாவை மிகுந்த கோலாகலமாகக் கொண்டாடினர்கள். அதற்கு ஆறு மாதமாக ஏற்பாடுகள் செய்தனர். விழா ஏற்பாடுகளில் நானும் ஈடுபட்டேன். முயற்சி வெற்றிகரமாக நடந்ததில் எங்களுக்கு மன-நிறைவு உண்டாயிற்று. இம் முயற்சியில் கோழிக்கோட்டுக் கல்லூரி மாணவர்கள் ஏற்ற பொறுப்பை எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது. கோழிக்கோட்டின் வரலாற்றில் நிகழ்ந்த முக்கியமான சம்பவங்களை விளக்கும் காட்சிகளை உயிர்ப்பிக்கும் வகையில் வேடம் புனைந்து கொண்டு விளக்கிய விழா நிகழ்ச்சி மக்களைப் பெரிதும் கவர்ந்தது. இந்த நிகழ்ச்சிகளை மேற்பார்வை செய்து நேர்த்தியாகத் தயாரித்தவர்கள் கோழிக்கோடு கல்லூரி மாணவர்களே. மாணவர்கள் மற்ற வருக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தனர்.

இந்நாட்களில் காஸர்கோடு சம்பந்தமானதோர் கிளர்ச்சி உருவாயிற்று. காஸர்கோட்டின் சில பகுதிகள் தங்களுக்குச் சொந்தமாக வேண்டுமென்று மைசூர் அரசாங்கம் வாதம் செய்தது. அப்போது மைசூருக்கும் மகாராஷ்டிரத்துக்கு மிடையே சில எல்லைத் தகராறுகள் விளைந்திருந்தன. அது குறித்து விசாரணை செய்வதற்கு இந்திய அரசாங்கம் ஓர் ஒற்றை அங்கத்தினர் கமிஷனை நியமித்தது. உச்ச நீதிமன்ற முக்கிய நீதிபதியான மஹாஜன், அந்தக் கமிஷன் உறுப்பினராவர். காஸர்கோடு விஷயமும், கமிஷன் விசாரணைக்குட்பட்டதாயிற்று. இதைப் பொறுக்க இயலாத அநீதியாகப் பலரும் கருதினர். நானும் அவ்வாறே கருதினேன். இதை ஆலோசனை செய்வதற்கு, ஓர் அகில கேரள மாநாட்டை 1966ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏரணாகுளத்தில் கூட்டினேம். பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் தீர்மானம் செய்த எல்லை விஷயத்தை மீண்டும் குத்திக் கிளப்புவது சரியில்லை என்று கூட்டம் தெளிவுறுத்தியது. காஸர்கோடு விஷயத்தில் ஓர் முடிவு காணும் வரையிலும் அவ்வப்போது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, கூட்டம் ஓர் தனிக் கமிட்டியையும் தேர்ந்தெடுத்தது. அக்கமிட்டியின் தலைவன் நான். சிறிது காலம் கமிட்டி உற்சாகமாக இயங்கிற்று. பலனும் விளைந்தது. கொண்டாட்டங்களும் கிளர்ச்சிகளும் நடக்கையில் ஆங்காங்கு நாட்டில் குழப்பங்களும் தோன்றுமல் இல்லை. அதன் சக்தி மிக விரைவில் பெருகிப் பரவியது. சுதந்திரத்துக்குப் பிறகு அது நாட்டில் தோன்றிய சோதனை மிகுந்த கட்டமாயிற்று.

1947ஆம் ஆண்டுக்குப் பிறகு நமது புதிய ஜனநாயகத்தின் பயனுக நாட்டின் பல்வேறு பகுதிகளும் முன்னேற்றமடைந்த பிறகு, இந்தியா மிக விரைவில் உலக நாடுகளின் முன்னணியில் ஓர் இடம் பெற்றுத் திசமுமென்று பலரும் எதிர்பார்த்திருந்தோம். சுதந்திர இந்தியா அந்நாள் கண்ட முன்னேற்ற வளர்ச்சிகள் அக் கருத்தை உறுதியாக்கின. பெரிய அணைத்தேக்கங்களும், கனரகத் தொழில் வளர்ச்சியும், ஆராய்ச்சி நிலையங்களும், புதிய பல்கலைக்கழகங்களும், நாட்டின் பல பகுதிகளிலும் தோன்றின. உலக நாடுகளை பாதிக்கக்கூடிய பிரச்னைகள் குறித்து இந்தியரின் கருத்தை அறியவும் வல்லரசுகள் விரும்பி முனைந்தன. சர்வதேச மாநாடுகளில் முக்கியப் பிரச்னைகளைக் குறித்து இந்தியா என்ன கருதுகிறது என்று பிறநாட்டுத் தலைவர்கள் அறிய விரும்பியதைக் கண்டோம். காங்கிரசின் தியாக பரம்பரையும், ஜவாஹர்லால் நேருவின் ஒப்பரிய தனிச் சிறப்புமே இத்தகைய ஏற்றத்துக்குக் காரணங்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், 1962ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்நிலையில் மாற்றம் கண்டோம். சீனரின் திடீர்த் தாக்குதல் நமது குறைவுகளுக்கும் சரிவுகளுக்கும் காரணமாயின. சீனருடைய தாக்குதல் இன்னும் சிறிது காலம் நீடித்திருந்தால் நமது நிலை யாதாகும் என்பதையே நினைத்துப் பார்க்க இயலாமலிருந்தது. ஒழுங்கும், ஒற்றுமையுணர்வும், உழைக்கும் மனப்பான்மையும் நாட்டில் குறைந்தன. வேலை நிறுத்தங்களும், போக்குவரத்து இன்னல் விளைவிக்கும் ஒழுங்கீனமும், பொதுச் சொத்துகளை அழிக்கும் பொறுப்பற்ற தன்மையும், கொலையும், கொள்ளையும் அன்றாட நிகழ்ச்சிகளாயின. நாட்டின் வருங்காலம் குறித்துப் பெரிதும் கலக்கத்தைத் தோற்றுவித்த மற்றோர் பிரச்னை, மாணவர் ஒழுங்கீனமாகும். அவர்களுடைய முறையற்ற நடவடிக்கைகள் நாளுக்கு நாள் பரவலாயின. அரசியல் கட்சிகள், நாடு முழுதுமான முறையற்ற நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் நடந்துகொண்ட அவலத்தை விவரிப்பதற்கில்லை. பதவி மோகமே அவர்களிடையே தலைவிரித்தாடியது.

மொழியின் பேரிலும், எல்லைகளின் மீதும் நாட்டின் பல இடங் இடங்களிலும் புகைந்து பற்றிய வன்முறைக் கிளர்ச்சிகள் நமது ஒற்றுமையைச் சின்னபின்னமாகக் குலைத்துவிடக்கூடும் என்று பலரும் அஞ்சினர். சில பிரதேசங்களில் வேற்று மொழி பேசும் பிரதேச மக்கள் வாழ்வதையும் பணியாற்றுவதையும் வெளிப்படையாக எதிர்த்தார்கள். இந்தத் தீமைக்கு இடமளித்தால் நாட்டின் முழுமைக்கும், பாதுகாப்புக்குமே அபாயம் நேரலாம் என்று தோன்றியது. இவ்வாறு ஒழுங்கீனங்கள் மலிந்து நாட்டைப் பீடித்திருந்த தலைவேதனையாகப் பீடித்தது. இது பார்லிமென்ட், சட்டசபைகளைக்கூட

விட்டு வைக்கவில்லை. தீய நடவடிக்கைகளைக் காணுமல் கண்களை மூடிக்கொள்ள இயலாது. அவற்றைத் தடுக்கும் வழிகளை மேற் கொள்ளத்தான் வேண்டும். பல வகையிலும் அது அவசியமாக இருந்தது. இத்தகைய கவலைகளால், மக்களிடையே ஒரு புதிய நோக்கையும் ஆர்வத்தையும் தூண்டிவிடுவதற்கான கூட்டமைப்புகள் அவசியம் என்று நாங்கள் சிலர் கருதலானேம்.

ஒரு நாட்டின் பெருமையும் சிறப்பும் அதன் மக்களுடைய இயல்பு களைப் பொறுத்தே அமைகின்றன. மக்களிடையே நல்லியல்புகளைப் பெருக்குவதற்குப் பயிற்சிகள் அவசியமாக அமையவேண்டும். ஆனல் சுதந்திரத்துக்குப் பிறகு அத்தகைய பயிற்சிகளுக்கான கருத்தே நாட்டில் தோன்றியிருக்கவில்லை. எனவே நாங்கள் 'குடிமக்கள் சங்கம்' என்ற ஓர் அமைப்பைத் தொடங்கினேம். தனி வாழ்விலும் பொது வாழ்விலும் உயர்ந்த நெறிகளைக் கடைப்பிடிக்கும் முறைகளைச் சங்கங்களுக்கு உணர்த்தினேம். அறிவைப் பெருக்கிக்கொள்ளவும், சுதந்திரமாகச் சிந்தனை செய்யவும், ஒருங்கிணைந்து பணிபுரியும் நட்புறவை வளர்த்துக்கொள்ளவும், பொதுத் தொண்டாற்றவும், சங்கம் உறுப்பினரிடையே புத்துணர்வைத் தோற்றுவிக்கவேண்டும். சாதி - மதம் - பதவி வேற்றுமைகள் எதையும் பொருட்டாக்காமல் எல்லோருடனும் சமமாகப் பழகுதல் — நாட்டை பாதிக்கும் பிரச்னைகளை நன்கு ஆராய்ந்து அவற்றின் தீர்வுக்கான வழிமுறைகளைச் சிந்தித்தல்—இயன்ற வரையிலும் தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சி செய்தல்—இளைஞர்களுக்கு உயரிய குடிமக்களாக விளங்க வேண்டுமென்ற ஆர்வத்தைத் தூண்டி உற்சாகமளித்தல்— அமைதியான வழிகளில் முன்னேற்றம் காண்பதற்குச் சிறிதும் தளரா மல் செயலாற்றுதல்—இவையனைத்தும் சங்கம் இயங்குவதற்கான திட்டத்தில் உட்பட்ட அம்சங்கள்.

இச் சங்கத்தின் பயனை அறிவதற்குச் சிறிது காலமாகும். ஆனல், நாட்டின் வருங்கால நம்பிக்கையை நல்ல முறையில் வளர்க்க அது ஆதரவாக இருக்கும் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை. அந்த நம்பிக் கையில்தான் சங்கப் பணிகளில் ஊக்கமும் இன்பமும் தோன்றி யிருக்கின்றன.

நிறுவனங்களும், பொது அமைப்புகளும் தனி மனிதர்களைப் போன்றவைதாம். அவற்றுக்கு நிலையான தன்மை கிடையாது. காலத்துக்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் சங்கங்கள் தோன்றுகின்றன; வளர்ச்சி அடைகின்றன; சில நாட்கள் சென்றபின் மறைகின்றன. அந்த இடத்தில் வேறு அமைப்புகள் தோன்றுகின்றன. குடிமக்கள் சங்க வாயிலாக, நான் கற்பனையில் கண்ட கேரளத்தை எண்ணிக்

கொண்டு, அதை உண்மையான நடைமுறையில் காணும் முயற்சிகளில் இப்போது முனைந்திருக்கிறேன்.

54

வயோதிகத்தின் சாபமும் அருளும்

எனது எண்பத்து மூன்றும் வயதில் நான் இந்த அத்தியாயத்தை எழுதுகிறேன். பொதுவாக நோக்குங்கால் நான் ஒரு கிழவன் என்று தான் கருதத் தோன்றும். அது சரியில்லை என்று என்னால் கூறவும் முடியாது. வாழ்வில் எல்லா நிலைகளிலும் அந்தந்த நிலைக்குரிய சில சிறப்புத் தன்மைகள் உண்டு. குழந்தைப் பருவத்தில் களங்கமின்மை — இளமைப்பருவத்தில் ஆசைகள் — வாலிபப் பருவத்தில் கிளர்ச்சியுடன் கூடிய பரபரப்பான முரட்டுத்தனம் — இடைநிலைப்பருவத்தில் பொருள்தேடும் ஆர்வம் — வயோதிகத்தில் தளர்ளாமை. இவை எல்லோரைப் பொறுத்தும் ஒரே மாதிரியாக இருக்கும் என்று சொல்லி விட முடியாது. வயோதிகத்தின் இயலாமை என்னை அவ்வளவாக பாதித்துவிட்டதாக எனக்கு இன்னமும் தோன்றவில்லை. கண்பார்வை மிகவும் மங்கியிருப்பது உண்மைதான். அது தவிர, வயோதிகக் கோளாறுகள் எதுவும் என்னை வாட்டுவதற்குத் துணியவில்லை என்றே நான் ஆறுதல் கொள்ளலாம். மனிதனைத் தாங்க இயலாமல் வருத்தும் இரு துன்பங்களில் ஒன்று கிழப்பருவம்; இன்னொன்று வறுமை. இவற்றில் ஏதேனும் ஒன்று போதும், மனிதனை நிராசை கொள்ளச் செய்வதற்கு. இரண்டும் கூடிவிட்டால் வாழ்க்கையில் வேறென்றும் வேண்டாம். அதுவே நரகமாம். அத்தகைய துயரத்தில் உழலும் சிலருடைய நிலையை உன்னி நான் மிக வருந்தியிருக்கிறேன். தடுப்பதற்கு முன்னெச் சரிக்கையாக ஏற்பாடுகள் செய்துகொண்டாலும், சோதனை நேரிட்டு விட்டால் அதைத் தாங்கும் மனத் திண்மையை அன்றே நாம் வர வழைத்துக்கொள்ள வேண்டும்? எனது நெடுங்கால வாழ்வில் நான் அநுபவிக்க நேர்ந்த துன்பங்கள் இவ்வகையில் எனக்குச் சில பயிற்சிகளை அளித்திருக்கின்றன.

வயது முதிர்ந்த காலத்தில் வேலைசெய்யும் திறக்குறைவும் ஊக்க மின்மையும் சாதாரணமாக ஏற்படுவது சகஜம். இந்நாள் வரை அவை யிரண்டும் என்னை பாதிக்கவில்லை. வேலை செய்வதில் எனக்கு இப்போதும் நிறைந்த உற்சாகமுண்டு. ஆனால் ஒரே மாதிரியான வேலை தொடர்ந்தால்தான் அலுப்பு உண்டாகும். நாள்தோறும் நான் மூன்று

அல்லது நான்கு மணிநேரம் எழுதுவதற்கு அமருகிறேன். பெரும்பாலான நாட்களில் பொதுக்கூட்டங்களுக்குச் செல்கிறேன். பல்வேறு சங்கங்களுடன் நான் இப்போது முழுமூச்சாகத் தொடர்பு கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு அமைப்பிலும் வெவ்வேறு விஷயங்களைப்பற்றிய பணி, முறையிலிருக்கும். அதனால் எனக்குச் சலிப்பு ஏற்படுவதில்லை. பணி மாறிக்கொண்டிருப்பதற்கேற்ப நான் தொடர்புகொண்டிருப்பவர்களும் மாறுவார்கள். கல்வியாளரும், அல்லாதவரும், உயர் பதவிகளில் உள்ளோரும், கீழ்நிலைக்காரரும், அரசியல் சம்பந்தப்பட்டவர்களும், இல்லாதவர்களும், கலை, இலக்கியம், சமுதாயம் போன்ற அரங்குகளில் பணிபுரிபவர்களுமாக நான் பல துறை மக்களுடன் தொடர்புகொண்டிருக்கிறேன். எத்தகையவராயினும் அவர்களோடு ஒத்துப்போவதற்கு எனக்கு சிரமம் தோன்றியதில்லை. நான் அவர்களுடன் அன்புகொண்டு பழகுவதற்கு அவர்கள் என்மீது அன்பு காட்டுகின்றனர்.

வயோதிக நிலைக்குரிய சில குறைகளில் ஒன்று, வேலை என்றாலே வெறுப்புத் தோன்றுவது. என் வயதையொத்த நண்பர் ஒருவர் ஒரு நாள் என்னைக் காண வந்திருந்தார். சென்ற காலத்தைக் குறித்து ஏதேதோ பேசிக்கொண்டு அவரும் என்னருகில் ஓர் சாய்நாற்காலியில் அமர்ந்திருந்தார். சிறிது நேரம் சென்றதும் கால்கள் இரண்டையும் நாற்காலியின் நீண்ட கைகளின்மீது உயர்த்தி வைத்துக்கொண்டு பின்னால் சாய்ந்தபடி, வாயிலிருந்த புகைச்சுங்கானைக் கையிலெடுத்துக் கொண்டு என்னிடம் சோம்பலுடன் அவர் கூறினார். "எனக்கினி என்ன ஆசை தெரியுமா, மிஸ்டர் மேனன்? ஒரு வேலையும் செய்யாமல், இப்படியே பைப்பை வைத்துக்கொண்டு படுத்த நிலையில் மனம்போன போக்கில் எண்ணிக்கொண்டு ஓய்வாக இருப்பதுதான். யாரேனும் இவ்வாறு இடையே நண்பர்கள் ஏதானும் பேசினால்போதும்."

இவ்வாறு சோம்பலும் மெத்தனமுமாகக் காலம் கழிக்கவேண்டும் என்ற ஆசை எனக்குக் கிடையாது. ஓய்வு கொள்வதற்கும் நண்பர்களுடன் அளவளாவுவதற்கும் விருப்பம்தான். ஆனால் ஒன்றுமே செய்யாமலிருக்கவேண்டுமென்று நான் ஆசை கொண்டிருக்கவில்லை. ஒரு பணியிலிருந்து இன்னோர் பணிக்கு மாறுவதே என்னைப்பொறுத்தவரையிலும் ஓய்வுதான்.

உடலில் நலிவு காண்பதும் வயோதிகத்தின் இன்னோர் குறை. எண்பது வயதாகியும் முழு திடம் கொண்டவர் மிகச் சிலரே. பார்வைக்குறைவைக் கணக்கிடவில்லையெனின் என்னுடைய உடல் நலம் திருப்திகரமாக இருப்பதாக மட்டுமன்றி, திடமாக இருப்பதாகவே கொள்ளலாம். வயதுக்குரிய வகையில்தானே நமக்கு ஒவ்வொன்றிலும்

ஈடுபாடும் பற்றும் தோன்றுகின்றன. தேசீயப் பணிகளுக்காக ஓடியாடி உழைப்பதற்குரிய தெம்பும், எதிராளிகளுடன் வாதிட்டு வெல்வதில் கூடும் உற்சாகமும், அவர்கள் தோல்வி காண்பதில் உள்ள ஊக்கமும் எனக்கு இந்நாளில் இல்லை என்பது உண்மையே. ஆனால், என்னைச் சுற்றி நிகழும் நிகழ்ச்சிகளில் நான் எவ்வகையான சலனமுமின்றி வேறு பட்டு ஒதுங்கிவிட்டதாகவோ, அவை என்னுள் எந்த எதிரொலியையும் எழுப்பவில்லை என்றோ கருதிவிடலாகாது. சொல்லப்போனால் இன்று நிதானமாக ஆராய்ந்து நுட்பமாக உண்மையை உணர்ந்து தெளிய முடிகிறது. எப்பக்கமும் சாராமல் நியாய உணர்வோடு எதையும் தெளிந்து கொள்வதற்கு வயோதிக நிலை மிகவும் பயனுடைய தாக இருக்கிறது. அதிகாரப் பதவிக்கும், பொதுமக்களின் புகழுக்கும் ஆசைப்படாமல், மக்களுடைய பொதுநலத்துக்கு உகந்த வகையில் விஷயங்களை மதிப்பீடு செய்து இந்நாட்களில் உறுதிகொள்ள முடிகிறது. இளைஞரையும், நடுத்தர வயதுக்காரரையும் தம் வசமிழக்கச் செய்யும் உணர்ச்சிகள் வயது முதிர்ந்த நிலையில் ஏதும் செய்வதில்லை. விவேகம் நிறைந்த அறிவுரைகள் கொண்டு இளைஞரைச் செயல் வீரராக்குவதற்கு வயதுமுதிர்ந்த நிலையே ஏற்ற பருவமாகும். உடலைப் பொறுத்து நலிவிருந்தாலும், வாழ்க்கையின் பெரிய சாதனைகள், உடல் வலிமையினால் மட்டும் நிறைவேற்றப் பெறுவதில்லை என்ற உண்மையை இந்த நிலையில்தான் உணர முடிகிறது.

தெளிந்த ஞானம், பதறுத மனம், உறுதிகொண்ட சிந்தை, கைம்மாறு கருதா இயல்பு ஆகிய நற்பண்புகள், உயரிய நோக்கங் களைச் சாதித்துக்கொள்வதற்கு மிகவும் உறுதுணையாக இருக்கின்றன. வயது முதிர்ந்த நிலையில், அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து படிக்கலாம்; எழுதலாம். இவை இன்பம் பயக்கக்கூடிய செயல்கள். எழுதவும் படிக்கவும் எனக்குப் பிறர் உதவி வேண்டியிருந்தாலும், நான் அந்தப் பொழுதுபோக்குகளிலேயே பெரிதும் ஈடுபாடு கொண்டுள்ளேன். இவ் வகையில் எனக்கு அரிய உதவியைச் செய்பவர் களுக்கெல்லாம் எனது அளவிறந்த நன்றியுணர்வைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெடுங்காலமாக ஒழுங்கான பழக்க வழக்கங்களை மேற்கொண்டு வந்திருப்பதனால்தான் நான் இந்த நிலையில் இருக்க முடிந்திருக்கிறதென்று கருதுகிறேன். அற்ப விஷயங்களுக்கெல்லாம் நான் மனதை அலட்டிக்கொள்ளும் தன்மையுடையவன் அல்ல. வெறுப்பும் பகைமையுணர்வும் என் உள்ளத்தைத் தீண்ட நான் இடம் கொடுக்க மாட்டேன். இதெல்லாம் என் உடல் நலத்தை ஒரே சீராக வைத்திருப்பதற்குரிய காரணங்களே. நானறியாமலே சில விஷயங்களும் காரணமாக இருக்கலாம். யாதாயினும், உடல்நல

மில்லை என்று குறைபடவேண்டிய சந்தர்ப்பங்களே எனக்கு அநேக மாக நேர்ந்ததில்லை என்பேன்.

வயது முதிர்ந்த நிலையை எய்திவிட்ட ஒருவருக்கு, தான் மரணத்தை நெருங்கிக் கொண்டிருப்பது போலவும், இவ்வுலகிலிருந்தும் தாம் தொடர்பு கொண்டவர்களிடமிருந்தும் விடைபெறுவதற்குரிய நேரம் நெருங்கிக்கொண்டிருப்பது போலவும் உணர்வுகள் தோன்றி மனதை அலைப்பது இயல்பு. அவ்வாறு எண்ணி வருந்திக் கண்ணீர்விட்டழுத ஒருவரை நான் அறிவேன். அத்தகையோர் வேறு சிலரும்கூட இருக்கலாம். ஆனால் அத்தகைய மனச் சஞ்சலங்களுக்கு நான் ஆளானதில்லை. எனக்கும் ஏராளமான நண்பர்கள் இருக்கின்றனர். நல்ல குடும்ப வாழ்வு வாழ்ந்துவரும் அருளும் இருக்கிறது. நெடுங் காலம் எனக்கு இத்தகைய நல்வாழ்வை அருளிய இறைவனிடம் இன்னும் சிறிது காலம் இவ்வாறே வாழ்வதற்கு அருளுமாறு பிரார்த்தனை செய்யாமலில்லை. ஆனால், அதே நேரத்தில் அதிக ஆசைக்கு இடம் கொடுக்கலாகாது என்பதையும் உணருகிறேன்.

முழு மூச்சாக தேசீயப் பணிகளில் ஈடுபட்டிருந்த நான் சிறிது கால மாக அவற்றிலிருந்து விலகியிருக்கிறேன். இதனால் தேசீய நடவடிக் கைகளில் கருத்தே இல்லை என்று பொருளல்ல. தம் பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்குரிய நாட்களில் ஒருவர் என்னிடம் கூறிய சில சொற்கள் இப்போது நினைவுக்கு வருகின்றன.

''இந்நாள் வரை வேலை சம்பந்தமான கோப்புகளையும், புத்தகங் களையும் படிக்கத்தான் எனக்குப் பொழுது சரியாக இருந்தது. விரும்பிய நூல்களைப் படித்து இன்புற வசதியில்லாமலிருந்தது. ஓய்வு பெற்ற பின் அதற்கான நேரம் கிடைக்குமென்று காத்திருக்கிறேன்.''

வயோதிக நிலை, வாழ்வின் ஓர் பகுதியல்லவா? அறிவை மலரச் செய்துகொள்வதுதான் வாழ்க்கையின் முக்கியமான குறிக்கோள். அது இறுதி வரையிலும் தொடர்ந்து செல்லலாமே? படிப்பதனால் மட்டும்தான் அறிவு கூடும் என்பதில்லை பிறருடன் பழகுவதன் வாயிலாகவும் அறிவைப் பெருக்கிக்கொள்ளலாம். அவ்வாறு பழகு வதற்கு என் முதுமைக்கால நிலை தடையாக இல்லை. மாணவரோ, வேறு இளைஞர்களோ, என்னைப் புதிய விஷயங்களுடன் அணுகி வருகையில், அவர்களுடைய உற்சாகத்தில் பங்கு கொள்கிறேன். அவர்களுடைய நோக்கில் நின்று விஷயங்களை என்னால் புரிந்துகொள்ள முடியும். வயது வேறுபாடு இடையூறாக இல்லை.

உடலளவிலும் மனதளவிலும் வயோதிக நிலை பாதிக்காதவாறு நம்முடைய குறைகளை நாம் ஈடு செய்துகொள்ள முடியும். ஒழுங்கான உணவும், ஏற்ற உடற்பயிற்சியும், போதுமான ஓய்வும் உடல் நலத்தை

ஒழுங்கு செய்வது போன்று, நல்ல நூல்களைப் படித்து இன்புறுவதும், நல்ல விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்யும் பயிற்சியும், அறிவு வளர்ச்சிக்கும் ஆன்மீக மலர்ச்சிக்கும் வகை செய்கின்றன. திரி எரிவ தற்கேற்ப எண்ணெயூற்றிக்கொண்டிருக்கவேண்டுமல்லவா? இளைத்து வரும் உடலுக்கேற்ற உணவு கொடுப்பது போன்று, சோர்வடையும் மனதுக்கும் ஆரோக்கியம் பெற நற்சிந்தனைகள் இன்றியமையாத தாகின்றன.

பணியிலூன்றியவாறே காலம் கழிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளவன் நான். ஆனால், நமது ஆர்வத்துக்குகந்தவாறே எப்போதும் எல்லாம் நடைபெற்றுவிடுவதில்லை. நான் எவ்வாறு இறுதியை எய்த ஆசைப் படுகிறேன் என்று ஒருமுறை ஒரு நண்பர் என்னிடம் வினவினார். மற்ற எல்லா விஷயங்களையும் போன்றே இந்த இறுதி ஆசையிலும் மாந்தர் வெவ்வேறு சுவையுடையவரே!

நெடுங்காலத்துக்கு முன்னர், நான் லண்டனில் மாணவனாக இருந்த காலத்தில் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி, அன்றைய காலை தினசரியில் படித்ததோர் அவல மரணச் சேதியைப் படித்துவிட்டு என்னிடம் சொன்னாள்: ''மிஸ்டர் மேனன்! சமுத்திரத்திலோ, ஆற்றிலோ மூழ்கி இறக்க வேண்டுமென்பது என் ஆசை. இறுதியாக மூச்சு முட்டிய பின் அந்த மரணத்தின் வாயிலாக ஓர் ஆனந்தம் உண்டாகுமல்லவா? அதனால் நான் அவ்வாறுதான் மரணமடைய விரும்புகிறேன்.''

இன்னொருவர் என்னிடம் இவ்வாறு கூறினார்:

''தூங்கும்போதே மரணம் நேரிடவேண்டும். அதுதான் நான் விரும்பும் இறுதி ஆசை'' என்றார். அத்தகைய மரணத்தையும் விரும்பாதவர் உளர்.

எனது ஆசை இதுதான்:

எனக்கும் பிறருக்கும் தொல்லையாகத் துன்பம் அனுபவிக்கும்வண்ணம் நெடுங்காலம் நான் நோய்ப்படுக்கையில் கிடக்கலாகாது என்பது என் பிரார்த்தனை. சட்டென்று கண்களை மூடுவதையும் நான் விரும்ப வில்லை. அந்த முடிவு அவரைப் பொறுத்தவரையிலும் பேரருள்தா னென்றாலும், உறவினருக்கும் நண்பர்களுக்கும் அது அசௌகரியமாக இருக்கும். எதிர்பாரா நிகழ்ச்சி திடீரென்று நேரும்போது, பல குழப்பங்களும் தோன்றலாம். என்னிடம் அன்பு கொண்டவர்களை எல்லாம் அவ்வாறு தொல்லைக்குள்ளாக்க நான் விரும்பவில்லை. நான் மரணத்தை எதிர்நோக்கி இருக்கிறேன் என்பதை நானும் மற்றவரும் உணரும்வண்ணம் இரண்டு மூன்று நாட்கள் நோய்ப்படுக்கையில் கிடந்தபின் இறுதியை எய்தவேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

எனக்கும் மன - அமைதியுடன் மரணத்தை வரவேற்க வாய்ப்பாக இருக்கும். யாரறிவார்? என் ஆவல் எவ்வாறு நிறைவேறுமோ? என் மரணத்துக்குப் பின்னர் அதை மற்றவர் கண்டுகொள்வர்!

55

மாலைச் சிந்தனைகள்

இந்நூலின் முதற்பதிப்பு வெளியானதும், அதைப் படித்துவிட்டு என் நெருங்கிய நண்பரொருவர், என்னிடம் கூறிய சொற்கள், இந்த அத்தியாயத்தை எழுதத் தொடங்குகையில் நினைவு வருகின்றன. என்னுடைய நெடுங்கால வாழ்க்கை அநுபவங்களை ஆராய்ந்து அவற்றில் தெளிந்த கருத்துகளை வளரும் தலைமுறையினருக்கு அநுபவப் பாடமாக எடுத்துரைப்பது நலமென்று அவர் கருதினர். அதற்கேற்ப நான் அவர்களுக்கு அறிவுரை கூறுவதற்த முன் வரவில்லை. ஆனல் அவர்களுக்கு முன்னறிவிப்பாக வாழ்க்கையில் உதவும்வண்ணம் எனக்குத் தோன்றிய சில கருத்துகளைக் கூற விழைகிறேன்.

என்னுடன் வாழ்க்கை தொடங்கியவர்களில் ஒரு சிலர்தாம் இன்று இருக்கின்றனர். அவர்களிலும் பெரும்பாலோர் உடல் நலம் குன்றி, வாழ்க்கையை அநுபவிக்காமலேயே நாட்களைத் தள்ளுகின்றனர். அத்தகைய ஒரு பழைய நண்பரை நான் காணச் சென்றபோது, அவரிருந்த நிலை கண்டு வியந்து, வேதனை கொண்டேன். ஒருகாலத்தில் கால்பந்தாட்ட வீரராகவும், அதிக உயரம் எழும்பிக் குதிக்கும் சாகசக் காரராகவும், வெகுதொலைவு நீந்திச் செல்லும் வலிமை பெற்றவராகவும் திகழ்ந்த அவர், இருவர் உதவிகொண்டு நான்கடிகள் எடுத்து வைக்கவே திணறினர். காலம், அவரை எத்தகைய மோசமான நிலைக்கு வீழ்த்தியிருக்கிறது! சிறிது நேரம் உடனமர்ந்து இளம்பருவ நிகழ்ச்சிகளை நினைவுகூரும்வண்ணம் பேசிக்கொண்டு இருந்தேன். நாடகங்களில் வேடம் புனைந்து நடித்ததும், கல்லூரி ஆண்டுவிழாத் தொண்டனாக இருந்ததும், குளத்து நீரில் நீந்தி மகிழ்ந்ததுமாகப் பல நிகழ்ச்சிகள்.

வாழ்க்கையின் மாலை நேரத்தில், கடந்து வந்துவிட்ட அந்தப் பழைய காலத்தை மீண்டும் நினைவுத் திரையில் கொண்டுவந்து உயிரூட்டி, அதில் அமிழ்ந்தவாறிருந்தோம். அந்த நினைவுகளில் வேதனையும் கழிவிரக்க

மும் எழுகின்றனவா என்று என்னை எவரேனும் வினவினால், இல்லாம லில்லை என்றே கூற வேண்டும். ஆனால், அவற்றோடு மகிழ்ச்சியும் உவகையும் குலவும் நினைவுகளும் கலந்திருக்கும். இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை. தவறு செய்யாமலோ, பழியேற்காமலோ வாழ்க்கை நடத்துவது கடினம் என்பதே என் அநுபவம்.

ஆனால், இளமைப்பருவத்தில் நான் படித்த சில நூல்களும், நான் பழக்கம் கொள்ள வாய்த்த சில அரிய மனிதர்களும் எனக்கு வாழ்க்கை யில் வழிகாட்டிகளாகத் திகழ்ந்திருக்கின்றனர். நெடுநாட்களான போதிலும், அவர்களுடைய பேச்சுகளும் செயல்களும், என் மனதில் இன்னும் பசுமையாயிருக்கின்றன. நான் படித்த நூல்களில் பொருட் செறிவோ, நடையழகோ என்னைக் கவருமானால், நான் அதை உற்சாக மாக மனப்பாடம் செய்துகொள்வேன். அது சிறுவயதிலிருந்தே எனக்குப் பழக்கமாக இருந்தது. அவ்வாறே, ஒருவரிடம் காணும் பொறுமைப் பண்பு, இன்னொருவருடைய இனிய பேச்சு நலம், பிறிதொருவரிடம் இருந்த உழைப்பாற்றல் என்னும நற்பண்புகளை என் வாழ்க்கையில் கொள்ள ஆர்வத்துடன் முனைந்திருக்கிறேன். பிறரைப் பின்பற்றும் முயற்சியில் நான் எப்போதும் வெற்றிபெற்றதாகக் கூறிவிட முடியாது. ஆனால், வாழ்க்கைப் பயணத்தில் அவை எனக்குச் சிறிதேனும் நலம் கூட்டவில்லை என்று சொல்லிவிட இயலாது. வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பதில், அடங்காத ஆர்வம் கொண்டவன் நான். துன்பங்களுடன் போராடிக்கொண்டு, வாழ்வைப் பயனுடையதாகவும் பிறருக்கு உதவி யாக அமையும்பொருட்டும் கொண்டு செல்லத் தளராத உற்சாகத் துடன் முயற்சி செய்த மாபுருடர்களைப்பற்றிய வரலாறு யாரைத்தான் உணர்ச்சிகொள்ளச் செய்யாது?

சென்ற காலத்தைச் சிறிது திரும்பிப் பார்க்கையில், நான் பல களங் களிலும் பணியாற்றிய நாட்களின் நினைவு வருகிறது. பலதரப்பட்டவர் களுடனும் நான் பழக நேர்ந்திருக்கிறது. எனது சொல்லும் செயலும் அவர்களுடைய மனங்களில் எவ்வாறு எதிரொலி எழுப்பியிருக்கக்கூடும் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. மக்களின் அன்புமொழிகளைச் செவியுற்று மகிழ்ச்சியுறும் பல சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்திருக் கின்றன. என்றாலும் எனக்கு எதிரிகளே கிடையாதென்றோ என்னையோ என்செயலையோ, வன்மையாகவோ கூர்மையாகவோ விமரிசனம் செய்து மறுப்பவர் யாருமில்லை என்றோ நான் மயங்குகிறவனில்லை. விமரிசனங்களைச் செவியேற்கையில் நான் சஞ்சலம் கொள்வது அபூர்வம். எதிராளியின் கருத்துகளையும் மதித்து அவற்றை நுட்பமாக ஆராய்ந் தறிவது நலம். அது நமது அகங்காரத்தைக் குறைத்து, குறைபாடுகளை விலக்கிக்கொள்வதற்கு வகைசெய்யும்.

வாழ்க்கைக்காகவோ, வேறு காரணம் கொண்டோ, நாம் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டவர்கள். ஒரு தொழிலை நன்கு செய்வதனால் மட்டுமே நிறைவெய்திட முடியாது. இன்னொரு தலையாய கடமையும் நமக்கு இருக்கிறது. சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் பிறருக்கு உதவுவதற்கும் ஆறுதலளிப்பதற்கும் நெடுந் தொலைவு செல்ல வேண்டாம். நம்முடைய சுற்றுப்புறத்தை நோக்கினாலே போதும். பசியடங்க உணவின்றியும், மானம் மறைத்துக்கொள்ளத் துணியின்றி யும், தங்குவதற்கோர் நிழலிடம் இன்றியும் துன்புறும் ஏழை எளியவர் எத்துணைபேரிருக்கின்றனர்? நோயுற்று, சிகிச்சைக்கு வழியின்றித் துன் புறுவோரும் எண்ணிக்கையில் குறைந்தவரல்லர். கல்வி கற்பதற்கு அறிவும் ஆர்வமும் இருந்தாலும் வறுமையில் வாடும் சிறுவர்களும், அதைப் பார்த்துக் கண்ணீர் வடிக்கும் பெற்றோரும் நம் நாட்டில் ஏராளமாக இருக்கின்றனர். இவர்களது துயரச் சுமையைக் குறைக்கும் வகையில் நம்மாலானதை நாம் நிச்சயமாகச் செய்யலாம். எல்லோ ராலும் பெரிய அளவிலான சமுதாயத் தொண்டு புரிய முடியுமென்ப தில்லை. ஆனால் சந்தர்ப்பத்துக்குகந்த இத்தகைய சிறு சேவைகளை எல்லோராலும் செய்ய முடியும். கனிவு நிறைந்த உள்ளமும், உற்சாக மூட்டும் மொழிகளும், எத்துணை ஆறுதல் கொடுக்கக்கூடியது! நமக்கும் அது மன நிறைவையும் அமைதியையும் அளிக்குமே!

ஒருவரைப் பற்றியோ, ஒரு விஷயத்தைக் குறித்தோ கருத்துக் கூறு வதற்கு அவசரப்படுவது சரியன்று. ஒருவருடைய இயல்பை நன்கு அறிந்துகொள்ளும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கும் என்பதில்லை. அவர் களுக்கு வேண்டாதவர்கள் நம்மிடம் அவரைப்பற்றி ஏதேனும் கூறு வார்கள். அவர்களே அவற்றை நன்றாக அறியாமல் வேறு சிலரிடம் கேள்விப்பட்டதை வைத்துக்கொண்டு நம்மிடம் கூறியிருப்பார்கள். ஆனால் மேலும் விவரங்களை அறியாமல் அவரைப் பற்றி ஒரு தீர்மானத் துக்கு வருவது சரியன்று. எதையும நல்லது, தீயது என்று வரையறை செய்யும்போதும அவ்வாறே ஆராய்ந்து பார்க்கவேண்டும். பிரச்னை களைப் பல கோணங்களிலும் பார்த்து ஆராய்ந்துணர வேண்டும். அவ்வாறு ஆராயும் தன்மை பெரும்பாலோருக்கு இருப்பதில்லை. நுட்ப மாக ஆராய்ந்தறியாமல் கருத்துத் தெரிவிப்பது ஒருபோதும் சரியன்று.

மனம் திறந்து கருத்தை வெளியிடுவது மனதுக்கு நிறைவளிப்பதாகும். ஆனால் அதற்கியலாமல் போகும் சந்தர்ப்பங்களையும் நான் எண்ணிப் பார்க்கிறேன். மற்றவருக்கு மனத்தாங்கல் விளைவிக்கக் கூடாதென்ற நோக்கில் அவ்வாறு கருத்துகளை நான் வெளியிடாமலிருந்ததில்லை. எனது கருத்துகளை வெளியிடுவதால் எதிர்பாரா விளைவுகள் ஏற்பட்டு விடுமோ என்றஞ்சி, அந்தச் சந்தர்ப்பங்களில் நான் மௌனம் கொண்

டிருந்திருக்கிறேன். என்றாலும் அவ்வாறு அடக்கிக்கொள்கையில், மனம் சொல்லொணா வகையில் அலைபாய்ந்தது.

ஒரு துறவியின் அற்புதச் செயல்களைக்குறித்து அவரைப் போற்றிப் புகழும் ஆதரவாளர் ஒருவர் என்னிடம் ஒருநாள் பலவாறாக மொழிந்தார். அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த இன்னொருவர், "அதெல்லாம் வெறும் கற்பனை. வெற்றுரை .." என்று இகழ்ந்தார். சாதாரண மனிதரின் அறிவுக்கு எட்டாத சில அற்புத சக்திகள், சிலரிடம் இருப்பது நடக்கக் கூடாத செயலல்ல. நமக்கு அவற்றைப்பற்றி ஏதும் தெரியாது என்பதற்காக அத்தகைய சக்திகள் இல்லை என்று மறுப்பது ஒருவித அகம்பாவம்தான். நமது அறிவாற்றலுக்கு ஓர் வரையறை இருக்கிறதென்றும், அதற்குட்படாத சில விஷயங்கள் உலகில் இருக்கின்றனவென்றும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இன்னொரு விஷயம். ஒரே குடும்பத்தில் பல்வேறு சுவைகளை விரும்புபவரும், பல வயதுக்காரரும், பல்வேறு இயல்பினரும் தோன்றியிருப்பார்கள். முன்னைக் காட்டிலும் இந்நாளைய வாழ்க்கை முறை பிரிவுபட்டதாக, சிதிலமடைந்த நிலையில் மாறி இருக்கிறது. குடும்ப வாழ்வில் இன்பமும் நலமும் இசையவேண்டுமானால், குடும்பத்திலுள்ளவர், குறிப்பாக முதிய தலைமுறையினர், விட்டுக் கொடுப்பதற்கும், மற்றவர் போக்கை அறிந்து இயங்கவும் இணங்கவேண்டும். அவர்கள் இன்ப துன்பங்களை அநுபவித்து வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழித்தவர்கள். இளைஞரும் நடுத்தர வயதுடையவர்களும் வாழ்க்கையை இனிமேல்தான் நுகரப்போகிறவர்கள். அவர்களுக்குக் கட்டாயமாகத் தோன்றக் கூடிய சில செலவுகளை முதிய தலைமுறையினர் வேண்டாதவை என்று கருதலாம். அவ்வாறு தோன்றினாலும், இளைஞருடைய விருப்பங்களைத் தடுக்கலாகாது. தனக்கு அதில் உடன்பாடில்லை என்று தோன்றினாலும் இளைஞர் நன்மைக்கு அது ஏற்றதல்ல என்று தோன்றுத வரையிலும், அதை அநுமதித்து விட்டுக்கொடுப்பதுதான் ஏற்றது.

தம்மால் ஏற்க இயலாத, ரசிக்க இயலாத கருத்துகளைப் பிறர் கூறுங்கால், அதை எதிர்த்துக் கூற முயற்சி செய்வது உகந்ததன்று. மௌனப் புன்னகை வாயிலாக அந்த வேறுபாட்டை மெல்ல உணர்த்தலாம். அதுவும் செய்யாமல் இருப்பதும் நன்றே. நம் கருத்துகளைக் கூறுவதற்குரிய சந்தர்ப்பங்கள் வரும். அந்த நேரத்தில் அதை அழகுற வெளியிடலாம்.

நமது நம்பிக்கை, கொள்கைகளைப்பற்றிச் சிறிது கூறலாம் என்று கருதுகிறேன். சிலர் தங்களுடைய சமய நம்பிக்கைகளை இடம், நேரம் கருதாமல் எடுத்துரைத்துப் பிறருக்குத் தொல்லையளிப்பர். இந்த விரும்பத்தகாத வழக்கத்தை விட்டொழிப்பது நன்று. பிறருடைய

நம்பிக்கைகளைக் குறைகூறுவதும் பழித்துரைப்பதும் நன்றன்று. எந்தக் கருத்தையும் மறுத்துரை செய்வதோ, கண்டித்து வீணை வாதங்களுக்கு வழிகோலுவதோ கடினமன்று. ஆனால் அது முட்டாள்தனமாகும். நமது நம்பிக்கைகளுக் குகந்தவாறு நாம் வாழ்கிறோம். மற்றவர் அவரது நம்பிக்கைக் கேற்ப வாழ்க்கை நடத்துகின்றனர். நாகரிகப் பண்பு கொண்டவர் அவ்வாறே கருதுவர். நமது கருத்துகளுக்கு ஆதரவாளரில்லையே என்று வாட்டம் கொள்ளவேண்டியதில்லை. சமய நம்பிக்கைகளின் பெருமைகளை, ஆதரவாளரின் எண்ணிக்கையைக் கொண்டு நிர்ணயம் செய்வதில்லை. அக் கருத்துகளில் ஊறி உள்ளார்ந்து ஒழுகுபவர்தாம் அப் பெருமைகளை நிலையுறுத்துகின்றனர். புறத்தைச் சார்ந்த சில பழக்கங்களும், உள்ளம் ஒன்றுத பிரார்த்தனைகளும், அடிக்கடி கோயிலுக்கோ பள்ளி வாசலுக்கோ செல்லுவதும்தான் சிலரது சமயம்சார்ந்த நம்பிக்கைகள், நடவடிக்கைகள். உண்மையான சமயநம்பிக்கையுடைய ஒருவர், தன்னுடைய எல்லாச் செயல்களிலும் அதை வெளிப்படுத்துவார். சொந்த வாழ்விலும், குடும்ப விஷயங் களிலும், வியாபாரத் தொடர்புகளிலும், பொது வாழ்விலும் அந்த நம்பிக்கைக் கேற்பச் செயல்புரிவார்.

பழிவாங்கும் எண்ணம் நம் மனதில் ஒருகாலும் தோன்றலாகாது. உயரிய வாழ்க்கை நடத்த விரும்பும் ஒருவருக்கு உகந்த மனப்பண்பன்று அது. அறிந்தோ அறியாமலோ ஒருவர் நமக்குத் தீங்கிழைத்தாரென் றாலும் அதை மனதில் கொண்டு, அதற்குப் பதிலாக அவருக்குத் தீங்கிழைக்கும் சந்தர்ப்பம் நோக்கிக் காத்திருப்பது கடையருக்குரிய செயல். ஆனால் அந்தக் குணமே பலரிடத்தும் ஓங்கியிருக்கிறது.

ஒரு அலுவலகத்தில் சில விஷயங்களை விவாதிக்க ஒரு சிறப்புக்கூட்டம் கூட்டினர்கள். அதற்கு அங்கு அழைக்கப்படாத ஒரு அதிகாரி வந்து முன்வரிசையில் வீற்றிருந்தார். அழைப்பேற்றவர் மட்டுமே கலந்து கொள்ளும் கூட்டம் அது என்று செயலாளர் எடுத்துரைத்தார். ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. செயலாளர் அதைத் தலைவரிடம் தெரிவித்தார். அவர் உத்தரவிட்ட பிறகு உட்கார்ந் திருந்தவர் எழுந்து செல்லவேண்டி இருந்தது. செயலாளரின்மீது அவருக்கேற்பட்ட கோபம் சில நாட்களான பிறகும் மாறவில்லை. மூன்றாண்டுகள் சென்ற பின்னர், அந்தச் செயலாளரின் காலவரையறை முடிந்ததும், அவரையே அந்தப் பதவியில் தொடர்ந்து நிலையுறுத்து வதற்கான ஆலோசனைகள் நடந்தன. அந்த அதிகாரி தன் முழுச் செல்வாக்கையும் பயன்படுத்தி, அந்தச் செயலாளர் பதவியில் அவர் நீடித்திருக்க இயலாதபடி தடுத்தார். இது மரியாதைக்கும் பண்புக்கும் உரிய மனிதர் செய்யும் செயலா? மேலும் ஒரு முக்கியமான விஷயம் கூறுவேன்.

என்னுல் இந்தப் பணியை நிறைவேற்ற முடியுமோ! நான் தொடங்கி வைத்த இந்த நிறுவனத்தை மேலும் வளர்ச்சியுறச் செய்ய முடியுமோ! என்ற கவலைகள் பலரையும் குறிப்பாக முதுமைக்காலத்தில் அலட்டிக் கொண்டிருக்கும். இந்த அச்சம் வீணனது. நுட்பமாகப் பார்த்தால் எந்தச் செயலுமே முழுமை பெற்றுவிட்டதாகக் கொள்ள முடியாது. ஒரு செயலை எத்துணைச் சிறப்பாகச் செய்தாலும், முயன்றுல் மேலும் சிறப்பாகச் செய்ய முடியும். இந்நாளில் நாம் அநுபவிக்கும் புகை வண்டியும், விமானமும் ஒரு தனிமனிதனின் முயற்சியல்ல. பலருடைய தொடர்ந்த முயற்சிகளின் விளைவே. நிறுவனங்களும் அவ்வாறுதான். இந்திய தேசிய காங்கிரசும், சாரணர் இயக்கமும், ரோடரி கிளப்பும், இவை போன்ற வேறு நிறுவனங்களும், ஒவ்வொரு கால கட்டத்திலும் வெவ்வேறு மனிதர்களுடைய பணிகளின் விளைவாகவே வலிமை பெற்று விளங்குகின்றன. இத்தகைய கவலைகள் என்னையும் அலட்டுவ துண்டு. எழுதத் தொடங்கிய சில நூல்களை எழுதி முடிப்பேனு! என்ற கவலை; தொடங்கி வைத்த சில நிறுவனங்கள் நன்கு இயங்கப் பார்ப் பேனு! என்ற மனச்சஞ்சலம்; செய்ய விரும்பும் சில செயல்களைச் செய்து முடிப்பேனு! என்ற ஏக்கம்; இதெல்லாம் வீணன பலவீனங்கள் என்று அறிந்திருந்தாலும் அவற்றை வெல்ல முடியவில்லை.

சில நாட்களாக நான் அடிக்கடி காணும் கனவைப்பற்றி இப்போது கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பரீட்சை நெருங்குகிறது. இன்னும் நான் எல்லாம் படித்து முடித்துத் தயாராகவில்லை. பயணத்துக்கு நாள் குறித்து நெருங்கிக்கொண்டிருக் கிறது. நான் இன்னமும் சித்தமாகவில்லை. இவ்வாறு ஒரு பொருளை உணர்த்தும் வகையில் நான் கனவு காண்கிறேன். இதற்கான காரணங்களை அறிய உளஇயல் வல்லாருக்கு எழுதிக் கேட்க வேண்டு மென்றிருந்தேன். அப்போது ஒரு நண்பர் கூறினர்:— "என் பணிகள் நிறைவேறவில்லையே என்று அடிமனதில் தங்கியிருக்கும் எண்ணங்கள் தாம் இத்தகைய கனவுகளுக்குக் காரணம்" என்றார். ஒருகால் அது சரியாக இருக்கலாம். இது எப்படியிருந்தாலும், தொடங்கிய வேலையை நிறைவேற்றவில்லையே என்று எண்ணி வேதனைப்பட வேண்டியதில்லை என்று எனக்குள் சமாதானம் செய்துகொண்டேன். தொடங்கியதை நிறைவேற்ற இயன்றவகையில் பணிபுரிவது — அதற்கு மேல் நாம் எதுவும் சிந்தனை செய்யவேண்டாம். வாழ்க்கையே ஓர் முயற்சிதான் — பலன அநுபவித்தாலும் சரி, அநுபவிக்கா விட்டாலும் சரி.

ரயிலடி மேடையைப் பெருக்கிச் சுத்தம் செய்யும் ஒரு தொழிலாளியை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைத்துப் பார்க்கிறேன். குப்பையும்

அழுகலும், பழத்தோல்களும், சிகரெட் துண்டுகளுமாகக் கிடக்கும் இடத்தைத் துப்புரவு செய்ய அந்த இளைஞன் முயலுகிறான். அவற்றை எல்லாம் வாரிக் குப்பைத் தொட்டியில் கொட்டிவிட்டு, ஓரிடத்தில் பீடி குடித்துக்கொண்டு சற்றே நிற்கிறான். சிறிது நேரம் சென்றால், மீண்டும் அங்கே கிழிந்த காகிதங்களும், எச்சில் இலைகளும், ஆரஞ்சுத் தோலும், வெற்றிலைச் சக்கையும் நிறைந்துவிடுகின்றன. அவன் உடனே கையில் துடைப்பமும் முறமுமாகச் சிறிதும் சோம்பலின்றிப் பணியைத் தொடங்குகிறான். அந்த இளைஞன் ஒரு எளிய தொழிலாளி தான். என்றாலும் அவனிடமிருந்து நாம் ஒரு பாடம் கற்க முடிகிறது. "சூழ்ந்தவர் எவ்வளவு அசுத்தம் செய்தாலும், நம் தொழில் அதைச் சுத்தம் செய்வதுதான்..."

சிலர் பிறரைத் துன்புறுத்தினாலும் நமது கடமை அவ்வாறு துன்புற்ற வருக்கு உதவி செய்வதுதானென்று கொள்ளவேண்டும். யாரேனும் ஆதரவற்றவர்களைக் கீழே தள்ளி வீழ்த்தினால் அவரைத் தூக்கி எழுப்பி ஆறுதலளிப்பதுதான் நமது தர்மம். வாழ்க்கையில் நாம் கைக் கொள்ளவேண்டிய நிலை அதுதான். நமக்கு நிறைவளிக்கும் வழியும் அதுவே.

56

ஆன்ம விசாரணை

வயது முதிர்ந்த நிலையில் நமது மனதில் பலவாறான சிந்தனைகளும் தோன்றுவது இயல்பே. குடும்ப சம்பந்தமாகவும், தொடர்புகொண்ட பணிகள் குறித்தும், மரணத்துக்கு அப்பாற்பட்ட நிலையைக் குறித்தும் சிந்தனைகள். ஆனால் என்னை இப்போது அலட்டிக்கொண்டிருப்பவை அவ்வாறான சிந்தனைகளல்ல. எனது நாட்டின் எதிர்காலம் குறித்த கவலைகளே நாளுக்கு நாள் அதிகமாகின்றன. சூழ்ந்து மலிந்த சிறுமைப் பண்புகளும், ஒழுங்கீன நடைமுறைகளும், ஈரமில்லாத வன்முறைகளும், நம் நாட்டின் செல்வங்களுக்கே அச்சுறுத்தலாக முதிர்ந்திருக்கின்றன. நேருவின் மரணத்திற்குப் பிறகு நிலைமை மிகவும் வீழ்ச்சியுற்றிருக்கிறது.* மக்களிடையே பெருகிக் காணும் நிராசையையும், நம்பிக்கை

---

* மூல மலையாள நூல் 1969-ல் வெளியாயிற்று. அப்போது எழுதப்பட்ட வரிகள் இவை

யும் அகற்றுவதற்கு உறுதி வாய்ந்த தலைவர் இன்று நம்மிடையே இல்லை. சென்ற நூறு ஆண்டுக்காலத்தில் இத்தகையதொரு இரங்கத் தக்க நிலை இருந்ததாகத் தெரியவில்லை.

இது இருண்டுகிடக்கும் காலம். ஒளிக்கதிர்கள் தோன்றும் வழியை யும் காணேம். மாபுருடர்களும் ஞானியரும் தோன்றிய இந்தப் புண்ணிய பாரத பூமி திடீரென்று ஞான வறட்சி எய்திவிட்டதோ என்ற அச்சம் சில சமயங்களில் தோன்றுகிறது.

எத்துணைக் காலம் வாழ்ந்திருக்கிறேன் என்பது முக்கியமல்ல. எப்படி வாழ்ந்திருக்கிறேன் என்பதுதான் முக்கியம். பொருளைத் தேடும் தீராத ஆசையும், அதிகாரப் பதவிகளை ஏற்றுக்கொள்ளும் மோகமும் என்னை ஒருபோதும் பற்றியதில்லை.

பணத்தைச் சேர்க்கும் பழக்கமும் எனக்கு இல்லை. அதைப் பேணி வழிபடுபவனுமல்ல நான். தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் அன்பை வெளியிட்டுக்கொள்வதற்கும், இல்லாமையால் வருந்துபவர்க் குதவவும் பணம் இன்றியமையாததுதான். ஆனால் அதைச் சேமித்து வைப்பதில் எனக்கு ஒரு சுகமும் தோன்றியதில்லை. சேர்த்து வைக்க வில்லையே என்ற வருத்தமும் எனக்கில்லை.

பழுத்த தெய்வ நம்பிக்கையுடையவர்களும் தீவிர நாத்திகரும் எனது நண்பர் குழாத்தில் உளர். இருசாராருடனும் நட்புறவுகொண்டு பழகுவதில் ஒரு தொந்தரவும் கிடையாது. எனக்கென்று சில கொள்கைகளும் நம்பிக்கைகளும் இருக்கின்றன. வேறு விஷயங்களைப் போன்ற சமயம் சம்பந்தமான எனது நம்பிக்கைகளிலும் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. இப்போது எனக்கு அந்த நம்பிக்கைகளே அமைதியையும் ஆறுதலையும் அளிக்கின்றன.

எனக்கு மகிழ்வளிக்கும் மூன்று விஷயங்களை இங்கே கூறுவேன்:

அமைதியற்ற மனதினரும், பொறுக்க இயலாத அநியாயங்களைப் பற்றி முறையிடுபவர்களும், சோதனைகளிலிடைப்பட்டு மீளும் வழி காணமல் தஞ்சம் நாடுபவர்களுமாக, பலதரப்பட்ட மக்கள் என்னை அணுகி வருகின்றனர். நேரிலும், கடிதங்கள் வாயிலாகவும் என் உதவியை நாடும் அவர்களுக்கு ஆறுதல் கூறுகையில் அவர்களிடம் தோன்றும் நிறைவு, எனக்கு விவரிக்க இயலாத ஆனந்தத்தை அளிக்கிறது.

விருப்பமுள்ள நூல்களைப் படிக்கும்போதோ, பாடல்களைக் கேட்கும் போதோ எனக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது. இது இன்னோர் அநுபவம். இந்த ஆனந்தத்தை நான் அனுபவிக்காத நாட்களில்லை என்றே கூறலாம். ஆன்ம நேயர்களுடன் அளவளாவி மகிழ்வது மற்றொரு ஆனந்த அநுபவம். நண்பர்கள் பலரிருந்தாலும், இதயத்

தோடு நெருங்கித் தோழமை கொள்பவர் வெகு சிலரே. அத்தகைய நேயர்களின் அண்மையும், அவருடன் உரையாடி மகிழ்வதும் எனக்கு மிகவும் விருப்பமானவை. அன்பு கனியும் நட்புறவை அநுபவிக்காத மனிதனுக்கு வாழ்வில் ஆனந்தமுண்டோ?

நான் இந்த நூலின் இறுதிப் பகுதிக்கு வந்துவிட்டேன். என் வாழ்வின் இறுதிப் பகுதிக்கும்தான்—எண்பத்து மூன்று வயது நிச்சயமாக நெடிய ஆயுள்தான். முழுமையான உடல் நலமும், வாழ்க்கை இன்பங்களை நுகரும் ஆர்வமும், புதிய செயல்களில் ஈடுபடும் உற்சாகமும் இன்னும் என்னுள்ளத்தில் இருந்துவருகிறதென்றால், அதற்குக் காரணம் கருணை வள்ளலான இறைவனின் அருள் என்று எண்ணி நன்றியுணர்வு கசிந்து பெருக நிற்கிறேன். கசப்பான அநுபவங்கள் எத்தனையோ நேரிட்டிருந்தாலும் வாழ்க்கையில் சலிப்போ, மாந்தரிடம் வெறுப்போ எனக்குத் தோன்றியதில்லை. உலகை, நண்பர்கள் நிறைந்த தொரு இல்லமாகவே எப்போதும் காண்கிறேன். எங்கிருந்து வந்தோம்? எங்கே செல்கிறோம்? இதற்கெல்லாம் நோக்கம் யாது?..... இந்த வாழ்க்கை...இதன் தொடர்பான முடிவற்ற பிரச்னைகள்...இதற்கெல்லாம் பொருள் யாது?

இந்த நெடிய காலத்தில்தான் எத்தனை மாறுதல்கள்! சமுதாய நெறிகளின் பழக்க முறைகள் மாறிவிட்டன; மக்களின் கருத்துகள் மாறிவிட்டன. நான் வாழ்ந்துவந்த சூழ்நிலை மாறிவிட்டது; என் உடல் நிலையும் மாறிவிட்டது; எனினும் 'நான்' அப்படியே வாழ்கிறேன்.

'நான்' யார்? ... விடை கிடைக்காத இக் கேள்வி அந்நாளைப் போன்றே இந்நாளிலும் என்னுள் ஓயாமல் சிந்தனைக்குள்ளாக்குகிறது. இறுதிக் காலத்துக்கு இன்றியமையாத பூரண அமைதியை நான் இப்போது தேடிக்கொண்டிருக்கிறேன். ஆனால் வாழ்வின் எண்ணற்ற ரகசியங்களும், குண வேறுபாடுகளும் எனக்கு பிரமிப்பூட்டுகின்றன. அறிய இயலாதவற்றை அறிய முயலும்போது தோன்றும் களைப்பு என்னையும் பற்றுமல்லவா? வானை நோக்குகையில் கண்ணுக்கெட்டிய வரையிலும் எண்ணற்ற விண்மீன்களைக் காண்கிறோம். அவற்றுக்கு அப்பாலும் இன்னும் தாரகைகள் இருக்கக்கூடும். நம்மால் காண இயலவில்லை என்பதனால், அவற்றை இல்லை என்று கூறிவிட முடியுமா? பெருங்கடலில் கலத்தைச் செலுத்தும் மாலுமியைப் போன்றே நாமும் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கிறோம். பாறைகளையும் மணல் திட்டுகளையும் கூர்ந்து நோக்கி அறிந்தவாறே கப்பலை மாலுமி செலுத்திச் செல்லவேண்டும். இல்லையேல் அபாயத்துக்குள்ளாக நேரும். வாழ்க்கைப் பயணம் தொடரும் நமது நிலையும் அதுவேயாம். தெளிந்த அறிவுடன் தேவையானவற்றையும், இல்லாத

வற்றையும் ஆராய்ந்து, பலவீனங்களுக்கு இடம் கொடாமல் வாழ்க்கையைக் கொண்டு செல்லவில்லையெனின், அபாயத்தை எதிர் கொண்டழைப்பதாகிவிடும். அவ்வாறு கருத்துடன் காக்கும்போதே சில சமயங்களில் தவறு நேர்ந்துவிடுகிறதே? இல்லையெனின் விளையக் கூடிய பலனைக் கூறவும் வேண்டுமோ?

நான் இழைத்த தவறுகளையும், பயன்படுத்தாமலிருந்த சந்தர்ப்பங்களையும், நன்கு சிந்தனை செய்து பார்த்திராத குறைபாடுகளையும் இப்போது எண்ணிப்பார்த்துக் கழிவிரக்கம் கொள்கிறேன். ஒருகால் தவறுகளே நமது நல் வளர்ச்சிக்கான தூண்டுதல்களாக, ஆதாரங்களாக இருக்கலாம்! யாரறிவார்? நம்முடைய நல்லாசானே அநுபவங்களல்லவா!

இதை நான் எழுதும்போது, காலை நேரத்தின் எண்ணற்ற தாரகைகள் வானில் மின்னிக்கொண்டிருக்கின்றன. ஓலமிடும் கடலலைகளின் ஒலி தொலைவிலிருந்து கேட்கிறது. ஒன்று முடியும்போது இன்னென்று... அதுவும் ஓயும்போது மற்றொன்று .. என்று தொடர்ந்துகொண்டே இருக்கும் ஒலிச் சிதறல்களின் ஒழுங்கான தொடர்மாலை.

காக்கையும் சேவலும் இன்னும் பல பறவை இனங்களும் காலையின் உதயத்துக்குக் கட்டியம் கூறுகின்றன. மக்களின் குரலொலியும், வண்டிப் போக்குவரத்தும், இன்னொரு நாளின் இயக்கம் தொடங்கிவிட்டதென்பதைப் புலப்படுத்துகின்றன. இரவும்-பகலும், உறக்கமும்-தொழிலும், மாலையும்-காலையுமாகக் காலம் முன்னேறிச் செல்கிறது. வாழ்க்கையும் அவ்வாறே தொடருகிறது. பார்த்தும், அறிந்தும் இத்துணையெல்லாம் நான் அநுபவித்திருக்கிறேனல்லவா என்று கடந்த காலத்தை உன்னிப் பார்க்கையில் நான் வியந்துபோகிறேன். வாழ்க்கையின்பாலுள்ள இனிமைகள் இன்னும் என்னை மறுக்கவில்லை. அது என்னை எங்கே கொண்டு செல்கிறதென்பதை நான் அறியேன். இன்னும் என்னென்ன அநுபவங்களை வருங்காலம் எனக்குச் சுருளவிழ்க்குமோ? யாதானால் என்ன?

அபயம் ஸத்வ ஸம்சுத்தி: ஞான யோகவ்ய வஸ்தித: |
தானம் தமஸ்ச யக்ஞஸ்ச ஸ்யாத்யாய ஸ்தவ ஆர்ஜவம் ||

அஹிம்ஸா ஸத்ய மக்ரோதஸ்த்யாக: சாந்திர பை சுமை |
தயா பூதேஷ்வ லோலுப்தம் மார்தவம் ஹ்ரீர சாபலம் ||

தேஜ: க்ஷமா த்ருதி: சௌச மத்ரோ ஹோ நாதி மானிதா |
பவந்தி ஸம்பதம் தைவீமபி ஜாதஸ்ய பாரத!

'அஞ்சாமை; உள்ளத் தூய்மை; ஞான யோகத்தில் உறுதி; ஈகை; தன்னடக்கம்; வேள்வி; வேதங்கற்றல்; தவம்; நேர்மை.

கொல்லாமை; வாய்மை; சினமில்லாமை; துறவு; ஆறுதல்;
வண்மை; ஜீவகாருண்யம்; அவாவின்மை; மென்மை;
நாணுடைமை; சலியாமை;

ஒளி; பொறை; உறுதி; சுத்தம்; துரோகமின்மை;
இவையனைத்தும் தெய்வமெனும் செல்வத்தை எய்தியவனிடம்
ஏற்படுகின்றன, பார்த்தனே!'

என்ற கீதைப்பேருரை எந்த நிலையிலும் எனக்கு ஒளியை நல்கட்டும!